


**கீஸாவில் உள்ள மகா பிரமிட்டின் செங்குத்தான வெட்டு முகத்தோற்றம்**
**(மேற்கே பார்க்கும் பொழுது தெற்கிலிருந்து வடக்கு வரை உள்ள தோற்றம்)**

# வேதாகமப் பாடங்கள்

"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும்
அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்
பிரகாசம் போ-ருக்கும்."

தொகுதி *3*

# உம்முடைய ராஜ்யம் வருவதாக

# THY KINDGOM COME

"வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்." *(தானியேல் 7: 27; வெளி 5 : 10)*

முதல் பதிப்பு *: 2014*

**சென்னை வேதமாணவர் சபை**
22, முதல் தெரு, ராஜீவ் நகர்,
காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,
சென்னை - 600 019.

STUDIES IN THE SCRIPTURES
VOLUME III

THY KINGDOM COME
*Tamil Version*

I Edition 2014 - 2000 copies

**NOT FOR SALE**

*Translated by :*
**CHENNAI BIBLE STUDENTS**
No. 22, First Street, Rajiv Nagar,
Kaladipet, Thiruvottriyur,
Chennai-600 019,
India.

## அர்ப்பணிப்பு

**ராஜாதிராஜாவுக்கும் கர்த்தாதிகர்த்தாவுமானவருக்கும்**

புத்திர சுவிகாரத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும்
பிரதிஷ்டைக்குட்பட்ட அவருடைய பரிசுத்தவான்கள்
மற்றும்
கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளும் விசுவாச வீட்டார்கள்
மற்றும்
தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருந்து
தவித்து பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிகள் ஆகியோரின் நலன்களுக்காக

**இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.**

❀❀❀

*"தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம்
இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு," "அந்தக்
கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில்
பெருகப் பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது
விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக்
குள்ளே கூட்டப்படவேண்டு மென்று
தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்
முடைய தயவுள்ள சித்தத்
தின் இரகசியத்தை எங்
களுக்கு அறிவித்தார்."*

*(எபே. 3:11; 1:8 - 10)*

❀❀❀

***போதகர் ரசல் அவர்களால் 1890ல் எழுதப்பட்டது.***

❀❀❀

# வெளியீட்டாளரின் முன்னுரை

"தேவனுடைய இராஜ்யம்" என்பது கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமானதாக இருந்து வருகிறது. அது உலகம் முழுவதும் இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற கருத்தின்படி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. சபைகள் உலகத்தாரின் கவனத்தைத் தங்கள் பக்கமாக இழுத்துக்கொள்வதில் இன்பகரமான வெற்றியை பெற்றுக் கொண்ட போது, கிறிஸ்து திரும்பி வரும்போது தான் இராஜ்யத்தை பெற முடியும் என்பதை நம்புவதற்கு அவர்கள் ஆயத்தமாக இல்லாதிருந்தார்கள். உலகத்தாரை மன மாற்றம் செய்ய முடியும் என்கிற சபைகளின் கனவுகளுக்கும், பெருந்திரளாக இருக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது. கிறிஸ்தவர்கள் மறுபடியும் பூமியில் இராஜ்யத்தைக் குறித்து யோசித்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்பொழுதுதான் கிறிஸ்து திரும்பி வரும் போது ராஜ்யம் வரும் என்பது அவர்களுடைய மனதில் உள்ளது.

1890ம் ஆண்டு இந்தப் புத்தகம் எழுதப்பட்டபோது, "பழைய வெளிச்சத்தை" அதன் இடத்திற்குக் கொண்டு வந்தது. மேலும் இராஜ்யமானது கிறிஸ்தவ நம்பிக்கைக்கு உரித்தான அழகும், விலையேறப்பெற்ற தன்மையையும் கொண்டதாக காண்பிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் வருகையோடு கூட பூலோக இராஜ்யம் சேர்ந்து வரும் என்கிற நம்பிக்கை வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் பரவலாக ஏற்றுக் கொள்வதே நல்ல ஊக்கத்தைக்கொடுக்கிறது. இந்தப் புத்தகத்தில் காட்டப்பட்டது போன்று எல்லா ஜனங்களுக்கும் இப்படிப்பட்ட ஒரு உன்னதமான இராஜ்யத்தைப் பற்றிய நம்பிக்கையை வேறு யாருமே கொடுக்கவில்லை.

வேதாகமத்தில் இஸ்ரயே-ன் பங்கைப் பற்றிய விழிப்புணர்வை அநேகர் பெற்றிருக்கிறார்கள். இஸ்ரயேலைப் பற்றிப் பரிசுத்த வேதத்தில் அல்லது பத்திரிக்கையில் வாசிக்காதவர் எவரும் இருக்க முடியாது. இந்த புத்தகம் அத்தி மரத்தில் இளங்கிளை தோன்றும் காலத்தி-ருந்து இஸ்ரயேல் பழைய நிலைக்கு வருவது பற்றிய வேதாகமக் கூற்றை ஆராய்ந்து பார்க்கிறது. (மத். 24:32) திவ்ய நோக்கத்திற்கென அது சரியான நேரமாக, சரியான இடமாக, சரியான ஜனமாக இருந்தது. தீர்க்கதரிசனம் எவ்வளவு அற்புதமாக நிறைவு பெறுகிறது! இஸ்ரயேல் பழைய நிலைக்குக் கொண்டு வரப்படுவது சரித்திரத்தில் ஈடு இணையற்றது, மிகவும் வித்தியாசமானதாகும். அது வேதாகமத்தை ஏனோதானோ என்று எண்ணுபவர்களைக் கூட ஆச்சரியப்பட வைக்கிறது.

நாங்கள் இந்த புத்ளதகத்தை ஆர்வத்துடன் சமர்ப்பிக்கிறோம். அது கற்றுக் கொள்ளுவதற்கும். அறிவூட்டுவதற்கும் மிக உதவியாக இருக்கும். “உம்முடைய இராஜ்யம் வருவதாக” என்கிற உங்களுடைய ஜெபத்திற்கு ஒரு புதிய தொனியை அது அளிக்கிறது.

- *வெளியீட்டாளர்* -

# “உம்முடைய இராஜ்யம் வருவதாக”

## ஆக்கியோனின் முன்னுரை

இந்த புத்தகம் 1890ம் ஆண்டு எழுதப்பட்டது. அந்த நாளில் இருந்து அநேக மொழிகளில், அநேக தடவை பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும் இன்னும் அதிகமான பிரசுரங்கள் வர இருக்கின்றன. இந்த புத்தகத்தின் மூலம் தேவனுடைய வார்த்தையான ஜீவத் தண்ணீர் என்கிற ஊற்றில் இருந்து தாகம் தீர குடித்த ஆயிரக்கணக்கான, தேவனுக்கெனத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தேவ ஜனங்களிடம் இருந்து வந்த இதைப் பற்றிய சாட்சிகள் நம்மிடம் உண்டு. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல தேவனுடைய மகிமையைப் பற்றிய அறிவு முழு பூலோகத்தையும் நிரப்பும் வரை, இராஜ்யத்தின் மூலம் கடைசியாக இந்த ஆசீர்வாதம் தொடர்ந்து வரும் என்று நாம் நம்புகிறோம்.

இந்த வேதாகம பாடங்களைப் போன்று ஊக்கம் அளிப்பது வேறு எதுவும் இல்லை என்று நாங்கள் கூறாவிட்டாலும், நாம் புதிதான யுகத்தின் விடியற்காலத்தில் இருப்பதைக் குறித்து சந்தோஷப்படுகிறோம். எப்படியெனில் சத்தியத்தின் வெளிச்சம் அவ்வளவு தெளிவாகப் பிரகாசிக்கின்றது, திவ்ய திட்டம் இவ்வளவாக தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆகவே இன்றைக்கு எழுதப்பட்டாலும் அல்லது இருபத்தி ஆறு வருடங்களுக்குப் பிறகு எழுதப்பட்டாலும் இந்தப் புத்தகத்தின் ஒரு வார்த்தை கூட மாற்றப்பட வேண்டியதில்லை.

காலக்கணக்கின்படி பெரிய ஏழாவது நாளுக்குள் நாம் நுழைந்து விட்டபடியால், வருடங்கள் கடந்து சென்று முடிவு காலம்

இதை அதிகதிகமாக முக்கியப்படுத்தியுள்ளது. அறுவடையின் வேலை தொடர்ந்து முன்னேறிக்கொண்டு இருக்கிறது, முன்னேறிவிட்டது. ஒருவேளை புறஜாதியாரின் காலம் முடிவு பெற்றதோடு அறுவடையின் வேலை முடிந்து விட்டது என்று நாம் ஒரு நேரம் நினைத்திருந்தாலும் கூட இது அப்படியல்ல. இது ஒரு எண்ணமே தவிர வேறு இல்லை. இது அவசியமற்றது என்பது தெரிந்து விட்டது. ஏனெனில் சத்தியம் என்னும் அரிவாளை நீட்டி இதற்கு முன்பு ஒரு போதும் இல்லாதது போன்று 1914ம் வருடம் அக்டோபர் மாதத்தி-ருந்து விளைந்த தானியத்தை சேர்க்கும் வேலையும் தொடர்ந்து முன்னேறிக் கொண்டு வருகிறது. உண்மையிலேயே உலக மகா யுத்தம் மனுக்குலத்தை ஒரு குறிப்பிடக் கூடிய அளவிற்கு விழிக்க வைத்துவிட்டது. அதோடு கூட இதற்கு முன்பு ஒரு போதும் இருந்திராத வகையில் சுயமாக சிந்திப்பதும் நடைமுறையில் உள்ளது. இவைகள் எல்லாம் அறியாமை, மூட நம்பிக்கைகள், தவறான எண்ணங்கள் என்கிற சங்கி-களை உடைப்பதற்கும், ஆண்டவருடைய சித்தத்தை அறியவும், அதன்படி நடக்கவும், மேலும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கவும் வாஞ்சிப்பவர்களை விடுதலையாக்கவும் உதவுகிறது.

நம்முடைய மாபெரும் இராஜாவினிடத்திற்கும் சத்தியத்திற்கும் நேராகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை சேகரிக்கும் ஊழியத்தின் தருணங்களுக்காக நாம் சந்தோஷப்படுகிறோம். மற்றவர்கள் சத்தியத்திற்குள்ளாக வருவதையும் “கல்யாணத்திற்கு” ஆயத்தமாவதையும் காணும் போது நாம் சந்தோஷப்படுகிறோம். “வாசல்” இன்னும் அடைக்கப்படவில்லை என்பது தெரிகிறது. ஆனாலும் அதிகமான காலம் கடந்து செல்வதற்கு முன்னர், ஒரு வேளை, ஒரு வருடம் அல்லது இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை முற்றுப்பெற்று எல்லாரும் திரைக்குப் பின்னாகச் சென்று இருப்பார்கள். அந்த வேளையில் வாசல் அடைக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

நாம் எதிர்பார்த்தபடி இஸ்ரயேல் பழைய நிலைக்குக் கொண்டு வரப்படுதல் துரிதமாக நடைபெறவில்லை என்று எளிதாக கூற முடியும். இருந்தபோதிலும், பாலஸ்தீனாவில் உள்ள யூதர்கள்



இதுவரை அற்புதவிதமாக பாதுகாக்கப்பட்டு இருக்கிறார்கள் போன்று தோன்றுகிறது. மேலும், யுத்த பிராந்தியங்களில் உள்ள அவர்களது இனத்தைச் சார்ந்த மற்ற யூதர்கள் விசேஷமாக போலந்தில் உள்ளவர்கள் அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்த போது பாலஸ்தீனாவுக்குச் சென்றிருந்தார்கள் என்றால் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. யுத்தத்தின் முடிவு இஸ்ரயே-ன் நலன்களை பாதிக்கப்போகிறது என்பதைக் கூறுவது கடினமானது. நாம் காத்திருக்க வேண்டும். ஆனாலும் யூதர்களுக்கு நேர்ந்த கடினமான சம்பவங்கள் அவர்களில் பெரும்பாலோரை அவர்களுடைய தாய் நாட்டிற்குச் செல்லத் தூண்டும் என்பது போன்று தோன்றுகிறது. இருந்தாலும் எல்லா யூதர்களும் திரும்பிச் சென்று விடுவார்கள் என்று நாங்களும் ஒரு போதும் எதிர்பார்த்ததில்லை. ஆனாலும் பாபிலோனின் சிறையிருப்பி-ருந்து திரும்பியவர்கள் போன்று, அவர்களில் ஒரு கணிசமான தொகையினர் திரும்பி வருவார்கள். எப்படியெனில், பெருந்திரளான கூட்டத்தினர் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுச் சென்றிருந்தாலும் 52,000 பேர் மட்டுமே திரும்பி வந்தனர்.

திரும்பி வருபவர்கள் ஆண்டவர் மேலும் அவருடைய வாக்குத்தத்தங்களின் மேலும் முழு நம்பிக்கை வைத்தவர்களுக்கு அடையாளமாக இருக்கிறார்கள். அவர்கள் முழு எண்ணிக்கையானவர்களின் பிரதிநிதிகளாக எண்ணப்படுவார்கள். நாம் நம்முடைய வாசகர்களுக்கு நினைப்பூட்ட விரும்புவது என்னவெனில், இந்தப் புத்தகம் எழுதப்பட்ட போது, யூதர்களே பாலஸ்தீனாவுக்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்பதைக் குறித்து சிறிதளவே எண்ணம் உடையவர்களாக இருந்தார்கள். இப்பொழுது சீயோன் இயக்கம் எழும்பி இருக்கிறது. மேலும் அது இஸ்ரயேலரின் இருதயங்களில் ஆழமான இடத்தைப் பிடித்துக்கொண்டது. முத-ல் அது மதச் சார்பற்ற சீயோன் இயக்கமாக இருந்தபோதிலும், அது படிப்படியாக மதரீதியான உணர்வுகளுக்கும் நம்பிக்கைக்கும் திரும்பி இருக்கிறது.

இந்த புத்தகத்தில் விவாதிக்கப்பட்ட எகிப்தின் மகா பிரமிட் (கூர் நுனிக் கோபுரம்) பற்றியவைகள் ஆசிரியர் மனதில் அதன் எந்த ஆர்வத்தையும் குறைக்கவில்லை. அதன் இறங்கும் பாதை பாவத்தின்,

மரணத்தின் ஆளுகைக்குக் கீழ்ப்பட்டு இருக்கும் மனுக்குலத்தின் வீழ்ச்சியை சித்தரிப்பது போன்று இருக்கிறது. முதலாவது ஏறுகின்ற பாதை இன்னமும் நியாயப்பிரமாண யுகத்தைக் குறிக்கிறதாக இருக்கிறது. அதாவது சீனாய் மலையில் இஸ்ரயேலரோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையையும், நியாயப்பிரமாணத்தின் கீழாக ஜனங்கள் இருந்ததையும் குறிக்கிறது. கம்பீரமான நீண்ட தாழ்வாரம் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்து மற்றும் அவரது சீஷர்களின் மிக உன்னதமான போதனைகளை குறிக்கிறது. இதன் மேல் முனையில் உள்ள படிக்கட்டு உலகத்தின் வழிமுறைகளில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் இருப்பதைக் குறிக்கிறது. அது மனிதனை ஓர் உயர்வான நிலைக்குக் கொண்டு செல்லுகிறது. கம்பீரமான நீண்ட தாழ்வாரத்திற்கும் இராஜாவின் அறைக்கும் மேல் உள்ள இடத்திற்கும் உள்ள இணைப்பு 1874ம் வருடத்தி-ருந்து துவங்கும் இந்த யுகத்தின் அறுவடையில் நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்தைக் குறிக்கிறது.

மகா பிரமிட் (கூர்நுனிக் கோபுரம்) கல்-ன்மேல் உள்ள வேதாகமம் என்று அழைக்கப்படுகிறது. பழைய, புதிய ஏற்பாடுகளில் உள்ள வேதாகமத்திற்கு அடையாளமாக உள்ளது அல்லது தேவனுடைய வார்த்தைக்கு ஒத்து இருக்கிறது அல்லது இணையாக உள்ளது. தேவனுடைய வார்த்தை எப்பொழுதுமே முக்கியத்துவம் உள்ளதாக, அதிகாரம் உள்ளதாக இருக்கிறது. எனினும் இந்த மகா பிரமிட்டின் கட்டுமானம் மற்ற எல்லா பிரமிட்களைக் காட்டிலும் வித்தியாசமாக இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இது தேவனால் வடிவமைக்கப்பட்டது. எகிப்து தேசத்தின் நடுவில் ஒரு சாட்சியாக இருக்கும்படி ஏற்படுத்தப்பட்டது. (ஏசாயா 19:19) நிச்சயமாகவே, அது புராதன காலத்து ஓவியம் அல்லது சிற்பம் கூறுவதைக் காட்டிலும் வித்தியாசமான கதையைக் கூறுகிறது.

அதை உண்மையாகவே பற்றிக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் யுகத்திற்கான திவ்ய திட்டத்தை அற்புதவிதமாக அது சாட்சியம் அளிப்பதைக் காணும்போது அதிசயமாயிருக்கிறது. முதலாவது வெளிவந்த புத்தகத்தைப் படிப்பது போன்று அதே புதிதான ஆர்வத்துடன் இதைப் படிக்க வேண்டும். ஏனெனில் அதன் பாடங்கள் மாற்றப்படவில்லை, மாறுபடவில்லை. பழைய வாசகர்கள் பெற்றுக்கொண்ட அதேவிதமான பெரிதான



ஆசீர்வாதங்களை இந்த புத்தகத்தை வாசிக்கிறவர்கள் பெற்றுக் கொள்ளுவார்கள் என்று நாம் நம்புகிறோம். மேலும் தேவனுடைய பிரியமான குமாரனுடைய மகிமையான இராஜ்யம் முழுமையாக வருவதற்கான தேவனுடைய வெளிச்சமும், ஆறுதலும் கொடுக்கப்பட்டிருப்பதற்காக நாம் இணைந்து தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தவும் களிகூறவும் செய்யலாம்.

மேசியாவின் இராஜ்யம் சில வேளைகளில் தேவனுடைய இராஜ்யம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் அது திட்டவட்டமாக மேசியாவின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தாலும் அதன் பிரமாணங்கள், நியதிகள், நியாயத்தீர்ப்புகள் போன்றவை மாற்ற முடியாத திவ்ய ஒழுங்குக்கு ஒத்திருக்கும்படி அமைந்துள்ளது. ஆகவே தான் நாம் “உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போன்று பூமியிலும் செய்யப்படுவதாக” என்று ஜெபிக்கும் போது பரலோக தகப்பனின் ஆட்சியும், அரசாங்கமும் உன்னதமானதாக பூரணமானதாக இருக்கவேண்டும் என்பதே நம்முடைய வாஞ்சையாக இருக்க வேண்டும். மேலும் பரலோகத்தில் உள்ள எல்லா தூதர்களும் பூரணப்பட்டிருப்பது போன்று பூலோகத்தில் உள்ள முரட்டாட்டத்தை ஜெயிக்கவும், மனுக்குலத்தை மறுபடியும் தேவனுக்கு உகந்த வகையில் கொண்டு வரும்படியாகவும் கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியை நம்பி காத்துக்கொண்டு இருக்கிறோம்.

மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதில் பலவிதமான நிலைகள் உண்டு. முதலாவதாக, அவருடைய வருகையில் மகிமையடைந்த இயேசு, கிறிஸ்துவின் சரீரமான சபையில் நித்திரையடைந்த அங்கங்களை உயிர்த்தெழுப்புகிறார். ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திற்கு சுதந்திரராக இருக்கிறவர், தேவன் மிகவும் அதிகமாக உயர்த்தினவர், மகா பெரியவராக இருக்கும் அவர் செய்கிற முதலாவது பிரதானமான காரியம் இதுவாக இருக்கும். அவருடைய அங்கங்கள் முதலாவது அவர் உலகத்தின் இராஜா என்கிற அவருடைய ஸ்தானத்திற்கு வரும் முன்னர், முழுமை பெறவேண்டும். தேவனுடைய ஆவியினால் உந்தப்பட்டு எழுதப்பட்ட வார்த்தையில் இந்த உறுதிமொழி கொடுக்கப்பட்டுள்ளது. “நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடு கூட

மகிமையிலே வெளிப்படுவீர்கள்." *(கொலோ. 3:4)* அடுத்தபடியாக, அவர் தம்முடைய சரீரமான சபையின் உயிரோடு இருக்கும் அங்கங்களோடு செயல்படுகிறார். ராத்தல்கள் மற்றும் தாலந்துகள் என்கிற உவமைகளில் காட்டப்பட்டது போன்று தேவனுடைய இராஜ்யத்தில் தகுதி உள்ளவர்கள் அல்லது தகுதி இல்லாதவர்கள் என்பது குறித்த ஆண்டவரின் நியாயத்தீர்ப்பு அவருடைய அர்ப்பணம் செய்து கொண்டவர்கள் எல்லார்மேலும் வரவேண்டும். மேலும் தெரிந்துகொள்ளப்பட்ட அனைவரும் உயிர்த்தெழுத-னால் வந்த "மறுரூபத்தினால்" மகிமை அடைய வேண்டும். ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது." *(1கொரி. 15:50)* அதன்பின்னர் உலகத்தின் அதிகாரம் எடுத்துக்கொள்ளப்படும். மகிமை அடைந்தவர் பிதாவினிடத்தில் கேட்பார், அப்பொழுது அவர் தேவனை அறியாதவர்களை அவருக்குச் சுதந்திரமாகக் கொடுப்பதுடன் அவருக்குச் சொந்த உடமையாக இருக்கும்படி உலகத்தின் எல்லாப் பகுதிகளையும் அவருக்குக் கொடுப்பார். "அவர் இருப்புகோலால் அவர்களை ஆளுகை செய்வார். அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள்." *சங். 2; வெளி. 2:27*

அவர் வல்லமையையும், அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்வதினால் மனுஷகுமாரன் வெளிப்படுவதும் உலகமானது அதிகமான அராஜகத்திற்குள் கடந்து செல்ல அவர் அனுமதிப்பதும் நெருங்கி வருவது தெரிகிறது. யுத்தத்திற்குப் பிறகு சிறிது காலத்திற்கு கிறிஸ்தவத்திற்கு மாபெரும் வெற்றி கிடைக்கும். கத்தோ-க்கர்கள், புரட்டஸ்டன்ட் வகுப்பினர் இருவருமே இந்த வெற்றியில் பங்கு பெறுவார்கள். மேலும் அரசியல் மற்றும் நிதி இவைகளின் அதிபதிகள் அவர்களுடைய அதிகாரம் நீடித்து இருப்பதற்காக அதை ஆதரிப்பார்கள். அக்காலத்தில் கிறிஸ்தவத்தி-ருந்து இயேசுவின் உண்மையான விசுவாசிகள் மேல் அதிகமான எதிர்ப்பு கிளம்பும். இது அதிகமான உபத்திரவத்தை ஒருவேளை மரணம் வரை கொண்டு வரலாம். ஆனால் பாபிலோனின் வெற்றி குறுகிய காலத்திற்குத்தான் இருக்கும். சீக்கிரத்திலேயே ஏற்கெனவே கூறப்பட்ட தண்டனை நிறைவேற்றப்படும். அப்பொழுது அவள் சமுத்திரத்திற்குள் ஒரு பெரிய இயந்திரக்



கல்லைப் போன்று விழுவாள், மறுபடியும் எழும்ப முடியாதபடி அழிவுக்குள், அராஜகத்திற்குள் விழுவாள்.

இதற்குப் பின்னர் சிறிது காலத்தில் வேதாகமத்தில் காட்டப்பட்டுள்ளபடி நமது தற்போதைய மனுக்குலத்தின் நாகரீகம் அழிவுக்குள் சென்று விடும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் மனிதனின் இயலாத நிலை ஏற்படும் போது அது தேவனுக்கேற்ற தருணமாகிறது. மேசியாவானவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர், முழுப்பொறுப்பையும் எடுத்து குழப்பத்தி-ருக்கும் ஜனங்களுக்குச் சமாதானத்தைக் கட்டளையிடுவார். மேலும் குழப்பத்தி-ருந்து தெளிவையும், கண்ணீரி-ருந்து மகிழ்ச்சியையும், பெரு மூச்சி-ருந்து துதியையும் கொண்டு வருவார். இப்படியாக மேசியாவின் இராஜ்யம் ஒரு பயங்கரமான வேதனையில் பிறக்கும். ஆனால் கிடைக்கின்ற மகிமையான பலன்கள் அதை அதிகமாக ஈடுகட்டும். "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் உண்டாயிராத ஆபத்துக் காலம் இருக்கும்." "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்" *(ஆகாய் 2:7)* என்று நமக்கு கூறப்பட்டுள்ளது.

இந்தப் பக்கங்கள் தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகவும் அவருடைய நாமத்திற்கு கனத்தை கொண்டு வருவதாகத் தொடர்ந்து இருக்கட்டும் என்பதே ஆக்கியோனின் ஜெபமாகும்.

*புரூக்ளின், நியூயார்க்.* **சார்லஸ் டி ரசல்**

*அக்டோபர் 1, 1916*

# பொருளடக்கம்


**அத்தியாயம் 1**

**"உம்முடைய இராஜ்யம் வருவதாக"**

*இராஜ்யத்தின் முக்கியத்துவம்-அதில் ஆர்வம் காட்டும் மனித வகுப்பினர் - அதை எதிர்க்கும் வகுப்பினர், ஏன் எதிர்த்து நிற்கிறார்கள் - இராஜ்யத்தின் சமீபமாயிருக்கும் நிலை - அதன் பரலோக மகிமை - அதன் தற்போதைய ஸ்தாபிதம். ...1*

**அத்தியாயம் 2**

**"முடிவு காலம்" அல்லது**

**"அவருடைய ஆயத்தம் பண்ணும் நாள்"**

**(தானியேல் 11)**

*முடிவு காலம் - அதன் ஆரம்பம் கிபி 1799 - அது முற்றுப்பெறுவது கிபி 1914 - எதை ஆயத்தம் செய்ய வேண்டும், அதன் நோக்கம் - உலக சரித்திரம் தீர்க்கதரிசனமாக அதன் முக்கியமான ஆட்சியாளர்கள் மூலம் கண்டுபிடிக்கப்படுகிறது - கிமு 405ல் இருந்து இந்த ஆயத்த நாள் வரை முடிவு காலத்தின் ஆரம்ப காலம் திட்டவட்டமாக குறிக்கப்பட்டது. ஆனாலும் பெயர்கள் அல்லது காலங்கள் இல்லாமல் ...7*

**அத்தியாயம் 3**

**இராஜ்யத்திற்காகக் காத்திருக்கும் நாட்கள்**

**(தானியேல் 12)**

*இராஜ்யத்தின் வேலை சுருக்கமாக்கப்பட்டிருக்கிறது - காத்திருக்கும் காலம், அறிவும் பிரயாணமும் பெருகுவதன் மூலம் குறிக்கப்பட்டது - இரயில் பாதை பற்றி சர் ஐசக் நியூட்டனின் முன் கருத்து - 1260 நாட்கள் - வலுசர்ப்பத்தின் வாயில் இருந்து வெள்ளம் - 1290 நாட்கள் தரிசனம்*

பரவுவதைக் குறிக்கிறது, ஒரு பகுதி சரியானது - ஏமாற்றம், பரீட்சை, அதன் விளைவுகள் - 1335 நாட்கள் - "காத்திருக்கும்" விசுவாசிகள் மேல் அப்பொழுது வரும் ஆசீர்வாதம் - பத்துக் கன்னிகைகளின் உவமையில் ஆண்டவர் இந்த காத்திருக்கும் நாட்களைப் பற்றிக் குறிப்பிடுதல் ...61

## அத்தியாயம் 4

## பரிசுத்த ஸ்தலத்தைச் சுத்திகரித்தல்

## 2300 நாட்கள் - தானியேல் 8 : 10-26

உண்மையான பரிசுத்த ஸ்தலம் - பாழ்கடிப்பு - அஸ்திபாரத்தின் அடித்தளம் - எப்படி தள்ளப்பட்டது? - ரோமன் கத்தோ-க்கர்கள் எழுதியவைகளில் இருந்து எடுக்கப்பட்ட சாட்சியங்கள் - தரிசனத்திற்குப் பின்னர் 2300 வருடங்கள் வரை சுத்திகரிப்பு முடிவு பெறாது -எப்படி, எங்கே தொடங்கப்பட்டது, எப்பொழுது முற்றுப்பெறும் - "தங்கத்திலான பாத்திரங்கள்," சத்தியங்கள், திரும்பி வைக்கப்படவேண்டும். ...105

## அத்தியாயம் 5

## அறுப்புக் காலம்

அறுப்பு, காலக்கணக்கின்படி அதன் இடம் - அதன் நோக்கமும், அதன் மகா முக்கியத்துவமும் - கால தீர்க்கதரிசனங்களில் கவனத்தைப் பதிப்பது - அறுப்பிற்கான ஆயத்தம் - தீர்க்கதரிசன சாட்சியம் கூற வருத-ன் முக்கியத்துவம் - ஆண்டவருடைய பிரசன்னம் - முறையான ஆட்சேபணைகள் பதிலளிக்கப்பட்டன - ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பது. ...141

## அத்தியாயம் 6

## அறுப்பு வேலை

அறுப்பு வேலையின் குணாதிசயங்கள் - கோதுமையைச் சேகரித்தல் - களைகளைச் சேகரிப்பது, கட்டுவது, எரிப்பது - அதன் ஆரம்பமும், அதிகமான வளர்ச்சியும் - யூத யுக அறுப்பின் பதரைப் போன்று அழிக்கப்படுதல் - கால ஒற்றுமைகள் கவனிக்கப்பட்டது - பாபிலோன் தள்ளப்படுவது, படிப்படியான வீழ்ச்சி, இறுதியில் அழிவு - பாபிலோன் மேல் வாதைகள் வருவதற்கு முன்பு தேவனுடைய ஊழியக்காரர்கள் முத்திரையிடப்படுதல் - நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை -



அமைப்புகளாகவும் தனிப்பட்டவிதமாகவும் - யூத முறை பரீட்சிக்கப்படுவது நிழலானது - கோதுமையை பரீட்சிப்பதும் தூற்றுதலும் - புத்தியுள்ள கன்னிகைகள், புத்தியில்லாத கன்னிகைகளிடம் இருந்து பிரிக்கப்பட்டு, விருந்துக்குச் செல்லுதல் - "கதவு மூடப்பட்டது" - மேற்கொண்டும் பரீட்சை, சிலர் தள்ளப்படுதல் - ஏன், எப்படி? - "பரம அழைப்பு" முற்றுப்பெறுவது - காலம் குறுகியதாக இருக்கிறது - "ஒருவனும் உன்னுடைய கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதிருப்பானாக" - பதினோராவது மணி ஊழியக்காரர்களும், ஜெயம் கொள்ளுகிறவர்களும். ...159

## அத்தியாயம் 7

## சபையின் மீட்பும், உயர்த்தப்படுதலும்

சபையின் மீட்பு அருகில் இருக்கிறது - மனுக்குலத்தின் விடுதலையை முன்னறிவிப்பவர் - அதன் காலம் யூகமாகச் சொல்லப்படுகிறது - உலகத்திற்கு வருகிற துன்பங்களில் இருந்து பரிசுத்தவான்கள் எப்படி தப்பித்துக் கொள்ளுவார்கள் - எப்படி, எப்பொழுது தேவன் அவளுக்கு உதவி செய்வார் - அவளது கடைசி விடுதலையின் விதமும், சூழ்நிலைகளும் - இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள் முதலாவது விடுதலை பெறுவார்கள் - சபையின் உயிரோடிருக்கும் அங்கங்கள் மறுரூபமடைதல் - அவர்கள் மரிப்பார்களா?-இது முதல் கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். ...283

## அத்தியாயம் 8

## இஸ்ரயே-ன் மறுசீரமைப்பு

பாலஸ்தீனாவில் இஸ்ரயேல் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுதல், இந்த அறுப்பின் போது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒரு சம்பவம் - எப்படி, எந்த அளவுக்கு, எந்த வகுப்பினரோடு, பழைய நிலைக்குக் கொண்டு வரப்படுவதை நாம் எதிர்பார்க்க வேண்டும் - அதன் ஆரம்ப காலம், அந்த நாளில் இருந்து அது முன்னேறுவதற்கான ரூபகாரங்கள் - ஏன் ஆயிரம் வருட யுக ஆசீர்வாதங்கள் எல்லா மனுக்குலத்திற்கும் வர வேண்டும், யூதர்களை சென்றடைந்து முத-ல் அவர்களை உயிர்ப்பிக்குமா - யூத நம்பிக்கைகள் புத்துயிர் பெறுதல் - பிரபலமான யூத, புற ஜாதி எழுத்தாளர்களின் கணிப்புகள் - தீர்க்கதரிசனத்தோடு இவைகள் ஒத்துப்போகுதல் - கிறிஸ்துவைக் குறித்த இஸ்ரயே-ன் கடின மனது ஏற்கெனவே கடந்து

போனது - இயக்கத்தின் வளர்ச்சி, வேகம் - தேவன் அவர்களுக்கு உதவி செய்வார் - இஸ்ரயே-ன் பிரச்னைகள். ...305

## அத்தியாயம் 9

### உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார்!

இம்மானுயே-ன் பிரசன்னத்தையும் அவரது ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலையும் காண்பிக்கும் தீர்க்கதரிசன ரூபகாரத்தின் சுருக்கம் ...391

## அத்தியாயம் 10

### தேவனுடைய கல் மற்றும் தீர்க்கதரிசியின் சாட்சியம், எகிப்தில் உள்ள மகா பிரமிட் (கூர்நுனிக் கோபுரம்)

மகா பிரமிட் (கூர்நுனிக் கோபுரத்தை) குறித்த பொதுவான விளக்கம் - கிறிஸ்தவர்களுக்கு ஏன் விசேஷமான ஆர்வம் - பிரமிட் சத்தியத்தின் பெரிய பண்டக சாலை - விஞ்ஞான, சரித்திர, தீர்க்கதரிசன உண்மைகள் - வேதாகமம் அதைப்பற்றி கூறுவது - ஏன், எப்பொழுது, யாரால் கட்டப்பட்டது - அது இருக்கும் இடத்தின் முக்கியத்துவம் - அதன் விஞ்ஞான பூர்வமான பாடங்கள் - மீட்பின் திட்டத்தைப் பற்றிய அதன் சாட்சி - யுகத்தைப் பற்றிய திட்டம் - கிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும் காட்டப்பட்டுள்ளது - உலகத்தின் கீழ்நோக்கி வரும் நிலை, மகா உபத்திரவத்தில் முடிவடைவது - உபத்திரவத்தின் தன்மை - பெரிய சீர்திருத்த இயக்கம் குறிக்கப்பட்டுள்ளது - யூத யுகத்தின் கால அளவு காட்டப்பட்டுள்ளது - சுவிசேஷ யுக சபையின் பரம அழைப்பு காட்டப்பட்டுள்ளது - அர்ப்பணம் செய்த சபையின் ஓட்டம் - பரம அழைப்பின் முடிவு குறிக்கப்பட்டுள்ளது - கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் காலம் - இழந்தவற்றைத் திரும்பிப்பெறும் ஆசீர்வாதங்கள் உலகத்திற்கு எப்படி கிடைக்கும் என்பது குறிக்கப்பட்டுள்ளது - ஆயிரம் வருடத்தின் போது உலகத்தின் போக்கு - அதன் முடிவு - பிரமிட்டில் காட்டப்பட்டுள்ளபடி மாம்சீக, ஆவிக்குரிய நிலைமைகளின் வித்தியாசங்கள் - பிரமிட் நாத்திகம், தெய்வ நம்பிக்கையின்மை மற்றும் எல்லா பரிணாமக் கொள்கைகளையும் மறுக்கிறது - வேதத்தின் திட்டத்தையும் அதன் குறிக்கப்பட்ட காலங்களையும் வேளைகளையும் சரிபார்க்கிறது. ...407

❀❀❀

## அத்தியாயம் 1

# "உம்முடைய இராஜ்யம் வருவதாக"

இராஜ்யத்தின் முக்கியத்துவம் - அதில் ஆர்வம் காட்டும் மனித வகுப்பினர் - அதை எதிர்க்கும் வகுப்பினர், ஏன் எதிர்த்து நிற்கிறார்கள் - இராஜ்யத்தின் சமீபமாயிருக்கும் நிலை - அதன் பரலோக மகிமை - அதன் தற்போதைய ஸ்தாபிதம்

**பூ**மியின் மிக முக்கியமான நிகழ்ச்சி, மனுஷர்கள் மத்தியில் தேவனுடைய இராஜ்யம், நம்முடைய ஆண்டவராகிய இயேசு மற்றும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட உடன் சுதந்திரர்களாகிய சுவிசேஷ சபையின் ஜெயம் கொண்டவர்களின் கரங்களில் ஸ்தாபிக்கப்படுவதாகும். இந்த பெரிய சம்பவம் பற்றி இதற்கு முன்பாக உள்ள வேதாகம பாடங்களில் காட்டப்பட்டுள்ளபடி, தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களும், முன் மாதிரிகளும் சுட்டிக் காட்டுகிறபடி இப்பொழுது நமக்கு சமீபமாய் இருப்பதை மாத்திரமல்ல, நம்மேல் இருப்பதையும் காண்கிறோம். இந்த கருத்துக்களை உணருகிறவர்கள் எவரும், அவைகளைச் சரியாக அல்லது பாதியளவாவது அறிகிறவர்கள் எவரும், யுகத்திற்கான தேவனுடைய பெரிய திட்டத்தோடு தங்கள் இருதயங்களில் அதிகமாக அனுதாபம் கொண்டவர்கள் எவரும், வேதனைப்படுகின்ற, மரித்துக்கொண்டிருக்கிற சிருஷ்டிகளின் பாவத்தி-ருந்தும், துன்பத்தி-ருந்தும் விடுதலை பெறும்படியாக தேவன் வைத்திருக்கிற வழியைப் பார்க்கின்ற எவரும், அது ஸ்தாபிக்கப்படும் விதத்திலும் நேரத்திலும் ஆழமான சிரத்தை கொள்ளாமல் இருக்கமுடியாது.

"உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல, பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று ஜெபியுங்கள் என்று நம்முடைய ஆண்டவர் தாமே நமக்குக் கற்றுக்கொடுத்த ஜெபம் நிறைவேறவேண்டும் என்று தீர்க்கமாக நம்புகிற அனைவரும் அவர்கள் இருதயத்தி-ருந்து ஆவியோடு ஜெபித்திருந்தால் அவர்கள் கேட்டுக்கொண்டபடி அந்த ஜீவனுள்ள ஆசை நிறைவேறுவதை உணர வேண்டும்.

உலகம் கூட இந்த இராஜ்யத்தின் உண்மையான நிலைமையை உணர முடியும் என்றால், அதை உடனடியாக வரவேற்கும் என்பதை நாம் காண முடியும். எப்படியும் கடைசியில் நீண்ட காலமாக வாஞ்சித்த ஆசீர்வாதம், ஆயிர வருட யுகத்தின் போது வருவதைக் காணும் போது, உலகம் வரவேற்கும்.

ஆனால் இந்த நீதியின் ஆட்சிக்கு ஒரு பொதுவான வகுப்பினர் ஒரு வேளை எதிராக இருக்கலாம். முக்கியமான கட்டளையான அன்பு என்கிற நியதியை நேசிக்காதவர்கள் இந்த வகுப்பில் உண்டு. இவர்கள் மற்றவர்களைத் தங்களைப் போன்று நேசிக்காமல், மற்றவர்கள் ஒடுக்கப்படுவதையும், துன்புறுத்தப்படுவதையும் அவர்களுக்கு முறையாகத் தர வேண்டிய வெகுமதிகளையும், உரிமைகளையும் தங்களது சுகபோகத்துக்காக மறுக்கிறதையும் இந்த வகுப்பினர் வாஞ்சிக்கிறார்கள். இப்படி செய்வதன் நோக்கம் இந்த வகுப்பினர் தங்கள் இருதயம் கேட்பதற்கும் மேலாக சம்பிரமமாய் வாழ நினைப்பது தான். *(யாக். 5:1-9)* தற்போது சமுதாயத்தில் காணப்படும் ஒழுங்குமுறைகளின் மேல் ஒரு மரணப் பிடியை வைத்திருக்கிறார்கள். உள்ளார மனதுக்குள் மேசியாவினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்யத்தைக் குறித்து பயப்படுகிறார்கள். இதோடு கூட அவர்களது ஆசை என்னவென்றால், அது ஒரு போதும் வரக்கூடாது என்பது தான். தாவீது சொன்ன பிரகாரம், "தங்கள் வீடுகள் (குடும்பங்கள்) நித்திய காலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம்; அவர்கள் தங்கள் நாமங்களை (பல்வேறு விதமான) தங்கள் நிலங்களுக்குத் தரிக்கிறார்கள். இதுதான் அவர்கள் வழி, இதுதான் அவர்கள் பைத்தியம்; ஆகிலும் அவர்கள் சந்ததியார் அவர்கள் சொல்லை மெச்சிக்கொள்ளுகிறார்கள்." *சங். 49: 11,13*



இந்த இராஜ்யத்தைக் குறித்த தீர்க்கதரிசிகளின் அதிகமான சாட்சிகளை நம்பாமல் அல்லது கவனியாமல் இருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் எப்பொழுதும் இராஜ்யத்தைக் குறித்துப் பேசினார்கள். "உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள்." *(அப். 3:21)* அநேகர் இராஜ்யத்தைக் குறித்து பயப்படுகிறார்கள். தேவன் அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றால் அது நீதியின் ஆட்சியாக இருக்கும். அப்படி நியாயம் வழங்கப்பட்டால், ஆட்சி செய்பவர்களில் அநேகர் தங்கள் பதவிகளை (இடங்களை) தங்கள் பிரஜைகளுக்குக் கொடுக்க வேண்டியதிருக்கும், இல்லையென்றால் ஒருவேளை சிறைச்சாலையில் போடப்படலாம்; மேலும், கனவான்கள், பிரபுக்கள், பணப்பெருமை பிடித்தவர்கள், புகழ்ச்சியாகப் பேசப்பட்டவர்கள், தங்கள் மகிமையையும், கனத்தையும் தவறான முறையில் பெறப்பட்ட செல்வத்தையும் இழக்கக்கூடும். உண்மையான வெளிச்சத்தில் கனவீனமானவர்களாய் காணப்படுவார்கள் என்கிற உண்மையை நினைத்துப் பார்க்கவே பயப்படுகிறார்கள். "வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை. அறியப்படாத இரகசியமும் இல்லை" என்கிற வார்த்தையை அவர்கள் நம்பாவிட்டாலும் அவர்கள் பயப்படுகிறார்கள். *(மத். 10:26)* இந்த கனவீனமானவர்கள், அநீதியுள்ள உக்கிராணக்காரர்கள் செல்வத்தையும் அதிகாரத்தையும் இறுதியில் பயன்படுத்தும் போது உவமையில் ஒருவர் புத்திமானாய் இருக்கிறான் என்று மெச்சிக்கொண்டது போன்று, ஞானமுள்ளவர்களாய் இல்லாதிருக்கிறார்கள். *(லூக்கா. 16:1-9)* இவர்களோடு இன்னும் ஒரு பெரிய வகுப்பினர் நிற்கிறார்கள். இவர்கள் இல்லாவிட்டால் அவர்கள் விழுந்து போவார்கள். இந்த பெரிய வகுப்பினர், ஒரு வேளை தற்போது அவர்களுக்குரியதைக் காட்டிலும் அதிக அளவு கனம், அதிகாரம், பணம், அனுகூலம் இல்லாதிருக்கலாம். ஆனாலும் அவர்களிடம் எவ்வளவுதான் குறைவாக இருந்தாலும் என்றாவது ஒரு நாள் சௌகரியமாய் வாழலாம். "பொதுவான மந்தை" என்பதில் மற்றவர்கள் பார்த்து பொறாமை கொள்ளக் கூடியவர்களாக இருக்கலாம் என்கிற நம்பிக்கை இருக்கிறது. இவர்கள் கனவீனமுள்ளவர்கள், இவர்கள் சுயநலத்தை நாடுகிறவர்கள், மாயை

உள்ளவர்கள், அழிந்து போகிற ஆதாயத்துக்குரியவர்கள், பரிதாபத்துக்குரியவர்கள், உண்மைதான் இவர்களில் சிலர் ஏழைகளின் நண்பராகிய கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்து இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் உதட்டினால் அன்றன்றுள்ள அப்பத்தைத்தான் கேட்கிறார்கள். "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று கே-யுடன் ஜெபிக்கிறார்கள். அதே வேளையில் அவர்களுடைய ஒவ்வொரு பார்வையிலும், செய்கையிலும் மற்ற மனிதர்களோடு செயல்படும்போது, தற்கால அநீதியான ஆட்சியை எவ்வளவாய் நேசிக்கிறார்கள் என்பதையும், அநீதியில் எவ்வளவாய் பிரியப்படுகிறார்கள் என்பதையும் காட்டுகிறார்கள். கிறிஸ்துவின் இராஜ்யம் வருவது அவர்களுக்குச் சந்தோஷமாகக் காணப்படாது.

அது விசித்திரமானதாக உள்ளது. இது தேவனுடைய பிள்ளைகளின் குணாதிசயத்திற்கு குறிப்பான விதத்தில் வித்தியாசமாக உள்ளது. சில வேளைகளில், கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளாத சில பொதுவுடைமை வாதிகளையும், மற்றவர்களையும் காண்கிறோம். அதோடு கூட வேதாகமத்தையும், வெளியரங்கமாக்கப்பட்ட ஒரு மார்க்கத்தில் உள்ள எல்லா விசுவாசத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர்களையும் காண்கிறோம். ஆனாலும், அவர்கள் நீதியின் சில அடிப்படைக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் மனிதனின் பொதுவான சகோதரத்துவம் போன்றவைகளை அறிந்திருக்கிறார்கள். இது அவர்கள் எழுதி வைத்துள்ள புத்தகங்களில் அழகாக காட்டப்பட்டுள்ளது. அவர்கள் சமத்துவம், சமுதாயத்தில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது போன்று தோன்றுகிறது; மேலும் தேவனுடைய சித்தம் பூலோகத்தில் செய்யப்படும் போது வேதத்தில் பலமுறை கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களின் படியான, அனுகூலமான நிலைமைகளான மனிதர்கள் மத்தியில் கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது ஏற்படும் நிலைமையை எதிர்பார்ப்பது போன்றுதோன்றுகிறது. ஆனாலும், இந்த பொதுவுடைமைவாதிகள் தாராள மனப்பான்மையையும், சமத்துவத்தையும் பற்றிக் கூறுவது, பொதுவாக அவர்கள் அனுபவிக்கும் தரித்திரத்தினாலும், சராசரியான சௌகரியங்களில் குறைவுபட்டிருப்பதினாலும் வந்தது, அவர்கள் தங்கள் கொள்கைகளில் அதிக வளர்ச்சி பெற்றதினால் அல்ல. ஏனெனில், அவர்களில் ஒருவன் பெரிதான செல்வத்தைச் சுதந்தரித்துக் கொள்வான் என்றால் அல்லது பெற்றுக்கொள்வான் என்றால் நிச்சயமாகவே அவன் தன்னுடைய பொதுவுடைமைக் கொள்கைகளை விட்டுவிடுவான்.



"உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பூலோகத்தில் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கக்கூடிய இந்த பரிசுத்தவான்கள் கவனமாக நடக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் அவர்களுடைய ஜெபங்கள் உதட்டளவில் உள்ளதாக இருக்கும். இதற்கு அவர்களுடைய இருதயமும், வாழ்க்கையும் அனுமதிக்காது. "உன் வாய்ச் சொல்லைக் கொண்டே உன்னை நியாயம் விசாரிக்கிறேன்" என்பது அவருடைய ஊழியக்காரர்கள் என்றும், அவருடைய அன்பின் நீதியின் இராஜ்யத்திற்காக வாஞ்சை உள்ளவர்கள் என்றும் அறிக்கை செய்கிற சிலருக்கு எதிராக நியாயாதிபதி கூறும் எச்சரிக்கைகளில் ஒன்றாக உள்ளது. இப்பொழுதும் கூட இப்படியாக ஜெபித்து, நீதியின் ஆட்சி வரும் என்று நம்பிக்கை வைத்திருப்பவர்கள், அவர்களுக்குள் இருக்கிற அதன் நீதியான கட்டளைகளின்படி தங்களுடைய செயல்களையும் வார்த்தைகளையும் காத்துக்கொள்வார்களாக.

இதற்கு முன்பு வெளியாகியிருந்த முந்தைய தொகுதிகளைப் படித்தவர்கள், அதின் பாடங்களின் பலமுள்ள கருத்துக்களை உணர்ந்து கொண்டவர்கள், தேவனுடைய இராஜ்யம் என்பது வெளிப்படையானது அல்ல, பார்க்கக் கூடிய ஒன்று அல்ல, உலகப்பிரகாரமான ஆடம்பரம் உடையது அல்ல, ஆனால் வல்லமையையும் திவ்ய மகிமையையும் கொண்டது என்பதைக் காண்பார்கள். உலக இராஜ்யங்களின் அதிகாரத்தின் காலம் இன்னமும் முடியாமல் இருப்பதினால் அதை வென்று, அவைகளை இன்னும் அகற்றவில்லை. ஆனாலும், தேவனுடைய இராஜ்யத்தின் அதிகாரம் ஏற்கெனவே வந்துவிட்டது. ஆகவே பூமியின் அதிகாரத்தின் மேல் இன்னமும் முழு ஆதிக்கத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறது. அது ஸ்தாபிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. காலங்களின்

அடையாளங்கள் மூலமாகவும், மேலும் முந்தைய புத்தகத்திலும் இந்த புத்தகத்திலும் தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்து பார்ப்பதாலும் அது தெரிய வருகிறது.

வர இருக்கின்ற அத்தியாயங்கள் பேர் சபையையும், உலகத்தையும் இராஜ்யத்திற்கென ஆயத்தம் பண்ணும்படியாக பல நிலைக்குட்பட்ட ஆயத்தங்களை குறிக்கும் தீர்க்கதரிசனங்களையும் பரிசீ-க்கும். அதோடுகூட இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது ஏற்படக்கூடிய பரவசமூட்டக்கூடிய மாற்றங்களைப் பற்றி முன்கூட்டியே அறிவிக்கப்பட்டவைகளையும் நமது கவனத்திற்குக் கொண்டு வரும். இந்த இராஜ்யத்தில் உடன் சுதந்திரராக இருக்கும்படியாக பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிற அதே வேளையில் ஆண்டவரோடு ஒத்துழைக்கும்படியாகவும், வரஇருக்கின்ற மற்றும் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் முக்கிய அறுவடையாளராக, இராஜாவாக இருக்கிறவரோடு சேர்ந்து செயல்படும்படியாகக் காத்துக்கொண்டு இருக்கிற, ஜீவித்துக் கொண்டு இருக்கிற பரிசுத்தவான்களுக்கு இந்த விஷயத்தைக் காட்டிலும் வேறு எதுவும் முக்கியமானதாக, அதிக ஆர்வத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்க சாத்தியமில்லை.

★★★

## அத்தியாயம் 2

# "முடிவு காலம்" அல்லது "அவருடைய ஆயத்தம் பண்ணும் நாள்"

**தானியேல் 11**

*முடிவு காலம் - அதன் ஆரம்பம் கிபி 1799 - அது முற்றுப்பெறுவது கிபி 1914 - எதை ஆயத்தம் செய்ய வேண்டும், அதன் நோக்கம் - உலக சரித்திரம் தீர்க்கதரிசனமாக அதன் முக்கியமான ஆட்சியாளர்கள் மூலம் கண்டுபிடிக்கப்படுகிறது - கிமு 405ல் இருந்து இந்த ஆயத்த நாள் வரை முடிவு காலத்தின் ஆரம்ப காலம் திட்டவட்டமாகக் குறிக்கப்பட்டது. ஆனாலும் பெயர்கள் அல்லது காலங்கள் இல்லாமல்.*

முடிவு காலம் என்பது 115 வருடங்கள் கொண்டதாகும். அது கிபி 1799-ல் இருந்து கிபி 1914 வரை (ஆக்கியோனின் முன்னுரையைப் பார்க்கவும்) என்று குறிப்பாக வேதாகமத்தில் குறிக்கப்பட்டுள்ளது. "அவருடைய ஆயத்தம் பண்ணும் நாள்" என்பது இதே காலத்திற்குக் கொடுக்கப்பட்ட இன்னொரு பெயராகும். ஏனெனில் அதில் அறிவு பெருகிப் போகும் என்று வேதம் கூறுகிறது. அதினிமித்தம் அப்பொழுது கண்டுபிடிப்புகள், புதியவைகளைத் தோற்றுவித்தல் போன்றவைகள் ஏற்படும். அது வரயிருக்கிற ஆயிரவருட அனுகூலங்களுக்கு வழிவகுக்கிறது. அது இயந்திர உபகரணங்களை ஆயத்தப்படுத்தினால் உடல் உழைப்பைக் குறைக்கும். அது பொதுவாக உலகத்திற்கு நேரத்தை மிச்சப்படுத்துவதோடு, சௌகரியங்களையும் உண்டு பண்ணும். இவைகள் கிறிஸ்துவின் நீதியின் ஆட்சிக்குக் கீழாக, எல்லாருக்கும் ஒரு ஆசீர்வாதமாக

இருக்கும். மேலும் பூமியை, ஆண்டவரை அறிகிற அறிவினால் நிரப்ப உதவும். வேறொரு விதத்திலும் அது ஆயத்தத்திற்கான ஒரு நாளாக அல்லது காலமாக இருக்கும். ஜனங்கள் மத்தியில் வசதிகள் மற்றும் சுதந்தரத்தின் ஒரு சுவையை அளிப்பதாக இருக்கும். இது கிறிஸ்துவின் ஆட்சி ஏற்படும் முன்னர் உலகத்தைச் சரியான வழியில் நடத்துவதற்காகவும் இருக்கும். இந்த ஆசீர்வாதங்கள், பலம் பெற்றிருப்பவர்களுக்குக் காலா காலத்தில் உதவி செய்வதாக மாறும். இவைகள் ஜனங்களை எழுச்சி பண்ணுவதற்கும், பொதுவுடைமைச் சங்கங்கள் போன்றவைகளை கவிழ்க்கவும் வழி செய்யும். அதோடு கூடவே தற்போது பூமியில் உள்ள அதிகாரங்கள் மற்றும் அரசியல், மத ரீதியான அதிகாரங்களும் வீழ்ச்சி அடையும். இப்படியாக தற்போது இது ஒரு ஆயத்த நாளாகும். (இப்படி ஒரு கவிழ்த்துப்போடுதல் மூலமாக) நெடு நாட்களாக ஜெபித்துக்கொண்டு வந்த தேவனுடைய இராஜ்யத்தின் பூலோக ஆட்சி ஸ்தாபிக்கப்படுவதற்கான ஒரு ஆயத்த நாளாக இது உள்ளது.

"அறுப்பு உலகத்தின் முடிவு" என்று நாம் வாசிக்கிறபடி (மத். 13:39) கடைசி 40 வருடங்கள் (ஆக்கியோனின் முன்னுரையைப் பார்க்கவும்) உலகத்தின் முடிவு காலம், சுவிசேஷ யுகத்தின் "முடிவு" அல்லது "அறுப்பு" என்று அழைக்கப்படுகிறது. முன் சொல்லப்பட்ட இந்தக் காலத்திற்குரிய பொதுவான குணாதிசயம், சம்பவங்கள் பற்றி விரைவில் கவனிப்போம். ஆனாலும் அறுப்பின் விசேஷமான அம்சங்களைப் பற்றி வரயிருக்கின்ற ஒரு அத்தியாயத்தில் காண்போம்.

இந்த காலத்தின் தேதியைக் குறித்த தகவல் தானியே-ன் தீர்க்கதரிசனத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும், அதைக்குறித்து அவன் ஒன்றும் அறியாதிருந்தான் என்று நாம் காண்கிறோம். ஏனெனில், "நான் அதைக் கேட்டும், அதின் பொருளை அறியவில்லை" (தானி. 12:8) என்று அவன் கூறியுள்ளான். அதைக்குறித்து அவன் ஆச்சரியத்துடன் கேட்டபோது "இந்த வார்த்தைகள் முடிவு காலமட்டும் புதை பொருளாக வைக்கப்பட்டும், முத்திரிக்கப்பட்டும் இருக்கும்" என்று கூறப்பட்டது. ஆகவே இதி-ருந்து தெரியவருவது என்னவெனில் 1799க்கு முன்பாக ஒருவரும் தீர்க்கதரிசனத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்பதாகும். இந்த விஷயத்தை விட்டுவிடும்



முன்னர் 1829க்கு முன்னால் அதை அறிந்து கொள்ள ஆரம்பம் ஏற்படாது என்பதையும், மேலும் 1875ம் ஆண்டு வரை அது தெளிவாகாது என்பதையும் அந்தத் தீர்க்கதரிசனம் சுட்டிக்காட்டுகிறது என்பதை நாம் காண்பிப்போம்.

தானியேல் தீர்க்கதரிசன புத்தகத்தின் 11வது அதிகாரம், முடிவு காலம் என்கிற இந்த காலத்தைக் குறித்து வந்த குறிப்பிடத்தக்க சம்பவங்களைக் கூறும்படியாகவே உள்ளது. ஆனால் 12வது அதிகாரம் அந்த இடத்தி-ருந்து அறுப்புக்கு அல்லது கால முடிவுக்கு வழி நடத்துகிறது. முடிவு கால ஆரம்ப தேதி கொடுக்கப்பட்டுள்ள வினோதமான முறையை, தீர்க்கதரிசனத்தை அறிகிற மாணவர்கள் உணர்ந்து கொள்வார்கள். அது அறிந்து கொள்ளப்படுவதற்கென்று குறிக்கப்பட்டுள்ள காலம் வரைக்கும், அது குறிப்பிடத்தகுந்த விதத்தில் மறைக்கப்படும் விதத்தையும், குறிப்பிடத்தக்க விதத்தில் அந்த தேதியின் துல்-யத்தையும் காண முடியும். 11வது அதிகாரத்தில் இந்த காலத்தின் குறித்த வேளை விசித்திரமாகக் குறிப்பிடப்பட்ட பின்னர் அதில் ஒரு பெயரோ அல்லது ஒரு தேதியோ அறிவிக்கப்படாமல் இருக்கும் போது, 12வது அதிகாரம் மூன்று காலங்களைக் காட்டுகிறது. அவைகள் 1260, 1290, 1335 என்கிற தீர்க்கதரிசன நாட்களாகும். அதாவது 1799வது வருடமே முடிவு காலத்தின் ஆரம்பம் என்று 11வது அதிகாரத்தின் பாடத்தை உறுதி செய்வதோடு, நிரூபிக்கவும் செய்கிறது.

நாம் பார்க்க இருக்கின்ற சில மிக முக்கியமான குணாதிசயங்களையும், சரித்திரத்தின் சம்பவங்களையும் 11வது அதிகாரம் குறிப்பிடுவதாக இருந்தாலும், அதன் சாட்சியங்கள் அதிகமான தீர்க்கதரிசன மாணவர்களுக்கு இன்னமும் முத்திரையிடப்பட்டு, அதிக முக்கிய காரியமான தீர்க்கதரிசனத்தின் மையப்பொருள் ஏற்கெனவே நிறைவேறிவிட்டது போன்று இருப்பதுதான். ஒரு தீர்க்கதரிசனமானது வெளிப்படுவதற்கு ஏற்ற காலம் வருவதற்கு முன்னால் அதை மூடி வைப்பதோ அல்லது மறைத்து வைப்பதோ ஒன்றும் புதிய விஷயமல்ல. இந்த மையப்பொருள் ஏற்கெனவே நிறைவேறியிருக்கிறது என்று கடந்த காலத்தில் சில தீர்க்கதரிசனத்தின் மாணவர்கள் நம்பி உறுதியுடன்

இருப்பதினால் நம்முடைய பொதுவான மொழி பெயர்ப்புள்ள ஆங்கில வேதாகமத்தில் இடது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் கிமு 171-168ல் நிறைவேறிற்று என்றுள்ளது. தானியேல் 11:31 இப்படியாக கூறுகிறது: "ஆனாலும் அவனிடத்தி-ருந்து புறப்பட்ட சேனைகள் எழும்பி அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்த குலைச்சலாக்கி அன்றாட ப-யை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள்."

இது சிரியா நாட்டு இராஜாவான அந்தியோகஸ் எபிபேனஸ் (Antiochus Epiphanes) என்பவன் எருசலேமுக்குள் பலவந்தமாக நுழைந்து, ஆலயத்தில் தேவனுக்கு ஏறெடுக்கப்படும் ப-களை நிறுத்தி, அந்த ஆலயத்தில் ஜூபிடர் ஒ-ம்பஸின் (Jupiter Olympus) சிலையை வைத்த போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று என்று சொல்லப்படுகிறது.

தனக்கு சொல்லப்பட்டதை நம்புவதில் திருப்தியடையும் பொதுவான மாணவனை திருப்திப்படுத்த, நிறைவேறினது போன்று காண்பிக்க இந்தத் தீர்க்கதரிசனம் போதுமானதாக உள்ளது. மேலும், வெகு காலத்திற்கு முன்னரே நிறைவேறிய தீர்க்கதரிசனமாக இது இருப்பதால் அதில் அவனை நாட்டம் இழக்கச் செய்கிறது. ஆனால் ஊக்கத்துடன் பார்க்கும் மாணவனுக்கு அது (14வது வசனம்) ஏற்கெனவே முன்கூட்டியே சொல்லப்பட்டது என்பது தெரியும். அதாவது தானியே-ன் ஜனங்களைக் கொள்ளை அடித்தவர்கள் உண்மையிலேயே தரிசனத்தை நிறைவேற்ற முயற்சிப்பார்கள் (அல்லது நிறைவேற்றுவது போன்று காணப்படுவார்கள்), ஆனால் அதில் தோல்வியுறுவார்கள். மேலும் முடிவு காலம் ஒரு குறிக்கப்பட்ட காலமாகும் (வசனம் 35); ஆகவே அதுவரை முழுமையாக, சரியான விதத்தில் புரிந்துகொள்ள இயலாது. ஆகவே இவர்கள் கடந்த காலத்தில் இருந்து ஒரு சரியான அர்த்தத்தை எதிர்பார்க்கமாட்டார்கள். மேலும் இது நிறைவேறிவிட்டது என்று கூறப்பட்ட இதே தீர்க்கதரிசனத்திற்கு 200 வருடங்கள் கழித்து, நம்முடைய ஆண்டவர் இதைப்பற்றி நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததை ஜாக்கிரதையாக இருக்கிற மாணவன் பார்க்காமல் இருக்கவும் முடியாது. அவர் இதை எதிர் காலத்தில் நிறைவேற நாம்



எதிர்பார்க்க வேண்டும் என்று இப்படியாக கூறினார். "நீங்கள் அதை (பாழக்குகிற அருவருப்பை) பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும் போது (எதிர்காலத்தில்)"...... மத். 24:3,15. மேலும் "வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்" என்று நம்முடைய ஆண்டவர் உண்மையான பாழாக்குகிற அருவருப்பைக் குறித்து நாம் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்று எச்சரிப்பும் விடுத்துள்ளார்.

மாபெரும் போப்பு அமைப்பு தான் கிறிஸ்துவின் இராஜ்யம் என்கிற பெயரில் பல நூற்றாண்டுகளாக உலகத்தையும், சபையையும் கெடுத்த, பாழாக்குகிற அருவருப்பு என்கிற உண்மையை இதற்கு முந்திய புத்தகத்தில் கொடுக்கப்பட்ட சாட்சியங்கள் போதுமான அளவு தெளிவுப்படுத்தியிருக்கும் என்று நாம் நம்புகிறோம். அது வெகு காலமாக கிறிஸ்தவ சபையாகிய தேவனுடைய ஆலயத்தில் "பரிசுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருப்பது" உண்மைதான். அதன் தவறுகளில் இருந்து நாம் ஓடிப்போவதற்கு ஏதுவாக அதன் அருவருக்கத்தக்க குணாதிசயங்களை அதிகமதிகமாகப் பார்க்கும்படியாகக் கிடைத்த சிலாக்கியத்திற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். அதன் நாட்கள் எண்ணப்பட்டுவிட்டன, அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். மேலும் சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலம் (தானி. 8:14) சீக்கிரத்திலே உயர்த்தப்பட்டு தேவனுடைய மகிமையால் நிரப்பப்படும்.

இந்த அறிமுகத்தோடு தானியேல் 11ம் அதிகாரத்தை அதன் வரிசைப்படி ஆராய முற்படுகிறோம்.

இரண்டாவது வசனம் மேதிய-பெர்சியா சாம்ராஜ்யத்தோடு தொடங்குகிறது. கடைசி இராஜாவாக மூன்றாம் டேரியஸ் கோடோமனஸ் (Darius III Codomanus) இருந்தான்.

மூன்றாவது வசனத்தில் சொல்லப்பட்ட பராக்கிரமமுள்ள இராஜா, கிரேக்க நாட்டவரான மகா அலெக்சாண்டர் ஆவான். இவனைப் பற்றி வில்லார்டு (Willard) என்பவர் எழுதிய சரித்திர துணுக்குகளி-ருந்து கொடுக்கப்பட்ட கீழ்க்கண்டவற்றை ஆர்வத்துடன் படிக்க இயலும். அவர் கூறுகிறார்:

"மாவீரனான அலெக்ஸாண்டர் யூதேயா தேசத்தின் மேல்

படையெடுத்த பின்னர், இராணுவ வீரர்களையும், தனது ராணுவத்திற்கு உணவு பொருட்களையும் வழங்குமாறு ஒரு கட்டளையை எருசலேமிற்கு அனுப்பினான். அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய ஜேடஸ் (Jaddus) என்பவன் தான் பெர்சியா இராஜாவுக்கு விசுவாசம் உள்ளவனாக இருந்தபடியால், அவன் ஜீவனுள்ள நாள் மட்டும் தான் கடைப்பிடித்திருந்த நோக்கத்தைக் கைவிட முடியாது என்று பதில் எழுதினான். இப்படியாக மறுப்பு தெரிவித்ததற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக தீருவின் (Tyre) முற்றுகை முடிந்தவுடன் எருசலேமுக்கு நேராகச் சென்றான். அவன் வந்திருப்பது எதற்காக என்று அறிவிக்கப்பட்ட போது, அவனோடு வாதம் பண்ண முடியாது என்பதை முற்றுமாக உணர்ந்த உடன் பிரதான ஆசாரியன் தனது இக்கட்டான சூழ்நிலையில் தேவனை நோக்கி பாதுகாப்பிற்காக முறையிட்டான். இரவு வேளையில் ஒரு தரிசனத்தின் மூலமாகக் கட்டளை பெற்று, அவன் பட்டணத்தின் வாசல்களை திறந்து விட்டு வழியெல்லாம் மலர்களைத் தூவினான். லேவிய ஆசாரியத்திற்கான அருமையான ஆடைகளைத் தரித்துக் கொண்டு, வெள்ளை அங்கிகள் அணிந்த ஆசாரியர்கள் எல்லாரும் பின்தொடர வெற்றி வாகை சூடிய அலெக்ஸாண்டரை சந்திப்பதற்காக முன்னாகச் சென்றான். அலெக்ஸாண்டர் அவனை சந்தித்தான், வணங்கினான், அவனுக்கு ஆராதனை செய்தான். அலெக்ஸாண்டருடைய நண்பன் மிகவும் ஆச்சரியப்பட்டு, மற்றவர்கள் அவனை ஆராதிக்கும் போது அவன் ஏன் பிரதான ஆசாரியனை ஆராதிக்க வேண்டும் என்று கேட்டான். அப்பொழுது அவன் கீழ்க்கண்டவாறு பதில் சொன்னான்: நான் அவனை ஆராதிக்கவில்லை. ஆனால் நான் ஆராதிக்கிற தேவனுடைய ஊழியானாக இருப்பதால் ஆராதிக்கிறேன். நான் அவனைப் பார்த்தவுடன் அவனை அறிந்து கொண்டேன். பெர்சியா தேசத்தை வெற்றி வாகை சூடுவதைக் குறித்துத் தியானிக்கும்போது மக்கதோனியாவில் ஒரு தரிசனத்தைக் கண்டேன். அதில் நான் பார்த்த விசேஷ ஆடை அவனுடையதாக இருக்கக் கண்டேன். அந்தத் தரிசனத்தில், அவன் தன்னுடைய தேவன் முன்னாக சென்று எனக்கு வெற்றி தருவதாக வாக்களிப்பார் என்று அவன் உறுதியாகக் கூறினான். அலெக்ஸாண்டர் அப்பொழுது ஆசாரியர்களை அரவணைத்து,



அவர்கள் நடுவாக நடந்து இப்படியாக எருசலேம் நகருக்குள் நுழைந்து மிகவும் பயபக்தியுடன் ஆலயத்தில் ப- செலுத்தினான். அப்பொழுது பிரதான ஆசாரியன் தானியேல் தீர்க்கதரிசனங்களை அவனுக்குச் சுட்டிக் காட்டி, அவனால் பெர்சிய தேசம் தோல்வி அடையும் என்பது ஏற்கெனவே அதில் கூறப்பட்டுள்ளது என்கிற அர்த்தத்தை விளக்கிக் கூறினான்."

அலெக்ஸாண்டர் உலகத்தைக் குறுகிய காலமான 13 வருடங்களுக்குள் வென்று இருந்தாலும், அவனுடைய மரணத்திற்குப் பின்னர் இராஜ்யம் அவனுடைய குடும்பத்தினரிடம் ஒரே தேசமாகத் தொடர்ந்து இருக்கவில்லை. ஆனால் அவனுடைய நான்கு இராணுவ தளபதிகளால் அது துண்டு துண்டாக்கப்பட்டது என்பது 4வது வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் இந்தத் தீர்க்கதரிசனம் தானியேல் 8: 3-9, 20-25 உடன் ஒத்து இருப்பதைக் கவனியுங்கள். அலெக்ஸாண்டரின் சாம்ராஜ்யத்தின் பிரிவுகளில் ஒன்றில் இருந்து (வசனங்கள் 8,9,21ஐ ஒப்பிட்டு பார்க்கவும்) ஒரு "சின்ன கொம்பு" அல்லது வல்லமை வெளியே புறப்பட்டு வரும், அது மிகவும் பெரியதாகும். இது ரோமாபுரியைக் குறிக்கிறது. அது கிரேக்க தேசத்தின் அழிவின் மீது உயர்ந்து செல்வாக்கு பெற்றது. ரோமாபுரி சாதாரண தேசமாக இருந்த வேளையில் அதன் ஸ்தானாதிபதிகள் கிரேக்க (Grecian) தேசத்தின் பராக்கிரமத்தை ஒத்துக்கொள்ள தீவிரமாக இருந்தபோது, மகா அலெக்ஸாண்டரின் பாதத்தில் விழுந்து சாம்ராஜ்யத்தின் ஒரு பங்காக மாற ஆயத்தமாக இருந்தாலும் கூட, ரோம இராஜ்யம் படிப்படியாக உன்னத நிலைக்கு உயர்ந்தது.

தானியேல் 8:9, 10ல் சில வார்த்தைகளில் சொல்லப்பட்ட சரித்திரம் தானியேல் 11: 5-19ல் அதிகமான விபரங்களோடு விளக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான விளக்கத்தின் போது எகிப்து தெற்கின் இராஜா என்றும், கிரேக்கர்கள் அதன் பின்னர் ரோமர்கள் அவர்களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் அல்லது கிரேக்க நாட்டி-ருந்து வந்த புதிய கொம்பு என்றும் கூறப்பட்டதோடு வடக்குப் பகுதியின் இராஜா என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இவைகளுக்கு இடையில் பின்னப்பட்டதும், இப்பொழுது

ஒன்றோடு ஒன்றாக இணைக்கப்பட்டதுமாக இருக்கிறதுதான் தேவனுடைய ஜனங்களின் சரித்திரமாகும். தானியே-ன் ஜனங்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த இறுதியான ஆசீர்வாதத்தைத் தானியேல் விசுவாசித்தான். 17வது வசனம் வரும் வரை அலெக்ஸாண்டரின் தளபதிகளுக்கும், அவர்களைப் பின்பற்றி அவர்களுக்குப் பின்னால் வந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தங்களின் விவரங்களை இந்தச் சரித்திரத்தில் துருவிப் பார்ப்பது சிரமமானது என்பது மாத்திரமல்ல, தேவையற்றதும் கூட. 17வது வசனம் எகிப்தின் அரசியான கிளியோபட்ராவை (Cleopatra) குறிப்பிடுகிறது. இதுவரை உள்ள விஷயங்களை எல்லோரும் ஒத்துக் கொள்ளுவதினால் இதைக் காட்டிலும் இன்னும் கடந்த காலத்திற்குள் கடந்து செல்ல அவசியமில்லை.

18வது வசனமும் 31வது வசனமும் அந்தியோகஸ் எபிபேனஸ் (Antiochus Epiphanes) என்பவனைக் குறிக்கிறது என்று கூறுகிறார்கள். தீர்க்கதரிசனம் செலூக்கஸ், பிலோ பேட்டர், அந்தியோகஸ், எபிபேனஸ் மற்றும் ட்லாமஸ் பிலோமேட்டர் (Seleucus, Philopater Antiochus Epiphanes, Ptolemeus Philomater) என்பவர்களுக்கு இடையில் நடந்த சின்ன சச்சரவுகளையும், யுத்தங்களையும் அதிகாரத்தின் இறுதி வரை கூறுகிறது என்று தொடர்ந்து குறிப்பிடுகிறார்கள். யூதர்களும் இதே போன்று தான் கூறுவது தெரிகிறது. யூதர்கள் இந்த வியாக்கினத்தை 12வது அதிகாரம் வரை தொடர்ந்து நம்பி, வெகு சீக்கிரத்தில் மேசியா விடுவிப்பார் என்று எதிர்பார்ப்பதற்கு காரணம் இருந்தது. ஆகவே நம்முடைய ஆண்டவரின் பிறப்பின் போது “எல்லா மனிதர்களும் எதிர்பார்ப்போடு இருந்தார்கள்” என்று நாம் வாசிக்கிறோம். ரோமர்களின் கட்டுகளி-ருந்து அவரால், அவர் மூலமாக விடுதலை வரும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் 18வது வசனத்தில் இருந்து உண்மையான “அருவருப்பைப்” பார்க்கின்ற நாம், போப்பரசு வரை உள்ள முக்கியமானவர்களை தீர்க்கதரிசனம் இலேசாகக் குறிப்பிடுகிறது என்று அவைகளில் இருந்து விலகுகிறோம். அதன் பின்னர், அதைக் குறிப்பிட்டு அடையாளம் கண்ட பின்னர், அதன் உபத்திரவப்படுத்தும் வல்லமையை அறிந்து



கொள்ளுவதுடன், சரித்திரத்தின் மிக முக்கியமான நபர்களில் ஒருவராக இருக்கிற நெப்போ-யன் போனபார்ட்டைப் பற்றிய தேதியை விவரமாகக் கூறுவதைக் காண்கிறோம்.

ஆனால் முந்தைய வசனங்களில் சரித்திரத்தின் முக்கியமான அம்சங்களை மட்டும் தொடும்படியாக ஏன் மாற்றம் இருக்கிறது என்று ஒரு வேளை கேட்கப்படலாம். நாம் பதில் கூறுகிறோம். இது தீர்க்கதரிசனத்தை புதை பொருளாக வைக்கவும், முத்திரையிடவும் தேவனுடைய வழிமுறையாக இருக்கிறது. மேலும், முதலாவது வருகையின் போது இஸ்ரயேல் தடுமாற்றம் அடையாதபடி தீர்க்கதரிசனத்தில் எல்லாம் சரியாக ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தது. இந்த அதிகாரத்தின் 3ல் இருந்து 17வது வசனங்கள் வரை உள்ள இந்த தீர்க்கதரிசனத்தில் 20 நூற்றாண்டுகளின் சிறிய, பெரிய விபரங்கள் கூறப்பட்டு இருக்குமென்றால் அது நீளமானதாக, கடினமானதாக, புரிந்து கொள்ள முடியாததாக இருந்திருக்கும். மேலும் யூதர்களுக்கும் ஆதி சபைக்கும், தேவனுடைய இராஜ்யம் வருவதைப் பற்றிய காலத்தைக் குறித்து ஒரு கருத்தைக் கொடுத்து இருக்கும். ஆனால் இது தேவனுடைய நோக்கமாக இருந்ததில்லை.

அதன்பின்னர் தொடர்ந்து பார்க்கும் போது 17-19 வரை உள்ள வசனங்கள் மார்க் ஆண்டனியும், கிளியோபட்ராவும், (Mark Antony, Cleopatra) சம்பந்தப்பட்ட விஷயங்களின் காலங்களையும், ஆண்டனி வீழ்ந்த காலத்தையும் எகிப்து தேசம் (தென்பகுதியின் இராஜாவான எகிப்து) ரோம சாம்ராஜ்யத்திற்குள்ளாக விழுங்கப்பட்ட காலத்தையும் குறிக்கிறது. 20வது வசனத்தை கப்பம் கட்டுகின்ற எல்லா தேசங்களில் இருந்தும் அதிகமான தீர்வைகளை வசூல் செய்வதில் சரியான முறையைக் கையாண்டு வந்ததினால் பேர் பெற்ற அகுஸ்து ராயனுக்கு (Augustus Caesar) ஒப்பிட்டு பார்க்கிறோம். யூதேயாவிலும் மற்றும் உலகெங்கிலும் அவன் வரி வசூ-த்து வந்தது, நம்முடைய ஆண்டவரின் பிறப்போடு சம்பந்தப்பட்டு வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. (லூக்கா 2:1) “அந்நாட்களில் உலகெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்பது அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது” என்கிற அறிக்கை சொல்லப்பட்டவைகளுக்கு அழகாகப் பொருந்துகின்றது. அது மாத்திரமல்ல, “செழிப்பான

ராஜ்யத்தில் தண்டல்காரனைத் திரியப்பண்ணுகிற ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்புவான்" என்பதும் இதற்கு பொருத்தமாக உள்ளது. ஏனெனில், அகுஸ்து ராயனின் ஆட்சியின் காலம், மாபெரும் ரோம சாம்ராஜ்யத்தின் மகிமையான யுகம் என்று சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. "ரோமின் பொற்காலம்" என்றும் அழைக்கப்படுகிறது.

20வது வசனத்தின் இன்னொரு மொழி பெயர்ப்பு இப்படியாகக் கூறுகிறது, "செழிப்பான ராஜ்யத்தை அனுபவிக்கும்படி வரிவசூ-ப்பவன் ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்புவான்." இது விசேஷமாக பாலஸ்தீனாவுக்குப் பொருந்துவது போன்று தோன்றும். மேலும், இது லூக்காவில் சொல்லப்பட்டதற்குச் சரியாகப் பொருத்தமாக இருக்கிறது. ஆனால் இரண்டு மொழிபெயர்ப்பும் சரிதான். அது ரோம சாம்ராஜ்யத்தின் மகிமையான நேரமாகும். மேலும் இராஜ்யத்தின் மகிமையான பிரதேசமான பாலஸ்தீனா வழியாக வரி வசூ-ப்பவர்களைக் கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். அதற்கும் மேலாக கவனிக்கப்பட வேண்டியதென்னவெனில், அகுஸ்து ராயன் தான் உலகத்திற்கு முறைப்படியான வரி வசூல் முறையை அறிமுகப்படுத்தியவராகும்.

இந்த முக்கியத்துவம் பெற்ற ஆட்சியாளரைப் பற்றி நாம் மேற்கொண்டும் வாசிப்பதாவது; "ஆகிலும் சில நாளைக்குள் கோபமில்லாமலும், யுத்தமில்லாமலும் நாசமடைவான்." அகுஸ்து ராயனைக் குறித்து அவன் அமைதியான முறையில் மரித்தான் என்று சரித்திரம் கூறுகிறது. ஆனால் அதே வேளையில் சாம்ராஜ்ய அதிகாரத்தில் அவனுக்கு முந்தி இருந்தவரும், அவனுக்கு பின் வந்த ஏழு பேரும் கொடுமையான முறையில் மரித்தார்கள். அவனுடைய மரணம் அவன் அதிகாரத்தின் உச்சக் கட்டத்தை அடைந்த சில வருடங்களுக்குள் நிகழ்ந்தது. அதுவும் இராஜ்யத்தின் மகிமையான பிரதேசத்தின் வழியாக வரி வசூ-ப்பவர்களைக் கடந்து செல்ல அனுமதித்த சில வருடங்களுக்குள் நிகழ்ந்தது.

21வது வசனம் அகுஸ்து ராயனுக்கு (Augutus) பின்னாக வந்த திபேரியு ராயன் என்பவரைக் குறித்து சரியான முறையில் பின் வருமாறு கூறுகிறது. "அவன் ஸ்தானத்தில் அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான். இவனுக்கு இராஜ்யபாரத்தின் மேன்மையைக் கொடாதிருப்பார்கள்; ஆனாலும் இவன் சமாதானமாய் நுழைந்து இச்சகம் பேசி இராஜ்யத்தைக் கட்டிக் கொள்வான்." தீர்க்கதரிசியால் மேலே சொல்லப்பட்டது எப்படியாக திபேரியு ராயனைக் குறித்துச் சொல்லப்பட்ட சரித்திர குறிப்புக்கு ஒத்துப்போகிறது என்பதை இங்கே பார்ப்போம்.



ஒயிட் (white) என்பவர் இப்படியாகக் கூறுகிறார். "திபேரியு சிங்காசனத்தில் ஏறிய போது அவனுக்கு வயது ஐம்பத்தி ஆறு. அப்பொழுது நாட்டின் முக்கியமான காரியங்களை பொறுப்பெடுத்துக் கொள்ள அதிக ஆர்வம் இல்லாதிருந்தான்..... எல்லா தடைகளும் அகன்று விட்ட நிலையில் இந்த அரக்கன் அவனுடைய கொடுமையான இம்மைக்குரிய இன்பங்களுக்கு இடமளித்தான்."

வில்லார்டு (Willard) என்பவர் இப்படியாகக் கூறுகிறார்:

"முதலாவது அவன் நிதானத்துடன் ஆளுகை செய்வது போல் காண்பித்துக்கொண்டான். ஆனால் முகமூடி சீக்கிரம் அகன்று விட்டது...... ஜனங்களின் அரசியல் உரிமைகளை அவன் மந்திராலோசனை சபைக்கு (Senate) மாற்றியிருந்தான். ஆனால் அது வெகு சீக்கிரத்திலே இழிவுக்குள்ளாயிற்று. இப்படியாக அவனுடைய செயல்களை மிகவும் மரியாதையுடன் அனுமதித்ததோடு, அவர்களுடைய தெருக்களை இரத்தத்தினால் நிரப்பிய மனிதனுக்கு தொடர்ந்து முகஸ்துதி என்கிற தூபவர்க்கத்தை ஏறெடுத்தது. மனிதர்களுக்குள்ளேயே மிக இழிவான இந்த மனிதனின் ஆட்சியின் கீழ்தான் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யூதேயாவில் சிலுவையில் அறையப்பட்டார்."

இந்த நிகழ்ச்சிகள் தீர்க்கதரிசியின் விளக்கங்களுக்குச் சரியாகப் பொருந்துகிறது. மேலும் 22வது வசனத்தின் மூலமாக இன்னும் உறுதி செய்யப்படுகிறது. "பிரவாகமாய் (வெள்ளம்) வருகிற சேனைகள் (எதிர்ப்பவர்கள்) இவனாலே பிரவாகமாய் முறிக்கப்படும். உடன்படிக்கையின் தலைவனும் முறிக்கப்படுவான்." இந்தக் கடைசி அறிக்கை நிச்சயமாகவே நம்முடைய ஆண்டவராகிய இயேசுவைக் குறிக்கிறது. இயேசுவானவர் சரித்திர ஆசிரியர் குறிப்பிடுகிற

வண்ணமாக, யூதேயா தேசத்தில் திபேரியுவின் பிரதிநிதியாக இருந்த பிலாத்துவினாலும் ரோமப் போர் வீரர்களாலும் சிலுவையில் அறையப்பட்டார்.

“ஏனென்றால் அவனோடு கூட சம்பந்தம் பண்ணின நாட்கள் முதல் (அவனை சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொண்ட பின்னர்) அவன் சூதாய் நடந்து கொஞ்சம் ஜனங்களோடே புறப்பட்டு வந்து பெலங்கொள்ளுவான். (திபேரியு மெய்க்காப்பாளர்களை முதலாவது 10,000 பேரைக் கொண்டு அமைத்தான். பிறகு இது இரண்டு மடங்காயிற்று. இந்தச் சிறிய எண்ணிக்கையானவர்கள் சக்கரவர்த்தியின் மெய்க்காப்பாளர்களாக ரோமாபுரியில் அவனுடைய நிர்வாகத்திற்குள் தொடர்ச்சியாக இருந்தார்கள். அதின் மூலம் அவன் ஜனங்களையும் மந்திராலோசனை சபையையும் பயமுறுத்தினான். மேலும் அவன் பொதுவான தேர்தல்கள், சட்ட சபை ஆகியவைகளை ஒழித்து விட்டான்.) தேசம் சுக வாழ்வோடும் சம்பூரணத்தோடும் இருக்கையில், அவன் உட்பிரவேசித்து, தன் பிதாக்களும் தன் பிதாக்களின் பிதாக்களும் செய்யாததைச் செய்வான், கொள்ளையிட்டுச் சூறையாடி, பொருளை அவர்களுக்கு இறைத்துப் பங்கிட்டு, அரண்களுக்கு விரோதமாகத் தனக்குள் உபாயங்களை யோசிப்பான்; சில காலமட்டும் இப்படியிருக்கும்.” 23, 24 வது வசனங்கள்

மேற்கொண்டும் தேசங்களை வெற்றிக் கொண்டு சேர்ப்பதைக் காட்டிலும், இதற்கு முன்பாக வெற்றி பெற்று சேர்த்த தேசங்களை, சமாதானத்துடன் ஆளுகை செய்து காத்துக்கொள்ள வேண்டும் என்பதே, அகுஸ்துராயன் மற்றும் அவனுக்குப் பின் வந்தவர்களின் நோக்கமாயிருந்தது. இந்த நிலையைக் காத்துக்கொள்ளுவதற்கு அவர்களுடைய யுக்தி என்னவெனில், தங்களுக்குக் கிடைத்த நாடுகளைப் பிரித்து, அந்தந்த பிராந்தியங்களில் தேசாதிபதிகளை மதிப்பும், அதிகாரமும் கொடுத்து நியமித்தார்கள். அவர்கள் பதவியில் நிலைத்திருப்பது என்பது அவர்களுடைய பிராந்தியங்களில் அமைதியைக் காத்துக் கொள்ளுவதைப் பொறுத்தும், அவர்கள் ராயன் மேல் (Caesars) வைத்திருந்த இராஜ பக்தியைப் பொறுத்தும், வரி வசூ-ப்பதில் அவர்கள் உறுதியாக செயல்படுவதைப் பொறுத்தும்



இருந்தது. இப்பொழுது அவர்கள் முன் செய்தது போன்று, யுத்தத்தில் கிடைத்த பொருட்களை அடையாளமாக ரோமாபுரிக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக உலகத்தைக் கொள்ளையிடவோ, சூறையாடவோ வேண்டும் என்கிற கொள்கையைக் கடைபிடிக்கவில்லை. இந்த ராஜ தந்திர கொள்கையால், முன்பு அதன் சேனைகள் அங்கும் இங்கும் சென்றது போல் இல்லாது, இப்படி வருங்காரியங்களைக் கணிப்பது என்கிற முறையால் ரோமாபுரி இப்பொழுது உலகத்தை முழுமையாக அதிகமான மதிப்புடனும் ஆண்டது.

தீர்க்கதரிசனமானது குறிப்பிடத்தக்க விதத்தில் அகுஸ்து, திபேரியஸ் என்பவர்களைப் பொறுத்த வரையில் தனிப்பட்ட விதத்தில் குறிப்பிட்டாலும் அது முடிவு வருவதற்காகத்தான் இருந்தது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். முடிவு என்பது கிரீசிடமிருந்து ரோமாபுரிக்கு உலக ஆதிக்கத்தை மாற்றுவதாகும். மாவீரன் அலெக்ஸாண்டரின் நான்கு தளபதிகளிடம் இருந்து, அதாவது அந்த சாம்ராஜ்யத்தின் நான்கு பகுதிகளுக்கு பொறுப்பானவர்களிடம் இருந்து (தானியேல் 8:8ல் சொல்லப்பட்ட வெள்ளாட்டுக் கடாவின் நாலு கொம்புகள்) ரோம சாம்ராஜ்யத்திற்கு மாற்றுவதாகும். இதற்கு முன்பாக ரோம சாம்ராஜ்யம் கிரேக்க சாம்ராஜ்யத்தின் பகுதியாக இருந்தது. மாவீரன் அலெக்ஸாண்டருக்குப் பின் வந்த நான்கு தளபதிகள் பற்றி சரித்திரத்தில் கூறப்பட்டதை விட அதிகத் தெளிவாக தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த நான்கு பேர்களுக்கிடையில் பிரிக்கப்பட்டது தானியேல் 8 : 8 மற்றும் 11:4-5ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. சரித்திராசிரியர் (Willard’s Universal History, Page 100) கூறுகிறார்:

“கிரேக்க சாம்ராஜ்யம் இப்பொழுது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அந்தக் கூட்டணியில் இருந்த ஒவ்வொரு தளபதிக்கும் ஒரு பகுதி கொடுக்கப்பட்டது. எகிப்தின் அரசுரிமையை டாலமி (Ptolemy) என்பவன் பெற்றான். செலூக்கஸ் (Seleucus) சிரியா மற்றும் மேல் ஆசியாவைப் பெற்றான். -சிமேக்கஸ் (Lysimachus), திரேஸ், ஆசியா மைனர் தூரத்தில் உள்ள டாரஸ்ஸையும் பெற்றான்.

மேலும் கேசென்டர் (Cassander) அவனுடைய பங்காக மேசிடோனியாவைப் பெற்றான்."

இப்படியாக பிரிக்கப்பட்டதில் இத்தா- கேசென்டர் (Cassander) வசம் வந்தது. இது வடக்கு பகுதியில் இருந்தது. இது வடக்கு பகுதியின் இராஜ்யம் என்று அழைக்கப்பட்டது. எகிப்து தெற்கு பகுதியில் இருந்ததால் அது தெற்கு பகுதியின் இராஜ்யம் என்று அழைக்கப்பட்டது. படிப்படியாக ரோமர்களின் செல்வாக்கு நிலைபெற்றது. மேலும் செலூக்கஸ் (Seleucus), -சிமேக்கஸ் (Lysimachus), கேசென்டர் (Cassander) ஆகியோர் வைத்திருந்த பகுதி படிப்படியாக ரோம அதிகாரத்திற்குள் கொண்டு வரப்பட்டது. இது வடக்குப் பகுதி பிரதேசத்திற்கு உட்பட்டதாக இருந்தது. இதன்படி தெற்கத்திய பிரிவில் உள்ள எகிப்து மாத்திரம் தனித்திருந்தது. கிளியோபாட்ரா, ஆண்டனி, அகுஸ்து ராயன் (Cleopatra, Antony Augustus Caesar) என்பவர்களின் காலத்தின் போது தெற்கத்திய பகுதியாகிய எகிப்து வடக்கு பகுதியின் ஆட்சிக்கு உட்பட்டது. இப்படியாக ஏற்பட்டதற்குக் காரணம் கிளியோபாட்ராவின் (Cleopatra) தகப்பன் மரிக்கும் தறுவாயில் இருந்தபோது அவனுடைய பிள்ளைகள் இள வயதுள்ளவர்களாய் இருந்தபடியால் அவனுடைய விருப்பத்தின்படி இராஜ்யத்தை ரோம மந்திராலோசனை சபையின் பாதுகாப்புக்குள்ளாக விட்டான். இன்னொரு காரணம் மாற்கு ஆண்டனியின் (Mark Antony) தோல்வியாகும்.ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உண்மையாகவே தெற்கத்திய ராஜ்யமாகிய எகிப்து வடக்குப் பகுதியின் இராஜ்யத்தைப் போன்று (ரோமாபுரியைப் போன்று) வ-மை பெற்று இருந்தது. சரித்திர ஆசிரியர்கள் நமக்குக் கூறுகிறார்கள்: "அந்த காலத்தில் எகிப்துதான் பெரிய வணிகப் பட்டணமாக விளங்கினது. அப்போது அங்கே 33,000 பட்டணங்கள் இருந்தன; மேலும் அதன் வருடாந்திர வருமானம் 14,800 வெள்ளி தாலந்தாக இருந்தது." அதாவது ஏறக்குறைய 20,000,000 அமெரிக்க டாலர்களுக்கு சமமானதாகும்.

தீர்க்கதரிசனத்தின் நோக்கத்தையும் அர்த்தத்தையும் உணர்ந்தவர்களாக இந்த இராஜ்யங்களின் அரசர்களைப் பற்றி தனிப்பட்ட விவரங்களைக் குறித்து நாம் அதிகம் எதிர்பார்க்கக் கூடாது. ஆனால் வடக்கின் இராஜா என்று கூறும் போது, அது ரோமாபுரியின் பிரதிநிதி என்றும், தெற்கின் இராஜா என்று கூறும் போது அது எகிப்தின் பிரதிநிதி என்றும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வியாக்கியானத்தோடு நாம் தீர்க்கதரிசனத்தைத் தொடர்ந்து பார்ப்போம். 25வது வசனம் : "பின்னும் தென்திசை ராஜாவுக்கு விரோதமாகப் பெரிய சேனையோடே போர் செய்யத் தன் வல்லமையையும் தன் ஸ்திரத்தையும் எழுப்புவான்; அப்பொழுது தென்திசை ராஜா மிகவும் பலத்த பெரிய இராணுவத்தோடே போய் யுத்தங்கலப்பான்; ஆனாலும் அவர்கள் அவனுக்கு விரோதமாகத் துராலோசனை பண்ணியிருந்தபடியால், அவன் நிற்கமாட்டான்."



கிமு 30ல் இருந்து அகுஸ்துராயன் (Augutus Caesar) எகிப்தை ஒரு ரோம பிரதேசமாக ஆக்கிய காலத்தி-ருந்து இரண்டு தேசங்களுக்கும் இடையில் யுத்தம் ஏற்படவில்லை. ஆனால் கிபி 269ல் கிளியோபாட்ராவின் (Cleopatra) சந்ததியில் வந்த செனோபியா (Zenobia)என்கிற இராணி அதன் ஆட்சிக்கு உரிமை கோரி தனது ஆளுகைக்குக் கொண்டு வரும் வரை எந்த யுத்தமும் நடைபெறவில்லை. அவளுடைய ஆட்சி குறுகிய காலத்திற்குத்தான் இருந்தது. ஆரு-யன் (Aurelian) என்கிற ரோம பேரரசர் கிபி 272ல் அவளை வெற்றி கொண்டான். சரித்திர ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்: "சிரியாவும், எகிப்தும், ஆசியா மைனரும், செனோபியாவின் (Zenobia) சுதந்திரமான போக்கை ஏற்றுக்கொண்டார்கள். அவள் பால்மிராவின் (Palmyra) இராணியாக இருந்தாள். ஆனால் அந்த யுகத்தின் முதலாவது அதிகாரியாக இருந்தவரின் இராணுவத் திறமைகளையும், சாம்ராஜ்யத்தின் மிகச் சிறப்பான இராணுவத்தையும் சமாளிக்க வேண்டியதாக இருந்தது. இருந்தாலும் ஆரு-யன் (Aurelian) அவளைக் குறித்துப் பின் வருமாறு எழுதுகிறான்: "நான் ஒரு பெண்மணிக்கு எதிராகப் பண்ணுகிற யுத்தத்தைக் குறித்து ரோம ஜனங்கள் அவகீர்த்தியுடன் பேசுகிறார்கள். அவர்கள் செனோபியாவின் (Zenobia) குணாதிசயத்தையும் புகழையும் குறித்து அறியாதிருக்கிறார்கள். அவள் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவதையும் அவளுடைய ஆபத்தை உணராத துணிவையும் குறித்து விவரிப்பது கடினமான காரியமாகும்." எகிப்தில் செனோபியாவின் (Zenobia) கூட்டாளியாக இருந்த ஃபிர்மஸ் (Firmus) சீக்கிரமாக தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். 28வது வசனத்தில்

சொல்லப்பட்டபடி ஆரு-யன் (Aurelian) கனத்துடனும், அதிகமான ஐசுவரியத்துடனும் ரோம் நகருக்குத் திரும்பினான். இது குறித்து வசனம் 28 கூறுகிறதாவது : "அவன் மகா சம்பத்தோடே தன் தேசத்துக்குத் திரும்பி, தன் இருதயத்தைப் பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக வைத்து, அதற்கானதைச் செய்து (பல்வேறு விதமான காரியங்களை), தன் தேசத்துக்குத் திரும்பிப் போவான்."

அவன் சேர்த்துக்கொண்ட சம்பத்திற்கு ஆதாரமாகவும் ரோம் நகரின் வீதிகளில் வெற்றி பவனி வந்ததைக் குறித்து கிப்பன் (Gibbon) என்பவர் எழுதியிருப்பதி-ருந்து நாம் காணலாம். அவர் கூறுகிறார் :

"ஆசியாவின் சம்பத்தும், ஜெயிக்கப்பட்ட தேசங்களின் ஆயுதங்களும், சிரியா இராணியின் கொடிகளும் கம்பீரமான கவசங்களும் அவைகள் இருந்த வண்ணமாகவே அல்லது கலைத்திறமை அற்ற வகையில் நீக்கப்பட்டன.... செனோபியாவின் (Zenobia) அழகான உருவம் தங்கச் சங்கி-களில் உருவாக்கப்பட்டிருந்தது; அவளுடைய கழுத்தைச் சுற்றி இருந்த தங்கச் சங்கி-யை ஒரு அடிமை தாங்கிப் பிடித்துக்கொண்டிருந்தான். தாங்க முடியாத அளவிற்கு ஆபரணங்களின் சுமையால் அவள் கிட்டத்தட்ட மயக்கமுற்று விழுவது போல் இருந்தாள். அவள் ஒரு நாளில் ரோமின் வாசல்களுக்குள் நுழைய வேண்டும் என்று கற்பனை செய்து அதற்காக வைத்திருந்த கம்பீரமான இரதத்திற்கு முன்பு நடந்து செல்வது அவளுடைய வழக்கமாக இருந்தது."

அவன் திரும்பி வரும்போது அவனுடைய இருதயம் பரிசுத்த உடன்படிக்கைக்கு (கிறிஸ்தவத்திற்கு) எதிராக இருக்கும் என்கிற தீர்க்கதரிசியின் கூற்றைப் பற்றி மோசியம் (Mosheim) என்பவர் இப்படியாகக் கூறுகிறார்:

"ஆரு-யன் அதிகமான அளவில் விக்கிரக ஆராதனை செய்பவனாக, கிறிஸ்தவர்கள் மேல் அதிகமான வெறுப்புள்ளவனாக இருந்தாலும், முதல் நான்கு வருட காலத்தின் போது கிறிஸ்தவர்களுக்கு தீமை செய்ய வழி வகுக்கவில்லை. ஆனால் அவனுடைய ஆட்சியின் ஐந்தாவது வருடத்தில் தன்னுடைய மூட நம்பிக்கையாலோ அல்லது மற்றவர்களுடைய மூட நம்பிக்கையால் உந்தப்பட்டோ கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும்படி



ஆயத்தப்பட்டான். அவன் அதிக நாள் ஜீவித்திருப்பானாகில் அவனுடைய குணம் அவ்வளவு கொடியதாகவும் மூர்க்கத்தனம் நிறைந்ததாகவும் இருந்தபடியாலும், மேலும் அவன் தேவர்களை ஆராதிக்கிறவர்களாலும், ஆசாரியர்களாலும், அவர்கள் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்கக் கூடியவனாக அவர்கள் அவனை வைத்திருந்தபடியாலும், இதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது கிறிஸ்தவர்களை அவன் அதிக சித்திரவதை செய்திருப்பான். ஆனால் அவனுடைய புதிய உத்திரவுகள் மற்றெல்லா பகுதிக்கும் செல்வதற்கு முன்னதாகவே அவன் கொலை செய்யப்பட்டான். ஆகவே ஒரு சில கிறிஸ்தவர்கள் மாத்திரமே அவர்களுடைய தெய்வ பக்திக்காக, அவனால் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள்." (கிறிஸ்தவத்தின் சரித்திரம் தொகுதி 2, பக். 101)

தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடி, வெற்றிவாகை பெற்று திரும்பும் போது கிறிஸ்தவத்திற்கு எதிரான உபத்திரவப்படுத்தும் எண்ணம் வெளியரங்கமாக தோற்றமளித்தது. ஆரு-யன் சூரிய கடவுளை வணங்குகிறவன். மேலும் செனோபியாவின் மேல் அவன் கொண்ட வெற்றிக்கு காரணம் சூரிய கடவுள்தான் என்று நினைத்தான். ஆகவே அதனால் பெற்ற நன்மையை அங்கீகரிக்கும்படி யுத்தம் முடிந்த உடனே சூரிய கடவுளின் கோவிலைச் செப்பனிட்டான். சூரியனை ஆராதிப்பது தகுதியற்றது என்று கிறிஸ்தவர்கள் நினைத்தார்கள். இப்படியாக சூரியனை ஆராதிக்க அவர்கள் மறுத்ததுதான், திடீரென்று அவன் மூர்க்கமாக அவர்களை உபத்திரவப்படுத்தியதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

வசனம் 26: "அவனுடைய போஜனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அவனை நாசப்படுத்துவார்கள்; ஆகையால் அவனுடைய இராணுவம் பிரவாகமாய் வரும்; அநேகர் கொலையுண்டு விழுவார்கள்." ஆரு-யன் தன்னுடைய சொந்த இராணுவத் தளபதிகளாலேயே கொலை செய்யப்பட்டான். அவனுடையவர்களில் அநேகர் கொலை செய்யப்பட்டாலும் இராணுவம் வெற்றி கொண்டதாக இருந்தது.

27வது வசனம் ரோமபுரிக்கோ அல்லது எகிப்துக்கோ

உரித்தானதல்ல, ஆனால் ரோம சாம்ராஜ்யத்தில் அல்லது வல்லரசுகளில் உள்ள இரண்டு இராஜாக்களைக் குறிக்கின்றது. சாம்ராஜ்யத்தின் அதிகாரம் படிப்படியாக மரிக்கிறது. மதகுருமார்களின் (Clerical) அதிகாரம், ஜீவன் பெற்று வலுப்பெற்றது. ஒவ்வொருவரும் சுயநலத்தோடு செயல்பட்டாலும் அப்படிப்பட்ட எண்ணம் கிடையாது என்று மறுக்கிறவர்களாக இருந்தார்கள். வசனம் கூறுகிறதாவது : "இந்த இரண்டு ராஜாக்களின் இருதயமும் தீமை செய்ய நினைக்கும்; ஒரே பந்தியி-ருந்து பொய் பேசுவார்கள்; ஆனாலும் அது வாய்ப்பதில்லை; (அந்தக் காலத்தின் போது) குறித்த காலத்துக்கு முடிவு இன்னும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்." அல்லது தெளிவாகக் கூறவேண்டும் எனில் ஒரு குறிப்பிட்ட காலமாகிய 1260 வருடங்கள் போப்பரசின் உபத்திரவப்படுத்தும் காலமாக தேவனால் நியமிக்கப்பட்டிருந்தது. ஆகவே மத குருமார்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையில் உள்ள கூட்டு அல்லது ஒற்றுமை முன்னேற்றம் அடைய முடியவில்லை. ஏனெனில், அந்த காலத்தி-ருந்து 1260 வருடங்கள் எண்ணப்படும் போது அது "முடிவை" சீக்கிரமாகவே கொண்டு வரும். ஆகவே அது ஒதுக்கி வைக்கப்படவேண்டும் அல்லது நிறுத்தி வைக்கப்பட வேண்டும். மேலும் இத்தா-யில் சாம்ராஜ்யம் படிப்படியாகத் தானாகவே சீரழிய விட்டுவிடவேண்டும். ரோம சாம்ராஜ்யத்தில் கிறிஸ்தவ குருமார்கள் (Bishops) அதிகாரத்திற்காகத் திட்டம் தீட்டுவதை மத சரித்திரத்தில் நாம் காண்கிறோம். ஆகவே பேரரசர்களும் புதிய மதத்தை அங்கீகரிப்பது தங்களுடைய நலனுக்கு உகந்ததாக இருக்கக் கூடுமா என்பதை விவாதித்தார்கள். ஆனால் கான்ஸ்டன்டைன் (Constantine) சரியான நேரத்தில் செயல்பட்டான். மற்றவர்கள் இதைக்குறித்து சிந்தித்து கொண்டு இருந்தார்கள். ஆனால் மத அதிகாரமும் இராஜ்யத்தின் அதிகாரமும் இணைய வேண்டும் என்கிற விருப்பத்தை ஜனங்களின் கோபத்தினிமித்தம் உடனடியாக நிறைவேற்ற முடியவில்லை.

29வது 30வது வசனங்கள் இடைநிறுத்தி கூறப்பட்ட பகுதி, அதாவது குறிப்பிட்ட காலத்திற்கு அர்த்தத்தை மறைக்கும்படியான வசனங்கள் என்று நாம் கருதுகிறோம். மேலும், எதிர்காலத்தில் நீண்ட நாட்களுக்குப் பிறகு ரோம சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிகளுக்கும் எகிப்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய மோதலைக்



குறிப்பிடும்படியான வசனங்கள் என்று நாம் கருதுகிறோம். ஒரு யுத்தத்தைத் தவிர இவைகளுக்கு இடையில் வேறு ஒன்றும் ஏற்படாது. அதுவும் "குறிப்பிட்ட காலத்தில்" அதாவது அந்த காலத்தின் முடிவில், 1799ல் இருக்கும். ஆகவே 40-45 வது வசனங்களில் விளக்கப்பட்டபடி கடைசி யுத்தத்தைக் குறிக்கும்படியானவைகளைப் பார்க்கும் வரை இந்த வசனங்களை ஆராய்வதை இந்தக் காரணத்திற்காக விட்டு விடுவோம்.

31வது வசனம் 27வது வசனத்தின் கருத்தோடு இணைகிறது. அது ரோம சாம்ராஜ்யத்தில் உள்ள அதிகாரங்கள் இரண்டில் அதிக ஜெயங்கொண்டதாக இருக்கும் போப்பின் அதிகாரத்தைக் குறிக்கிறது என்று நாம் நிதானிக்கிறோம். ஆரு-யன் வரைக்கும் தனிப்பட்ட விதத்தில் முக்கியமான ஆட்சியாளர்களைச் சரித்திரத்தின் மூலம் நாம் பார்த்தோம். அரசாங்கம்,மதம் ஆகிய இரு அதிகாரமும் ஒன்றுக்கு ஒன்று எதிராக இருப்பதை நமக்கு அறிவிக்கிறது. பிறகு போப்பின் அதிகாரம் வலுப்பெற்றபோது, காணப்பட்ட அதன் குணாதிசயம் அது தேவனுடைய சத்தியத்திற்கும், சபைக்கும் தொடர்புடையதாக எப்படியாகச் செயல்படுகிறது என்பதை அறிவிக்கிறது. போப்புக்கள் பலர் மாறினாலும், அந்த முறையை ஒரு இராஜாவாக அல்லது அதிகாரமாக குறிப்பிடப்படுகிறது. அரசாங்கத்திற்கும் மத ஆட்சியாளர்களுக்கும் இடையில் உள்ள போட்டியில் போப்பரசு வெற்றி பெற்றது என்று நாம் அறிந்து உள்ளோம். தீர்க்கதரிசனம் இப்படியாகக் கூறுகிறது: "ஆனாலும் அவனிடத்தி-ருந்து புறப்பட்ட சேனைகள் எழும்பி, (அவனுக்குள்ளிருந்து வ-மையானவர்கள் எழும்புவர்கள் என்று Young என்பவரின் வேதாகம மொழி பெயர்ப்பு அறிவிக்கிறது) அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அன்றாட ப-யை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள்."

மத அதிகாரமோ அல்லது அரசாங்க அதிகாரமோ ஒருவரை ஒருவர் விழுங்குவதில் வெற்றி பெறவில்லை என்பதை இது குறிப்பிடுகிறது என்று நாம் கருதுகிறோம். இது ஒரு நேரத்தில் சாத்தியமாகும் என்பது போன்று இருந்தாலும், "வ-மையானவர்கள்" எழும்பி, அவர்கள் அரசாங்கம் மற்றும் மதத்தின் அடிப்படையான

கொள்கைகளை அசுசிபடுத்தினார்கள். "அரணான பரிசுத்த ஸ்தலம்" அரசாங்க அதிகாரத்தின் புனித ஸ்தலங்களை அந்த வேளையின் போது தேவன் இந்த உலகத்தின் இராஜ்யங்களுக்கு, புற ஜாதியினருக்கு ஒப்புக் கொடுத்திருந்ததால் அதை சபையில் இருந்தவர்கள் அற்பமாக எண்ணினார்கள். அவர்கள் அந்த வேளையில் ஆளுகை செய்ய வேண்டும் என்று வாஞ்சித்தார்கள். மேலும் எல்லா வழிகளிலும் அவர்களுடைய மத சம்பந்தப்பட்ட விஷயங்களை முன்னுக்குக் கொண்டு வரும்படி, அதற்கு உதவியாக இருக்க அரசாங்க அதிகாரத்தை விரும்பி நின்றார்கள். தேவனுடைய பரிசுத்த ஸ்தலம் (அவர் தங்கி இருக்கிற ஸ்தலமான சபை) அருவருப்புக்கு உட்படுத்தப்பட்டது, பரிசுத்த குலைச்சலாக்கப்பட்டது. இந்த "வ-மையானவர்கள்," தங்களுடைய விடா முயற்சியால் அரசாங்கத்தில் இருப்பவர்களோடு அதிகாரம் பெறவும், எண்ணிக்கையில் அதிகம் உள்ளவர்களோடும் மற்றும் ஜனங்களின் செல்வாக்கைப் பெறவும் இப்படியாக செய்தார்கள். இது போப்பரசு கருவில் இருந்துகொண்டு மதகுருமார்களை ஆட்சியில், அதிகாரத்தில் அமர்த்துவதற்காகச் செய்யப்படும் தந்திரமாகும்.

இந்த தலைக்கனம் பிடித்தவர்கள், "வ-மை படைத்தவர்கள்" தேவனுடைய திட்டத்தை மதிக்காமல், தற்காலத்தில் இருக்கிற அதிகாரத்திற்கு உட்படாமல் (நம்முடைய தற்காலத்திய சோதனைகள், எதிர்காலத்தில் நாம் வல்லமைக்கும் அதிகாரத்திற்கும், மகிமைக்கும், உலகத்தை ஆட்சி செய்வதற்கும், நமக்காக தேவனால் ஏற்படுத்தப்பட்டதை உணராமல்) ஆட்சி செய்ய வேண்டும் என்று தீர்மானம் பண்ணி, கூடுமானால் தேவனுடைய காலத்திற்கு முன்னதாகவே ஆட்சி செய்ய வேண்டும் என்று எண்ணி, இம்மட்டுமாக தேவனுடைய திட்டத்திற்கு அப்பாற்பட்டு சத்தியத்தின் சாராம்சத்தை இழந்து, வெளிப்புறத் தோற்றத்தை மட்டும் உடையவர்களாக இருந்தார்கள் என்று பார்க்கும் போது நாம் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. சத்தியத்தை மறுத-க்கும் திட்டவட்டமான நடவடிக்கை எது என்றால் "நித்திய ப-யை நீக்குதல்" ஆகும். ரோம சபையின் பூஜை ப-யும், அப்பமும், திராட்சை ரசமும், கிறிஸ்துவின் சரீரமாகவும், இரத்தமாகவும்



மாறுவதாக கூறுவதும் உபதேச சீர்கேட்டின் உச்ச கட்டமாகக் காணப்பட்டது. இதை இங்கே குறிப்பிட்டு விட்டு பின்வரும் ஒரு அதிகாரத்தில் வரக்கூடிய சம்பந்தப்பட்ட இன்னொரு தீர்க்கதரிசனத்தைக் குறித்து முழுமையாக ஆராய்ந்து பார்க்கும்படியாக விட்டு விடுகிறோம். இந்த அவலட்சணமான பெரிய தவறு அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்தில் இருந்து, இந்த முறையை தேவன் ஒரு "அருவருப்பு" என்று கூறுகிறார். மேலும், பின்னர் அது அதிகார நிலைக்கு உயர்த்தப்பட்டதை "பாழாக்கும் அருவருப்பு" என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. போப்பரசு இந்தப் பெயரை வெகுவாகப் பெற்றுவிட்டது. அது தன் செல்வாக்கை அழிவுக்கு நேராக நடத்திச் சென்றுவிட்டது. இவைகள் எல்லாம் "இருண்ட காலத்தின்" சரித்திரத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவைகளின் ஒரு கண்ணோட்டத்தை இதற்கு முந்தைய தொகுதியில் குறிப்பிட்டு உள்ளோம்.

வசனம்32:"உடன்படிக்கைக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களை இச்சகப் பேச்சுகளினால் கள்ள மார்க்கத்தாராக்குவான்." போப்பரசின் ஆதிக்கம் வளரத்தொடங்கிய போது ஆண்டவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையின்படி ஜீவிக்கத் தவறியவர்கள் முன்பாக, இப்படியாக தற்புகழ்ச்சிகள், மரியாதைகள், பட்டங்கள் போன்றவைகளை அவர்கள் முகத்திற்கு எதிராகக் காட்டிய போது, அதற்கு அவர்கள் எளிதாக இரையானார்கள். இந்தத் தவற்றிற்கு அநேகர் தங்களை விட்டுக் கொடுத்தாலும் எல்லாருமே அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் நாம் வாசித்திருக்கிறோம். "தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள். ஜனங்களில் அறிவாளிகள் அநேகருக்கு அறிவை உணர்த்துவார்கள்." இது சபையில் குறிப்பாக இரண்டு வகுப்பினர் இருப்பதைக் காட்டுகிறது. இது தானியேல் 8:11-14ல் "பரிசுத்த ஸ்தலம்," இன்னொன்று "சேனை" ஆகும். ஒரு வகுப்பினர் உலகம் அளிக்கும் தற்புகழ்ச்சியினால் தாங்கள் ஆண்டவரோடு செய்த உடன்படிக்கையை மீறினவர்கள். மற்றொரு வகுப்பினர் ஆண்டவர் மேல் அவர்கள் கொண்டிருந்த வைராக்கியத்தினால் ஏற்பட்ட உபத்திரவங்களினால் உண்மையாகவே பலம் பெற்றவர்கள்

ஆவார்கள். இரண்டாவது வகுப்பினரில் சிலர் சூழ்நிலையை அறிந்திருந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் விசுவாசிகளுக்கு பின்வருமாறு போதித்தார்கள் : “அந்திக்கிறிஸ்து அல்லது பாவ மனிதன் சபையில் ஏற்படும் ஒரு பெரிய விசுவாச துரோகத்தி-ருந்து எழும்புவான்” என்று வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

திரளான கூட்டமும் அதிகாரமும் உடன்படிக்கையை உதறித் தள்ளியவர்கள் வசம் இருந்தது. அவர்கள் உலக ராஜ்யத்தோடு சேர்ந்து கொண்டார்கள். உண்மையாக இருந்த வெகு சிலர் உபத்திரவப்படுத்தப் பட்டார்கள், வேட்டையாடப்பட்டார்கள், சிறையில் அடைக்கப்பட்டார்கள், அவஸ்தைக்குட்படுத்தப்பட்டார்கள், சித்திரவதைப்படுத்தப்பட்டார்கள், நூற்றுக்கணக்கானவர்கள் அருவருக்கத்தக்க வகையில் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள். இவைகள் எல்லாம் சரித்திரத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவைகள் எல்லாம் தீர்க்கதரிசியினால் முன்னுரைக்கப்பட்டிருக்கிறது. “அநேக நாள் மட்டும் பட்டயத்தினாலும் அக்கினியினாலும் சிறையிருப்பினாலும், கொள்ளையினாலும் விழுவார்கள். (இங்கே 34வது வசனமும் 35வது வசனத்தின் ஒரு பகுதியும் இடை நிறுத்தி கூறப்பட்ட பகுதி) முடிவு காலபரியந்தம் இப்படியிருக்கும்; குறித்த காலம் வர இன்னும் நாள் செல்லும்.” அந்த உபத்திரவத்தின் கால அளவு பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால் அது குறிப்பிடப்பட்ட காலத்தில், முடிவின் காலத்தில் முற்றுப் பெறும் என்று மாத்திரம் கூறப்பட்டுள்ளது. மற்ற வேதாகமப் பகுதிகளில் இருந்து அது 1260 வருடங்கள் என்று நாம் காண்கிறோம். இது கிபி 1799ல் முடிந்துவிட்டது. இந்த வருடம் பற்றி தானியேல் தீர்க்கதரிசனமும் வெளிப்படுத்தின விசேஷமும், சரித்திரமும் தெளிவாகக் கூறியுள்ளன.

வசனம் 34 , 35 : “இப்படி அவர்கள் விழுகையில் கொஞ்சம் ஒத்தாசையால் சகாயமடைவார்கள்.” உபத்திரவப்படுத்துகிறவனின் (போப்பரசின் காலம்) அதிகார காலமான 1260 வருடங்கள் 1799ல் முற்று பெறும். ஆனால் அது முற்றுப் பெறுவதற்கு முன்னர் சீர்திருத்த இயக்கத்தின் மூலமாக தேவன் சிறிய அளவு உதவியை வழங்கினார். அது ஆரம்பத்தில் உபத்திரவத்தை அதிகரிக்கப்பண்ணினாலும்



பின்னர், ஆண்டவருடைய வார்த்தைக்கு உண்மையாக இருந்ததினிமித்தம், விழ இருந்தவர்களுக்கு சிறிதளவு ஆறுதலையும் பாதுகாப்பையும் கொடுத்தது. சீர்திருத்த இயக்கம், சத்தியம் உலகத்தி-ருந்து முற்றிலுமாக அழிக்கப்படுவதைத் தடுத்தது. ஆனால் பரிதாபம்! சிறிது அளவு உதவியுடன் இச்சக வார்த்தைகளைப் பேசுகிறவர்கள் மறுபடியும் வந்தார்கள். உபத்திரவம் சற்று குறையத் தொடங்கிய உடன் சத்துரு, சபையைக் கறைபடுத்தவும், தாழ்த்தவும், சீர்திருத்த இயக்கத்தை மேற்கொள்ளும்படியாகவும் வெற்றிகரமாக முன்பு பயன்படுத்திய அதே வழிமுறையை பின்பற்றத் தொடங்கினான்; இராஜாக்களும், பிரபுக்களும் புரட்டஸ்டன்ட் மக்களுக்கு கனத்தையும், பட்டங்களையும் கொடுக்கவும், புரட்டஸ்டன்ட் (Protestant) போதனைகளோடு இணையவும் செயல்பட ஆரம்பித்தார்கள். இது பொல்லாங்கான விளைவுகளை உண்டு பண்ணி உடன்படிக்கையை விட்டு விலகவும் செய்தது. இதைப்பற்றி நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்: “அப்பொழுது அநேகர் இச்சக வார்த்தைகளோடே அவர்களை ஒட்டிக் கொள்வார்கள். அறிவாளிகளைப் (தலைவர்கள், சீர்திருத்தவாதிகள், போதகர்கள், போப்பின் ஆட்சியின் தவறுகளை உணர்த்திக் காட்டக்கூடியவர்கள்) புடமிடுகிறதற்கும், சுத்திகரிக்கிறதற்கும், வெண்மையாக்குகிறதற்கும் அவர்களில் சிலர் (உண்மையாக உள்ள சிலர்) விழுவார்கள்.”

தீர்க்கதரிசனத்தைக் குறித்து மேலும் பார்க்கும் போது, கிரேக்க தேசத்திற்கும் பின்னர் ரோமாபுரிக்கும், அதன்பின்னர் தந்திரமாக, படிப்படியாக, மறைமுகமாக, சாதாரணமாக உருவான அதிகாரம் என்று எண்ணும்படியாக அதிகாரத்தை போப்பரசுக்கும் மாற்றுவதில் சம்பந்தப்பட்ட முக்கிய நபர்களின் செயல்பாடுகளை முந்திய வசனங்கள் குறிப்பாகக் காட்டுவதைக் காண்கிறோம். மேலும் போப்பின் அதிகாரம் உடைக்கப்பட்ட காலத்தைக் குறிக்கும் இடம் பற்றியும் காட்டுவதைக் காணலாம். [தற்போதைய நூற்றாண்டின் ஆரம்பத்தில் போப்பின் அதிகாரம் கடந்து சென்றுவிட்டது என்று கூறுவது சரியானதாகும். ஏனெனில் பிரஞ்ச் புரட்சிக்குப் பின்னர் ரோமாபுரிக்கு, இராஜாக்கள் மற்றும் இராஜ்யங்கள் மேல் இருந்த அதிகாரம் (இத்தா- தேசத்தில் உள்ள அதற்கு சொந்தமான பிரதேசத்தின்

மீதும் கூட) சாதாரண அளவுக்குட்பட்ட செல்வாக்காகத்தான் இருந்தது. உண்மையான செல்வாக்காக இல்லை. அந்த நாள் வரை எல்லா தேசங்களைக் காட்டிலும் பிரான்ஸ் தேசம் மட்டுமே மிக விசுவாசமுள்ள கீழ்ப்படிதலுள்ள தேசமாக போப்பின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுள்ள தேசமாக இருந்தது என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த தேசத்தின் இராஜாக்களும், இராஜ குமாரர்களும், பிரபுக்களும், ஜனங்களும் தான், போப்பின் சொல்-ற்கு உடனடியாக கட்டுப்படுபவர்களாக இருந்தார்கள். அவர்கள் போப்பின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து படையெடுப்புகள், யுத்தங்கள் போன்றவற்றை ஒழுங்குப்படுத்துபவர்களாக இருந்தார்கள். அது மாத்திரமல்ல பரி. பர்த்தலமேயுவின் (St. Barthalomew) நாளின் இரவுப் பொழுதில் நடந்து முடிந்த படுகொலைக்குப் பின்னர் எந்த ஒரு புரட்டஸ்டன்ட் (Protestant) வகுப்பினரையும் அதன் மண்ணில் வசிக்க அனுமதிக்காமல் மிகவும் வைராக்கியமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆகவே பிரெஞ்சு மக்களைத் தவிர வேறு எவருமே போப்பின் ஆதிக்கத்திற்கு இந்த அளவிலான திடீர் அடியை, அழிவை ஏற்படுத்தி இருக்க முடியாது.]

ஆகவேதான், இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தவர் நெப்போ-யன் தான் என்று எண்ணுவது நியாயமானதே. அதுவும் அவருடைய தோற்றத்தைக் கொண்டு அல்ல, அகுஸ்து ராயன் மற்றும் திபேரியு ராயன் போன்றவர்களால் குறிப்பிடப்பட்டது போன்று அவனுடைய வினோதமான குணாதிசயங்களால் குறிப்பிடத்தக்கவனாகக் காணப்பட்டான். இப்படிப்பட்ட ஒரு குறிப்பை நாம் காண்கிறோம். நெப்போ-யன் போன பார்ட்டின் (Napoleon Bonaparte) செயல்கள் அதற்கு இசைவாக இருக்கிறது. 31ல் இருந்து 35வது வசனங்கள் வரை உள்ளவைகள் போப்பரசு பற்றியும் அதன் தவறுகள், அதன் அருவருப்புகள், சீர்திருத்த இயக்கம், அதன் மூலமாக கிடைத்த "கொஞ்சம் ஒத்தாசை," ஆனாலும் இச்சக வார்த்தைகளினால் ஏற்பட்ட சிறிதளவான தோல்விகள் பற்றியும் கூறுகின்றன. இந்த வசனங்கள் நம்மை "முடிவு காலபரியந்தம்" கொண்டு வருகின்றன. அவைகள் மேலும், கொஞ்சம் ஒத்தாசை கிடைத்திருந்த போதிலும், முடிவு கால பரியந்தம் சிலர் உபத்திரவத்தினால் விழுவார்கள் என்பதையும் இந்த வசனங்கள் காட்டுகின்றன. அதன்படியே நடக்கவும் செய்தது. போப்பின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த தேசங்களான ஸ்பெயின், பிரான்ஸ் (Spain, France) போன்ற நாடுகளில் கொடூரமான புலன் விசாரணை நடத்துவதின் மூலமாக உபத்திரவத்திற்குட்படுத்தப்பட்டார்கள்.



நெப்போ-யன் (Napoleon) இதை முறியடிக்கும் வரை இப்படித்தான் நடைபெற்றுக் கொண்டு இருந்தது.

அடுத்து வரும் வசனங்கள் நெப்போ-யனைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. நெப்போ-யன் தேவ கிருபையால் போப்பரசின் ஆதிக்கத்தை உடைத்தெறியவும், அதன் உபத்திரவ காலத்தைத் தொடங்கவும் ஏற்படுத்தப்பட்ட கருவியாகும். இந்த காரியம் 2 தெச. 2:8ல் எழுதியுள்ள வசனத்தின்படி "அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்" என்பதின்படி முழு அழிவு நிறைவேற வேண்டியிருந்தது.

நெப்போ-யன், அவனுடைய ஜீவிய காலத்திலேயே "விதியை நிர்ணயிக்கும்" மனிதன் என்று அங்கீகரிக்கப்பட்டவன்; "குறித்த காலம்" என்பதை நிர்ணயிப்பவன் என்று தீர்க்கதரிசனமாக கூறப்பட்டது, அதைச் சரியாகக் கணிப்பதற்கு ஏதுவாக உள்ளது. இந்த முறை சரியாக இருக்கிறது. இங்கே தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட சம்பவங்கள் நெப்போ-யனின் வாழ்க்கை சரித்திரத்தோடு ஒத்து இருக்கிறது என்று நாம் காட்ட முடியுமென்றால், அது அகுஸ்து ராயன் அல்லது திபேரியு ராயன் அல்லது கிளியோபாட்ரா ஆகியோரின் ஆட்சியின் துவக்க காலத்தை 17, 20, 21ம் வசனங்களில் கூறப்பட்ட பிரகாரம் கணக்கிட முடியும் என்று நாம் திட்ட வட்டமாக கூறமுடியும். தீர்க்கதரிசனத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது, நெப்போ-யனின் வாழ்க்கை, கி.பி 1799ஐ போப்பின் 1260 வருட அதிகாரத்தின் முடிவு என்றும் "முடிவு காலம்" என்பதின் ஆரம்பம் என்றும் கூறமுடியும். தீர்க்கதரிசன விபரம் இப்படியாக கூறுகிறது:

36வது வசனம்: "ராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து தன்னை உயர்த்தி, எந்தத் தேவனிலும் தன்னை பெரியவனாக்கி, தேவாதி தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான்; கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடி வரும்; நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும்." நெப்போ-யன் இராஜாவாக இருந்தது கிடையாது. ஆனால் இராஜா என்ற வார்த்தை வ-மை நிறைந்த ஆட்சியாளரைக் குறிக்கும்படியான பொதுவான ஒரு சொல் ஆகும். அவன் தனது சுய

சித்தத்தின்படி எந்த மனிதனும் வாழ்ந்தது போன்று வாழ்ந்தான் என்று ஒரு வேளை கூறலாம். அவன் தன்னுடைய சுய சித்தத்தின்படி மன உறுதியின்படி வாழ்ந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த உறுதி கிட்டத்தட்ட மேற்கொள்ள முடியாது என்று இருந்த சிரமங்களை வெற்றி கொள்ளச் செய்தது. மேற்கூறப்பட்ட வசனத்தின் சரியான அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கு, தேவன் (God) என்கிற வார்த்தை வல்லமை உள்ளவரைக் குறிக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் வேதாகமத்தில் இந்த வார்த்தை ஆட்சி செய்பவர்களை, இராஜாக்களை, பிரபுக்களைக் குறிக்கும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தேவனுக்கெல்லாம் தேவன் அல்லது ஆளுனருக்கெல்லாம் ஆளுனர் என்பது போப்பைக் குறிக்கிறது. மனிதர்களில் அநேகர் மத நம்பிக்கையில் ஓர் உயர்வான சக்தி இருப்பதை ஏற்றுக் கொள்வதுண்டு. ஆனால் நெப்போ-யன் ஒன்றையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை. அவனுக்கென்று சுய சித்தம் என்று ஒன்று இருந்தது. அவனுக்கென்று சொந்த திட்டம் ஒன்று இருந்தது. அது என்னவெனில் தன்னை மற்ற எல்லா ஆட்சியாளர்களுக்கு மேலாக உயர்த்துவதுதான். “தேவனுக்கெல்லாம் தேவன்” என்று எண்ணப்பட்டவரைக் கூட (அதாவது ஆளுனருக்கெல்லாம் ஆளுனராக இருப்பவர் - போப்) அவன் வித்தியாசமான முறையில் அழைத்தான். அவனுடைய ஊழியக்காரன், கீழ்ப்படியும் ஒருவர் என்று அழைத்தான். இப்படியாக அவன் நடந்து கொண்ட விதம் அந்த நாளில் காணப்பட்ட பழக்க வழக்கங்களுக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. அது மாத்திரமல்ல போப்பின் அந்தஸ்தில் உள்ளவர்களின் மதிப்பையும் குறைத்துக் காட்டுவதாக இருந்தது. மேலும் இங்கு சொல்லப்பட்டபடி, ஜனங்கள் மத்தியில் போப்பைப் பற்றிய நல்லெண்ணத்தை அகற்றுவதிலும், போப்பின் ஆதிக்கத்தைக் குறைத்து, அகற்றும் தனது நோக்கத்தை நிறைவேற்றும் வரை அவன் ஓயவில்லை. இதை உறுதிப்படுத்தும் வகையில் சரித்திரம் இவ்வாறாகக் கூறுகிறது. (*நெப்போ-யனின் படையெடுப்பு - பக். 89, 95, 96*)

“பிரான்ஸ் தேசத்தோடு உடன்படிக்கை பண்ணிக்கொண்ட உலக இராஜாக்கள் உடன்படிக்கைக்கு விசுவாசமாக நடந்து



கொண்டார்கள். கொடுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட தொகையை கொடுத்து வந்தார்கள். ஆனால் தன்னிச்சையான போப்போ தன்னை சுற்றி மற்ற குருமார்கள் இருக்க, தன்னுடைய கடமைகளை செய்வதில் மிகவும் மோசமான ஞானமற்ற முறையில் நடந்துகொண்டார். அவரை சூழ இருந்த குருமார்கள் தான் அவருக்கு ஆலோசனை கூறுபவர்களாக இருந்தனர். போப் தன்னுடைய பழைய தந்திரமான, வஞ்சக செயல்களை செய்ய தொடங்கினார். மேலும் பிரான்ஸ் தேசத்துக்கு எதிராக மக்களின் மனதை மாற்றும்படி செயல்பட்டார்.......... குருமார்கள் பரலோகமே தலையிட்டு விட்டது போல் பாவனை செய்தார்கள். போப்பின் ஆட்சியே உயர்வானது என்று காட்டுவது போன்றும், கத்தோ-க்க விசுவாசத்தை நியாயப்படுத்தி காட்டுவதற்காக பல்வேறு ஆலயங்களில் பல்வேறு அற்புதங்கள் நடத்தப்பட்டன என்றும் ஆணித்தரமாக கூறப்பட்டது. இதன் மூலம் பிரான்ஸ் தேசத்தினரின் நடைமுறையில் பரலோகம் அதிருப்தி கொண்டுள்ளது என்றும் காட்டப்பட்டது. ரோம ஆட்சியினர் கொண்டிருந்த மமதையை நெப்போ-யன் போனபார்ட் உணர்ந்து, சமாதானம் உண்டு பண்ணுவதற்குத் தான் எடுக்கும் முயற்சிகள் பலன் தராது என்பதையும் அறிந்து, உயர்வான மதிப்புக்குரிய போப்பை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர உடனடியாக நடவடிக்கை எடுத்தான்.

“ஆகவே அவன் போப்பின் பிரதேசங்களின் மேல் இராணுவ நடவடிக்கை எடுக்கும்படி தளபதி விக்டருக்குக் கட்டளை பிறப்பித்தான். அவன் போப்பின் இராணுவத்தை காற்றில் பதர் பறந்தோடுவது போன்று சிதறடித்தான். மேலும் ரோம சபையைச் சேர்ந்த பிரதேசங்களில் பொதுவான ஒரு பீதியை பரவச் செய்தான்.... இந்த ஆபத்தான காலத்தில் தமக்கு எந்த விதமான உதவியும் கிடைக்கவில்லை என்பதைக் கண்டுகொண்ட போப் விசேஷ தூதர்களைச் சமாதானத்திற்காக நெப்போ-யனிடம் அனுப்பினார். சமாதானம் கிடைத்தது. ஆனால் அவமானப்படுத்தும் அளவிற்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளுடன் பெறப்பட்டது. இதற்கு முன்னால் ஏற்படுத்தப்பட்டு, ஆனால் போப்பினால் உதாசீனம் பண்ணப்பட்டிருந்த பிராந்திய உடன்படிக்கையின் அம்சங்களை

கைக்கொள்வதோடு, அவர் தன்னுடைய தேசத்தின் ஒரு பங்கைக் கொடுப்பது மாத்திரமல்லாது, ஏறக்குறைய 30 லட்சம் பிரெஞ்ச் (French) பணத்தைக் (கிட்டத்தட்ட 6 லட்சம் டாலர்கள்) கடைசியாக செய்த பாவத்திற்கு பரிகாரமாகக் கொடுக்கவும் நிர்பந்திக்கப்பட்டார்."

போப், பிரான்ஸ் தேசத்திற்கு பத்து லட்சம் பெறுமானமுள்ள தங்கம், வெள்ளி போன்றவைகளோடு கூட சிற்பங்கள், வர்ண சித்திரங்கள் ஆகிய இவைகளையும் கூடக் கொடுத்தார். "நியமிக்கப்பட்ட நிபந்தனையை போப் நிறைவேற்றிய போது, அவரை அது அழிவின் எல்லைக்கே கொண்டு வந்து விட்டது" என்று ரோமன் கத்தோ-க்க எழுத்தாளர் கூறுகிறார். இந்த உடன்படிக்கை 1797ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19ம் தேதி ஏற்படுத்தப்பட்டது.

இந்த சுருக்கமான விளக்கமும், மேலும் போப்பின் அதிகாரத்தை வெற்றிகரமாக மேற்கொண்டதும், அது இராஜாக்கள் போன்றவர்களை தனக்குக் கீழாக வைத்து ஆட்சி செய்ய திவ்ய உரிமை உள்ளதாகக் கூறிக்கொண்டது வெறும் அபிலாசைதான் என்று உலகத்திற்கு நிரூபித்து காட்ட போதுமானதாக உள்ளது என்று நினைக்கலாம். இதைத் தொடர்ந்து முடிவு அடுத்த வருடம் வந்தது. எப்படியெனில் பிப்ரவரி மாதம் 15ம் தேதி, 1798ம் வருடத்தில் பிரான்ஸ் தேசத்து இராணுவ தளபதி பெர்தியர் (Berthier) ரோம் நகரத்திற்குள் நுழைந்து அங்கே ஒரு குடியரசை அமைத்தான். மேலும் 5 நாட்கள் சென்ற பின்னர் போப்பை ஒரு சிறைக்கைதியாக பிரான்ஸ் நாட்டிற்கு கொண்டு சென்றான். அங்கே அடுத்த வருடத்தில் அவர் இறந்தார். அந்த வருடத்தி-ருந்து இந்த நாள் வரை உலகத்தின் இராஜ்யங்கள் மேல் போப்பின் ஆதிக்கம் முன்பு இருந்தது ஒரு நிழல் போன்று மாத்திரமே உள்ளது. அப்பொழுதி-ருந்து இராஜாக்களை உண்டு பண்ணவும், தள்ளவும் தனக்கு அதிகாரம் உண்டு என்று கூறுவதை நிறுத்திக் கொண்டது. உண்மையாகக் கூறவேண்டுமானால் 1800ல் போப்பின் பதவிக்கு வந்த ஏழாம் பயஸ் கொடுத்த ஒரு செய்தியில், "ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கங்களுக்கு எல்லாரும் கீழ்ப்படிய வேண்டும் என்பது தான் சுவிசேஷ போதனை" என்று அறிவித்தார். இதில் இவரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்.



வசனம் 37 : "அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும் ஸ்திரீகளின் சிநேகத்தையும், எந்த தேவனையும் மதியாமலும், எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்கினான்."

நெப்போ-யன் தன் பிதாக்களின் தேவனாகிய (ஆட்சியாளர்களாகிய) போப்பு சபையையோ, ஸ்திரீகள் (உண்மையான ஒரே சபை கிறிஸ்துவின் மணவாட்டி என்று அடையாளப்படுத்தப்படுவது போன்றும், ரோம சபையானது உலகப் பிரகாரமான சாம்ராஜ்யங்களோடு உண்மைக்கு புறம்பான உறவு கொண்டிருப்பதற்காக வேசி என்று அழைக்கப்படுவது போன்றும் பல்வேறு புரட்டஸ்டன்ட் சபைகள் ஸ்திரீகள் என்று அழைக்கப்படுகின்றன.) என்று குறிக்கப்படுகின்ற புரட்டஸ்டன்ட் சபையையோ மதிக்கவில்லை. சொல்லப்போனால் அவனுடைய சுய சித்தம் தான் அவனை ஆளுகை செய்தது.

வசனம் 38 : "அரண்களின் தேவனைத் தன் ஸ்தானத்திலே (இந்த கடவுள்கள் எதற்கும் இல்லாமல்) கனம் பண்ணி (இராணுவ அதிகாரம்) தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனைப் பொன்னினாலும், வெள்ளியினாலும், இரத்தினங்களினாலும், உச்சிதமான வஸ்துகளினாலும் கனம் பண்ணுவான்."

மற்ற பெரிய போர் வெற்றி வீரர்கள் தாங்கள் பெற்ற வெற்றிகளுக்கு ஏதோ ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திதான் காரணம் என்று ஒத்துக்கொண்டார்கள். மாவீரன் அலெக்ஸாண்டர் புறசமய கோவில்களுக்குச் சென்று இப்படியாக வெற்றிகளைக் கொண்டாடினான். இராயர்களும் (Caesars) இப்படியாகத்தான் செய்தார்கள். பிந்திய காலங்களில் போப்புக்குக் கீழாக இருந்தவர்கள், யுத்தத்தின் போது இரண்டு பக்கம் உள்ளவர்களும், தேவனிடத்திலும் பரிசுத்தவான்களிடத்திலும் கன்னி மேரியிடமும், போப்புகளிடமும் ஆசிக்காக, வெற்றிக்காக வேண்டுகோள் விடுவிப்பது வழக்கமானதொன்றாக இருந்து வந்தது. எப்படியாயினும் வெற்றி தேவனிடத்தில் இருந்து வந்தது என்று கூறிக்கொள்வதும் வழக்கமாக இருந்தது. ஆனால் நெப்போ-யன் இந்த விதமான காரியம் எதையும் செய்யவில்லை. அவன், வெற்றி தன்னுடைய திறமையினாலும் தன்னாலும் தான் வந்தது என்று கூறிக்கொண்டான். அவன் இராணுவங்களின் மேல் தான் அதிகமான நம்பிக்கை வைத்திருந்தான்.

அவன் இராணுவத்தில் உள்ள தைரியசா-கள், துரிதமாக செயல்படுவதில் திறமையுள்ள தளபதிகள் ஆகியவர்கள் மேல் அதிக நம்பிக்கை வைத்திருந்தான். அவன் தன் வேண்டுகோள்களை இவர்களிடம் தான் வெளிப்படுத்தினான். அவன் எகிப்தி-ருந்து திரும்பிய போது அவன் பிரான்ஸ் நாட்டு "பழமையான ஆலோசனைக் குழுவிற்கு" முன்பாக பிரான்ஸ் தேசத்து இராணுவங்களுக்குத் தலைவனாகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது அவன் எடுத்துக்கொண்ட உறுதிமொழி அவன் தன்மேலும் தன்னுடைய இராணுவங்கள் மேலும் தான் சார்ந்திருந்தான் என்பதைக் காட்டுகிறது. அவன் தேவன் பேரிலோ அல்லது வேதாகமத்தின் பேரிலோ அல்லது போப் பேரிலோ அல்லது பிரான்ஸ் நாட்டின் மீதோ ஆணையிடாமல் இவ்விதமாக அவன் கூறினான்: "நான் உறுதி கூறுகிறேன்; என்னுடைய சொந்த பெயர்மேல் உறுதி கூறுகிறேன், என்னுடைய வீரம் நிறைந்த உடன் தோழர்கள் மேல் உறுதி கூறுகிறேன்." அவன் தன்னுடைய சுய ஆவலை நிறைவேற்றிக் கொண்ட அதே வேளையில் ஜனங்களுக்குச் சேவை செய்வதாகவும் கூறினான். மேலும் ரோமாபுரியின் பொக்கிஷங்கள், அவன் சூறையாடின மற்ற நகரங்கள், தேசங்களின் பொக்கிஷங்கள் பிரான்ஸ் நாட்டு மக்களுக்கு அளிக்கப்பட்டது. அதில் அவனும் அவனுடைய இராணுவ வீரர்களும் ஒரு பங்காக இருந்தார்கள்.

வசனம் 39 : "அவன் அரணிப்பான கோட்டைகளுக்காகவும், அந்நிய (புதிய) தேவனுக்காகவும் செய்வது என்னவென்றால், அவைகளை மதிக்கிறவர்களுக்கு மகா கனமுண்டாக்கி, அவர்கள் அநேகரை ஆளும்படிச் செய்து அவர்களுக்குத் தேசத்தை கிரயத்துக்காகப் பங்கிடுவான்."

நெப்போ-யன் தான் வெற்றிவாகை சூடிய ஐரோப்பிய தேசங்கள் அனைத்திலும், தன்னுடைய நண்பர்களையும், தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான இராணுவத் தளபதிகளையும் அதிகாரத்தில் அமர்த்தினான். இந்த பதவிகள் அவனால் கொடுக்கப்பட்ட வெகுமதிகளாகும். ஆனாலும் அவர்கள் அவனுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின்



பேரில் கொடுக்கப்பட்டது. அவைகள் இலவசமானவைகள் தான். ஆனாலும் அவர்களுடைய விசுவாசத்திற்கு ஏற்ற கிரயமாகும். இதைக்குறித்து சரித்திரம் இவ்வண்ணமாகக் கூறுகிறது. (Williard's Universal History, Page 452)

"நெப்போ-யனின் இலட்சியம் இன்னும் அதிகமாகத் தெளிவாயின. முந்தைய வருடத்தில் ஒரு இராஜ்யபாரம் உள்ள நாடாக ஹாலந்து உருவாக்கப்பட்டது. அதற்கு அவனுடைய சகோதரன் லூயிஸ் போனபார்ட் (Louis Bonaparte) இராஜாவாக ஆக்கப்பட்டான். அது மாத்திரமல்ல நேப்பில்ஸ் என்ற துறைமுக பட்டணத்தையும் இரண்டு சிசி- (Sicily) நாடுகளுக்கும் இராஜா என்ற பட்டத்தையும் மூத்த சகோதரன் ஜோசப் போனபார்ட்டுக்கு கொடுத்தான். பல பிரதேசங்கள் பிரபுக்கள் ஆட்சி உடையவைகளாகவும், சாம்ராஜ்யத்தின் பெரிய இராணுவ நிலமான்யங்கள் பெறுபவைகளாவும் ஆக்கப்பட்டன. இவைகள் சக்கரவர்த்தியின் உறவினர்களுக்கும், அவருக்கு நெருக்கமாக இருந்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டன. அவனுடைய சகோதரி பவு-ன் (Pauline), கவுஸ்டெல்லாவுக்கு (Guastalla) இளவரசியாக ஆக்கப்பட்டாள். அவனுடைய மைத்துனர் முராட் என்பவர் (Berg, Cleves) பெர்க், க்ளிவ்ஸ் ஆகியவைகளின் கோமகனாக (பிரபுவாக) ஆக்கப்பட்டார். முந்திய திருமணத்தினால் சக்கரவர்த்தினியாக இருந்த ஜோஸ்பின் (Josephine) என்பவளின் குமாரன் யூஜின் பியுகார்னைஸ் (Eugene Beauharnais), இத்தா-க்கு (Viceroy) பிரதிநிதியாக அனுப்பப்பட்டான். ஜெர்மனியின் தென் கிழக்கு பகுதியில் இருந்த பதினான்கு பிரதேசங்கள் ரைன் (Rhine) எனும் தேசத்தின் கூட்டு அமைப்பாக உருவாக்கப்பட்டன. அவைகள் ஜெர்மன் தேசத்தி-ருந்து பிரித்து எடுக்கப்பட்டு நெப்போ-யன் அவைகளின் பாதுகாவலன் என்கிற பட்டத்தின் கீழ் தங்களுடைய தலைவனாக ஏற்றுக் கொண்டன.... சுவிட்சர்லாந்தும் (Switzarland) நெப்போ-யன் "மத்தியஸ்தர்" என்று தன்னை அறிமுகப்படுத்துவதோடு பிரான்ஸ் தேசத்தின் ஆளுகைக்குக் கீழாகக் கொண்டு வரப்பட்டது."

நெப்போ-யனின் கொள்கைகள் இராணுவ அதிகாரிகள்,

இராணுவ வீரர்கள் மத்தியில் பல விதமான மதிப்புக்குரிய பட்டங்களான "லேகியோன் ஆப் ஹானர்" (Legion of Honor), "தி ஆர்டர் ஆப் அயர்ன்கிரவுன்" (The Order of the Iron Crown) போன்றவைகள் அவனுக்கு கொடுக்கப்பட்டன.

இவ்விதமாகத் தன்னுடைய குணாதிசயத்தை நிலைநிறுத்த, தனித்தன்மையை உண்டாக்க (நெப்போ-யன்) சூழ்நிலையை உருவாக்கிய பின்னர், அவனுடைய செயல்கள் "முடிவு காலத்தின்" ஆரம்பத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது. இதற்கேற்ப தீர்க்கதரிசனமானது, இந்த ஒரு குறிப்பிட்ட சம்பவம் அப்பொழுது நடைபெற்றதால் "முடிவு காலத்தின்" ஆரம்ப நிலையை திட்டவட்டமாக எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்பதை புரிந்து கொள்ள உதவுகிறது. இந்த சம்பவம் நெப்போ-யன் எகிப்தின் மேல் படையெடுத்ததைக் காட்டுவதாக உள்ளது. இந்த படையெடுப்பு ஏறக்குறைய ஒரு வருடம் ஐந்து மாதங்கள் இருந்தது. அவன் 1798ம் ஆண்டு மே மாதம் கடல் கடந்து சென்று பிரான்ஸ் நாட்டிற்கு அக்டோபர் 9, 1799ல் திரும்பினான். இந்தப் படையெடுப்பு ஒரு சில வார்த்தைகளில் 40ல் இருந்து 44ம் வசனம் வரை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

வசனம் 40 : "(குறிக்கப்பட்ட) முடிவு காலத்திலோவென்றால், தென்திசை இராஜா (எகிப்து) அவனோடு முட்டுக்கு நிற்பான்; வடதிசை (இங்கிலாந்து) ராஜாவும் இரதங்களோடும் குதிரை வீரர்களோடும் (எகிப்திய இராணுவ அடிமை வீரர்கள்) அநேகம் கப்பல்களோடும் (கடற்படை தளபதி நெல்சன் தலைமையில், ஆங்கிலேயப் படைகளுக்கு ஒரு கப்பல் படை இருந்தது) சூறைக்காற்று போல் அவனுக்கு (நெப்போ-யன்) விரோதமாய் வருவான்; அவன் தேசங்களுக்குள் பிரவேசித்து அவைகளைப் பிரவாகித்துக் (வெற்றிகரமாக) கடந்து போவான்."

சரித்திரம் நமக்குக் கூறுவதாவது : "முரட் பே (Murat Bey) என்பவர் தலைமையின் கீழ் இருந்த எகிப்தில் இராணுவம் கொடூரமாக போரிட்ட போதிலும் பின் வாங்கிப் போக வேண்டிய நிலைமை ஏற்படுத்தப்பட்டது... பிரான்ஸ் நாட்டினரின் வெற்றிகள் ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களில் எல்லாம் திகிலை உண்டாக்கின.



பக்கத்தில் இருந்த பழங்குடியினர் (Tribes) வெற்றி பெற்றவருக்குப் பணிந்தனர்.. ஆனால் சூழ்நிலை அவனுக்கு ஒரு பயங்கர பின்னடைவை ஆயத்தம் பண்ணிக்கொண்டு இருந்தது. அவனுடைய கப்பற்படை 13 யுத்த கப்பல்களுடன் நின்றன. போர் கப்பல்கள் அபவுகிர் வளைகுடா (Aboukir Bay) என்ற இடத்தில் இருப்பதை, ஆங்கிலேய கப்பற்படை தளபதியான நெல்சன் (Nelson) கண்டு பிடித்தான். இவன் நெடு நாட்களாய் நெப்போ-யனின் கப்பற்படையை பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தவன், இதற்கு முன்பு ஒரு போதும் கப்பற்படை யுத்தத்தில் கண்டிருக்க முடியாத அளவிற்கு வ-மையுடனும் பெருமுயற்சியுடனும் (சூழற்காற்று போன்றது) ஆகஸ்ட் மாதம் 1ம் தேதி 1798ம் வருடத்தில் தாக்கினான்."

வசனம் 41-43 : "அவன் சிங்காரமான தேசத்திலும் வருவான்; அப்பொழுது அநேக தேசங்கள் கவிழ்க்கப்படும்; ஆனாலும் ஏதோமும் மோவாபும் அம்மோன் புத்திரரில் பிரதானமானவர்களும் அவன் கைக்குத் தப்பிப் போவார்கள். (நெப்போ-யன் கடற்பகுதியிலேயே இருந்தான். இந்த தேசங்களுக்குள் பிரவேசிக்காமல் இவைகளைக் கடந்து சென்றான்) அவன் தேசங்களின் மேல் தன் கையை நீட்டுவான்; எகிப்துதேசம் தப்புவதில்லை. எகிப்தினுடைய பொன்னும் வெள்ளியுமான ஐசுவரியங்களையும் உச்சிதமான எல்லா வஸ்துக்களையும் ஆண்டு கொள்ளுவான்; லீபியரும் எத்தியோப்பியரும் அவனுக்குப் பின் செல்லுவார்கள்."

வசனம் 44 - 45 : "சமுத்திரங்களுக்கு இடையிலுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதத் தண்டையிலே தன் அரண்மனையாகிய கூடாரங்களைப் போடுவான்." இந்த அறிக்கை இரண்டு மலைகளில் ஒன்றைக் குறிக்கலாம். அந்த மலைகளின் பெயர் தாபோர் (Mt.Tabor) அல்லது சீனாய் (Mt. Sinai) ஆகும். இவைகள் இரண்டுமே மகிமையானது, பரிசுத்தமானது என்று அழைக்கப்படலாம். நம்முடைய ஆண்டவர் மறுரூபமடைந்த மகிமையான, பரிசுத்தமான மலையான தாபோர் (Tabor) மற்றும் பரிசுத்த பேதுருவால் "பரிசுத்த பர்வதம்" (Holy Mount) என்று அழைக்கப்பட்டதுமான இந்த மலை மேல் நெப்போ-யனின் கூடாரங்கள் போடப்பட்டன. அவனுடைய மிக முக்கியத்துவம் வாய்ந்த யுத்தங்களில் ஒன்று இந்த மலையின்

மேல் நடைபெற்றது. சீனாய் மலையானது பரிசுத்தமும், மகிமையானதோடு கூட தேவனுக்கும் இஸ்ரயேலுக்கும் இடையில் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது ஏற்பட்ட இடமுமாகும். இந்த இடத்திற்கு நெப்போ-யன் மற்றும் அவனுடைய விஞ்ஞான படையினரும் (Scientific Corps) குறிப்பிடப்பட்ட பாதுகாவல் படையினரும் விஜயம் செய்தனர்.

(வசனம் 44) "ஆனாலும் கிழக்கிலும், வடக்கிலும் இருந்து வரும் செய்திகள் அவனைக் கலங்கப்பண்ணும்; அப்பொழுது அவன் அநேகரை அழிக்கவும் (தேசங்களை) சங்காரம் பண்ணவும் மகா உக்கிரத்தோடே புறப்பட்டுபோவான். ஆனாலும் அவனுக்கு ஒத்தாசை பண்ணுவாரில்லாமல் அவன் முடிவடைவான்."

நெப்போ-யன் எகிப்தில் இருக்கும் போது, பிரான்ஸ் தேசத்திற்கு எதிராக புதிய கூட்டு முயற்சிகள் பற்றிய செய்தி அவனுக்கு வந்தது. உடனே அவன் பிரான்சுக்கு புறப்பட்டான். இதைக்குறித்து சரித்திரம் (Willard's Universal History, Page 446) இவ்வாறாகக் கூறுகிறது: "ஐரோப்பாவி-ருந்து வந்த இரகசிய செய்தி எகிப்தை கைவிட்டு விட அவனை உந்தியது. ஆகவே அவன் தன்னுடைய இராணுவத்தை கிளேபர் (Kleber) என்பவரின் தலைமையில் கீழ் விட்டுவிட்டு அவன் பிரான்ஸ் தேசத்திற்கு இரகசியமாக, துரிதமாக வந்தான்....... பிரான்ஸ் தேசத்தில் அதிர்ஷ்டம் பின்நோக்கி வரத் தொடங்கியது. பிரான்ஸ் தேசத்திற்கு எதிராக இங்கிலாந்து, ரஷியா, நேப்பல்ஸ் (Naples) ஒட்டமன் போர்ட், ஆஸ்திரியா நாடுகள் கூட்டாக அணிவகுத்து நின்றன." சரித்திரத்தின் இந்த வார்த்தைகளைத் தீர்க்கத்தரிசனத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள்; "ஆனாலும் கிழக்கிலும், வடக்கிலும் இருந்து வரும் செய்திகள் அவனைக் கலங்கப்பண்ணும். அப்பொழுது அவன் அநேகரை அழிக்கவும் (தேசங்களை) சங்காரம் பண்ணவும் மகா உக்கிரத்தோடே புறப்பட்டுப் போய்..." நெப்போ-யனின் மகா கோபமும், ஐரோப்பிய தேசங்கள் அனைத்தையும் அவன் அழிக்க முயற்சி செய்ததும் எல்லோருக்கும் தெரியும். ஆகவே அதை மறுபடியும் குறிப்பிட அவசியம் இல்லை. அவன் தன்னுடைய ஆர்வமான திட்டங்களை நிறைவேற்றுவதில் கிட்டதட்ட வெற்றி பெற்றான். இருந்த போதிலும் தீர்க்கதரிசியினால் முன் கூறப்பட்டபடி சில



வருடங்களுக்குள் அவனுடைய காலத்தில் குறிப்பிடத்தக்க மனிதனாக இருந்தவன், நாடு கடத்தப்பட்டு எல்லாராலும் கைவிடப்பட்டவனாக இறந்தான்.

எகிப்தின் மேல் படையெடுப்பு "முடிவு காலத்தில்" இருக்கும் என்று 40வது வசனம் கூறுகிறதும், "குறித்த காலத்தில்" என்று 29வது 30வது வசனங்களில் இடை நிறுத்திக் கூறப்பட்டதும், இதே சம்பவத்தைத் தான் குறிக்கின்றன; 25ல் இருந்து 28வது வசனங்கள் வரை உள்ள பகுதி, எகிப்தின் மேல் எடுக்கப்பட்ட முந்தைய படையெடுப்பைக் குறிப்பிடுகிறது என்பதை நாம் முன்பே கண்டோம். 29ம் 30வது வசனங்களில் அடுத்த பெரிய படையெடுப்பு எகிப்தின் மீது "குறித்த காலத்தில்" வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது 40ல் இருந்து 45வது வசனங்கள் வரை குறிப்பிடப்பட்ட பிரகாரம் "முடிவின் காலத்தில்" இருக்கும்.

"குறித்த காலத்திலே திரும்பவும் தென் தேசத்திற்கு வருவான்; ஆனாலும் அவனுடைய பின் நடவடிக்கை முன் நடவடிக்கையைப் போல் இராது." முந்திய படையெடுப்புகளைப் போன்று இருக்காது; நெப்போ-யன் எகிப்தின் மேல் படையெடுத்தது கிளியோ பட்ராவின் காலத்தில் இருந்தது போலும் இல்லை, அவனுக்குப் பின்னர் அவளுடைய சந்ததியில் வந்த செனோபியா (Zenobia) இராணியின் காலத்தில் இருந்தது போலும் இல்லை. நெப்போ-யன் எகிப்தில் ஒரு வெற்றிகரமான இராணுவத் தளபதியாக இருந்தாலும், அவனுக்கு முன்பு இருந்தவர்கள் பெற்ற வெற்றியைப் போன்று அவன் பெறவில்லை. இதற்கான காரணம் அடுத்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. "அவனுக்கு விரோதமாக சித்தீமின் கப்பல்கள் வரும் ("ரோமர்களுக்கு - Douay")." ஆங்கிலேயர்களுடைய கப்பற்படை அவனுடைய வெற்றிக்கு தடையாக இருந்து வந்தது. பழைய ரோம சாம்ராஜ்யத்தில் இங்கிலாந்தும், பிரான்ஸ் தேசமும் உள்ளடங்கி இருந்தாலும் பிரான்ஸ் தேசம் அந்த சாம்ராஜ்யத்தில் உள்ள மற்ற நாடுகளைப் பிடித்து விட வேண்டும் என்று முயற்சித்து கொண்டு இருந்தாலும், இந்தக் கப்பல்கள் ரோமர்களுடையது என்று சொல்வது சரியானதென்று நாம் எண்ணுகிறோம். "ஆகவே அவன் (நெப்போ-யன்) மனநோவடைந்து, திரும்பி போய், பரிசுத்த

உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதங்கொண்டு, அதற்கானதைச் செய்து பரிசுத்த உடன்படிக்கையைத் தள்ளினவர்களை அனுசரிப்பான்."

அவன் எகிப்தில் இருந்து திரும்பிய பின்னர், நெப்போ-யன் போப்புக்கு எதிராக தான் கொண்டு இருந்த மூர்க்கமான செயல்பாட்டை கை விட்டு விட்டு அவருடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்ததால் ரோமன் கத்தோ-க்க மதம் மறுபடியும் பிரான்ஸில் ஸ்தாபிக்கப்பட்டது. இது சத்தியத்திற்கு புறம்பான ஒரு செயலாக இருந்தது. ஆனாலும் இப்படிச் செய்வதினால் அந்தக் குடியரசை மாற்றுவதில் வெற்றி பெற முடியும், அதன் மூலம் தான் சக்கரவர்த்தியாக அதிகாரத்தில் அமர்ந்து விடலாம் என்று நினைத்தான். அப்படியே அவனும் வெற்றி பெற்றான். ஆனால் இந்த வழிமுறை அதிக காலத்திற்கு வெற்றியைத் தரவில்லை. அவன் ஏகாதிபத்திய அதிகாரத்தைப் பெற்ற பின்னர் அவன் மறுபடியும் "பாவ மனிதன்" என்று அழைக்கப்படும் ஒழுங்கு முறைக்கு எதிராக செயல்படத் தொடங்கினான். இதைக் குறித்து தீர்க்கதரிசனம் பின்வருமாறு கூறுகிறது : "அவன் (நெப்போ-யன்) திரும்பிப் போய் (மாறுதல் செய்வான்) பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதம் கொண்டு அதற்கானதைச் செய்வான்." விசுவாச துரோக ரோம சபைக்கு எதிராக திட்டமிடவும், செயல்படவும் அவன் ஆரம்பித்தான். இதிலும் கூட அவன் வெற்றி பெற்றான்.

தானியேல் புத்தகத்தில் 11ம் அதிகாரம் இவ்வண்ணமாகக் குறிப்பாக அதில் காணப்படும் நபர்களைக் கொண்டு உலக சரித்திரத்தை, பெர்சியா இராஜ்யம் துவங்கி போப்பின் ஆட்சி தூக்கி எறியப்படும் வரை உள்ள உலக சரித்திரத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. 2400 வருட நீண்ட காலப்பகுதியில் நடந்தவைகளைக் குறிப்பிடுவதாக இருந்தாலும், அது முடிவு காலமான 1799ன் ஆரம்ப வருடம் எனக் குறிப்பிடும் போது தனது நோக்கத்தைக் காட்டுகிறது. அந்த வருடத்தோடு போப்பின் 1260 வருட ஆட்சி கொடுமையின் காலம் முடிவு பெற்று, முடிவின் காலம் துவங்கியது. போப்பின் ஆயிர வருட ஆட்சி முந்தைய புத்தகத்தில் கூறப்பட்டுள்ளபடி கிபி 800ல் துவங்கியது என்பதையும், இதுதான் அதன் கடைசி வருடம்



என்பதையும் மறந்து விடக்கூடாது. ஆனால் முடிவு காலம் என்று அழைக்கப்படும் காலத்தின் ஆரம்பமாகத்தான் 1799வது வருடம் இருந்தது, அந்தக் காலத்திற்குள் மீதமிருந்த எல்லா ஒழுங்கு முறைகளும் போய்விடும்.

34வது, 35வது வசனங்களின் சில வார்த்தைகளில் சீர்திருத்தம் மற்றும் அதன் விளைவுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். உலகத்தின் மேல் உள்ள பற்றுதல், அதிகாரம், செல்வாக்கு, கஷ்டமில்லாத வாழ்க்கை என்பவைகள் தான் முதலாவதாக கண்ணியாக இருந்து சபையை கெடுத்தது, போப்பு ஆட்சியைக் கொண்டு வந்தது. இதே ஆசைகளும், முயற்சிகளும் தான் சீர்த்திருத்தத்தைத் தடை பண்ணின. போப்பின் தவறுகளை மட்டுமல்லாது சபையும் அரசாங்கமும் இணைந்து செயல்படுவதை லூதரும் அவருடைய கூட்டாளிகளும் முதன்முறையாக தைரியமாக எதிர்த்தார்கள். ஆனால் சில வருடங்கள் வ-மையான எதிர்ப்புகளை தைரியமாகக் கொடுத்த பிறகு, அதன் செல்வாக்கு பெருகியது. பின்பு இராஜாக்களும் பிரபுக்களும் இன்னும் ஏராளமானோர்களும் சீர்திருத்தவாதிகளை மெச்சத் தொடங்கினார்கள். மேலும் சமுதாய, அரசியல் ரீதியான நன்மைகள் அவர்களுக்குக் கிடைக்க ஆரம்பித்தன. சபையும், அதிகாரமும் ஒன்றாக இணைந்து செயல்படுவதில் உள்ள பொல்லாங்கை அவர்கள் கண்டு போப்பின் ஆட்சியை அவர்கள் முன்பு எதிர்த்திருந்ததை மறந்து விட்டார்கள். ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளில் இருந்த சீர்திருத்த சபைகள், ரோம சபையுடன் ஒரே மனதுடையவர்களாக இருந்தது மாத்திரமல்ல, அவர்களை ஆதரிக்க மனதுடைய எந்த ஒரு அரசியல் கட்சியுடனோ அல்லது பிரபுவுடனோ அல்லது அரசாங்கத்துடனோ இணையவும் ஆதரவு கொடுக்கவும் தயாராக இருந்தன. இவ்விதமாக அவர்களுடைய குறிக்கோள்களில் சில தவறின, அதனால் அவர்கள் சீர்திருத்தத்தின் தலைவர்களாக இருப்பதை விட்டு ஆசைகளின் தலைவர்களாக ஆனார்கள். இப்படியாக நன்றாக ஆரம்பிக்கப்பட்ட சீர்திருத்த இயக்கம் அதிகமாக தடையுற்றது.

ஆனால் இவைகள் எல்லாம் தேவனுடைய திட்டத்தை தடை பண்ணவில்லை. அவருடைய ஞானத்தினால் நன்மைக்காக

இவைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டன. போப்பின் தவறு, உண்மையான பரிசுத்தவான்களை மேலும் பரிசோதிக்கவும், அவர்கள் உண்மையிலேயே மனிதர்களைப் பின்பற்றுகிறார்களா அல்லது தேவனைப் பின்பற்றுகிறார்களா என்பதை நிரூபித்துக் காட்டவும் உதவியது. அந்த நாளில் இருந்து இந்த நாள் வரை அவர்களைப் புடமிடுகிறதற்கும் சுத்திகரிக்கிறதற்கும், வெண்மையாக்குவதற்கும் உதவும் முறையாக இருந்து வந்திருக்கிறது.

1799வது வருடம் முடிவு காலத்தின் ஆரம்பம் என்று நாம் கூறுவது சரியானது என்றாலும், சாத்தானின் கண்ணியில் இருந்து முற்றிலுமாக விடுபட அநேக வருடங்கள் ஆகும். சபையும் அரசியலும் ஒன்றாக இணைந்து செயல்படுவது குறிப்பிட்ட அளவுக்கு குறையும் என்று நாம் எதிர்பார்க்கலாம். நாம் பின்நோக்கிப் பார்க்கும் போது நடைபெற்றவைகள் இதோடு சரியாகப் பொருந்துவதைக் காணலாம். அந்த நாளில் இருந்து சாம்ராஜ்யங்களுக்கும் சபைகளுக்கும் இடையில் பிரிவு ஏற்படுவதைத் தான் காணலாம், புதிதான ஐக்கியத்தைக் காண இயலாது. உண்மையிலேயே, இந்த தேதி அதிகமான உறுதியுடன் ஒரு புதிய சீர்திருத்தத்தைக் குறிக்கிறது. ஐரோப்பிய இராஜ்யங்கள் மேல் போப்பின் செல்வாக்கு அவ்வளவு அதிகமாக இருந்ததினால், தேசங்கள் மேல் வரும் சாபங்கள், பயங்கரமாக இருக்கக்கூடும் என்று பயந்து எண்ணிய அதே வேளையில் தேசங்களின் சுபீட்சத்திற்கு அதன் ஆசீர்வாதங்கள் தேவை என்றும் எண்ணின. புரட்டஸ்டன்ட் சபையார், போப்பு சபையை விட்டுப் பிரிந்த வேளையில் உலகம் அதனை போப்பை விடக் குறைவான களங்கம் உடையதாக ஏற்றுக்கொண்டது. மேலும் முன்பு இருந்தது போன்றே இவர்களின் ஆசியும், ஒப்புதலும் அல்லது அறிவுரையும் பெறப்பட்டன. ஆனால் போப்பின் ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் நெப்போ-யன் தைரியமாக ஒதுக்கியபோதும், வியக்கத்தக்க வயில் சுபீட்சம் பெற்ற போதும், அவனுடைய வழி முறைகள், ஆட்சியாளர்கள் மேல் போப் வைத்து இருந்த செல்வாக்கை அதிகமாகப் பெலவீனப்படுத்தியது. அது மட்டும் அல்லாது இரண்டரை நூற்றாண்டுகளில் அதிக வ-மை பெற்று வளர்ந்து இருந்த சமூகம் மற்றும் அரசியல் மேல் இருந்த புராட்டஸ்டன்டின் வழிமுறைகளை அதிகமாக வ-மை இழக்கப்பண்ணியது.



நெப்போ-யன் காலத்தில் வந்த புது சீர்திருத்தம் மத ரீதியான இயக்கமாக இல்லாதிருந்தும், பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலையை அவர்கள் அறியாமலேயே நிறைவேற்றுபவர்களாக இருந்தார்கள். மேலும் அது லூதர் மற்றும் அவரது சகாக்களால் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தத்தைக் காட்டிலும் சிறப்பாக செயல்படவில்லை. நெப்போ-யனும் அவனுடைய சகாக்களும் அதிகாரத்தின் மேல் உள்ள சுய நல ஆசையினால் உந்தப்பட்டு தேவனற்ற மனிதர்களாக இருந்தார்கள். ஆனால் தேவன் அவர்கள் அறியாமலேயே அவர்கள் வழிகளை மேற்கொண்டு தம்முடைய நோக்கம் நிறைவேறும்படி செய்தார், காலாகாலத்தில் இது நடைபெற்றது. தேவனால் முதன் முதலாக சபையில் ஆரம்பிக்கப்பட்ட சீர்திருத்தம் தொடர்ந்திருந்து சீர்திருத்தவாதிகளும், அவர்களுடைய பின் சந்ததியினரும் சத்தியத்திற்கும் உண்மையுள்ளவர்களாக இருந்திருப்பார்கள் என்றால், அவர்கள் தேவனுடைய கரத்தில் உள்ள கனத்திற்கு உரிய பாத்திரமாக இருந்து அவர்கள் மூலமாக அவருடைய மாபெரும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் உலகத்தின் சுகங்களுக்கு கீழ்ப்படிந்தவுடன் தேவன் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்ற, தம்மிடம் வேறு வழிகளும், உபாயங்களும் உண்டு என்பதைக் காண்பித்தார்.

நெப்போ-யனுடைய வேலை பிரஞ்சுப் புரட்சியோடு இணைந்து மத மூட நம்பிக்கைகளின் ஆதிக்கத்தை உடைத்தது; பெருமையுடன் இருந்தவர்களை, தன்னைத் தான் உயர்த்திக் கொண்டவர்களைச் சிறுமைப்படுத்தியது, மனுக்குலத்திற்குரிய உரிமைகளை அதிகமாக உலகம் உணர்ந்து கொள்ளும்படி செய்தது. மத சீர்திருத்தம், இதற்கு முன்பாக மரண அடி கொடுத்து இருந்த, போப்பின் ஆதிக்கத்தை உடைத்தது. ஆனால் இது பின்னர் சரிபடுத்தப்பட்டது. (வெளி. 13:3) கிபி 1799ல் எகிப்தின் மேல் நெப்போ-யன் படையெடுத்த காலத்தோடு தேசத்தின் மேல் போப் கொண்டிருந்த ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி முடிவு பெறச்செய்தது. அங்கே நியமிக்கப்பட்ட காலமானது (1260 வருட அதிகாரம்) முற்றுப்பெற்று அந்த முறைக்கு எதிராகச் சொல்லப்பட்டிருந்த நியாயத்தீர்ப்பு துவங்கியது. அது “முடிவு பரியந்தம்

சங்கரிக்கும்படியாகவும் அழிக்கும்படியாகவும்" செயல்பட்டது. (தானி: 7:26)

இந்த தேதி சுயாதீன சிந்தனை யுகத்தின் ஆரம்பத்தையும் தனிப்பட்ட மனிதனுக்கு உரித்ததான உரிமைகளையும், சிலாக்கியங்களையும் உணர்ந்து கொள்ளுதலையும் தெளிவாகக் குறிப்பிடுகிறது. மேலும் இந்த முடிவு காலத்திற்கென குறிக்கப்பட்டுள்ள வேலையை முற்றிலுமாக செய்து முடிக்க வேண்டி துரிதமான முன்னேற்றம் ஏற்பட்டதின் மூலமாகவும் இது அறியப்பட்டுள்ளது. இதை விளக்க வேண்டுமானால் "புகழ்பெற்ற வேதாகமச் சங்கங்களின்" தோற்றங்களும், வேலைகளும் பற்றியும் கூறலாம். ரோமாபுரி, அதைபற்றி பேசலாம், ஆனால் அவைகளுக்குத் தடை உண்டு பண்ண முடியாது. ரோமாபுரி ஒரு காலத்தில் விலையேறப்பெற்ற இந்த புத்தகத்தைச் சங்கி-யால் கட்டி வைத்திருந்தது; உபயோகத்தில் இல்லாத மொழிகளில், உயிரற்ற மொழிகளில் மூடி வைத்திருந்தது; மக்கள் அதை வாசிக்கக்கூடாது என்று கட்டளை பிறப்பித்திருந்தது. ஆனால் இப்பொழுதோ அவைகள் எல்லா தேசங்களிலும் எல்லா மொழிகளிலும் பரவலாக உள்ளது. பிரிட்டன் மற்றும் வெளிநாட்டு வேதாகமச்சங்கம் (British and Foreign Bible Society) 1803ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. நியூயார்க் வேதாகமச் சங்கம் (New York Bible Society) 1804ல் ஆரம்பிக்கப்பட்டது. பெர்-ன் - புருஷியன் வேதாகமச் சங்கம் (Berlin-Prussian Bible Society), 1805லும் பிலதெல்பியா பைபிள் வேதாகமச் சங்கம் (Philedelphia Bible Society), 1808லும் அமெரிக்கன் வேதாகமச் சங்கம் 1817லும் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நூற்றாண்டில் இந்த வேதாகமச் சங்கங்கள் செய்த வேலை மெச்சப்படவேண்டியது. லட்சக்கணக்கான வேதாகமங்கள் வருடந்தோறும் பிரசுரிக்கப்பட்டு குறைந்த விலைக்கு விற்கப்படுவதுடன், ஆயிரக்கணக்கான வேதாகமங்கள் ஏழைகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்த வேலையினிமித்தம் வரும் நன்மைகளைக் கணக்கிடுவது கடினமான காரியமாகும். சந்தேகத்திற்கு இடமின்றி அதிகமான வேலைப் பயனற்று போகிறது, ஆனாலும் பொதுவாக கூறவேண்டுமானால் அது அரசியல் ரீதியாக மதகுருக்கள் மூலமாக வரும் அடிமைத்தனத்தையும்



மூடநம்பிக்கையையும் முறிக்கிறது. அது அமைதியாக கற்றுக்கொடுக்கிறது. அதனால் போப்புகள், குருமார்கள், பாமர மக்கள் மாத்திரமல்ல இராஜாக்கள், தளபதிகள், பிச்சைக்காரர்கள் உட்பட அனைவரும் ஆண்டவராக இருக்கிற ஒருவருக்கே கணக்கு ஒப்புவிக்க வேண்டும். அவர் ஒருவரே அனைத்து சமநிலைப்படுத்துபவர்கள், சரியாக கணக்கு பார்ப்பவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவர்.

ஐரோப்பா முழுவதும் உள்ள மத சீர்திருத்த இயக்கம் போப்பின் செல்வாக்கை அதிகமாக அசையப்பண்ணி விட்டாலும் கூட, சீர்திருத்தம் பெற்ற சபைகள் தனிப்பட்ட பிரதேச முறைகள், பூலோக சாம்ராஜ்யங்களோடு இணைந்திருத்தல், ஜனங்கள் மேல் மத குருவானவர்களுக்கு அதிகாரம் உண்டு(அதாவது குருவானவர்கள் உலகத்தில் விசேஷமான திவ்ய முறையில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி முறையை உடையவர்கள்) என்பது போன்ற போப்பு சபையின் கொள்கைகளைக் கடைபிடித்தன. ஆனபடியால் சீர்திருத்தத்தால் ஏற்பட்ட முதலாவது விளைவு அதிகமாக திருத்தப்பட்டதாக இருந்தது. இது ஜனங்களையும் ஆளுகை செய்பவர்களையும் பொதுவாக மூட நம்பிக்கைக்குள்ளாக வழி நடத்துவதாக இருந்ததோடு, சபை அதிகாரம் என்று வரும் அனைத்திற்கும் சேவை செய்யும் மன நிலையை ஏற்படுத்தியது. இதற்கு முன்னர் போப்பு சபை மேல் மாத்திரமே வைக்கப்பட்டிருந்த முழு பக்தியும், மூட பழக்கங்களும், அதிக அளவில் பல பிரிவு மக்களிடையே சீர்திருத்தம் சிதறப்பண்ணியது. ஆனாலும், அரசிய-ல் ஏற்பட்ட சீர்திருத்தம் 19ம் நூற்றாண்டின் போது காணப்பட்டது. விசேஷமாக "முடிவு காலமான" 1799ம் வருடத்திற்கு பிறகு ஏற்பட்ட சீர்திருத்தம் முந்தியதை விட மிக வித்தியாசமானதாக இருந்தாலும், அதுவும் ஒரு சீர்திருத்தம் தான். அமெரிக்கா ஆக்கிரமித்திருந்த குடியிருப்புகள் (Colonies) பெற்றுக் கொண்ட சுதந்திரமும், மாற்றங்களும்-நல்ல சுபிட்சமான ஒரு குடியரசு ஏற்படுத்தப்பட்டது, ஜனங்களால் ஜனங்களுக்கென்று இராஜாக்கள் அல்லது குருமார்கள் தலையீடு இல்லாமல் அமைக்கப்பட்டிருந்த குடியரசு-அநேக நூற்றாண்டுகளாக தேவனால் கொடுக்கப்பட்ட உரிமைகளை அறியாமல் உறங்கிக் கொண்டிருந்த

ஜனங்கள் இப்பொழுது விழித்து எழுந்திருக்கிற அளவுக்கு அவர்களுக்கு ஒரு பாடத்தை வழிவகுத்துக் கொடுத்தது. இப்படியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்கு காரணம் என்னவெனில், அவர்கள் பூமியனைத்தையும் ஆளுகை செய்யும்படியாக தேவன் சபையை ஏற்படுத்தி வைத்திருக்கிறார் என்றும், ஆகவே சபையினால் நியமிக்கப்பட்ட அந்த இராஜாக்களையும் சக்கரவர்த்திகளையும், அவர்கள் கொடுக்கும் கட்டளைகள் எவ்வளவு தான் அநீதி நிறைந்ததாக இருந்தாலும், சபையானது அதன் மூலமாக தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தபடியால் அவர்களுக்குக் கீழ்ப்படிந்துதான் ஆகவேண்டும் என்றும் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

குருமார்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்களாக, தாழ்வான நிலையில் இருந்த ஜனங்களுக்கு அமெரிக்கா தேசம் ஒரு ஆச்சரியமான தோற்றத்தை அளித்தது. உண்மையிலேயே "சுதந்திரமானது உலகத்தை பிரகாசிக்கப்பண்ணிக் கொண்டு இருந்தது." கடைசியில் குருவானவர்கள், ராஜாக்களின் ஆடம்பரங்கள் போன்றவற்றால் நிர்ப்பந்தம் அனுபவித்துக் கொண்டிருந்த ஜனங்கள், தங்களுடைய விவசாய பயிர்வகைகள் மறுபடியும் மறுபடியும், நல்ல பலன்களைத் தராததால், தங்களை வறுமைக்குள்ளும் பஞ்சத்திற்குள்ளும் தள்ளினபடியால், பிரான்ஸ் தேசமக்கள் பொங்கி எழுந்து 1789ல் இருந்து 1804வரை பதினான்கு ஆண்டுகள் நீடித்திருந்த மிகவும் கொடூரமான புரட்சியைச் செய்து முடித்தார்கள்.

அந்த வேளையில் காணப்பட்ட அராஜகமும், கலவரங்களும் பயங்கரமாக இருந்தாலும் அது நியாயமான பலன்களை தந்தது. எப்படியெனில், சீரழிவையும், அவமானத்தையும் அதிக காலமாக அனுபவித்துக் கொண்டிருந்த ஜனங்கள் விழித்து எழும்பினர். அரசாங்கமும், மதவாதிகளும் சூறாவளிக் காற்று தாக்கியதைப் போன்று உணர்ந்தார்கள். எந்த ஜனங்களுக்காகக் கிறிஸ்து மரித்தாரோ அந்த ஜனங்களை ராஜாக்களும், மதவாதிகளும், தங்களின் மேன்மைக்காகக் கடவுளின் பெயரால், சத்தியத்தின் பெயரால் குருட்டாட்டத்திலும் அடிமைத்தனத்திலும் வைத்திருந்ததின்



விளைவினால் இப்படியாக ஒரு சூறாவளி போன்றதை சந்திக்க நேர்ந்தது.

இப்படிப்பட்ட ஒரு காரணத்தினால் ஏற்பட்ட விளைவு தேவன் பேரில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியது உண்மைதான். திடீரென்று பிரான்ஸ் தேசமானது வால்ட்டேர் (Voltaire) மற்றும் அவருடைய சகாக்கள் தங்கள் எழுத்துக்கள் மூலம், அவமரியாதையும், கே-யும் செய்து கிறிஸ்துவத்தை அவமதித்ததால் அல்லது பிரான்ஸ் தேசத்து மக்கள் அறிந்திருந்த ரோம சபையைப் பற்றி கீழ்த்தரமாக எழுதி அந்த எழுத்துக்கள் மூலம் நாட்டையே நிரப்பினபடியால் தேசம் தேவ நம்பிக்கையற்ற தேசமாயிற்று. அவர்கள் அதில் உள்ள பொய்யான விஷயங்களை, முட்டாள்தனங்களை, மாய் மாலங்களை, ஒழுக்கம் கெட்ட நிலைமைகளை அதன் பொல்லாங்குகளைச் சுட்டிக் காட்டியபடியால், எந்த கத்தோ-க்கத்தை எந்த மதங்களை உயர்வாக மதித்து வைராக்கியத்துடன் இருந்தார்களோ அவைகளுக்கு எதிராக ஜனங்கள் கொதித்து எழுந்தார்கள், அது வரை அவர்கள் எழுதித் தள்ளினார்கள். போப்பின் ஆதிக்கத்திற்குட்பட்டு ஆயிரம் வருடங்களாக ஏமாற்றம் அடைந்திருந்து, வருந்தத்தக்க நிலையில் இருந்த பிரான்ஸ் தேசம், அந்திக்கிறிஸ்து அல்ல, உண்மையான கிறிஸ்துவே வெறுப்புக்குரிய எஜமான் என்று கருதி அவர்கள் வால்ட்டேரின் (Voltaire) வார்த்தையில் "அந்த பாதகன் ஒழியட்டும்" என்று கூக்குர-ட்டார்கள். மேலும் அருவருப்பான அந்திக்கிறிஸ்துவை அகற்றும் அவர்களுடைய முயற்சி பிரான்ஸ் தேசத்தில் ஏற்பட்ட புரட்சியின் கொடுமையில் வெளிப்பட்டது. பரிசுத்த பர்த்லமேயுவின் (St. Bartholomew) நாளில் நடந்த பயங்கரமான படுகொலைகள், இதே போன்ற மற்ற சம்பவங்கள் உடன் ஒத்துப் பார்க்கும் போது, பழிவாங்குத-ன் போது ஏற்படும் நியாயத்தை விளக்கிக் கூறுவதற்கு அருமையான உதாரணமாக உள்ளது. ஆகவே போப்பின் நிலை கண்டு களிகூர்ந்தார்கள்.

தெய்வ நம்பிக்கையற்ற பிரான்ஸ் தேசம் திடீரென்று அதன் முழு பலத்துடன் எழுந்தது, பிரான்ஸ் தேச சிறைச்சாலை கோட்டையை உடைத்தது, மனிதனின் உரிமைகள் பற்றி பிரகடனம் செய்தது, இராஜாவையும், இராணியையும் கொலை செய்தது, எல்லா

இராஜாக்களுக்கும் எதிராகப் போர்க்கொடி உயர்த்தியது, மேலும் எல்லா புரட்சிக்காரர்களோடும் உடன் நின்றது. இதற்கிடையில் உலகத்தில் உள்ள ஆட்சியாளர்கள், தங்களது குடிமக்கள் மத்தியிலும் இந்த புரட்சி என்னும் தொற்று வியாதி பரவி விடுமோ என்று உயிரைப் பிடித்துக்கொண்டு பயந்து கொண்டிருந்தனர். உலகம் முழுவதும் வரக்கூடிய அராஜகத்தை எண்ணி பயந்து, உலக ராஜாக்கள் தங்களுடைய பாதுகாப்பிற்காக ஒருவரோடு ஒருவர் கூட்டு சேர்ந்து பாதுகாப்பை ஏற்படுத்தினர். பிரெஞ்ச் மக்கள் கிறிஸ்துவத்தை ஒதுக்கி வைத்தார்கள். அது மாத்திரமல்ல ரோமன் கத்தோ-க்கச் சபைகளுக்கு சொந்தமான பெரிய அளவில் இருந்த சொத்துக்களையும், வருமானங்களையும் அபகரித்தார்கள். அதோடு கூட இராஜாக்களுக்கும், பிரபுக்களுக்கும் சொந்தமான சொத்துக்களையும் அபகரித்தார்கள். பாரிஸ் நகரத்தின் தெருக்களில் மறுபடியும் இரத்தம் பெருக்கெடுத்தோடியது. ஆனால் அது புரட்டஸ்டன்ட் சபையினருடையதல்ல, அதற்குப் பதிலாக, அது குருவானவர்களின், பிரபுக்களின் மற்றும் அவர்களுடைய ஆதரவாளர்களின் இரத்தமாகும். கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,022,000 ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் எல்லாம், இதற்கென்று கண்டுபிடிக்கப்பட்ட வழிகளில் அழிந்து போனார்கள். புரட்டஸ்டன்ட் மக்களை, ரோம சபை குருமார்கள் வேட்டையாடி அழித்த அதே வழிமுறைகள், ரோம சபை குருமார்களுக்கும் இப்போது நடந்தது. அவர்களது சொந்த போதனையாகிய "நீதி முடிவில் நிலை நாட்டப்பட்டது." மத ரீதியான, அரசியல் ரீதியான, சமூக ரீதியான சுதந்திரத்தைப் புரட்சிக்காரர்கள் உரிமை கொண்டாடினார்கள். இதை எதிர்த்தவர்களுக்கு மரணமே ஒரே சரியான வழி என்று கூறினார்கள்.

இப்படிப்பட்ட காரியங்களினால் பிரஞ்ச் புரட்சி ஒரு பெரிய பொல்லாங்காக இருந்து, அது லட்சக்கணக்கான ஜனங்களுக்கு உபத்திரவத்தை அளித்தது; ஆனால் மற்ற சம்பவங்களைப் போன்றே ஒரு பெரிய தவறுக்கு ஓர் அளவுக்கு விமோசனம் அளிப்பதாக இருந்தது. மேலும் சில சம்பவங்களின் போது நடந்தது போன்றே இதுவும் நன்மைக்காக என்று தேவனால் ரத்து செய்யப்பட்டது. அறிவு



விருத்தியடையவும், தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டுள்ளபடி அவருடைய திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்காகவும் இது நிறைவேறியது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பிரெஞ்சு புரட்சி முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளது. எப்படியெனில் "கிறிஸ்தவ தேசங்கள்" அனைத்தின் மேலும் வருகின்ற முடிவு காலத்தின் பயங்கரங்கள் தெளிவாக உள்ளது என்கிற குறிப்பை இங்கே கூறுகிறோம். பிரான்ஸ் தேசத்தி-ருந்து உலகம் முழுவதும் பரவிய தேவ நம்பிக்கையற்ற நிலை, அராஜகம் என்கிற தொற்று வியாதி, பொய்யான மற்றும் வேதாகமத்திற்கு புறம்பான போதனைகள், பழக்க வழக்கங்கள், கிறிஸ்துவத்தில் பலமாக போஷிக்கப்பட்டு வளர்ப்பிக்கப்பட்டவைகள். இது போப்பு சபைகளில் மாத்திரமல்ல, பழமையான கிறிஸ்துவ சபைகளிலும் காணப்பட்டது. பேர் கிறிஸ்தவ சபைகளும் இந்த வியாதியை குணப்படுத்தவில்லை. மேலும் பூமியில் இது வரை உண்டாயிராத மகா உபத்திரவம் என்று வேதாகமம் கூறிய ஆபத்தை தவிர்க்க இயலாததாயிருக்கிறது.

பிரெஞ்ச் நாத்திக கொள்கை நெப்போ-யனின் ராணுவத்தினால் ஐரோப்பா தேசம் முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டது. இது இராஜாக்கள் மற்றும் குருமார்களின் அதிகாரத்தை அதிகமாக பலவீனப்படுத்தியது. ஆனால் போப்பின் ஆதிக்கத்தை, நாத்திக பிரான்ஸ் நாட்டின் தலைவனாக, பிரதிநிதியாக இருந்த நெப்போ-யன் கடுமையாக எதிர்த்தபடியால், நிலைமை உச்ச கட்டத்தை எட்டியது. எல்லாவற்றையும் விட சாதாரண மனுஷன் குருவானவர்களுக்கு செலுத்திக் கொண்டிருந்த மூடத்தனமான பணிவன்பு என்கிற அடிமைத்தன சங்கி-யை உடைத்தெறியப் பண்ணியது. ஆனால் மாவீரனான நெப்போ-யன் போப்பாயிருந்த ஆறாம் பயஸின் (Pius VI) சாபங்களைத் துச்சமாக மதித்துத் தன் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாததற்கு தண்டனைகளை விதித்ததோடு நின்றுவிடாமல், ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக ஷார்லுமேன் (Cherlemagne) என்பவனால் கையளிக்கப்பட்ட போப்பாண்டவரின் பிரதேசங்களை பிரான்ஸ் தேசத்திற்குத் திருப்பிக் கொடுக்கும்படி நிர்பந்திக்கப்பட்ட போது (நெப்போ-யன் ஷார்லுமேன் என்பவனின் வாரிசு என்று கூறுவதுண்டு) அது ஜனங்களின்

கண்களைத் திறந்தது. மாத்திரமன்றி, போப்பு, தான் மேலான அதிகாரமுள்ளவர் என்பது பொய்யான கூற்று என்று ஐரோப்பாவில் உள்ள மன்னர்கள் உணர்ந்தபோது அவர்களின் கண்களும் திறக்கப்பட்டன. நெப்போ-யன் நடத்திய பெரிய ஐரோப்பிய யுத்தங்கள் ஷார்லுமேன் (Charlemagne) என்பவர் காலத்தில் இருந்த சாம்ராஜ்யத்தை மறுபடியும் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தான். நெப்போ-யன் ஷார்லுமேன் (Charlemagne) என்பவனின் வாரிசு, ரோம சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட போது, அவன் ரோம் நகருக்குச் செல்லவில்லை. ஷார்லுமேன் (Charlemagne) மற்றும் ஏனையோர் செய்தது போன்று போப்பை பிரான்ஸ் தேசத்திற்கு வந்து தனக்கு முடி சூட்ட வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான். இந்த வேளையில் மக்களின் எண்ணத்தில் போப்பாண்டவரின் அதிகாரம் எப்படியாக இருந்தது என்பதைக் காணலாம். இப்பொழுதும் கூட வெற்றி வாகை சூடிய தலைவன், போப்பின் அதிகாரத்தை மட்டுப்படுத்தியவன், ஒரு தடவைக்கு மேல் அவரின் பிரதேசங்களில் குறைவை உண்டு பண்ணியவன், பொருட்களை சூறையாடினவன், போப்பினால் முடி சூட்டப்பட விரும்பாமல், அப்படி செய்தால் போப்பின் அதிகாரத்தை ஆமோதிப்பது போல் இருக்கும் என்று எண்ணி போப், ஆறாம் பயஸ் முடி சூட்டுதலை ஆதரிக்கும் வண்ணமாக வந்து இருக்கவும், வைபவத்தை ஆதரிக்கவும், கிரீடத்தை அவன் ஆசீர்வதிக்கவும் செய்து அதன் பின்னர் தேவாலயத்தின் ப-பீடத்தி-ருந்து எடுத்து தன்னுடைய தலைமேல் தானே வைத்துக்கொண்டான். சரித்திர ஆசிரியர் இவ்விதமாகக் கூறுகிறார் : "அதன்பின்னர், தன்னுடைய செய-ன் மூலம் பிறந்தது தான் தனது அதிகாரம் என்பதைக் காண்பிக்கவும், தன்னுடைய அரசியல் ராணுவ வெற்றிகளினால் அவ்வாறு செய்யமுடிகிறது என்பதை வெளிக்காட்டுவதற்காகவும் கிரீடத்தைத் தனது பேரரசியின் தலைமேல் வைத்தான்." அப்படியே இதுவரை போப்பிடம் ரோம சாம்ராஜ்யத்தின் கிரீடத்தை வைக்கும் படியாகவும் கேட்டுக்கொள்ளப்படவில்லை. இந்த முடி சூட்டு வைபவத்தைக் குறித்து ஒரு ரோமன் கத்தோ-க்க ஆசிரியர் (Chair of St. Peter, Page 433) இப்படியாகக் கூறுகிறார் :

"இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஷார்லுமேன் (Charlemagne) மற்றும் ஏனைய சக்கரவர்த்திகள் ரோமாபுரிக்குச் சென்றார்கள். ஆனால் நெப்போ-யன் தன்னுடைய கர்வத்தில், அருட்திரு தந்தை (Holy Father) பாரீஸ் நகருக்கு வந்து தனக்கு முடி சூட்ட வேண்டும் என்று கூறினான். போப் தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கத்தில் இருந்து விலக அதிக தயக்கம் காட்டினார். சொல்லப்போனால் தன்னுடைய உயர்வான அந்தஸ்தை இது இழிவு படுத்துவதாக நினைத்தார்."

போப்பை நெப்போ-யன் சிறுமைப்படுத்திய செயல்கள் குறித்து சரித்திரம் (Campaigns of Napoleon, PP 89,90) இவ்வாறாக கூறுகிறது:

"ஒரு சமாதான உடன்படிக்கை ஜூன் 23, 1796ல் போப் ஆறாம் பயஸ் உடன் செய்து முடிக்கப்பட்டது. அதில் காணப்பட்ட நிபந்தனைகள் ஒரு காலத்தில் ஐரோப்பாவிலேயே முழு ஆட்சியாளராகவும் சபையின் தலைவராகவும் இருந்தவருக்கு போதுமான அளவிற்கு சிறுமைப்படுத்தக்கூடிய அளவிற்கு அமைந்திருந்தது. ஒரு காலத்தில் இராஜாக்களின் கழுத்தின் மேல் நடந்தவர், ஆட்சியாளர்களை அகற்றியவர் இராஜ்யங்களையும், பிரதேசங்களையும் இல்லாமல் ஆக்கியவர், பிரதான ஆசாரியராக பூலோகத்தில் சர்வ வல்லவரின் பிரதிநிதியாக இருந்தவர், மகா பிரபுவாக அதிகாரத்தை ஏற்படுத்தியவர், மற்ற ஆட்சியாளர்களின் தலைகளுக்கு மேல் ஆட்சி புரிந்தவர் என்று சொல்லக்கூடிய போப் சிறுமை என்கிற அதே பாத்திரத்தில் அடிமட்டத்தில் உள்ளவைகளைப் பானம் பண்ணும்படியான நிலைக்குள் தள்ளப்பட்டார். இந்த பானம் கசப்பாகக் காணப்பட்டாலும், அதைத்தான் இவருக்கு முன்பு இருந்த போப்புக்கள் மற்றவர்களுக்கு வாரி வழங்கி இருந்தார்கள். பிரான்ஸ் தேசத்தின் கப்பல்களை துறைமுகத்திற்குள் அனுமதிக்கும்படியும், அந்த குடியரசோடு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த எல்லா தேசங்களின் கொடிகளை அகற்றவும், போலன்கா, பெராரா (Bolenga, Ferrare) என்கிற தேசங்களின் தூதரகங்களை தன் வசத்தில் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படவும், அங்கோனா (Ancona) என்கிற இடத்தில் உள்ள

கோட்டையை திருப்பிக் கொடுக்கவும், பிரான்ஸ் தேசத்திற்கு 100 ஓவியங்களைத் தரவும், மேலும் பாரிஸ் நகரத்தி-ருந்து ரோம் நகரத்திற்கு அனுப்பப்பட்ட, குறிப்பிட்ட அதிகாரிகள் தெரிந்தெடுக்கும் சிலைகள், பூச்சாடிகள் அல்லது மார்பு அளவு உள்ள சிற்பங்கள் போன்றவற்றையும், மேலும் இதே முறையில் தெரிந்தெடுக்கப்படும் ஆதி காலத்து சுவடிகள் 500ஐயும் (புரதான காலத்தைச் சேர்ந்தவைகள் அதிக விலை உள்ளது), இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக இன்னும் இனிப்புள்ளதாக்கும்படி அருட்திரு தந்தை குடியரசுக்கு 21,000,000 பிரெஞ்ச் (French) தேசத்து நாணயத்தையும் இவைகளில் அதிகமானவைகள் தங்கம் அல்லது வெள்ளி (குவியல்களாக இருக்க வேண்டும்) ஆகியவைகளைத் தர வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டார்."

இந்த அபராதங்கள் உடனடியாக செலுத்தப்படாதபடியால், பணத்தொகை அபராதம் 50,000,000 பிரெஞ்ச் நாணயமாக அதிகரிக்கப்பட்டதோடு, போப்புக்கு சொந்தமான சில பிரதேசங்களை பிரான்ஸ் தேசத்திற்கு விட்டுக்கொடுக்கும்படி நிர்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இறுதியில் போப் சிறைக்கைதியாக பிரான்ஸ் தேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கே அவர் மரித்தார்.

போப் ஏழாம் பயஸூக்கு (Pius VII) அவருடைய மரியாதைகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. அவர் 1804ம் ஆண்டு நெப்போ-யனின் முடி சூட்டு விழாவில் பங்கு பெற்றார். அதன்பின்னர் (1808-1809) நெப்போ-யனின் ஆணைப்படி போப்பிடமிருந்து ஒவ்வொரு இம்மைக்குரிய அதிகாரமும் பறிக்கப்பட்டது. அதோடு கூட ஞாபக சின்னங்கள், செதுக்கப்பட்ட சிலைகள், அரிய ஓவியங்கள் பிரெஞ்ச் பாதுகாப்பின் கீழ் வந்தன. நெப்போ-யன் கூறிய வார்த்தைகள் இவ்விதமாக இருந்தது. "நம்முடைய மதிப்புக்குரிய முன்னோரான ஷார்லுமேன் (Charlemagne) போப்புக்கு இலவசமாகக் கொடுத்த பிரதேசங்களான உர்பினோ, அன்கோனா, மேஸ்ரேட்டா (Urbino, Ancona, Macerata) என்றென்றைக்குமாகவே இத்தா- இராஜ்யத்துடன் இணைக்கப்படுவதாக" என்பதாகும்.

இதன் சுருக்கம் ஒரு ரோமன் கத்தோ-க்க எழுத்தாளரால் இப்படியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது : (Chair of St. Peter PP. 439, 440)



"இதோடுகூட கீழ்க்கண்டவைகளும் சேர்க்கப்பட்டன. போப் தொடர்ந்து ரோமின் பிஷப் (Bishop) ஆக இருக்க வேண்டும். மேலும் அவர் ஷார்லுமேன் (Charlemagne) காலம் வரை ஆதிகாலத்தி-ருந்து அவருடைய முன்னோர்கள் செய்து வந்தபடியே தன்னுடைய மதச் சடங்குகளைச் செய்து கொண்டு வரவேண்டும். அடுத்த வருடம் தன்னுடைய வெற்றியின் தைரியத்தைக் கொண்டு இவைகளை உறுதி செய்தான். போப் தன்னிடத்தில் வைத்திருக்கும் பெயரளவு ஆட்சியின் அதிகாரத்தையும், தலைநகரத்திலும், சுற்றி உள்ள பிரதேசங்களில் உள்ளவைகளையும் தன்னிடத்தில் இருந்து எடுத்துக் கொள்ளும்படியாக விட்டு விடவேண்டும். (இந்த போப் அதிகாரம் Charlemagne பரிசாகக் கொடுப்பதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே கிபி 539-ருந்து இருந்ததாகும்.) அதன்படியாக ஆஸ்டிரியன் சீசர் (Austrian Caesar) அரண்மனையி-ருந்து அவன் ஒரு புதிய கட்டளையைப் பிறப்பித்தான். அதன்படி ரோமாபுரி, அரசாங்கம் இல்லாத நகரமாக இருக்க வேண்டும். அதன் அரசாங்க கடமைகள் சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவினரால் நடத்தப்பட வேண்டும். அதன் நினைவுச் சின்னங்களும், அரிய கலைப் பொக்கிஷங்களும் பிரெஞ்ச் பாதுகாப்பின் கீழ் வர வேண்டும். மேலும் போப் இப்பொழுது ஆட்சி செய்யாதபடியால் அவருக்கென ஒரு வருமானம் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்."

இதைத் தொடர்ந்து, ஏழாம் பயஸ் (Pius VII), நெப்போ-யன் சபையின் சிலாக்கியங்களில் இருந்து (Ex. Communication) நீக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தான். இதனால் அவன் பிரான்ஸ் தேசத்திற்கு சிறைக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்டான். இறுதியில் பேன்டன்புலே (Fontainebleaw) என்கிற இடத்தில் 1813ம் வருடம் ஜனவரி மாதம் 25ம் தேதியில் ஒரு உடன்படிக்கை செய்தான். அதன்படி பிஷப் மற்றும் ஆட்சி அதிகாரிகளை நியமிக்கும் உரிமையை நெப்போ-யனின் கரங்களில் ஒப்புக் கொடுத்தான். இதன்படி இப்படிப்பட்ட நியமனங்களை இரத்துச் செய்யும்படி தன்னிடத்தில் இருந்த அதிகாரத்தையே விட்டு விட்டான். இப்படியாக ஒரு போப்புக்குரிய அதிகாரத்தையே நெப்போ-யனுக்குக் கொடுத்தான்.

இதையேதான் நெப்போ-யனும் வெகு காலமாக விரும்பி இருந்தான்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்த இந்த சம்பவங்களையும் அவைகளின் முக்கியத்துவத்தையும் ரோமன் கத்தோ-க்கர்களும் கவனிக்காமல் இல்லை. மேலே சொல்லப்பட்ட இழப்புகளையும், அவமானங்களையும் அவர்கள் உணர்வதோடு போப்பின் ஆயிர வருட கால ஆட்சியைப் பற்றி கூறுகிறார்கள். (மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசங்களை போப்பின் அதிகாரத்திற்கு கிபி 800 ஷார்லுமேன் (Charlemagne) கொடுத்த வருடத்தி-ருந்து ஆயிரம் வருடங்கள்) அவர்கள் அதன் அதிகாரங்களை நெப்போ-யன் எடுத்துக்கொண்ட வேளையோடு முடிந்து விட்டது என்றும் அந்த நாளில் இருந்து ஒரு சிறிதளவு அதிகாரம் மட்டுமே இருந்தது என்றும் கூறுகிறார்கள். போப்பின் ஆட்சியாளர்கள் கூறுவது என்னவெனில், அது கிறிஸ்துவின் இராஜ்யமாக வெளிப்படுத்துதல் விஷேசம் 20 : 1-4ல் கூறப்பட்டுள்ளபடி தேசங்களில் மேல் ஆயிர வருட ஆட்சி முடிந்து விட்டது. மேலும் இப்பொழுது உள்ள உபத்திரவகாலம் "கொஞ்ச காலத்திற்கே," இக்காலத்தில் 7ம் மற்றும் 9ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி சாத்தான் அவிழ்த்துவிடப்பட்டிருக்கிறான். உண்மையான கிறிஸ்துவின் போ-யாக போப்புகள் இருப்பதை பார்ப்பவர்கள் மாத்திரமே, உண்மையான சபையையும், உண்மையான ஆட்சியையும் அறிந்து கொள்ளுபவர்கள் மாத்திரமே, இதை முழுவதுமாக உணர முடியும்.

பிரெஞ்ச் புரட்சியும் நெப்போ-யனின் ஆதிக்கமும், போப்பின் சரித்திரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க காலமாக இருந்தது என்பதை இதை வாசிப்பவர்கள் உணர்ந்து கொள்ளும்படியாக போதுமான அளவிற்கு ஆதாரங்களை தந்துவிட்டோம் என்று நம்புகிறோம். மேலும் போப்புவின் ஆதிக்கம் முறியடிக்கப்பட்ட பின்னர் மறுபடியும் அதை பெறவில்லை என்பதையும் உணர்ந்திருப்பார்கள் என்றும் நம்புகிறோம். சில வேளைகளில் சில நன்மைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டாலும் அது சிறிது காலத்திற்கு மட்டுமே இருந்தது. அதைத் தொடர்ந்து மறுபடியும் அவமானங்கள் தொடர்ந்தன. ஆனாலும் 1870ல் போப்பின் மத மற்றும்



உலக அதிகாரங்கள் ஓய்ந்தன. அவைகள் மறுபடியும் ஏற்படுத்தப்படாதபடி அப்படியாயிற்று என்றும் நாங்கள் நம்புகிறோம். நெப்போ-யனின் இராணுவம் தான், கடுமையாக விசாரிக்கப்படும் முறைக்கும், மதக் குற்றங்களுக்காக ஜனங்கள், வெளியரங்கமாகத் துன்புறுத்தப்படுதலுக்கும், மரணத்தின் மூலம் தண்டிப்பதற்கும், ஒரு முடிவைக் கொண்டு வந்தது என்பதையும் நினைவு கூர வேண்டும்.

குருவானவர்களின் செயல்களையும், மூட நம்பிக்கைகளையும் ஓரளவுக்கு நீக்கியதின் விளைவாக அதிகமான வெளிப்படையான நாத்திகத்திற்கு வழி வகுத்தது. மனிதர்கள் மேல் மூடத்தனமான பக்தியைக் காட்டுவதை நிறுத்தியது; தேவனுக்கென்று அர்ப்பணம் செய்து கொண்ட மனிதர்களை புத்திசா-த்தனமாக சிந்திக்க வைத்தது. இவர்களில் அநேகர், இதற்கு முன்பாக சிந்திக்கவும் பயந்திருந்ததுடன், தாங்களாகவே வேதாகமத்தைப் படிக்கவும் பயந்திருந்தார்கள். இப்படியாக இந்த புரட்சி சத்தியத்தை முன்னுக்கு கொண்டு வரவும், உண்மையான கிறிஸ்துவத்தை வேதாகமப் பாடங்கள் மூலமாக முன்நிலைக்குக் கொண்டு வரவும் உதவியது. அது உண்மையிலேயே மார்ட்டின் லூதர் நாட்களில் ஆரம்பித்த சீர்திருத்தத்தைத் தொடரச் செய்தது. இதற்கு முன்னர் ஜனங்களின் அறியாமையினாலும், அடிமைத்தனத்தினாலும், மேலும் குருவானவர்களின் அதிகாரத்தின்மேல், மரியாதைகளின் மேல் ஆட்சியின் மேல் உள்ள ஆசையினாலும், சுகமாக வாழ வேண்டும் என்று குருவானவர்கள் கொண்டிருந்த நோக்கங்களினாலும் இது தடைப்பட்டிருந்தது.

இவ்விதமாக 1799ல் "முடிவு காலம்" என்று சொல்லப்படும் காலம் துவங்கியது என்றும் இந்தக் காலத்தில் போப்பின் அதிகாரம் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கப்படும் என்றும், நெப்போ-யன், ஷார்லுமேன் (Charlemagne) வெகுமதியாகக் கொடுக்கப்பட்ட பிரதேசங்களை திரும்பி எடுத்துக்கொண்டது மாத்திரமல்லாது (அவைகள் கொடுக்கப்பட்டு ஆயிர வருடங்கள் ஆன பின்னர்) அதன்பின்னர் ரோம் நகரில், ஜனங்கள் மேல் போப்புக்கு இருந்த அதிகாரத்தையும், நெப்போ-யன் எடுத்துக்கொண்டான்

என்பதையும் காட்டியுள்ளோம். இந்த அதிகாரம் ஜஸ்டினியன் (Justinian) என்பவரால் கிபி 533ல் கொடுக்கப்பட்ட ஆணையினால் ஓரளவுக்கு பெயரளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் உண்மையில் 1799ல் இருந்து 1260 வருடங்கள் முன்னர் மாத்திரமே அதாவது கிபி 539ல் (கிப்பன், ரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியும் அழிவும், Vol.3, PP. 536, 537 பின் குறிப்பும் சேர்த்து) ஆஸ்ட்ரோகோத்திக்கின் (Ostrogothic) சாம்ராஜ்யம் கவிழ்க்கப்பட்ட காலத்தி-ருந்து தான் இந்த அதிகாரம் உண்மையாக வந்தது. இதுதான், காலம், காலங்கள், அரைக்காலம் வல்லமை பற்றி அடிக்கடி சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தில் வரையறுக்கப்பட்டபடி சரியான எல்லையாக இருந்தது. சிறிது அளவுக்கு அதிகாரம் மறுபடியும் கிடைக்கப் பெற்று இருந்தாலும் இன்றைக்கு போப் மத மற்றும் உலக அதிகாரம் இல்லாதவராக இருக்கிறார். ஏனெனில் அது ஏற்கெனவே அழிக்கப்பட்டுவிட்டது. பாவ மனுஷன் ஜனங்களின் மேல் அதிகாரம் அற்றவனாய் இன்றும் தன்னைக் கம்பீரமாக காட்டிக்கொள்கிறான், பெருமிதமாக பேசிக் கொள்ளுகிறான். ஆனால் ஜனங்கள் மேல் அதிகாரம் இல்லாதவனாக கூடிய சீக்கிரத்திலே வெளிப்படுத்தின விஷேசத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளபடி, கோபமுடன் இருக்கும் ஜனத்திரளின் (தேவனின் அபாரமான வேலையாட்கள்) கரங்களில் முற்றிலுமாக அழிவைப் பெறும்படியாகக் காத்திருக்கிறான்.

இந்த முடிவு காலம் அல்லது யேகோவாவின் ஆயத்த நாள் கிபி 1799ல் தொடங்கி கிபி 1914ல் (ஆசிரியரின் முன்னுரையை பார்க்கவும்) முடிவு பெறுகிறது. இது கடந்த யுகங்களில் உள்ள அறிவைக் காட்டிலும் அதிகமாக விருத்தி அடைந்திருப்பதைக் காட்டுவதாக உள்ளது என்றாலும், உலகம் இதுவரை அறிந்திராத மகா உபத்திரவத்தில் இது முற்றுப் பெறும். ஆனாலும் உண்மையான தேவனுடைய இராஜ்யம் உண்மையான கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்பட்டு அந்திக்கிறிஸ்துவுக்கு நேர் எதிர்மாறான ஓர் ஆட்சியை முழுமையாக ஸ்தாபிக்கும் என வெகு காலத்திற்கு முன்னரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அந்த ஆசீர்வதிக்கப்பட்ட நாளுக்கென்று ஆயத்தப்படுத்திக் கொள்ளுவதுடன் அதற்கு நேராக



முன்னேறிக் கொண்டு இருக்கிறது. இந்தக் காலமானது ஆயத்தப்படுத்துவதோடு இராஜ்யத்திற்கு நேராக வழி நடத்திக் கொண்டும் இருக்கிறபடியால், அது பழைய முறைமைக்கும் புதிய முறைமைக்கும் இடையில் உண்டாகும் பெரிய முரண்பாட்டுக்கும் நேராக வழி நடத்துகிறது. இதன்மூலம் புதிய முறைமை ஸ்தாபிக்கப்படும். கடந்த காலமுறைமைகள் நீங்க வேண்டியிருந்தாலும் புதிய முறைமை அதை மேற்கொள்ளவேண்டும். இந்த மாற்றம் தற்போதுள்ள முறைமையில் நன்மை பெற்றவர்களால் மூர்க்கமாக எதிர்க்கப்படும். உலகளவில் புரட்சி ஏற்படும், இதன்மூலம் இறுதியான முறையில் பழைய முறைமை அழிக்கப்பட்டு புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு ஸ்தாபிக்கப்படும்.

எல்லா ஆராய்ச்சிகளும், கண்டு பிடிப்புகளும், நன்மைகளும் முந்தைய நாளை விட நம்முடைய நாளை உயர்ந்ததாக்கிக் கொண்டிருக்கும் வேளையில், அநேக புதிய காரியங்கள் ஒன்றாக இணைந்து வருகிற ஆயிரம் வருட அரசாட்சிக்கு ஆயத்தம் பண்ணிக் கொண்டு இருக்கிறது. அந்த வேளையில் உண்மையான நல்ல சீர்திருத்தம், எல்லா வழிகளிலும் உண்மையான ஆரோக்கியமாக துரிதமான முன்னேற்றம், புதிய முறைமையாக எல்லாரிடமும் எல்லாருக்குமாக வரும்.

### உன்னுடைய துக்கத்தில் இருந்து விழித்து எழும்பு !

"சீயோன் குமாரத்தியே, உன் துக்கத்தில் இருந்து விழித்து எழும்பு!
விழி, இனிமேலும் உன் சத்துருக்கள் உன்னை நெருக்குவதில்லை.
குன்றுகள் மேல் பிரகாசமாக உதிக்கிறது பக-ன் - மகிழ்ச்சியின்
நட்சத்திரம் :
விழித்தெழும்பு உனது துக்கத்தின் இரவு முடிந்து விட்டது."

"உன்னுடைய எதிரிகள் பலசா-களாக இருந்தார்கள்.
ஆனால் அவைகளை கீழ்ப்படுத்தியது புயம்,
அவர்களின் கூட்டங்களைச் சிதறடித்தது,
அதிக வல்லமை உள்ளதாக இருந்தது:
அவர்கள் அவர்களைப் பின்தொடர்ந்த கொள்ளை நோய்க்கு

*முன்னால் பதரைப் போல் பறந்தார்கள்;*

*அவர்களுடைய யுத்த குதிரைகளும்,யுத்த இரதங்களும் வீண்!*

*"சீயோன் குமாரத்தியே உன்னை காப்பாற்றிய அந்த வல்லமை தம்புருவினாலும், கின்னரங்களாலும் உன்னதமாக போற்றப்படவேண்டும் ஆர்ப்பரி! ஏனெனில் உன்னை அடிமைப்படுத்திய சத்துரு அழிந்தான், உன்னை நெருக்கின சத்துரு முறியடிக்கப்பட்டான்*

*சீயோன் விடுதலையாயிற்று."*

★★★

## அத்தியாயம் 3

# இராஜ்யத்திற்காகக் காத்திருக்கும் நாட்கள் - தானியேல் 12

*இராஜ்யத்தின் வேலை சுருக்கமாக்கப்பட்டிருக்கிறது - காத்திருக்கும் காலம், அறிவும் பிரயாணமும் பெருகுவதன் மூலம் குறிக்கப்பட்டது - இரயில் பாதை பற்றி சர் ஐசக் நியூட்டனின் முன் கருத்து - 1260 நாட்கள் - வலுசர்ப்பத்தின் வாயில் இருந்து வெள்ளம் - 1290 நாட்கள் தரிசனம் பரவுவதைக் குறிக்கிறது, ஒரு பகுதி சரியானது - ஏமாற்றம், பரீட்சை, அதன் விளைவுகள் - 1335 நாட்கள் - "காத்திருக்கும்" விசுவாசிகள் மேல் அப்பொழுது வரும் ஆசீர்வாதம் - பத்துக் கன்னிகைகளின் உவமையில் ஆண்டவர் இந்த காத்திருக்கும் நாட்களைப் பற்றிக் குறிப்பிடுதல்.*

முடிவு காலம் பற்றி அதிகாரம் 11ல் குறிப்பிட்ட பின்னர் 12வது அதிகாரம் இராஜ்யத்தை சுட்டிக் காட்டுவதுடன், காத்திருப்பது போன்றவற்றைக் கூறுகிறது. இது முடிவு காலத்தின் போது அது ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு உள்ள நிலையாகும். முதல் மூன்று வசனங்கள் சில வார்த்தைகளிலேயே தேவனுடைய உன்னதமான திட்டத்தின் பலன்களைக் கூறுகிறது.

"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாயேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்திலே எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்.

பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும், (சூரியன்-மத்.13:43) அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்."

பதினோராவது அதிகாரத்தில் 2300 வருட பூலோகத்தின் சரித்திரம் குறிப்பிடப்பட்டது என்றால், இன்னும் தெளிவாக சுருக்கமாக மேசியாவின் ஆயிரம் வருட அரசாட்சி மூன்று வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் எல்லாம் அங்கு இருக்கிறது. மிகாயேல் (தேவனைப் போன்றவர் அல்லது தேவனுடைய பிரதிநிதி) என்கிற பெயர் இந்த இடத்தில் நம்முடைய பெரிய மீட்பருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்தான் உண்மையிலேயே தேவனால் ஏற்படுத்தப்பட்ட மகா பிரபு. அவர் முன்னால் நிற்கவும், தானியே-ன் ஜனங்களை, தேவனுடைய ஜனங்களை, உண்மையான இஸ்ரயேலர்களை, தேவனை அவருடைய சத்தியத்திலே அன்பு கூருகிறவர்களை, கீழ்ப்படிதல் உள்ளவர்களை விடுவிக்கும்படியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். (ரோம. 9:6, 25,26 ; கலா. 6:16) அவர் அவர்களை பாவத்தி-ருந்தும், அறியாமையில் இருந்தும், வேதனையில் இருந்தும், மரணத்தில் இருந்தும் இதற்கு முன்பாக அவர்களை மேற்கொண்டிருந்த சாத்தானால் குருடாக்கப்பட்ட ஊழியக்காரர்களின் உபத்திரவங்களில் இருந்தும், தந்திரங்களில் இருந்தும் விடுவிப்பார். ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாகக் காணப்படுகிற அனைவரும் எல்லா சத்துருக்களிடமிருந்தும் விடுவிக்கப்படுவார்கள். அது மாத்திரமல்ல, யூத யுகத்திலும் முற்பிதாக்களின் யுகத்திலும் பாத்திரவான்களாக எழுதப்பட்டவர்களும், சுவிசேஷ யுகத்தில், பாத்திரவான்களாக எழுதப்பட்டவர்கள் மற்றும் ஆயிரம் வருட அரசாட்சியின் போதும் தகுதியுள்ளவர்களின் பெயர்கள் எழுதப்படும். தேவனுடைய ஜனங்கள் எல்லோரும் (அவரைப் பற்றிய அறிவுக்குள் கொண்டு வரப்பட்ட பின்னர், அவரை நேசிக்கிறவர்கள், கீழ்ப்படிகிறவர்கள் அனைவரும்) விடுதலையாக்கப்படுவார்கள். இருந்தாலும்



அளிக்கப்படும் கனத்தின் அளவு, ஜெயம் கொள்ளுகிற சிலருக்கு கவனமாகக் குறிக்கப்படுகிறது. கடந்த காலத்தில் பிரபலமானவர்கள் அலெக்சாண்டர், நீரோ, நெப்போ-யன், இராயர்கள், போப்புக்கள் போன்றவர்கள், உலகத்தை பிரமிக்கப்பண்ணினவர்கள், தங்களுக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகளைத் தவறாகப் பயன்படுத்தியவர்கள், மற்றவர்களை அழித்தவர்கள், அவர்களுடைய உண்மையான குணாதிசயத்தின்படி காணப்பட்டு, ஆயிரம் வருட அரசாட்சியின் போது அவமானத்தை அடைவார்கள், அவமதிக்கப்படுவார்கள். மகா உபத்திரவத்தின் காலம் பற்றியும் கிறிஸ்துவின் ஆட்சி பற்றியும் இந்த சுருக்கமான குறிப்பு கூறாமல் இல்லை. உபத்திரவத்தின் காலத்தோடு கடந்த கால எந்த புரட்சியையும் ஒப்பிட முடியாது. அந்த உபத்திரவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பிரென்ஞ்சு புரட்சியும் சிறியதாகவே தோன்றும். யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத உபத்திரவமாக அது இருக்கும்; ஏனெனில் இந்த மகாபிரபு மிகாயேல் முழு உலகத்தை ஜெயிப்பது மாத்திரமல்ல, அவருடைய ஆளுகை நித்திய ஆளுகையாக இருக்கும், நீதி அவருடைய சிங்காசனத்தின் அஸ்திபாரமாக இருக்கும். மேலும் மனுக்குலமானது ஒரு முறை அதன் நன்மைகளை அனுபவித்த பின்னர், பெரும்பாலோர் இன்னொன்றுக்காக ஆசைப்படமாட்டார்கள், ஏனெனில் அவருடைய இராஜ்யம் "எல்லா ஜாதிகளின் விருப்பமாக இருக்கும்."

இங்கே இந்த தீர்க்கதரிசனத்தின் நூலானது தனது முழு ஓட்டத்தை ஓடிய பின்னர் நிற்கிறது. இந்த அதிகாரத்தில் எஞ்சி இருக்கும் வசனங்கள் 1260, 1290, 1335 அடையாளமான நாட்களின் காலங்களை எடுத்துக் கூறும்படிக்கு (தானியே-ன் உடன் இருந்த ஊழியக்காரர்களுக்கும், தானியேலுக்கும் அல்ல. ஆனால் தேவனுடைய பிள்ளைகளுக்கு, தானியேல் உடன் ஊழியக்காரர்கள், அதாவது முடிவு காலத்தின் போது உள்ளவர்களுக்கு) கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குறித்த காலத்தில், நாம் வசிக்கிற காலம் உண்மையாகவே அறுவடையின் காலமா அல்லது சுவிசேஷ யுகத்தின் "முடிவு" காலமா என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த உலகத்தின் இராஜ்யங்களுக்கு இடையில் உள்ள போராட்டங்களையும், இப்பொழுது கடைசியாக மிகாயே-ன்

கைகளில் தேவனுடைய இராஜ்யம் வெற்றி பெற்றதையும் கேள்விப்பட்ட தானியேல் அது எப்பொழுது தேவனுடைய ஜனங்களை விடுவிக்கும் என்பதை அறிந்து கொள்ள விரும்பினான். ஆனால் அவனுக்குச் சொல்லப்படுகிறதாவது: (வசனம் 4) தானியேலாகிய நீயோவென்றால், முடிவு காலமட்டும் (அப்பொழுது) இந்த வார்த்தைகளைப் புதை பொருளாக வைத்து வைத்து, இந்த புஸ்தகத்தை முத்திரை போடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம்."

முடிவு காலம் 1799ல் துவங்கி விட்டது என்பதை, அறிவு பெருகிப்போவதைக் காணும்போது தானியேல் 11ல் கூறப்பட்டது உண்மை என்று புரிந்து கொள்வதோடு, சொல்லப்பட்டபடி அங்கும் இங்குமாக ஓடுவதும், துரிதமாக பயணம் செய்வதும் இதை உறுதிப்படுத்துகிறது. இவைகள் எல்லாம் முடிவு காலத்திற்கு உரியதாகும். முதலாவது நீராவி கப்பல் 1807லும், முதலாவது நீராவி கார் 1831லும், முதலாவது தந்தி அனுப்பும் முறை 1844ல் வந்தது. இருந்த போதிலும் இன்றைக்கு ஆயிரக்கணக்கான பெரிய விசாலமான கார்கள், நீராவிக் கப்பல்கள் திரளான ஜனங்களை "அங்கும் இங்குமாக" எடுத்துச் செல்லுகிறது.

சர் ஐசக் நியூட்டன் என்கிற புகழ் பெற்ற வானவியல் நிபுணர் 17வது நூற்றாண்டில் வாழ்ந்தார். அவர் தானியேல் தீர்க்கதரிசியின் கூற்றில் அதிக நாட்டம் உள்ளவராக இருந்ததோடு, அவர் அதில் நம்பிக்கை வைத்து, அது நிறைவேறும் என்றும், மனுக்குலத்தின் அறிவு அவ்வளவு அதிகமாக பெருகுவதினால் மனிதர்கள் ஒரு மணிக்கு 50 மைல் வேகத்தில் செல்லுவது சாத்தியமே என்றார்.

வால்ட்டேர் என்று அழைக்கப்படும் குறிப்பிடத்தக்க நாத்திகன் கே-யாக பின்வருமாறு கூறினார் :

"இப்பொழுது நியூட்டனின் மகா பெரிய மனதைப்பாருங்கள், புவி ஈர்ப்பு சக்தியைக் கண்டு பிடித்த பெரிய தத்துவ ஞானி. அவர் முதிர் வயதுள்ளவரான போது, மனோதைரியம் குன்றியவராக வேதாகமம் என்று அழைக்கப்படுகிற புஸ்தகத்தைப் படிக்கத் தொடங்கினார். அதில் கூறப்பட்டுள்ள அற்புதமான முட்டாள் தனங்களை மெச்சிக்கொள்ளும்படியாக, இன்னமும் மனுக்குலத்தின் அறிவு பெருகிப்போகும் என்றும், நாம் காலம் செல்ல, செல்ல ஒரு மணிக்கு 50 மைல் வேகத்தில் பயணம் செய்யக்கூடும் என்பதை நாம் நம்பவேண்டும் என்று நினைக்கிறார்! பாவம் வயோதிகத்தில் மனோபலம் குன்றியவர்!"



முடிவு காலம், அற்புதமான அறிவு பெருக்கத்தைக் கொண்டு வருவதற்கு வெகு காலத்திற்கு முன்னரே, இவர்கள் இருவரும் இறந்து விட்டார்கள். இது, அந்த கிறிஸ்தவ தத்துவஞானி திவ்ய வெளிப்பாட்டினால் கூறியதை இலகுவாகவே நிரூபிக்கிறது.

வசனங்கள் 5ல் இருந்து 7 வரை உள்ள உரையாடல் போன்றவைகள் தானியேலுக்கு அல்ல, ஆனால் முடிவு காலத்தின் போது ஜீவிக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு உரியதாகும். "அப்பொழுது, தானியேலாகிய நான் ஆற்றுக்கு இக்கரையில் ஒருவனும் ஆற்றுக்கு அக்கரையில் ஒருவனுமாகிய வேறே இரண்டு பேர் நிற்கக் கண்டேன். சணல் வஸ்திரம் தரித்தவரும், ஆற்றின் தண்ணீர்கள்மேல் நிற்கிறவருமாகிய புருஷனை ஒருவன் நோக்கி: இந்த ஆச்சரியமானவைகளின் முடிவு வர எவ்வளவு காலம் செல்லும் என்று கேட்டான். அப்பொழுது சணல் வஸ்திரம் தரித்தவரும், ஆற்றில் தண்ணீர்களின் மேல் நிற்கிறவருமாகிய புருஷன் தம்முடைய வலதுகரத்தையும், தம்முடைய இடது கரத்தையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லும் என்றும், பரிசுத்த ஜனங்களின் வல்லமையைச் சிதறடித்தல் முடிவு பெறும்போதே இவைகளெல்லாம் நிறைவேறித் தீருமென்றும் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் பேரில் ஆணையிடக் கேட்டேன்."

விசேஷமாக கேட்ட காரியம் என்னவெனில் "பாழாக்கும் அருவருப்பைப்" பற்றியது, அதிகாரங்கள் 11:31-33, தானியேல் இவைகளைக் கொடிதான குணலட்சணம் உடையவனை இதற்கு முன்பாகக் கண்ட தரிசனத்தில் உள்ளபடி சரியாக சம்பந்தப்படுத்தினான். இவைகள் தானி 7:8-11, 21, 24-26; 8:10-12, 24-26 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

காலம், காலங்கள் அரைக்காலம் அல்லது மூன்றரை காலங்கள் அல்லது வருடங்கள் (360 x 31/2=1260 நாட்கள், அடையாளமாக கூறப்படும் நாட்கள் -1260 நிஜமான வருடங்கள்) என்று இங்கே கூறப்பட்டுள்ளவைகள், வேறு ஒரு இடத்தில் போப்பின் அதிகாரத்தின் காலம் என்று காட்டப்பட்டுள்ளது. தானி 7:25; 12:7;

வெளி 12:14 இவைகளை வெளி 12:6; 13:5 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். தண்ணீர்களின் மேல் நின்று கொண்டிருக்கும் தூதன், காலங்களின் அளவை அறிவிப்பது, இந்த வெள்ள காலத்தில் அல்லது அந்த காலத்தின் போது 1260 வருட போப்பின் அதிகாரம் முற்றுப் பெற்றதைக் காட்டுகிறது. ஏற்கெனவே கூறப்பட்டுள்ளபடி, இது பிரெஞ்ச் தேசத்து புரட்சியின் போது இருந்த நிலைமையை ஒத்திருப்பதைக் காட்டியது. இதே வெள்ளம் தான் வெளி 12:15, 16ல் இன்னும் அதிக விரிவாக, பாம்பு அல்லது வலுசர்ப்பத்தின் வாயில் இருந்து வெளி வருவதாகவும், அதன் உண்மையான நோக்கம், சாத்தானின் எண்ணத்தின்படி ஸ்திரீயை வெள்ளம் கொண்டு போகும்படியாகவும் (தேவனுடைய சபையை எதிர்த்து) அவளுடைய 31/2 காலங்கள் வனாந்திரத்தில் ஒளிந்து கொண்டிருந்தது முற்றுப்பெற இருக்கும் தருணம் (1260 வருடங்கள்). மேலும் அவள் இப்பொழுது மேன்மைக்கு முன்னே வருவதை "அவளுடைய நேசர் மேல்," தேவனுடைய வார்த்தையின் மேல் (புயத்தின் மேல்) சார்ந்திருப்பதும் விளக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. உன்னதப்பாட்டு 8:5

அடையாளமாகக் கூறப்பட்ட தண்ணீர் பொதுவாக சத்தியத்தைக் குறிக்கிறது. இங்கேயும் அடையாளமாக கூறப்பட்டிருப்பது பாம்பு அல்லது வலு சர்ப்பத்தின் வாயில் இருந்து வருவதாகக் கூறப்பட்டிருந்தாலும், அதன் அர்த்தத்தை அது தக்க வைத்துக்கொள்ளுகிறது. இந்த அடையாளம் தெரிவிக்கிறது என்னவெனில் சத்தியம், பொல்லாத உள்நோக்குடன் பொல்லாதவர்கள் மூலமாக வெளிவரும் என்பதாகும். இதைத்தான் நாமும் காண்கிறோம். பிரெஞ்ச் புரட்சி அதாவது குருவானவர்களின் அதிகாரம், இராஜாக்களின் அதிகாரம், தனிப்பட்டவர்களின் உரிமைகள், எல்லோருக்கும் உள்ள சுதந்திரம் போன்ற உண்மைகள் வெளிவர ஆரம்பித்தன. "மனிதனின் உரிமைகள்" என்கிற விஷயம் தான் சபைக் குருவானவர்கள், ஆட்சியாளர்களுக்கு எதிராகப் புரட்சி நடைபெற காரணமாக இருந்தது. அந்தக் காலத்தில் ஜனங்கள் அதிக அறியாமையிலும், மூட நம்பிக்கைகளிலும், கொடுமையிலும் அகப்பட்டுக் கொண்டிருக்கும் போது, அவ்வேளையில் மனித உரிமைகள் பற்றி கவனிக்கப்பட்டது, பேசப்பட்டது என்றால் அவைகள் நமக்கு ஆச்சரியத்தை கொடுக்கிறது. அப்பொழுது



பிரான்ஸ் தேசத்தில் இரத்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட அநேக உண்மைகள் தற்காலத்தில், பொதுவாக நாகரீகம் அடைந்த ஜனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் காலத்திற்கு அது அதிக பலத்துடன் அதுவும் திடீரென்று போடப்பட்டதாக இருந்தது.

சர்ப்பமாகிய சாத்தான் தேவனுடைய இரக்கத்தால் ஏற்பட்ட விளைவை விரும்பவில்லை, அதற்கு எதிர்மாறானதைத்தான் விரும்பினான் என்று தீர்க்கதரிசனம் தெளிவாகக் காட்டுகிறது. இதில் அவன் தன்னை மிகவும் பெரியவனாக எண்ணிக்கொண்டான். மற்ற ஏனைய சந்தர்ப்பங்களிலும் அவன் இப்படியாகத்தான் செய்திருக்கிறான். சாத்தான் ஒரு போதும் சத்தியம் என்னும் தண்ணீரை ஆசீர்வதிக்க அல்லது புத்துணர்வு பெற அல்லது அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையாக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் அனுப்பமாட்டான். இதற்கு மாறாக, எப்பொழுதுமே அவனுடைய நோக்கம் எல்லாம், ஜனங்களை அடிமைத்தனத்திற்குட்படுத்த வேண்டும், குருட்டாட்டம் உள்ளவர்களாக ஆக்கவேண்டும், அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும் கட்டி வைக்க வேண்டும் என்பதுதான். திடீர் என்று வந்த இந்த வெள்ளம் (சத்தியம்) சீர்திருத்தத்தின் மூலம் வேதாகமத்தில் இருந்து ஜனங்களுக்குக் கிடைத்த சுதந்திரம் என்னும் உணவை வாந்தி பண்ணிப்போடும் படியாகவும், இதன் மூலம் அராஜகம் ஏற்படும் என்ற பயத்தால் ஆட்சியாளர்களும் போதனையாளர்களும் சத்தியத்தை எதிர்க்கும்படியாகவும் ஆயிற்று.

சாத்தான் பிரான்ஸ் தேசத்தில் புரட்சியைத் தூண்டிவிட்டதின் மூலம், ஐரோப்பா முழுவதும் ஒரு பயம் நிறைந்த எதிர்பார்ப்பு, விசேஷமாக நல்ல அந்தஸ்தில், ஆதிக்கத்தோடு இருப்பவர்கள் மத்தியில், சுதந்திரம் வருவதை விரும்பாதவர்கள் மத்தியில் ஏற்படவேண்டும் என்பதுதான். மேலும் ரோமின் மூட நம்பிக்கைகள் தூக்கி எறியப்பட்டு சுதந்திரத்திற்கு வழிவகுத்துக் கொடுத்தால் எல்லா சட்டம் ஒழுங்குகளும் இல்லாமல் போகும் என்கிற கருத்தை பிரான்ஸ் தேசம் முழுவதும் விளக்க வேண்டும் என்பதுதான். இது தந்திரம் உள்ள அசீரியனால் ஏற்படுத்தப்பட்ட புத்திசா-த்தனமான தூண்டு கோலாகும். தீர்க்கதரிசி காட்டுகிறபடி "ஸ்திரீயை" (சீர்த்திருத்த சபை) விழுங்குவதற்காகவும், மேலும் பழமைவாதிகள், சமாதானத்தை

நேசிக்கிறவர்கள், ஆட்சி செய்பவர்கள், ஆட்சி செய்யப்படுபவர்கள் எல்லோரையும் போப்புடன் இணையவும் அவரோடு ஒத்துப்போகவும் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாடு வெற்றி பெறாததற்குக் காரணம் அதை ஏற்படுத்தியவனின் தந்திரம் குறைவுபட்டதால் அல்ல, ஆனால் எல்லாவற்றையும் மேற்கொள்ளும் தேவ வல்லமையினால் உண்டானதாகும். இதன் மூலம் எல்லாம் நன்மைக்கேதுவாக செயல்பட வைக்க அவரால் முடியும்.

இந்த விஷயத்தில், தேவனுடைய திட்டம், ஸ்திரீயை (சபையை) சாத்தானின் தந்திரத்தி-ருந்து காப்பாற்றவும், பொல்லாங்கை நன்மைக்கேதுவாக செயல்பட வைப்பதும், 1700 வருடங்களுக்கு முன்பாக தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது நிறைவேறுவதில் காணலாம். அது என்னவெனில், "பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து வலுசர்ப்பம் தன் வாயி-ருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது." பூமி என்பது ஒரு அடையாளமான (Symbol) வார்த்தை என்று ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ளது. அது சமுதாயத்தைக் குறிக்கிறது, சட்டத்தை மதித்து நடக்கிற ஜனங்களைக் குறிக்கிறது. போப்பின் ஆட்சியைக்குறித்தும், குருவானவரின் தந்திரங்களைக் குறித்தும் இராஜ ஆட்சி, அவர்களின் தொற்று நோய் போன்று தொடர்ந்து ஏதேச்சையான அதிகாரம் காணப்படுவதைக் குறித்தும் குற்றஞ்சாட்டவும் மாத்திரமல்ல, இவைகள்தான் ஜனங்கள் முட்டாள்தனமாக, அறியாமையில், தரித்திரத்தில் இருப்பதற்குக் காரணம் என்று கடுமையாகக் கண்டித்துச் சொல்லப்பட்டபோது வெள்ளம் போன்று "சத்தியம்" பிரான்ஸ் தேசம் முழுவதும் பரவியது சரித்திர உண்மையாகும். இவைகளைப் பொதுவாக ஐரோப்பாவில் உள்ள ஜனங்கள் ஏற்றுக்கொண்டார்கள். (ரோம "பூமி") போப்பின் ஆட்சியாளர்களும் இராஜ அதிகாரவர்க்கமும் முற்றிலுமாக பயந்ததாலும், போப்பின் செல்வாக்குக் குறைவினாலும், நெப்போ-யனின் இராணுவத்தினாலும் அவர்கள் பிரிவு பட்டு நின்றார்கள். எதிர்காலத்திற்குரிய மனிதன் இறுதியில் நசுக்கப்பட்டான். ஐரோப்பாவின் ஆட்சியாளர்கள் பரிசுத்த கூட்டு அமைப்பு (The Holy Alliance) என்று ஒன்றை ஜனங்களின்



சுதந்திரங்களை ஒடுக்குவதற்காகவும், தங்களுடைய சிங்காசனங்களை நிலைப்படுத்திக் கொள்வதற்காகவும் அமைத்தார்கள். ஆனால் ஜனங்களை சங்கி-யால் கட்டுவதற்கு இப்பொழுது அதிக கால தாமதமாயிற்று. ஏனெனில் அவர்கள் வெள்ளத் தண்ணீரைப் பருகி விட்டபடியால் இப்பொழுது அவர்கள் கீழ்ப்படியமாட்டார்கள் போப்பின் ஆட்சியை மறுபடியும் ஏற்படுத்துவதற்கும் இப்பொழுது அதிக கால தாமதமாகிவிட்டது. ஏனெனில் அது அதிகமாக அவமானப்படுத்தப்பட்டு, மேலும் சுதந்திரத்திற்கு விரோதமாக அது காட்டிய போக்கும், பிரான்ஸ் தேச மக்களுக்கு எதிராகக் கொண்டிருந்த வெறுப்பும், அதற்கு எதிராகவே செயல்படத் தொடங்கியது. இதன் நிமித்தமாக இந்த பரிசுத்த கூட்டமைப்பில் சேரும்படியாகப் போப்புக்கு அழைப்பு கூட அனுப்பப்படவில்லை. இப்படி ஒரு சில காரியங்கள் இல்லாவிடில் போப்பே அதற்கு தலைமை வகித்திருப்பார். ஆகவே "ஸ்திரீயான" தேவனின் முன்னேறி வரும் சீர்திருத்த சபை, மேற்கொள்ளப்படாமல் தப்பிற்று; மேலும் சுதந்திரமும் சத்தியமும் பகிரங்கமாக வெளிப்பட்டது. அந்தக் காலத்தில் இருந்து சுதந்திர வாஞ்சையும், தேவனுடைய வார்த்தையும் அதிகதிகமான வெளிச்சத்தையும் சத்தியத்தையும் அடையும்படி வாஞ்சை உள்ளவர்களை வழிநடத்திற்று.

இங்குதான் வெள்ளம் போப்பாண்டவரின் அதிகாரத்திற்கு முடிவையும், "முடிவு காலம் "அல்லது ஆண்டவரின் "ஆயத்த நாளையும்" குறிப்பிட்டது. இந்த வெள்ளத்தின் மேல் தான் தேவனுடைய தூதன் நிற்பதாக தீர்க்கதரிசனத்தில் காணப்பட்டது, காலம், காலங்கள், அரைக் காலங்களின் முடிவை அறிவிக்கும்படியாக இப்படி ஏற்பட்டது. "இந்த ஆச்சரியமான காலங்கள் முடிய எவ்வளவு காலம் செல்லும்" என்ற கேள்விக்குப் பதிலாக இந்த அறிவிப்பு வந்தது. இந்த விசித்திரமான காரியங்கள் அல்லது "ஆச்சரியங்கள்," என்று சொல்லப்படுவது தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்தது அல்ல, 12ம் அதிகாரம் 1-3ம் வசனங்கள் வரை உள்ள பகுதி அவைகளைப்பற்றியது அல்ல. "ஆச்சரியமானவைகள்" என்பது தேவனுடைய பரிசுத்த ஜனங்களுக்கு, இடைக்காலத்தில் வரும் உபத்திரவங்கள், துன்பங்கள், சோதனைகள்

ஆகும். இவைகள் விசேஷமாக போப் என்கிற "கொம்பின்" விசித்திரமான வல்லமை உயர்ந்த நிலைமையில் இருந்ததால் ஏற்பட்டவைகளாகும். இதைக்குறித்து தானியேல் முன்னதாகவே கேட்டிருந்தான். (தானி 7:19-22) கேள்வி என்னவெனில் எவ்வளவு காலம் தான் தேவன் தம்முடைய பிள்ளைகளையும், தேசங்களையும் ஏமாற்றுதலையும், சத்தியம் திரித்துக் கூறப்படுதலையும், அனுமதிப்பார் என்பதுதான்? கொடுக்கப்பட்ட பதில் போப்பின் அதிகாரத்தைச் சரியான முறையில் குறிப்பிடுவதாக உள்ளது. அது தான் முடிவு காலத்தைச் சரியாகக் கணக்கிட்டு கூறுகிறது. "பரிசுத்த ஜனங்களின் வல்லமையை சிதறடித்தல் முடிவு பெறும் போதே இவைகள் (ஆச்சரியமானவைகள்) எல்லாம் நிறைவேறித் தீரும்."

ஐந்தாவது வசனத்தில் ஆற்றின் இரு கரைகளிலும் நின்று கொண்டிருந்தவர்கள் கூட்டாகச் சேர்ந்து இந்த ஆச்சரியமானவைகள் எப்பொழுது முடியும் என்று கேட்பதாக தானியேலுக்குக் காட்டப்பட்டு இருக்கிறது. இது போப்பின் அதிகாரம் முடிந்துவிட்டாலும், அவருடைய நசுக்கும் மற்றும் உபத்திரவப்படுத்தும் வல்லமை முடிந்து விட்டதா என்கிற சந்தேகம் இருப்பதைக் காட்டுவது போன்று உள்ளது. அதன் வல்லமை முறிக்கப்பட்ட பின்னரும், அதன் "ஆளுகை நீக்கப்பட்ட பின்னரும், அது அழிக்கப்பட்ட பின்னரும் கூட, சமீபத்தில் 1870ம் வருடத்தில் தன் பாவம் செய்யாமையைக் குறித்துக் கூறியவைகளை நாம் நினைவில் கொண்டு வரும்போது, ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. பரிசுத்தவான்களுக்குப் பிரதிநிதியாக தானியேல் கூறுவது (தானி 7:11) "அப்பொழுது நான் பார்த்தேன் (அதன் ஆளுகை போன பிறகு, அது இனியும் சத்தியத்தை நசுக்க, பரிசுத்த ஜனங்களின் வல்லமையை நசுக்க பலம் அற்றதாக ஆன பிறகு); நான் பார்த்துக் கொண்டிருக்கையில் அந்தக் கொம்பு பெருமையான பேச்சுகளைப் பேசினதினிமித்தம் (சத்தியத்தின் மேலும், பரிசுத்தவான்கள் மேலும் அதற்கு அதிகாரம் இல்லாமல் இருந்தது, ஆனால் அது வேறு ஒரு பலனைப் பெற்றிருந்தது) அந்த மிருகம் கொலை செய்யப்பட்டது; அதின் உடல் அழிக்கப்பட்டு எரிகிற அக்கினிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது." அதாவது பொதுவாக அராஜகத்திற்கு என்று எடுத்துக் கொள்ளலாம். போப்பின் அதிகாரம் போன பிறகும்



அவரிடமிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருந்த பெருமையான வார்த்தைகளால் ரோம சாம்ராஜ்யத்தில் எஞ்சியிருந்த தேசங்கள் அழிக்கப்பட்டன.

போப்பின் அதிகாரம் முற்றுப்பெற்ற காலம், பிரான்ஸ் தேசத்தில் ஏற்பட்ட புரட்சியின் போது என்று தெளிவாக குறிக்கப்பட்டது மாத்திரமன்றி, 11வது அதிகாரம் 40-44 வது வசனங்கள் வரை உள்ள சம்பவங்களும் இதைக் குறிக்கின்றன. இது 1799 வருடத்தைதான் குறிக்கிறது. உடனடியாக 1260 வருடங்கள் பின்னோக்கிப் பார்த்து போப்பின் அதிகாரம் அங்கே தொடங்கியதா என்று காணலாம். அப்படி இருந்தது என்று நாம் கண்டால் நமக்குத் தெளிவான, பலமான ரூபகாரம் இருப்பதால் நம்முடைய விசுவாசம் பலமடைகிறது. இப்படியாக, நாம் அதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளலாம்.

1799ம் வருடத்தில் இருந்து 1260 வருடங்கள் பின்னோக்கிப் பார்க்கும் போது, அது நம்மை கி.பி 539ம் வருடத்திற்குக் கொண்டு வருகிறது. இங்கே போப்பின் அதிகாரம் தொடங்கினதைக் காட்டுவோம். ஆனால் போப்பின் ஆட்சி முறைகள், தேசத்தின் தந்திரமும், குருவானவர்களின் தந்திரமும், சேர்ந்த கலவையாக இருந்ததோடு, ஆரம்பம் படிப்படியாகவும் சிறிய அளவிலும் இருந்தது. அதே மாதிரி முடிவும் படிப்படியாக இருந்தது. ஆகவே அது தொடங்கியதைக் குறித்தும், முடிவு பெற்றதைக் குறித்தும் பல்வேறு கருத்துக்களைக் கூறலாம், அவைகள் நியாயமானவைகளாகவும் இருக்கும்; நாம் தேவனிடத்தில் இருந்து, அதன் ஆரம்பம் அதன் வீழ்ச்சி பற்றி நிலைவரமான காலங்களைப் பெற்ற பின்னர் அவைகள் எவ்வளவு சரியாக அமைந்துள்ளது என்பதைக் காணலாம். போப்பின் அதிகாரம், அதை எதிர்ப்பவர்கள் ஏற்றுக் கொள்வதற்கு முன்னதாகவே, அதற்கு சபை மட்டும், தேசத்தின் காரியங்கள் மேல் ஆளுகை உண்டு என்று கூறிக்கொண்டது. அது மாத்திரமல்ல அரசிய-லும் சேர்ந்தது. அது ஜனங்கள் மேல் அதிகாரம் செலுத்தவும் முயற்சித்ததோடு, அதனது தலைமை ஒருபோதும் பாவம் செய்ய முடியாதது என்றும் கூறிக்கொண்டது, அதன் அதிகாரம் நீக்கப்பட்டுவிட்டது, வீழ்ச்சி ஆரம்பித்துவிட்டது என்று தீர்க்கதரிசனம் கூறிய காலத்திலும் கூட அது அப்படி கூறிக்கொண்டது. பிரஞ்சுப் புரட்சியின் போது, மக்களிடம் இருந்த அறியாமை,

மூடத்தனமான மரியாதை போன்றவை முறியடிக்கப்பட்ட காலத்தில் இருந்து, ரோமங்னா (Romagna) என்கிற பிரதேசத்தில் இருந்த இத்தா-ய மக்கள் போப்பின் அதிகாரத்தை அங்கீகரிக்கவில்லை. புரட்சிகளுக்கு இடையில் போப்பின் இராஜ்யங்களில், போப் பெயரளவிற்கு ஆட்சி செய்பவராக இருந்தாலும், அவரைத் தனது இராணுவத்தால் பாதுகாத்து வந்த பிரான்ஸ் அல்லது ஆஸ்திரியா நாடுகளின் பிரதிநிதியாக, ஒரு அந்நிய படையெடுப்பவராகத்தான் இருந்து வந்தார்.

1260 வருடங்கள் என்பது கி.பி 539ல் துவங்கியது என்பதை இப்பொழுது உணர்ந்து, இதற்கு முன்னதாக இது அறியப்பட்டிருக்க முடியாது என்பதைக் கண்டு கொள்ள முடிகிறது. போப்பு மார்க்கத்தார் கூட கான்ஸ்டன்டைன் (Constantine) மனமாற்றம் பெற்றது, ரோம சாம்ராஜ்யத்தில் பேர் கிறிஸ்தவம் பரவியது, கி.பி 328ல் அல்லது கி.பி 800ல் ஷார்லுமேன் (Charlemagne) இராஜ்யங்களைப் போப்புவிற்கு கொடுத்த நாளில் இருந்து தங்களின் அதிகாரம் தொடங்கியது என்று குறிப்பிடத் தயங்குகிறார்கள். இருந்தாலும் கான்ஸ்டன்டைன் ஒரு போதும் அரசாங்க அதிகாரம் சபைக்கு உரியது என்று கூறவில்லை. அதுமட்டுமல்ல, அப்படி அது உரிமை பாராட்டுவதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு மாறாக, அவன் கிறிஸ்தவத்தை ஆதரித்தாலும் மதம் (சபை) சக்ரவர்த்தியைத் தனது உடன் தலைவராக ஆக்கியது. சக்ரவர்த்தி ஆலய விவகாரங்களில் தலையிட்டாலும், ஆலய குழுக்களை அமைத்தாலும் மதம் (சபை) அரசாங்க அலுவல்களில் தலையிட அனுமதிக்கப்படவில்லை. கி.பி 539 என்ற தேதி 1260 வருட தீர்க்கதரிசன அளவு கோலால் காட்டப்பட்டிருப்பது, கி.பி 328ல் (சபை) மதமும் சாம்ராஜ்யமும் இணைந்த காலத்திற்கும் கி.பி 800ல் அரசாங்க, மத அதிகாரம் அனைத்தையும் வழங்குபவராக அதை (Charlemagne) ஷார்லுமேன் முழுமையாக ஏற்றுக்கொண்ட காலத்திற்கும் இடையில் உள்ளது.

கான்ஸ்டன்டைன் காலத்தில் இருந்து ரோமாபுரியில் உள்ள பிஷப்புகள் உலகத்தில் மிக முக்கியமான அந்தஸ்து உள்ளவர்களாக இருந்தார்கள். வெகு விரைவில் மற்ற எல்லோர் மேலும் அதிகாரம் காட்ட முயற்சித்தார்கள். கிறிஸ்தவ மதத்தில் ஒரு நபர் தலைவராக அல்லது அதிகாரம் உள்ளவராக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார்கள். அதுவும் ரோம் நகரில் உள்ள பிஷப்தான்



அவ்வாறு இருக்க வேண்டும் என்றும் நிர்பந்தித்தார்கள். மேலும் பேதுருவும், பவுலும் கூட ரோமாபுரியில் வசித்திருக்கிறார்கள், இதனால் ரோமாபுரி அப்போஸ்தல அதிகாரத்தின் மையமாக ஏற்படுத்தப்பட்டது என்றும், மேலும் இராயர்களின் (Caesars) அரசாங்கத்தின் தலைமை இடமாக வெகு காலமாக இருந்தபடியால், ஜனங்கள் தங்கள் மனதில், ரோமாபுரியை ஆட்சியின் ஸ்தானமாக எண்ணினார்கள் என்றும் கூறினார்கள்.

இருந்த போதிலும், இந்த உயர்ந்த அந்தஸ்துக்கான வேண்டுகோள் உடனடியாக ஏற்றுக் கெள்ளப்படவில்லை. போட்டி மனப்பான்மை வளர்ந்தது. மற்ற நகரங்களில் உள்ள பிஷப்புகள் கூட ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி உயர்வான அந்தஸ்து வேண்டும் என்றார்கள். ஆனாலும் கி.பி. 533ல் தான் ரோம் நகரத்தின் பிஷப் இப்படியாக சக்கரவர்த்தி முதலாம் ஜஸ்டீனியனால் அங்கீகரிக்கப்பட்டார். இது எப்படி நடைபெற்றது என்றால், ஒரு நல்ல சூழ்நிலையில் நடைபெற்ற ஒரு பேச்சு வார்த்தையின் போது ரோம் நகர பிஷப்புக்கு ஆதரவாக சக்கரவர்த்தி பேசினார். அவர் யூடிசியன் (Eutychians) மற்றும் நெஸ்டோரியன் (Nestorians) உடன் விவாதித்து கன்னி மேரி ஆராதிக்கப்படுவதற்குத் தகுதியானவர் என்று ஏற்றுக்கொண்ட பின்னர், நமது ஆண்டவரின் சுபாவத்தில் உள்ள மேன்மைகளையும் கலவைகளையும் குறித்து விவாதித்தபோது, இந்தப் பேச்சு வார்த்தை மதத்தைப் பிளவுபடுத்தி விடுமோ என்கிற பயம் சக்ரவர்த்திக்கு இருந்தது; ஏனெனில் இது, அவர் சாம்ராஜ்யத்தை உறுதியாக இணைக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, பிரிவினையை உண்டு பண்ணி விடுமோ என்றும் பயந்தான். ஏனெனில் அந்த ஆரம்ப நாட்களில் கூட பேர் சபையும் (Church) சாம்ராஜ்யமும் ஒரே கிறிஸ்தவ உலகமாக இருந்தது. பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு நிரந்தர அதிகாரம் வேண்டும் என்றும், ஜனங்கள் எதை நம்ப வேண்டும், எதை நம்பக் கூடாது என்று அவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்றும் விருப்பப்பட்டு, உயர்ந்த ஸ்தானத்தில் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்குள் போப் பதவிக்கு ரோம் நகரின் பிஷப் அதிக தகுதி உள்ளவராகக் கண்டு, மேலும் சக்ரவர்த்தியின் எண்ணங்களுக்கு அதிகமாக ஒத்துப் போகக் கூடியவர், அதிக பழமைவாதி என்று ஜஸ்டீனியன் (Justinian) கண்டு,

அறிக்கைகள் வெளியிடுவதின் மூலம் யூடிசியன்ஸ் மற்றும் நெஸ்டோரியன்ஸ் (Eutychains, Nestorians) ஆகியோரின் உபதேசங்களைக் குற்றப்படுத்துவதுடன் அதே வேளையில் ரோம் நகரின் பிஷப்பை எல்லாத் திருச்சபைகளின் தலைவராகவும் தேவனுடைய பரிசுத்த குருமார்களுக்கும் தலைவராகவும் ஏற்றுக்கொள்வதின் மூலம், எதிர்மாறான கருத்துக்களை அகற்றுவதினாலும் சபையின் ஐக்கியத்தை நிலைநாட்ட விரும்பினான்.

இந்த ஆணையோடு இணைந்த வண்ணம் இப்படியாக போப் ஜானுக்கு ரோம் நகரின் உயர்மட்ட தலைமைக் குருவானவர் என்று பட்டம் கொடுத்தான் :

“வெற்றி வாகை சூடியவனும், பக்தியுள்ளவனும் அதிர்ஷ்டம் உள்ளவனும், புகழ் பெற்றவனும், ஜெயம் கொண்டவனுமாகிய ஜஸ்டீனியன் ரோம் நகரின் வணக்கத்துக்குரிய ஆர்ச்பிஷப் மற்றும் உயர்மட்ட தலைமைக்குருவாக இருக்கும் ஜான் சமூகத்துக்கு எழுதுவதாவது: அப்போஸ்தல குழுவினருக்கும், உங்களுடைய பரிசுத்த சமூகத்திற்கும் கனத்தைத் தெரிவிப்பதோடு (எங்களுடைய வாஞ்சை இப்பொழுதும் எப்பொழுதும் இதுவாகத்தான் இருந்திருக்கிறது) ஒரு குருவானவருக்குத் தகுதியான ஆசீர்வதிக்கக்கூடிய உங்களுக்குக் கனத்தைச் செலுத்தி உங்களுடைய பரிசுத்த சமூகத்திற்கு சபைகளின் நிலைமையைக் குறித்ததான எல்லா காரியத்தையும் கொண்டு வர முற்படுவதோடு அறிவிப்பது என்னவெனில், உங்களுடைய அப்போஸ்தல குழுவினரின் ஒற்றுமையைப் பாதுகாப்பது எப்பொழுதும் எங்களுடைய மிகப்பெரிய வாஞ்சையாக இருந்திருக்கிறது. அது மாத்திரமல்ல, தேவனுடைய பரிசுத்த சபைகள் நிலைத்து நிற்க வேண்டும் என்பதும் எப்பொழுதும் எங்களுடைய மிகப்பெரிய வாஞ்சையாக இருந்திருக்கிறது. அவைகள் இப்பொழுதும் அதற்கு எதிராக ஒன்றும் அதை மேற்கொள்ளாதபடி அசைக்கப்படாமல் தன்னைக் காத்துக் கொள்ளுகிறது. ஆகவே அதோடு கூட முழு கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லா குருமார்களையும் இணைக்கும்படியாக உங்களுடைய கனத்துக்குரிய பரிசுத்தத்தின் பார்வைக்கு இதைக் கொண்டு வரும்படியாக முற்படுகிறோம். அப்படியென்றால், தற்சமயம், சர்ச்சைக்கு உள்ளான விஷயங்களைக் கனத்துக்குரிய உங்களின் பார்வைக்கு கொண்டு வருவது அவசியம் என்று கருதுகிறோம். அவைகள் எவ்வளவுதான் சாதாரணமானதாக, உறுதியுள்ளதாக இருந்தாலும் உங்களுடைய அப்போஸ்தல பரிசுத்தத்தின் உபதேசத்தின்படியாக எப்பொழுதும் எல்லா குருமார்களால் அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் எல்லா பரிசுத்த சபைகளுக்கும் தலையாக உள்ள கனத்துக்குரிய உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் இருக்கக்கூடியதான எந்த பிரச்னையும் எவ்வளவுதான் சாதாரணமானதாக உறுதியானதாக சபைகளைப் பற்றியவைகளைக் கொண்டு வருவதை நாங்கள் அனுமதிப்பதில்லை. எல்லா விஷயங்களிலும் (ஏற்கெனவே கூறப்பட்டுள்ளபடி) உங்கள் பரிசுத்தத்தின் கனத்தையும், அதிகாரத்தையும் கூட்டவே வாஞ்சிக்கிறோம்.”



அடுத்ததாக வருகிற நிருபம், எதிர்மாறான கருத்துக்களைக் கொண்டது என்கிற சில காரியங்களைக் குறிப்பிடுகிறது. இந்த கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியவைகளாகும். இது ரோம சபை கொண்டிருந்த கருத்துக்களுக்கு இசைவாக சக்ரவர்த்தி விசுவாசம் வைத்திருப்பதைக் காண்பிக்கிறது. அது கீழ்க்கண்டவாறு முற்றுப் பெறுகிறது.

“இப்பொழுது நான்கு பரிசுத்த ஆலோசனை சங்கம் (அவைகள் நியாயமானவைகளாக) இருப்பதை ஒத்துக்கொள்கிறோம். அவைகளாவன: நிசேயா (Nice என்கிற இடத்தின் உள்ள குழுவினர்) என்கிற பட்டணத்தில் கூடிய 318 பரிசுத்த தந்தைகள் அடங்கிய குழு, ராஜரீக பட்டணத்தில் (Constantinopole) கூடிய 140 பரிசுத்த தந்தைகள் அடங்கிய குழு, எபேசுவில் (எபேசு குழுவினர்) முதன்முறையாகக் கூடிய பரிசுத்த தந்தைகளும், சால்டன் (Chalcedon) என்கிற பட்டணத்தில் கூடியவர்களும் அடங்குவர். ஆகவே எல்லா குருவானவர்களும் உங்களுடைய அப்போஸ்தல பரிசுத்தத்தின் உபதேசங்களைப் பின்பற்றி, விசுவாசித்து, அறிக்கையிட்டு உறுதிப்படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். ஆகவே ஆசீர்வதிக்கப் பெற்ற பிஷப்புகள் ஹைபடியஸ் மற்றும் டெமட்ரியஸ் (Bishopes, Hypatius, Demetrius) மூலமாக உங்களுடைய பரிசுத்த சமூகத்திற்குக் கீழ் கொண்டு வர துரிதப்படுகிறோம். நெஸ்டோரியஸ் என்பவனின்

எதிர்மாறான கருத்துக்களின்படி, யூத முறைமையின்படி சில துறவிகள் துன்மார்க்கமாக எவைகளை (உபதேசங்களை) மறுத-த்திருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாமல் இருக்கக்கூடாது. ஆகவே நாங்கள் உங்களுடைய தகப்பனுக்குரிய அக்கரைக்காக (வேண்டுகிறோம்) நாடுகிறோம், எங்களுக்கும் மகா பரிசுத்த பிஷப்புகளுக்கும், இந்த அருமையான பட்டணத்தில் உள்ள பரிசுத்த பிஷப்புகளுக்கும் மேலும் மூத்த குடும்ப தலைவராயிருக்கிறவருக்கும், (ஏனெனில் அவர்தானே இதே விஷயத்தை ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்தராகிய நீங்கள் பின்பற்றுமாறு எல்லாக் குறிப்புகளிலும் எழுதியிருக்கிறார்) ஒரு கடிதம் எழுதி, அதில் நீங்கள் எங்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டியது என்னவெனில், எவைகள் நியமிக்கப்பட்டு உள்ளதோ அவைகளை நீங்கள் ஏற்றுக்கொள்வதோடு, உண்மையான விசுவாசத்தை மறுத-க்கும்படி, யூத முறைமையின்படி செய்யத் துணிந்த எல்லாரையும், அவர்களுடைய எதிர்மாறான கருத்துக்களுக்காக குற்றப்படுத்துகிறீர்கள் என்பதே ஆகும். இப்படிச் செய்வதினால் உங்கள் மேல் அனைவரும் கொண்டுள்ள அன்பு அதிகமாக வளரும். மேலும் சிரமத்திற்குள்ளாகி இருக்கும் பரிசுத்த சபைகளின் ஐக்கியம் உங்களுக்காக பாதுகாக்கப்படும். ஏனெனில், உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள உங்களுடைய உண்மையான உபதேசங்களைக் குறித்தவைகளை உங்கள் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்ட பிஷப்புகள் அனைவரும் கற்றுக்கொள்ளுவார்கள். இப்பொழுது மேன்மைக்குரிய உங்களை எங்களுக்காக ஜெபிக்கும்படியாகவும் பரலோகத்தி-ருந்து எங்களுக்குப் பாதுகாப்பைப் பெற்றுத் தரும்படியாகவும் வேண்டுகிறோம்."

போப் ஜான் கிபி 534 மார்ச் மாதம் 24ம் தேதி மேற்கூறப்பட்ட கடிதத்திற்குப் பதில் அளித்தார்.

இதே வேளையில் கான்ஸ்டான்டின்நோபிள் நகரின் ஆர்ச் பிஷப்புக்கு சக்ரவர்த்தி எழுதினார். அவனுடைய கடிதத்தின் முதல் பாராவை இங்கு குறிப்பிடுகிறோம்.

"இந்த இராஜரீக நகரத்திற்கு ஆர்ச் பிஷப்பாக இருக்கிறவரும், மிகவும் பரிசுத்தமானவரும், ஆசீர்வதிக்கப்பட்டவரும், மூத்த



குருவாகவும் இருக்கிற எபினேயஸ் என்பவருக்கு எழுதப்படுவது: சபையைக் குறித்ததான எல்லா விஷயங்களையும் மேன்மை பொருந்திய நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக குருவானவர்கள் உபயோகிக்கும் இந்த முறைகளை உபயோகிப்பது அவசியம் என்று நினைப்பதோடு, இவைகளின் மூலமாக ஏற்கெனவே தொடங்கி விட்ட இயக்கங்களை அறிவிக்கும்படியாகவும், இவைகளை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அதிகமாக வாஞ்சிக்கிறோம். மேலும் பரிசுத்த கத்தோ-க்க அப்போஸ்தல சபைகளில் இருந்து வந்த சில அந்நியர்கள் மிகச் சாதாரண மனிதர்களைப் போன்ற நெஸ்டோரியஸ் (Nestorius), யூடிசெஸ் (Eutyches) என்பவர்களுடைய மாறுபட்ட கருத்துக்களைப் பின்பற்றினார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டபடியால் நாங்கள் ஒரு பொதுவான கட்டளையைப் பிறப்பித்தோம். (மேன்மைக்குரிய நீங்களும் அறிந்திருக்கிறீர்கள்) அதில் மாறுபட்ட கருத்துக்களைப் பின்பற்றுபவர்களின் முட்டாள்தனத்தைக் கண்டித்தோம். எது எப்படி இருந்தாலும், நாங்கள் மாறவில்லை, மாறப்போவதும் இல்லை. (மேன்மைக்குரிய நீங்கள் அறிந்திருப்பது போன்று) மேலும், தேவனுடைய கிருபையால் இதுவரை காக்கப்பட்டிருக்கிற சபையின் அந்த நிலையி-ருந்து விலகவும் இல்லை. ஆனால் எவ்விதத்திலும் பழமை வாய்ந்த ரோம் நகரின் மேன்மைக்குரிய உயர்வான போப்புடன் உள்ள மிக பரிசுத்த சபைகளின் ஐக்கியம் காக்கப்பட்டு உள்ளது. (அவருக்கும் இதே வண்ணம் நாங்கள் எழுதியுள்ளோம்) சபையைக் குறித்த எந்த விஷயமும், எல்லா பரிசுத்த சபைகளுக்கும் தலையாக உள்ள வணக்கத்துக்குரிய, அவருக்கு அறிவிக்கப்படாமல் இருக்கக்கூடாது என்று நாம் விரும்புகிறோம். இந்த காரணத்திற்காகவே அந்தப் பகுதிகளில் மாறுபட்ட கருத்து உள்ளவர்கள் எழும்பிய போதெல்லாம், அவர்கள் அடக்கப்பட்டு இருக்கிறார்கள். (உண்மையாகவே மரத்தின் கிளைகள் வளரும்போது வெட்டப்படுவது போன்று) மதிப்பிற்குரிய தங்களுடைய பரிசுத்த ஞானத்தினாலும், நியாயமான தீர்மானங்களாலும் அப்படி செய்துள்ளார்கள்."

நாங்கள் மேலே கொடுத்துள்ள கடிதத்தின் பகுதிகளை முழுமையாக ஜஸ்டினியன் கொடுத்த கட்டளையோடு சிவில் லா

(Civil Law) என்கிற புத்தகத்தின் ஒரு பதிப்பில் (Codics Lib I tit.i) காணலாம்.

போப்பின் உரிமை கோரல் முதன்முறையாக உறுதிபட ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்குப் பிறகு போகஸ் (Phocus) மற்றும் அவனுக்குப் பின் வந்த பேரரசர்களால் மென்மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆளுகை செய்பவராக, குருத்துவ ராஜாவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும், போப்புக்கு விசேஷமான, அனுகூலமானதாக ஒரு வெறும் பெயரைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது. ஜஸ்டீனியன் ரோம் நகரை விட்டு தூரத்தில் இருந்தான். அவனுடைய தலைநகர் கான்ஸ்டான்டின் நோபிள் என்கிற தூரமான இடத்தில் இருந்தது. ரோம் நகரமும் இத்தா-யும் பொதுவாக இன்னொரு இராஜ்யமான ஆஸ்ட்ரோகோத்ஸ் (Ostrogoths) என்ற ஆதிக்கத்தின் கீழாக இருந்தது. அவர்கள் ரோம் நகரின் பிஷப்பை தலைமைக் குருவானவராக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் பொதுவாக, தங்கள் விசுவாசத்தில் ஏரியன்ஸ் ஆக (Arians) இருந்தார்கள். பேரரசர் ஏற்றுக்கொண்டபடியால், போப்பின் ஆட்சி பெயரளவில் தான் உயர்த்தப்பட்டிருந்தது. ஆஸ்ட்ரோகோத்சின் மன்னர்கள் வீழ்ச்சி அடைந்த பின்னர்தான் போப் உயர்வான நிலையில் எண்ணப்பட்டிருந்தது உண்மையாயிற்று. ஏதோ முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருந்தது போன்று (கிபி.534) பேரரசர் உடனடியாக பெ-சேரியஸை (Belisarius) ஒரு இராணுவத்துடன் இத்தா-க்குள் அனுப்பி வைத்தான். போப்பு பேரரசரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆறு வருடத்தில் ஆஸ்ட்ரோகோத்திக்கின் (Ostrogothic) ஆட்சி தோற்கடிக்கப்பட்டது. அவர்களுடைய இராஜா வைடீகஸ் (Vitiges) மற்றும் இராணுவ வீரர்களும், மற்ற கொள்ளைப் பொருட்களுடனும் ஜஸ்டீனியனின் பாதத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்கள். இது நடந்தது கிபி 539ல் ஆகும். அதாவது [கிப்பன் The decline and fall of the Roman Vol.3, PP. 536 (பின்குறிப்பு சேர்த்து), 537] "பாழாக்கும் அருவருப்பு" ஏற்படுத்தப்பட்ட காலம் இது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். போப்பின் ஆதிக்கம் அப்பொழுது ஒரு சிறிய வகையில் துவக்கம் பெற்றது. அங்கே



விசித்திரமான சின்ன "கொம்பு" தானியே-ன் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டுள்ளது (தானி. 7:8,11, 20-22, 25) போல், ரோம மிருகத்தின் மே-ருந்து எழும்பத் தொடங்கியது. இது உருவானது அல்லது வேர் விடத் தொடங்கியது இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னராகும். அது சிறிதளவு தோற்றம் அளித்த பின்னர் "மற்றவைகளைப் பார்க்கிலும் பருமனாகத் தோன்றினதுமாயிருந்தது." மற்ற கொம்புகள் அதாவது பழைய சாம்ராஜ்யத்தின் பிரதேசங்களில் உள்ள அதிகாரம் அல்லது வல்லமை, அதன் கண்கள், அதன் வாய் பெருமையான வார்த்தைகளைப் பேசுவது போன்றவை விருத்தியடைய ஆரம்பித்தன. அது மற்றவர்கள் மேல் அதிகாரம் செலுத்த தனக்கு திவ்ய அதிகாரம் உண்டு என்று சொல்- மற்ற கொம்புகள் மேல் அதிகாரம் செலுத்தத் தொடங்கிற்று.

இந்த விசித்திரமான அதிகாரத்திற்கு அல்லது "கொம்புக்கு" இடம் கொடுக்கும்படியாக அல்லது வழி உண்டு பண்ணும்படியாக அந்த மூன்று கொம்புகளும் பிடுங்கப்படும் அல்லது அகற்றப்படும் என்று தீர்க்கதரிசி சொல்- இருக்கிறார். நாமும் அப்படியாகத்தான் காண்கிறோம். கான்ஸ்டன்டைன் ராஜா கான்ஸ்டான்டின் நோபிள் என்கிற பட்டணத்தைக் கட்டி, அதைத் தன் தலை நகரமாக்கினான். இராயர்கள் இருந்த ஸ்தானத்தில் போப்பின் ஆதிக்கம் முன்னேறுவதற்கு இது அனுகூலமாக இருந்தாலும் சாம்ராஜ்யத்திற்கு இது அனுகூலம் அற்றதாக இருந்தது. வெகு சீக்கிரத்தில் சாம்ராஜ்யம் பிரிக்கப்படுவது அவசியம் என்று காணப்பட்டது. ஆகவே இத்தா-பிரிக்கப்பட்டு மேற்கத்திய சாம்ராஜ்யம் என்று அழைக்கப்பட்டது. அதன் தலைநகர் ரவென்னா (Ravenna)வில் இருந்தது. இது "கொம்புகளில்" ஒன்றாக இருந்தது. அது கிபி 476ல் ஹெரு- (Heruli) என்பவனின் கரத்தினால் விழப்பெற்றது. அது இந்தப் பேரழிவின் மேல் தன்னை ஸ்தாபித்துக் கொண்டது. அடுத்தபடியாக ஹெரு-யின் இராஜ்யத்தை அழித்தது ஆஸ்ரோகோத்திக் இராஜ்யமாகும். இது கிபி 489ல் இத்தா- தேசத்தின் மேல் தனது ஆட்சியை ஏற்படுத்தியது. இது இன்னொரு "கொம்பு" ஆகும். நாம் இப்பொழுது பார்த்தவண்ணம் இந்த "கொம்பின்" ஆட்சியின் போது (போப் என்கிற கொம்புக்கு இடம் அளிக்கும் வகையில் பிடுங்கி எறியப்பட்ட மூன்றாவது

கொம்பு இதுவாகும்) ஜஸ்டீனியன் போப்பின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டான். அவனுடைய உத்தரவின் பேரில் அவனுடைய இராணுவத் தளபதிகள் மற்றும் இராணுவத்தால் அது பிடுங்கப்பட்டது. நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி, போப் ஆதிக்கத்திற்கு வருவதற்கு பிடுங்கி எடுத்தல் அவசியமாயிற்று. அது விசித்திரமான வகையில் அரசியல் மற்றும் மத அதிகாரங்களை இணைத்து, மற்றவைகளைப் பார்க்கிலும் வித்தியாசமான கொம்பாக இருந்தது. உண்மையிலேயே ஒரு வகையில் போப்பின் ஆதிக்கம், இந்த ஒவ்வொரு "கொம்புகள்" அல்லது ஆட்சிகள் விழுவதற்கு இரகசியமாக ஆதரிப்பதாகக் காணப்பட்டது. ஏனெனில் தன்னை உயர்த்திக் காட்டுவதற்கு அது வழி காட்டும் என்கிற எண்ணம் உடையதாக இருந்தது. அதன்படியே கடைசியில் அப்படிதான் நடந்தது.

ஆஸ்ட்ரோகோத்திக்கின் ஆட்சி தூக்கி எறியப்பட்ட பின்னர் ரோம பேரரசர் சிறிது காலத்திற்கு இத்தா-யின் ஆட்சியாளர் என்று அங்கீகரிக்கப்பட்டிருந்தார். அவர் மாகாணங்களில் உள்ள பிஷப்புகளின் பிரதிநிதியாக இருந்தார். ஆனால் இவர்கள் தங்களுடைய தலைநகரை ரோம் பட்டணத்தில் இல்லாமல் ரவெண்ணா (Ravenna)வில் வைத்திருந்தபடியால் மேலும், அவர்கள் மேற்கூறப்பட்ட வண்ணம் போப்பின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்திருந்ததால் கிபி 539ல் இருந்து போப்பின் ஆதிக்கம் ரோம் பட்டணத்தில் முதன்மையான அதிகாரம் உள்ளதாக வளர ஆரம்பித்தது. அது ஒரு "கொம்பாக" அல்லது அதிகாரமாக மற்ற "கொம்புகள்" அல்லது மற்ற அதிகாரங்களுக்கு மத்தியில் வளரத்தொடங்கியது. அது முன்பு ஒன்றாக இருந்த ரோமாபுரியின் பிரதிநிதியாக இருந்தது. இத்தா-யில் காணப்பட்ட அமைதியற்ற சூழ்நிலை, முக்கியமாக ரோமாபுரியில் உள்ள நிலைமை இந்த காலத்தில் வடபகுதியில் இருந்து வந்த படையினர் கொள்ளையிட்டதும், எந்த ராஜா இருந்தாரோ அவர் போட்ட கடுமையான வரிகளும், கான்ஸ்டான்டின் நோபி-ல் இருந்த சாம்ராஜ்ய அதிகாரத்தை உடைக்க உதவி செய்வதாக இருந்தது. இப்படியாக இருந்தபடியால் சபை ஆளுனர்கள் எப்பொழுதும்



ஜனங்களோடு இருந்து அவர்கள் பேசிய அதே பாஷையைப் பேசினார்கள். அவர்களுடைய இழப்பிலும், நன்மையிலும் அவர்கள் பங்குபெற்றபடியால் அவர்கள் ஜனங்களால் ஆலோசனைக்காரர்களாகவும், ரோம் நகரத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் ஆட்சி செய்பவர்களாகவும் பாதுகாப்பவர்களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்.

கோத்ஸ் மக்கள் சாம்ராஜ்யத்திற்கெதிராக கலகம் செய்து, ரோமாபுரியைக் கொள்ளையாடினாலும், அவர்கள் தங்கள் ஆட்சியை மறுபடியும் ஸ்தாபிக்கவில்லை. ஆகையால் சபையின் ஆட்சி மட்டுமே அங்கு விடப்பட்டது. லாம்பார்டு (Lombard) இராஜ்யம் சீக்கிரத்திலே வந்து இத்தா-யின் அநேக பிரதேசங்களின் மேல் தனது ஆட்சியை ஸ்தாபித்தது. ஜஸ்டீனியன் வைத்திருந்த கிழக்கத்திய சாம்ராஜ்யத்தின் ஆட்சியையும் கவிழ்த்துப் போட்டது. ஆனாலும் ஒன்று கவனமாக அறிந்து கொள்ளப்பட வேண்டும். அதாவது லாம்போர்டுகள் ரோமாபுரியில் போப்பின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். அந்த இராஜ்யம் முற்றுப்பெறும் சமயத்தில் தான், 8வது நுற்றாண்டில் போப்பின் ஆதிக்கத்திற்கு எதிராக, கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவைகள் போப் தான் ரோமாபுரியின் உண்மையான ஆட்சியாளராக இருந்தார் என்பதையும், அவர்கள் இராயர்களுக்குப் பின்னாக ஆட்சிக்கு வரவேண்டியவர்கள் என்று சொன்ன பிரகாரம், ஆவிக்குரிய இராயர்களாக இருந்தார்கள் என்பதையும் காட்டுகின்றன. ஆனாலும் அவர்களுக்கு அனுகூலமாக இருந்த வரை கான்ஸ்டான்டின் நோபிளில் (Constantinople) இருந்த அரசாங்கத்திடம் பாதுகாப்பு தரும்படி கேட்டார்கள். கடைசியில் லாம்பார்டுகள் ரோமாபுரியை கைவசப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்த போது போப், பிரான்ஸ் தேசத்தின் இராஜாவிடம் போப்பின் ஆதிக்கத்தைக் காப்பாற்றும்படியும் கான்ஸ்டன்டைன் ராஜாவினால் சபைக்கு அளிக்கப்பட்ட பரிசுத்த பேதுருவின் பூர்வீக (Patromony) சுதந்திரத்தை (இது தப்பான உரிமை கோரல் என்பதை ரோமன் கத்தோ-க்கர்கள் கூட இப்போது சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். கான்ஸ்டன்டைன் இப்படிப்பட்ட எந்த அன்பளிப்பையும் தரவில்லை. போப்பிசம் ரோமாபுரியின் அதிகாரத்தில் தானே வளர்ந்தது) தங்களிடமே வைத்துக்

கொள்ளும்படியாக அதை பாதுகாக்க உதவி செய்யும்படி வேண்டினார்கள்.

பிரான்ஸ் தேசத்தின் இராஜாக்களான பெபின் மற்றும் ஷார்லுமேன் (Pepin, Charlemagne) ஆகியோர் போப்பின் ஆதிக்கத்தை பாதுகாக்கும்படி தங்களுடைய இராணுவத்தைக் கொண்டு வந்தார்கள். லாம்பார்டுகள் முறியடிக்கப்பட்டார்கள். இந்த ஷார்லுமேன் தான் கிபி 800ல் "போப்பின் பிரதேசங்கள்" என்று அழைக்கப்படுகின்ற பல பிரதேசங்களை அளித்தவர் ஆவார். ஏற்கெனவே கூறப்பட்டுள்ளபடி இவைகள் ரோமாபுரியுடன் கூடிய நகரப் பகுதிகள் ஆகும். இவைகள் உண்மையிலேயே கிபி 539ல் இருந்து போப்பின் ஆதிக்கத்தில் இருந்து வந்தவைகளாகும். அப்படியெனில், லாம்பார்டு இராஜ்யம் அல்லது "கொம்பு," போப் என்னும் "கொம்பை" சிலர் உத்தேசமாக எண்ணியபடி தடைசெய்யவில்லை அல்லது அதை அபகரிக்கவில்லை. ஆனால் சில சமயம் நெருங்கி வந்தது.

லாம்பார்டுகள் ரோம் நகரின் மேல் தொடுத்த தாக்குதலைக் குறித்து கிப்பன் (Gibbon) என்பவர் பின்வருமாறு கூறுகிறார் :

"லாம்பார்டுகளின் இராஜாவான லுட்டி பிராண்டு Lutiprand என்பவனால் மன உருக்கமும் (Repentance) பக்தியும் அதிகமாகக் காட்டப்பட்டது. அது மறக்க முடியாத ஒரு உதாரணமாக அமைந்தது. ஆயுதங்களுடன் வாடிகனின் வாசல் அண்டை வந்த போது இந்த வெற்றி வீரன் முதலாவது கிரகரி என்ற போப்பின் குரலுக்குச் செவி கொடுத்து, தன்னுடைய இராணுவ வீரர்களைப் பின் வாங்கச் செய்ததுடன், தனது வெற்றியை உதறினான்; பரிசுத்த பேதுருவின் ஆலயத்திற்கு மரியாதையுடன் சென்றான். மேலும் தன்னுடைய தியான நேரத்தைக் கழித்த பின்னர் தன்னுடைய பட்டயத்தையும், சிறிய வாளையும், தனது வஸ்திரத்தையும், மார் கவசத்தையும், வெள்ளிச் சிலுவையையும், தங்கத்தினால் செய்யப்பட்ட கிரீடத்தையும் அப்போஸ்தலருடைய கல்லறையின் மேல் வைத்தான். ஆனால் "அவனுக்குப் பின் வந்த அஸ்டோல்பஸ் (Astolphus) என்பவன், தான் பேரரசருக்கும், போப்புக்கும் சத்துரு என அறிவித்தான்.... வெற்றிவாகை சூடிய லாம்பார்டு ரோமாபுரியின் சட்டபூர்வமான



பேரரசர் என்றுதான் அழைக்கப்படவேண்டும் என்று அறிவிக்கும்படி ரோமாபுரிக்குத் தகவல் அனுப்பினான்..... ரோமர்கள் தயங்கினார்கள், கெஞ்சினார்கள், புகார் செய்தார்கள்; போப்புகள் ஆல்ப்ஸ் மலைகளுக்கு அப்பால் இருந்து பழிவாங்குபவனையும், நண்பனையும் ஈடுபடுத்தும் வரை காட்டுமிராண்டிகள் போன்று இருந்தவர்களை ஆயுதங்களாலும், பேச்சு வார்த்தைகளினாலும் பயமுறுத்திய அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்."

போப் (மூன்றாம் ஸ்டீபன்) பிரான்ஸ் தேசத்திற்குச் சென்று தேவையான உதவியைப் பெறுவதில் வெற்றி பெற்றார். இதைக் குறித்து கிப்பன் என்பவர் சொல்லுகிறார். அவர் இராஜாவால் (பெபின்) தானே முன்னின்று நடத்திச் சென்று பிரெஞ்ச் இராணுவத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, வெற்றி வீரனாகத் திரும்பினான். லாம்பார்டுகள் பெலகீனமான ஒரு எதிர்ப்புக்குப் பின்னர், வெட்கம் தரக்கூடிய வகையிலான ஒரு சமாதானத்தை வேண்டிப் பெற்றார்கள். மேலும் ரோம ஆலயத்தின் பரிசுத்தத்தைக் காக்கவும், கொள்ளையாடின பொருட்களைத் திருப்பிக் கொடுக்கவும் உறுதி அளித்தார்கள்.

போப்புகள் கூறியவைகளுக்கும், அவர்கள் அப்படிச் கூறுவதற்கான அதிகாரமும், அவர்கள் செலுத்திய ஆதிக்கத்திற்கும் உதாரணமாக, மறுபடியும் நாங்கள் போப் மூன்றாம் ஸ்டீபன், பிரெஞ்ச் தேசத்தின் இராஜாவுக்கு இந்தக் காலக்கட்டத்தில் அனுப்பிய கடிதத்தைப் பற்றி கிப்பன் கூறுவதை இங்கே குறிப்பிடுவது பிரயோஜனமாக இருக்கும் என்று நினைக்கிறோம். பிரெஞ்ச் இராணுவம் அவ்விடத்தை விட்டு அகன்ற உடன் லாம்பார்டுகள் மறுபடியும் ரோமாபுரியைத் தாக்கினார்கள். போப்புக்கு மறுபடியும் உதவி தேவைப்பட்டது. அப்போஸ்தலனாகிய பேதுருவின் பெயரில் அவர் இவ்வாறாக எழுதினார்:

"அப்போஸ்தலர் தான் தத்தெடுத்துக் கொண்ட மகன்களுக்கு, இராஜாவுக்கு, குருவானவர்களுக்கு, பிரான்ஸ் நாட்டின் பிரபுக்களுக்கு உறுதியளிக்குமாறு கூறுவதாவது, மாம்சத்தின்படி மரித்துவிட்டாலும் ஆவியில் அவர் இன்னும் உயிரோடு இருக்கிறார். அவர்கள் இப்பொழுது செவி கொடுக்கிறார்கள், ரோம சபையை உருவாக்கியவரும் பாதுகாவலராக இருப்பவரின் சத்தத்திற்கு

கீழ்ப்படிய வேண்டும்; கன்னி மரியாள், தூதர்கள், இரத்த சாட்சிகள், பரலோகத்தின் சேனைகள் ஒன்றுபட்டு வேண்டுகோள் விடுக்கிறார்கள்; ஐசுவரியம், வெற்றி, பரதீஸ் அவர்கள் செய்யும் பக்தியுள்ள காரியங்களுக்கு வெற்றியாகக் கிடைக்கும். அவர்கள் கீழ்ப்படியத் தவறினால் நித்திய ஆக்கினை அவர்கள் மேல் வரும்; எப்பொழுது எனில் அவருடைய கல்லறையை மாசுபடுத்தினால், அவருடைய ஆலயத்தைக் கெடுத்தால், மேலும் அவருடைய ஜனங்கள் விசுவாசமில்லாத லாம்பார்டுகள் கரங்களில் விழும்படி செய்தால்; பெபின் ராஜாவின் இரண்டாவது படையெடுப்பு முதலாவது படையெடுப்பைக் காட்டிலும் அவ்வளவு துரிதமானதாக, உபயோகமுள்ளதாக இருக்கவில்லை. பரி.பேதுரு திருப்தியுள்ளவராக இருந்தார். ரோமாபுரி மறுபடியும் காப்பாற்றப்பட்டது" என்று கிப்பன் தொடர்ந்து கூறுகிறார்.

இந்த ஆரம்பக் கட்டத்தில் போப்பின் ஆதிக்கம் மங்கலாக இருந்தது. ஆனாலும் தெளிவாக புரிந்து கொள்ளுவது அவசியம். அதை ஜாக்கிரதையாகக் குறிப்பது அவசியம் என்று எங்களுக்குத் தோன்றிற்று. இதற்கான ஆதாரத்தை முடிவாகக் கூறும்போது அறிய வேண்டியது என்னவெனில் கிபி 539 தான் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட காலமாகும். இதற்கு ஆதாரமாக ரோமன் கத்தோ-க்கர்கள் எழுதியவைகளில் இருந்து கீழ்க்கண்டவற்றை குறிப்பிடுகிறோம்:

"மேற்கு ரோம சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்ற பின்னர், போப்புகளின் அரசியல் செல்வாக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் பெற்றது; ஏனெனில், பரிதாப நிலையில் காணப்பட்ட தேசத்தை தங்களுடைய பாதுகாப்பிற்குள் கொண்டு வரவேண்டியிருந்தது. குறிப்பாக ரோமாபுரி மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்கள், தங்களுடைய ஆளுனர்கள் அடிக்கடி மாற்றம் அடைவதைக் காண வேண்டியிருந்தது. மேலும் அவைகள் தொடர்ச்சியாக மூர்க்கத்தனமுடைய கொடூர படையெடுப்புகளுக்கு உள்ளாகி வந்தன. பரி.பேதுருவைத் தொடர்ந்து வந்தவர்கள், இத்தா-யில் வசிப்பவர்கள் மேலும், அவர்களுடைய பொது நலனிலும் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் இவர்கள் கிழக்குப் பகுதி ரோம சக்ரவர்த்திகளால் முற்றுமாகப் பராமரிக்கப்படாமல் இருந்தார்கள். ஆனால் இவர்கள் இன்னும்



தேசத்தை ஆளுகை செய்வதாகக் கூறிக் கொண்டிருந்தார்கள். முதலாம் ஜஸ்டீனியன் இத்தா-யின் ஒரு பகுதியை வென்ற பிறகும் கூட (கிபி 539) அதன்பின்னர் அதை ஒரு கிரேக்க பிரதேசமாக மாற்றிய பின்னர் ஜனங்களின் நிலைமை முன்னேற்றம் அடையவில்லை. ஏனெனில் பைசேன்டைன் (Byzantine) சக்ரவர்த்திகள் ரவென்னா (Ravenna) மாகாணத்தில் உள்ள மக்களிடம் இருந்து வரி வசூல் மட்டும் செய்தார்கள். ஆனால் எவ்விதத்திலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியவில்லை.

"இந்தச் சூழ்நிலைகளின் கீழ்.... சக்ரவர்த்திகள்.... உண்மையான அதிகாரம் எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள். பெயரளவில் தான் அவர்கள் ஆட்சியில் இருந்தார்கள். அதே வேளையில் போப்புகள் அந்தக் காலத்தில் உள்ள தேவைகளினிமித்தம் ரோம ஆதிக்கத்திற்கு மேலாக முற்றிலுமாக அதிகாரத்தைப் பெற்றவர்களானார்கள்... இப்படியாக பெருவாரியான மறைமுக செயல்பாட்டினால் ஏற்பட்ட விளைவுகள் பின்னர் சட்ட ரீதியாக சரியான செயல் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது... பெபின் மற்றும் ஷார்லுமேன் (Pepin, Charlemagne) ஏற்றுக்கொண்டனர். அந்தக் காலத்தில் இருந்த எழுத்தாளர்களின் கூற்றுப்படி.... பெபின் (Pepin) வெற்றி பெற்ற பிரதேசங்களையெல்லாம் போப்புக்கு திருப்பி அளித்துவிட்டான். இந்த அன்பளிப்பு அல்லது புதுப்பித்தல் அவனுடைய மகன் ஷார்லுமேன் (Charlemagne) மூலம் உறுதிப்படுத்தப்பட்டது, விரிவாக்கப்பட்டது. இவன் கிபி 774ல் இத்தா-யில் லாம்பார்டு (Lombard) ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தான். இப்படியாக நியாயமான முறையில் இம்மைக்குரிய அதிகாரமும் முழு ஆட்சியும் போப்புகளுக்காக திவ்ய அனுக்கிரகத்தால் படிப்படியாக ஸ்தாபிக்கப்பட்டது."

மேலே கூறப்பட்டவைகள், கத்தோ-க்க திருச்சபையில் சரித்திரம்" என்கிற புத்தகம் H.புரூக் (H. Bruck) என்பவரால் எழுதப்பட்டதில் Vo.1. PP. 250, 251ல் காணப்படுகிறது. இந்த புத்தகம் கத்தோ-க்கர் இடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட புத்தகமாகும். இது அவர்களுடைய கல்லூரிகளிலும் குருமார் பயிற்சி நிலையங்களிலும் உபயோகப்படுத்தப்படுகிறது. போப்பின் அலுவலக அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதில் உண்டான சாட்சியங்கள் மதிப்புக்குரியவைகள். அது போப்பின் இம்மைக்குரிய அதிகாரம்

படிப்படியாக வளருவதைக் குறிப்பதோடு அதன் ஆரம்ப காலம் சூழ்நிலைகளால் அனுகூலம் பெற்றது. தீர்க்கதரிசன அளவுகோல் மூலம் (1260 வருடங்கள்) திட்டமாகக் கூறப்பட்டுள்ளபடி கிபி 539ல் ஆஸ்ட்ரோகோதிக் (Ostrogolthic) சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைவதை நிரூபித்துக் காட்டுகிறது. அது இந்த பாழாக்கும் அருவருப்பு தேவனுடைய பார்வையில் ஏற்படுத்தப் பட்ட சரியான நேரத்தையும் நிரூபிக்கிறது.

போப்பின் ஆதிக்கம் ஷார்லுமேனுடைய (Charlemagne) காலத்திற்கு முன்னரே ஆரம்பித்துவிட்டது என்கிற கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் மேற்கூறப்பட்டவைகளையும் ஆமோதிக்கும் வண்ணம் இன்னொரு கத்தோ-க்க புஸ்தகமான The Chair of St. Peter என்பதில் The Growth of the temporal Power என்கிற அத்தியாயத்தின் 173வது பக்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"ரோம் நகரம் சக்ரவர்த்தியால் நியமிக்கப்பட்ட ஒரு பிரபுவினால் பெயரளவில் தான் ஆட்சி செய்யப்பட்டது. ஆனால் உண்மையில், சூழ்நிலைகள் நிமித்தம், போப்புகள் தான் நகரத்தின் உன்னத ஆளுனர்களானார்கள்." இவர்கள் பெற்ற அதிகாரத்திற்கும் ஆட்சி செய்யும் சந்தர்ப்பம் கிடைத்ததற்கும், பெயரளவில் இருந்த ஆட்சியாளர்கள் வல்லமை இன்றி இருந்ததற்கும் ஆதாரமாக சரித்திர பூர்வ ஆதாரங்களைக் காட்டி இதை எழுதியவர் கூறுகிறார். இதற்கு உதாரணமாக மகா கிரகோரி என்கிற போப்பைக் குறித்து (கிபி 590 போப்பின் ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டு 50 வருடங்களே ஆகி இருந்த போது) எழுதி, ஏற்கெனவே போப்பிடம் இருந்த அதிகாரத்திற்கு இது ஓர் உதாரணம் என்று கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

"-யோட்டியஸ் என்பவனை இட்ரூரியாவில் உள்ள நெபிக்கு ஆளுனராக அனுப்புவதையும் அங்கே இருக்கும் ஜனங்கள் தனக்கு எப்படி அவர்கள் கீழ்ப்படிவார்களோ அதே போன்று அவனுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பதைக் காண்கிறோம். அதன்பிறகு கான்ஸ்டேனியஸ் (Constantius) என்பவனை நேப்பில்ஸ் (Naples)சின் ஆளுனராக நியமிக்கிறான். அதன்பிறகு பிஷப்புகளுக்குப் பாதுகாப்பைக் குறித்து எழுதுவதுடன் அவர்களுடைய பட்டணங்களுக்கு உணவுப்பொருட்களை அளிப்பதைக் குறித்து



இராணுவத் தளபதிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிப்பதையும் காணலாம். ....ஒரே வார்த்தையில் கூறவேண்டும் என்றால் அவரே இத்தா-யின் உண்மையான ஆட்சியாளராக பாதுகாவலராக ஆவதைக் காண முடிகிறது. ஆகவே 'என்னுடைய இடத்தை (Pastor) போதகராக யார் எடுத்துக் கொள்கிறார்களோ அவர்கள் பெரிய வெளிப்படையான பொறுப்புகளை உடையவர்களாக இருப்பார்கள் என்று அவர் கூறியது நியாயம்தான். ஆகவே அவர் அநேக முறைகளில் ஒரு போதகரின் பொறுப்புகளைச் செயல்படுத்துகிறாரா அல்லது இம்மைக்குரிய ஒரு பிரபுவின் பொறுப்புகளைச் செயல்படுத்துகிறாரா என்று நிச்சயமாகத் தெரியவில்லை.'"

கிபி 539ல் சிறு ஆரம்பத்தில் துவக்கப் பெற்ற இந்த இம்மைக்குரிய அதிகாரம் குறைந்த காலக் கட்டமான 50 வருடத்திற்குள் இவ்வளவு அதிகமாக வளர்ந்துவிட்டது. இதி-ருந்து நாம் 1260 வருடங்கள் அல்லது 3 1/2 காலங்களில் உண்டான போப்பின் ஆதிக்கத்தின் ஆரம்பமும் முடிவும் நன்றாகத் தெளிவாகக் குறிக்கப்பட்டு இருப்பதைக் காணலாம்.

பாழாக்கும் அருவருப்பு சத்தியத்தையும், ஆண்டவருடைய ஜனங்களையும் நசுக்கும்படியாக வைக்கப்பட்டுள்ள எல்லையையும், தானியேல் கேட்டு அறிந்தபடியினால், இது இன்னும் மிகாயே-ன் (கிறிஸ்து) இராஜ்யத்திலும் வழி காட்டாது, பரிசுத்தவான்களை அதிகாரம் உடையவர்களாக ஆக்காது என்பதையும் கண்டதோடு, இது அவர்களை ஒடுக்குபவர்களிடம் இருந்து விடுதலையை மட்டும் தரும் என கண்டான். ஆகவே அவன் கேட்டும் அதன் பொருளை அறியவில்லை. "நான் அதைக் கேட்டும், அதின் பொருளை அறியவில்லை; ஆகையால் என் ஆண்டவனே, இவைகளின் முடிவு (அல்லது பின்னர்) என்னமாயிருக்கும் என்று கேட்டேன். அதற்கு அவன்: தானியேலே, போகலாம் (நீ இந்த விஷயத்தை புரிந்து கொள்ள முயற்சிப்பது வீணானது); இந்த வார்த்தைகள் முடிவு கால மட்டும் புதை பொருளாக வைக்கப்பட்டும், முத்திரிக்கப்பட்டும் இருக்கும். அன்றாட ப- நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்காலம் (கிபி 539) முதல் ஆயிரத்திரு நூற்றுத்தொண்ணூறு நாள் (வருடங்கள்) செல்லும் (அப்பொழுது)

அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள். துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்; ஞானவான்களோ உணர்ந்து கொள்ளுவார்கள். (அப்பொழுது) ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் (1335) பாக்கியவான். நீயோவென்றால் (உன் வழியில்) முடிவு வருமட்டும் போயிரு: நீ இளைப்பாறிக் கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்திர வீதத்துக்கு (பங்குக்கு, வெகுமதிக்கு) எழுந்திருப்பாய் என்றான்." தானி. 12: 8-13

இந்த 1290, 1335 என்கிற தீர்க்கதரிசன நாட்களுக்கு, உண்மையான வருடங்களுக்கு கிபி 539ல் பாழாக்கும் அருவருப்பு ஏற்படுத்தப்பட்ட காலமே ஆரம்ப காலம் என்பதையும், 1260 வருடங்கள் போப்பின் அதிகாரம் அழிவுக்காக ஏற்படுத்தப்பட்ட வருடங்கள் என்பதையும் கவனமாக படிப்பவர்கள் அறிந்து கொள்வார்கள். இந்த விஷயத்தில் "அன்றாட" ப- (அல்ல சரியாகச் சொல்ல வேண்டும் எனில் தொடர்ச்சியான ப-) நீக்கப்படுதல், பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுதல் என்று இரண்டு சம்பவங்கள் இரண்டு வித்தியாசமான நேரத்தில் நடைபெறுவதைக் குறிப்பிடும் போது, அந்த நாளில் இருந்து இரண்டுமே உண்மை என்று உணர்ந்து கொள்ள வேண்டும். அன்றாட ப- நீக்கப்படுதல், பாழாக்கும் அருவருப்பு 539ல் ஸ்தாபிக்கப்படுவதற்கு சில வருடங்களுக்கு முன்னரே நிகழ்ந்தது என்பதை அடுத்த அத்தியாயத்தில் காட்டுவோம். அது "அருவருப்பு" என்று அழைக்கப்படுவதற்கு அதுதான் முக்கியமான விஷயமாக இருந்தது. ஆகவே இந்த இரண்டு சம்பவங்களின் முடிவில் இருந்து பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்பட்டதை நாம் கணக்கிட வேண்டும்.

மேலும் இந்த இரண்டு கணக்குகளும், தேவனுடைய பரிசுத்தவான்களின் அதிகாரம் (சத்தியம்) போப்பினால் நசுக்கப்படுவதி-ருந்து விடுபட்ட பின்னரும் (1799க்கு பின்னர்), மேசியாவின் (மிகாயே-ன்) இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கும் முன்னாலும் என்ன நடக்கும் என்கிற தானியே-ன் கேள்விக்கு பதிலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தானியேல் மேற்கொண்டு இதை



அறிந்து கொள்ள எதிர்பார்க்க வேண்டாம் என்பதே கொடுக்கப்பட்ட பதில். ஆனால் முடிவு காலத்தின் ஆரம்பம் ஏற்பட்டு 30 வருடங்களில் (1260 + 30 = 1290) ஒரு சுத்தமாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், புடமிடப்படும் கிரியை பரிசுத்த ஜனங்களின் மத்தியில் துவங்கும். இதைக் குறித்ததான ஒரு அறிவு, தீர்க்கதரிசனத்தைப் பற்றிய அறிவு, இப்படியாக சுத்தமும், வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்கும் ஞானவான்களுக்கு வழங்கப்படும். ஆனால் இதை தேவ பக்தியற்றவர்கள், சுத்திகரிக்கப்படாதவர்கள் பெற்றுக் கொள்ளமாட்டார்கள், அல்லது ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மேலும் தரிசனத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளுதல், நிறைவானதாக அல்லது முழுமையானதாக இருக்காது. சொல்லப்போனால் அதன் முக்கியமான விஷயங்கள் 45 வருடங்களுக்குப் பின்னர் (1290+45 = 1335) அல்லது முடிவு காலம் ஆரம்பித்து 75 வருடங்கள் கழிந்த பின்னர் தான் தெளிவாக விளங்கும். இது எபிரேயக் குறிப்பேட்டில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. அதில் உள்ள காரியத்தை எதிர்பார்த்திருந்தோர் ஏற்கெனவே ஒன்றைக் கண்டு விட்டவர்கள், அதற்காகப் பொறுமையுடன் காத்துக்கொண்டு இருக்கிறார்கள், திடீரென்று (1335 நாட்கள் நிறைவேறின பின்பு) பூரணமாக, தெளிவாக காண்பார்கள். அவர்கள் எண்ணிப்பார்க்கக் கூடாத அளவிற்கு அது மேம்பட்டதாக இருக்கும். "ஓ! என்ன பரமானந்தம்!"

கிபி 539ல் இருந்து கணக்கிடும் போது 1290 என்கிற அடையாளமான நாட்கள் 1829ல் முடிந்தது. 1335 நாட்கள் 1874ன் இறுதியில் முடிந்தது. தரிசனத்தையும் முடிவு காலத்தோடு சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்களையும் புரிந்து கொள்ளுவதை எப்படி இந்த நாட்கள் சரியாகக் குறிப்பிடுகின்றன என்பதை வாசிப்பவர்கள் சரியாக நிதானிக்கக்கடவர்கள்; அதோடு கூட அக்கினியினால் சுத்திகரிப்பது போன்ற பிரித்தெடுக்கப்படுதல், வெண்மையாக்கப்படுதல் போன்றவைகள் தேவனுடைய பிள்ளைகளைத் தாழ்மையும் நம்பத்தக்க இருதயமும், மனமும் உடைய நிலைக்கு கொண்டு வருவது அவசியம் என்பதையும், ஏனெனில் அதன்மூலம் தேவனுடைய வழியிலும், காலத்திலும்

தேவனுடைய காரியங்களைப் பெறவும், உணர்ந்து கொள்ளவும் ஆயத்தமாக இருக்கும்படி செய்வது அவசியம் என்பதையும் நிதானிக்கக்கடவர்கள்.

மத ரீதியான ஓர் இயக்கம்,1844ல் உச்சநிலையை அடைந்தது. அந்த காலத்தில் அதில் பங்கு பெற்றவர்கள், பொதுவாக இரண்டாம் வருகைக்காரர்கள் ("Second Adventists" Millerites) மற்றும் மில்லர் வகுப்பார் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் அந்தக் காலத்தில் ஆண்டவருடைய இரண்டாம் வருகை இருக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அவர்கள் அவ்வாறு அழைக்கப்படுவதற்கான காரணம் என்னவெனில் வில்-யம் மில்லர் என்பவர், அதன் தலைவராக இருந்தார். 1829ல் ஆரம்பித்த இந்த இயக்கம் 1844க்கு முன் (அப்பொழுதுதான், ஆண்டவரின் வருகையை எதிர்பார்த்தார்கள்) கிறிஸ்தவ சமுதாயத்தின் எல்லா வகுப்பினரையும் கவர்ந்தது. முக்கியமாக, கிழக்கத்திய மற்றும் மத்திய நாடுகளில் உள்ளவர்களுக்கு இது மிகுந்த ஆர்வத்தை உண்டு பண்ணியது. இதற்கு முன்னதாக டுபிங்கன் (Tubingan) என்கிற ஜெர்மானிய தேசத்து பட்டணத்தில் பேராசிரியர் பெங்கல் (Prof. Bengel) என்பவர் தீர்க்கதரிசனங்களைக் குறித்தும், வரப்போகின்ற மேசியாவின் இராஜ்யத்தைக் குறித்தும், ஜனங்களுடைய கவனத்தை ஈர்த்து வந்தார். இதைத்தான் ஆசியா கண்டத்திலும், புகழ் பெற்ற ஊழியக்காரர் வுல்ஃப் (Missionary Wolff) என்பவர் செய்தார். ஆனால், இவைகள் எல்லாவற்றையும் விட, சமுதாய, அரசியல் மற்றும் மத சூழ்நிலைகள் சாதகமாகக் காணப்பட்ட அமெரிக்காவில் தான், இதைக் குறித்த வேலை அதிகமாக இருந்தது. வேறு எந்த இடத்தைக் காட்டிலும், சுதந்திரமாக வேதாகமத்தை படிப்பதிலும் மற்ற விஷயங்களிலும் அனுகூலமான சூழ்நிலை காணப்பட்டது. எல்லா இடங்களிலும் உள்ள பக்தியுள்ள இஸ்ரயேலர்கள் கிட்டதட்ட அதைக் குறித்து கேள்விப்பட்டிருந்தாலும், யூதேயாவில் மட்டும் தான், முதலாவது வருகையைக் குறித்த விஷயங்கள் காணப்பட்டது.(அப். 2:5)

சகோ. மில்லரின் எதிர்பார்ப்புகள் தோல்வியுற்றதைக் குறித்து எல்லோரும் சிறிதளவாவது அறிந்திருப்பார்கள். அவர் கற்றுக் கொடுத்த மாதிரி, அவர் எதிர்பார்த்தபடி, 1844ல் ஆண்டவர் வரவில்லை, உலகம் அக்கினிக்கு இரையாக்கப்படவில்லை. கிறிஸ்து (மிகாயேல்) வருவார், அவரோடு கூட தங்களை வல்லமையினாலும் மகிமையினாலும் உயர்த்துவார் என்று நம்பிக்கையோடு எதிர்பார்த்து இருந்த அந்த "பரிசுத்த ஜனங்களுக்கு" இது பெரிய ஏமாற்றமாக இருந்தது. ஏமாற்றம் ஒரு பக்கம் இருந்தாலும், இந்த இயக்கத்தினால் எதிர்பார்த்த நன்மையும் உண்டானது. ஆண்டவருடைய வருகையில் ஆர்வம் காட்டும்படியாக ஒரு எழுப்புதல் வந்தது. அதே வேளையில் தவறான எதிர்பார்ப்புகளினால், இந்த விஷயத்தைக் குறித்து குற்றம் சாட்டப்பட்டதும் உண்டு. எதிர்பார்த்திருந்த விளைவுகள் ஏற்பட்டன என்று நாம் கூறுகிறோம். ஏனெனில், சந்தேகத்திற்கு இடமின்றி ஆண்டவருடைய கரம் அதில் இருந்தது. மேலும் இது முதலாவது வருகையைப் போன்றே ஒரு வேலையை நம்முடைய ஆண்டவர் பிறந்த நேரத்தில் செய்ததுமல்லாமல், அதாவது கிழக்கி-ருந்து சாஸ்திரிகள் வந்தபோது, எல்லா மனிதரும் அவரை எதிர்பார்த்து இருந்தார்கள். அது மாத்திரமல்ல (மத். 2:1,2; லூக். 3:15) அது காலத்தோடும் ஒத்ததாக இருந்தது. நம்முடைய ஆண்டவர் 30 வயதானபோது, மேசியாவாக அபிஷேகம் பெற்று தமது வேலையை ஆரம்பிப்பதற்கு 30 வருடங்களுக்கு முன்னதாக உள்ள காலத்தோடும் அது ஒத்ததாக இருந்தது. அந்த "மில்லர் இயக்கம்" என்று சற்று கே-யாக அழைக்கப்படுவது அதில் பங்கு பெற்ற "பரிசுத்தவான்களுக்கு" தனிப்பட்ட முறையிலும் ஒரு ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது. அது தேவனுடைய வார்த்தையைக் கவனமாகத் தேடும்படியாகவும், மனிதர்களின் பாரம்பரியங்களுக்கு மேலாக அதில் நம்பிக்கை வைக்கவும் வழிவகுத்தது. அதோடு கூட சபை பாகுபாடற்ற ஐக்கியத்தில் தேவனுடைய பிள்ளைகளுடைய இருதயத்தை இணைத்தது; குதூகலத்தை உண்டு பண்ணியது; வேத வார்த்தையைப் போஷித்தது. அதில் ஆர்வம் காட்டியவர்கள் முக்கியமாக பேப்டிஸ்ட் (Baptists) ஆக இருந்தாலும் எல்லா சபையைச் சேர்ந்தவர்களும் அதில் இருந்தார்கள். இந்த இயக்கம் முடிந்த காலத்தில் இருந்து அவர்களில் சிலர் புது சபைப் பிரிவினராகத் தங்களை இணைத்துக் கொண்டார்கள். இப்படி செய்ததினால்

“அறுவடை” காலத்தில் வரக்கூடிய சில ஆசீர்வாதங்களைக் காணாதபடி தங்கள் கண்களை குருடாக்கிக் கொண்டார்கள்.

இதை வாசிப்பவர்கள் கவனித்திருப்பீர்கள். அதாவது ஆண்டவருடைய வருகையின் நோக்கம், பிரசன்னமாகும் விதம், அதற்குரிய காலம் ஆகியவற்றை குறித்த மில்லர் கருத்தை நாம் ஒத்துக்கொள்ளவில்லை. அதே வேளையில், இந்த இயக்கம் தேவனுடைய திட்டப்படி இருந்து, ஜனங்களைப் பிரித்து எடுப்பதிலும், சுத்திகரிப்பதிலும், மெருகேற்றுவதிலும் செயல்பட்டது. இப்படியாக ஆண்டவருக்கென்று காத்திருக்கும் ஜனங்களை ஆயத்தப்படுத்தும் ஒரு முக்கியமான வேலையைச் செய்து வந்தது என்றும் நாம் அறிந்துள்ளோம். அதன் காலத்தில், அது சுத்திகரிக்கும் மற்றும் சோதனை செய்யும் வேலையைச் செய்தது மாத்திரமல்ல, தீர்க்கதரிசனங்களைப் படிப்பதில், ஆண்டவருடைய இரண்டாவது வருகையைப் பற்றிய உபதேசத்தில், குற்றம் கண்டுபிடித்ததினால், அந்த காலத்தில் இருந்து திரு.மில்லரின் கருத்துக்கள், எதிர்பார்ப்புகள், போன்றவைகளோடு சம்பந்தம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அர்ப்பணம் செய்து கொண்டவர்களைச் சோதிக்கவும், ஆராய்ந்து பார்க்கவும் உதவியுள்ளது. தீர்க்கதரிசனம், ஆண்டவருடைய வருகை, ஆயிர வருட இராஜ்யம் என்பவைகளைக் குறித்துக் குறிப்பிட்டாலே போதும், அது இப்பொழுது உலகப்பிரகாரமாக வசிப்பவர்களிடம், குறிப்பாக, பேர் சபையில் உள்ளவர்களிடையே கே-யான பேச்சுக்கு வழிவகுக்கிறது. இது, சந்தேகத்திற்கு இடமில்லாமல், ஆண்டவரின் அனுக்கிரக செயல்தான். குழந்தையான இயேசு, “நசரேயன் என்னப்படுவார்” என்கிறதற்காக அவர் நாசரேத்திற்கு அனுப்பப்பட்டதைப் போன்று, அவர் உண்மையிலேயே மதிப்பை பெற்ற பெத்தலகேமில் பிறந்திருந்தார். அது எதற்கென்றால், சத்தியம் உண்மையான இஸ்ரயேலர்களை, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேசத்தின் பதரில் இருந்து பிரித்து எடுப்பதற்காக,பதர் நம்முடைய ஆண்டவரை நசரேயன் என்று கூறியதால் அகற்றப்பட்டது. ஏனென்றால், அவர்கள் “நாசரேத்தி-ருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா” என்று சந்தேகப்பட்டார்கள். அதைப்போலவே இப்பொழுது சிலர் கே-யாகக் கேட்கிறார்கள்; “வருகையில் இருந்து ஏதாவது நன்மை வருமா?” என்று இப்படி கூறிவிட்டு ஆண்டவருடைய சாட்சியையும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசனங்களின் சாட்சிகளையும் கவனியாது விட்டு விடுகிறார்கள். ஆனால் தாழ்மையுள்ளவர்கள், பரிசுத்தவான்கள், உலகத்தின் பார்வையில் முட்டாள்களாக இருந்தாலும், தேவனுடைய பார்வையில் ஞானவான்களாக இருப்பவர்கள், இப்படியாகச் சிந்திப்பதில்லை.



ஆனால் “மில்லர் இயக்கம்” இதைவிடப் பெரியது. அது தானியே-ன் தரிசனங்களை சரியானபடி புரிந்து கொள்வதற்கும், சரியான நேரத்தில் தீர்க்கதரிசனத்தைப் பொருத்துவதற்கும் ஆரம்பமாக இருந்தது. மூன்றரைக் காலங்கள் என்று (1260 வருடங்கள்) மில்லர் கணக்கிட்டது, நாம் இப்பொழுது கொடுத்திருப்பதைப் போன்றுதான் உள்ளது. ஆனால் அவர் 1290, 1335ன் காலங்களை ஒரே இடத்தில் துவக்காத பிழையைச் செய்துவிட்டார். அவர் அப்படிச் செய்திருந்தால் அது சரியாக இருந்திருக்கும். அதற்கு மாறாக, முப்பது வருடங்கள் சீக்கிரமாக அதை அவர் ஆரம்பித்து விட்டார். அதாவது 539க்கு பதில் 509 என்கிற வருடத்தில் ஆரம்பித்ததால், 1335 நாட்கள் 1874க்குப் பதிலாக 1844ல் முடிந்தது. அவர் கூறியவற்றை ஒத்துப்பார்க்கும்படி அவர் எழுதியவைகள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அவர் தீர்க்கதரிசன எண்களைப் பொருத்திய தேதிகளை மாத்திரம்தான் அறிந்துள்ளோம். ஆனாலும், இது தீர்க்கதரிசனத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளுவதின் ஆரம்பமாக இருந்தது. சொல்லப்போனால் 1260 என்கிற காலத்தை அவர் சரியாகப் பார்த்திருந்தார், அது தான் திறவுகோலாகும். இந்த சத்தியத்தை பிரசங்கிக்கும் வேளையில் (தவறுகள், தவறான கூற்றுகள், தவறான தீர்மானங்கள் கலந்து இருந்தாலும்) ஆண்டவர் ஏற்கெனவே கூறிய வேளையில், அநேகரைப் பிரித்து எடுக்கவும், சுத்திகரிக்கவும் உதவி செய்தது.

ஆண்டவர் எவ்வாறு வருவார், எதற்காக வருகிறார் என்பதை அறியாமல் ஆனால் அவர் சடுதியாக வருவார், எல்லாம் ஒரே நாளில் முடிந்துவிடும் என்று எதிர்பார்த்து, எல்லா கால தீர்க்கதரிசனங்களும்

அங்கே முடிய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தார். அது இப்படியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர் தீர்மானம் எடுத்துக் கொள்ளுவதில் அதிக சிரமம் எடுத்துக்கொண்டார். இதன் நிமித்தமாகத்தான் அவர் தோல்வியுற்றார். மேலும், இதற்கு மேலாக எவரும் அறிந்து கொள்ளவேண்டும் என்பது அக்காலத்திற்கு உரியதல்ல. ஆகவே இதற்கு மேலாக தேவன் எவருக்கும் வெளிச்சத்தைக் கொடுக்கவில்லை.

திரு. மில்லர், பேப்டிஸ்ட் சபையில் மிகுந்த ஒரு ஆர்வமுள்ள நன்மதிப்பைப் பெற்ற நபராக இருந்தார். அவர் வேதத்தைக் கவனமாகப் படிப்பவராக இருந்தபடியால் தீர்க்கதரிசனங்கள் அவருக்கு விளங்கத் துவங்கியது. தனக்குள்ளாக அது சரியானதுதான் என்கிற நம்பிக்கையைப் பெற்ற பின்னர், தனது கருத்துக்களை முதலாவதாக பேப்டிஸ்ட் (Baptist) சபையில் உள்ள ஊழியக்காரர்கள் மத்தியிலும், பின்னர் எல்லா சபை மக்களிடமும் எடுத்துரைக்க ஆரம்பித்தார். இந்த முயற்சி பரவ ஆரம்பித்தவுடன், தன்னுடன் மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டு பிரயாணப்பட்டு, அநேக இடங்களில் பிரசங்கித்தார். பேப்டிஸ்ட் ஊழியக்காரர்கள் மத்தியில் அவர் ஆரம்பித்த ஊழியம் குறித்து அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் இருந்து தெரிந்து கொள்ளலாம். எப்படியெனில் 1829ம் ஆண்டு போல்ட்னி (Poultney) என்கிற இடத்தில் உள்ள பேப்டிஸ்ட் சபையில் மூப்பராக இருந்த புல்லர் (Fuller) என்பவர் பகிரங்கமாக அவருடைய கருத்துக்களைப் பிரசங்கித்த முதலாவது சீடர் ஆவார். மூன்று வருடங்கள் கழித்து எழுதப்பட்ட ஒரு கடிதத்தில் மில்லர் கூறுகிறார்:

“ஆண்டவர் விதையைத் தூவுகிறார். என்னைத் தவிர கிட்டதட்ட எட்டு ஊழியக்காரர்கள் இப்பொழுது இந்த உபதேசத்தைப் பிரசங்கிக்கிறார்கள். என்னுடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்ட நூற்றுக்கும் அதிகமான சகோதரர்களை நான் அறிவேன். இது இப்படி இருக்க சத்தியம் வ-மையானது, அது நிலைத்து நிற்கும்.”

இதி-ருந்து நாம் காணக்கூடியது என்னவெனில், “மில்லர் இயக்கம்” பிரித்தெடுக்கும் வேலையை மேற்கூறப்பட்ட காலத்தில், அதாவது 1290 நாட்கள் முடிந்த பின்னர், 1829ல் ஆரம்பித்தது.



இப்பொழுது 1335 நாட்கள் வரை ஊக்கமாகக் காத்திருப்பது என்னவாயிற்று? இப்படியாக யார் காத்திருந்தார்கள்?

ஆண்டவருடைய சில பிள்ளைகள், “பரிசுத்த ஜனங்கள்” இந்த புத்தகத்தின் ஆசிரியர் எண்ணிக்கையில் ஒருவராவார். அவர் “மில்லர் இயக்கத்தில்” இணைந்து இருக்கவில்லை. “இரண்டாம் வருகை சபை” என்று தன்னை அழைத்துக் கொண்ட இயக்கம், ஒருமுகப்படுத்தப்பட்ட போதும் அதோடு இணைந்து இருக்கவில்லை. இவர்கள் மிகாயே-ன் இராஜ்யத்திற்காக, உற்றுக் கவனித்து ஆவலோடு காத்திருக்கவும் செய்தார்கள். 1874ம் ஆண்டில் இறுதியில் 1335 நாட்கள் முற்றுப்பெற்ற காலத்தி-ருந்து நம்முடைய பிதாவின் திட்டங்கள் தெளிவு பெற்றது, ஆசீர்வாதமான விஷயம் என்பதற்கு நாங்கள் சாட்சி கூறுகிறோம்.

இந்த ஆசீர்வாதத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. நாம் அதை விபரமாகச் சொல்ல வேண்டும் என்றால், இராஜ்யத்தின் புது திராட்சை ரசத்தால் ஆவியில் புதுப்பிக்கப்பட்டவர்கள் மாத்திரமே அதை ஏற்றுக் கொள்ளமுடியும். ஆகவே, அதைக் கூற இயலாது, அது உணர்ந்து பார்க்கக் கூடிய ஒன்றாகும். 1335 தீர்க்கதரிசன, அடையாளமான நாட்களின் முடிவில் இருந்து, அதாவது ஆண்டவருடைய பிரசன்னத்தைப் பற்றி விலைமதிப்பற்ற சத்தியத்தின் நாட்களில் இருந்து, இந்த சுவிசேஷ யுகத்தின் “அறுவடைக்” காலத்திலும், மிகாயே-ன் (கிறிஸ்துவின்) இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிற நாட்களுக்குள்ளும், நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

இந்த அனுகூலமான நேரம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கிறது! 1335 நாட்கள் நிறைவேறியவுடன் வெளிப்படத் துவங்கிய மேன்மையான திவ்ய திட்டத்தில் எவ்வளவு இசைவும் அழகும் உள்ளது. இந்த ஆசீர்வாதத்திற்கும், முழுமையாகத் தெய்வீக திட்டத்தை இப்போது ஜீவிக்கிற “பரிசுத்த ஜனங்கள்” அறிந்து கொள்ளவும், இது ஏற்ற காலமாயிருப்பதால் இந்த வேதாகம தொகுப்புகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதைப் பெறுவது நம் கையி-ருக்கிறது; “பரிசுத்த ஜனங்களைத்” தவிர வேறு

எவரும் இதைப் புரிந்து கொள்ள முடியாது; இது ஒரு நன்மையாக வழங்கப்படுகிறது. "துன்மார்க்கரில் ஒருவரும் உணரான்." மேலும் உலகப்பிரகாரமாக ஜீவிக்கிறவர்களோடு ஐக்கியம் வைத்து இருக்கும் "பரிசுத்த ஜனங்களும்," துன்மார்க்கர் இருக்கும் இடங்களில், ஞானமற்று நிற்பவர்களும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காருகிறவர்களும் அறிந்து கொள்ளமாட்டார்கள், இந்த ஆசீர்வாதத்தை, அனுபவிக்க மாட்டார்கள். இது இப்பொழுது கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு, உண்மையாகவே ஞானவான்களாக இருக்கிறவர்களுக்கு மாத்திரமே உரியது. (சங். 1:1,2)

மிகாயே-ன் இராஜ்யத்தைக் குறித்த இந்த செய்தி, படிப்படியாக 1829ம் ஆண்டி-ருந்து திறக்கிறது. அது வெளிப்படுத்தின விசேஷத்தில் அடையாளமாக ஒரு சிறு புஸ்தகம் என்று அழைக்கப்படுகிறது. (வெளி. 10:2, 8-10) இதைப் பரிசுத்த ஜனங்களுக்குள் இருக்கும் ஞானவான்களுக்கு அடையாளமாக யோவான் குறிப்பிட்டுள்ளார். அவர் அந்த சிறு புஸ்தகத்தைப் புசிக்குமாறு கட்டளையிடப்படுகிறார். யோவானுடைய அனுபவம் 10வது வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி, இந்த சத்தியத்தை பெறுகிற எல்லாருடைய அனுபவமாக இருக்கிறது. அந்த அனுபவம் அற்புதமான இனிமையைக் கொண்டு வருகிறது. எவ்வளவு ஆசீர்வாதமுள்ளதாக இருக்கிறது! ஆனால் இதற்குப் பின் வருவது, எப்பொழுதுமே கிட்டதட்ட உபத்திரவம் என்கிற கசப்போடு இனிமை கலந்திருப்பதாகும். பொறுமையோடு இறுதிவரை சகித்துக்கொள்ளுபவர்களுக்கு வருவது சுத்திகரிப்பு, பரிசுத்தமாக்குதல், புடமிடுதல் என்பவைகளாகும். இவைகள் கிறிஸ்துவின் மணவாட்டியை க-யாணத்திற்கும் உயர்த்தப்படுவதற்கும் ஆயத்தப்படுத்த உதவுகிறது. இந்த நிலை ஆயத்த நாள் முற்றுப்பெறும் தருவாயில் உண்டாகிறது.

நாம் காட்டியுள்ள இந்த ஏமாற்றம் உண்மையிலேயே ஒரு ஆசீர்வாதமாகவும் தரிசனத்தைச் சரியாக அறிந்து கொள்ளுவதின் ஆரம்பமாகவும் இருக்கிறது. இதைக்குறித்து தீர்க்கதரிசி ஆபகூக் உற்சாகப்படுத்தும் ஒரு வார்த்தையை எழுதுகிறார். (ஆப, 2:2,3) "நீ தீர்க்கதரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் (விருப்பமுள்ளவன்) வாசிக்கும்படி பலகைகளிலே (அட்டைகளில்) தீர்க்கமாக வரை... அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு, (1335 நாட்கள் வரை காத்திருக்கிறவன் பாக்கியவன்) அது நிச்சயமாக வரும், அது தாமதிப்பதில்லை." அது தாமதிப்பது போல் இருந்தது, ஆனால் அப்படி இல்லை. அது திரு.மில்லர் செய்த ஒரு சிறு தவறாகும். இது தேவனால் ஏற்கெனவே முன் அறியப்பட்டு அவருடைய "பரிசுத்த ஜனங்களை" சோதிப்பதற்காக அவரால் அனுமதிக்கப்பட்டது.



அர்ப்பணிப்பு, வேத பாட வகுப்புகள், விசுவாசம் ஆகியவை இந்த இயக்கத்தினால் உருவாக்கப்பட்டதற்கு ஆதாரமாகத் தன்னோடு கூட ஏமாற்றம் அடைந்தவர்களுக்கு திரு. மில்லர், 1844ன் ஏமாற்றத்திற்குப் பின்னர் எழுதிய ஒரு கடிதத்தின் ஒரு பகுதியை கீழே தருகிறோம் :

"கடந்த காலத்தில் ஏற்பட்ட ஏமாற்றம், உங்களுக்குள்ளும் நாங்கள் விசுவாசிக்கிறபடி எங்களுக்குள்ளும் ஒரு ஆழமான தாழ்மையை உண்டாக்கியிருப்பதுடன், நம்முடைய இருதயங்களை ஆராய்ந்து பார்க்கவும் செய்துள்ளது என்பதை நாங்கள் ஏற்கெனவே உணர்ந்திருக்கிறது போல நீங்களும் உணர்ந்திருக்கிறீர்கள் என்பதை கேள்விப்படுகிறோம். இதற்காக உங்கள் சார்பில் ஆண்டவருக்கு நன்றி சொல்லுகிறோம். நாங்கள் தாழ்ச்சியடைந்திருந்தாலும், ஓர் அளவுக்கு துன்மார்க்கமான மாறுபாடுள்ள சந்ததியினரால் கே-க்குள்ளாக்கப்பட்டிருந்தாலும், ஓர் அளவு வேதனைப்பட்டிருக்கிறோம், ஆனாலும் நாங்கள் பயப்படவில்லை, தள்ளுண்டு போகவில்லை. உங்களுடைய நம்பிக்கையைப் பற்றிய காரணங்களை யாராவது கேட்டால் நீங்கள் அனைவரும் உங்களுடைய வேதாகமங்களைத் திறவுங்கள்,பணிவோடும், பயத்தோடும், நம்முடைய மாபெரும் இரட்சகராக இருக்கிற இயேசு கிறிஸ்துவின் மகிமையான வருகையைக் குறித்துக் காட்டுங்கள். எந்த நேரத்திலும் கூட, உங்களுடைய விசுவாசத்திற்கான காரணங்களுக்காக, உங்களிடத்தில் கேட்பவரை உங்களுடைய ஊழியக்காரரிடம் செல்லும்படி செய்யவேண்டாம். உங்களுடைய விசுவாசம், வேதாகமம்.... உங்களுடைய தத்துவம் தேவனிடத்தில் இருந்து வருகிற ஞானமாகும். உங்களை இணைத்திருப்பது

பரிசுத்தவான்களின் அன்பும் ஐக்கியமும் ஆகும். உங்களுடைய போதகர் பரிசுத்த ஆவி. உங்களுடைய பேராசிரியர், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து... பரிசுத்தவான்களுடைய எல்லாவிதமான அன்பினாலும் ஐக்கியத்தினாலும், இந்த நம்பிக்கையை உறுதியாய் பற்றிக் கொள்ளும்படி உற்சாகப்படுத்துகிறோம். தேவனுடைய வார்த்தையில் உள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் அதை உறுதி செய்கிறது. அது இரண்டு மாறாத விசேஷங்களினால் உங்களிடத்தில் பத்திரப்படுத்தப்பட்டுள்ளது, தேவனுடைய ஆலோசனையும் ஆணையுமாகும். இதில் தேவனால் எவ்வளவேனும் பொய் சொல்ல முடியாது. அது இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலும், இரத்தத்தினாலும், உயிர்தெழுத-னாலும், ஜீவனினாலும் உறுதிப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்டுள்ளது... சகோதரரே ஒருபோதும் பயப்பட வேண்டாம்; என்ன சொல்ல வேண்டும் என்பதை தேவன் சொல்-யிருக்கிறார். அவர் சொல்லுகிறபடி செய்யுங்கள். அதன் விளைவுகளை அவர் பொறுப்பெடுத்துக் கொள்ளுவார். தேவன் கூறுகிறார்: "நாட்களும் எல்லாத் தரிசனத்தின் பொருளும், சமீபித்து வந்தன என்று அவர்களோடே சொல்லு." (பார்க்க எசே. 12: 22,23)... இதில் ஆண்டவருடைய கரம் இருக்கிறது என்பதற்கு இது ஒரு வெளிப்பாடு என்று எனக்குத் தோன்றுகிறது. காலத்தைக் குறித்து போதித்த போது, ஆயிரக்கணக்கானவர்கள் வேதத்தைப் படிக்குமாறு தூண்டப்பட்டிருக்கிறார்கள்..... எங்களுடைய பாதையில் பெரிய அளவில் தேவனுடைய ஞானம் வெளிப்பட்டு இருக்கிறது. அவர் நல்லதென்று ஏற்படுத்தினதை அவர் விருப்பத்தின்படியான வழியிலும், காலத்திலும் நிறைவேற்றுவார்."

ஏமாற்றத்தின் ஆண்டு 1844-ருந்து உணர்ந்து கொள்ள வேண்டிய "1335 நாட்களின்"முடிவு காலம் வரை உள்ள காத்திருந்த காலத்தை விளக்கமாகக் கூறும் வகையில்தான் நம்முடைய ஆண்டவரின் உவமைகளில் ஒன்று இதற்கென்றே கொடுக்கப்பட்டது. அதைக் கீழே கொடுக்கிறோம் :

### பத்து கன்னிகைகளின் உவமை

**— மத். 25 : 1-12 —**

இந்த உவமை "அப்பொழுது" என்கிற வார்த்தையோடு ஆரம்பமாவது, இது ஆண்டவருடைய நாளில் உடனடியாக



நிறைவேறுவதற்கானதல்ல, ஆனால் எதிர்காலத்தில் நிறைவேறும் என்பதைக் காட்டுவதற்காக. "அப்பொழுது பரலோக இராஜ்யம் (அது கரு அளவில் உள்ளது - அது சிலர் அல்லது எல்லா பரிசுத்த ஜனங்களும் அந்த இராஜ்யத்தில் சுதந்தரவாளிகளாவதற்கு தகுதி பெறுபவர்களுக்கு அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளது) தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்."

எண்ணிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. விகிதாச்சாரமும் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. இந்த உவமை மணவாளனைச் சந்திக்கும்படியாக, இராஜ்யத்தின் சுதந்தரவாளிகள் மத்தியில் ஏற்பட்ட ஓர் எதிர்பார்த்திருத்தலைக் கற்றுக் கொடுக்கிறது. இதில் இரண்டு வகுப்பினர் காட்டப்படுகின்றனர். இங்கே "புத்தியுள்ளவர்கள்," "புத்தியில்லாதவர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர். "கன்னிகை" என்கிற வார்த்தை பரிசுத்தத்தைக் குறிக்கிறது. ஆகவே, இந்த உவமையில் கூறப்பட்டுள்ள புத்தியுள்ளவர்களும், புத்தியில்லாதவர்களும் "பரிசுத்த ஜனங்களைக்" குறிக்கிறார்கள். சொல்லப்போனால் மணவாளனைச் சந்திக்க வேண்டும் என்று இருப்பவர்கள் எவரும், பாவத்தை நேசிப்பவர்களாக இருக்க முடியாது, அவர்களில் அநேகர் "புத்தியில்லாதவர்களாக" இருந்தாலும் கூட.

இந்த உவமையில் நம்முடைய ஆண்டவரால் சுட்டிக் காட்டப்படுவது, மில்லர் இயக்கத்தில் ஆரம்பித்த ஒரு வகுப்பாரையும் இன்னும் வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு வகுப்பாரையும் ஆகும். அது ஒரு பேப்டிஸ்ட் சபையைச் சேர்ந்தவரால் ஆரம்பிக்கப்பட்டதாக இருந்தாலும் அது சபை பாகுபாடற்ற இயக்கமாக இருந்தது. இதில் மற்ற எல்லா சபைகளிலும் உள்ள பக்தியுள்ளவர்கள், உண்மையுள்ளவர்கள் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் மனசாட்சியின்படி நடந்து கொள்ளும்படி உண்மையுடன் செயல்பட்ட ஆண்கள், பெண்களின் வைராக்கியம் நிலைத்து நின்றது. அந்த நாட்களில் நடைபெற்ற விஷயங்களைப் பற்றி அறியும் போது, அவர்களுடைய மனசாட்சியுடன் நாம் ஒத்து போகமுடியாவிட்டாலும் அவர்களைப் பற்றிய பெருமிதம் நம்முடைய இருதயங்களை

நிறையப்பண்ணுகிறது. துண்டுப் பிரதிகள், பத்திரிக்கைகள் ஆகியவைகளை பல்வேறு மொழிகளில் பிரசுரிக்கவும், இந்த செய்தியை உலகம் முழுவதும் அனுப்புவதற்காகவும் பணம் தண்ணீர் போல் செலவிடப்பட்டது. எல்லாச் சபைகளைச் சேர்ந்த ஆலயங்களிலும், ஒரு எழுப்புத-ன் ஆவி பரவிற்று என்று கூறப்படுகிறது. மேலும் சில சபைக் கூட்டங்களில் இந்த உபதேசத்தை ஆதரித்தவர்கள், பணவசதி உள்ளவர்கள், பிரசங்க பீடத்திற்கு முன்னதாகக் காணிக்கைகளைக் கொட்டினார்கள். அது தேவையுள்ளவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. அந்த காலத்தில் இருந்த விசுவாசிகளின் ஆர்வமும், வைராக்கியமும் அதிகம் இருந்தபடியால், இப்படியாக, ஆண்டவருக்கென அர்ப்பணிக்கப்பட்ட பணத்திற்குக் காவல் காப்பது தேவையற்றதாக இருந்தது எனக் கூறப்பட்டது. ஏனெனில் அது தேவைப்படாதவர்கள் அதைத் தொடமாட்டார்கள்.

உவமையில் உள்ள கன்னிகைகள் அனைவரும் தங்கள் தீவட்டிகளைத் தயார்படுத்தி, அவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கும்படி வைத்திருந்தார்கள் என்று காட்டப்பட்டுள்ளது. இந்த தீவட்டிகள் வேதத்திற்கு அடையாளமாக உள்ளன. ("உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமாக உள்ளது." சங்.119 : 105) இப்படியாக, பொதுவாக தீவட்டிகளை தயார் நிலையில் வைத்திருப்பது என்பது வேதத்தை ஆராய்ந்து பார்த்தல் ஆகும். எல்லா கிறிஸ்தவ பிரிவினரும் செய்தார்கள். இதற்கு முன்பாக இப்படி நடந்ததே இல்லை. எண்ணெய், சத்திய ஆவிக்கு அடையாளமாக இருக்கிறது. அந்த வேளையில் எல்லாருடைய தீவட்டிகளிலும் அது வெளிப்பட்டது. ஆனால், சிலரிடம் சத்திய ஆவி அவர்களுக்குள் "பாத்திரங்களில்" இல்லாமல் இருந்தது.

1844ம் ஆண்டில் ஏமாற்றம் "மணவாளன் வர தாமதமாயிற்று" என்கிற அறிக்கையின் மூலம் இந்த உவமையில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது எதிர்பார்த்து இருந்தவர்களுக்கு அது தாமதிப்பது போன்று தோன்றியது. குழப்பம் மற்றும் இருள் எல்லோராலும் அனுபவிக்கப்பட்டது. அங்கே ஏமாற்றமடைந்த அநேகர், தவறான தரிசனத்தைப் பற்றிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டதைப் பற்றி அந்த உவமையில், கீழ்க்கண்டவாறு



கூறப்பட்டுள்ளது. "மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லோரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்." ஆம் அவர்களுடைய இருளில் தூக்கத்தில் அவர்கள் விசித்திரமான, தகாத விஷயங்களைச் சொப்பனத்தில் கண்டார்கள்.

ஆனால், உவமை இரண்டாவதாக ஒரு சம்பவத்தைக் காட்டுகிறது. அது அதே கன்னிகைகள் மத்தியில் அதே மாதிரி ஆனாலும், வித்தியாசமானது ஒன்றைக் காட்டுகிறது. பொதுவாக, அதே வகுப்பினரைத் தான் குறிப்பிடுகிறது. ஆனால், அதே தனிப்பட்ட நபர்களாக இருக்க வேண்டியதில்லை. முதலாவது உள்ள சம்பவம் தீர்க்கதரிசனத்தின் மேல் கிடைத்த வெளிச்சத்தினால் ஏற்பட்டது. அது சபையில் மணவாளனாக மேசியா இரண்டாவது முறை வருகின்ற காலத்தைப் பற்றியது. ஆனால் இதில் பல வித்தியாசங்கள் உண்டு. முதலாவது உள்ள சம்பவத்தில் கன்னிகைகள் அனைவரின் தீவட்டிகளும் ஒரே மாதிரியாக எரிந்தன. மணவாளனை எதிர்பார்த்திருந்தவர்கள் எல்லோரும் பல தரப்பினராக இருந்தனர். இரண்டாவது சம்பவத்தில் எல்லோரும் ஆர்வம் உள்ளவராக இருந்தாலும் தங்களுடைய இருதயங்களில் சத்திய ஆவி உள்ளவர்களும் வேதாகமத்தைப் பற்றிய ஓர் அறிவு, ஆயத்தம் பண்ணப்பட்ட தீவட்டி உள்ளவர்கள் மாத்திரமே வெளியே வரும்படி நடத்தப்படுவார்கள். முதலாவது சம்பவத்தில் ஏமாற்றம் பற்றி முன்கூட்டியே அறிவிக்கப்பட்டது. மேலும் 1335 நாட்களுக்கு காத்திருப்பது அவசியமாக இருந்தது. ஆனால் இரண்டாவது சம்பவம் ஒரு ஏமாற்றத்திற்கு உரியது அல்ல. ஆகையால், காத்திருப்பது என்பது இனிமேலும் தேவையில்லை. 1335 தீர்க்கதரிசன நாட்கள் முடிந்தவுடன் 1874ம் ஆண்டு, சரியாக நிறைவு வந்தது. "காத்திருக்கும் காலமாகிய" 1335 வருடங்கள் முடிந்தவுடன், மேற்கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் கற்றுக் கொடுத்தபடி, நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்தைப் புரிந்து கொள்ளுதல் ஆரம்பமானது. புது யுகத்தின் அதிகாலை வேளையாக இருந்தது. ஆனால் நித்திரை மயக்கம் அடைந்து தூங்கிவிட்ட கன்னிகைகளைப் பொறுத்தவரையில் அது "நடு ராத்திரியாக" இருந்தது. இதோ, மணவாளன் வருகிறார் [பழைய

கிரேக்க பூர்வீக பிரதிகளில் (சினயாட்டிக், வாடிகன் பிரதிகள்) "வருகிறார்" என்கிற வார்த்தை விடப்பட்டுள்ளது. அதில் "இதோ மணவாளன்" என்று உள்ளது] என்கிற சத்தம் அல்ல. "இதோ மணவாளன்" (Behold the Bridegroom) என்கிற சத்தம் கேட்கப்பட்டது. (இன்னும் ஒ-த்துக் கொண்டு இருக்கிறது). ஆனால், இதோ அவர் வந்துவிட்டார். நாம் இப்பொழுது "மனுஷகுமாரனின் பிரசன்ன (Parousia) காலத்தில்" வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்த நாளில் இருந்து இப்படியாகத்தான், இந்த இயக்கத்தின் ஊழியம் நடந்து கொண்டு இருக்கிறது. கர்த்தரின் பிரசன்னம் மற்றும் இராஜ்யத்தின் வேலையைப் பற்றி அறிவிப்பது இப்பொழுது நடந்துகொண்டு இருக்கிறது. ஆசிரியரும் அவரோடு உடன் ஊழியர்களும் ஆண்டவருடைய பிரசன்னத்தைப் பற்றி தீர்க்கதரிசனத்தி-ருந்து இந்த புத்தகத்தில் காட்டப்பட்டுள்ளபடி வரைபடங்கள், அட்டவணைகள் போன்றவைகள் மூலம் 1878ம் ஆண்டு இறுதிவரை அறிவித்து, வந்தார்கள். 1878 அக்டோபரில் "Zion's watch tower and Herald of Christ's Presence" என்கிற நமது பிரசுரங்களை ஆரம்பிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆண்டவருடைய ஆசீர்வாதத்தால் இந்த பிரசுரங்களின் லட்சக்கணக்கான பிரதிகள், காலம் நிறைவேறிவிட்டது, கிறிஸ்துவின் இராஜ்யம் இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது என்கிற நற்செய்தியை வெளிநாடுகளிலும் பரப்பிக் கொண்டு வருகிறது. ஆனால் அதே வேளையில் மனிதர்களின் இராஜ்யங்களும் ஒழுங்கு முறைகளும் முழுமையான அழிவுக்கு நேராகச் சென்று கொண்டிருக்கிறது.

இந்த உவமை நமக்கு எச்சரிக்கையாகக் கூறுவது என்னவெனில், கன்னிகை வகுப்பார் அனைவரும் தங்களுடைய தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினாலும், எல்லோராலும் பார்க்க முடியாது. தங்கள் பாத்திரங்களில் எண்ணெய் உள்ளவர்கள் மாத்திரமே (தங்களுக்குள்ளே உடையவர்கள் - முற்றிலுமாக அர்ப்பணித்தவர்கள்) தங்களுடைய தீவட்டிகளில் இருந்து வெளிச்சம் பெறவும், உண்மையை ஏற்றுக் கொள்ளவும் முடியும். மற்றவர்கள் (தூய்மையானவர்கள், கன்னிகைகள்) சில காலத்திற்கு



எண்ணெயையும், வெளிச்சத்தையும் பெறுவார்கள். அதன்மூலம் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆனால் சத்திய ஆவி உடையவர்கள் அதாவது எண்ணெய் உடையவர்கள் ஏற்ற காலத்தில் வெளிச்சம் பெறுவதோடு, பெரிய ஆசீர்வாதத்தையும் பெறுவார்கள். இப்படிப்பட்டவர்கள் மாத்திரம் மணவாளனோடு க-யாணத்திற்குச் செல்லுவார்கள். எண்ணெய் அல்லது அர்ப்பணம் என்கிற ஆவி அதன் உடன் வருகிற வெளிச்சம் ஒரு கன்னிகையிடம் இருந்து இன்னொரு கன்னிகையிடத்தில் அனுப்பப்பட முடியாது. ஒவ்வொருவரும் தனக்குத்தானே ஆவியினால் நிரப்பப்பட வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குத் தேவையான அளவுக்கு இந்த எண்ணெயை வைத்திருக்க வேண்டும். (சத்தியம் - அர்ப்பணிப்பு, பரிசுத்தம் என்கிற அதன் ஆவி) இதற்காகச் செலுத்த வேண்டிய கிரயம், தன்னையே வெறுப்பது, தவறாக மற்றவர்களால் எண்ணப்படுதல், அக்கினி போன்ற சோதனை ஆகியவையாகும். மகா உபத்திரவ காலத்தின் அனுபவம், புத்தியில்லாத கன்னிகைகள் தங்களுடைய எண்ணெயை வாங்குகிற சந்தைக்களம் ஆகும். ஆனால், மணவாட்டியின் அங்கங்களாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக க-யாணத்திற்குச் செல்லுவது என்பது மிகவும் தாமதமாகிவிடும். இருந்தாலும் வேதாகமம் குறிப்பிடுகிறது "கனவீனத்திற்குரிய" பாத்திரங்களான இவர்கள் தங்களுடைய தவறுக்காக மனம் வருந்துபவர்கள் அழிக்கப்படமாட்டார்கள். ஆனாலும், ஆண்டவரின் உபயோகத்திற்கென்று ஏற்படுத்தப்பட்டவர்கள் இன்னும் அவருக்கு அவருடைய ஆலயத்தில் ஊழியம் செய்வார்கள்.

தூதன் தானியேலுக்குக் கூறின வார்த்தைக்கு வரும்போது 13வது வசனம் இவ்வாறாக உள்ளது: "நீயோவென்றால், முடிவுவருமட்டும் போயிரு; 'நீ இளைப்பாறிக் கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே (1335) உன் சுதந்திர வீதத்துக்கு (பங்கு, வெகுமதி) எழுந்திருப்பாய் என்றான்"-அதாவது அப்பொழுது ஆரம்பிக்கிற அறுவடையின்போது.

"நீயோவென்றால் முடிவு வருமட்டும் போயிரு" என்று கூறப்படுவதில் "முடிவு " என்கிற வார்த்தை "முடிவு காலம் வரை" என்கிற வார்த்தையில் இருந்து மிக வித்தியாசமான அர்த்தம் கொண்டது என்பதை உணரவேண்டும். "அறுப்பு என்பது யுகத்தின்

முடிவு. " அறுப்பு என்பது ஏற்கெனவே கூறப்பட்டுள்ளபடி கிபி 1874ன் இறுதியில் இருந்து (1335 நாட்களின் இறுதி) 40 ஆண்டுகள் கழித்து, கிபி 1914ல் முற்றுப்பெறுவதைக் குறிப்பதாகும். இந்த "அறுப்பு" காலத்தின் இறுதியில் தானியேல் தன்னுடைய சுதந்திர வீதத்தை, வெகுமதியை அல்லது பரிசை எல்லா பரிசுத்த தீர்க்கதரிசிகளோடு, சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களுக்குப்பின் மிகாயே-ன் (கிறிஸ்துவின்) இராஜ்யத்தில் பெற வேண்டும். அந்த இராஜ்யத்தில், கனத்தில், வரிசையிலும் பரிசுத்தவான்கள் முதலாவது இடத்தில் இருப்பார்கள். (எபி. 11:40) வேதாகம பாடங்கள் தொகுதி 1, பக்கம் 409ஐ பார்க்க.

★★★

## அத்தியாயம் 4

## பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரித்தல் 2300 நாட்கள் – தானியேல் 8:10-26

உண்மையான பரிசுத்த ஸ்தலம் - பாழ்க்கடிப்பு - அஸ்திபாரத்தின் அடித்தளம் - எப்படி தள்ளப்பட்டது? - ரோமன் கத்தோ-க்கர்கள் எழுதியவைகளில் இருந்து எடுக்கப்பட்ட சாட்சியங்கள் - தரிசனத்திற்குப் பின்னர் 2300 வருடங்கள் வரை சுத்திகரிப்பு முடிவு பெறாது - எப்படி, எங்கே தொடங்கப்பட்டது, எப்பொழுது முற்றுப்பெறும் - "தங்கத்திலான பாத்திரங்கள்," சத்தியங்கள், திரும்பி வைக்கப்படவேண்டும்.

கடந்த அதிகாரங்களில் தானியேல் 7:8, 11, 20-26ல் உத்தேசமாகக் கணிக்கப்பட்ட விசித்திரமான "சின்ன கொம்பின்" அடையாள உண்மைகளையும், 2 தெச 2:3ல் சொல்லப்பட்ட "பாவ மனுஷனையும்," நம்முடைய ஆண்டவரால் மத். 24:15ல் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட "பாழாக்கும் அருவருப்பை" குறித்தும் நாம் பார்த்தோம்; இதே போப்பின் வல்லமையைக் குறித்து தானியேல் 8 : 9,10, 23-25லும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நமது தற்போதைய நோக்கத்திற்காகப் போதுமான அளவிற்கு அதன்வளர்ச்சி, அதன் குணாதிசயம், அழிவுண்டாக்கும் அதன் வல்லமையை உடைத்தல், எதிர்காலத்தில் வர இருக்கிற அதன் முடிவான முழுமையான அழிவையும் நாம் பார்த்தோம்.

இப்பொழுது, ஒரு விசேஷித்த பொய்யான உபதேசம் அல்லது

அடிப்படையான தவறைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிற மற்றொரு தீர்க்க தரிசனத்தை ஆராய்ந்து பார்க்க விரும்புகிறோம். இது நம்முடைய ஆண்டவரால் முற்றிலுமாக ஒதுக்கித் தள்ளப்பட்டு அவருடைய பார்வையில் பாழாக்குகிற அருவருப்பாக்கப்பட்டது. இப்பொழுது நாம் பார்க்கப்போகிற தீர்க்கதரிசனம் மேற்கொண்டு எந்த காலத்தில் உண்மையான சபை, அர்ப்பணம் செய்து கொண்ட வகுப்பினர், பரிசுத்த ஸ்தலம் போப்பினால் கொண்டு வரப்பட்ட அருவருப்பான அசுத்தங்களில் இருந்து சுத்திகரிக்கப்படும் என்பவைகளைக் காண்பிக்கிறது.

கடந்த அதிகாரம் காத்திருக்க வேண்டிய நாட்களையும், இந்த பரிசுத்த அல்லது பரிசுத்த ஸ்தல வகுப்பினர் சுத்திகரிக்கப்படுவதையும் நமக்கு சுட்டிக் காட்டியது. இந்த தீர்க்கதரிசனம் போப்பின் அசுத்தங்கள் மற்றும் வஞ்சகங்கள் போன்றவைகளில் இருந்து பரிசுத்த விசுவாசிகளில் உட்கருவாக இருப்பவர்கள் முற்றிலுமாக விடுவிக்கப்படுகிற தேதியையும், தவறாக அபகரிக்கப்பட்ட "பொற்பாத்திரங்கள்" அல்லது விலையேறப்பெற்ற சத்தியங்கள் இந்த பரிசுத்த அல்லது பரிசுத்த ஸ்தல வகுப்பினரிடத்தில் மீண்டும் திரும்பி ஒப்படைக்கப்பட துவங்கும் தேதியையும் சுட்டிக் காட்டுகிறது.

தானியேல் 8 : 10-26ல் இருந்து பின்வருமாறு குறிப்பிடுகிறோம் :

"அது வானத்தின் சேனை (முழு சபை) பரியந்தம் வளர்ந்து, அதில் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றைப் பூமியிலே விழப்பண்ணி, அவைகளை மிதித்தது. அதுசேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி, (அது உண்மையாகவே தலைமையானவராக அல்லது பிரபுவாக, அல்லது சபையின் தலையாக இருக்கிற கிறிஸ்து இயேசுவுக்குச் சொந்தமான கனத்தையும், கௌரவங்களையும், மரியாதைகளையும் தனக்குரியது என்று எண்ணி தீர்க்கதரிசனங்களையும், பட்டங்களையும் தனதாக்கிக் கொண்டது) அவரிடத்தி-ருந்து (கிறிஸ்து) அன்றாட ப-யை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது. பாதகத்தினிமித்தம் அன்றாட ப-யோடுங்கூடச் சேனையும் (ஜனங்கள்) அதற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது; அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று; அது கிரியை செய்து அனுகூலம் அடைந்தது.



"பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக் கேட்டேன்; அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவரை நோக்கி: அன்றாட ப-யைக் குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதி பட ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான். அவன் என்னை நோக்கி: இராண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் (நாட்கள்) செல்லும் வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்.

"தானியேலாகிய நான் இந்த தரிசனத்தைக் கண்டு, அதின் பொருளை அறிய வகை தேடுகையில் இதோ, மனுஷ சாயலான ஒருவன் எனக்கு எதிரே நின்றான். அன்றியும் காபிரியேலே, இவனுக்குத் தரிசனத்தை விளங்கப்பண்ணென்று (ஆறு) ஊலாயின் மத்தியிலே கூப்பிட்டுச் சொல்லுகிற ஒரு மனுஷ சத்தத்தையும் கேட்டேன். அப்பொழுது அவன் நான் நின்ற இடத்துக்கு வந்தான்; அவன் வருகையில் நான் திடுக்கிட்டு முகங்குப்புற விழுந்தேன்; அவன் என்னை நோக்கி: மனுபுத்திரனே கவனி; இந்தத் தரிசனம் முடிவு காலத்துக்கு அடுத்தது என்றான். அவன் என்னோடே பேசுகையில், நான் தரையில் முகங்குப்புறக் கிடந்து, அயர்ந்த நித்திரை கொண்டேன்; அவனோ என்னைத் தொட்டு, நான் காலூன்றி நிற்கும்படி செய்து: இதோ, கோபத்தின் முடிவு காலத்திலே சம்பவிப்பதை உனக்குத் தெரிவிப்பேன்; இது குறிக்கப்பட்ட முடிவு காலத்துக்கு அடுத்தது.

"நீ கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா மேதியா பெர்சியா தேசங்களின் இராஜாக்கள்; ரோமமுள்ள அந்த வெள்ளாட்டுக்கடா கிரேக்கு தேசத்தின் ராஜா; அதின் கண்களுக்கு நடுவே இருந்த பெரிய கொம்பு அதின் முதலாம் ராஜா; அது முறிந்து போன பின்பு, அதற்குப் பதிலாக (அது குறிப்பிடுவது) நாலு கொம்புகள் எழும்பினது என்னவென்றால், அந்த ஜாதியிலே நாலு ராஜ்யங்கள் எழும்பும்; ஆனாலும் அவனுக்கு இருந்த வல்லமை அவைகளுக்கு இராது. அவர்களுடைய ராஜ்யபாரத்தின் கடைசி காலத்திலோவென்றால், பாதகருடைய பாதகம் (ஆதி. 15 : 16 ஐ ஒத்துப்பார்க்கவும்) நிறைவேறும் போது, மூர்க்க முகமும்

(வெட்கமற்றவன்) சூதான பேச்சுமுள்ள சாமர்த்தியமான ஒரு இராஜா (போப்பு) எழும்புவான். அவனுடைய வல்லமை பெருகும் (பலமுள்ளதாக ஆக்கப்படும்); ஆனாலும், அவனுடைய சுயபலத்தினால் அல்ல (போப்பின் அதிகாரம் ஐரோப்பாவின் பல்வேறு தேசங்களின் இராணுவத்தை உபயோகித்ததினால், வ-மை பெற்றதாக்கப்பட்டது), அவன் அதிசயமானவிதமாக அழிம்புண்டாக்கி, அநுகூலம் பெற்றுக் கிரியைசெய்து, பலவான்களையும் பரிசுத்த ஜனங்களையும் (பரிசுத்தவான்கள்) அழிப்பான் (கெட்டுப்போகப் பண்ணுவான்). அவன் தன் உபாயத்தினால் வஞ்சகத்தைக் கைகூடிவரப்பண்ணி, தன் இருதயத்திலே பெருமைகொண்டு, நிர்விசாரத்தோடிருக்கிற அநேகரை அழித்து, அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிறவருக்கு விரோதமாய் (அந்திக்கிறிஸ்துவாக) எழும்புவான்; ஆனாலும் அவன் கையினாலல்ல, வேறுவிதமாய் முறித்துப்போடப்படுவான். சொல்லப்பட்ட இராப்பகல்களின் தரிசனம், (அதின் அந்தப்பகுதி) சத்தியமாக இருக்கிறது (சுத்திகரிக்கப்படும் வரை 2300 ஆக இருக்கும்); ஆதலால் இந்தத் தரிசனத்தை நீ மறைத்து வை; அதற்கு இன்னும் அநேக நாள் செல்லும் என்றான்."

ஆட்டுக்கடா, வெள்ளாட்டுக்கடா, கொம்புகள் போன்றவற்றைக் குறித்து இவைகளிலும் இதற்கு முந்திய வசனங்களிலும் கூறப்பட்டுள்ளது. இவைகளைக் குறித்து அதிகமான விளக்கத்திற்குள்ளாக செல்ல விரும்பவில்லை. ஏனெனில், அவைகள் ஏற்கெனவே தெளிவாக்கப்பட்டுவிட்டன என்று நம்புகிறோம். (பக். 13ஐ பார்க்கவும்) ரோம் ஒரு தனிப்பட்ட மிருகமாக தன்னுடைய சொந்த கொம்புகளோடு இருப்பதாக 7ம் அதிகாரத்திலும் அந்த சிலையின் கால்களாகவும், பாதங்களாகவும் 2ம் அதிகாரத்திலும், இங்கே (8ம் அதிகாரத்தில்) கிரேக்க "ஆட்டுக்கடாவாகவும்" கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கிரேக்க ஆட்டுக்கடா, ஒரு அரசாங்க ரோமாபுரியாக தெற்கிலும், மேற்கிலும் விரிவாக வளர்ந்த பிறகு ஒரு மாறுதலை அடைந்து, அது போப்பின் ரோம் ஆக ஆனபிறகு "வானத்தின் சேனை பரியந்தம் வளர்ந்தது." அதாவது, அது சேனைகள் அல்லது ஜனங்களுக்கு மேலாக மத அதிகாரம் அல்லது மத சாம்ராஜ்யமாயிற்று. கிரேக்க சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியில் இருந்து



வந்தது அல்லது ஒரு கிளையாக வளர்ந்தது என்று ரோம சாம்ராஜ்யத்தைக் கணிக்கும் இதே முறை 11ம் அதிகாரத்தில் சரித்திர பூர்வமான தீர்க்கதரிசனத்திலும் பின்பற்றப்பட்டுள்ளது.

இங்கே கூறப்பட்டுள்ள அன்றாட ப- என்பது பொதுவாக யூதர்களால் எருசலேமில் செலுத்தப்பட்டு வந்த அனுதின ப- அல்லது தொடர்ச்சியாக செலுத்தப்பட்ட தகனப-யைக் குறிக்கிறது என்று பொதுவாக யூகிக்கப்படுகிறது. இந்த அன்றாட ப-யை அகற்றுவது என்பது ஏற்கெனவே கூறப்பட்டபடி அந்தியோகியாவின் எபிபேனசுக்கு (Antiiochus Epiphanes) கொடுக்கப்பட்டது. ஆனாலும் தீர்க்கதரிசனமானது நிழலான ஆலயம் அல்லது பரிசுத்த ஸ்தலத்தையும் நிழலான தகனப-களையும் ஒரு புறம் வைத்து விட்டு, கிறிஸ்தவ சபையாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்தையும் அல்லது தேவனுடைய ஆலயத்தையும் குறிப்பிடுகிறது (2 கொரி. 6:16). மேலும் அது மெய்யான தகன ப-யும், முழு உலகத்தின் பாவத்திற்கென செலுத்தப்பட்ட நித்தியப-, ஒரே ஒரு முறை, என்றென்றைக்கும் தொடர்ந்து இருக்கும், கிறிஸ்துவின் நிரந்தர ப-யையும் காட்டுவதாக உள்ளது.

கிறிஸ்துவின் தொடர்ந்து வரும் ப-யானது போப்பினால் நீக்கப்படவோ அல்லது இரத்து செய்யப்படவோ இல்லை. ஆனால் அந்த போப்பு சபையால் கொண்டு வந்த தவறான உபதேசத்தால் கிறிஸ்துவின் ப- ஒதுக்கிவைக்கப்பட்டது. அது படிப்படியாக ஆனால் இறுதியில் முழுமையாக, முற்றிலுமாக கிறிஸ்துவின் தொடர்ந்த ப-யை, நித்திய கால ப-யை, அதின் புண்ணியத்தை ஒதுக்கி வைத்தது. இந்த வஞ்சகமான உபதேசம் திருவிருந்து (Mass) அல்லது திருப்ப- விருந்து ஆகும்.

புரட்டஸ்டன்ட் சபையார், பொதுவாக இந்த திருவிருந்து என்று அழைக்கப்படுவதை முற்றிலும் தவறாகப் புரிந்து கொள்ளுகிறார்கள். ரோமன் கத்தோ-க்கர்களால் ஒரு வித்தியாசமான முறையில் இராப்போஜனத்தை ஆசரிக்கிற முறை என்று அவர்கள் நினைக்கிறார்கள். மற்றவர்கள் இது ஒருவிதமான விசேஷ ஆராதனை என்று எண்ணுகிறார்கள். ஆனால் இவைகள் எல்லாம் தவறான கருத்துக்களாகும். ரோமன் கத்தோ-க்கர்களின் திருப்ப-யைப் பற்றிய உபதேசம் இதுதான்: அவர்கள் கூறுவது என்னவெனில்,

கிறிஸ்துவின் மரணம் ஆதாமின் அல்லது ஆதியில் உண்டான பாவத்தை இரத்துச் செய்து விட்டது. ஆனால் அது நம்முடைய அனுதின குறைபாடுகள், பெலவீனங்கள், பாவங்கள் மற்றும் செய்யாமல் விட்ட காரியங்களுக்குப் பொருந்தாது. அது ஒரு தொடர்ப- அல்ல, பாவங்களுக்கு நித்தியமாக நன்மை செய்யக்கூடிய வல்லமையுள்ளதும் அல்ல, ஒரு ஆடையைப் போன்று எல்லா பாவியையும், ஒவ்வொரு பாவத்தையும் மூட என்றும் போதுமானதும் வல்லமையுள்ளதும் அல்ல, நொருங்குண்ட இருதயம் உள்ள ஒருவரை தேவனோடு ஐக்கியம் கொள்ளவும், இணைக்கும் அளவிற்கு அதற்கு வல்லமை இல்லை என்கிறார்கள். இப்படிப்பட்ட பாவங்களுக்காக திருப்ப- விருந்து ஏற்படுத்தப்பட்டது. அது போப் சபையாரால் கல்வாரியில் செய்யப்பட்ட ப-க்கு மேல் மதிக்கத்தக்கது என்று எண்ணப்பட்டது. ஒவ்வொரு முறையும் திருப்ப- செலுத்தப்படும் போது, அவர்கள், அது கிறிஸ்துவின் புதிய ப- என்கிறார்கள். அது குறிப்பிட்ட நபர்களுக்கும், பாவங்களுக்கும் மானசீகமாக குருவானவர் அளிக்கும் போது, அது கிறிஸ்துவின் புதிய ப-யாக இருக்கிறது என்கிறார்கள்.

இப்படியாக, புதிதாக ப-யாக செலுத்தப்பட வேண்டிய கிறிஸ்து, முதலாவதாக கோதுமை ரொட்டியினாலும், திராட்சை இரசத்தாலும் ஆராதனையை நடத்துகிற குருவானவரால் "தயாரிக்கப்படுகிறது." அது பீடத்தில் வைக்கப்படும் வரை, சாதாரண ரொட்டி, திராட்சை இரசமாகும். அதைப் பரிசுத்தப்படுத்தும்படியாக சில வார்த்தைகள் சொல்லப்படும் போது ரொட்டியும்,திராட்சை இரசமும் இயேசுவின் உண்மையான மாம்சமாகவும், இரத்தமாகவும் மாறுகிறது என்கிறார்கள். இதன்பிறகு, அவைகள் இனி ரொட்டியும், திராட்சை இரசமும் கிடையாது. அது போன்றே தோற்றம் அளித்தாலும் கூட இந்த மாறுதல் பொருளில் ஏற்படுகிற மாற்றம் என்று அழைக்கப்படுகிறது. மந்திரம் போன்ற ஐந்து லத்தீன் வார்த்தைகள் ரொட்டியையும், திராட்சை இரசத்தையும் உண்மையான மாம்சமும், இரத்தமுமாக மாற்றுகின்றன. அந்த வார்த்தைகளாவன "Hoc est autem Corpus Meum" என்பவனவாகும். எந்த குருவானவரும் இப்படியாக, கிறிஸ்துவை புதியதாக ப-செலுத்தும்படி மாம்சத்தில் உருவாக்கமுடியும் என்று கூறப்படுகிறது.



இப்படியாக, கிறிஸ்துவை உருவாக்கிய பின்னர், ஒரு மணி அடிக்கப்படுகிறது. அப்பொழுது அவர்கள் உண்மையிலேயே கிறிஸ்துதான் என்று கூறக்கூடிய ரொட்டியையும், திராட்சை இரசத்தையும் குருவானவர்களும் ஜனங்களும் தாழ விழுந்து ஆராதிக்கிறார்கள், மரியாதை செலுத்துகிறார்கள். இப்படிச் செய்த பின்னர் ரொட்டி (ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட உண்மையான கிறிஸ்துவின் சரீரம் என்று அவர்கள் கூறுகிறார்கள்) பிட்கப்படுகிறது. கிறிஸ்து இப்படியாகக் கொலை செய்யப்படுகிறார் அல்லது புதிதாக ப-யாக செலுத்தப்படுகிறார் - விசேஷமான பாவங்களை இரத்து செய்யும்படியாக இவ்விதமாக அடிக்கடி செய்யப்படுகிறது என்கிறார்கள்.

இந்த அபத்தமான கருத்தை செயல்படுத்துவதுடன் அதில் திருப்தி அடைய முயற்சிக்கும் அதே வேளையில், ரோமன் கத்தோ-க்க ஆலோசனை சங்கங்கள் எண்ணிலடங்கா நீண்ட கட்டளைகளையும், விளக்கங்களையும் பிறப்பித்துள்ளன. மேலும் ஞானமுள்ள (?)வேத பண்டிதர்கள் இது குறித்து ஆயிரக்கணக்கான புஸ்தகங்களையும் எழுதியுள்ளனர். அதில் "இரத்தத்தின்" (திராட்சை ரசம்) ஒரு துளி கீழே விழுந்தால் கூட, அது கவனமாக எடுக்கப்பட்டு சுட்டெரிக்கப்படவேண்டும். சாம்பல், பரிசுத்தமான ஸ்தலத்தில் புதைக்கப்பட வேண்டும். அதே போன்று ரொட்டிக்கும் ("கிறிஸ்துவின் மாம்சம்") செய்யப்படவேண்டும். ஒரு சிறு துணிக்கை கூட, தவறவிடக்கூடாது என்று கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இரத்தத்திற்குள் (திராட்ச ரசத்திற்குள்) ஒரு ஈ விழுந்துவிடாதபடி கவனம் செலுத்தப்பட்டுள்ளது அல்லது ஒரு எ- அல்லது நாய் பிட்கப்பட்ட மாம்சத்தின் (ரொட்டி) துணிக்கையை சாப்பிடாத வகையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. "ஒரு எ- அல்லது நாய் திருவிருந்தின் பகுதிகளை, பரிசுத்தத்தோடு உண்பதில்லை. இருந்தாலும் அப்பொழுதும் கூட இந்த ஜீவிகளுக்குள் (Dens, Tract, De Enchar, No. 20, P 314) கிறிஸ்துவின் சரீரம் இல்லாமல் இருப்பதில்லை என்பதைக் காட்டுகிறது. ரோமன் கத்தோ-க்க (American) ஞான உபதேசம், திருவிருந்தைப் பற்றி இவ்வாறாகக் கூறுகிறது :

கேள்வி : புனித திருவிருந்து என்றால் என்ன?

பதில் : அது ரொட்டி, திராட்சை ரசம் வடிவிலும் உருவத்திலும்

இயேசு கிறிஸ்துவின் சரீரம், இரத்தம், ஆத்துமா மற்றும் தெய்வீகம் உள்ளடங்கிய புனித திருப்ப-யாகும்.

கேள்வி : திருவிருந்தைக் கொண்டாடும்படியாக, ரொட்டியும், திராட்சை ரசமும் முதலாவதாக பீடத்தின் மேல் வைக்கப்படவில்லையா?

பதில் : ஆம். குருவானவர் திருவிருந்தின் போது, பரிசுத்தப் படுத்தும்படியான வார்த்தைகளை உச்சரிக்கும் வரை அது எப்பொழுதும் ரொட்டியும் திராட்சை இரசமும்தான்.

கேள்வி : இந்த வார்த்தைகளினால் என்ன நடைபெறுகிறது?

பதில் : ரொட்டி இயேசு கிறிஸ்துவின் சரீரமாகவும், திராட்சை ரசம் அவருடைய இரத்தமாகவும் மாற்றப்படுகிறது.

கேள்வி : இந்த மாற்றம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

பதில் : அது ஒரு பொருளை இன்னொரு பொருளாக மாற்றுவது என்று அழைக்கப்படுகிறது.

கேள்வி : திருவிருந்து (திருப்ப-, பூஜை ப-) என்றால் என்ன?

பதில் : புதிய பிரமாண அனுதின ப-யை செலுத்துவது திருவிருந்து என்று அழைக்கப்படுகிறது. இதில் குருவானவரின் கரத்தில் கிறிஸ்துவான நம்முடைய ஆண்டவர், இரத்தம் சிந்தாமல் தன்னை ஒப்புக் கொடுக்கிறார். அவர் தம்மை ஒரு முறை இரத்தம் சிந்தி சிலுவையில் ஒப்புக்கொடுத்தது போன்று (ரொட்டி, திராட்சை ரசம் என்கிற தோற்றத்தின்படி) அவருடைய பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறார்.

கேள்வி : திருப்ப-க்கும், சிலுவையின் ப-க்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கிறது?

பதில் : திருவிருந்தை ப-யாகச் செலுத்துவது, கிட்டத்தட்ட சிலுவை ப- செலுத்துவது போன்றதுதான். வித்தியாசம் அதை செலுத்தும் முறையில் தான் உள்ளது.

கேள்வி : திருவிருந்து நன்மைக்கேதுவான ப-யாகச் செலுத்தப்படும் போது, என்ன நடக்கிறது?



பதில் : அதன் மூலம் முதலாவதாக திவ்ய இரக்கத்தின் மூலம் நொறுங்குண்ட இருதயத்திற்கான கிருபைகள், பாவ மன்னிப்புக்கேற்ற மனதில் துக்கம் ஆகியவைகளைப் பெறுகிறோம். இரண்டாவதாக பாவத்திற்கென வைக்கப்பட்டிருக்கிற இம்மைக்குரிய தண்டனைகளில் இருந்து மன்னிப்பைப் பெறுகிறோம்.

கேள்வி : யாருக்கு திருவிருந்தின் கனிகள் (நன்மைகள்) பொருந்தும்?

பதில் : பொதுவான கனிகள் முழு சபையாகிய ஜீவிப்போருக்கும், மரித்தோருக்கும் உரியவைகளாகும். விசேஷ கனிகள் முதலாவதாக முக்கியமாக திருவிருந்து ஆராதனையை நடத்துகிற குருவானவருக்கு உரியதாகும். அடுத்தபடியாக அவர் குறிப்பாக யாருக்கு அதை செலுத்துகிறாரோ அவருக்குரியது. மூன்றாவதாக அதில் கலந்து கொண்டு ஆராதிப்பவர்களுக்கு உரியது.

அதே அதிகாரம் கூறுகிறது : "ப-யை செலுத்துபவர் ஒரு குருவானவர், ப-யாக செலுத்தப்பட்டது உணர்ச்சியுள்ள பொருள் என்று கூறலாம். ப- செலுத்தப்பட்ட இடம் பீடம். இவைகள் நான்கும் குருவானவர், ப-ப்பொருள், பீடம், ப- ஒன்றோடு ஒன்றாக பிரிக்கமுடியாமல் உள்ளது. அவைகள் ஒவ்வொன்றும் மற்றவைகளைத் தேடுகின்றன."

மறுபடியும் ஆசரிப்பைப் பற்றி விளக்கும் போது குருவானவரைக் குறித்து இப்படியாகச் சொல்லப்பட்டுள்ளது :

"அதன்பிறகு அர்ப்பணம் செய்யும்படியாக இரகசியமான வார்த்தைகளை உச்சரிக்கிறார், ஆராதிக்கிறார், முழங்கா-ல் மண்டியிடுகிறார். பரிசுத்த சரீரத்தையும், பரிசுத்த இரத்தத்தையும் அவருடைய தலைக்கு மேலாக தூக்கிப் பிடிக்கிறார். மணி அடித்தவுடன் ஜனங்கள் தங்களுடைய முழங்கா-ல் நின்று ஆராதிக்கிறார்கள். தங்களுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவதற்கு அடையாளமாக தங்களுடைய மார்பில் அடித்துக் கொள்கிறார்கள். குருவானவர் ப-யை கிருபையாக ஏற்றுக் கொள்ளும்படி தேவனிடத்தில் மன்றாடுகிறார்."

இந்த பாடத்திற்கு உரிய சாட்சியைக் குறித்து ட்ரென்ட் (Trent) ஆலோசனைச் சங்கம் பிறப்பித்த கட்டளைகளின் சுருக்கத்தைக் குறிப்பிட்டு முடிக்கிறோம்:

*விதி 3 :* திருவிருந்து என்பது துதியையும், நன்றியையும் ஏறெடுக்கும் ஒரு ஆராதனை மட்டும்தான் அல்லது சிலுவையில் செலுத்தப்பட்ட ப-யை நினைவு கூறுதல் மட்டும் தான்; அது (தன்னில் தானே) நன்மை விளைவிக்கும் ஒரு ப- அல்ல; (அதாவது ஒரு ப- செலுத்தினால் பாவத்திற்கு பரிகாரமாகும்) அல்லது அதை பெற்றுக் கொள்பவனுக்கு மாத்திரமே அது பயன் தருகிறது; ஜீவிப்போருக்கும், மரித்தோருக்கும், பாவங்களுக்கும், தண்டனைகளுக்கும், திருப்தி அளிப்பதற்கும் மற்ற தேவைகளுக்கும் அது செய்யப்பட தேவையில்லை (இந்த ப-யின் வல்லமையை மறுப்பவன்) என்று ஒருவன் கூறுவானாகில் அவன் சபிக்கப்பட்டவன்."

ஒரே ஒரு முறை நித்திய காலத்திற்கென்று செலுத்தப்பட்டதும், கல்வாரியில் இன்னொரு முறை செலுத்தப்பட வேண்டிய அவசியமற்றதுமான முழுமையான ப-க்குப் பதிலாக, அந்த இடத்தில் போப் ஒரு பொய்யான அல்லது போ-யான ப-யைப் புகுத்தி இருக்கிறார் என்பதை நாம் தெளிவாகக் காண்கிறோம். இப்படியாக தன்னுடைய சொந்தக் குருவானவர்களால் இடையில் புகுத்தப்பட்ட போ-யான முறைமையால் போப், கிறிஸ்துவின் கிரியையால் தொடர்ச்சியான ப-யால் உண்டான நன்மையைச் சரியாக கனப்படுத்தாமல் அகற்றிவிட்டார். போப் தொடர்ந்து வரும் உண்மையான ப-யை மறுப்பதுடன், அதை ஒதுக்கி வைத்துவிட்டு அதற்குப் பதிலாக அதன் இடத்தில் "அருவருப்பை," திருவிருந்தை ஏன் ஏற்படுத்துகிறார் என்பதற்கான காரணத்தை இங்கு விளக்க அவசியமில்லை. இந்த உபதேசம் அதாவது குருவானவர் திருவிருந்தில் பாவங்களுக்காக ஒரு ப-யைச் செலுத்துதல், இது செய்யாவிட்டால் பாவங்கள் இரத்து செய்யப்படமுடியாது, இல்லையென்றால் அவைகளின் தண்டனைகளில் இருந்து தப்ப இயலாது என்று கூறுவதின் அடிப்படை நோக்கம், ரோம சபை தன்னுடைய எல்லா



ஆடம்பரங்களுக்கும் வீண் செலவுகளுக்கும் ஜனங்களிடம் இருந்து பணத்தைக் கறப்பதற்குத்தான் என்பதை நம்முடைய வாசகர்களில் அநேகர் அறிந்திருக்கிறார்கள். "பாவத்தி-ருந்து விடுதலை," இப்படியான காரியங்களைச் செய்வது மாத்திரமல்ல, எதிர்கால நன்மைகள், அனுகூலங்கள், சிலாக்கியங்கள் என்பவைகள், இன்னும் ஜீவிப்போருக்கு அல்லது மரித்தோருக்கு, தற்போதைய வாழ்வில் அல்லது எதிர்கால வாழ்க்கையில் தண்டனை கிடையாது போன்றவை தேவ தூஷணமான இந்தத் திருப்ப- உபதேசத்தில் அடங்கியுள்ளது. இது சத்தியத்தை விட்டு விலகுவதற்கான அடிப்படை உபதேசம் ஆகும். திருப்ப- ஆராதனை குருவானவர்களுக்கு அளிக்கிற அதிகாரம், உரிமை ஆகியவைகளின் காரணத்தால் அவர்கள் தூஷிக்கப்படத்தக்கவைகளை கூறுகிறார்கள். அதாவது கிறிஸ்துவுக்கு மாத்திரமே உரிய சிறப்பு நன்மைகள், தங்களிடம் உண்டு, அவைகளை உபயோகிக்கவும் முடியும் என்று தூஷணமானவைகளைப் பேசும் போது ஜனங்களும் அதை ஆதரிக்கிறார்கள்.

இந்தத் தப்பறையின் அடிப்படை குணாதிசயத்திற்கு அடையாளமாக ஒரு விஷயம் கவனிக்கப்பட வேண்டும். பாவத்தில் இருந்து விடுதலை என்பதற்கு எதிராக, சீர்திருத்தம், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து தேசங்களில் ஆரம்பித்தாலும், வெகு விரைவில் திருப்ப-யை செலுத்துவது (பொருள் மாற்றம்) பிரச்னைக்குரிய விஷயமாயிற்று. சீர்திருத்தத்தின் மூலைக்கல்லாக இருந்ததே கல்வாரியில் கிறிஸ்து தன்னை ப-யாக ஒப்புக் கொடுத்ததின் மூலம் அவரால் மட்டுமே பாவமன்னிப்பு கொடுக்க முடியும் என்பதாகும். ஆனால் பாவ மன்னிப்பு, பாவ அறிக்கை செய்தல் மற்றும் திருவிருந்து ஆராதனைகளால் பாவ மன்னிப்பு கிடைக்காது என்பதாகும். சொல்லப்போனால் இந்தத் திருவிருந்து என்கிற பிரச்னை ரோம சபை ஏற்படுத்திய எல்லா உபத்திரவங்களினால் வந்ததாகும். பிஷப் திலோட்சன் இவ்வாறு கூறுகிறார்: "இது (பொருளின் தன்மையை மாற்றுவது- திருப்ப-) ரோம சபையில் ஒரு பெரிய விஷயமாக இருக்கிறது. ஆனால் இது அபத்தமானது, ஏற்றுக் கொள்ளத்தகாததாக இருக்கிறது. பார்க்கப் போனால் தங்களுடைய மாறுபாடான மதநம்பிக்கை என்ற காரணத்திற்கு என்று இல்லாமல், மேல் கூறியதை மறுத்ததிற்கே, அதிகமானோர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்."

ரோம சபை, இந்த திருப்ப-, கிறிஸ்துவினாலும் அவருடைய அப்போஸ்தலர்களாலும் தான் ஏற்படுத்தப்பட்டது என்று கூறுகிறார்கள். ஆனால், இதைக்குறித்து முதலாவதாக, கான்ஸ்டான்டின் நோபில் ஆலோசனை சங்கம், கிபி 381ல் இது சொல்லப்பட்டதாகக் நாம் காண்கிறோம். இருந்தாலும் இந்த அருவருக்கத்தக்க பிழை அறிமுகப்படுத்தப்பட்ட தேதி தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் போப்பின் ஆட்சி ஏற்படுத்தப்பட்ட காலமாகிய கிபி 539ல் தான், இந்த அடிப்படை தவறினால் "அது பாழாக்கும் அருவருப்பாயிற்று" என்று நாம் காண்கிறோம்.

தீர்க்கதரிசனம் கூறுகிறது : "அவரிடத்தி-ருந்து (கிறிஸ்து) அன்றாட ப-யை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது." நம்முடைய ஆண்டவர் இயேசு, அவர் தம்மை ப-யாக ஒப்புக் கொடுத்தபடியால், எல்லோரையும் மீட்டிருக்கிறார். இந்த அடிப்படை சத்தியத்தின் மேல் உண்மையாகவே தங்களை அர்ப்பணித்தவர்கள் அல்லது பரிசுத்த ஸ்தலம் என்கிற வகுப்பினர் கட்டப்பட்டுள்ளார்கள். எந்தவித நபரும் பரிந்து பேச தேவையில்லாமல் அவர் மூலமாக பிதாவினிடத்தில் வருகிற அனைவரையும் இரட்சிப்பார். பிஷப் மற்றும் போப்பின் எந்த வித ப-யும் இல்லாமல், தேவனுடைய பார்வையில் அருவருப்பாக காணப்படுகின்ற மற்றும் கிறிஸ்துவின் ஈடு ப-யை வல்லமையற்றது, போதாது என்று போதிக்கிற இவைகளின் உதவியின்றி அவர் இரட்சிப்பார் என்பதாகும். எபி. 7:25; 10:14

இந்த "மீட்கும் பொருள்" என்கிற உபதேசம் பரிசுத்த ஆலயமாக இருக்கிற, பரிசுத்தமாக்கப்பட்ட சபையின் அடிப்படையாக இருக்கிறது. மேலும் இந்த அன்றாட ப-, திருவிருந்தால் நீக்கப்பட்ட போது, ஒன்றும் இல்லாததாக ஆக்கப்பட்ட போது அல்லது நிறுத்தப்பட்ட போது தீர்க்கதரிசியால் ஏற்கெனவே கூறப்பட்ட எல்லா பொல்லாப்புகளும் பின்தொடர்ந்தன. சேனையானது (பேர் கிறிஸ்தவர்கள்) தவறுக்கு இடம் கொடுத்த போது, தன்னை உயர்த்திய தவறான முறையால் (அதன் தலைமையில் உள்ள போப்பை) பிரபு என்றும் சேனைகளின் மேல் ஆட்சி செய்பவர் என்றும் உயர்த்தியபோது, தவறான



முறைமைக்கு வழி நடத்தப்பட்டது. "அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று." அது இப்படிப்பட்ட சேனையைச் சேர்ந்தவர்களையும் பிரகாசிக்கும் நட்சத்திரங்களையும் அல்லது சத்தியத்தை உறுதியாகப் பிடித்த போதகர்களையும் கீழே தள்ளிற்று. அதன் மீறுத-ல் அவர்களோடு இணைவதும் இல்லை. மேலும், நாம் முந்திய அத்தியாயங்களில் பார்த்தவண்ணம் அது தன்னுடைய கிரியைகளில் அதிக சுபீட்சம் பெற்றது.

இப்படியாக உண்மையான கிறிஸ்தவ விசுவாசமே தள்ளி விடப்படும் போது, விசுவாச துரோகம் இவ்வளவு பெரிய அளவில், ஆழமான நிலைக்குள், அக்கிரமத்திற்குள்ளாகச் சென்றது ஆச்சரியப்படத்தக்கதா? ஒரு தவறு இன்னொரு தவறுக்கு வழி வகுத்தது. கடைசியில் சத்தியமும் தேவபக்தியும் வெளிப்புறத்தில் மட்டும் தான் எஞ்சி இருந்தது. மேலும் பாழாக்கும் அருவருப்பு, பரிசுத்த ஸ்தலத்தையும் சேனையையும் கெடுத்து, தன்னுடைய தலையை கிறிஸ்துவின் பிரதிநிதியாக உயர்த்தி தேவனுடைய ஆலயத்தில் உட்கார்ந்தது.

பாழாக்கும் அருவருப்பின் வெற்றியின் மத்தியில் தானியேல், பரிசுத்தவான்களும், பரிசுத்தமாய் ஜீவிக்கிறவர்களும் பின்வருமாறு கேட்பதை தன் காதில் கேட்கிறான். "அன்றாட ப-யைக் குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக் கொடுக்கப்படுவதைக் குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும்?" அருவருப்பு ஏற்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து, அதின் குணாதிசயங்களையும் அதன் கெடுக்கும் தன்மையையும் குறித்து ஏறத்தாழ தெளிவாக அறிந்து கொண்ட பரிசுத்தவான்கள் அதைக் குறித்து அறிந்து கொள்ளும் ஆவ-ல் ஆண்டவரை நோக்கி கூக்குர-ட்டிருக்கிறார்கள். எவ்வளவு நாட்களுக்கு ஆண்டவரே சத்தியம், சகதியிலும், தவறிலும் தூஷணத்திலும், மிதிபடுவதையும், அருவருப்பு சுபீட்சமடைவதையும் அனுமதிப்பீர்? எவ்வளவு நாள் அந்தி கிறிஸ்து "பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருப்பான்?" எவ்வளவு நாட்கள் அதன் அபரிமிதமான வெற்றியினால் வெறிகொண்டிருப்பான், ஜாதிகளை ஏமாற்றுவான்?" (வெளி 17 : 2, 6;

*14:8; 18:3)* அவர்களுடைய கேள்வியையும் தானியேல் மற்றும் நம்முடைய கேள்வியையும், எதிர்பார்த்து அவருடைய தூதர்கள் மூலம் தேவன் தம்முடைய பதிலை, முன்னதாகவே கொடுத்தார். முடிவு காலத்திற்கு முன்னதாக கால அளவு, புரிந்துகொள்ள ஆரம்பிக்கப்படாவிட்டாலும், காலத்தை நிர்ணயிப்பது அல்லது காலத்தை வரையறுப்பதும் மற்றும் தேவன் நிலைமையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என்கிற உத்திரவாதம் மற்றவர்களுக்கும், தானியேலுக்கும் கொடுக்கப்பட்டது. ஆகவே அவரால் முடியாத ஒன்றும், கட்டுப்படுத்த முடியாத ஒன்றும் நடைபெறமுடியாது. இறுதியில் எல்லாம் நன்மைக்கேதுவாகவே முடியும். இந்தப் பதில் சுத்திகரிப்பின் வேலைத் துவங்குவதைக் குறிக்கவில்லை. ஆனால் ஓர் அளவுக்கு முற்றுப் பெறுவதைக் குறிக்கிறது. அது பின்வருமாறு உள்ளது :

**“இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும் வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்”**

இந்த காலத்தை ஆராய்ந்து பார்க்கும் வேளையில் உடனடியாக புலப்படுவது என்னவெனில், நிஜமான நாட்களை கணக்கில் எடுக்க முடியாது என்பதாகும். ஏனெனில், 2300 நிஜமான நாட்கள் என்பது 8 வருடங்களுக்கும் குறைவாக இருக்கும். இருந்தாலும் தீர்க்கதரிசனம், பரிசுத்தஸ்தலம் பாழாக்கப்படுவதையும், சத்தியம் தரையிலே தள்ளப்படுவதையும் பற்றிய நீண்ட காலத்தை கணக்கில் கொள்ளுவதைப் பார்க்க முடிகிறது. மறுபடியும் நாம் இந்த 2300 நாட்கள் “முடிவு காலம்” என்று அழைக்கப்படுகின்ற காலத்தில், ஒரு கட்டத்தில் முற்றுப் பெறும் என்பது ஏற்கெனவே கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். ஏனெனில் காபிரியேல் சொன்னான். “மனுபுத்திரனே கவனி; இந்த தரிசனம் முடிவு காலத்திற்கு அடுத்தது என்றான்.” மறுபடியும், “இதோ, கோபத்தின் முடிவு காலத்திலே சம்பவிப்பதை உனக்குத் தெரிவிப்பேன்; இது குறிக்கப்பட்ட முடிவு காலத்துக்கு அடுத்தது.”

இதைக் குறித்து காபிரியேல் விளக்கும் போது முழு தரிசனத்துக்குள்ளாகக் கடந்து சென்று, பல்வேறு அடையாளங்களையும் விளக்கமாகக் கூறி, 2300 நாட்கள் தான் சரியான கணக்கு என்கிற நம்பிக்கையோடு முடிக்கிறான்.



தானியேல் விசேஷமாக இஸ்ரயேலையும், பிதாக்களுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படுவதையும் நினைத்துக் கொண்டிருந்தபடியால், அவன் கேட்டது எல்லாம் 2300 நிஜமான நாட்களுக்குள் நிறைவேற முடியாது என்று நினைத்தான். விசேஷமாக காபிரியேல் அவனிடம், “ஆதலால் இந்த தரிசனத்தை நீ மறைத்து வை; அதற்கு இன்னும் அநேக நாள் செல்லும் என்றான்.” அடையாளமாக உள்ள ஒவ்வொரு நாளும் எவ்வளவு நீண்டதாக இருக்கும் என்று அவனுக்குத் தெரியாவிட்டாலும், தேவனுடைய ஜனங்கள் மேல் எவ்வளவு அதிகமான பொல்லாப்பு வருகிறது என்பதை நினைத்துப் பார்த்தபோது, அவனுக்கு இருதயத்தில் சோர்வு உண்டாயிற்று. அவனால் மாம்சமான இஸ்ரயேல் ஆவிக்குரிய இஸ்ரயேல் என்று பெயர் மாற்றம் பெறுவதை அவனால் காண முடியவில்லை. நாம் வாசிக்கிறோம் : “தானியேலாகிய நான் சோர்வடைந்து, சில நாள் வியாதிப்பட்டிருந்தேன்.” “அந்த தரிசனத்தினால் திகைத்துக் கொண்டிருந்தேன்; ஒருவரும் அதை அறியவில்லை.” தானியேலுக்கு இருந்தது போன்றே, அந்த நாளில் இருந்து முடிவு காலம் வரை, தேவனுடைய பிள்ளைகளுக்கும் போப்பின் அதிகாரம், உபத்திரவம், பரிசுத்தவான்களின் பாடுகள் என்பவைகளைப் பற்றிய தரிசனத்தின் பயங்கரமான முக்கியத்துவம் முன்கூட்டியே அதிகத் தெளிவாக அறிவிக்கப்படவில்லை. நம்முடைய இரக்கமுள்ள பரலோக தகப்பன், ஒரு கூட்டம் மகா மேன்மை மற்றும் நித்திய மகிமைக்கென்று ஆயத்தம் பண்ணும்படியாக தம்முடைய ஜனங்களை துன்பம், உபத்திரவம் என்கிற அக்கினியூடாக நடத்த அனுமதிக்கும் அதே வேளையில், “அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்” என்கிற ஒழுங்கின்படி நடத்துகிறார்.

பெர்சியாவின் ஆட்டுக்கிடா அல்லது கிரேக்க வெள்ளாட்டுக் கிடாவைக் காட்டிலும் அதிகமாக இஸ்ரயே-ன் மேல் நாட்டம் கொண்டிருந்த தானியேலுக்கு, இஸ்ரயேல் பாபிலோனில் 70 வருடம் சிறைபட்டு இருந்தது, இஸ்ரயே-ன் மேல் அதன் பாவத்திற்காக தண்டனையாக கொடுக்கப்பட்ட சிறை வாசம் என்பதை எரேமியாவின் தீர்க்கதரிசனத்தில் இருந்து அறிந்திருந்தான். ஆகவே இப்பொழுது அவன் தரிசனத்தி-ருந்து வரப்போகிற உபத்திரவங்கள்

(அவன் எதிர்பார்த்திருந்த மகிழ்ச்சி, மகிமைக்குப் பதிலாக) இஸ்ரயே-ன் பாவங்களுக்காக ஏற்பட்ட தேவனின் கோபாக்கினை என்பதை அறிந்தான். ஆகவே, இஸ்ரயே-ன் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், முற்பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறவும் அவன் ஊக்கமாய் ஜெபித்தான். இது தானியேல் 9: 2-19ல் சில வார்த்தைகளில் சொல்லப்பட்டுள்ளது. இப்பொழுது நாம் பார்க்கக்கூடிய வண்ணமாக, திவ்ய திட்டத்தின் நோக்கத்தை தானியேல் பார்க்கவில்லை. இருந்த போதிலும் வாக்குத்தத்தங்களில் அவன் கொண்டிருந்த ஆர்வமும், விசுவாசமும் தேவனுக்குப் பிடித்ததாக இருந்தது. ஆகவே இந்த தரிசனத்தைக் குறித்து சற்று அதிகமாக வெளிப்படுத்தினார். மாம்சீக இஸ்ரயேலுக்கு உரித்தான அம்சங்களைக் குறித்து, சற்று விளக்கமாக வெளிப்படுத்தினார். இஸ்ரயேல் ஜனங்கள் பாபிலோனில் இருந்த வேளையில், இஸ்ரயேல் தேசத்தின் 70 வருடமாக பாழாக்கப்பட்ட நிலைமை, இப்படியாக அநேக(2300) நாட்களுக்கு நீடிக்கப்படும் அல்லது தொடரும் என்று தானியேல் நினைத்தான். தேவன் காபிரியேலை அனுப்புவதின் மூலம் 70 வருடங்கள் முடிந்தவுடன் சிறையிருப்பு முற்றுப் பெறும் என்றும் அது துன்பமான காலமாகக் காணப்பட்டாலும் எருசலேம் நகரமும், ஆலயமும் திரும்பவும் கட்டப்படும் என்றும் அறிவிக்கிறார்.

2300 நாட்கள் என்கிற தரிசனத்தைக் குறித்து தானியேல் தவறாக புரிந்து கொண்டு, பாபிலோனில் சிறையிருப்பு 70 வருடங்களுக்கு மேல் நீடிக்கப்படும் என்று நினைத்து ஜெபம் பண்ணிக் கொண்டு இருக்கும் வேளையில், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட தரிசனத்தைக் குறித்து மேலும் விளக்குவதற்காக காபிரியேல் அனுப்பப்பட்டான். எனவே தானியேல் 9: 21-27 கூறுகிறதாவது:

"அவன் எனக்குத் தெளிவுண்டாக்கி, என்னோடே பேசி: தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டு வந்தேன். நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக் கொள்ளத் தொடங்கினபோதே (மேலும்) கட்டளை (இப்பொழுது அறிவிக்கப்பட வேண்டிய தேவனுடைய திட்டம்) வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்க வந்தேன்; இப்போதும் சொல்லுகிற



வார்த்தையை கவனித்துக் கேட்டு, (மேலும்) தரிசனத்தை (2300 நாட்களைக் குறித்து) அறிந்து கொள். உன் ஜனத்தின் மேலும் (இஸ்ரயேல்) உன் பரிசுத்த நகரத்தின் மேலும் (எருசலேம்) எழுபது வாரங்கள் (70 x 7= 490 நாட்கள்) செல்லும்படி குறிக்கப்பட்டுள்ளது," முதலானவை. (இந்த தீர்க்கதரிசனத்தைக் குறித்து அறிய தொகுதி 2, அத்தியாயம் 2, பக்கம் 57ஐ பார்க்கவும்).

விசேஷமாக, இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால், 490 நாட்கள் என்பது 2300 நாட்களின் ஒரு பகுதி ஆகும். தானியேல் பாபிலோனில் இருந்து இஸ்ரயேல் விடுவிக்கப்பட வேண்டும் என்று ஜெபித்ததின் நிமித்தமாகவும் (வசனங்கள் 12, 16-18) தானியே-ன் விசேஷமான ஆர்வத்தின் நிமித்தமாகவும் இந்த பதில் கிடைத்தது. இந்த 70 வாரங்கள் அல்லது 490 நாட்கள் 2300ன் முற்பகுதியாகும். அவற்றின் நிறைவேறுதல், 2300 எப்பொழுது தொடங்கியது என்பதைக் காட்ட உதவுகிறது என்பது மட்டுமன்றி, எப்படிப்பட்டதான காலம் (சொல்லர்த்தமானதா அல்லது அடையாளமானதா) என்பதைக் குறிப்பிடவும் உதவுவதாக இருந்தது. (1 பேது. 1:11 பார்க்கவும்) இதைவிட "70 வாரங்கள்" என்கிற தீர்க்கதரிசனம், தானியேல் ஒரு உண்மையான தீர்க்கதரிசி என்று அவன்மேல் முத்திரை போடவும், அவனுடைய எல்லா தீர்க்கதரிசனங்களின் மேலும் விசேஷமாக இந்த 2300 நாட்கள் என்கிற தரிசனத்தின் மேல் முத்திரை போடவும் உதவியது. இப்படியாக 70 வாரங்கள் மற்ற விஷயங்களோடு, "தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்தரிக்கிறதற்கும்" உதவும் என்று முன் கூட்டியே அறிவிக்கப்பட்டது.

அப்படியென்றால் அடையாளமான 70 வாரங்கள் அல்லது 490 நாட்கள், வருடங்களில் நிறைவேறியது என்றும், 2300 நாட்களின் முற்பகுதி என்றும், அந்த முழு தரிசனத்திற்கு தேவனுடைய முத்திரை அல்லது அனுமதி என்று புரிந்து கொள்ளும் போது, எங்கே முழு காலமும் நிறைவேறும் என்பதைக் கணக்கிட தொடங்குகிறோம். முதலாவது வருகையில் நிறைவேறின 490ஐ 2300 ல் இருந்து கழிக்கும் போது மீந்து இருப்பது 1810 ஆகும். அதன்பின்னர் 1810 வருடங்கள் 70 வாரங்களின் முடிவி-ருந்து (தீர்க்கதரிசன அடையாளமான நாட்கள்), போப்பு சபையின் பலவிதமான அசுத்தங்கள், பாழாக்கும்

அருவருப்பு, தேவனுடைய ஆலயத்தை அநேக நூற்றாண்டு காலமாக அசுத்தப்படுத்தியவைகளில் இருந்து, பரிசுத்த ஸ்தல வகுப்பினர் சுத்திகரிக்கப்படும் காலம் வரை, கணக்கிடப்படவேண்டும்.

காண்பிக்கப்பட்டபடி மேசியாவின் மரணம் கிபி 33ல் (தொகுதி 2, பக். 62ஐ பார்க்கவும்) வசந்தகாலத்தில் இருந்தது. இது 70 வாரங்களின் கடைசி வாரத்தின் மத்தியில் இருந்தது. இதன் முழுமையான முடிவானது, கிபி 36ன் இலையுதிர்காலத்தில் கடைசி 1/2 வாரத்தில்அல்லது நமது ஆண்டவரின் 3 1/2 வருடங்கள் மரணத்திற்கு பின்னால் இருந்தது. ஆகவே, கிபி 36ன் இலையுதிர் காலத்தில் இருந்து 1810 வருடங்கள், அதாவது 1846ம் ஆண்டின் இலையுதிர் காலம், 2300 நாட்கள் என்கிற தரிசனத்தின் முடிவையும், பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட்ட வேண்டிய தேதியையும் காட்டுகிறது.

இந்த தீர்க்கதரிசனம் இப்படியாக நிறைவேறியதால், மற்ற நிறைவேறிய தீர்க்கதரிசனங்களைப் போல் இதிலும், தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதின் கருத்தை, சரித்திர புஸ்தகங்கள் தெளிவாக உணர்த்துகிறது. சரித்திர ஆசிரியர்கள் அநேக வேளைகளில் வேதத்திலும், தேவனிடத்திலும் நம்பிக்கை இல்லாமல் இருக்கும் போதும், அவர்கள் தங்களை அறியாமலேயே தேவனுடைய வேலைகளை, தீர்க்கதரிசன நிறைவேறுதல்களை தேவன் சரித்திரத்தில் எழுத வைத்துவிடுகிறார். அது எப்பொழுதும் நம்பத்தகுந்ததாகவும் அதிகார பூர்வமாகவும் உள்ளது. அப்படியாகவே, பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிக்கும் விஷயத்திலும் உள்ளது.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்த சம்பவத்தை நவீன கால சரித்திர ஆசிரியர்கள் ஒரு பெரிய சீர்திருத்தம் என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் ரோமன் கத்தோ-க்க சபை எழுத்தாளர்கள், அதை கலகம் என்று குறிப்பிடுகிறார்கள். இந்த சீர்திருத்தத்துடன் பரிசுத்த ஸ்தலத்தின் சுத்திகரிப்பு துவங்கியது என்று கூறலாம். நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், பொல்லாத நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட பல்வேறு விதமான தவறுகளால் பரிசுத்த ஸ்தலம் அசுத்தப்பட்டது. இதன் உச்ச கட்டமாக திருவிருந்து (திருப்ப- பூஜை) ஆராதனை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த தவறைத் தொடர்ந்து சேனைகள் (பேர்சபைகள்) இழிவு நிலைக்கு வந்தது. இது பாவ மன்னிப்பு சீட்டு விற்பனை செய்கிற வெட்கக் கேடான செய-ல், உச்சக்கட்டத்தை அடைந்தது. இது ஓர் அளவிற்கு சீர்திருத்த இயக்கத்திற்கு வழி வகுத்தது. பரிசுத்த ஸ்தல வகுப்பினரும் ஓர் அளவிற்கு அசுத்தப்பட்டாலும் அதாவது இந்த தவற்றினால் வஞ்சிக்கப்பட்டாலும், இதனால் வந்த பாதகமான விளைவுகளினால் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டன. இதன்படி சீர்திருத்தத்தின் முக்கியமான கருத்து (கொள்கை) என்னவெனில் “கிறிஸ்துவின் அனுதின ப-யே” போதுமானது. கிறிஸ்துவின் ப- திரும்பி செய்யப்பட வேண்டியதில்லை என்கிற விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் ஆகும். இது அந்திக்கிறிஸ்துவின் மாசுபடுத்தப்பட்ட பீடங்களில் நடத்தப்படும் திருப்ப-யினால் பாவ மன்னிப்பு பெற முடியும் என்கிற எதிர்பார்ப்புக்கு எதிரானது.



சீர்திருத்தம் தொடங்குவதற்கு இதுதான் சரியான இடம். அடிப்படையான நீதிமானாக்கப்படுதல் (சுத்திகரிக்கப்படுதல்), அன்றாட ப-யில் உள்ள விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்கிற நிலை இருந்தபோதிலும், சேனைகளை சுத்திகரிப்பதைக் குறித்து இந்த இடத்தில் தீர்க்கதரிசனம் குறிப்பிடவில்லை என்பதை கவனிக்கவும், இது பரிசுத்த ஸ்தல வகுப்பினர் சுத்திகரிப்பதை மட்டுமே குறிப்பிடுகிறது. சேனைகள் சுத்திகரிக்கப்படவில்லை. இன்றைக்கும் கூட அவர்கள் அந்த தவறை கடைப்பிடிக்கிறார்கள். ஆனால் அர்ப்பணம் செய்து கொண்ட வகுப்பினராகிய பரிசுத்த ஸ்தல வகுப்பினர் இந்த தவறை உதறித் தள்ளினார்கள், சத்தியத்தினிமித்தம் உபத்திரவத்தை அனுபவித்தார்கள், அநேகர் மரணத்தையும் சந்தித்தார்கள்.

ஆனால் இது சுத்திகரிக்கும் நிலையின் ஆரம்பம் மாத்திரம் தான். இந்த வகுப்பினர் இப்பொழுது விழித்துக் கொண்டு இந்த தப்பறைகள் விருத்தியடைந்து இவைகளை போப்பு சபை செயல்படுத்தி பயனடைந்தது என்பதை கண்டு கொண்டார்கள். லூதர், சீர்திருத்தத்தின் முன்னணியில் இருந்தவர், ஒரு தப்பறையை மட்டுமல்ல, அநேக தவறுகளையும் வெளியே தூக்கி எறிய முயற்சித்து விட்டன்பர்க் (Wittenberg) என்கிற இடத்தில் உள்ள ஆலயத்தின் கதவில்

*1517 அக். 31ந் தேதி, 95 நியாயங்களை எழுதி ஆணியடித்தார். அவைகள் எல்லாம் போப்பின் உபதேசங்களுக்கு எதிரானவைகளாகும். அதில் 27வது ஷரத்து, மனிதனுக்கு இயற்கையாகவே அழியாத்தன்மை உண்டு என்று கூறிக்கொள்வதை மறுப்பதாகும்.*

*போப் பத்தாம் -யோ இந்த புதுக்கருத்துக்கள் பயித்தியக் காரத்தனமானது என்று நிராகரித்தபோது, லூதர் தனது பதி-ல் (கிபி 1520) பொருட்களின் தன்மையை மாற்றுதல் (அப்பமும் ரசமும் சரீரமாகவும் ரத்தமாகவும் மாறுதல்), மனிதனின் அழியா தன்மை என்கிற உபதேசங்களை கடுமையாக தாக்கியதுடன், போப் தன்னை "உலகத்தின் சக்கரவர்த்தி, பரலோகத்தின் இராஜா, பூமியின் மேல் உள்ள கடவுள்" என்று கூறிக் கொள்வதையும் எதிர்த்து, "**ரோமர்களின் எருக் குவிய-ல் காணப்பட வேண்டிய இராட்சத கருத்துக்கள்**" என்று கூறி நிராகரித்தார்.*

*ஆனால் ஐயோ, மிக கௌவரத்துடனும், துணிச்சலுடனும் ஆரம்பிக்கப்பட்ட "சுத்திகரிக்கும்" வேலை பிரபலமடைய மிக தீவிரமாக இருந்தது. மேலும் லூதரும் அவருடன் இருந்தவர்களும் அவர்களுடைய வழி முறைகள் இந்த உலகத்தின் ஞானத்திற்கும் ஏற்றது போல் இருந்தால் அவர்களுக்கு உதவி, வெற்றி கிடைக்கும் என்கிற நயம் காட்டும் வார்த்தைகளால் வஞ்சனையாக ஓர் அளவுக்கு மேற்கொள்ளப்பட்டார்கள். (தானி 11: 34,35) அநேக நூற்றாண்டுகளாக நடுங்கிக் கொண்டிருந்த இராஜாக்களுக்கு முன்பாக, இப்படியாக துணிகரமாக தாக்கிய தைரியமுள்ள சீர்திருத்தவாதிகளை கண்டு, அநேக ஜெர்மானிய இளவரசர்கள் அவர்களுடைய அணுகுமுறையையும், தைரியத்தையும் கண்டு, அவர்களுடைய செயல்பாட்டை மெச்சுகிறவர்களானார்கள். இந்த இளவரசர்கள், சீர்திருத்தவாதிகளுக்கு உதவி செய்தார்கள். அவர்களுடைய உதவி இந்த இயக்கம் வெற்றி பெறுவதற்கு இன்றியமையாததாக தோன்றியது. இந்த உதவிக்குப் பதிலாக தங்களுடைய இராஜரீக உரிமைகளை சீர்திருத்தவாதிகள் மதிக்கப்பெற்றார்கள் (?).*

*இந்த சீர்திருத்த இயக்கம், மத கொடுங்கோன்மைக்கு எதிரான ஒரு புரட்சியாக மாத்திரமல்லாது, அரசியல் கொடுங்கோன்மைக்கும் எதிரானதாகவும் இருந்தது. இந்த இரண்டு*



*வித சீர்திருத்தவாதிகளும் அதிக பட்ச இரக்கத்தையும், ஒத்துழைப்பையும் கொண்டு வந்தார்கள். இந்த சீர்திருத்த காலங்களை குறித்து பேராசிரியர் பிஷர்* (Fisher's Universal History PP.402-412) *இப்படியாக கூறுகிறார் :*

*"சுவிட்சர்லாந்து தேசத்தில் ஒழுக்க நெறிமுறைகளும், அரசியல் முறைமையும் மறுபிறப்பைப் பெற வேண்டும் என்கிற நாட்டுப் பற்றுடன் "ஸ்விங்கி-* (Zwingli) *என்கிற சபை சீர்திருத்தவாதியின் முயற்சிகள் இருந்தன."*

*ஜான் கேல்வின்* (John Calvin) *என்பவரின் காலம் மற்றும் ஜெனிவாவில் உள்ள அரசாங்கத்தை குறித்து - "அரசாங்க புரட்சியைத் தொடர்ந்து மத புரட்சி வந்தது. புரட்டஸ்டன்ட் அமைப்பு சட்ட ரீதியாக ஸ்தாபிக்கப்பட்டது (1535). கேல்வின்* (Calvin) *பட்டணத்திற்கு சட்டதிட்டத்தை வழங்குகிற ஒரே நபரானார். அது ஒரு கிறிஸ்தவ மத நாடு."*

*ஸ்காண்டிநேவியாவைக் குறித்து - "ஸ்காண்டிநேவியாவைச் சேர்ந்த தேசங்களில் அரசரின் அதிகாரம் சீர்திருத்தங்களால் எழுப்புதலைப் பெற்றது."*

*டென்மார்க் தேசத்தைக் குறித்து - "புதிய புரட்டஸ்டன்ட் உபதேசம் வந்துவிட்டது. பரவிக்கொண்டு இருக்கிறது. ஆலயத்தின் (ரோமன் கத்தோ-க்க) சுயாதீனங்களை இச்சித்தவர்கள் அதை ஆதாரித்தார்கள்."*

*சுவீடன் நாட்டைக் குறித்து - "ஒரு பெரிய அரசியல் புரட்சி ஏற்பட்டது, அது மதப் புரட்சியையும் சம்பந்தப்படுத்திக் கொண்டது."*

*ஜெர்மெனியைக் குறித்து - "புரட்டஸ்டன்ட்" அரசர்களுக்கு ஏற்பட்ட அச்சுறுத்த-ன் காரணமாக, ஒருவருக்கொருவர் பாதுகாப்பிற்காக* League of Smalcald *என்ற அமைப்பை ஏற்படுத்தினார்கள். லூத்ரன் சபையினருக்கு எதிராக அடக்கு முறையை கையாள்வது இயலாதது என்று கண்டுகொள்ளப்பட்டது.* Augsburg *என்கிற இடத்தில் 1555ம் ஆண்டு நடந்த பிரதிநிதி சபையில் மத உடன்பாடு ஏற்பட்டது. ஒவ்வொரு அரசரும் கத்தோ-க்க சபை அல்லது* Augsburg Confession *(சீர்திருத்தவாதிகளுடையது) இரண்டில்*

ஒன்றை தெரிந்தெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். அரசர் தெரிந்தெடுத்துக் கொண்ட மதம், அவர் நாட்டின் மதமாக இருக்க அனுமதிக்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு அரசாங்கமும் தனது பிரஜைகளுக்கென மத கோட்பாடை தெரிந்து கொள்ளும்படி அனுமதிக்கப்பட்டது."

சொல்லப்போனால், அந்த வேளையில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலைகளோடு கூட, போப்பின் ஆட்சியில் உள்ள ஒழுக்கம் மற்றும் உபதேசம் பற்றிய தவறுகளுக்கு சீர்திருத்த தலைவர்கள் கூட அப்பொழுதுதான் விழித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். சரியான திசையில் அவர்கள் அதிவேகமாக சென்றது, சுத்திகரிப்பை முழுமையாக மேற்கொள்ளாததை குறித்து நாங்கள் குறை கூறாதபடிக்கு எங்களை ஆச்சரியப்பட வைக்கிறது. ஆனால் புரட்டஸ்டன்ட் சபைகள் அரசாங்கத்தோடு ஐக்கியம் ஆன போது முன்னேற்றமும், சீர்திருத்தமும் அப்படியே நின்றுவிட்டது. வெகுவிரைவில் விசுவாசக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. அந்தக் கோட்பாடுகள் ரோம சபையின் கட்டளைகளை விட சத்தியத்திற்கு நெருக்கமாக இருந்தாலும், பிடிவாதமானவைகளாகவும், அறிவு வளர்ச்சியை எதிர்ப்பதாகவும் இருந்தன.

போப்பின் ஆட்சியில், சத்தியத்திற்கு கெடுதல் விளைவித்த சபைக்கும் தேசத்திற்கும் இடையில் இருந்த இதே விதமான ஐக்கியம் சாத்தானின் தந்திரத்தால் ஏற்பட்டதாகும். இதன் மூலம் சத்துரு, இவ்வளவு கண்ணியத்துடன் ஆரம்பிக்கப்பட்ட "பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிப்பதை" தந்திரமாக தடை பண்ணினான். சீர்திருத்தமும் சுத்திகரிப்பும், சிறிது காலத்திற்குள் நின்று விட்டது. சுத்திகரிப்பை தொடர்ந்து செய்யாமல் சீர்திருத்தவாதிகள் தங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும், இதற்கு முன்னால் அதிகமாக குறை சொல்லப்பட்ட போப்பின் பழைய கொள்கைகளில் பெரும்பாலனவைகளுக்கு மெருகூட்டவும், புதுப்பிக்கவும் கவனம் செலுத்தினார்கள். இப்படியாக, சாத்தான் தந்திரமாக தாங்கள் இதற்கு முன்னர் ரோம சபையில் எதிர்த்த, அதே வேசித்தனத்திற்குள் (சபையும், அரசியலும் ஐக்கியமாயிருத்தல்) அவர்களை அழைத்துச் சென்றான். இப்படியாக



போப்பின் ஆட்சி பெற்றிருந்த சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. (வெளி. 13:3)

ஆனால், இப்படியாக ஆரம்பிக்கப்பட்டு, இடையில் நின்றுவிட்ட சுத்திகரிப்பு மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டு தொடர வேண்டும். ஏனெனில் 2300 வருடங்கள் முடியும் போது பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட்டிருக்க வேண்டும். அதன்படியே நடந்துள்ளது. விசுவாசத்திற்கு ஆதாரமாக இருப்பது வேதாகமம் மாத்திரமே. இதன் மூலம் சீர்திருத்தம் ஆரம்பித்தது, ஆழமாக விதைகளை நாட்டினது. இது மறுபடியுமாக துளிர்விட ஆரம்பித்தது. சீர்திருத்தம் ஒவ்வொன்றாக வர ஆரம்பித்தது. முன்னணியில் இருந்த சீர்திருத்தவாதிகள் தாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு மேற்பட்டு வளரவிடாதபடி துரிதமாக அதை தடை பண்ணிய போதிலும் மறுபடியும் மறுபடியும் அது துளிர்விட ஆரம்பித்தது. இதை தடை பண்ணுவதற்காக, கோட்பாடுகளையும், விசுவாசத்திற்கு எல்லைகளையும் வகுத்ததோடு, வேதாகமத்தின் போதனைகள், எதுவாக இருந்தாலும் சமய பேதமுள்ளவன் என்கிற வெறுப்பை தங்கள் மேல் வரவழைத்துக் கொள்ளாத நிலையில், இதற்கு மேற்கொண்டு ஒருவரும் போக அனுமதிக்கப்படவில்லை.

லூதரின் நாளில் இருந்து, இன்றுவரை சபையின் பாதையைப் பார்க்கும் போது படிப்படியாக சீர்திருத்தம் அல்லது சுத்திகரிப்பு ஏற்பட்டு வந்திருக்கிறது என்பதைக் காணலாம். ஒவ்வொரு சீர்திருத்த குழுவினரும் தங்களுடைய சிறிதளவான சுத்திகரிப்பை முடித்தவுடன் அப்படியே நின்று மற்றவர்களோடு இணைந்து இனியும் வரக்கூடிய சீர்திருத்தத்தை அல்லது சுத்திகரிப்பை எதிர்த்தார்கள்.

இப்படியாக இங்கிலாந்து சபை, ரோம சபையின் சில மூடத்தனமான உபதேசங்களையும், பழக்கவழக்கங்களையும் ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு, அதுதான் உண்மையான சபையென்றும், அதன் பிஷப்புகள் அப்போஸ்தலருக்கு அடுத்து வந்ததாகவும், அதன்படி தேவனுடைய சபையின் மேல் முழு உரிமையை பெற்றவர்கள் என்றும் கூறிக்கொண்டார்கள், இன்றும் அப்படியே கூறிக்கொள்கிறார்கள். இந்த ரோம சபையின் மகள் "தாயை" விட்டு பிரிந்து, இங்கிலாந்து தேசத்தால் நீட்டப்பட்ட கரத்தை

பிடித்து, சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்திதான் அந்த சபையின் தலைமை என்று அவரை தலைவராக்கினாள். இருந்த போதிலும் மகளாகிய லூதரிடம் இருந்து வந்தது ஒரு சரியான திசையில் ஏற்பட்ட பூர்த்தியடையாத ஒரு சீர்திருத்தம்,சுத்திகரிப்பு ஆகும். கேல்வின் (Calvin), நாக்ஸ் (Knox) இன்னும் மற்றவர்களும் நடந்து முடிந்த சம்பவங்களைக் குறித்து தேவன் முன் கூட்டியே அறிந்திருந்தது,போப்பின் ஆட்சியில் உள்ள குப்பை போன்ற விஷயங்களால் கண்ணில் படாமல் போயிற்று என்பதை கண்டு பிடித்தனர்; மேலும் தேவனுடைய திட்டங்களின் வெற்றி, தவறக்கூடிய மனிதர்களைச் சார்ந்து இருக்கிறது என்கிற எண்ணத்தை ஒதுக்கிவைத்ததோடு, அவர்களுடைய உபதேசங்கள், சபையின் வெற்றி, தேசத்தின் மாம்சீக ஆயுதங்கள் மேல் சார்ந்து நிற்கவில்லை என்பதையும் கண்டனர். அநேகரால் கண்டு கொள்ளத்தக்கதாக இந்த மனிதர்கள் பெரிய உயர்வான வேலைகளைச் செய்தார்கள். அது அதிக நல்ல கனிகளைத் தந்தது. இருந்தாலும் தவறு என்று அறியாமலே, மற்ற தவறுகளால் கண் குருடாக்கப்பட்ட நிலையில் பரலோக இராஜ்யத்திற்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தவிர மற்றவர்கள் அனைவரும் நித்திய ஆக்கினை தீர்ப்பளிக்கப்பட்டார்கள் என்ற தப்பறையை சரியானது தான் என்று கூறினார்கள். வெகு சீக்கிரத்திலே அவர்களுடைய உபதேசங்கள் பிரிஸ்பட்டேரியன் சபை என்கிற பெயரில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மேலும் திவ்ய கட்டளை மாற்றப்பட முடியாதது என்று அறிவிக்கப்பட்டதைத் தவிர, சீர்திருத்தத்திற்கு அல்லது சுத்திகரிப்புக்கு என்று செய்யப்பட்டது வெகு சிறிதளவுதான். மற்ற சபைகள் செய்தது போன்று பிரிஸ்பட்டேரியன் சபையும் சுத்திகரிப்பின் வேலையை தடை பண்ணவும், இடையூறு விளைவிக்கவும் அதிகமாக செயல்பட்டுள்ளது.

வெஸ்- (Wesley) யும் உடன் இருந்தவர்களும் அவர்கள் நாட்களில் காணப்பட்ட அனலற்ற தன்மையையும், சில விஷயங்கள் கடமைக்காக செய்யப்படுவதையும் கண்டு வருத்தப்பட்டு, சபையும் தேசமும் இணைந்திருப்பதால் இயல்பாகவே வரக்கூடிய அனலற்ற நிலைமையை அகற்றவும், தனிப்பட்ட விசுவாசத்தினாலும் கிறிஸ்துவோடு கொண்டுள்ள ஐக்கியத்தின் மூலமாகவும் தனிப்பட்ட பரிசுத்தம் அவசியமானது என்பதைக் காட்டவும் முயற்சித்தனர். கிறிஸ்தவ அரசாங்கத்தின் கீழ் பிறந்திருப்பதாலும், இப்படி சபையும் தேசமும் இணைந்திருக்கும் போது, அப்படியான ஒரு சபையின் பிறப்பில் இருந்து அங்கத்தினராக இருப்பதால், அதை கிறிஸ்தவம் என்று அழைக்க முடியாது என்றும் கற்றுக் கொடுத்தார்கள். இது வரைக்கும் இது அருமையான வேலையாக இருந்தது. இது தேவையான சுத்திகரிப்பின் ஒரு பகுதி தான். ஆனால் ஆதி சபையின் எளிமையின் பரிபூரணத்திற்கு கடந்து செல்லாமல், சுத்திகரிப்பு சீர்திருத்த வேலை முற்றுப் பெற்று விட்டது என்று வெஸ்- (Wesley) தீர்மானித்து, மற்றவர்களோடு இணைந்து மெதடிஸ்ட் சபையை ஒழுங்குப்பண்ணத் தொடங்கியதுடன், மேற்கொண்டு வளர்ச்சியும், சுத்திகரிப்பும் இல்லாமல் போகட்டும் என்று எண்ணி அதை சுற்றி வே-யடைப்பது போன்று மெதடிஸ்ட் சபையின் கோட்பாடுகள் முறைகள், தகுதிகள் என்கிற வ-மையான தடைகளை ஏற்படுத்தினார். தேவன் ஒருவரே, மனுக்குலம் முழுமைக்கும் மீட்பு உண்டு என்கிற நல்ல சத்தியங்களோடு மாசுபடுத்தும் தப்பறைகளையும் கொண்டு வந்ததால் அதற்கேற்றாற்போல் மற்றவைகளைப் போல சில வெற்றியும் சில தோல்வியும் கண்டன.

பேப்டிஸ்ட் (Baptists) என்று அழைக்கப்படுவர்கள், பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிக்கும்படியாக எடுக்கப்பட்ட இன்னொரு முயற்சியில் ஈடுபட்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஞானஸ்நானத்தைக் குறித்து போப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட விசுவாசியாக இல்லாத கைக்குழந்தைக்கு தண்ணீர் தெளித்து ஞானஸ்நானம் கொடுப்பது தவறு, அது விசுவாசிக்கு மாத்திரமே உரியது; மேலும் தண்ணீர் தெளிப்பது என்கிற உபதேசம் எவ்விதத்திலும் கிறிஸ்துவினுடையது அல்ல என்பதை உணர்த்துவதின் மூலம், பரிசத்த ஸ்தலத்தை சுத்திகரிக்கும் இன்னொரு முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். சரியான வெளிப்படையான ஒரு அடையாளத்தைக் கற்றுக் கொடுப்பதைத் தவிர பேப்டிஸ்ட் (Baptists) பெரிய அளவில் முன்னேற்றம் ஏதும் தரவில்லை. இப்பொழுதும் மேற்கொண்டு சுத்திகரிப்பு நடைபெறுவதற்கு ஓர் இடையூறாக மற்றவர்களோடு சேர்ந்து எதிர்ப்பைத் தெரிவிப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

பின்னால் வந்த இன்னொரு சீர்திருத்தம் "கிறிஸ்தவ சபை (The Christian Church)" அல்லது "சீடர்கள் (The Disciples)" என்று அழைக்கப்படுகிறது. இது 1827ல் அலெக்ஸாண்டர் காம்பெல் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுடைய சபையில் எளிமையை பரிந்துரைத்தார்கள். வேதாகமம் தான் கொள்கை. கிறிஸ்துவின் கீழ் உள்ள எல்லா அங்கத்தினர்களும் சமமானவர்கள். அவர்களுக்கு கிறிஸ்துவே தலைவர். இதன்படி Reverend, Doctor of Divinity போன்ற பட்டங்கள் ரோம சபைக்குரியது. அது கிறிஸ்துவின் ஆவிக்கும் தூய்மையான கிறிஸ்தவத்திற்கும் எதிர்மாறானது. ஏனெனில் "நீங்கள் எல்லோரும் சகோதரராயிருக்கிறீர்கள். கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆண்டவர்." சுத்திகரிப்பும், செய்யப்பட்ட விதமும் அதை செயல்படுத்திய வரை நல்லதுதான். அது எல்லா சபை பிரிவுகளிலும் உள்ளவர்களில் சிலரின் மனங்களில் நல்ல கனி தந்திருக்கிறது. ஆனால் இந்த சபை மற்றவைகளைப் போன்றே சீர்திருத்தத்தை மேற்கொண்டு செய்ய முயற்சிக்கவில்லை. சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்கிற அதன் வாஞ்சையும் செத்துவிட்டது. வேதாகமம் மட்டும் தான் கோட்பாடு (Creed) என்று கூறிவிட்டு சத்தியத்தில் முன்னேறிச் செல்லாமல் அதே இடத்தில் சுற்றி வருகிறது. மனிதர்களின் கோட்பாடுகளில் இருந்தும் அடிமைத்தனத்தில் இருந்தும் விடுதலை என்று கூறிக்கொண்டு, அது சுதந்தரத்தை உபயோகிக்கவில்லை. ஆகவே, உண்மையாகவே அது ஆவியில் கட்டப்பட்டு இருக்கிறபடியால் கிருபையிலும் அறிவிலும் வளரவில்லை. அது எழுதப்பட்ட எந்த கோட்பாட்டினாலும் கட்டுப்பட்டு இருக்காவிட்டாலும், மனிதர்களின் கனத்தையும், பழக்கவழக்கங்களையும் மதிக்கிறபடியாலும், தனக்குள்ளாகத்தானே திருப்தி அடைந்து இருக்கிறபடியினாலும், அது சீக்கிரத்திலே ஒரே இடத்திலே நிலைத்து நின்று விட்டதுடன், பரிசுத்த ஸ்தலத்தை மேற்கொண்டு சுத்திகரிக்கும் வேலையில் தூங்கிவிட்டது. அதன் முந்தைய நிலையில் இருந்து இழிவான நிலைக்கும் வந்துவிட்டது.

ஒரு சில சீர்திருத்த இயக்கங்களையும், சீர்திருத்தவாதிகளையும் மட்டும் நாம் குறிப்பிட்டு இருக்கும் போது, மற்றவர்களை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது உதாசீனப்படுத்துகிறோம் என்று எண்ணிவிடக்கூடாது. சீர்திருத்தம்



பொதுவானதாக இருந்திருக்கிறது. எல்லா உண்மையான, வாஞ்சையுள்ள கிறிஸ்தவர்களுக்கும் அதில் ஒரு பங்கு உண்டு. ஆரம்பத்தில் கிடைத்த பயிற்சியினால், மனம் முன்கூட்டியே சில தீர்மானங்களை பண்ணியிருந்தபடியால் பெரிதான தவறுகளை சிலரால் தான் காண முடிந்தது. சுத்திகரிப்பின் வேலையைத் தொடர்ந்து செய்யவேண்டியதின் அவசியத்தையும் சிலரால் தான் காண முடிந்தது. இவைகள் நம்முடைய சத்துருவுக்கு அனுகூலமாகத் தென்பட்டது. அவனும் பரிசுத்தவான்களை தடை பண்ணவும், சுத்திகரிப்பின் வேலையில் இடையூறுகளை உண்டு பண்ணுவதிலும் தாமதம் காட்டவில்லை.

இன்னொரு சீர்திருத்தமானது சில விஷயங்களில் மற்றவைகளை விட அதிகமாக செயல்பட்டது. முந்திய அத்தியாயத்தில் சுருக்கமாகக் குறிப்பிட்டது போல் கடைசியில் கூறப்பட்ட சீர்திருத்தத்திற்கு பின்னால் ஆரம்பிக்கப்பட்டது. பேப்டிஸ்ட் சபையைச் சேர்ந்தவர் மாசாசூசெட்ஸ் (Massachusets) நகரில் உள்ள வில்-யம் மில்லர், இந்த சீர்திருத்தத்தை ஸ்தாபிக்க காரண கர்த்தாவாக இருந்தார். அவர் தேவனுடைய திட்டத்தில் உள்ள காலத்தைக் குறித்தும், ஒழுங்குமுறைகளைக் குறித்தும், வேதாகமம் சில காரியங்களை வெளிப்படுத்துகிறது என்கிற உண்மையை, சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார். அவர் தீர்க்கதரிசிகள் குறிப்பிட்டுள்ள காலத்தைக் குறித்தும், அதோடு கூட உண்மையிலேயே ஞானவான்கள் ஏற்ற காலத்தில், அதை புரிந்து கொள்வார்கள் என்று கூறியிருப்பதையும் கண்டார். அவர் அந்த வகுப்பினரில் ஒருவராக இருக்க விரும்பினார். அவர் அதைக்குறித்து ஆராய்ந்து பார்க்கும் போது, ரோம சபையின் பாரம்பரியத்திற்குள் காணக்கிடைக்காத சில ஆர்வமூட்டக் கூடிய விஷயங்கள் இருப்பதையும் கண்டார். ஆண்டவரின் முதலாவது வருகை உலகத்தை விலைக்கிரயம் கொடுத்து வாங்க இருந்தது போன்று, இரண்டாவது வருகை விசுவாசிகளுக்கு தேவனுடைய ஜீவன் கொடுக்கிற ஆசீர்வாதங்களை அளிப்பதற்காக உள்ளது என்பதைக் கண்டார். உண்மையிலேயே மீட்கும் பொருளும், மீட்பும் ஒரே மீட்பின் திட்டத்தில் இரண்டு பகுதிகளாகும்.

ஒரு நேர்மையான, ஆர்வம் உள்ள இருதயம் இப்படிப்பட்ட

நல்ல செய்தியை உணரும் போது அதை அறிவிக்காமல் இருக்க முடியாது. அதை அவர் செய்தார். இந்த சத்தியத்தை அறிந்ததினால் சில தப்பறைக்குள் இருப்பவர்கள் மத்தியில் அவர் ஒரு சுத்திகரிப்பின் வேலையை செய்தார். உதாரணமாக நம்முடைய ஆண்டவரின் இரண்டாவது வருகையானது அவர் தமது இராஜ்யத்தை ஏற்படுத்தி சபையை உயர்த்துவதற்காக இருக்கிறபடியால், பூலோகத்தில் உள்ள இராஜ்யங்களுடன் சம்பந்தப்பட்ட சபைகள் (அவைகளில் பெரும்பாலானவைகள் தங்களை தேவனுடைய இராஜ்யம் என்று கூறிக்கொண்டு, அதினிமித்தம் இப்பொழுது ஆட்சி புரியவும், ஆளுகை செய்யவும் உரிமையை பெற்றிருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள்) கூறுவது வெறும் யூகமாகத்தான் இருக்க வேண்டும். எப்படியெனில் கிறிஸ்துவின் இராஜ்யம் இன்னும் ஏற்படுத்தப்படாவிட்டால், இப்பொழுது ஏற்படுத்தப்பட்டவைகள் "இந்த உலகத்தின் அதிபதியினால்" (சாத்தான்) உயர்த்தப்பட்டதாக மட்டுமே இருக்க முடியும். இந்த ஆட்சியாளர்கள் யார் என்பதை அறியாதவர்களாக சாத்தானுக்காகத் தான் அவர்கள் வேலை செய்து கொண்டு இருக்க வேண்டும்.

திரு.மில்லர் அவர்களது பிரசங்கம் இயற்கையாகவே மனிதன் அழியாத தன்மை உடையவன் என்கிற தவறை அகற்ற வழிவகுத்தது. மனிதன் இயல்பாகவே அழியாத்தன்மை உடையவன் என்கிற கருத்து வெகுகாலமாகவே இருந்து வந்திருக்கிறது. அதாவது ஒரு முறை அவன் சிருஷ்டிக்கப்பட்ட பின்னர் அவன் ஒரு போதும் மரிக்க இயலாது. மரணம் என்பது வெறும் மாயைதான். மனிதன் மரணம் அடைவது போன்று தோற்றம் அளிக்கிறான். உண்மையிலேயே அப்படியில்லை. ஆனால் அவன் உருவம் மாறி பரிணாமத்திற்குள் செல்கிறான். மற்றவர்களைப் போன்றே திரு. மில்லரும் இவைகளை நம்பினார். ஆனால் அவர் விசேஷமாக ஆண்டவருடைய வருகை, மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றிய உண்மைகளை பார்க்கும்படி அவர் கவனம் செலுத்தியபோது முதலாவதாக, இந்த தவறை சுட்டிக்காட்டினார். இந்தக் கொள்கை ஒருவரும் மரிப்பதில்லை, ஆகவே, மரித்தோர் உயிர்த்தெழுதல் கிடையாது, ஆகவே ஆண்டவரின் இரண்டாவது வருகையும் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் தேவையில்லை என்று போதிக்கிறது.



இதைக் குறித்த விரிவான ஆராய்ச்சியை இன்னொரு புத்தகத்தில் காணலாம். அதில் நாம் சாவாமையும், நித்திய ஜீவனும் கிறிஸ்துவின் மூலமாகவே கிடைக்கக்கூடிய நன்மைகள், அவைகள் துன்மார்க்கருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்படவும் இல்லை, கொடுக்கப்படுவதும் இல்லை என்று காட்டுவோம். மனிதன் சாவாமையுடையவன் என்ற கருத்து ரோம சபையின் உத்தரிக்கும் ஸ்தலம் என்கிற போதனையி-ருந்து வந்த கருத்தாகும். இதைக் காட்டிலும், புரட்டஸ்டன்ட் சபையாரின் போதனையான நித்திய ஆக்கினை என்பது, இன்னும் மிகவும் மோசமானதாக உள்ளது. அவர்கள் கூறும் காரணம் என்னவென்றால், மனிதன் நித்திய காலமாக ஜீவிப்பவன் என்றால் (சாவாமை உள்ளவன் என்றால் தேவனால் கூட அவனை அழிக்க முடியாது) அவன் ஒன்று நித்திய சந்தோஷத்தில் அல்லது நித்திய துன்பத்தில் ஜீவிக்க வேண்டும். ஆகவே அவர்கள் கூறுகிறார்கள், அவன் மரணத்தில் அவனுடைய நித்தியமான நிலைக்குள் அடைக்கப்படுகிறான். அதன் பிறகு பெரும்பாலோர் நித்திய ஆக்கினையை அனுபவிக்க வேண்டும். ஏனெனில் தற்போதைய வாழ்க்கையின் சில வருடங்களில், ஒன்று சரியான வழியைக் குறித்த ஒரு அறிவைப் பெற்றுக் கொள்ள தவறிவிட்டனர். அல்லது அவர்கள் பெற்றுக்கொண்ட அறிவின்படி தங்கள் இயல்பான பெலவீனம் போன்றவைகளால், நடக்க முடியாமல் போய்விட்டனர்.

இந்த நாசமாக்கும் தப்பறைகளின் பெரிய வேரானது குறித்த காலத்தில் அறிவிக்கப்படவேண்டிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, உயிர்த்தெழுதல் போன்ற போதனைகளால் பிடுங்கி எறியப்பட்டது. புத்திக்கூர்மையுள்ள, சிந்திக்கக்கூடிய ஜனங்கள் ஆச்சரியத்துடன் பின்வருமாறு நினைக்கத் தொடங்கினார்கள்: அவர்கள் பரலோகத்தில் அல்லது நரகத்தில் இருந்தால், அவர்களுடைய நிலை மாற்றப்பட முடியாமல் இருந்தால், ஆண்டவர் ஏன் மரித்தோரை உயிர்ப்பிக்கவேண்டும்? மேலும், மரித்தவர்கள் உயிரோடு இருக்கையில் அவர்கள் ஏன் மரித்தவர்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்று ஆச்சரிப்பட ஆரம்பித்தனர். அதன்பிறகு மரித்தோர் இன்றும் உயிரோடு இருப்பதைக் குறித்து நம்முடைய ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் ஏன் ஒன்றும் கூறவில்லை? அதற்கு மாறாக, எப்பொழுதுமே உயிர்த்தெழுதல்

மாத்திரமே ஒரே நம்பிக்கை என்று அதை சுட்டிக்காட்டினார்கள்; உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் எல்லோரும் “கெட்டிருப்பார்களே” (1 கொரி. 15 : 13-18) என்றும் கூறினார்களே என்று ஆச்சரியப்பட்டார்கள். அதன்பிறகு, நம்முடைய ஆண்டவர் கூறிய வார்த்தைகளான, “பிரேதக் குழிகளில் உள்ள அனைவருக்கும்” ஒரு விழிப்பை வாக்குத்தத்தம் பண்ணியிருப்பது ஓர் அர்த்தத்தைக் கொடுக்க தொடங்கியது. ஆகவே மரித்தோர் உயிரோடு இல்லை. மரணம் என்பது ஜீவனுக்கு எதிர்மாறானதைக் காட்டுகிறது என்பது படிப்படியாக அவர்களுக்கு விளங்கத் துவங்கியது. இதைத் தேடியவர்கள், இந்த விஷயத்தில் வேதம் மிகவும் இசைவாக இருக்கிறது என்பதையும், ஆனால் போப்பு சபையில் இருந்து பெற்றுக் கொண்ட பொதுவான பாரம்பரியங்களுக்கு நேர்மாறாக உள்ளது என்பதையும் கண்டார்கள்.

இப்படியாக தப்பறையின் வேர் பிடுங்கப்பட்டு, அதன் பல்வேறு கிளைகளும் காய்ந்து போகத் தொடங்கின; வெகு சீக்கிரத்திலே, துன்மார்க்கருக்கு நித்திய தண்டனை கொடுக்கப்படுகிறது என்பதற்கு மாறாக, தேவனுடைய திட்டம் வேதாகமம் கூறுகிறபடி உள்ளது என்று கண்டு கொள்ளப்பட்டது. மேலும், நித்திய ஜீவன் என்பது நீதிமான்களுக்கான வெகுமதி என்றும், மரணம் என்பது துணிகரமான பாவிகளுக்கு கொடுக்கப்படுகிற தண்டனை என்றும் கண்டு கொள்ளப்பட்டது.

அதன்பின், ஆதாமின் கீழ்ப்படியாமையால் மனுக்குலத்தின் மேல் வந்த மரணம் என்கிற சாபம் என்றால் என்ன என்பதையும், முழு மனுக்குலமும் அழிவுக்குள்ளாக ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாகப்பட்டது குறித்தும் அறிந்து கொண்டார்கள். அதன் பின்னர் நம்முடைய மீட்பரின் மரணம் விலைமதிப்பற்றது. அது மனுக்குலமானது உயிர்தெழுதலைப் பெறவும் ஜீவனையும் அதன் உரிமைகளையும் மறுபடியும் பெறவும் மனுக்குலத்திற்காக செலுத்தப்பட்ட விலைக்கிரயம் என்பது திரை நீக்கப்பட்டவுடன் கண்டு கொள்ளப்பட்டது. ஆ! அப்பொழுது மீட்கும் பொருள் என்பதின் அர்த்தம் புரியத் தொடங்கியது. ஏனெனில், பாவம் அறியாத அவர் சபிக்கப்பட்டவராக நடத்தப்பட்டார்; அவர் நமக்காக சாபமாகி



நமக்காக பாவியாக நடத்தப்பட்டார்; அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராக மரித்தார்.

இப்படி கடைசியாக பாழ்க்கடிப்பை உண்டு பண்ணுகிற வஞ்சகம் என்கிற பெரிய முறைமை, அன்றாட ப-யை நீக்கிய முறைமை அகற்றப்பட்டது. பரிசுத்த ஸ்தலம் விடுவிக்கப்பட்டது அல்லது சுத்திகரிக்கப்பட்டது. இயேசுவின் “அன்றாட ப-யின்” மதிப்பு புதுப்பிக்கப்பட்ட நிலையில், அழகில், வல்லமையில் காணப்பட்டது.

இந்த பாழாக்கும் அசுத்தத்தி-ருந்து, பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட்டது என்று கூறும் போது, வேதாகமத்தில் சபையின் ஒரு பங்கினர் என்பது, முழுமையான சபையைக் குறிப்பதில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு வகுப்பினர் இந்த அசுத்தமான வஞ்சகத்தி-ருந்து விடுவிக்கப்பட்டனர். இப்படிப்பட்ட சிலருடன், தேவன் தம்முடைய போதனை மற்றும் வழி நடத்துத-ன் கீழ் உள்ளவர்களை அனுதினமும் சேர்த்துக்கொண்டு வருகிறார்.

தன்னுடைய கணக்கின்படி என்ன நடக்கும் என்று திரு. மில்லர் யோசித்தது சரியானதல்ல. உண்மையான நெருப்பின் மூலம் பூமி பொல்லாப்பி-ருந்து விடுவிக்கப்படும், இதில் பூமி எரிந்து போகும், இதுதான் பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிப்பது ஆகும் என்று அவர் நினைத்தார். அதன்பிறகு, அவருடைய எதிர்ப்பார்ப்பு பிழையானது, அவருடைய போதனையின்படி, “உம்முடைய இராஜ்யம் வருவதாக” என்கிற ஜெபத்தின் நிறைவேறுதலாக, ஆண்டவர் பரலோகத்தி-ருந்து இறங்கி வருவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு, அது ஒரு துக்ககரமான பரீட்சையாக இருந்தது. அவர்கள் மணவாளன் வர தாமதித்ததைக் குறித்து ஏமாற்றம் அடைந்திருந்தாலும் அவர்கள் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அவர்கள் வேதத்தை ஆராய்ந்த அனுபவம் அவர்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. அவர்கள் மனிதரின் பாரம்பரியங்களுக்கு மேலாக, தேவனுடைய வார்த்தையை மதிக்க கற்றிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் ஒதுக்கி விடப்பட்டு இருந்த சபைகளில் உள்ள மனிதர்களிடம், கனத்தை பெற்றதுடன், அடிமைத்தனத்தி-ருந்து ஒரு

பெரிய அளவிற்கு விடுதலையையும் பெற்றார்கள். அவர்கள் சபைகளில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததின் காரணம், ஆண்டவருடைய வருகையைக் குறித்த உண்மைக்கு கீழ்ப்படிந்து நடந்ததுதான். உண்மை என்று உணர்த்தப்படும் போது கீழ்ப்படிவது சில ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது. பவுலும் தமஸ்குவுக்கு செல்லும் போது வழியில் ஆண்டவரைச் சந்தித்தது போல நாமும் கூட வழியில் சந்திக்கிறோம்.

இதன் விளைவாக, இதற்கு முன்பு இருந்தவர்களைக் காட்டிலும், இவர்களில் சிலர் சுத்திகரிப்பு அல்லது சீர்திருத்த வேலையில் மிக ஊக்கத்துடன் ஈடுபட்டதைக் காண்கிறோம். இப்படியாக கிபி 1846ல் 2300 நாட்களின் முடிவில் மேலே காட்டியபடி ஒழுங்குபடுத்தப்படாத கிறிஸ்தவ உட்கருவைக் காண முடிந்தது. இவர்கள், சபைகள் எளிமையான விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதில் “Disciples” என்கிற சபை உடன் ஒத்திருந்தது மாத்திரமல்ல, வேதத்தை, தவிர மற்ற எல்லா கோட்பாடுகளையும் அகற்றியதோடு குருவானவர்களின் பட்டங்களையும் நீக்கிப்போட்டதில் அவர்களோடு இசைந்து இருந்தார்கள்; மேலும், அவர்கள் வெளிப்புறமான ஞானஸ்நானம் என்கிற கருத்தில் பேப்டிஸ்ட் சபை உடன் இசைந்து இருந்தார்கள். மேலும், லூதர் உடன் போப்பின் ஆட்சி முறைதான் “பாவ மனிதன்” என்கிற கருத்தில் இணைந்து இருந்ததோடு, கீழ்த்தரமான நிலையில் உள்ள இந்த சபை வேசிகளுக்கும் அருவருப்புகளுக்கும் தாய் என்கிற கருத்தோடும் இணக்கம் காட்டினார்கள்; இவர்கள் எந்த விதமான விட்டுக்கொடுக்கும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமலும் அல்லது உலகத்தோடு எந்த உறவும் வைத்துக் கொள்ளாமலும் தனித்து நின்று முக்கியமான பக்தி, சர்வ வல்லமையுள்ள தேவனிடத்தில் வைக்கக்கூடிய சாதாரண நம்பிக்கை, அவருடைய மாறாத கட்டளைகளில் விசுவாசம் வைத்தல் போன்றவைகளை கற்றுக் கொடுத்தார்கள். மேலும், கிறிஸ்துவே எல்லாருக்கும் ஆண்டவர் என்று ஏற்றுக்கொண்டு அவர் இப்போது திவ்ய சுபாவத்தில் பங்குள்ளவர் என்று ஏற்றுக்கொள்வதுடன், யேகோவா அவருடைய சொந்த குமாரன், நம்முடைய ஆண்டவராகிய இயேசு அவருடைய சொந்த பிதா என்கிற, வேதத்திற்கு அப்பாற்பட்ட நியாயமற்ற



கருத்தி-ருந்து காக்கப்பட்டார்கள். மேலும், நித்திய ஜீவனும், சாவாமையும் தற்போது கிடைக்கக்கூடியவைகள் அல்லவென்றும் இயேசு கிறிஸ்து மூலமாக உயிர்த்தெழுத-ல் தேவனுடைய வெகுமதிகளாக மாத்திரம் எதிர்பார்க்கப்பட வேண்டியவைகள் என்பதையும் பார்க்கத் துவங்கினார்கள்.

தம்முடைய சுத்திகரிப்புக்கு அடையாளமாக, இதற்கு பின்பு எப்பொழுதுமே ஒரு வகுப்பினர் இருக்க வேண்டும், மற்ற சபை பிரிவினரிடம் இருந்து தனித்து இருக்க வேண்டும் என்று தேவன் ஒழுங்கு பண்ணுவது போன்றே, இந்த 1846ம் ஆண்டிலேயே புரட்டஸ்டன்ட் பிரிவினர் ஒரு பெரிய ஒழுங்குமுறையில் ஒன்று கூடினர். அது இவாஞ்-க்கல் அலையன்ஸ் (The Evangelical alliance) என்று அழைக்கப்பட்டது. இந்த ஒழுங்கு முறை (சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலத்தைப் பற்றிய) புதிய கருத்துக்களை மனதில் கொண்டு மனிதனின் சாவாமையில் தனது விசுவாசத்தை தெளிவாக்கினது. அதை தனது சமய கோட்பாட்டில் ஒன்பதாவது கட்டளையாக சேர்த்தது. இப்படியாக, அது தனித்து நின்றது. இன்றைக்கும் மற்ற கிறிஸ்தவர்களிடம் இருந்து தனித்து, தேவனுடைய பிள்ளைகளின் ஒரு கூட்டமாக, ஆண்டவருடைய சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலமாக, சத்தியத்தின் ஸ்தலமாக நிற்கிறது. இந்த சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த ஸ்தல வகுப்பினரோடு, மற்ற சாந்தமான, விசுவாசமுள்ள தேவ பிள்ளைகள் அன்றைய நாளில் இருந்து, சேர்க்கப்பட்டு வருகிறார்கள். சாந்தத்தின் ஆவியையும், சத்தியத்தின் மேல் உள்ள அன்பையும் இழந்து போகிறவர்கள் இதி-ருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். நன்கு முறைப்படுத்தப்பட்ட எதிர்ப்புகளில் இருந்தும், பெரும்பான்மையாக காணப்படுவர்களிடம் இருந்தும் தங்களை சுத்திகரிக்கப்பட்ட ஸ்தலமாக தங்களை நிலைவரப்படுத்திக் கொள்ளுவது என்பது, தைரியத்திற்கும் விசுவாசத்திற்கும் ஒரு கடுமையான பரீட்சையாக உள்ளது. அதில், ஒரு சிலரே நிலைத்து நிற்பவர்களாகக் காணப்படுகிறார்கள். பெரும்பாலோர் தங்களுக்கு முன்பு இருந்தவர்களின் வழியைப் பின்பற்றுகிறார்கள். உலகத்தின் பார்வையில் கௌரவமானவர்களாக காட்ட முயற்சிக்கிறார்கள்.

எப்படியோ அதிகமாக எண்ணிக்கையில் பெருகி, சற்று வெறுக்கப்படாதபடி, இவர்களில் சிலர், இன்னொரு ஒழுங்கு முறையைத் துவக்கினார்கள், ஒரு கோட்பாட்டை உண்டு பண்ணினார்கள், அவர்கள் தங்களை இரண்டாம் வருகை சபை (Second Adventists) என்று பெயரிட்டு அழைத்துக்கொண்டார்கள். அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியதெல்லாம் கற்று முடிந்தாயிற்று என்ற நம்பிக்கையில் அதற்குப் பிறகு எவ்வித முன்னேற்றமும் இன்றி அப்படியே இருந்து விட்டார்கள். பரிபூரண நாளுக்கென்று அதிகமாக பிரகாசிக்கிறவர்களின் வழியைப் பின்பற்றாத அநேகரைப் போன்று, அவர்களில் அநேகர் முட்டாள்தனமான வஞ்சகத்தில் விழுந்து கிடக்கிறார்கள்.

முதலாவதாக, சுத்திகரிக்கப்பட்ட ஸ்தலத்திற்கு அடையாளமாக இருந்தவர்களில் அநேகர், இப்படியாக மறுபடியும் அடிமைத்தனம் என்கிற நுகத்தில் சிக்கிக் கொண்டாலும், இன்னும் சிலர் சுயாதீனத்தோடு இருந்து அவரை அறியும்படி பின்பற்றியவர்கள், அவருடைய சுத்திகரிக்கப்பட்ட ஸ்தலத்திற்கு அடையாளமாக இருந்தவர்கள், அவருக்கு சொந்தமானவர்களாக, அவருடைய வழி நடத்துத-னால் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

குப்பையும் பாழாக்கும் அருவருப்பும் 1846ல் முற்றிலுமாக நீக்கப்பட்டிருந்தால் இந்த காலம் இன்றும் சரிப்படுத்தாத விஷயங்களை சரிப்படுத்தவும், தேவனுடைய மகிமையான திட்டத்தை வெளிப்படுத்தவும், முன்னேற்றமடையச் செய்யக்கூடியதாகவும் இருக்கும். மெய்யான சத்தியங்கள் தப்பறைகளை நீக்கிவிட்டு அங்கே இடம்பிடிக்க வேண்டும்.

சத்தியத்தை வெளிப்படுத்துவது, அதை ஆராய்வது, அதன் அழகை அனுபவிப்பது ஆகியவற்றிற்கு இது ஏற்ற வேளையாகும். அது இப்பொழுது நடைபெறுகிறது. ஆண்டவருடைய ஆலயத்தின் பொற்பாத்திரங்களை (விலையேறப்பெற்ற சத்தியங்கள்) மாபெரும் பாபிலோனின் (எஸ்றா 1: 7-11; 5:14; 6:5) சிறையிருப்பி-ருந்து



மறுபடியும் மீட்டு கொண்டு வந்து, அவைகளை பரிசுத்த ஸ்தலத்தில் கொண்டு வந்து சேர்க்கும் வேலையை, இந்த ஆசீர்வாதமான வேலையை மற்றவர்களோடு சேர்ந்து செய்யக் கிடைத்த சிலாக்கியத்திற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்லுகிறோம். இந்த பெரிய வேலையில் ஈடுபட்டுள்ள எல்லா உடன் வேலையாட்களுக்கும், அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரமான சபையின் அங்கத்தினர்களுக்கும் சகோதர வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். எஜமான் வரும்போது ஏற்ற வேளையில் தன் வேலைக்காரர்களுக்கு போஜனம் கொடுப்பவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான்.

★★★

## அத்தியாயம் 5

# அறுப்புக் காலம்

*அறுப்பு, காலக்கணக்கின்படி அதன் இடம் - அதன் நோக்கமும், அதன் மகா முக்கியத்துவமும் - கால தீர்க்கதரிசனங்களில் கவனத்தைப் பதிப்பது - அறுப்பிற்கான ஆயத்தம் - தீர்க்கதரிசன சாட்சியம் கூற வருத-ன் முக்கியத்துவம் - ஆண்டவருடைய பிரசன்னம் - முறையான ஆட்சேபணைகள் பதிலளிக்கப்பட்டன - ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பது.*

*"அறுப்பு உலகத்தின் முடிவு." மத். 13:39*

கவனமாக படிக்கிற மாணவன் "முடிவு காலம்" என்பது மிகவும் சரியாக அழைக்கப்படுகிறது என்பதை உணர்ந்திருப்பான். ஏனெனில் சுவிசேஷ யுகம் அதில் முடிவது மாத்திரமல்ல, இந்த யுகத்தின் முடிவு பற்றிய எல்லா தீர்க்கதரிசனங்களும், அவைகளின் நிறைவு ஏற்பட்டவுடன் அதில் முடிவு பெறுகிறது. மேலும், அந்த *115* வருடங்களுக்குள், கடைசி *40* வருடங்களுக்கு *(1874-1914)* விசேஷமான முக்கியத்துவம் இருப்பதையும், இவைகள் "முடிவு" அல்லது "அறுவடை" என்று அழைக்கப்படுவதையும் அவர்கள் கண்டிருக்க முடியும்.

இந்த குறுகிய காலம் தான் முழு யுகத்திற்குள்ளும் விசேஷமான சம்பவங்கள் நிறைந்த காலமாகும். இதில் எல்லா கனிகளும் சேகரிக்கப்பட்டு, அனுப்பப்பட வேண்டும்; உலகம்

என்கிற நிலம் (மத். 13:38) சுத்தப்படுத்தப்பட்டு, உழப்பட்டு, இன்னொரு முறை விதைப்புக்கும் அறுவடைக்கும், அதாவது ஆயிரவருட யுகத்திற்கென ஆயத்தம் பண்ணப்பட வேண்டும். இந்த அறுவடையின் காலத்தில் நடக்கிற சம்பவங்களின் முக்கியத்துவம் அபூர்வமாக மதிப்பிடப்படும். தங்களுக்கென்று கொடுக்கப்பட்ட வேலையை, இதுவரை அறிந்திராத நபர்கள் முடிக்கும் வரை, உலகம் அதை அறிந்து கொள்ளாது. உண்மையாகவே இது முழு உலகத்தின் அறுவடையல்ல, கிறிஸ்தவ சபைக்கு மாத்திரமே என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அது முகமதியர்கள், பிராமணர்கள்,புத்த மதத்தினர் போன்றவர்களுக்கு அல்ல, ஆனால் உண்மையான கிறிஸ்துவின் சபையினருக்கும், மேலும் அதோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் கிறிஸ்தவ தேசத்தில் உள்ளவர்களுக்கும் மட்டுமே ஆகும்.

இந்த காலம் முழுவதும், உலகம் அதைக்குறித்து முற்றிலும் அறியாமையில் இருக்கிறது. ஆனாலும் உலகம் அதன் விசித்திரமான சம்பவங்களை குறித்து பயத்திலும், நடுக்கத்திலும் இருக்கும் போது (ஏசா. 28:21), ஆண்டவருடைய சிறுமந்தையாக தங்களை அர்ப்பணித்துக்கொண்டு அவரை பின்பற்றுகிறவர்கள், இப்பொழுது ஜீவிக்கிறவர்கள் தங்களுக்கு முன்பு இருந்தவர்களைக் காட்டிலும் அதிகமான தெளிவை அனுபவிக்கும் சிலாக்கியத்தைப் பெற்று இருக்கின்றனர். ஏனெனில், இந்த காலத்தில் தீர்க்கதரிசன சாட்சியின் எல்லா கதிர்களும், மிக உன்னதமான இடத்தில் குவிந்து, விசுவாசக் கண்களுக்கு தேவனுடைய திட்டத்தையும் கடந்த காலத்தில், தற்காலத்தில், எதிர்காலத்தில் அதன் வளர்ச்சியைக் குறித்தும் விவரிக்கிறது.

முடிவு காலத்தின் (1799) ஆரம்பத்தில் இருந்து, இந்த 40 வருட அறுவடையின் போது தம்முடைய ஆசீர்வாதங்களை ஊற்றுவதற்காக அர்ப்பணம் செய்து கொண்ட தமது "பரிசுத்த ஜனங்களை," "பரிசுத்த ஸ்தலத்தை" ஆயத்தப்படுத்திக் கொண்டு இருக்கிறார். இந்த ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவோடே, அவருடைய மணவாட்டியாக பரிபூரண சந்தோஷத்திற்குள்ளும், அவரோடு கூட உடன் சுதந்திரராகவும் நுழைவதற்கு விசேஷமான ஏற்பாடாக உள்ளது.



1799ல் "குறித்த காலத்தில்" 1260 நாட்களின் முடிவில், சபைக்கு மகா உபத்திரவம் கொடுக்கிற பாவ மனிதனின் வல்லமை உடைக்கப்பட்டு, அவனுடைய ஆட்சி நீக்கப்பட்டது. தம்முடைய வல்லமையான கரத்தின் ஒரு அடியால், தேவன் சீயோனின் சங்கி-களை உடைத்து எறிந்து ஒடுக்கப்பட்டவர்கள் விடுதலை அடையும்படி செய்தார். போப்பின் துன்பம் என்னும் அடிமைத்தனத்தில் இருந்து, இருள் நிறைந்த பாதாளத்தில் இருந்து, அசுத்தத்தில் இருந்து "பரிசுத்த ஸ்தல" வகுப்பினர், அதாவது "பரிசுத்த ஜனங்கள்," பெலகீனர், திடனற்றவர்கள், முடவர்கள் கிட்டத்தட்ட நிர்வாணிகளாக இருப்பவர்கள், குருடர்கள் வெளியே வந்தார்கள், வந்து கொண்டு இருக்கிறார்கள். பரிதபிக்கப்பட வேண்டிய ஆத்துமாக்கள்! இவர்கள் பயங்கரமான அக்கினி போன்ற உபத்திரவத்தின் மத்தியிலும், கிட்டத்தட்ட மற்ற எல்லா சத்தியமும் நீக்கப்பட்டு போனபோதும் கூட, கிறிஸ்துவின் சிலுவையை உறுதியாய் பிடித்துக்கொண்டு ஆண்டவருக்கு உண்மையாக ஊழியம் செய்ய முயற்சித்துக் கொண்டு இருந்தவர்களாகும். மேலும், இவர்கள் தைரியமாக அதிக காலமாக கட்டப்பட்டு இருக்கும் தேவனுடைய "இரண்டு சாட்சிகளை" (பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள்) விடுதலை செய்யும்படி முயற்சித்துக் கொண்டு இருந்தார்கள். இவைகள் (வேதாகமம்) இரட்டு வஸ்திரம் உடுத்திக் கொண்டு, மரித்துப்போன பாஷைகளின் கீழ் தீர்க்கதரிசனம் கூறிவந்திருந்தன. வெளி. 11:3

தேவன் தம்முடைய ஞானத்தின்படி, இப்பொழுது பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்படுகிற பெரிய வெள்ளம் போன்ற வெளிச்சத்தை, அவர்களுக்கு வழங்கவில்லை. அவர் அவர்களைப் பிடித்திருந்த போப்பின் அசுத்தங்களில் இருந்து, முதலாவதாக அவர்களைப் பரிசுத்தப்படுத்தி, பின்னர் அவர்களை படிப்படியாக வழிநடத்தினார். இப்படியாக தேவன் அவர்களை இழுத்துக் கொண்ட போது "பரிசுத்த ஸ்தல வகுப்பினர்" அவரைப் பின்பற்றி சென்றார்கள். 1846ம் ஆண்டு வரை பழைய வஞ்சகங்களை சுட்டிக்காட்டிய சத்தியம் என்னும் சத்தத்தில், நல்ல மேய்ப்பனின் சத்தத்தை அறிந்து பின் சென்றார்கள். இந்த தேதியைத் தான் (1846) தீர்க்கதரிசனம், பரிசுத்த ஜனங்களின் ஒரு கூட்டம், "பரிசுத்த ஸ்தலமாக" இருக்கிறவர்கள்,

போப்பின் வஞ்சகங்களில் இருந்து விடுபட்டு, அசுத்தங்களில் இருந்து சுத்திகரிக்கப்பட்டு, மனிதர்களின் அசுத்தமான கருத்துகளுக்குப் பதிலாக, சுத்தமான அழகான சத்தியத்தினால் நிரப்புகிற காலம் என்று கூறுகிறது. இந்த சத்தியத்தின் மேல் தான் ஆண்டவரும் அப்போஸ்தலர்களும், சபையை ஸ்தாபித்தார்கள். படிப்படியாக இந்த யுகத்தின் அறுவடையின் போது, ஆண்டவர் தாமே வரும்போது, பெரிதான மொத்த ஆசீர்வாதத்தை எதிர்பார்க்கும்படி வழிநடத்தப்பட்டார்கள். தேவ தூதர்களும் உற்றுப்பார்க்கும்படி ஆசையாயிருக்கிறவைகளை (1பேது. 1:12) அறியும்படியான நல்ல வாஞ்சை, அவர்கள் தேவனுடைய வார்த்தையை கவனமாகப் படித்தது எல்லாம் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டது. ஆனாலும் அவர்களுடைய வாஞ்சைகள் முற்றிலுமாக வழங்கப்படவில்லை.

விசுவாசமும் உண்மையுமுள்ள ஒரு சிலர் இப்படியாக சத்திய வார்த்தையினால் போதிக்கப்பட்டார்கள். அவர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டு, தூய்மையாக்கப்பட்டு உலகத்தில் இருந்து முற்றிலுமாக பிரிக்கப்பட்டு, பெருமையில் இருந்து விடுதலையாக்கப்பட்டு இருந்தார்கள். 1844-ல் ஏற்பட்ட ஏமாற்றத்தினால் தேவன்மேல் அதிகமாக சார்ந்து இருக்கும்படியாக தாழ்மைக்குள் கொண்டு வரப்பட்டார்கள். மேலும் ஏற்கெனவே கூறப்பட்ட 30 வருட காத்திருத்தல் பரிசுத்தமானவர்களிடத்தில் பொறுமையையும், தாழ்மையையும், அன்புடன் கூடிய பணிவையும் உருவாக்கியது. கவனித்துக் கொண்டிருப்பவர்கள் 1335 நாட்களின் இறுதியில் (1874, அறுவடையின் காலம்) “இதோ மணவாளன்!” என்கிற சந்தோஷமான செய்தியை பெற்றுக் கொண்டு எல்லா பரிசுத்த ஸ்தல வகுப்பினருக்கும் அறிவிக்கும்படி அனுப்பப்பட்டார்கள். இந்த வகுப்பினர் அனைவரும் கேள்விப்படும்போது, அதன் செய்திகளை அவர்கள் அறியும் போது, அவர்களும் தங்கள் சத்தத்தை உயர்த்தி “இதோ மணவாளன் !” என்கிறார்கள். பரிசுத்தவான்களுக்குரிய இந்த அறுவடையின் செய்தி தொடர்ந்து போகிறது. அர்ப்பணித்துக் கொண்டவர்கள், உண்மையாக இருப்பவர்கள் அனைவரையும் சென்றடையும் வரை அது சென்று கொண்டிருக்கும். இந்த அறிவு இப்பொழுது உலகத்திற்கு உரியது அல்ல. ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டியாகிறவர்களுக்கு மாத்திரமே உரியது. நம்முடைய



ஆண்டவர் வேறு எந்த வகுப்பினருக்கும் மணவாளன் அல்ல. அவருடைய பிரசன்னத்தைக் குறித்த அறிவு, உலகத்திற்கு வேறு ஒரு வழியில் இன்னொரு வேளையில் வரும். அர்ப்பணித்துக் கொண்ட பரிசுத்த ஸ்தல வகுப்பினரைத் தவிர இந்த சத்தியத்தை பெற்றுக் கொள்ள, வேறுயாரும் இப்பொழுது ஆயத்தமாக இல்லை. பேர் கிறிஸ்தவ “சேனைகளுக்கும்” உலகத்திற்கும் அது முட்டாள்தனமாக இருக்கிறது. அது மாத்திரமல்ல, இந்த புத்தக தொகுதிகளில் சொல்லப்பட்ட ஆதாரங்களை, சோதித்துப் பார்க்கவும் விருப்பப்பட மாட்டார்கள்.

இப்படியாக ஆண்டவர் தம்முடைய ஜனங்களின் இருதயத்தை ஆயத்தப்படுத்தி, அவர்கள் அறியாத வழியில் நடத்தினது மட்டுமின்றி, இந்த தேவைப்படும் வேளையில் வேதத்தைப் படிப்பதற்காக ஒத்தவாக்கிய புஸ்தகங்கள், அருமையான பல்வேறு வேத மொழிபெயர்ப்புகள் ஆகியவைகள் கொடுத்தது மட்டுமின்றி அச்சிடவும், வெளியிடவும் சத்தியத்தை தபால் மூலம் அனுப்பவும் அவர் அற்புதவிதமாக உதவிகளைத் தந்திருக்கிறார். அது மாத்திரமல்ல, பொது கல்வியைத் தந்ததன் மூலம் எல்லோரும் தாங்களாகவே வாசிக்கவும், படிக்கவும் தங்களுக்கு சொல்லப்பட்ட உபதேசங்களை சரிபார்த்து, திருப்தியடையவும் உதவிகளைத் தந்திருக்கிறார். இவைகள் எல்லாம் சமாதானம் நிலைத்திருக்கும் வேளையில், அப்பொழுது, தங்கள் முழு மனசாட்சியின்படி செய்வதை யாரும் தடை பண்ணாதபடியும், பயமுறுத்தாதபடியும் உதவி செய்திருக்கிறார்.

முந்தைய புத்தகங்களையும், இந்த புத்தகத்தின் முந்தைய அத்தியாயங்களையும் படித்த பின்னர் நன்கு யோசிக்கக்கூடிய வாசகர் பின்வருமாறு உணர்ந்து கொள்வார்: ஒவ்வொரு கால தீர்க்கதரிசனமும் வெவ்வேறான ஒரு நோக்கத்தைச் செயல்படுத்துகிறது. அவைகளுடைய மையமான நோக்கம் ஒன்றுபட்டு, இசைவுடன் உள்ள சாட்சி திட்டமாகவும், குறிப்பாகவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது ஒன்றுக்கொன்று மாறுபடாத சாட்சியின் மூலமாகவோ, நம்முடைய ஆண்டவரின் இரண்டாவது வருகையின் தேதியையும், பூமியில் அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் தேதியையும், குறிப்பிட்டுக் காட்டுவதாக உள்ளது. அது

மாத்திரமல்ல, அறுவடையின் காலத்தின் போது, அது ஸ்தாபிக்கப்படும் பல்வேறு நிலைகள் மற்றும் முறைகள் பற்றி குறிப்பிடுகிறது.

இந்த முக்கியமான சத்தியங்களைக் குறித்த்தான விஷயங்களில் இந்த தீர்க்கதரிசனங்களின் பலம் பதிந்துள்ளதை நாம் கருத்தில் கொள்ளுவோம். அதன்பின்னர், இவைகளின் சாட்சி எப்படியாக மாறுபாடு இன்றி இணைந்து வந்திருக்கிறது என்பதையும் அதோடுகூட ஆண்டவர் வருகிறார் அல்லது வருவார் என்று அல்ல, அவர் வந்திருக்கிறார் என்கிற ஆசீர்வாதமான உண்மையை வெளிப்படுத்துகிறது என்பதையும் காணலாம். மேலும், இப்பொழுது அவர் ஒரு ஆவிக்குரிய இராஜாவாக பிரசன்னமாகி, இப்பொழுது ஆயிர வருட விடிய-ல், அறுவடை அல்லது சுவிஷேச யுகத்தின் இறுதியில் ஒரு ஆவிக்குரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டு இருக்கிறார் என்கிற ஆசீர்வாதமான உண்மையை வெளிப்படுத்துகிறது. “இளைப்பாறுத-ன் காலங்கள்,” எல்லாவற்றையும் புதுப்பிக்கும் காலங்கள் வர உள்ளன என்பதையும் நாம் பார்த்தோம். (அப். 3:19) மேலும் நாம் கர்த்தராகிய யேகோவா, “ஒரு நாளைக் (ஆயிர வருட யுகம்) குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரி-ருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்” என்று பார்த்தோம். (அப். 17:31) மேலும், சுவிசேஷ யுகம் சபைக்கு ஒரு சோதனையின் காலம் அல்லது நியாயத்தீர்ப்பின் காலம் என்றும் பார்த்தோம். அது ஒரு அறுவடையோடும், உலகம் நியாயத்தீர்க்கப்படும்போது அதாவது இளைப்பாறுத-ன் காலங்களின் போது, கிறிஸ்துவோடு ஜீவித்து ஆயிரம் ஆண்டு அரசாட்சி செய்யப் போகிறவர்களை மகிமைப்படுத்தும் காலத்தோடும் முடிகிறது என்றும் பார்த்தோம். அது மாத்திரமல்ல, இந்த உலகத்தின் பிரபுவாகிய சாத்தானின் ஆதிகாரத்தின் கீழ் இருக்கிற இந்த உலகத்தின் இராஜ்யங்கள் மகிமையின் இராஜாவின் அதிகாரத்தின் கீழ், தேவனுடைய



இராஜ்யத்திற்கு வர இடம் கொடுக்க வேண்டும் என்றும் பார்த்தோம். இந்த பெரிய விஷயங்கள் எல்லாம் நம்முடைய ஆண்டவர் இராஜா, மணவாளன் மற்றும் அறுவடையாளரின் இரண்டாவது வருகை மட்டும் காத்திருக்க வேண்டும். முன்பு ஏற்கெனவே கூறப்பட்டுள்ளபடி அவருடைய பிரசன்னமும், வேலையும் இதை நிறைவேற்ற வேண்டும்.

நிழலான யூபி- சுற்றுகள் (Cycles) கிபி 1874ஐ நம்முடைய ஆண்டவர் திரும்பி வரும் காலம் என்று குறிப்பிட்டது. ஆனாலும் “முடிவு காலம்” வரும்வரை அந்த காலம் கண்டு பிடிக்கமுடியாதபடி சாமர்த்தியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த சாட்சி இரண்டு கோணத்தில் இருந்து வந்த ஆதாரங்களால் இரட்டிப்பாக வ-மை பெற்றுள்ளது. அவைகள் நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம். இவைகள் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று தனித்துள்ளது என்றாலும் இரண்டுமே தெளிவாகவும், திருப்திபடுத்துவதாகவும் உள்ளது.

யூத மற்றும் சுவிஷேச யுக காலங்களில் உள்ள அற்புதமான ஒற்றுமை, இதே சத்தியத்தை இன்னும் அதிக அம்சங்களோடு நமக்கு போதித்தது. அறுவடை அல்லது சுவிசேஷ யுக காலத்தின் இறுதியில், 1874ம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் வரும் நம்முடைய ஆண்டவரின் இரண்டாவது வருகை யூத யுகத்தின் இறுதியில் நிகழ்ந்த முதலாவது வருகையின் காலத்திற்கு சரியான முறையில் ஒத்திருக்கிறது. (ஒத்திருப்பவைகளின் அட்டவணை தொகுதி 2, பக்கங்கள் 268, 269ல் காண்க) ஒவ்வொரு முக்கியமான சுவிசேஷ யுகத்தின் அம்சமும் நிழலான யுகத்தோடு ஒத்து இருப்பதை குறிப்பிடுகிறது. ஆகவே, யூபி- கற்றுத்தரும் இந்த மிக முக்கியமான சம்பவத்திற்கு இணையாக குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சி இருப்பதைக் காணலாம். நம்முடைய ஆண்டவரின் பிரசன்னம் - மணவாளனாக அறுவடையாளராக, இராஜாவாக இரண்டு யுகங்களிலும் காட்டப்பட்டுள்ளது. கன்னிகைகள் அவரை சந்திப்பதற்காக செல்வது, அவர்களுடைய ஏமாற்றம், முப்பது வருடங்கள் காத்திருப்பது ஆகியவை, காலத்திலும் சூழ்நிலையிலும் இணையாக இருக்கிறது. இணையாக இருப்பது, இந்த காலத்தின் அறுவடையின்

கடைசி வரை தொடர்ந்து இருக்கிறது. இது, கிறிஸ்தவ இராஜ்யங்கள் என்று அழைக்கப்படுகின்ற, "இந்த உலகத்தின் இராஜ்யங்கள்" அகற்றப்பட்டு, புறஜாதியாரின் காலங்கள் முடிவு பெறும் போது, 1914ம் ஆண்டு தேவனுடைய இராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படும் வரை இருக்கும். (தொகுதி 2 அத். 4) நாம் பார்த்திருக்கிறபடி, வருகிற இந்த உபத்திரவமும், இராஜ்யங்கள் அகற்றப்படுதலும், எருசலேம் நகரின் அழிவிலும், யூதர்களின் நாடு முற்றிலுமாக கிபி 70ல் அகற்றப்படுவதிலும் ஒற்றுமை இருப்பது காணப்படுகிறது. இந்த ஒற்றுமை காலம் மற்றும் சூழ்நிலையிலும் காணப்படுகிறது.

மறுபடியும் நாம், தானியேல் தீர்க்கதரிசி நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் வருகையைக் குறித்து குறிப்பிடுவதைக் காண்கிறோம். (தானி. 12:1) ஆனாலும் முன்கூட்டியே சொல்லப்பட்ட சம்பவங்கள், குறித்த காலம் வரை மறைத்து வைக்கப்பட்டிருந்து பின்பு நிறைவேறும்படியாகவும், சரித்திரத்தில் பதிவு செய்யும்படியாகவும் வைக்கப்பட்டிருக்கும். நாம் அதை காணும்படி வழி நடத்தப்படும் போது, மிகாயேல் என்கிற நாமத்தின் கீழ் வழிநடத்தப்படுகிறோம். மிகாயேல் என்கிற நாமம் குறிப்பிடுவது - தேவனுடைய பிரதிநிதி - "மாபெரும் பிரபு" என்பதாகும். ஆம், நாம் அவரை அறிந்து கொள்ளும்விதமாவது : "உடன்படிக்கையின் தலைவன்," "வல்லமையுள்ள தேவன் (ஆட்சி செய்பவர்)," "நித்திய பிதா" (ஜீவன் அளிப்பவர்). (தானி. 11:22; ஏசா. 9:6) அவர் வல்லமையோடும், அதிகாரத்தோடும் இழந்து போனவைகளைத் திரும்பிப் பெறுவதற்கான பெரிய காரியங்களை செய்யும்படியாகவும், தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தால், மரித்த, மடிந்து கொண்டிருக்கிற லட்சக்கணக்கான மக்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கும்படியாகவும் எழும்புவார். தானியேல் 12ல் 1335 நாட்கள் இதே காலத்தில் முடிவதைக் கண்டுபிடித்த பின்னர், ஏன் இவ்வளவு சந்தோஷமான விதத்தில் மேலே சொல்லப்பட்ட காலத்தை தேவதூதன் சுட்டிக்காட்டினார் என்பதை இப்பொழுது நாம் காண முடிகிறது. "ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் மட்டும் காத்திருந்து (விழித்திருக்கும் எண்ணத்தோடு காத்திருந்து)



சேருகிறவன் பாக்கியவான்."அதாவது கிபி.1874 (யூதர்களால் கணக்கிடப்படும் வருடம் அக்டோபரில் துவங்குகிறது. ஆகவே 1874 அக்டோபர் என்பது 1875ம் ஆண்டில் துவக்கமாகும்). இங்கே அடையாளமாகக் கொடுக்கப்பட்டுள்ள காலத்தை நாம் கணக்கில் எடுக்கும் போது, அடையாளமான ஒரு நாள் உண்மையான ஒரு வருடத்தைக் குறிக்கிறது என்று முதலாவது வருகையைக் கணக்கீடு செய்தபடி அடையாளமான காலத்தைக் கணக்கிட்டுள்ளோம் என்பதை மறந்து விடக்கூடாது. இப்படியாக தொகுதி.2, அத்தி. 6ல் நம்முடைய ஆண்டவரின் இரண்டாவது வருகை 1874 அக்டோபர் என்று தெளிவாக நிரூபித்துக் காட்டப்பட்டுள்ளதைக் கண்டோம்.

ஆனால், இது மாத்திரமல்ல, கவனமாக வாசிக்கிறவர்கள் மத்தியிலும் கூட கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் குறித்து அவர்கள் மனதில் விசுவாச குறைவுகள் ஏற்படக்கூடும். ஆகவே, இவைகள் எல்லாம் அகற்றப்படவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். வேதாகம காலக்கணக்கு 1872 அக்டோபர் மாதம் ஆயிர வருட யுகம் அல்லது 7வது ஆயிரம் வருடங்கள் ஆரம்பிக்கிறது என்று சரியாகக் குறிப்பிடுகிறது. இதே வேளையில் எப்படி யூபி- சுற்றுகள் 1874 அக்டோபர் நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் வருகையின் காலம் என்றும், இளைப்பாறுத-ன் காலங்களின் ஆரம்பம் என்றும் குறிப்பிடமுடியும் என்று கேட்கலாம்.

இரண்டாவது வருகையைக் குறித்த தேதியும், 7வது ஆயிரம் வருட ஆரம்பமும் மாறுபடுகிறது என்கிற கருத்து, வேதாகம காலக்கணக்கில் எங்கோ தவறு நேர்ந்திருக்கிறது என்றுதான் முதலாவதாக எண்ணத்தோன்றும. இதை மறுபடியும் ஆராய்ந்து பார்த்தபோது இதே பதில் தான் கிடைத்தது. ஆனால் உற்றுப் பார்க்கும் போது, தேவன் காலத்தை சரியான விதத்தில் கணக்கிடுகிறவர் என்பது தெளிவாகிறது. இந்த விஷயமும், அவர் துல்-யமாக கணக்கிடுவதற்கு அப்பாற்பட்டதல்ல. காலக்கணக்கை கணக்கிடும் முறை ஆதாமின் சிருஷ்டிப்பி-ருந்து தொடங்கியது என்பது ஞாபகத்தில் இருக்கும். மேலும், பாவம் நுழைவதற்கு முன்னதாக ஆதாமும் ஏவாளும் சில காலங்களை ஏதேனில் கழித்திருக்கிறார்கள் என்பதும் நினைவில் இருக்கும். எவ்வளவு காலம் என்பது நமக்கு

அறிவிக்கப்படவில்லை. ஆனால் இரண்டு வருடங்கள் என்று கூறினால் அது தவறான கணிப்பாக இருக்க முடியாது. ஏவாள் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னதாக, தனக்கு ஒரு துணை இல்லையே என்று ஆதாம் உணரக்கூடிய காலம் மட்டும் அவன் ஜீவித்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்தான். (ஆதி. 2:20) அவன் மிருகங்கள் அனைத்தோடும் பழகி இருந்தான். எல்லாவற்றிற்கும் பெயரிட்டு இருந்தான். ஏதேன் தோட்டத்தில் உள்ள பல்வேறு மரங்கள், செடிகளை அறிந்திருந்தான். அதன்பிறகு ஏவாள் சிருஷ்டிக்கப்பட்டாள். பாவம் என்னும் சாபம் வருதற்கு முன்னர் அவர்கள் தங்களுடைய ஆனந்தமான சூழ்நிலையில் சிறிது காலத்தை கழித்து இருக்க வேண்டும்.

இந்த சூழ்நிலைகள் எல்லாவற்றையும் பார்க்கும் போது பாவமற்ற நிலையில் இரண்டு வருடங்களுக்கு குறைவாகத்தான் இருந்திருப்பார்கள் என்று சாதாரணமாக நினைக்க முடியாது. மேலும் 6000 வருடங்கள் முடிந்த காலத்திற்கும், இளைப்பாறுத-ன் காலங்கள் ஆரம்பிக்கப்படும் வேளைக்கும், இடையில் உள்ள காலம் நம்மை பின்வருமாறு சிந்திக்கச் செய்கிறது. ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட காலத்திற்கும் பாவம் நுழைந்த காலத்திற்கும் இடையில் உள்ள இந்த காலம் தேவனுடைய இராஜ்யம் உலகத்தில் இருந்த காலம் ஆகும்; ஆதாமின் ஆளுகையில் இருந்த காலம். இது பொல்லாத ஆறு நாட்களுக்குள் அடங்கியது என்று எண்ணப்படவில்லை.பாவம் உலகத்தில் நுழைந்ததி-ருந்து, ஏழாவது ஆயிரம் வருடம் அல்லது ஓய்வு ஆயிர வருடம் அல்லது இளைப்பாறுத-ன் காலங்கள் தொடங்குவதற்கு முன்னர், தேவன் ஆறாயிரம் ஆண்டுகள் பாவம் உலகத்தில் ஆளுகை செய்ய அனுமதித்திருக்கிறார். மேலும் அக்டோபர் 1874ல் இளைப்பாறுதல்களின் காலம் துவங்கியதே, அதுதான் 6000 வருட பாவம் ஆட்சி புரிந்த காலத்தின் முடிவாக இருக்க வேண்டும். அதற்கும் ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டதில் இருந்து கணக்கிடப்பட்ட ஆறாயிரம் வருட காலத்திற்கும், இடையில் உள்ள வித்தியாசம், ஏதேன் தோட்டத்தில் பாவம் இல்லாது இருந்த காலத்தைக் காட்டுகிறது. இது நீதி ஆளுகை செய்த காலமாகும்.

ஆண்டவர் 1874ம் ஆண்டின் இறுதியில் பிரசன்னமாவார்.




ஆனாலும் 1914 வரை புறஜாதியினரின் காலங்கள் முடிவு பெறாது என்பது ஒரு பிழை என்று முத-ல் தோன்றி இருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக, மாபெரும் யுத்த நாளுக்கென்று தேவன் மேற்கொண்ட நடவடிக்கைகள் தேவனுடைய திட்டம் வெளியானதோடு முற்றிலுமாக ஒத்து இருப்பதோடு, தானியேல் (தானி. 2:44) "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார், அந்த ராஜ்யங்களையெல்லாம் அது நொறுக்கி, எல்லாவற்றையும் நிர்மூலமாக்கும்" என்று சொன்னதற்கு ஒத்து இருக்கிறது. ஆகவே அது நாம் கண்டுபிடித்தபடியே இருக்க வேண்டும்: நம்முடைய ஆண்டவர் பிரசன்னமாகி இருக்க வேண்டும், அவருடைய சபையின் ஜீவனுள்ள அங்கங்களை சோதிக்க வேண்டும், அவர்களை உயர்த்தவேண்டும், மகிமைப்படுத்த வேண்டும், ஆயிரம் வருட அரசாட்சியின் வல்லமையிலும், அதிகாரத்திலும் தம்மோடு இணைத்துக் கொள்ள வேண்டும். (வெளி. 5:10; 20:6) மேலும், அந்த செயல்முறைகளையும், ஆட்களையும், செயல்பட வைக்கவேண்டும், (அவர்கள் அதை அறியாமலேயே) அவர்கள் அவருடைய கட்டளைகளை நிறைவேற்றுவார்கள். இப்படியாக, "சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளின் யுத்தத்தில்" தங்கள் பங்கை செய்வார்கள். இப்பொழுது கிறிஸ்தவ இராஜ்யங்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிற எல்லாவற்றையும் கனவீனப்படுத்தி, கடைசியில் அவைகளை அகற்றிப் போடுவார்கள். "இந்த உலகத்தின் இராஜ்யங்கள்" தேவனுடைய இராஜ்யத்தால் நொறுக்கப்படும்போது, அவைகள் வீழ்ச்சி அடைந்ததின் உண்மையான காரணத்தை "கோபாக்கினையின் நாளின்" முடிவு வரை அறியாமலேயே இருப்பார்கள். அப்பொழுது அவர்களின் மனக்கண்கள் திறக்கப்படும். அப்பொழுது அவர்கள் ஒரு புதிய சகாப்தம் உருவாகி இருப்பதையும், இம்மானுயேல் தம்முடைய மாபெரும் வல்லமையை எடுத்துக்கொண்டு தம்முடைய மகிமையான, நீதியான ஆட்சியை தொடங்கியுள்ளார் என்பதையும் காணுவார்கள்.

காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள், இப்படியாக 1874 நம்முடைய ஆண்டவரின் இரண்டாவது பிரசன்னத்தின் காலம் என்று இசைவுபடுத்துகிறது. மேலும், மிக துல்-யமாக

கணக்கிடப்பட்டுள்ளது என்று நமக்கு உறுதிபடக் கூறும் வேளையில், இன்னொரு குணாதிசயத்தைக் குறித்த சாட்சியைக் கண்டு ஆச்சரியப்படுகிறோம். அது என்னவென்றால் சில விசித்திரமான அடையாளங்கள், அவருடைய வருகைக்கு முன்னால் ஏற்படும் என்று நம்முடைய ஆண்டவர், அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளால் முன் கூட்டியே கூறப்பட்டது, இப்பொழுது ஏற்கெனவே நிறைவேறிவிட்டது என்று அறியப்பட்டுள்ளது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட எ-யா உண்மையிலேயே வந்துவிட்டார் என்று நாம் காண்கிறோம்; முன்னதாகவே கூறப்பட்டிருந்தபடி அவருடைய போதகனைகள் நிராகரிக்கப்பட்டு விட்டன. ஆகவே அந்த மகா உபத்திரவத்தின் காலம் வந்தாக வேண்டும். ஏற்கெனவே கூறப்பட்ட பாவ மனிதன், அந்திகிறிஸ்து ஏற்கெனவே தோன்றிவிட்டான். அவனுடைய நீண்ட கால கொடுமையான ஆட்சியை நிறைவேற்றி விட்டான். "குறிப்பிட்ட காலத்தில்" *(1799)* அவனுடைய அதிகாரம் நீக்கப்பட்டாயிற்று. பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிக்கும் வேலையும் முன் கூறப்பட்டபடியே முற்றுப்பெற்றுவிட்டது. *1874*ம் ஆண்டிற்கு முன்னதாகவே "ஒரு ஜனத்தை கர்த்தருக்கென்று ஆயத்தம் பண்ணும் வேலையும் முற்றுப்பெற்று விட்டது." அவரது முதலாவது வருகையின் போது அவரை ஏற்றுக்கொள்ள ஒரு ஜனத்தை ஆயத்தம் பண்ணினது போலவே, அவருடைய இரண்டாம் வருகையை எதிர்பார்த்து இருக்கிற ஜனங்களை ஆயத்தம் பண்ணும் வேலையும் முடிவுற்றது.


*1874* என்கிற வருடம் தானியேல் சொன்ன தீர்க்கதரிசனத்தோடும் *(12:1)* ஒத்து இருக்கிறது என்று நாம் காண்கிறோம். அது "மிகாயே-ன் வருகையை" முடிவின் காலத்தில், அதாவது *1799*க்கும் *1914*க்கும் இடையில் உள்ள ஏதோ ஒரு காலத்தில் குறிப்பிடுகிறது; அதுவே மகா உபத்திரவத்தின் காலத்திற்கு காரணம் மற்றும் முன்னோடி என்றும் குறிப்பிடுகிறது. "இந்த ஆயத்த நாளின்" *75* வருடங்கள் அவருடைய வேலையை ஆரம்பிக்கும் வண்ணம் சரியான சூழ்நிலையை உருவாக்கியவுடன், ஆண்டவர் அமைதியாக "வெளிப்படையான ஆடம்பரம்" இல்லாமல் எப்படி எழுந்தருளி போனாரோ "அப்படியே" அமைதியாக வந்தார். இந்த எஞ்சியுள்ள






தேச சரித்திரத்திற்கும் தீர்க்கதரிசனத்திற்கும் சம்பந்தப்பட்ட சபை சரித்திரம்

## "இஸ்ரேலின் இருவித வீடுகள்"
### - கால இணைகள்-






"ஆயத்தநாளின்" 40 வருடங்களில் 16 வருடங்கள் கழிந்து விட்டன. (இந்த புத்தகம் 1890ல் வெளியிடப்பட்டது) மிஞ்சியிருக்கும் வருடங்கள் அவருடைய இராஜ்யம் வல்லமையோடும், பெரும் மகிமையோடும் ஸ்தாபிக்கப்பட உதவி செய்யும்.

அறுவடை, ஆண்டவருடைய பிரசன்னம், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் போன்றவைகளைப் பற்றிய கால தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவம் இங்கே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை கவனமாக படிக்கும் போது மனதில் ஆழமாக பதிந்து விடும். அவைகளில் ஒரு அட்டவணை, சுவிசேஷ யுகத்திற்கும் அதன் நிழலான யூத யுகத்திற்கும் இடையில் உள்ள ஒற்றுமை, இந்த அறுவடையின் முக்கியமான அம்சங்கள் எப்படியாக மகா தீர்க்கதரிசனங்களால் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை காட்டுகிறது. அதே வேளையில் மற்றது, தேவனுடைய நிழலான மற்றும் உண்மையான சபைகளைப் பற்றிய உலக சரித்திரத்தை சுருக்கமாக கூறுவதுடன் அவைகளைப் பற்றிய தீர்க்கதரிசனங்களையும் காட்டுகிறது.

இப்படியாக தீர்க்கதரிசனத்தின் எல்லா அம்சங்களும் "முடிவு காலத்தை" குறிக்கிறது. அதன் முக்கியமான குறிப்பு "அறுவடை" ஆகும். மேலும் நம்முடைய ஆண்டவரின் பிரசன்னம் பற்றிய காலம் வெகுநாட்களாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்ததாகும். இந்த சம்பவங்களில் முக்கியத்துவம், அவைகள்அறிமுகப்படுத்துகின்ற ஆச்சரியமான யுகங்களின் மாற்றம் மற்றும் அவைகளைக் குறிக்கின்ற தீர்க்கதரிசன சாட்சியங்களின் குணாதிசயத்தையும் அதன் அளவையும் நாம் பார்க்கிறோம். அவர் எவ்வண்ணமாக வெளிப்படுவார் என்பதைக் குறித்து நமக்கு எவ்வளவு ஜாக்கிரதையாக சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கும் போது, அவருடைய பிரசன்னத்தை நாம் உணராதபடி நம்முடைய விசுவாசத்திற்கு எதுவும் தடையாக இருக்காதபடி பார்த்துக்கொள்ளும் போது நம்முடைய இருதயங்கள் சொல்- முடியாத அளவு மகிழ்ச்சியால் சந்தோஷம் அடைகிறது. அவருடைய முதலாவது வருகையின் போது ஆதி சீஷர்களுக்கு கொடுக்கப்பட்டதைக் காட்டிலும், அவருடைய இரண்டாம்

வருகையைக் குறித்து பத்து மடங்கு அதிக சாட்சியங்கள் இப்பொழுது அளிக்கப்படுகிறது. முதலாவது வருகையின் போது கொடுக்கப்பட்டது உண்மையான இஸ்ரயேலர்களுக்கு போதுமானதாக இருந்தது. அவர்கள் இஸ்ரயே-ன் ஆறுதலுக்காக காத்திருந்தார்கள்.

இரண்டாயிரம் வருடங்களாக பாடு அனுபவித்தவர்கள், உபத்திரவப்பட்டவர்கள், தங்களையே ப-யாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள், ஆண்டவரின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தார்கள். விசுவாசமுள்ள அப்.பவுல் போன்றவர்கள், வைராக்கியமுள்ள அப்.பேதுரு போன்றவர்கள், அன்பான அப்.யோவான் போன்றவர்கள், அர்ப்பணித்த ஸ்தேவான் போன்றவர்கள், சாந்தமுள்ள மரியாள், எளிமை மற்றும் உதாரத்துவம் உள்ள மார்த்தாள் போன்றவர்கள், சித்திரவதையோடு கூட மரணம் ஏற்படலாம் என்ற நிலைமையிலும் சத்தியத்தை துணிவாய் சொன்னவர்கள், அதிக துன்பம் இல்லாதிருந்த வேளையில் இஸ்ரயே-ல் தேவனோடு அமைதியாக நடந்த சில உண்மையுள்ள தகப்பன்மார்கள், தாய்மார்கள், சகோதர சகோதரிகள், கிறிஸ்துவை அறிக்கை பண்ண, அவருடைய நிந்தையை சுமக்க ஒரு போதும் வெட்கப்படாதவர்கள் அல்லது பயப்படாதவர்கள், இல்லையென்றாலும் அவருடைய சத்தியத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டவர்களோடு சகவாசம் வைக்க பயப்படாதவர்கள், இரத்த சாட்சிகளாக உபத்திரவத்தை அனுபவித்தவர்கள் (எபி. 10:33) எல்லோரும் நல்ல போராட்டத்தைப் போராடி, ஆண்டவர் வரும்போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வெகுமதியை பெறும்படியாக காத்திருந்தவர்கள் ஆவார்கள். (2 தீமோ.4:8)

இப்பொழுது அவர் வந்துவிட்டார்! ஆண்டவர் உண்மையிலேயே பிரசன்னமாகி இருக்கிறார்! அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் காலம் சமீபித்து இருக்கிறது. அவருடைய உண்மையுள்ள மணவாட்டியை உயர்த்தவும், மகிமைப்படுத்தவும் காலம் வந்துவிட்டது. அவருடைய பிரசன்னத்திற்காக காத்திருந்தது என்பது கடந்த காலத்திற்குரியது. காத்திருப்பவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று முன் கூட்டியே அறிவிக்கப்பட்ட



ஆசீர்வாதம் இப்பொழுது நம்முடையது. விசுவாசக் கண்களுக்கு அவர் இப்பொழுது தீர்க்கதரிசன விளக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறார். (2.பேது. 1:19) அறுவடை குறித்த காலத்தில் முடிகிறது. (அறுப்பின் முடிவில் களைகள் எரிக்கப்படுதலும் இருக்கும்) முடிந்து விட்டது. பாத்திரவான்கள் என்று எண்ணப்பட்டவர்கள் அனைவரும் அவரைப் போன்று ஆக்கப்பட்டு, அவர் இருக்கிறவண்ணமாகவே முகமுகமாய் அவரை தரிசிப்பார்கள். அப்போது விசுவாசமும் விசுவாசத்தினால் வரும் மகிழ்ச்சியும், நம்முடைய நம்பிக்கை முற்றுப்பெறும்போது அளவிட முடியாத சந்தோஷத்தைக் கொடுக்கும்.

அதை விளக்கும்படியாக சொல்லப்பட்ட உவமையில் காட்டப்பட்டபடி (மத். 25:14-30) ஆண்டவர் திரும்பி வந்தபோது செய்த முதலாவது காரியம், அவருடைய ஊழியக்காரரைக் கூப்பிட்டு கணக்கு கேட்பதாகும். தங்களுக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகளை உத்தமமாய் உபயோகித்தவர்களை கூப்பிட்டு அவர்கள் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றினார்களா என்று கண்டறிந்தார். இந்த உவமை காட்டுவது என்னவெனில் ஒவ்வொருவரும் சோதித்து அறியப்பட்ட பின்னர், அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆட்சியைப் பெறுவதற்கு முன்னர் "ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கும்படியாக" அழைக்கப்படுகிறான். இப்பொழுது அந்த உவமை நிறைவேறுவதைக் காண்கிறோம், அதுவும் ஆட்சியில் நம்முடைய பங்கு நிறைவேறுவதற்கு முன்னர், சத்துருக்கள் ஜெயிக்கப்படுவதற்கு முன்னரே; ஆயிர வருட அரசாட்சியின் பெரிய வேலையையும், வர இருக்கிற இராஜ்யத்தின் மகிமையையும் உண்மையாக இருக்கிற ஒவ்வொருவரும் தெளிவாகக் காணும்படி அனுமதிக்கப்படுகிறார்கள். கிறிஸ்துவினாலும் அவருடைய மகிமையடைந்த சபையினாலும், முழு மனுக்குலத்திற்கென்றும் வெகு விரைவில் நிறைவேற்றப்பட இருக்கின்ற பெரிய இளைப்பாறுதலைக் காணும் போது ஏற்படுகிற ஆண்டவரின் சந்தோஷத்திற்குள், அனைவரும் பங்கு பெறும்படியாக அனுமதிக்கப்படுகிறார்கள்.

இப்படியாக பிஸ்காவின் கொடுமுடியில் (மலை உச்சியில்) நின்று பார்ப்பது போன்று நமக்கு முன்பாக இருக்கிற நன்மையைப்

பார்க்கும் போது, சொல்- முடியாத சந்தோஷத்தினால் நம்முடைய இருதயங்கள் ஆண்டவருடைய பெரிய திட்டங்களினால் களிகூறுகிறது. சபையானது அவளுடைய உபத்திரவமாகிய வனாந்திரத்தில் உள்ளது என்று நாம் உணர்ந்தாலும், மேலும் அவளுடைய உண்மையான வெற்றி இன்னும் முழுமையாக வரவில்லை என்று உணர்ந்தாலும், அவைகள் துரிதமாக நெருங்கி வருவதற்கான அறிகுறிகளைக் கண்டு விசுவாசத்தினால் மணவாளனின் பிரசன்னத்தை ஏற்கெனவே உணர்ந்து, நம்முடைய மீட்பு சமீபமாய் இருப்பதால், நம்முடைய தலைகளை உயர்த்தி களிகூறுகிறோம். ஓ! இந்த சத்தியம் எவ்வளவு சம்பூரணமான ஆசீர்வாதத்தையும் மகிழ்ச்சிக்கான விஷயத்தையும் நன்றியறிதலையும் உடையதாக இருக்கிறது! உண்மையாகவே கர்த்தர் நம்முடைய வாய்களில், ஒரு புதுபாட்டை கொடுத்து இருக்கின்றார். அது ஒரு உன்னதமான பாட்டு. அதன் முதல் வரி தேவதூதர் சேனையால் குழந்தை இயேசு பிறந்த வேளையில் பாடப்பட்டது. அதாவது, "இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்பதாகும். இரட்சிப்பின் வேலையை, இளைப்பாறுதலை நிறைவேற்ற அவர் வரும்போது, அது மகிமையிலே நிறைவடையும் போது, இந்த பாட்டின் இனிய கீதம் பரலோகத்தையும் பூமியையும் நிறையப்பண்ணுவதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

*"பூலோகத்திற்கு மகிழ்ச்சி! ஆண்டவர் வந்திருக்கிறார்!*
*பூலோகம் தன்னுடைய இராஜாவை வரவேற்கட்டும்!*
*ஒவ்வொரு இருதயமும் அவருக்கு இடம் அளிக்கட்டும்,*
*பரலோகமும், இயற்கையும் பாடட்டும்."*

*"அவர் உலகத்தை சத்தியத்தினாலும் கிருபையினாலும் ஆளுவார்,*
*தேசங்கள் நிரூபித்துக் காட்டும்படியாக செய்வார்,*
*அவருடைய நீதியின் கண்டிப்பான ஒழுங்கையும்*
*அவருடைய அன்பின் ஆச்சரியங்களையும்."*

★★★

## அத்தியாயம் 6

# அறுப்பு வேலை

அறுப்பு வேலையின் குணாதிசயங்கள் - கோதுமையைச் சேகரித்தல் - களைகளை சேகரிப்பது, கட்டுவது, எரிப்பது - அதன் ஆரம்பமும், அதிகமான வளர்ச்சியும் - யூத யுக அறுப்பின் பதரைப் போன்று அழிக்கப்படுதல் - கால ஒற்றுமைகள் கவனிக்கப்பட்டது - பாபிலோன் தள்ளப்படுவது, படிப்படியான வீழ்ச்சி, இறுதியில் அழிவு - பாபிலோன் மேல் வாதைகள் வருவதற்கு முன்பு தேவனுடைய ஊழியக்காரர்கள் முத்திரையிடப்படுதல் - நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை - அமைப்புகளாகவும் தனிப்பட்டவிதமாகவும் - யூத முறை பரீட்சிக்கப்படுவது நிழலானது - கோதுமையை பரீட்சிப்பதும் தூற்றுதலும் - புத்தியுள்ள கன்னிகைகள், புத்தியில்லாத கன்னிகைகளிடம் இருந்து பிரிக்கப்பட்டு, விருந்துக்குச் செல்லுதல் - "கதவு மூடப்பட்டது" - மேற்கொண்டும் பரீட்சை, சிலர் தள்ளப்படுதல் - ஏன், எப்படி? - "பரம அழைப்பு" முற்றுப்பெறுவது - காலம் குறுகியதாக இருக்கிறது - "ஒருவனும் உன்னுடைய கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதிருப்பானாக" - பதினோராவது மணி ஊழியக்காரர்களும், ஜெயம் கொள்ளுகிறவர்களும்.

அறுப்பு என்கிற சொல் 1874ம் ஆண்டிற்கும் 1914ம் ஆண்டிற்கும் (ஆசிரியரின் முன்னுரை பக் (ii)ஐ பார்க்கவும்) இடையில்

என்ன வேலை நடக்க எதிர்பார்க்கப்படவேண்டும் என்பதைக் குறித்து பொதுவான கருத்தை கொடுக்கிறது. அது விதைப்பதைக் காட்டிலும் அறுவடை செய்கிற காலமாகும்; மேலும் சோதித்துப்பார்க்கவும், கணக்குப் பார்க்கவும், முடிவு செய்யவும், வெகுமதி அளிக்கவும் உள்ள காலமாகும். யூத யுகத்தின் அறுவடை, இந்த யுகத்தின் அறுவடைக்கு நிழலாக இருப்பதால் அந்த அறுடையின் பல அம்சங்களை கவனித்து ஒத்துப் பார்க்கும் வேளையில் அது தற்போதைய அறுவடையின் போது செய்து முடிக்கப்பட வேண்டிய வேலையைக் குறித்து வெகு தெளிவான கருத்தைக் கொடுக்கிறது. அந்த அறுவடையில் நம்முடைய ஆண்டவரின் விசேஷமான போதனைகள் என்னவெனில் ஏற்கெனவே உள்ள கோதுமையை சேகரிப்பதும் கோதுமையில் இருந்து யூத ஜாதியின் பதரை பிரிப்பதும் ஆகும். மேலும் அவருடைய உபதேசங்கள் புது யுகத்தின் விதைகளாகின. இந்த புது யுகம் பெந்தெகொஸ்தே நாளில் (இஸ்ரயேல் தேசம் தள்ளிவிடப்பட்ட உடன் நிகழ்ந்தது) ஆரம்பித்தது.

நம்முடைய ஆண்டவர் தமது ஊழிய காலத்தில் அந்த இஸ்ரயேல் மக்கள் மத்தியில் தம்முடைய சீடர்களை அனுப்பியபோது, சொன்ன வார்த்தைகளை கவனமாக ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது நடந்து கொண்டிருந்த விசேஷமான வேலை அறுவடையாகும், விதைப்பது அல்ல. அவர்களிடத்தில் அவர் சொன்னார்: “இதோ வயல் நிலங்கள் அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள். அறுக்கிறவன் கூ-யை வாங்கி நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்.” (யோவா. 4:35,36). அந்த அறுவடையில் பிரதான அறுவடையாளராகிய ஆண்டவர், உதவி அறுவடையாளர்களுக்கு சொன்னதாவது: “நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன். மற்றவர்கள் (முற்காலத்தில் உள்ள பிதாக்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் பரிசுத்த ஜனங்கள்) பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள்.” பல நூற்றாண்டுகளாக செய்யப்பட்ட முயற்சியின் பலன்களை அறுப்பதற்காகவும், ஜனங்களை கீழ்க்கண்ட செய்தியின் மூலம் சோதித்தறியவும் அனுப்பினேன். “பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது,” “இராஜா வந்துவிட்டார்,”இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்.” மத். 10:7; யோவா. 12:14; சக. 9:9



யூத அறுவடையில் ஆண்டவர், வெள்ளாடுகளை செம்மறியாடுகளாக மாற்றுவதை விட இஸ்ரயே-ன் சிதறுண்ட, குருடான ஆடுகளைத் தேடினார். ஏற்கெனவே தமது ஆடுகளாக இருப்பவர்கள் தம்முடைய சத்தத்தைக் கேட்கவும், தம்மை பின்பற்றவும் அழைத்தார். இந்த நிழலான காரியங்கள், தற்போதைய அறுப்பின் போது அல்லது அறுவடையின் போது வர வேண்டிய வேலையைப் பற்றி ஒரு அறிவிப்பை தெரிவிக்கிறது. இன்னொரு அதிக விசாலமான விதைத்தல் ஆயிர வருடயுகம் மற்றும் இராஜ்யத்தின் அதிக அனுகூலமான நிலைமையில் வெகு சீக்கிரமே தொடங்கும். வரக்கூடிய விளைச்சலை தரக்கூடிய இளைப்பாறுதல் போன்றவைகளைப் பற்றிய சத்தியம் என்னும் விதைகள் இப்பொழுதும் கூட இங்கும் அங்குமாக வாஞ்சையுள்ள சத்தியத்தின் மேல் பசியுள்ள இருதயங்களுக்குள் போடப்பட்டு வருகின்றன. ஆனால் இப்பொழுது இது ஒரு சாதாரண வேலைதான். யூத யுக நிழலைப் போன்று தற்போதுள்ள அறுவடை, சபை என்று கூறிக்கொள்பவர்களை (கிறிஸ்வர்கள் என்று அழைக்கப்படுபவர்களை) அறுவடை செய்யும் காலமாக இருக்கிறது. இதி-ருந்து சேகரிக்கப்படும் உண்மையான பரிசுத்தவான்கள் உயர்த்தப்பட்டு அவர்களுடைய ஆண்டவரோடு இணைவார்கள். இது சத்தியத்தை பிரசங்கிப்பதற்காக மட்டும் அல்லாது உலகத்திற்கு இளைப்பாறுதல் என்னும் பெரிய வேலையைச் செய்யும்படியாகவும் செய்யப்படுகின்றது.

இந்த அறுவடையின் போது கோதுமையும் பதரும் பிரிக்கப்படுகின்றன. இருந்தாலும் இந்த இரண்டு வகுப்பினரும் பிரித்தெடுக்கப்படுவதற்கு முன்னால் பேர்ச் சபையைச் சார்ந்தவர்களாக இருந்தனர். கோதுமை என்பது இராஜ்யத்தின் உண்மையான பிள்ளைகளாவார்கள். அவர்கள் உண்மையிலே தங்களை அர்ப்பணம் செய்தவர்களாக சுதந்தரர்களாக இருப்பார்கள். அதே வேளையில் பதர்கள் உண்மையாக அல்ல, பெயரளவுக்கு கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவர்களாகவும், மணவாட்டியாகவும் இருப்பார்கள். பதர்களைப் பற்றி ஆண்டவர் கூறுகையில், அவர்கள் அவரை ஆண்டவர் என்று அழைத்தாலும் அவருக்கு கீழ்ப்படியாதவர்கள் என்று கூறுகிறார். (லூக். 6:46) வெளிப்புற தோற்றத்தில் இந்த இரண்டு வகுப்பினரும் ஒரே மாதிரியாகத்தான்

இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு இடையில் உள்ள வித்தியாசத்தைக் காண உற்றுக் கவனிக்க வேண்டும். உவமையில் "நிலம் உலகம்" கோதுமையும் பதரும் ஒன்றாக சேர்ந்து (பதர்கள் எண்ணிலடங்காதது) "கிறிஸ்தவ உலகம்" அல்லது "கிறிஸ்தவ தேசங்கள்" என்று அழைக்கப்படுகிறது. எப்பொழுதாவது அல்லது கிரமமாக மத ஆராதனைகளில் கலந்து கொள்வதின் மூலம், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்வதினால், சில சடங்காச்சாரங்கள், ஆச்சாரங்களைப் பின்பற்றுவதால், ஏதோ ஒரு மதரீதியான ஒழுங்கில் இணைந்து இருப்பதால் பதர்களும் ஒரே மாதிரியாகத்தான் தோற்றம் அளிக்கின்றன. சில வேளைகளில், தேவனுடைய இருதயத்திற்கேற்ற அர்ப்பணித்துக் கொண்ட பிள்ளைகள் என்றும் எண்ணப்படுகிறார்கள். "கிறிஸ்தவ தேசங்கள்" என்று அழைக்கப்படுபவைகளில் தங்களை நாத்திகர்கள் என்று கூறிக் கொள்பவர்கள், யூதர்கள் தவிர மற்றவர்கள் அனைவரும் இப்படியாக கிறிஸ்தவர்கள் என்று எண்ணப்படுகிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை (உண்மையாகவே தங்களை அர்ப்பணம் செய்து கொண்ட சில பரிசுத்தவான்கள் இதில் அடங்குவார்கள்) கிட்டத்தட்ட 18 கோடி கிரேக்க, ரோமன் கத்தோ-க்கர்களும், 12 கோடி புராட்டஸ்டன்ட் சபையாரும் ஆகும்.

சுவிசேஷ யுகத்தின் போது நம்முடைய ஆண்டவரின் கட்டளை என்னவெனில் இராஜ்யத்தின் உண்மையான பிள்ளைகளிடம் இருந்து போ-யானவைகளை அகற்ற முயற்சிக்க வேண்டாம் என்பதாகும். ஏனெனில் இப்படியாக முழுவதுமாக பிரித்து எடுக்க வேண்டும் என்றால் பொதுவாக உலகத்தை (நிலத்தை) தலைகீழாக மாற்ற வேண்டியதிருக்கும். அதாவது கோதுமையையும், பதரையும் பொதுவாக குலைத்துப்போட வேண்டியதிருக்கும். ஆகவே தான் அவர் கூறினார் : "இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள். அறுப்புக் காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: (தூதர்கள், பணிவிடைக்காரர்கள்) முதலாவது களைகளைப் பிடுங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்."(மத். 13:30) ஆகவே, அறுப்பின் போது இதுவரை தடைபண்ணப்பட்டிருந்த பொதுவான பிரித்தெடுக்கும் வேலையை நாம் எதிர்பார்க்க வேண்டும். கோதுமைக்கு அடையாளமாக காட்டப்படுகிறவர்கள்,



கிறிஸ்து அவர்களை விடுதலை பண்ணியிருப்பதில் நிலைத்திருக்கவும் உற்சாகப்படுத்தப்படவும், துணிகரமான மீறுதல் செய்பவர்களோடும், ஆட்டின் போர்வையில் இருக்கும் ஓநாய்களிடமும் ஐக்கியம் வைப்பதினால் ஏற்படும் சிக்கல்களில் மாட்டிக் கொள்ளாதபடி பார்த்துக் கொள்ளவும் வேண்டும். இருந்த போதிலும் இவர்கள் முற்றிலுமாக அர்ப்பணித்துக் கொண்ட வகுப்பினருக்கும் (கோதுமை- பரிசுத்தவான்கள்) கிறிஸ்துவின் நாமத்தையும் அவரது உபதேசங்களையும் பயன்படுத்துகிற பதர் வகுப்பாருக்கும் இடையே ஓர் எல்லையை நிர்ணயிக்க முயற்சிக்கக் கூடாது. இவர்கள் ஓர் அளவுக்கு இந்த உபதேசங்கள் தங்கள் வெளிப்புற வாழ்க்கையில் பிரதிப-க்க அனுமதிக்கிறார்கள். ஆனால் அவர்களின் இருதயமோ ஆண்டவரை விட்டும், அவருடைய ஊழியத்தை விட்டும் வெகு தூரத்தில் உள்ளது. இப்படியாக இருதயங்கள், நோக்கங்கள் போன்றவற்றை நியாயந்தீர்ப்பது என்பது நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்டது. இதை நாம் செய்யக்கூடாது என்று ஆண்டவரும் கட்டளையிட்டிருக்கிறார். இதைத்தான் மற்ற சபைகளில் உள்ளவர்களும் வெகுகாலமாக முயற்சித்து வருகிறார்கள். இவர்கள் மனுஷீக முயற்சிகளால் கோதுமையை பிரித்தெடுக்கவும், சோதித்து பார்க்கவும், களைகளை ஒதுக்கவும் முயற்சித்துக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களுடைய விசுவாசம் இம்மாதிரியான பல்வேறு தவறான அளவுகளுக்குள் வருவதில்லை. இருந்தாலும் இந்த வகுப்பினர் எவ்வளவு தோல்வியுள்ளவர்களாக இருக்க முடியும்! அவர்கள் வேதத்திற்கு அப்பாற்பட்ட பொய்யான நியமங்களையும் உபதேசங்களையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவைகள் உண்மையிலேயே அதிகமான அளவிற்கு களைகளை வளர்த்துள்ளதுடன் கோதுமையை வளர விடாமல் அமுக்கி பிரித்தெடுத்துள்ளது. உதாரணமாக, சபையின் அங்கத்தினர்களாக இல்லாத அனைவருக்கும் நித்திய ஆக்கினை உண்டு என்கிற போதனை, இப்பொழுது அதிகமான வெளிச்சம் உண்டாயிருப்பதினால் அதிகமாக மாற்றம் அடைந்து இருந்தாலும், இந்த தவறு எவ்வளவு எண்ணிடலங்காத அளவு களைகளை உண்டு பண்ணி விட்டது; மேலும், கோதுமையானது தேவனுடைய

திட்டத்தையும் குணாதிசயத்தையும், சரியான முறையில் அறிந்து கொள்ளாதபடி, அமுக்கி, குருடாக்கி, தடங்கல் செய்துவிட்டது. இன்றைக்கு கோதுமையையும் களையையும், பரிசுத்தவான்களையும் பேர் கிறிஸ்தவர்களையும், பிரித்தெடுக்க முயற்சி செய்யாது ஒன்றாக வளர விடுங்கள் என்கிற ஆண்டவரின் ஆலோசனையைப் பின்பற்றாதபடி பல்வேறு சபை பிரிவுகள் செய்துள்ள தவறை நாம் காண்கிறோம். ஒவ்வொரு சபை பிரிவிலும் உள்ளவர்களில் நேர்மையானவர்கள், அவர்களுடைய சபைப் பிரிவுகளில் அநேக களைகள் உண்டு என்பதை ஒத்துக் கொள்ளுவார்கள். மேலும் அவர்கள் பரிசுத்தவான்கள் அல்ல, வெறும் பேச்சாளர்கள் தான், தங்களுடைய சபைக்கு அப்பால் அநேக பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள் என்பதையும் ஒத்துக் கொள்ளுவார்கள். ஆகவே, இன்றைக்கு எந்த சபை பிரிவும் தங்கள் சபையில் உள்ளவர் எல்லாம் கோதுமை தான் களைகளே கிடையாது என்று கூற முடியாது, கூறுவதும் கிடையாது. பூமியில் உள்ள எந்த சபை பிரிவும் (Christadelphians and Mormons தவிர) தங்களிடம் இருப்பது எல்லாம் கோதுமை தான் என்று தைரியமாக கூற இயலாது. ஆகவே அவர்கள் தங்களுடைய ஸ்தாபனங்கள் வேதக் கருத்துக்கள் என்கிற வே- போன்றவைகளுக்கு எந்தவித சமாதானமும் சொல்ல இயலாது. அவர்கள் கோதுமையை களைகளில் இருந்து பிரித்து எடுப்பதில்லை. அதுமாத்திரமல்ல அறுப்பின் போது இருதயங்களை முற்றிலுமாக, முழுவதுமாக பிரித்து எடுப்பதற்கு ஆண்டவரால் நியமிக்கப்பட்ட முறையைத் தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாது. அறுவடை காலத்தில் அது நிறைவேறும். எப்பொழுது காலம் சமீபமாக இருக்கிறது, பிரித்தெடுக்கும் அறுப்பின் காலம் எப்பொழுது துவங்கும் என்பதை அறிவது அவசியம் என்பதை இது காட்டுகிறது. தமது வாக்குத்தத்தத்திற்கு உண்மையுள்ளவராயிருக்கிற நமது ஆண்டவர் நம்மை இருளில் விட்டு விடவில்லை, இப்பொழுது யாருடைய இருதயங்கள் ஆயத்தமாக உள்ளதோ, அவர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படவேண்டிய செய்தியைக் கொடுக்கிறார். "சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களை பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்தி-ருக்கிறவர்களல்லவே." 1தெச. 5:4

யூதர்களின் கால அறுப்பின் போது உபயோகிக்கப்பட்ட



அரிவாளைப் போன்றே, இப்பொழுது வர இருக்கிற சத்தியம் தான் இந்த அறுப்பின் அரிவாளாகும். அறுக்கிறவர்கள், தூதர்கள், ஆண்டவரைப் பின்பற்றி வருபவர்கள் ஆவார்கள். யூத அறுப்பின் காலத்தில் இருந்த வகுப்பினரைப் போன்றே இந்த அறுக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனாலும் யுகங்கள் முழுவதும் மற்றவர்கள் யாரும் களைகளில் இருந்து கோதுமையைப் பிரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது ஆயத்தமாக உள்ளவர்கள், தகுதியானவர்கள், கீழ்ப்படிதல் உள்ளவர்களுக்கு தேவனுடைய திட்டமும் ஒழுங்கு முறைகளும் தெளிவாக காண்பிக்கப்படுவதால், தற்கால சத்தியம் என்கிற அரிவாளை நீட்டுங்கள் என்கிற அவரது சத்தத்தை அறுப்பின் காலத்தில் கேட்பார்கள். மேலும் "ப-யினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்," "என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாய் இருப்பார்கள்" என்கிற சத்தத்தையும் கேட்பார்கள். சங். 50:5; மல். 3:17

சத்தியத்தினாலே பரிசுத்தவான்களை கூட்டிச் சேர்க்கிற வேளையாக இது இருப்பது மட்டுமின்றி (தங்கள் ஆண்டவரோடும், ஒருவரோடு ஒருவரும் ஒரு மனப்பட்டு இருப்பதும், களைகளைப் போன்றவர்களோடு சேராமல் இருக்கும் வேளையாக) நிலத்தை, சுத்திகரிப்பதற்காக களைகளை, பதர்களை, வைக்கோ-ன் அடிக்கட்டைகளை அக்கினியில் சுட்டு எரித்து புதிதாக விதை விதைக்க தயார் பண்ணுகிற வேளையாகும். ஒரு கருத்தின்படி களைகளுக்குள் இருந்து கோதுமை சேகரிக்கப்படுகிறது. ஏனெனில் களைகள் அதிகமாக காணப்படுகின்றன. "என் ஜனங்களே அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்று ஆண்டவர் கூறுவது போன்று இது உள்ளது. இன்னொரு கருத்தின்படி கோதுமையில் இருந்து களைகள் பிரிக்கப்படுவதை காண்பிக்கிறது. உண்மையிலேயே கோதுமை இருக்க வேண்டிய இடம்தான் அது. அது ஒரு கோதுமை நிலம், களைகளுக்கு உள்ள நிலமல்ல. (நிலமாக எண்ணப்படுகிற மனுக்குலத்தில் கோதுமையும், அதோடு கூட களைகளும் வளருகின்றன) ஆகவே வெளியேற்றப்பட வேண்டியது களைகள் தான். ஆண்டவர் கோதுமை நிலத்தை துவக்கினார். கோதுமை

தேவனுடைய இராஜ்யத்தின் பிள்ளைகளைக் குறிக்கிறது. *(மத்.13:38)* நிலம் அல்லது உலகம் இவர்களுக்கு கொடுக்கப்பட உள்ளது. மேலும் அவர்களுக்கு இது ஏற்கெனவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு உள்ளது. உவமை காட்டுகிறது என்னவெனில் களைகள்தான் சேகரிக்கப்பட்டு அக்கினியில் போடப்படுகின்றன, நிலமும் அதில் உள்ள எல்லாம் கோதுமைக்கு கொடுக்கப்படுகிறது. களைகள், அவைகள் எங்கிருந்து வந்ததோ அந்த இடத்திற்கு (மண்) திருப்பிக் கொடுக்கப்படுகின்றன. கோதுமையின் முதற்பலன்கள் களஞ்சியத்தில் சேர்க்கப்பட உள்ளன. அதனால் பூமியானது இன்னொரு விளைச்சலைத் தரமுடியும்.

கோதுமை கட்டுகளாக கட்டப்படவில்லை. தானியங்கள் ஒரே விதமாக இருக்கும்படி தனிமையாக வேறு ஒரு இடத்தில் இதே சூழ்நிலைகளுக்குள் நடப்பட்டது. ஆனால் உவமை கூறுவது என்னவெனில், சுட்டு எரிக்கப்படுவதற்கு அல்லது ஆபத்து நாட்களுக்கு முன்னதாக களைகள், அறுப்பின்போது சேகரிப்பட்டு கட்டுகளாக கட்டப்பட வேண்டும் என்பதாகும். இந்த வேலை நம்மைச் சுற்றி நடந்து கொண்டு இருக்கிறது. தொழிலாளர் சங்கங்கள், ஏகாதிபத்திய டிரஸ்டுகள், பாதுகாப்பிற்கான சங்கங்கள் போன்றவைகள் இதற்கு முன்பு இவ்வளவு இருந்ததில்லை.

நாகரீக உலகம் தான் உவமையில் கூறப்பட்ட நிலமாகும். இதில் சீர்திருத்த காலத்தின் போது, உபதேசத்தின் முரண்பாடுகளாகிய காற்றுகள் கோதுமையையும், களைகளையும் ஒன்றாக ஒரு பக்கத்தில் இருந்து இன்னொரு பக்கத்திற்கு பெரும் பிரிவுகளாக (சபைப்பிரிவுகள்)தூக்கி எறிந்தன. இவற்றில் சில, ஒரு பக்கமும் (உபதேசத்தின்படி) மற்றவைகள் இன்னொரு பக்கமுமாக தள்ளுண்டன. இது கோதுமையையும், களைகளையும் இணைந்து இருக்கப் பண்ணியது, அதனால் அவைகள் அனைத்தின் தனித்தன்மையும் அதிகமாக எடுத்துப் போடப்பட்டன. உபதேசம் என்னும் புயல்கள் கடந்த காலத்திற்கு உரியவைகளாகும். ஆனால் பிரிவுகள் இருந்த மாதிரியே உள்ளன. திரளான ஜனங்களின் செல்வாக்கில் இருந்து இங்கே ஒன்று, அங்கே ஒன்று என்று கோதுமையின் தலை தன்னை நேர்மைக்கென்று உயர்த்த முயற்சிக்கிறது.



ஆனால் அறுப்புக் காலத்தின் போதுதான், கோதுமை களைகளினால் ஏற்படும் பாரத்தி-ருந்தும் தடைகளில் இருந்தும் விடுதலை பெறுகிறது. சத்தியம் என்னும் அரிவாள் கிறிஸ்து ஆதியில் எல்லோரையும் வைத்திருந்த சுதந்திர நிலைக்கு இந்த வகுப்பினரை ஆயத்தப்படுகிறது. அதே வேளையில் இதே அரிவாள் களைகளின் மேல் எதிர்மாறான செல்வாக்கை உருவாக்குகிறது. களைகளின் நோக்கம் சபை பாகுபாட்டின் மதிப்பு மற்றும் ஆடம்பரம் என்பவைகளின் மேல் தான் உள்ளது. தனிப்பட்ட முறையில் தேவனிடத்தில் கீழ்ப்படிதலும் உண்மையும் உள்ளவர்களாக இருப்பதற்கல்ல. ஆகவே, தற்கால சத்தியங்கள், எல்லா சபை பிரிவினைகளையும் குற்றப்படுத்துவதாக உள்ளது என்று அறிந்து உடனடியாக அவற்றை நிராகரித்து எதிர்க்கின்றார்கள். ஒருவரோடு ஒருவர் இணைந்து இருக்க வேண்டும் என்று முடிவு செய்தாலும், எல்லா சபை பிரிவினரும் தற்கால சத்தியத்தின் பிரிக்கும் தன்மையை ஒற்றுமையாக எதிர்க்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய ஸ்தாபனங்கள் துண்டு துண்டாக சிதறாதபடி, எல்லா கோதுமையும் தப்பிய பின்னர் களைகள் மட்டும் இருக்கும் நிலை வராதபடி இவர்கள் சமய பாடத்தைப் பற்றிய தனிப்பட்ட சிந்தனை மற்றும் ஆராய்ச்சிகளின் மேல் தங்கள் கவனத்தை மெதுவாக, ஜாக்கிரதையாக, சரியாக செலுத்துகிறார்கள்.

தனிப்பட்ட முறையில் சோதித்துப் பார்க்கும் போது ஆட்டுக்குட்டியானவரை மிக நெருக்கமாக பின்பற்றி வருபவர்களுக்கு என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்திற்கு எந்த உரிமையும் தனக்கு கிடையாது என்று களைகளைச் சேர்ந்த ஒவ்வொரு வகுப்பினருக்கும் நன்றாகத் தெரியும். களைகள் மற்ற கூட்டமைப்புகளைப் போன்றே, பல்வேறு சபை பிரிவுகள் ஒன்றோடு ஒன்றாக ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு நியாயம் விசாரிக்கப்படுவதை விரும்புவார்கள். அவர்கள் தாங்கள் எதைச் சார்ந்துள்ளார்களோ அந்த கோதுமையினால் வரும் நன்மைகளின் மூலமாக இராஜ்யத்தின் மகிமைக்குள் நுழைந்து விடலாம் என்று எண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் இதை செய்ய இயலாது. இராஜ்யத்திற்கு தகுதி பெறுவது தனிப்பட்ட முறையில் சோதிக்கப்படுவதின் மூலமாகவே. அது தனிப்பட்ட முறையில்

தேவன் மற்றும் சத்தியத்தின் மேல் வைக்கும் தனிப்பட்ட வைராக்கியத்தின் மூலமே ஆகும். எந்த சபை பிரிவு உண்மையானது என்று சோதித்துப் பார்ப்பதின் மூலம் அல்ல. இதை இன்றைக்கு இருக்கும் அறிவின் வெளிச்சத்தினால் ஒவ்வொரு சபையினரும் உணரத் தொடங்கியுள்ளனர். அதாவது இந்த வெளிச்சம் பனி போன்று உள்ள குருட்டாட்டத்தையும் மூட நம்பிக்கையையும் சிதறடிக்கத் தொடங்கி உள்ளது. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் மற்ற சபை பிரிவினரும், தங்களைப் போன்றே, தாங்கள் தான் ஒரே உண்மையான சபை என்று உரிமை கொண்டாட முடியும் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். இதை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும் என்கிற நிலையில் இரட்சிப்புக்கு தங்கள் சபை பிரிவுகள் ஒன்றோடு இணைந்து இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தினால் எல்லாரையும் ஒன்றுபட செய்ய விரும்புகிறார்கள். அது எதோடு சேர வேண்டும் என்பதைக் குறித்த கவலை கிடையாது. இப்படியாக தனிப்பட்ட முறையில் உள்ள பொறுப்பைக் குறித்த கருத்தை சபை பாகுபாடு என்கிற அடிமைத்தனத்தோடு சேர்க்கிறார்கள்.

சமீபத்தில் சபை பாகுபாடுகளை ஆதரிப்பவர்களால் அவைகளின் பக்தர்கள் மேல் சமீபத்தில் இழுக்கப்பட்ட ஒரு பிரபலமான கயிற்றைக் குறித்து உதாரணமாக காட்டும்படியாக, தீமை விளைவிக்காத, அநேகருக்கு பயனுள்ளதாக காட்சியளிக்கும் சர்வதேச ஞாயிறு பள்ளிக்கூட பாடங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இது எல்லா கிறிஸ்தவர்கள் இடையில் வேதாகமம் படிப்பதில் சபை பாகுபாடற்ற விதத்தில் ஒத்துழைப்பு இருப்பது போன்ற ஒரு எண்ணத்தை உருவாக்குகிறது. சபை பாகுபாடுடன் சமய கோட்பாடுகளை படிக்கும் பழைய முறையி-ருந்து வேறுபட்டு இருப்பது போல் அவர்கள் காணப்படுகிறார்கள். இந்த ஒரே மாதிரியான பாடங்கள், சபை பாகுபாடு முறைகளை விட்டுவிட்டது போல் தோற்றம் அளிப்பதோடு, எல்லா கிறிஸ்தவர்களும் வேதாகமத்தை, அது தரும் வெளிச்சத்திலே படிக்க கூடிவருவது போன்று காட்டுகிறது. இதை எல்லோரும் சரியான முறை என்று ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் எல்லா சபை பிரிவினரும் இதை செய்ய மறுக்கின்றனர். இந்த சர்வதேச ஞாயிறு பாடசாலை பாடங்கள் சபை பாகுபாடு அற்றது என்று தோற்றத்தில்



தான் காட்டுகின்றன. அவைகள் வேதாகமம் படிப்பதற்கு சுதந்திரம் அளிப்பது போன்றுதான் காட்டுகின்றன. உண்மையில் ஒவ்வொரு சபை பிரிவும், பாடங்களில் சொல்லப்பட்ட வசனங்களுக்கு அவைகளின் சொந்த வியாக்கியானத்தைத் தான் தயாரிக்கின்றன. மேலும் இந்த பாடங்களை தெரிவு செய்யும் குழுவினர், வெளிப்புறத்தில் ஒரே மனமும் ஒற்றுமையும் இருக்க வேண்டும் என்பதற்காக கருத்து வேறுபாடு உண்டாக்காத பகுதிகளையே தெரிந்தெடுக்கிறார்கள். அவர்கள் கருத்து வேறுபாடு காட்டுகிற பகுதிகள் மற்றும் உபதேசங்கள் ஆகிய இவைகள் தான் அதிகமாக ஆராயப்பட வேண்டியவைகள் என்று இருக்கும் போது ஒவ்வொரு சபை பிரிவின் சத்தியங்களும் தவறுகளும் வெளியே கொண்டு வரப்படலாம் என்பதற்காக, “ஒரே தேவன், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம்” என்பவைகளை அடிப்படையாக கொண்டு ஒரு உண்மையான ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதற்காக இவைகள் இந்தப்பாடங்களில் ஆராயப்படுவதில்லை. ஆனால் ஒவ்வொரு சபையினரும் முன்பு கொண்டிருந்த கருத்தையே உறுதியாகப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

இப்படியான முயற்சிகள் மற்றும் இதே போன்று மற்ற “ஒற்றுமையுண்டாக்கும்” வழிகளும், புரட்டஸ்டன்ட் பிரிவை தோற்றத்தில் அதிக பலம் உள்ளதாக காட்டுவதற்காகும். ஜனங்களிடத்தில் வசனத்தின்படி சொல்லாது விட்டாலும், அது தெரிவிப்பது என்னவெனில், இந்த சபை பிரிவுகளில் ஒன்றில் நீங்கள் சேர வேண்டும் இல்லாவிட்டால் நீங்கள் தேவனுடைய பிள்ளையே கிடையாது என்பதாகும். உண்மையிலேயே அது ஒரு சபையாக ஒன்றுபடுவது அல்ல. ஆனால் வேறுபட்ட தனிப்பட்ட ஸ்தாபனங்கள் ஒன்று கூடி வருவதாகும். அவைகள் ஒவ்வொன்றும் முன்பு போலவே தன்னுடைய ஸ்தாபனத்தை ஒரு பிரிவாக வைக்க ஆவலுடன் இருப்பது காணப்படுகிறது. ஆனால் ஒவ்வொன்றும் மற்றொன்றுடன் இணைந்து விசாலமான அதிக பலமுள்ளதான ஒரு தோற்றத்தை உலகுக்குக் காட்ட விரும்புகிறது. அது தானியக் கதிர் கட்டுகளை குவியலாகச் சேர்ப்பது போல் உள்ளது. ஒவ்வொரு தானியத்தின் தாளும் தன்னுடைய ஸ்தாபனத்தை தக்க வைத்துக் கொள்ளுகிறது. ஆகவே மற்ற கட்டுகளோடு இறுக்கமாக பிணைக்கப்பட்டு ஒரு

பெரிய கவர்ச்சிகரமான வைக்கோல் போரில் அகப்பட்டுக் கொள்ளுகிறது.

சர்வதேச பாடத்திட்டம் ஞாயிறு வேதாகமப் பள்ளிகளை நவீன முறையில் நடத்தும் போது, அது பிரிவுகள் வளருவதற்கு உதவி செய்வதுடன், மற்றொரு வழியில் சத்தியத்தை அறிகிற அறிவில் வளருவதற்கு தடை பண்ணுகிறது. ஆகவே பொதுவாக பள்ளிக்கூடத்தின் "பயிற்சியோடு" சம்பந்தப்படும்படியாக ஒரு பாடம் தயாரிக்கப்படுவதால், ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கிற பதில்களோடு ஜாக்கிரதையுடன் அச்சடிக்கப்பட்ட கேள்விகளை கவனித்துப் பார்க்க போதிய அவகாசம் இல்லை. ஆகவே பயனுள்ள கலந்துரையாடலுக்கும் சிந்தனைக்கும் உரிய மற்ற முக்கியமான கேள்விகளை வெளியே கொண்டு வர சத்தியத்தை வாஞ்சிக்கும் ஒரு வேத மாணவனுக்கு அல்லது சில வேளைகளில் ஆர்வம் காட்டும் ஆசிரியருக்கு போதிய அவகாசம் இல்லை. இதற்கு முன்பாக வேதாகம வகுப்புகளில் தாங்கள் தெரிந்து கொண்ட வேத பகுதிகளை படிக்கும்படியாக கூடி வந்தார்கள். ஆனால் அவர்கள் தப்பெண்ணம், அறியாமை என்கிற கட்டுகளுக்குள் இருந்தபடியால் சத்தியத்தை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தார்கள். ஆர்வமுள்ளவர்கள் மற்றும் சத்தியத்தின் மேல் பசிதாகம் உள்ளவர்களால் மட்டுமே சிறிதளவு முன்னேற்றம் அடைய முடிந்தது. ஆனால் இப்பொழுதோ ஒவ்வொரு பாடத்தையும் பற்றிய அதிகமான வெளிச்சம், பிரகாசம் அடைவதால், அறியாமை, தவறான அபிப்பிராயம் (Prejudice) என்கிற பனிமூட்டத்தை நீக்குகிறது. அவனுக்கு உதவிக்காக கொடுக்கப்படுகிறது என்று சொல்-க் கொள்ளப்படும் சர்வதேச பாடங்களே வேதாகம மாணவன் பிரகாசிக்க முடியாதபடி தடை பண்ணுகிறது. அவனுக்கு புதிய யுக்திகள் கிடைக்க முடியாதபடி அவனுடைய வேத பாடத்திற்கென உள்ள நேரம் சாமர்த்தியமாக கையாளப்படுகிறது; அவனிடம் இருந்து பலமான ஆகாரம் என்கிற அதிகமாக பெறப்பெற்ற சத்தியத்தைக் குறித்த (எபி. 5:14) வாஞ்சை எல்லாவற்றையும் எடுத்துப்போடும்படியாக தொடர்ந்து "பாலைப் போன்ற வசனத்தை" மட்டுமே பயன்படுத்தும்படியாக (மனிதர்களின் பாரம்பரியங்களோடு அதிகமாக கலக்கப்பட்டது) அவனுடைய நேரம் சாமர்த்தியமாக கையாளப்படுகிறது. "நாம் நம்முடைய பாடத்தை கவனிக்க வேண்டும், ஏனெனில் காலம் கடந்து விடும்" என்கிற வார்த்தைக்கு கீழ்ப்படியும்படியாக, இப்படிப்பட்ட வகுப்புகளில் எல்லா காலமும் சந்தர்ப்பமும் பலமான ஆகாரத்தை ருசி பார்க்கவும், (எபி. 5:14) அதை போற்றவும் கற்றுக் கொள்ளவும் முடியாதபடி ப- கொடுக்கப்படுகிறது. தீர்க்கதரிசியும் அப்போஸ்தலரும் கூட தேவனுடைய கிருபையிலும் அறிவிலும், அன்பிலும் நாம் வளரவும் தேவனுடைய மகா பெரிய உபதேசங்களை நாம் ஏற்றுக் கொள்ளும்படி நாம் முதலாவதாக மூல உபதேசங்களை விட்டு விட்டு பூரணத்திற்கு கடந்து செல்ல வேண்டும் என்று கூறுகிறார்கள். ஏனெனில் "பால் மறந்தவர்களுக்கும் முலை மறக்கப் பண்ணப்பட்டவர்களுக்குமே" அவர் அறிவை போதித்து உபதேசத்தை உணர்த்துவார். எபி. 6:1; ஏசா. 28:9



ஞாயிறு வேதாகம பள்ளிகளில் கற்றுக் கொடுக்கும் முறைகள் சமீப காலத்தில் ஓர் அளவுக்கு முன்னேற்றம் அடைந்து இருந்தாலும், இன்னும் அதிகம் செய்யப்பட வேண்டியுள்ளது. இந்த வகுப்புகளில் ஆண்டவருடைய சிறப்பான மக்களில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்கிற ஆர்வத்துடன் உள்ளனர். ஆனால் ஆண்டவருக்கென முன் வருபவர்களின் எண்ணிக்கையையும், ஆண்டவருக்கு ஊழியம் செய்வது போன்று அவர்கள் காட்டுவதையும் பார்த்து அவர்கள் குழப்பமடைகிறார்கள். சில நன்மைகள் உண்டு, ஆனாலும் பின்விளைவுகளும் ஏற்படத்தான் செய்கின்றன. தேவன் பெற்றோர்களுக்கென ஒப்புவித்ததை தனிப்பட்ட முறையில் செய்யாதபடி தடை பண்ணப்படுகிறார்கள். இதை செய்யாமல் இருப்பது பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் ஊறு விளைவிக்கிறது. நன்கு முதிர்ச்சி பெறாதவர்களுக்கு இந்த சுருக்கமான பகுதியும், பயிற்சிகளும் வேதாகமத்தைப் படிப்பதைக் காட்டிலும் அதிகமாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாக காணப்படுகிறது. அவர்கள் ஒரு கடமையை செய்தாயிற்று என்ற உணர்வைப் பெறுகிறார்கள். சில வினாடிகள் ப-யாக செலுத்தப்பட்டிருந்தாலும், அனாவசிய பேச்சிற்கும் சம்பாஷணைக்கும் இடமளித்து விடுகிறது. சிறியவர்கள் கூட பயிற்சிகளையும், பாடுவதையும், கதை புத்தகங்களையும், வெளியே சென்று வருவதையும், தின்பண்டங்களையும், பொழுது போக்குக்குரியதான

விஷயங்களையும் அதிகமாக விரும்புகிறார்கள். அவர்களுடைய தாய்மார்களும் கூட அவர்களுக்கு உடை உடுத்துவதில் செலவழித்த நேரம் பயனுள்ளதாக இருந்தது. மற்றும் அவர்களுடைய ஆடைகளை மற்றவர்களுக்கு காட்டுவதற்கு கிடைத்த நல்ல தருணம் இது என்றுதான் யோசிக்கிறார்கள். இயந்திரம் போன்று இயங்கும் ஞாயிறு பள்ளியினால், வீட்டில் அவர்களுக்கு வேதத்தை கற்றுக் கொடுக்க வேண்டும் என்கிற பொறுப்பு கிட்டத்தட்ட இல்லாமல் போய்விடுகிறது. ஞாயிறு வேதாகம பள்ளி என்பது சபையின் சிறு குழந்தைகளுக்கான பராமரிப்பு நிலையம் என்று அழைக்கப்படுகிறது. உலகத்தின் ஆவியின்படி உலகப் பிரகாரமாக வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தான் அதிக அளவில் காணப்படுகின்ற களைகளாவார்கள், இதைக் கொண்டு மகா பெரிய பாபிலோன் நிறைந்து வழிகிறது.

இங்கும் அங்குமாக வயது வந்தவர்களுக்கென்று வேதாகம வகுப்பு எங்கு நடைபெறுகிறதோ அங்கு, ஆசிரியர் துணிச்சலானவராக கொடுக்கப்பட்ட பாடத்தை விட்டுவிட்டு இன்னும் அதிக முக்கியமான தலைப்புகளைக் கற்று கொடுக்கும் போது, சத்தியத்தை வெளியே கொண்டு வருவதற்கான சுதந்திரத்தைக் கொடுக்கும் போது அது சபை பிரிவின் கோட்பாடுகளுக்குட்பட்டதோ இல்லையோ என்று இருக்கும் நிலையில், அவர் உலக ரீதியில் செயல்படும் போதகர் அல்லது தலைமை ஆசிரியரால் முரண்பாடானவர் என்று கணிக்கப்படுகிறார். இப்படிப்பட்ட ஆசிரியர்கள் உண்மையிலேயே சபை பாகுபாடுகளுக்கு ஆபத்தைக் கொண்டு வரக்கூடியவர்கள். ஆகவே வெகு சீக்கிரத்திலேயே அவர்களுக்கு வகுப்புகள் இல்லாமல் போகும். இப்படிப்பட்ட ஆசிரியர்கள் சத்தியத்தை ஆராய்ந்து பார்க்கும்படி செய்பவர்கள். வெகு சீக்கிரத்திலேயே சபை பிரிவு என்கிற கயிற்றினால் கட்டி வைத்திருப்பதை அறுத்து விடுவதினால் அவர்கள் வேண்டாதவர்களாக ஆகிவிடுவார்கள். ஆகவே மற்றவர்கள் தான் அதாவது தங்களுடைய வகுப்பில் உள்ளவர்களின் சிந்தனைகளை கட்டுப்படுத்தக் கூடியவர்கள், பலமான ஆகாரத்தை உண்ணாதபடி நிற்கக்கூட பலம் இல்லாமல் குழந்தை போன்று இருக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள், ஒழுங்கு முறைகளுக்குள் கட்டப்பட்டு இருப்பவர்கள், அவைகள் இல்லாவிட்டால் வாழவே முடியாது என்று



நினைப்பவர்கள் போன்றோரே அதிகமாக விரும்பப்படுகிறார்கள். உண்மையான ஆசிரியர் மற்றும் உண்மையான வேத மாணாக்கனின் இடம் எல்லா மனுஷீக அடிமைத்தனத்திற்கும் அப்பாற்பட்டது. தேவனுடைய நல்ல வார்த்தையை ஆராய்ந்து பார்க்கவும், அவைகளை உட்கொள்ளவும் சுதந்திரமும் ஆட்டுக்குட்டியானவர் வழி நடத்துகிறபடி அவரைப் பின்பற்ற சுயாதீனமுள்ள இடமாக இருக்க வேண்டும். யோவா. *8:36*; கலா. *5:1*

தனிப்பட்ட சுதந்திரம் இதற்கு முன்பு எப்பொழுதும் இல்லாதபடி வெளிப்படையாக அறிந்து கொள்ளப்பட வேண்டியதாக இருக்கும்போது, எல்லா கோதுமையையும் களைகளையும் இறுக்கமாக அநேக கட்டுகளாக கட்டும்படியான காலம் இதற்கு முன்னதாக இருந்ததில்லை. இப்பொழுது இருப்பது போல் தனிப்பட்ட சுதந்திரத்தை தடை பண்ணும்படியான ஒழுங்கு முறைகள் இதற்கு முன்பு இந்த அளவுக்கு இருந்தது கிடையாது. வைராக்கியத்துடன் சபை பாகுபாடுகளின்படி செயல்படுகிற ஒருவரின் தனிப்பட்ட ஓய்வு நேரமும், அநேக கூட்டங்கள் அல்லது செயல் திட்டங்களில் செலவிடப்படுகிறது. ஆகவே தடையில்லாத சிந்தனைக்கும் வேத பாடங்களை படிப்பதற்கும் நேரம் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட கூட்டங்கள், பொழுது போக்குகள் ஆகியவைகளின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் சபை பிரிவுகள் பலம் அடையவேண்டும், பெருக வேண்டும் என்பதாகும். அதனால் வரும் விளைவு என்னவெனில் மேலே கூறப்பட்ட அடிமைத்தனம் ஆகும். இது கோதுமையாக இருக்கிற, தேவனுக்கென்று அர்ப்பணம் செய்து கொண்ட பிள்ளைகளின் உண்மையான வளர்ச்சிக்கு அதிக தடையாக உள்ளது. தீர்க்கதரிசி கூறுவது போன்று, இந்த கட்டுகள் அதிக பலம் உள்ளதாக்கப்படுகின்றன. (ஏசா. *28:22*) இந்த கட்டுகளில் சில கோதுமையும், அநேக களைகளும் உள்ளன. இதில் இருந்து வெளியே வருவது என்பது அனுதினமும் அதிக கடினமானதாகிறது.

சிறிய அளவான, உண்மையாகவே அர்ப்பணம் செய்து கொண்ட கோதுமையில் இருந்தும், எண்ணிலடங்கா ஞானஸ்நானம் பெற்று பெயரளவில் உள்ளவர்களிடம் இருந்தும் நாம் பார்த்ததி-ருந்து (ஒரு மெதடிஸ் கண்காணியானவர் களைகளைப்

பற்றி உறுதியாகக் கூறியபடி) களைகள் சுட்டெரிக்கப்படுவது ஒரு நாளில் நடக்க வேண்டியதாகும். ஆனால் களைகள் பெரிய சூளையில் சுட்டெரிக்கப்படும், அப்பொழுது அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத். 13;42) என்பது உண்மையான நெருப்பை குறிக்கிறது என்றும், தற்போதைய வாழ்க்கை முடிந்த பின்னர் வருகின்ற உபத்திரவம் என்றும் அநேகர் எண்ணுவது தவறாகும். முழு உவமையும் தற்போதைய யுகத்திற்குரியது. இந்த நெருப்பு, கோதுமை, களைகள் என்பவைகள் அடையாள வார்த்தைகள் தான். மகா உபத்திரவத்தின் காலத்தில் இந்த யுகம் முடியும் போது களைகள் அழிக்கப்படுவதையும், கோதுமையைப் போன்றவர்கள் வாக்குத்தத்தத்தின்படி காக்கப்படுவதையும் (மல். 3:17; லூக். 21:36) பெரிய சூளை, நெருப்பு என்பது இந்த யுகத்தின் இறுதியில் அறுப்பின் போது, கிறிஸ்தவ தேசங்களாகிய தகுதியற்ற களைகள் போன்றவர்கள் மேல் வருவதையும் அடையாளப்படுத்துகிறது.

களைகள் சுட்டெரிக்கப்படுவது என்பது, தற்காலத்தில் அல்லது எதிர்காலத்தில் களை வகுப்பில் இருக்கிற தனிப்பட்டவர்கள் அனைவரும் சுட்டெரிக்கப்படுவார்கள் என்று பொருள்படுவதல்ல. ஆனால், இந்த கோதுமை வகுப்பினரைப் போன்று நடிப்பவர்களை அழிப்பதைக் குறிக்கும். அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளுகிறார்கள், ஆனால் உண்மையில் அவர்கள் இவ்வுலகத்தின் பிள்ளைகளாவார்கள். அவர்கள் களைகளாக சுட்டெரிக்கப்படும் போது அல்லது அழிக்கப்படும் போது அவர்கள் இந்த உலகத்துக்குரியவர்கள் என்று அவர்களுடைய உண்மையான குணாதிசயம் வெளிப்படும். இனி அவர்கள் கிறிஸ்துவின் சபையின் பேர் கிறிஸ்தவர்கள் போன்று காண்பித்துக் கொள்ளட்டார்கள்.

சத்தியம் என்கிற, இராஜ்யத்தின் நல்ல விதையை விதைத்ததாக ஆண்டவர் விளக்கிக் கூறுகிறார். இதில் இருந்து சத்திய ஆவியால் பிறந்த உண்மையான கோதுமை வகுப்பினர் எழும்புகிறார்கள். அதன்பின்னர் இரவாகிய இருண்ட யுகங்களின் போது சாத்தான் களைகளை விதைத்தான். களைகளும், கோதுமை விதைக்கப்பட்ட அதே மாதிரியாகத்தான் விதைக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. அவைகள் வஞ்சகத்தின் மூலமாக வந்தவைகளாகும். பெரிய சத்துருவினால், அவனுடைய குருடரான வேலையாட்களால்



பரிசுத்த ஸ்தலமும், சேனைகளும், எப்படி மிக மோசமாக அசுத்தப்படுத்தப்பட்டன என்பதையும், எப்படி விலைமதிப்பற்ற பாத்திரங்கள் (உபதேசங்கள்) போப்பின் ஆட்சியில் தூஷிக்கப்பட்டன, தவறாக உபயோகிக்கப்பட்டன என்பதையும் நாம் பார்த்துள்ளோம். பொய்யான உபதேசங்கள் ஆண்டவருடைய கோதுமை நிலத்தில் தவறான கொள்கைகளையும் நோக்கங்களையும் பிறப்பித்தன. அநேகர் சாத்தானுக்கு சேவை செய்வதற்கும் தவறான உபதேசத்தை விதைப்பதற்கும் கைக்கொள்வதற்கும் வழி நடத்தப்பட்டார்கள். இது களைகளை பெருமளவில் கொண்டு வந்தது.

அநேகருக்கு நிலமானது அழகானதாகவும், செழிப்பானதாகவும் உள்ளது. ஏனெனில் லட்சக்கணக்கானோர் அதில் உள்ளனர். ஆனால் கோதுமையின் விகிதாசாரம் குறைவு. அது களைகளினால் அமுக்கப்படாமல், அதிகமாக தடை பண்ணப்படாமல் இருந்திருந்தால் அதற்கு நலமாக இருந்திருக்கும். ஆனால் களைகள் சபையில் இல்லாமல், அர்ப்பணம் செய்து கொண்ட “சிறிய மந்தையை” விட்டு தன்னுடைய இடமாகிய உலகத்தில் இருந்திருந்தால் நலமாயிருந்திருக்கும். சிறு மந்தைதான் நிலத்தில் கிறிஸ்துவின் ஆவிக்கும், உபதேசத்திற்கும் பிரதிநிதியாக இருக்கிறது. அப்பொழுது சபைக்கும் உலகத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசம் தெளிவாகத் தெரியும். மேலும் அதன் வளர்ச்சி, சற்று வேகம் இல்லாதது போல் காணப்பட்டாலும், குறிப்பிடத்தகுந்ததாக இருந்திருக்கும். எண்ணிக்கையில் அதிகமாக இருப்பது மற்றும் செல்வச் செழிப்பு, சமுதாயத்தில் நல்ல அந்தஸ்து என்பதின் மூலம் வெளிப்படும் வெற்றியில் அநேகர் மகிழ்ச்சி அடைவது தீமையை விளைவிக்கிறது. இது எவ்விதத்திலும் சபைக்கோ அல்லது உலகத்திற்கோ ஆசீர்வாதமானதல்ல.

இந்த விஷயத்தை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, இந்த களைகளில் அநேகமானவைகள் போ-யான கோதுமை போன்ற பொய்யான இடத்தில் இருப்பதற்கு அவைகளை அதிகமாக குற்றப்படுத்த முடியாது. அவர்களில் அநேகருக்கு களைகள் உண்மையான சபையைக் குறிக்காது என்பது தெரியாது. ஏனெனில், அர்ப்பணம் செய்து கொண்ட சிறு மந்தையாகிய கோதுமை போன்றவர்களை மத வெறியர்கள் அல்லது பயங்கரவாதிகள் என்று

நினைக்கிறார்கள். அதிகமான, பெருந்திரளான களைகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது பெருந்திரளான களைகள் சரியான இடத்தில் இருந்தால் ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் எல்லா கோதுமையும், நிச்சயமாகவே மத வெறியர் மற்றும் பயங்கரவாதிகள் போன்று தோற்றம் அளிப்பர்.

அநேக வேளைகளில், களைகளும் கிறிஸ்தவர்கள் தான் என்று முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். யூதர்கள், நாத்திகர்கள் மற்றும் புறஜாதியார் தவிர மற்ற அனைவரும் கிறிஸ்தவர்கள் தான் என்று கூறப்பட்டு உள்ளனர். ஆனால் உண்மையான நிலை அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. பொய்யான உபதேசங்கள், அவர்களிடம் இரண்டு வகுப்பினர் மாத்திரம் தான் உண்டு என்றும் நித்திய ஆக்கினையில் இருந்து தப்பித்துக் கொள்ளுகிற அனைவரும் கிறிஸ்துவோடு உடன் சுதந்திரர் என்றும் கூறுகின்றது. அடக்க ஆராதனையின் போது இறந்தவர்களில் அதிகமாக இகழ்ச்சியுற்றோர், வெளிப்படையான துன்மார்க்கர், விபச்சாரக்காரர்கள் போன்றவர்களைத் தவிர மற்றவர்களுக்கு சமாதானமும், மகிழ்ச்சியும், பரலோக மகிமையும் உண்டு என்று கூறி அவர்களது நண்பர்களுக்கு உறுதி கூறுகிறார்கள். அதை நிரூபிக்கும்வண்ணமாக வேத பகுதிகள் வாசிக்கப்படுகின்றன. ஆனால் அந்த வேதப் பகுதிகள் முற்றிலுமாக அர்ப்பணம் செய்து கொண்ட பரிசுத்தவான்களுக்கு மாத்திரமே உரியதாக இருக்கிறது.

இயற்கையாகவே அவர்களை குறை கூறவும், மனப்பூர்வமாக அவர்கள் பரிசுத்தவான்கள் என்பதை மறுக்கவும், இப்படிப்பட்டவர்களுக்கு வேதாகமத்தில் உள்ள மேன்மையான வாக்குத்தத்தத்தங்கள் அவர்களுக்குரியது அல்ல என்று கூறவும் விருப்பமுற்று பிரசங்க மேடைகள், ஆலய ஆசனங்களில் உள்ள தங்களுடன் சேர்ந்த களைகள் இவைகளுக்கு உரிமை கோரலாம் என்று கூறுகிறார்கள். நித்திய ஆக்கினையைப் பெறும்படியாக அவர்கள் எதுவுமே செய்து விடவில்லை என்று அவர்கள் மனப்பூர்வமாக உணருகிறார்கள். மேலும் கிறிஸ்தவ உலகில் உள்ள தப்பறையான உபதேசங்களில் அவர்கள் வைத்து இருக்கிற நம்பிக்கை, அவர்களுக்கும் அவர்கள் சபையில் உள்ள எல்லா சன்மார்க்க ஜீவியம் நடத்தும் அனைவருக்கும் எல்லா மேன்மையான



வாக்குத்தத்தங்களும் சொந்தமானது என்று நம்ப வைக்கப்படுகிறார்கள். இப்படியாக பொய்யான உபதேசங்களால் அவர்கள் களைகளாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கென்று ஒரு பொய்யான ஸ்தானத்தை வைத்துக் கொள்ளுவதோடல்லாமல் பரிசுத்தவான்களின் உயர்வான நிலைமையை தவறாக எடுத்துக் காட்டுகிறார்கள். வஞ்சகத்தினால் ஏமாற்றப்பட்டு இருக்கிற நிலையில் ஒரு பொய்யான பாதுகாப்பையும், திருப்தியையும் உணருகிறார்கள். மேலும் தங்களுடைய வாழ்க்கையை பேர் சபைகளில் உள்ளவர்களோடும், அடக்க ஆராதனையின் போது தங்களுடைய நண்பர்களைக் குறித்து கேள்விப்பட்டு உள்ள நிலையில் இறந்தவர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, தாங்கள் சாதாரண நிலையில் உள்ளவர்களென்றும், பெரிய வாய் பேச்சாளர்களை விட சீராக உள்ளவர்களென்பதையும் உணருகிறார்கள். இருந்தாலும் தங்களுடைய இருதயத்தை, ஜீவியத்தை, நேரத்தை, பணத்தை, தாலந்துகளை மற்றும் தருணங்களை ஆண்டவருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் அர்ப்பணிக்கவில்லையே என்பதையும் அறிந்து வைத்திருந்தார்கள்.

அந்த அறுப்பின் முடிவில் யூதர்களிடையே இருந்த பதரைப் போன்றவர்கள் சுட்டெரிக்கப்பட்டது போன்று (லூக். 3:17) இந்த சுவிசேஷ யுக "பதர்" வகுப்பினரும் இந்த அறுவடையின் போது சுட்டெரிக்கப்படுவார்கள். அந்த அறுப்பு, மதம் மற்றும் அரசியல் சூழ்நிலையால் ஏற்பட்ட சச்சரவு என்கிற பெரிய நெருப்போடு முற்றுப் பெறும் காலத்திற்கு முன்னால், தேவனுடைய வெற்றியுள்ள இராஜ்யத்தில் திவ்ய அனுகூலங்களைப் பெறுவது போன்று பதரானது பாவனை செய்தது, அதோடு நின்று போனது போன்று, கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படுபவர்கள் இடையே உள்ள பதருக்கும் ஏற்படும். அவர்கள் சுட்டெரிக்கப்படுவார்கள்;அவர்கள் இனியும் பதராக இருக்க மாட்டார்கள்;அவர்கள் தங்களையோ அல்லது மற்றவர்களையோ ஏமாற்றுவதை நிறுத்தி விடுவார்கள்; மேலும் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களுக்கு உரிமை கோருவதை விட்டு விடுவார்கள். ஏனெனில் இவைகளெல்லாம் ஜெயம் கொள்ளும் பரிசுத்தவான்களுக்கு மட்டுமே உரியது. கிறிஸ்தவ ராஜ்யங்கள் என்று அழைக்கப்படுபவைகளும், பல்வேறு மத ஸ்தாபனங்களும் அதிகமான சத்தியம் வெளிப்படுவதால்

ஏற்படுகின்ற பிரிவினைகளால் தாக்குண்டு "தேவனின் வைராக்கியம் என்கிற நெருப்பு" ஏற்கெனவே கிளறிவிடப்பட்டிருப்பதால் அதில் சுட்டெரிக்கப்பட்டு விடும். (இந்த யுகம் முடியும் போது ஏற்படும் மகா உபத்திரவத்தின் காலம்-செப்.3:8) அப்பொழுது அவர்கள் தங்களுடைய உலக ஒழுங்கு முறைகளை கிறிஸ்தவம் என்று அழைப்பதை நிறுத்துவார்கள்.

களைகளை சுட்டெரிப்பதைக் குறித்து கூறிய பின்னர் உவமை மேற்கொண்டு இப்படியாகக் கூறுகிறது. "அப்பொழுது (கோதுமை) நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள்." (உண்மையான சபை இன்னமும் அதிகாரத்தில் வைக்கப்படவில்லை. அது அறுப்பு முடியும் வரை தேவனுடைய ராஜ்யமாக உயர்த்தப்பட மாட்டாது என்பதற்கு இதை விட வேறு எந்த சிறந்த உதாரணம் வேண்டும்.) மனுக்குலத்தை பாவத்தி-ருந்தும் வஞ்சகத்தி-ருந்தும் சுத்திகரித்து, இழந்ததை திரும்ப கொடுக்கவும், ஆசீர்வதிக்கவும், அப்பொழுது இந்த நீதியின் சூரியன் (இதில் கிறிஸ்து இயேசுதான் மகிமையின் மையமாக இருப்பார்) தன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தைக் கொண்டு வரும்; சுத்திகரிக்கப்பட முடியாதவைகள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படும்.

நிழலான யூத அறுப்பின்போது இஸ்ரயேலர்களும், போ-இஸ்ரயேலர்களும் சேர்ந்தே யூத அல்லது மாம்சீக இஸ்ரயேல் வீடாக அமைந்திருந்தது. மேலும் உண்மையான இஸ்ரயேலர்கள் மாத்திரம் தெரிந்துகொள்ளப்பட்டு, சுவிசேஷயுக களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டு, சுவிசேஷ யுகத்திற்குரிய சத்தியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். மேலும் அந்த இராஜ்யத்தில் இருந்த மற்றவர்கள் (பதர்கள்) சரீரப்பிரகாரமாக அழிக்கப்படவில்லை. (ஆனாலும் உபத்திரவத்தில் அநேகர் உயிரிழந்தார்கள்) ஆனால் இதற்கு முன்பு அவர்கள் பெருமையாக கூறிவந்த மற்றும் உரிமை கொண்டாடிய திவ்ய அனுகூலத்தி-ருந்து நீக்கப்பட்டார்கள் என்கிற கருத்து நினைவில் வைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதன்பிறகு தற்கால எரிக்கப்படும் வேளையின் போது களைகள், கையாளப்படுவதில் இதற்கு இணையாக ஒத்திருப்பதை கண்டுபிடியுங்கள்.

நாம் பிரிக்கப்படுவதிலும், தவறான மனித முறைகளின்



கட்டுகளில் இருந்து மற்றவர்களை கிறிஸ்துவின் சுயாதீனத்திற்குள் கொண்டு வரும்படியாக, சத்தியம் என்னும் அரிவாளை உபயோகித்து நாம் அறுக்கிறவர்களாக இருக்கும் பட்சத்தில், இந்த அறுப்பின் போது நாம் எதை எதிர்பார்க்க வேண்டும், நம்முடைய பங்கு எதுவாயிருக்கும் என்பதை நம்முடைய ஆண்டவர் காட்டியுள்ளார். ஆனால் நாம் சரியாக இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியாகவும் அறுப்பின் காலம் ஏற்கெனவே வந்து விட்டது என்பதைக் காட்டுவதற்காகவும் அறுப்பு துவங்கிய வருடம், அதன் கால அளவு, அது எப்பொழுது முடிவுபெறும் என்பதைக் காட்டும்படியாகவும் அவர் ஆதாரங்களைத் தந்துள்ளார். இவைகளை நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். அதாவது இந்த 40 வருட அறுப்பு (ஆசிரியர் முன்னுரை பக். ii பார்க்கவும்) 1874ல் ஆரம்பித்து 1914ல் முடிவடைகிறது. இந்த அறுப்பின் வேலை மற்றும் முறைகளைப் பற்றிய விவரங்கள் நிழலாக யூத யுகத்தில் காட்டப்பட்டன. அந்த நிழலான அறுப்பில் இருந்த சில காலத்தை குறிக்கும் அம்சங்களை நாம் இப்பொழுது ஆராய்ந்து பார்க்கலாம். அது மாத்திரமல்ல, அவைகள் கற்றுக் கொடுக்கிற பாடங்களையும், அவைகள் தற்காலத்திற்கு ஏற்றதாக உள்ளதையும் இதற்கென்றே நம்முடைய ஆண்டவர் விசேஷமாக வைத்திருப்பதையும் நாம் இப்பொழுது பார்க்கலாம். அதனிமித்தமாக நாம் சந்தேகத்துடனோ அல்லது நிச்சயமற்றவர்களாகவோ இல்லாது அவருடைய திட்டத்தை அறிகிறவர்களாகவும் அதன்படி பலத்துடன் நடக்கிறவர்களாகவும் அவரால் வெளியாக்கப்பட்ட அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் அவரோடு ஒத்துழைப்பவர்களாகவும் இருப்போம்.

யூத யுக அறுப்போடு சம்பந்தப்பட்ட காலத்தைக் குறித்த எல்லா அம்சங்களும் (சில வேளைகளில் அவைகள் மறைமுகமாக விசுவாசிகள் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும்)பெருந்திரளாக இருந்த சாதாரண மக்களை பாதிப்பதாக இருந்ததுடன், ஒரு ஒழுங்கு முறை அல்லது சபை-ராஜ்யம் என்பவைகளின் சோதனைக்காலம் நிராகரிப்பு, கவிழ்ப்பு, அழிவு போன்றவைகளின் குறிப்பிடப்படும் காலமாக இருந்தது. இப்படியாக ஆண்டவர் மணவாளனாக, அறுவடை செய்கிறவராக (கிபி 29) உண்மையான

இஸ்ரயேலர்களுக்கு மாத்திரமல்லாது, அனைத்து இஸ்ரயேலருக்காகவும் வந்தார். (யோவா. 1:11) அறுப்பின் வேலையின் போது களஞ்சியத்தில் சேர்க்கப்பட தகுதியான கோதுமை மணிகள் (சுவிசேஷயுகம்) கொஞ்சமாக இருந்தது. ஆனால் பெரியளவில் காணப்பட்டவைகள் உருவத்தில் தான் கோதுமையாக இருந்ததே ஒழிய உண்மையிலேயே அவை பதராகத்தான் இருந்தன. மூன்றரை வருடங்கள் கழித்து (கிபி 33) நம்முடைய ஆண்டவர் இராஜாவாக ஆவதற்கு (இதற்கு முன்பு அவர் அதை மறுத்திருந்தார். யோவா. 6:15) ஜனங்கள் அவரை ஒரு கழுதையின் மேல் ஏற்றிச் செல்ல அனுமதித்த போது, நிழ-ல் இருந்ததைக் காட்டிலும் அதிக முக்கியமாக இந்த நிஜமான சுவிசேஷ யுக அறுப்பில் ஒரு குறிப்பை விளக்கியது. அதாவது 1874ம் ஆண்டில் இரண்டாம் வருகையில், நம்முடைய ஆண்டவர் மணவாளனாக, அறுவடையாளராக வந்த காலத்தையும், ஏப்ரல் 1878ல் ஒவ்வொரு செய்கையிலும் இராஜாதி இராஜாவாக கர்த்தாதி கர்த்தாவாக வெளிப்பட்ட காலத்தையும் இணையாக குறிக்கிறது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். இம்முறை அவர் மனுஷீக கண்களுக்கு காணப்படாமல், ஒரு ஆவிக்குரிய இராஜாவாக எல்லா அதிகாரத்தோடும் உள்ளார்.

அவர் இஸ்ரயே-ன் நிழலான இராஜாவாக சில மணி நேரங்கள் மட்டுமே இருக்கும் போது, நம்முடைய ஆண்டவர் செய்தது நமக்கு மிக முக்கியமானது. ஏனெனில், கேள்விக்கே இடமின்றி நிழலாட்டமாய் இங்கே என்ன எதிர்பார்க்கப்பட வேண்டும் என்று காட்டுகிறது. அவர் ஒரு கழுதையின் மேல் ஏறி எருசலேமிற்குள் ஒரு இராஜாவாக வந்தது, காசுக்காரர்களை ஆலயத்தினின்று வெளியே துரத்தியது போன்றவைகளை மனிதர்கள் பார்த்ததை, நாம் ஒரு நிழல் என்று காண்கிறோம். அது இப்பொழுது பெரிய அளவில் செய்யப்படுகிறது. கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டு பண்ணி அடித்தது, இராஜாவுக்கே உரிய அதிகாரத்தை வெளிப்படுத்தியது. இப்பொழுது இன்னொரு வித்தியாசமான விதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, அதுவும் விசுவாசக் கண்ணுக்கு மட்டுமே. ஆனால் யூத யுக நிழல் இது நிறைவேறினதைக் காணும்படி நமது கவனத்தை ஈர்க்கிறது. இப்படி இல்லாவிட்டால் இதன் உண்மையை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாததாக



இருந்திருக்கும். நிழ-ல் இராஜா செய்த முதலாவது காரியம் அவருடைய இராஜ்யமாக இருப்பதற்கு தகுதி இல்லையென்று முழு இஸ்ரயேல் சபை-தேசத்தை நிராகரித்தது ஆகும். இனி அவர்கள் அவருடைய விசேஷித்த சுதந்திரமாக இருக்க முடியாது என்று நிராகரித்தது ஆகும். இதைக்குறித்து பின்வருமாறு சொல்லப்பட்டது. “எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்.” மத். 23:37-39

இதை தற்கால அறுப்போடு சேர்த்துப் பார்க்கும் போது, கிபி 33ல் நிழலான இஸ்ரயேல் 1845 வருடங்களாக அனுகூலங்கள் மற்றும் சிட்சிப்பு போன்றவைகளால் தேவனுடைய ஜனங்களாக அங்கீகரிக்கப்பட்டு, பின்பு ராஜாவினால் தள்ளப்பட்டு, நிராகரிக்கப்பட்டார்கள் என்பதைக் கற்றுத் தருகிறது. ஏனெனில் மூன்றரை வருடங்களாக சோதனைக்குட்படுத்தப்பட்டு, ஆராய்ந்து பார்க்கப்பட்டு, அதன் பின்னர் தகுதி அற்றவர்கள் என்று காணப்பட்டபடியால், இந்த அறுப்பின் போது மூன்றரை வருடங்கள் சோதிக்கப்பட்ட பின்னரும் இதே போன்று 1845 வருட அனுகூலங்கள் மற்றும் சிட்சிப்பு போன்றவைகளின் பின்னர் அந்த வருட இறுதியில் பேர் கிறிஸ்தவ தேசங்கள் தம்மிடத்தி-ருந்து எந்த அனுகூலத்தையும் பெறத்தகுதியற்றவர்கள் என்று நிராகரிக்கப்படுவார்கள் அல்லது எந்த வழியிலாவது அவரால் அங்கீகரிக்கப்படமாட்டார்கள்.

ஆனால் பெயரளவில் உள்ள மாம்சமான இஸ்ரயேல் நிராகரிக்கப்பட்டது என்று கூறும் போது, அது தனிப்பட்ட, கபடற்ற “உத்தம இஸ்ரயேலரைக்” குறிக்காது. ஆனால் இப்படிப்பட்டவர்களுக்கு இன்னும் அதிகமான அனுகூலங்கள் இருந்தன. (இவர்கள் குருடருக்கு வழிகாட்டும் குருடர்களிடம் இருந்து விடுவிக்கப்பட்டு, அப்போஸ்தலர் என்கிற ஆவிக்குரிய வாய்க்கால்கள் மூலமாக நேரடியாக கற்பிக்கப்பட்டவர்கள்) ஆகவே இங்கேயும் நாம் அதைத்தான் எதிர்பார்க்க வேண்டும். ஆவிக்குரிய

ஆசீர்வாதங்கள் இதற்கு முன்பாக பேர் கிறிஸ்தவ மக்கள் மேல் பொழியப்பட்டது. இதற்குப் பிறகு உண்மையுள்ளவர்களுக்கும், கீழ்ப்படிதல் உள்ளவர்களுக்கும் மாத்திரமே சொந்தமானது. இதற்குப் பின் வெளிச்சம் வரவும், விசுவாச வீட்டாருக்கு ஏற்ற கால ஆகாரம் எதிர்பார்க்கப்படவும் ஏற்ற காலமாக இருக்கிறது. ஆனால் முந்திய வழிகளின் மூலமாக அல்ல, ஆனால் வீழ்ச்சியுற்ற, நிராகரிக்கப்பட்ட ஒழுங்கு முறைகளை விட்டு வெளியேறிய, உண்மையுள்ள, தனிப்பட்ட நபர்களின் மூலமாக எதிர்பார்க்கப்பட வேண்டும்.

அவருடைய ஊழியத்தின் போது இராஜாவாக யூத முறைகளை அவர் தள்ளிவிடும் வரை, அவர் வேதபாரகர்களையும், பரிசேயர்களையும், அடிக்கடி அவர் ஜனங்களை ஏமாற்றுகிற மாய்மாலக்காரர்கள் என்று அதட்டினாலும், அவர்கள் தான் ஜனங்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டியவர்கள் என்று உணர்ந்திருந்தார். இது ஆண்டவருடைய வார்த்தைகளில் இருந்து விளங்குகிறது. *(மத்.23:2)* "வேதபாரகரும், பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள். " ஆகவே இதுமாதிரியே சிறிது காலத்திற்கு சபை தலைமை ஆட்சி பீடம், கூட்டங்கள், குழுக்கள் போன்றவைகளில் பேர் கிறிஸ்தவ சபையின் பெரிய மத ஆட்சியாளர்கள், மோசேயின் ஆசனத்தை ஒரு காலத்தில் (யூத ஜனகரிம்) ஆக்கிரமித்திருந்தது போல, இவர்கள் ஜனங்களுக்கு போதிக்கிறவர்கள் என கிறிஸ்துவின் ஆசனத்தில் வசதியாக உட்கார்ந்து இருந்தார்கள். ஆனால் கிபி 33க்கு பின்னர் வேதபாரகர்களும், பரிசேயர்களும் ஆண்டவரால் எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. உண்மையான இஸ்ரயேலர்கள் அதன்பிறகு இவர்களால் போதிக்கப்படாமல் தேவனால் மற்றும் தாழ்மையுடைய, பட்டங்களை தங்களுக்கென சூட்டிக் கொள்ளாத, தகுதியுள்ள பாத்திரங்கள் மூலமாக போதிக்கப்பட்டார்கள். இவர்கள் ஜனங்கள் மத்தியி-ருந்து தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு அவரால் போதிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். ஆகவே அதைப் போன்றே அதற்கு இணையான தற்கால அறுப்பிலும் எதிர்பார்க்க வேண்டும், கண்டு பிடிக்கவேண்டும்.



நம்முடைய ஆண்டவர் இராஜ அந்தஸ்தை கிபி 33ல் எடுத்துக்கொண்டதும், அவர் செய்த முதலாவது அதிகாரபூர்வமான வேலை, மாம்சீகமான இஸ்ரயே-ன் பொதுவான (National) சபையை நிராகரித்தது ஆகும். அதற்கு இணையாக தற்கால அறுப்பின் போது அதாவது 1878ல் இரகசியமான பாபிலோன், இன்னொரு விதத்தில் அழைக்கப்படும் கிறிஸ்தவம், யூத முறைமைக்கு நிஜமாயிருந்தது, தொடர்பு இல்லாமல் துண்டிக்கப்பட்டது. அப்பொழுது இந்த செய்தி கொடுக்கப்பட்டது : "மகா பாபிலோன் விழுந்தது ! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகல வித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்புமான சகல வித பறவைகளுடைய கூடுமாயிற்று." வெளி. 18:2

வீழ்ச்சி, வாதைகள் மற்றும் அழிவு போன்றவைகள், இரகசியமான பாபிலோன் மேல் வரும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு இருந்தது, மாம்சமான இஸ்ரயேல் மேல் வந்த மகா உபத்திரவத்திலும் தேசம் அழிக்கப்பட்டதிலும் அது நிழலாக இருந்தது. கிபி 70ல் அந்த தேசம் முற்றிலுமாக அழிக்கப்பட்டதோடு அது முடிவு பெற்றது. அந்த வீழ்ச்சியின் காலம் நம்முடைய ஆண்டவர் "இதோ உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கி விடப்படும்" என்று சொன்ன காலத்தோடு ஒத்து இருக்கிறது. கிபி 33ல் இருந்து கிபி 70 வரை 36 1/2 வருடங்கள்; கிபி 1878ல் இருந்து கிபி 1914 ன் முடிவு வரை உள்ள காலம் 36 1/2 வருடங்கள்; 1914ம் ஆண்டின் இறுதியில் தேவன் பாபிலோன் என்று அழைப்பதும் மனிதர்கள் கிறிஸ்தவ உலகம் என்று அழைப்பதுமான கிறிஸ்தவ மண்டலம் ஏற்கெனவே தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டுள்ளபடி அழிந்து போயிருக்கும். (உலக ராஜ்யம் படிப்படியாக அழிக்கப்பட்டு, தேவனுடைய ராஜ்யம் படிப்படியாக ஸ்தாபிக்கப்படும் என்று ஆசிரியர் தனது முன்னுரையில் கூறியிருக்கிறார். காலம் சமீபமாயிருக்கிறது. பக். iv)

யூதாயிசம் என்பது, எல்லா விஷயங்களையும் கட்டுப்படுத்தவும் முறைப்படுத்தவும் செய்யும் கிறிஸ்துவின் ஆயிர வருட ராஜ்யத்திற்கு தேவனால் நியமிக்கப்பட்ட திவ்ய அடையாளமாக உள்ளது. ஆகவே யூதாயிசம் என்பது சபையும், தேசமும் இணைந்த ஒன்றாகும். அதாவது மதமும், தேசத்தின் ஆட்சியும் ஒன்றாக இணைந்து இருப்பதாகும். ஆனால் நாம்

ஏற்கெனவே காட்டியுள்ளபடி சுவிசேஷ சபை, அவளுடைய ஆண்டவர், இராஜாதி இராஜா வந்து பொறுப்பெடுத்து, தம்முடைய மணவாட்டியாக நீதியின் ஆட்சியில் பங்கெடுக்கும்படி உயர்த்தப்படும் வரை, அது எந்த விதத்திலும் உலகத்தோடு சேர்ந்திருக்கவும், உலகத்தின் ஆட்சியில் பங்கு பெறவும் கூடாது. ஆண்டவருடைய வார்த்தையை உதாசீனப்படுத்துவது, கிறிஸ்தவம் என்று அழைக்கப்படும் ஒரு ஒழுங்கை பின்பற்றுவது, மனிதனின் ஞானம், கொள்கைகள், திட்டங்களை பின்பற்றுவது, கிறிஸ்துவினுடையது என்று சொல்-க் கொள்ளும் ஆட்சியை, கொள்கைகளை தழுவிக் கொள்வது (உண்மையான கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு இது ஒரு அலங்கோலமான போ-யாக இருக்கிறது) என்பவைகள், ஆண்டவர் பிரசன்ன காலத்திற்கு முன்னதாகவே உண்டாக்கப்பட்டவைகளாகும். இவைகள் முற்றிலும் தகுதியற்றவைகளாகும். பாபிலோனின் வீழ்ச்சி, சபையும் தேசமும் இணைந்ததினால் தகுதியற்ற நிலையில் விழுதல், தகுதியுள்ள கோதுமை சேகரிக்கப்படுதல் ஆகியவை யூத மதம் வீழ்ச்சியுற்றதின் மூலம் நன்றாக விளக்கப்படுகிறது.

பாபிலோன் என்கிற பெயருக்கு ஆதியில் "தேவனுடைய வாசல்" என்று அர்த்தம் இருந்தது. ஆனால் பின்னர் அது "குழப்பம்" என்ற அர்த்தத்திற்கு உரியதாகியது. வெளிப்படுத்தின விசேஷத்தில் இது குறிப்பாக பேர் சபையைக் குறிக்கும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. பேர் சபை மகிமைக்கு வாசலாக இருப்பதற்கு பதில் தவறுக்கும், குழப்பத்திற்கும் வாசலாயிற்று. இது முக்கியமாக களைகள், மாய்மாலக்காரர்கள் நிறைந்த அலங்கோலமான கலவையாக மாறிற்று. இது குழப்பம் நிறைந்த உலக ரீதியானதாயிற்று. இதில் ஆண்டவருடைய ஆபரணங்கள் புதையுண்டன. அவைகளின் உண்மையான அழகும், பிரகாசமும் மறைந்து கிடக்கின்றன. அடையாளமாக கூறப்படும் தீர்க்கதரிசனத்தில் பாபிலோன் என்கிற பதம் சில வேளைகளில் ரோம சபையை குறிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அது "மகா பாபிலோன், வேசிகளுக்கு தாய்" என்று அழைக்கப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக அதைக் குறிக்கும்படியாகத்தான் இந்த சொல் பயன்படுத்தப்பட்டது. எப்படியெனில், அவள்தான் கலப்படம் உடைய ஒழுங்கு முறையாக இருந்தாள்; மற்றவர்களை அவளால் சகித்துக் கொள்ளமுடியவில்லை. ஆனால் மற்ற சபைகளால் உண்டான ஒழுங்குமுறைகள், தாயைப் போன்று அவ்வளவு பெரிதானது அல்ல, அந்த அளவு கெட்டதல்ல, அவ்வளவு மோசமானதல்ல. அவைகள் அதி-ருந்து பல சீர்திருத்தங்கள் மூலம் பிரிந்தன. ஆனால் அவைகள் பரிபூரண சீர்திருத்தங்களாக இல்லை. இதிலும் தவறுகள், களைகள், உலகத்தனம் ஆகியவை அதிகமாக காணப்படுகின்றன. பாபிலோன் என்கிற பெயர் பொதுவானதாக அல்லது குடும்பப் பேராக எல்லா பேர் கிறிஸ்தவ சபைகளை குறிக்கும்படியாக உபயோகப் படுத்தப்படுகிறது. இப்பொழுது இதில் ரோம சபை மாத்திரமல்ல, எல்லா புரட்டஸ்டன்ட் சபைகளும் அடங்கும். ஏனெனில், போப் சபை தாய் சபையாக கூறப்பட்டு உள்ளபடியால், இதி-ருந்து வந்த பல்வேறு புரட்டஸ்டன்ட் சபைகள் குமாரத்திகள் என்று அழைக்கப்பட வேண்டும். இந்த கருத்தை பொதுவாக புரட்டஸ்டன்ட் சபையினர் ஒத்துக்கொள்கிறார்கள், அதுவும் சில வேளைகளில் பெருமையோடு.



அறுப்புக் காலத்திற்கு முன்னர் மகா பெரிய பாபிலோனில் இருந்த தேவனுடைய ஜனங்கள் (முக்கியமாக Waldenses, The Huguenots மற்றும் 16வது நூற்றாண்டில் இருந்த சீர்திருத்தவாதிகள்) கண்டு கொண்டது என்னவெனில், அவளுடைய உண்மையான, முக்கியமான குணாதிசயம் என்னவெனில் மொத்தத்தில் அந்தி கிறிஸ்துவாக இருப்பதுதான். இதைக் கவனத்தில் வைத்து தான், தாய் சபையி-ருந்து அவர்கள் பிரிந்து வந்ததோடு, அநேகரையும் அவர்கள் வெளியே கொண்டு வந்தார்கள். அவர்களில் அநேகர் களைகள், இதைக் குறித்து தீர்க்கதரிசி ஏற்கெனவே இப்படியாகக் கூறியுள்ளார். "அநேகர் இச்சக வார்த்தைகளோடே அவர்களை ஒட்டிக் கொள்ளுவார்கள்." (தானி.11:34) இங்கே இவைகள் அறுப்புக்கு முன் ஏற்பட்ட ஆட்சி, உபதேசம் என்ற புய-னால் ஏற்பட்ட பிரிவினைகளாகும். இவர்களில் களைகள் இன்னும் செல்வாக்கடைந்து மற்ற களைகளை உருவாக்கினார்கள். ஆனால் இவர்கள் அதிகமாக குற்றம் கண்டுபிடிக்கப்படாதவர்களாக இருந்தாலும், இன்னும் பாபிலோனின் ஒழுங்கு முறைகளை உடையவர்களாக இருந்தார்கள்.

இப்படியாக கோதுமை காலம் காலமாக, களைகளின் (விசேஷமாக களைகள் உண்டாவதற்கு காரணமாக இருந்த பெரிய தவறுகள்) பிடியி-ருந்து தன்னை விடுவிக்க முயன்றாலும் இந்த முயற்சிகளால் ஆசீர்வதிக்கப்பட்டாலும், இன்னும் களைகளின் ஆதிக்கத்தில் தான் இருந்தன. களைகளின் குணாதிசயம் மிகுதியாக காணப்பட்ட நிலையில்தான் இருந்தன. ஆனால் கோதுமையினிமித்தம், இந்த கலப்படமான பாபிலோனின் ஒழுங்கு முறைகளுக்கும் தேவனுடைய அனுக்கிரகம் நீடிக்கப்பெற்றது. அறுப்பின் போது 1878ம் ஆண்டு வரைக்கும் முழுமையான இறுதி பிரிவை ஏற்படுத்தும் வரை அது நீடிக்கப் பெற்றது. 1878ம் ஆண்டில் அந்த ஒழுங்கு முறைகள், எல்லா தேவனுடைய அனுக்கிரகத்தில் இருந்தும் முற்றிலுமாக நித்தியமாக விடுவிக்கப்பட்டன. அப்பொழுது உடனடியான அழிவுக்கென தண்டனையைப் பெற்றது, ஆண்டவரின் எல்லா ஜனங்களும் திட்டவட்டமாக, முடிவாக வெளியே கொண்டு வரப்பட்டனர். இந்த யுகத்தின் ஆரம்பத்தில் தேவனுடைய ஜனங்கள் அந்திக்கிறிஸ்துவின் தந்திரங்களைக் குறித்து எச்சரிக்கப்பட்டார்கள். கிறிஸ்வத்திற்கு எதிர்மாறான கருத்துக்களை, உபதேசங்களை, செயல்களை உணரும் ஒவ்வொரு வேளையிலும், அவைகள் சீர்த்திருத்தத்திற்கு வழிகாட்டியது. அது மாத்திரமல்ல கோதுமை போன்ற வகுப்பினரை சோதித்தறிந்து, நிரூபித்துக் காட்டவும், அந்திக்கிறிஸ்துவின் அசுத்தங்களில் இருந்து அதிகதிகமாக சுத்திகரிக்கப்படவும் உதவியது. அந்திக்கிறிஸ்துவின் தந்திரங்களில் இருந்து விடுவிக்கப்பட்டாலும், அதி-ருந்து தனியாக பிரிந்து செல்லும்படியாக கற்பிக்கப்பட்டாலும், அவர்களை சோதித்தறிவதற்காக ஓர் அளவுக்கு அவர்கள் அதனிடம் ஏமாறும்படியாகவும், ஓர் அளவுக்கு அதில் கலக்கும்படியாகவும் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் இந்த கடைசி சோதனை மற்றும் திட்டவட்டமான அழைப்பின் போது அந்த ஒழுங்கு முறைகள் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டதுடன், இப்பொழுது தேவ அனுக்கிரகத்தையும் இழந்தது. (அவர்களுக்குள் இருந்த கோதுமையினிமித்தம் அவர்கள் இதற்கு முன்பு அனுக்கிரகம் பெற்றார்கள்) இது கோதுமை வகுப்பினர், அந்திக்கிறிஸ்துவின் எல்லா ஒழுங்கு முறைகள் மற்றும் கொள்கைகளில் இருந்து இறுதி



பிரிவை உண்டுபண்ணும்படியாக ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒழுங்கு முறைகளிடம் முன்பு இருந்த சத்தியங்கள் எல்லாம் அவர்களிடம் இருந்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக மனிதனின் கருத்துக்கள் புகுத்தப்பட்டன. தேவ பக்தியும், இரக்கமும் இருந்த இடத்தில் உலக ஆவியும் அதன் சந்தோஷமும், ஆக்கிரமித்துக் கொண்டன.

பாபிலோன் வீழ்ந்தது என்கிற அறிவிப்பைத் தொடர்ந்து இன்னும் அவளுக்குள் இருக்கும் தேவனுடைய ஜனங்களுக்கு வருகிற கட்டளை, வெளியே வா என்பதாகும். "பின்பு வேறொரு சத்தம் வானத்தி-ருந்து உண்டாகக் கேட்டேன், அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்." (வெளி. 18:4) "பாபிலோன் வீழ்ந்தது, என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்கிற அறிவிப்பு இரண்டு காரியங்களைக் குறிக்கிறது. அவைகள் தெளிவாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளப்படவேண்டும். பாபிலோன் ஒரு காலக்கட்டத்தில் திவ்ய அனுக்கிரகத்தில் இருந்தது என்பதை அது சுட்டிகாட்டுகிறது. அவளிடம் கலப்பான குணாதிசயம் இருந்தும் கூட அவள் ஓர் அளவுக்கு அனுக்கிரகம் உடையவளாக இருந்தாள். அவளிடம் இருந்த தவறு எவ்வளவு பெரிதாக இருந்தாலும், எவ்வளவுதான் சிறிய அளவிலான கிறிஸ்துவின் ஆவியை அவள் வெளிப்படுத்தினாலும், பிரித்தெடுக்கப்படுதல் என்கிற அறுப்பின் காலம் வரும் வரை அவள் தேவனுடைய அனுக்கிரகத்தி-ருந்து தள்ளப்படவில்லை. ஒரு கால கட்டத்தில் பாபிலோன் மீது திடீர் என்று புறக்கணிப்பு வரும் என்பதையும், அப்பொழுது எல்லாவித அனுக்கிரகங்களும் நித்திய நித்தியமாக அற்றுப் போகும் என்பதையும் அது சுட்டிகாட்டுகிறது. 1878ம் ஆண்டு இப்படியான ஒரு புறக்கணிப்பு வரும் என்று நாம் ஏற்கெனவே காட்டியது போன்று அந்த வேளையில் நியாயத்தீர்ப்பு துவங்கும். அது மாத்திரமல்ல, பாபிலோன் புறக்கணிக்கப்படும் வேளையில், தேவனுடைய ஜனங்களில் அநேகரும் அதற்குள் இருப்பார்கள். அதோடு தொடர்பு உள்ளவர்களாக இருந்திருப்பார்கள். இப்படிப்பட்ட

புறக்கணிப்புக்குப் பின்னர் அல்லது தேவ அனுக்கிரகத்தி-ருந்து தள்ளுண்ட பின்னர்தான், “என்ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்” என்று அழைக்கப்படுகிறார்கள்.

கடந்த நானூறு வருடங்களில் படிப்படியாக ஏற்பட்ட சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் இறுதியாக, முடிவாக பிரித்தெடுக்கப்படுதல் என்பவைகளுக்கு இடையே உள்ள வித்தியாசம் கவனமாக புரிந்துகொள்ளப்பட வேண்டும். அந்த முயற்சிகளெல்லாம் பாபிலோனை சீர்திருத்தும்படி அனுமதிக்கப்பட்டவை. ஆனால் பாபிலோன் சீர்திருத்த முடியாத அளவிற்கு உள்ளது என்பதை உணர்த்துகிறது. “பாபிலோன் கர்த்தருடைய கையில் உள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதன் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்தி மயங்கிப்போனார்கள். (அந்த வெறி அவளுடைய தவறுகளால் ஏற்பட்டது) பாபிலோன் சடுதியில் விழுந்து தகர்ந்தது; அதற்காக அலறுங்கள்; அதின் நோவை ஆற்ற பிசின் தைலம் போடுங்கள்: ஒரு வேளை குணமாகும். பாபிலோனைக் குணமாக்கும்படி பார்த்தோம், அது குணமாகவில்லை; அதை விட்டு விடுங்கள்; நாம் அவரவர் தேசங்களுக்கு (உண்மையான சபைக்கு, இல்லையெனில் உலகத்திற்கு அவரவருடைய நிலைமைக்கேற்ப இதன்படி ஒவ்வொருவரும் கோதுமையா அல்லது களையாக என்று கண்டறியப்படுகிறார்கள்.) போகக்கடவோம்; அதின் ஆக்கினை வானமட்டும் ஏறி ஆகாய மண்டலங்கள் பரியந்தம் எட்டினது.” எரேமியா 51:7-9; ஒப்பிட்டு பார்க்கவும். வெளி. 17:4; 14:8; 18:2-5, 19

குணப்படாத பாபிலோன், அழிவு என்னும் தண்டனையைப் பெறுகிறது. முழு ஒழுங்கு முறைகளும் நிராகரிக்கப்பட மாட்டாது. அவளுடைய பொய்யான வழி மற்றும் உபதேசங்களை ஒத்துக் கொள்ளாதவர்கள், இப்பொழுது அவளிடம் இருந்து வெளியே வரும்படி அழைக்கப்படுகிறார்கள். இந்த புறக்கணிப்பு என்கிற தண்டனை கொடுக்கப்படுவதின் காரணத்தை சிலர் புரிந்து கொள்ளாமல் இருப்பதைக் குறித்து தீர்க்கதரிசி இப்படியாக கூறுகிறார் :

“ஆகாயத்திலுள்ள நாரை முதலாய் தன்வேளையை அறியும்;



காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள். (கோதுமையில் இருந்து களைகளையும், பதரையும் பிரிப்பதற்கான முழு அறுப்பின் காலம் வரவேண்டும் என்பதை அவர்கள் அறியாமல் உள்ளார்கள். இந்த விஷயத்தில் இடம் பெயரும் பறவைகள் அறிந்து வைத்திருப்பது போன்று கூட அவர்களுக்கு தெரியாமல் உள்ளது) நாங்கள் ஞானிகளென்றும், கர்த்தருடைய வேதம் எங்களிடத்தில் இருக்கிறதென்றும் நீங்கள் சொல்லுகிறதெப்படி? (அதுவும் அறுப்பின் காலத்தையும் அப்பொழுது வரயிருக்கிற காலங்களின் மாற்றத்தையும் நீங்கள் அறியாமல் இருக்கும் போது) மெய்யாகவே, இதோ, வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குகிறது. (ஏனெனில் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் மூலமாக வந்த வார்த்தை வெறுமையானதாக ஆக்கப்பட்டு உள்ளதுடன் கவனிப்பாறின்றி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. கடந்த இருண்ட காலங்களின் போது உருவாக்கப்பட்ட கோட்பாடுகள், இருளில் நடப்பவர்களுக்கு வெளிச்சமற்ற விளக்குகள் போன்று உள்ளது) ஞானிகள் (கற்றவர்கள்) வெட்கி, கலங்கி (அவர்கள் விருப்பத்துடன் உண்டாக்கிய மனுஷீக திட்டங்கள் வீழ்ச்சியடைவதால்) பிடிபடுவார்கள்; இதோ, கர்த்தருடைய சொல்லை வெறுத்துப் போட்டார்கள்; அவர்களுக்கு ஞானமேது? (இப்பொழுது) (ஏசாயா 29:10ஐப் பார்க்கவும்) ஆகையால் அவர்களுடைய ஸ்திரீகளை (சபைகளை) அந்நியருக்கும் அவர்களுடைய வயல்களை அவைகளை கட்டிக் கொள்பவர்களுக்கும் கொடுப்பேன்; அவர்களிலே சிறியோர் தொடங்கி பெரியோர் மட்டும் ஒவ்வொருவரும் பொருளாசைக்காரராயிருக்கிறார்கள்;தீர்க்கதரிசிகள் (பேச்சாளர்கள்) தொடங்கி ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யராயிருந்து, (ஏசா. 56: 10-12; 28: 14-20 ஒத்துப்பார்க்கவும்) சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்-, (அவளுடைய முழுதிட்டமும் மரித்துக் கிடக்கிறது. சத்தியத்தினால் - தேவனுடைய வார்த்தையால் சுத்திகரிக்கப்பட வேண்டியது அவசியமாக காணப்படுகிறது) என் ஜனமாகிய குமாரத்தியின் (பெயரளவான சீயோன் - பாபிலோன்) காயங்களை மேற்பூச்சாய் குணமாக்குகிறார்கள். தாங்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களா? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும்

அறியார்கள்; ஆகையால் (போதகர்கள்) விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்கும் காலத்திலே (அல்லது சோதிக்கும் போது- அறுப்பின் போது) இடறுண்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களை முற்றிலும் அழித்துப் போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; திராட்சச் செடியிலே குலைகள் இராது, அத்திமரத்திலே பழங்கள் இராது, இலையும் உதிரும், நான் அவர்களுக்குக் கொடுத்தது (எல்லா திவ்ய அனுகூலங்களும், சிலாக்கியங்களும்) அவர்களை விட்டு தாண்டிப் போகும்." (எரேமியா 8:7-13)

தள்ளுண்டவர்கள் அநேகர் துன்பங்கள் வருவதைக் காண்பார்கள். இருந்தாலும் உண்மையான காரியத்தை அறியாது இருப்பார்கள் என்று தொடர்ந்து வரும் வசனங்கள் காட்டுகிறது. அவர்கள் கூறுவார்கள்: நாம் கூடி வருவோம், நாம் அரணான பட்டணங்களுக்குள் (ஆட்சிக்குள்) பிரவேசித்து அமைதியாக இருப்போம். அவர்கள் தங்களுடைய பொய்யான உபதேசங்களை விவேகமோ அல்லது வேதமோ ஆதரிப்பதில்லை என்பதை எப்படியோ அறிகிறார்கள். ஆகவே, இப்பொழுது செய்யப்படவேண்டிய ஞானமான காரியம் அமைதியாக இருப்பதுதான், அதுவும் முட்டாள்தனமான கொள்கைகளின் மறைவிலும் கிறிஸ்தவ ஆட்சியாளர்கள் என்று அழைத்துக் கொள்பவர்களின் பாதுகாப்பின் கீழும் இருப்பது ஆகும். அவர்கள் உண்மையாகவே பின்வருமாறு கூறுகிறார்கள். "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைச் சங்காரம் பண்ணி நமக்குப் பிச்சுக் கலந்த தண்ணீரை குடிக்கக் கொடுக்கிறார்." அவர்களுக்கு புத்துயிர் ஊட்டக் கூடிய ஒன்றே ஒன்று அவர்கள் கலந்த கோப்பை மட்டுமே. (கசப்பான உபதேசம் என்கிற விஷம், "பிசாசின் உபதேசங்கள்" தேவனுடைய வார்த்தைகளான சத்தியம் என்னும் தூய்மையான தண்ணீருடன் கலந்தது) இப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்கள் பாபிலோனை நேசிக்கிறவர்கள், "அவளை விட்டு வெளியே வா" என்கிற கட்டளைக்கு கீழ்ப்படிய, ஆயத்தம் இல்லாமல் இருப்பவர்கள், தங்களுடைய சொந்த கலவையையே குடிக்கும்படி நிர்பந்தம் பண்ணப்படமாட்டார்களா? அவர்களுடைய உபதேசங்கள் பொய்யானவை என்று ஒப்புக் கொள்ளவும் நிர்பந்திக்கப்பட



மாட்டார்களா? நிச்சயம் அவர்கள் செய்வார்கள். அதனால் அவர்கள் வாந்தி எடுக்கும்படி அவஸ்தைப்படுவார்கள். அடுத்த வசனம் அவர்களுடைய எதிர்பார்ப்புகளைப் பற்றி கூறுகிறது. அவர்களுடைய எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தில் முடிந்தன. அவர்களுடைய கசப்பான (விஷம் -தண்ணீர்) உபதேசங்கள் உலகத்தை மாற்றி விடும்,ஆயிர வருடத்தை கொண்டு வந்து விடும் என்று எதிர்பார்த்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: "சமாதானத்துக்குக் காத்திருந்தோம், பிரயோஜனமில்லை; ஆரோக்கிய காலத்துக்கு காத்திருந்தோம், இதோ, ஆபத்து." பெயரளவான சீயோன் விசாரிக்கப்பட்டு தள்ளிவிடப்பட்ட நாளில் இருந்து அதன் வியாதி துரிதமாக மிக மோசமான நிலைக்கு வரும். அப்பொழுது ஆவிக்குரிய "உத்தம இஸ்ரயேலர்கள்" திவ்ய அழைப்பிற்கு கீழ்ப்படிந்து பேர் சபைகளில் இருந்து வெளியே வருவார்கள்.

கடந்த காலத்தில் இருந்ததைக் காட்டிலும் இன்னும் பெரிய சீர்திருத்தத்தை ஏன் கொண்டுவரக்கூடாது என்று சிலர் எண்ணுகிறார்கள். அந்த சீர்திருத்தங்கள் பயனற்றதாகவும் சிறிது காலத்திற்கு மட்டுமே உள்ளதாகவும் இருந்தது. ஏன் அவர் தம்முடைய ஆசீர்வாதத்தை எல்லா பெரிய சபைப் பிரிவுகள் மேல் பொழிந்து அவைகள் எல்லாவற்றையும் ஒன்றாக இணைக்கக்கூடாது?அல்லது ஏதாவது ஒரு சபை மேல் ஆசீர்வாதத்தை பொழிந்து அதில் இருந்த அசுத்தத்தை நீக்கி தூய்மையாக்கி, மற்றவர்கள் எல்லாரையும் அதற்குள் இழுத்துக் கொள்ள முடியாதா என்று கேட்கின்றனர். ஆனால் நாம் கேட்கிறோம், ஏன் பூமியில் உள்ள எல்லா இராஜ்யங்களையும் இணைத்து அதை சுத்திகரிக்க இயலாது?

அவருடைய திட்டம் என்று அவர் வெளிப்படுத்துவது இது அல்ல என்று தேவனுடைய பிள்ளைகள் அறிந்து கொள்வதற்கு அது போதுமானதாகும். தேவனுடைய வார்த்தையின்படி நாம் பார்ப்போமென்றால் இப்படிப்பட்ட யோசனை நியாயமற்றது என்று காட்டுவதையும் காணலாம். சபை என்று கூறிக்கொள்ளுபவைகளின் (40 கோடி) எண்ணிக்கையை கவனத்தில் கொண்டு உங்களையே கேட்டுப்பாருங்கள். இவைகளில் எத்தனை மனமும், சரீரமும் ஆண்டவருக்கென்றும் அவருடைய திட்டத்தின்படி ஊழியம்

செய்யவும், அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது என்று கூறமுடியும்? களைகளில் இருந்து கோதுமையை பிரித்தெடுப்பதற்கு, களைகளை அகற்றுவது என்பது கிட்டத்தட்ட எல்லா வேளைகளிலும் பெரிய தேவாலயங்களில் ஒரு சிறிதளவை விட்டுத்தான் ஆகவேண்டும் என்கிற தீர்மானத்திற்கு நீங்கள் வருவீர்கள்.

பேர் சபைகளை சுத்திகரிக்க முயற்சிக்காததின் காரணம், எவ்வளவுதான் சுத்திகரிப்பு செய்தாலும் அர்ப்பணம் செய்து கொள்ளாத கிறிஸ்தவ தேசங்களையும் அதன் ஸ்தாபனங்களையும், ஆட்சி செய்பவர்கள், குருவானவர்கள் அனைவரையும் இப்பொழுது பூமியில் ஆரம்பிக்கப்பட உள்ள ஆண்டவருடைய வேலைக்கு தகுதி உள்ளதாக ஆக்காது என்பது தான். கடந்த 18 நூற்றாண்டுகளாக அவர் உண்மையாகவே அர்ப்பணம் செய்து கொண்டவர்களை, தகுதியானவர்களை தெரிந்து கொண்டு வருகிறார். இப்பொழுது செய்ய வேண்டியதெல்லாம் இதே வகுப்பினரில் ஜீவித்துக் கொண்டு இருப்பவர்களில் இருந்து தெரிந்து கொள்ள வேண்டியதுதான். அவர்கள் சொற்பமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். ஏனெனில் கிறிஸ்துவின் சரீரமான சபைக்கு என்று தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையை நிறைவு செய்ய வெகு சிலரே குறைவாக காணப்படுகிறார்கள்.

எல்லா மனுஷீக ஸ்தாபனங்களையும் ஒதுக்குவதற்கும், சிறிய அளவில் குறைவுபட்டிருப்பவர்களை சீர்திருத்தாமல், மற்ற அனைவரையும், அதற்குள்ளாக அழைப்பதற்கும் உரிய காரணத்தை நம்முடைய ஆண்டவர் பல்வேறு யூத பிரிவுகளை அவர்களுடைய யுகம் முடியும் போது நடத்தும் விதத்தின் மூலம் காண்பிக்கிறார். இப்பொழுது இருப்பது போன்று அப்பொழுது எல்லோரும் நிராகரிக்கப்பட்டார்கள். “உத்தம இஸ்ரயேலர்கள்” அனைவரும் சுதந்திரத்திற்குள்ளாக அழைக்கப்பட்டார்கள். மேலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பல்வேறு பாத்திரங்கள் மூலம் தேவனுடைய சித்தத்தையும் திட்டத்தையும் குறித்து கற்பிக்கப்பட்டார்கள்.

இந்த விஷயத்தை யூதர்களுக்கு விளக்கும் போது, ஆண்டவர் இரண்டு உவமைகள் மூலம் தாம் செய்வதில் உள்ள ஞானத்தை விளக்கினார். முதலாவதாக ஒருவனும் கோடித் துண்டை பழைய



வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான். அப்படி செய்தால் வஸ்திரம் பழமையானது அதிகமாக தெரியும்,மேலும் வஸ்திரத்தை அது அதிகமாக கிழிக்கும், பீறலும் அதிகமாகும். இரண்டாவதாக புது திராட்ச ரசத்தை பழந்துருத்திகளில் வார்த்து வைத்தால் துருத்திகள் கிழிந்து போகும், புது இரசமும் சிந்திப் போகும், துருத்திகளும் கெட்டுப்போகும்.

நம்முடைய ஆண்டவரின் புதிய உபதேசங்கள் என்பது புதிய திராட்ச இரசமாகும். அதே வேளையில் யூத பிரிவினர்கள் பழைய துருத்திகள் ஆவார்கள். ஒருவேளை நம்முடைய ஆண்டவர் அந்த பிரிவுகளில் ஒன்றை இணைத்து அதில் ஒரு சீர்திருத்தம் ஆரம்பித்து இருந்தால், அதன் பலன் எதுவாக இருந்திருக்கும்? நிச்சயமாகவே புதிய சத்தியங்கள் பெறப்பட்டிருந்தால் அந்தப் பிரிவை முழுவதுமாக உடைத்திருக்கும். அந்த ஸ்தாபனத்தில் உள்ள பலம் பிரிவுகளுக்குண்டான பெருமையில் கட்டப்பட்டது. அது தவறுகள், மூட நம்பிக்கைகள் மற்றும் மனுஷீக பாரம்பரியங்களால் உறுதிப்படுத்தப்பட்டது. அந்த ஸ்தாபனம் உடனடியாக அழிந்து போய் இருக்கும். புதிய உபதேசங்கள் கவனிப்பாறின்றி இருந்திருக்கும். அந்த பிரிவினரின் பழைய தவறுகளினால் பாரம்பரியங்களால் இடறல் அடைந்திருக்கும். அதன் முன்பு இருந்த விஷயங்களினிமித்தம், பொதுவாக உலகத்தாரால் குற்றம் சாட்டப்பட்டிருக்கும்.

இதே காரணங்களுக்காகத்தான் இங்கே ஆண்டவர் தற்கால அறுவடையின் போது, ஆயிரம் வருட அரசாட்சி உதயமாகக் கூடிய வேளையில் சத்தியம் என்னும் வெளிச்சத்தை அறிமுகப்படுத்தும் போது, எந்த பழைய ஒழுங்கு முறைகளோடு சேர்ந்து இருக்கும்படியோ அல்லது பழைய துருத்திகளில் புதிய திராட்ச ரசத்தை வைப்பது போன்றோ செய்யவில்லை. முதலாவதாக அவைகளில் எதுவுமே சரி செய்யப்படக் கூடிய நிலையிலோ அல்லது புதிய உபதேசங்களைப் பெறக் கூடிய நிலையிலோ இல்லை. இரண்டாவதாக புதிய சத்தியங்கள் பெறப்பட்டால் அவைகள் சீக்கிரமாக வேலை செய்யத் தொடங்கும். அதனால் ஒரு வல்லமை ஏற்படும். அதனால் ஒரு சபைப் பிரிவு எவ்வளவுதான் நன்றாக அமைக்கப்பட்டிருந்தாலும், அதனை சிதறடிக்கும். ஒவ்வொன்றாக

முயற்சி செய்தாலும், பிரதி பலன் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். கடைசியில் புதிய திராட்ச ரசத்தை (உபதேசங்கள்) அவைகள் பாதுகாக்கவோ, தக்க வைத்துக் கொள்ளவோ முடியாது.

இதில் சிறந்த வழி எதுவெனில், நம்முடைய ஆண்டவர் அவர் முதலாவது வருகையின் போது பின்பற்றியவைகள் தான். அவர் முற்றிலும் புதிய வஸ்திரத்தை புதிய பொருட்களில் இருந்து உண்டாக்கினார். அவர் புதிய திராட்ச இரசத்தை புதிய துருத்திகளில் வைத்தார். அதாவது அவர் உத்தம இஸ்ரயேலர்களை (சபை பாகுபாடு இன்றி) அழைத்து, அப்பொழுது இருந்த சத்தியங்களை அவர்களுக்கு கொடுத்தார். இப்பொழுதும் அதே போன்று பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிடையே வசனத்தின் மேல் தாகமாக இருக்கிறவர்களை அழைக்கிறார். ஆகவே எத்தனை பழைய துருத்திகள், பிரயோஜனம் அற்றது என்று நிராகரிக்கப்பட்டாலும், ஆண்டவர் எதிர்பார்க்கிறபடி அவருடைய வழியில் சத்தியத்தை ஏற்றுக் கொள்வதும், அவருடைய திட்டத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளவதும் ஒத்துழைப்பதும் அவர்களுடைய பொறுப்பாகும். ஆகவே, தற்கால சத்தியம் என்கிற புதிய திராட்ச இரசத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியானவர்கள் என்று நீங்கள் எண்ணப்பட்டபடியால் களி கூறுங்கள். மேலும் அது உங்களுக்கு சாட்சியாக அறிவிக்கப்பட்டது, நிரூபித்துக் காட்டப்பட்டது, ஆகவே அதைப் பற்றிக்கொண்டு அதன்படி சந்தோஷத்துடன் நடவுங்கள்.

ஆண்டவரின் முதலாவது வருகையின்போது, முக்கியமான சபை பிரிவினரின் கருத்தை கேட்டறிந்து, அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்று நினைத்தவர்களும், "வேதபாரகர்களில், பரிசேயரில் எவராவது அவனை விசுவாசித்ததுண்டா" என்று கேட்டவர்களும் சத்தியத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் அவர்கள் தேவனை பின்பற்றுவதைக் காட்டிலும், மனுஷனைப் பின்பற்றினவர்களாயிருந்தார்கள். அப்பொழுது இருந்த முக்கியமான சபை பிரிவினர்கள் கிறிஸ்துவினுடைய உபதேசத்தைப் பின்பற்றவில்லை. அதைப் போன்றவர்கள்தான் இன்றும் இருக்கிறார்கள், குருடருக்கு வழிகாட்டுகிற குருட்டுத் தலைவர்கள். சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதன்மூலம் ஆசீர்வாதத்தை பெறுவதை



விட்டு, சோதனைக் காலத்தில் விழுந்து விடுகிறார்கள். பழைய வஸ்திரமும், பழைய துருத்தியும், அதிகமாக மோசமடைந்து மேற்கொண்டு உபயோகப்படுத்துவதற்கு தகுதி அற்றதாக இருக்கிறது.

ஆண்டவர் தாமே தம்முடைய ஜனங்களை பாபிலோனை விட்டு அழைக்கிறவராக இருக்கிறபடியால், அவருடைய அழைப்பு எவர் மூலம் வந்தாலும், அவருக்கு உண்மையாக இருப்பவர்கள் அதைக் கேட்பார்கள். அந்த அழைப்பினால் அவர்களுடைய கீழ்ப்படிதல் சோதிக்கப்படுவது மாத்திரமல்லாது, பாபிலோன் மேல் அவர்கள் வைத்திருக்கிற அன்பு மற்றும் அதன் பிழைகள் மேல் வைத்திருக்கிற விசுவாசமும் சோதிக்கப்படும். பாபிலோனின் உபதேசங்கள், ஒழுங்கு முறைகள் போன்றவற்றை அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதனிமித்தம் வெளியே வர விருப்பம் அற்றவர்களாக இருப்பார்கள் என்றால், தற்கால சத்தியத்திற்கு தகுதியற்றவர்கள் என காணப்படுவார்கள். அப்படியானால் வர இருக்கும் வாதைகளுக்கு தகுதி பெறுவார்கள். ஆனால் அழைப்பில் உள்ள வார்த்தைகள் சுட்டிக் காட்டுவது என்னவெனில், பாபிலோனில் உள்ள தேவனுடைய உண்மையான ஜனங்கள், தெய்வீக சத்தியத்தை அசட்டை செய்து உலகத்தனம் என்கிற பாவத்தில் இருக்கிறார்கள் என்று அர்த்தப்படுத்திக் கொள்ளாமல், பாபிலோன் விழுந்துவிட்டது, தள்ளுண்டது என்று அவர்கள் அறிந்து கொள்ளும் வரை அப்படியாக இருப்பார்கள் என்பதாகும். அதன்பின்னர் அவளில் தொடர்ந்து இருந்தால், அவளுக்குள் இருப்பதாக எண்ணப்படுவார்கள். அதாவது கடந்த கால மற்றும் தற்காலத்தின் அவளுடைய தவறான செயல்களை, உபதேசங்களை ஏற்றுக்கொள்வது போலவும், அவளுடைய பாவங்களில் பங்கு பெறுபவர்களாகவும் எண்ணப்படுவார்கள். அதனிமித்தமாக அவள் மேல் வரும் தண்டனை மற்றும் வாதைகளில் அவர்கள் பங்குபெற தகுதி பெறுவார்கள். (வெளி. 18:4)

"அது பேய்களுடைய குடியிருப்பும், சகல வித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகல வித பறவைகளுடைய கூடுமாயிற்று" என்பது எவ்வளவு பலமுள்ள வசனமாக இருக்கிறது. பாபிலோனின் சில பகுதிகளில், மிக அருவருப்பான சமுதாயம், கிறிஸ்தவ சமயத்தையும் சடங்காச்சாரத்தையும், தேடி, கைக்கொள்ளுகிறவர்கள் என்பது

எவ்வளவு உண்மையாக இருக்கிறது. எப்படியோ, எங்கேயோ ஒவ்வொரு அசுத்தமான கொள்கைகளும், உபதேசங்களும், அவளுக்குள் வந்து விடுகிறது. அவள் ஒரு கூடாக இருக்கிறாள். அந்தக் கூடு ஆண்டவருடைய பொறுமையும், சாந்தமுமுள்ள புறாக்களை மட்டுமின்றி அநேக அசுத்தமான, அருவருப்பான பறவைகளையும் தனக்குள் வைத்திருக்கிறது. மனுஷர்களையும், ஸ்திரீகளையும் ஏமாற்றுகிறவர்கள் தவறாய் நடக்கிறவர்களுக்குள் எத்தனை பேர் கிறிஸ்துவின் சபையின் வெளிப்படையான அங்கமாக இருக்கிறார்கள்! அது மாத்திரமல்ல, பொல்லாத வழிகளை செயல்படுத்துவதற்கு எத்தனை பேர் தங்களுடைய வேலையை ஒரு மறைமுகமான கருவியாக பயன்படுத்துபவர்களாக இருக்கின்றனர்! ரோமன் கத்தோ-க்க ஐக்கியத்தில் இருந்த எத்தனை மோசமான மூர்க்கமான குற்றவாளிகள் மரண தண்டனை வழங்கப்பட்டு மரிக்கிறார்கள் என்பது நன்கு அறியப்பட்ட விஷயமாகும்.

நாகரீகம் அடைந்த உலகின் மிகச் சிறந்தவர்களும் மிக மோசமானவர்களும் ஆக நல்லதும் பொல்லாததுமான ஜனங்களும் பாபிலோனுக்குள் இருந்திருக்கிறார்கள். மிகச் சிறந்தவர்கள் எனப்படுபவர்கள் உண்மையாகவே அர்ப்பணம் செய்து கொண்டவர்களுக்குள் உள்ள ஒரு சிறு வகுப்பினர். இவர்கள் பெயரளவுக்கு உள்ள அதிகமான மோசமான அசுத்த ஜனங்களுக்குள் கலந்து இருக்கிறார்கள். ஆனால் நல்ல சூழ்நிலை ஏற்படும் போது சிறந்த வகுப்பினர் தற்போதைய அறுப்பின் போது மகிமை அடைவதற்கென்று பிரித்து எடுக்கப்படுவார்கள்.

பாபிலோனுக்குள்ளும், வெளியேயும் உள்ள அசுத்தமான அருவருப்பான பறவைகளின் விகிதாச் சாரத்தைப் பார்க்கக்கூடிய விதத்தில் விளக்கமான அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. மிகவும் ஐதீக மற்றும் பூர்வீகமாக நூற்றாண்டு காலமாக இருக்கும் சபைகள், தன்னுடைய கோதுமை நிலத்தில் கோதுமை தூய்மையானதாகவும், நல்ல தரமானதாவும் இருப்பதாகவும், பதர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதாகவும் கூறிக் கொள்ளும் சபைகள், அரசாங்கத்தோடு இணைந்து சட்டங்களை இயற்றி ஆளுகை செய்யும்



ஜனங்களின் நிலைமையை கீழ்க்கண்ட அதிகார பூர்வமான அறிக்கை கூறுகிறது:

**இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றில் உள்ள சமுதாயத்தின் நிலைமையைக் குறித்து 1873ம் ஆண்டின் பார்-மெண்ட் அறிக்கை :**

**மத ரீதியிலான ஜனத்தொகை**

| | |
|---|---|
| ரோமன் கத்தோ-க்கர்கள்....................................... | 1,500,000 |
| ஆங்கிலேய திருச்சபை.......................................... | 6,933,935 |
| புரட்டஸ்டன்ட் சபையார் (Protestants other than Episcopalians) | 7,234,158 |
| நாத்திகர்கள்....................................................... | 7,000,000 |
| யூதர்கள் ........................................................... | 57,000 |

**சிறையில் உள்ள குற்றவாளிகள்**

| | |
|---|---|
| ரோமன் கத்தோ-க்கர்கள்....................................... | 37,300 |
| ஆங்கிலேய திருச்சபை.......................................... | 96,600 |
| புரட்டஸ்டன்ட் சபையார்...................................... | 10,800 |
| நாத்திகர்கள்....................................................... | 350 |
| யூதர்கள்............................................................ | 0 |
| | 1,45,050 |

**100,000 பேருக்கு குற்றவாளிகளின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| ரோமன் கத்தோ-க்கர்கள்....................................... | 2,500 |
| ஆங்கிலேய திருச்சபை.......................................... | 1,400 |
| புரட்டஸ்டன்ட் சபையார்...................................... | 150 |
| நாத்திகர்கள்....................................................... | 5 |
| யூதர்கள்............................................................ | 0 |

**குற்றவாளிகளின் விகிதாச்சாரம்**

| | |
|---|---|
| ரோமன் கத்தோ-க்கர்கள்.................................... | 40க்கு ஒருவர் |
| ஆங்கிலேய திருச்சபை........................................ | 72க்கு ஒருவர் |
| புரட்டஸ்டன்ட் சபையார்................................. | 666க்கு ஒருவர் |
| நாத்திகர்கள்.......................................... | 20,000க்கு ஒருவர் |

இப்படிப்பட்ட நிலைமைக்கான காரணம் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது: "அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை (ஆவி, செல்வாக்குள்ள நிலை) எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்" (வெளி. 18:3)-உலக சிநேகிதம். சபையைக் குறித்ததான அதன்நோக்கம், குறிக்கோள் பற்றிய பொய்யான போதனைகளும், அவள் உயர்த்தப்படும் வேளையும், ஆட்சி செய்ய வேண்டிய வேளையும் வந்துவிட்டது என்கிற எண்ணமும் (முக்கியமாக கான்ஸ்டன்டைன் காலத்தில் வல்லமையிலும், மகிமையிலும் அரசாட்சி செய்யும்படியாக ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய இராஜ்யம், தான் தான் என்று கூறியபோது அவளுடைய உலகப்பிரகாரமாக ஆசைகளுக்கு கிடைத்த வெற்றிக்குப் பின்னர்) அவளோடு ஒரு போதும் இணைந்திராத அநேகரை பாபிலோனுக்குள் வழி நடத்திற்று. பெருமையும் அபிலாஷையும் உலக அதிகாரத்தை பெறுவதற்கு ஆதிகால சபையை வழி நடத்திற்று. அதிகாரத்தைப் பெறுவதற்கு எண்ணிக்கையும் உலகப்பிரகாரமான செல்வாக்கும் அவசியம். அந்த எண்ணிக்கையைப் பெறுவதற்கு தற்போதைய நிலைமையில் சாத்தியம் இல்லாது இருந்தது. சத்தியம் அந்த எண்ணிக்கையைக் கொண்டு வந்திருக்க முடியாது. ஆகவே பொய்யான உபதேசம் ஆரம்பிக்கப்பட்டது. கடைசியில் இதன்மூலம் முதல் நிலைக்கு வரமுடிந்தது. மேலும் அப்பொழுது இருந்த சத்தியமும் திரிக்கப்பட்டது, விகாரப்படுத்தப்பட்டது. பல லட்சக்கணக்கானவர்கள், எண்ணிக்கையில் அதிகமாக வந்தார்கள். அப்பொழுது உண்மையான சபையான கோதுமை இன்னும் ஒரு "சிறு மந்தையாக" லட்சக்கணக்கான களைகளிடையே மறைந்திருந்தது. இங்கே, பட்சிக்கிற ஓநாய்களின் மத்தியில் உள்ள ஆடுகள் போன்று, தேவனுடைய இராஜ்யத்தின் உண்மையான கரு பலவந்தப்படுத்தப்பட்டது. அவர்கள் தங்களுடைய ஆண்டவரைப் போன்று அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றினவர்களாகவும், அசட்டை பண்ணப்பட்டவர்களாகவும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும், துக்கம் நிறைந்தவர்களாகவும், பாடு அனுபவிக்கிறவர்களுமாகவும் இருந்தார்கள்.

ஆனால் இப்பொழுது ஆயிர வருட அரசாட்சி உதயமாகிறது. கடந்த இருண்ட இரவின் உபதேச தவறுகள் கண்டு



பிடிக்கப்பட்டுவிட்டன. சத்தியத்தின் உண்மையான முத்துகள் பிரகாசிக்கப்படுகின்றன. ஆகவே இதன் விளைவு எதிர்பார்க்கப்பட்ட படி கோதுமையி-ருந்து களைகளை முற்றிலுமாக அகற்றுவதாகும். தவறான உபதேசம் தகுதியில்லாத முன்னேற்றத்தை ஏற்படுத்தியபடியால், வெளியாக்கப்பட்ட சத்தியம் அறுப்பின் வெளிச்சத்தில் பிரித்தெடுக்கப்படுதலை உண்டு பண்ணும். எல்லா களைகளும், கோதுமையில் சிலதும் இன்னமும் பயத்துடன் தான் உள்ளன. பாபிலோன் இல்லாமல் போவது அவர்களுக்கு, தேவனுடைய வேலையை உதறித்தள்ளுவது போன்றும், அவருடைய திட்டம் தோல்வியுறுவது போன்றும் தோன்றுகிறது. ஆனால் அது உண்மையில்லை. களைகள் ஒரு போதும் கோதுமையாக இருந்ததில்லை. தேவனும் அதன் நிலையிலேயே அங்கீகரிக்கவும் எண்ணியிருக்கவில்லை. "அவைகள் இரண்டும் அறுப்புவரை ஒன்றாக வளரட்டும்" என்றுதான் அனுமதித்தார். பாபிலோனின் அசுத்தமான பறவைகள் உள்ள கூண்டி-ருந்துதான் தேவனுடைய ஜனங்கள் வெளியே வரும்படி அழைக்கப்பட்டனர். அதன் நோக்கம் அவர்கள் சுயாதீனத்தை அனுபவிக்க வேண்டும்,அறுப்பின் வெளிச்சத்திலும் வேலையிலும் பங்கு பெற வேண்டும் என்பதோடு அவளுடைய உபதேசத்தின் தவறுகளோடும் பழக்க வழக்கங்களோடும் ஒத்துப் போகாமல், அதி-ருந்து தப்பித்துக் கொள்ளவும், அதற்குள் தங்கி இருப்பவர்களுக்கு வர இருக்கிற வெகுமதியான வாதைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் வேண்டும் என்பதாகும்.

இந்த வாதைகள் அல்லது துன்பங்கள் தள்ளிவிடப்பட்ட யூதர்கள் மேல் முன்னமே நிழலாட்டமாக கூறப்பட்டிருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பயங்கரமான அடையாளங்களின் ஊடாக காட்டப்பட்டிருந்தது. அநேகமான மாணவர்களுக்கு இந்த விஷயத்தில் மிகையான கொடிய கருத்துக்களைக் கொடுத்துள்ளது. ஆகவே இப்பொழுது வரயிருக்கிற உண்மையான சம்பவங்களுக்கு ஆயத்தம் இல்லாதிருக்கிறார்கள். அவர்கள் அநேக முறைகளில் அடையாளங்களை அது இருக்கிறபடியே எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே அவைகள் மத, சமுதாய மற்றும் அரசியல் குழப்பங்களினால், முரண்பாடுகள், ஏற்றத் தாழ்வுகள், எதிர்நோக்கங்கள், புரட்சிகள்

போன்றவைகளால் நிறைவேறப் போகிறதைக் காண ஆயத்தம் இல்லாமல் இருக்கிறார்கள்.

ஆனால், இங்கே இன்னொரு காரியத்தையும் கவனியுங்கள். பாபிலோன் தள்ளப்பட்ட அல்லது கிருபையி-ருந்து நீக்கப்பட்ட காலத்திற்கும் (1878) அவள் மேல் வாதைகள் அல்லது துன்பங்கள் வரும் காலத்திற்கும் இடையில் ஒரு இடைவெளி இருக்கிறது. இந்த காலத்தில் ஆண்டவருடைய ஜனங்களுக்கும் உண்மையுள்ளவர்களுக்கும் இது அறிவிக்கப்பட்டு, அவர்கள் பாபிலோனை விட்டு வெளியே கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இதே வசனத்தில் இது தெளிவாக கூறப்பட்டுள்ளது. செய்தியாவது: "பாபிலோன் விழுந்தது," "என் ஜனங்களே, ...... அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமல் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்பதாகும். வெளி. 7:3ல் இதே இடைவெளி குறித்தும் அதில் செய்யப்பட வேண்டிய வேலை குறித்தும் அடையாளங்கள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற தூதனுக்கு உத்தரவு பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது: "நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள்." நெற்றியில் முத்திரை போடுதல் என்பது மனதில் சத்தியத்தை புரிந்து கொள்வதற்கு அடையாளம் காட்டுவதாக இருக்கிறது. இந்த முத்திரை தேவனுடைய ஊழியக்காரர்களை பாபிலோனின் மேல் வைராக்கியம் உள்ளவர்களிடம் இருந்து அடையாளம் காட்டும், பிரித்து எடுக்கும். இது தானியே-ன் சாட்சியத்தோடு ஒத்து இருக்கிறது. "துன்மார்க்கரில் (தங்களுடைய உடன்படிக்கைக்கு உண்மையாய் இல்லாதவர்கள்) ஒருவனும் உணரான். (அவருடைய ஜனங்களில்) ஞானவான்களோ உணர்ந்து கொள்வார்கள்." (தானி. 12:10) இப்படியாக, பாபிலோன் தள்ளப்பட்டு, நிராகரிக்கப்பட்டு, அதன்மேல் வாதைகள் வரும்முன் வகுப்பினர் அடையாளம் இடப்பட்டு, பிரித்தெடுக்கப்படுவார்கள்.

மேலே நாம் கவனித்த வசனத்தில், இந்த அறிவு என்பது ஒரு முத்திரையாகவும் பிரித்தெடுக்கும் வழியாகவும் இருக்கிறது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. ஏனெனில், முதலாவதாக "பாபிலோன் வீழ்ந்தது" என்கிறதும் அந்த அறிவின்மூலம் அவளை விட்டு



"வெளியே வாருங்கள்" என்று, அவள் மேல் சில வாதைகள் அல்லது தண்டனைகள் வருவதற்கு முன் ஆண்டவருடைய ஜனங்களுக்கு அந்த அறிவிப்பு வருகிறது. எல்லாரும் "தங்களுடைய நெற்றிகளில் முத்திரை போடப்பட வேண்டும்" என்பதை உண்மையாகவே நாம் அறிந்துள்ளோம். தேவனுடைய திட்டத்தை சரியாக புரிந்து கொண்டு இந்த கட்டளைக்கு கீழ்ப்படிவதற்கு முன்பாக ஞானமுடன் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

தேவனுடைய ஜனங்களுக்கு முத்திரையிடுவது என்கிற வேலை நடந்து கொண்டு வருகிறது என்பது தெரியவில்லையா? நம்முடைய நெற்றிகளில் முத்திரையிடப்படவில்லையா? அதுவும் கூட, சரியான நேரத்தில்? அவருடைய வார்த்தையின் மூலம் ஆண்டவருடைய கரத்தினால் படிப்படியாக நாம் நடத்தப்படவில்லையா? அவருடைய நோக்கத்தின்படி சத்தியத்தையும், பொதுவான காரியங்களையும் அறியும்படி அவருடைய கரத்தினால் நாம் நடத்தப்படவில்லையா? அநேக விஷயங்கள் மேல் நாம் கொண்டிருந்த எண்ணங்களை அது மாற்றவில்லையா? இந்த முத்திரையிடுதல் என்பது பாபிலோனின் பல்வேறு மார்க்கங்கள் மூலம் நமக்கு வரவில்லை என்பது உண்மையில்லையா? அதைக் காட்டிலும், அந்த வேலையை துரிதப்படுத்துவதற்கு அது தடையாக இருந்ததில்லையா? அறுப்பின் போது கோதுமையும் களைகளும் பிரித்தெடுக்கப்பட வேண்டும் என்று ஆண்டவர் அறிவித்ததும், அது சரியானதுதான் என்பதையும் நாம் அறியவில்லையா? மேலும் அவருடைய ஜனங்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்பதும், அவருடைய திட்டத்தின் மூலம் காட்ட வேண்டும் என்பதும், அவருடைய திட்டம் என்பதை நாம் அறியவில்லையா? கீழ்ப்படிவது என்பதும், வெளியே வர வேண்டும் என்பதும் நாம் மனிதர்களுடைய புகழ்ச்சியை, நல்ல சம்பளத்தை, ஒரு குருவானவருக்குரிய வீடு அல்லது வியாபாரத்தில் உள்ள நன்மைகள் அல்லது குடும்பத்தில் காணப்படுகிற சமாதானம் என்பவைகளை விட்டு விட வேண்டியதிருக்கும் என்று இருந்தால் எப்படியாக இருக்கும்? எனினும் நாம் பயப்படாதிருப்போமாக. நம்மைப் பார்த்து "வா!" என்று அழைக்கிறவர் தான் பேதுரு கட-ன் மேல் நடந்தபோதும் "வா!" என்று அழைத்தவர் ஆவார்.

ஆண்டவருடைய கரம் அவனுக்கு நேராக நீட்டப்பட்டிருக்காவிடில் அவன் மூழ்கியிருப்பான். அதே கரம் தான் இப்பொழுதும் அவருடைய கட்டளையின்படி பாபிலோனை விட்டு வெளியே வருபவர்களையும் தாங்குகிறது. கொந்தளிக்கின்ற கடல் போன்று இருக்கிற கஷ்டங்களைப் பாராது, ஆண்டவரையே நோக்கிப் பார்க்க வேண்டும், தைரியமாக இருக்க வேண்டும்.

கட்டளையானது "வா" என்றுதான் உள்ளது. "போ" என்று இல்லை. மனுஷீக பாரம்பரியங்கள், கோட்பாடுகள், முறைகள், தவறுகள் என்பவைகளை விட்டு, அந்த அடிமைத்தனத்தில் இருந்து வெளியே வருவது என்பது, அவரால் கற்பிக்கப்படவும், போஷிக்கப்படவும், பெலப்படுத்தப்படவும், அவருடைய சித்தத்தை நிறைவேற்றவும், நிலைத்து நிற்கவும், பாபிலோன் உடன் சேர்ந்து விழாமல் இருக்கவும் நேரடியாக அவரண்டை வருவதாகும்.

தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்துகிறதாவது: அவருடைய அனுக்கிரகத்தி-ருந்தும், அவருடைய வார்த்தையை வெளிப்படுத்துவதி-ருந்தும் விழுந்த பின்னர், பேர் சபை படிப்படியாக அவிசுவாசத்திற்குள் செல்லும் என்றும், அப்பொழுது வேதாகமம் முற்றிலுமாக உதாசீனப்படுத்தப்படும் என்றும், பெயரளவிற்கு வைத்துக்கொள்ளப்பட்டு இருந்தாலும், உண்மையான கோட்பாடு பல்வேறு விதமான உத்தேசமான விஷயங்களாகத்தான் இருக்கும் என்பதாகும். இந்த வீழ்ச்சியில் இருந்து உண்மையானவர்கள், முத்திரை இடப்பட்டவர்கள் தப்பித்துக் கொள்வார்கள். அவர்கள் "இவைகளுக்கெல்லாம் தப்பி நிற்பதற்கு பாத்திரவான்களாக எண்ணப்படுவார்கள்." ஆண்டவருடைய பிரசன்னத்தின் போது அவர்கள் விழுந்து போகமாட்டார்கள். (லூக். 21:36) சொல்லப்போனால், அநேகர் இப்படியாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஆராதனையை அதே விதமாகத்தான் வைத்துக் கொள்ளுகிறார்கள்; சிருஷ்டிகள் மீதும் எதிர்கால வாழ்க்கை மீதும் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். ஆனால் திவ்வியநோக்கத்தின் தவறாத போதகராகிய வேதாகமத்தை உதாசீனப்படுத்தி விட்டு, இந்த விஷயங்களை தங்களுடைய சொந்த அல்லது விசேஷமாக



மற்றவர்களுடைய தத்துவங்கள் அல்லது கருத்துக்கள் மூலம் காண்கிறார்கள். இவர்கள் வேதாகமத்தை வைத்துக் கொண்டு, அதில் சொல்லப்பட்டவைகளை, விசேஷமாக ஏதேனையும் அதில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் விசுவாசிப்பதில்லை. இயேசுவின் பெயரை வைத்துக் கொண்டு, அவரை இரட்சகர் என்றும், கிறிஸ்து என்றும் அழைத்துக்கொண்டு அவரை பாவம் செய்யாத நல்ல உதாரண மனிதர் என்றுதான் எண்ணுகிறார்கள். அதே வேளையில் சிலுவையில் அவர் செலுத்திய ஈடு ப-யை முற்றிலுமாக நிராகரிக்கிறார்கள். பாவிகளுக்கு பிதாவானவர் இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொண்டு சாபத்தையும், மத்தியஸ்தரையும் விட்டு விடுகிறார்கள்.

நம்முடைய ஆண்டவரின் முதலாவது வருகையின் மூன்றரை வருட ஊழியத்தி-ருந்து, யூத தேசம் தள்ளிவிடப்படும் வரை (அவர்களுடைய தேசமும் சபையும் ஒன்றாக இருந்தது) உள்ள காலம் ஒழுங்கு முறைமைகளை முழுமையாக பரீட்சித்துப் பார்ப்பதற்காகத் தான் இருந்தது. அதன் தனிப்பட்ட நபர்களை பரீட்சித்துப் பார்ப்பதற்காக அல்ல என்பது பொதுவாக அறியப்படவில்லை. அதனுடைய மத தலைவர்கள் - ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள் ஆகியோர் அந்த ஒழுங்கு முறைக்கு பிரதிநிதித்துவம் அளிப்பவர்களாக இருந்தார்கள். அவர்கள் இவ்வாறாக யூத மதத்தினருக்கு பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டார்கள். (யோவா. 7:48,49) ஜனங்களும் அவர்களை அவ்வாறாகவே நினைத்தார்கள். ஆகவே தான் அதிகாரிகளிலாவது, பரிசேயரிலாவது யாராவது அவனை விசுவாசித்ததுண்டா? என்கிற கேள்வி எழும்பினது. நம்முடைய ஆண்டவரும் அவர்களை அவ்வண்ணமாகவே அறிந்திருந்தார். அவரை ஜனங்கள் ஏற்றுக் கொள்ளாததற்கு அவர் அவர்களை பெரும்பாலான வேளைகளில் கடிந்து கொள்ளாமல் இருந்தாலும், அடிக்கடி கடிந்து கொண்டது "குருடரான தலைவர்களைத் தான்," ஏனெனில் அவர்களும் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதில்லை, ஜனங்களையும் அதற்குள் பிரவேசிக்க அனுமதிப்பதில்லை. இல்லையென்றால் அவர்கள் இயேசுவை மேசியாவாகவும், இராஜாவாகவும் ஏற்றுக் கொண்டிருந்திருப்பார்கள்.

நம்முடைய ஆண்டவர் அதிகமாக முயற்சித்தது, பிரபலமாகாம-ருப்பதற்காகத்தான். அவரை ஜனங்கள் பலவந்தமாக இராஜாவாக ஆக்கும்படி (யோவா. 6:15) தம்முடைய உபதேசங்களும், அற்புதங்களும் ஜனங்களை தூண்டி விடக்கூடாது என்பதற்காக அப்படிச் செய்தார். ஆனாலும் யூத மத தேசமும் பரீட்சிக்கப்பட்ட காலம் முடிந்து அவர்களுடைய வீடு அல்லது ஒழுங்கு முறை தள்ளிவிடப்பட்டு, "பாழாக்கப்பட்ட" காலம் வரை, இயேசு தம்முடைய அதிகாரத்தின் அடையாளங்களையும் தாம் மேசியா என்பதையும் யூத மத தலைவர்களின் கவனத்திற்கு அடிக்கடி கொண்டு வந்தார். பின்பு அவரது வழிநடத்துத-ன்படியும் அப்போஸ்தலர்களின் உபதேசத்திற்கு உட்பட்டு, எல்லா முயற்சிகளும் ஜனங்களுக்கு தனிப்பட்ட முறையில் செயல்படுத்தப்பட்டது. மேலும், தள்ளப்பட்ட சபை, ஒழுங்கு முறை மற்றும் அதிகாரிகள் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டார்கள்.

இதற்கு ஆதாரமாக அவருடைய ஊழியத்தின் போது அவர்களுடைய ஆசாரியர்கள், போதகர்கள் அடங்கிய ஒழுங்கு முறை நிராகரிக்கப்பட்டது வரை, மத். 8:4ல் கூறப்பட்டுள்ளபடி குஷ்டரோகியை ஆண்டவர் சுகமாக்கிய விதத்தை கவனியுங்கள். ஏனெனில், இயேசு அவனிடம் சொல்-யிருந்தார், "இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு. ஆயினும், அவர்களுக்குச் சாட்சியாக நீ போய் ஆசாரியனுக்கு உன்னை காண்பித்து, மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்." ஆதாரம் அல்லது சாட்சியம் ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஜனங்களிடம் இருந்து மறைத்து வைக்கப்பட வேண்டும். ஆனால் யூத மத அதிகாரிகளுக்கு உடனடியாக கூறப்பட வேண்டும். ஏனெனில், அப்பொழுது அது அவர்களுக்கு பரீட்சைக்குரிய காலமாக இருந்தது.

யூத மத முறைமை பரீட்சிக்கப்பட்டதின் நோக்கத்தையும், விளைவுகளையும் குறிப்பாக கவனிக்க வேண்டும். ஏனெனில், தற்போது சுவிசேஷ யுக சபையானது பரீட்சிக்கப்படுவதில் அதன் விளைவுகள் காணப்படுவதுடன் தேவனுடைய முழு திட்டத்திலும் அது வெளிப்படுகிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு இசைவாக, வருகிற மேசியாவுக்கு ஆயத்தமாயிருக்கிற ஜனங்களாகவும், "தமது சொந்த ஜனங்களாகவும்," இருப்பதற்கு



தேவன் அவர்களை ஒழுங்குபடுத்தி, அதிகாரம் அளித்து, வழி நடத்துகிறார் என்றும், பூமியின் மற்ற அனைத்து ஜாதிகளையும் தேவனைப் பற்றிய அறிவுக்கும், அவருடைய நீதியுள்ள பிரமாணங்களுக்கும் இசைவாக வரும்படி சந்தர்ப்பங்களைக் கொடுத்து ஆசீர்வதிக்கவும் அவர்களை பயன்படுத்துகிறார் என்றும் அவைகள் அறிவிக்கின்றன. மாம்சீக இஸ்ரயேலர் இந்த பெரிய வேலையில் முக்கியமான இடத்திற்கு தகுதியற்றதாக இருப்பார்கள் என்று தேவன் முன்கூட்டியே அறிந்து இருந்தாலும், விளைவுகளைக் குறித்து அவர் அறியாதவர் போன்று அவர்களுக்கு எல்லா சந்தர்ப்பத்தையும் அனுகூலத்தையும் கொடுத்தார். இதற்கிடையில் அவர் முன்னதாகவே அறிந்து வைத்திருந்ததை தீர்க்கதரிசனங்கள் மூலமாக கூறினார். அதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே யூத ஜனங்களை அவர் பரீட்சித்து, அவர்களோடு கூடிய அவரது செயல்பாடுகளில் அவர் தோல்வியுற்றார் என்று நாம் நினைத்து விடக்கூடாது என்பதற்காக அவர் அப்படிச் செய்தார்.

இஸ்ரயேல் ஒரு மத தேசமாக ஆயத்தத்துடன், தாங்கள் செய்ய வேண்டியதை செயல்படுத்தும்படி ஆர்வமுடன் காத்துக் கொண்டிருப்பவர்களாக கூறிக்கொண்ட போது, தேவனுடைய திட்டம் மேற்கொண்டு அமுல்படுத்தப்படுவதற்கு முன்னதாக, அவர்கள் சோதிக்கப்பட வேண்டியது அவசியம் என்பது நியாயமானதே. அந்த திட்டம் என்னவெனில், ஆபிரகாமின் இயற்கையான வித்தான சந்ததியார், பரீட்சிக்கப்படும் போது அவர்கள் நாடின பிரதான கனத்திற்கு தகுதியற்றவர்கள் என காணப்படும் பட்சத்தில், ஆபிரகாமின் வித்து என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர்களாக தனிப்பட்ட நபர்கள் சுவிசேஷ யுகத்தின் போது தெரிந்து கொள்ளப்பட வேண்டும். அது மாத்திரமல்ல, பூலோகத்தின் எல்லா குடும்பங்களையும் உயர்த்தும்படியாக, ஆசீர்வதிக்கும்படியாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்யத்தில் மேசியாவின் உடன் சுதந்திரராக இருக்கும்படி தெரிந்து கொள்ளப்பட வேண்டும். (கலா. 3:16, 27-29, 14)

யூத ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட 70 வாரங்கள்

(490 வருடங்கள்) திவ்ய அனுக்கிரகம் நிறைவேறத் தவறவில்லை. ஆகவே கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த தேவனுடைய இராஜ்யத்தில், பங்குபெறும்படியோ அல்லது சீடர்களாகும்படியோ புறஜாதியினரும் அல்லது சமாரியர்களும் கூட எவ்விதத்திலும் அழைக்கப்பட முடியாது. (அப். 3:26) யூதர்களிடத்தில் பவுல் பின்வருமாறு கூறினார் : "முதலாவது உங்களுக்கே தேவனுடைய வசனத்தை (இராஜ்யத்தில் பங்கு பெறும்படி) சொல்ல வேண்டியதாக இருந்தது." (அப். 13:46) நமது ஆண்டவர் தமது சீஷர்களை அனுப்பி "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்." "காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல என்றார்." மத். 10:5; 15:24)

70வது வாரம் முழுவதிலும், இதன் நடுப்பகுதியில் தான் கிறிஸ்து மரித்தார்- நமது ஆண்டவர் ஊழியத்தை ஆரம்பித்தது முதல், முதலாவது புறஜாதியானாகிய, மனம் திரும்பிய கொர்நே-யுவினிடத்தில் பிரசங்கிக்கும்படியாக பேதுரு அனுப்பப்படும் வரை உள்ள ஏழு வருடங்கள் யூதர்களை பரீட்சிக்கும்படியாக தேவனால் தெரிந்து கொள்ளபட்ட காலமாகும். ஆனால் அந்த ஏழு வருடங்கள் முழுவதும் (ஒரு சபை-இராஜ்யமாக) அவர்கள் எல்லோரையும் பரீட்சிப்பதற்குப் பதிலாக அந்த பரீட்சை "நீதியோடே சீக்கிரமாக" நிறைவேற்றப்பட்டது. அது அவர்களுடைய அனுகூலத்திற்காகவே செய்யப்பட்டது. ஏனெனில் பரிசேயர்களும், ஆசாரியர்களும், வேதபாரகர்களும், நிராகரித்து இறுதியில் ஆண்டவராகிய இயேசுவை வெறுத்தது மாத்திரமல்ல அவரை கொல்லவும் வகை தேடினார்கள் என்பது தேவனுக்கு மாத்திரமல்ல, மனிதர்களுக்கும் வெளிப்படையாக தெரிந்து இருந்தது. ஆகவே வேளை வந்த போது தம்மை இராஜாவாக்கும்படி, வெளிப்படையாக ஒப்புக்கொடுக்கும்படி, அவர்களிடத்தில் கழுதையின் மேல் ஏறினவராக வந்த போது, வேதபாரகர்கள், பரிசேயர்களால் ஏற்றுக்கொள்ளப்படாத போது, இராஜா உடனடியாக அந்த ஒழுங்கு



முறையை உதறித்தள்ளினார்; சாதாரண ஜனங்கள் அவரை மகிழ்ச்சியுடன் ஏற்று அவர் இராஜாவாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தின போதும், அந்த ஒழுங்கு முறையை அவர் உதறித் தள்ளினார். (மாற். 12:37) ஆகவே, இப்படியாக ஆண்டவர், மேற்கொண்டும் உபயோகம் இல்லாதிருக்கும் பரீட்சையை 70வது வாரத்தில் மிஞ்சி இருக்கும் காலம் விசேஷமாக ஜனங்களுக்காக, தள்ளிவிடப்பட்ட யூத ஒழுங்கு முறையில் உள்ள தனிப்பட்டவர்களுக்காக, செலவிடப்படும்படி அதை முடக்கி வைத்தார். அதுவும் எல்லா தேசத்தாருக்கும் விரிவாக யூத யுகத்தின் ஊழியக்காரர்களின் பிரயாசைகள் சென்று அடைவதற்கு முன்னதாக அப்படிச் செய்தார். அப்படியாகவே நடைபெற்றது, ஏனெனில், நம்முடைய ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின்னர் அவருடைய சீடர்களிடத்தில் சொல்லும் போது அவர்களுடைய பிரயாசைகள் யூதர்களுக்கு மாத்திரம் அல்லாது, "சகல தேசத்தாருக்கும்" குறிப்பாக "எருசலேமி-ருந்து தொடங்க" வேண்டும் என்றார். (லூக். 24:47) மேலும், ஏற்ற வேளையில் வழியைத் திறக்கும் வரை, கடைசியில் பேதுருவை கொர்நே-யுவினிடத்தில் அனுப்பி அனுக்கிரகம் செய்தது வரை, யூதர்கள் அவர்களைத் தாண்டி சத்தியம் செல்லாதபடி அவர்கள் தடுப்பார்கள் என்பதை அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார். அந்த வேளையி-ருந்து தனிப்பட்ட யூதர்களும், புறஜாதியினரும் தேவனுடைய அனுக்கிரகத்தை சரி சமமாகவே பகிர்ந்து கொண்டார்கள். இருபாலாருமே கிறிஸ்து மூலமாக கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்கள் தான். ஏனெனில் தற்காலத்தில் தேவனைப் பொறுத்த வரையில் வித்தியாசமே கிடையாது. யூதனுக்கு அனுகூலமற்றதாக காணப்படுவது என்னவெனில், கிறிஸ்து மூலம் வருகிற வெகுமதி என்று இதை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கும் அவனது பெருமைதான். எதுவெனில் அவன் தேவனுடைய பிரமாணத்தை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளும் போது கிடைக்கக்கூடிய, அவனுக்கு ஒரு முறை கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களாகும். இந்த பிரமாணத்தை விழுந்துபோன நிலையில் உள்ள எவரும் நிறைவேற்ற முடியாது.

அந்த எழுபதாவது வாரத்தில் மாம்சீக இஸ்ரயேலுக்கு ஏற்பட்ட

பரீட்சை அந்த முறைமையை சோதிப்பதற்காக மட்டுமல்ல, பாபிலோன் என்றும், கிறிஸ்தவ தேசம் என்றும் ஆவிக்குரிய இஸ்ரயேல் என்றும் அழைக்கப்படுகிற பேர் கிறிஸ்தவ சபைக்கு ஏற்படுகிற பரீட்சைக்கு முன்னடையாளமாக இருந்தது. இது சுவிசேஷ யுக அறுவடையில் ஆரம்பித்து ஏழு வருடங்கள், கிபி 1874 அக்டோபரி-ருந்து 1881 அக்டோபர் வரை, நிறைவேறியது. பாபிலோனாகிய பேர் கிறிஸ்தவ தேசம், மாம்சீக இஸ்ரயேல் தவறினதைப் பார்க்கிறதாக கூறுகிறது. மேலும், தன்னை ஆபிரகாமின் உண்மையான ஆவிக்குரிய வித்து என்றும், தேவனை அறியாத உலகத்தாரை இரட்சிப்படையச் செய்யும்படி ஆவலுடன் காத்திருப்பதாகவும், யூத ஒழுங்கு முறை கூறியபடி நீதியாக ஆளவும், போதிக்கவும், எல்லா ஜாதிகளையும் ஆசீர்வதிக்க இருப்பதாகவும் கூறுகிறது. இப்பொழுது உள்ள காலம் நிழ-ல் உள்ளதைப் போன்றதாகும். அதாவது, அப்பொழுது யூத தலைவர்கள் வருகிற மேசியாவைப் பற்றிய வாக்குத்தத்தங்கள் அடையாளமாக சொல்லப்பட்டவைகள் என்று எண்ணினார்கள். ஆனால் சாதாரணமான ஜனங்கள் தான் தனிப்பட்ட முறையில் ஒரு மேசியா வருவார் என்று எதிர்பார்த்தார்கள். அப்பொழுது யூதர்களில் கற்று அறிந்தவர்கள், மேசியா தனிப்பட்ட விதத்தில் வருவார் என்பதை கவனியாமல் விட்டு விட்டார்கள். ஆனால், அவர்களுடைய யூத மத தேசம் தங்களுடைய மேன்மையான பிரமாணங்களினிமித்தம் மற்றவர்கள் மேல் வெற்றி சிறப்பார்கள் என்றும், இப்படியாக பொதுவான ஜனங்கள் எதிர்பார்த்திருந்த எல்லாவற்றையும் நிறைவேற்ற ஒரு தனிப்பட்ட முறையிலான மேசியா வருவார் என்று எதிர்பார்த்தார்கள். (மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் தங்கள் யூத மத தேசத்தைத்தான் குறிப்பிடுகின்றன என்று கற்றுத் தேர்ந்த யூத போதகர்களும், ரபிமார்களும் இன்றும் அர்த்தப்படுத்துகிறார்கள். தனிப்பட்ட உலக இரட்சகரை குறிப்பதாக அவர்கள் கருதவில்லை. கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்த தீர்க்கதரிசனங்களும் கூட, தாங்கள் அனுபவித்தவைகளைக் குறிப்பதாக கருதுகிறார்கள்) இந்த கருத்தை மனதில் கொண்டு அவர்கள் உலகம் முழுவதும் பிரசங்கிமார்களை அனுப்பியதுடன் தனிப்பட்ட மேசியா இல்லாமல் உலகத்தை



மோசேயின் பிரமாணங்களை கைக்கொள்ளச் செய்து அதன்மூலம் "பூமியிலுள்ள சகல ஜாதிகளையும்" ஆசீர்வதிக்கும்படி செய்ய எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். அவர்கள் இப்படியாக காணப்பட்டதால் நம்முடைய ஆண்டவர் பின்வருமாறு கூறினார். "ஒரு வேளை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்."

பேர் கிறிஸ்தவ தேசங்களுக்கு இந்த கருத்து எவ்வளவு சரியாக இன்றைக்கு பொருந்துகிறது. ஆண்டவர் திரும்பி வருவேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். ஆண்டவருடைய வருகையினால் ஆயிரம் வருட யுகம் அல்லது இளைப்பாறுத-ன் காலங்கள் வரும் என்று அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் கூறின கூற்றினால் சாதாரண ஜனங்களின் கவனம் ஈர்க்கப்படும் போது *(அப். 3:19-21)* அவருடைய முதலாவது வருகையின் போது செய்தபடியே இதே மாதிரியான ஜனங்கள் இப்போது சத்தியத்தை ஏற்றுக் கொள்ளவும், அதில் களி கூறவும் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு வருடங்களுக்கு முன்பு இருந்தது போலவே பிரதான ஆசாரியர்களும், ஜனங்களின் அதிகாரிகளும், அதைக்காட்டிலும் அதிக வித்தியாசமான கருத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆண்டவராகிய இயேசு தனிப்பட்ட முறையில் வராமல், தங்களுடைய முயற்சியால் மற்றும் பிரசங்கத்தால் ஆயிர வருட அரசாட்சியின் போது, வரும் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதமும், பூமியில் சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாக்கப்பட முடியும் என்று கூறுகிறார்கள். இதனிமித்தம் வரப்போகிற இராஜ்யம் மற்றும் இரண்டாவது வருகையைக் குறித்த வாக்குத்தத்தங்களை ஒன்றுமில்லாததாக ஆக்குகிறார்கள்.

கிறிஸ்தவ தேசங்களில் உள்ள தற்கால பிரதான ஆசாரியர்கள், அதிகாரிகள், குருக்கள், ஜனங்களை ஏமாற்றுவதுடன் தங்களையும் ஏமாற்றிக் கொண்டு, நம்புவது போல் சொல்-க் கொள்ளுவது என்னவென்றால், அவர்களுடைய ஊழிய முயற்சிகள் வெற்றி பெறும் தருவாயில் உள்ளது. மேலும் ஆண்டவர் இல்லாமல், வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஆயிர வருட யுக ஆசீர்வாதங்களை உலகத்திற்கு அறிமுகம் செய்யும்படியாக இருக்கிறோம் என்பதாகும்.

இந்த வஞ்சக நிலைக்கு காரணம் அறிவு விருத்தியடைந்ததும் பூமியில் அங்கும் இங்குமாக ஓடி பிரயாணம் செய்ய முடிவதும் தான் என்று கூறலாம். “அவருடைய ஆயத்த நாளுக்கென்று” இது நடக்கும் போது, நாகரீகம் அடைந்த நாடுகளின் வர்த்தகம் விரிவடைவற்கு இது ஏதுவாக உள்ளது. இதனால் உலகத்தில் சுபீட்சம் பெருகி வருகிறது. இது எல்லாம் தன்னால் தான் வந்தது என்று பாபிலோன் பெருமை அடைகிறது. கிறிஸ்தவர்களாக மாற்றுவதினாலும் அதன் மூலம் வந்த சக்தியினாலும்தான் இந்த பலன்கள் கிடைத்தன என்று அவைகள் சுட்டிக்காட்டுகின்றன. அவளுடைய கிறிஸ்தவ கோட்பாடுகளினால் தான் கிறிஸ்தவ தேசமாகிய இங்கிலாந்துக்கு ஐசுவரியமும், சுபிட்சமும் கிடைத்தது என்று பெருமையாக சுட்டிக்காட்டுகிறது. ஆனால் உண்மை என்ன? எந்த தேசமானாலும் சரி, பாபிலோனின் அடிமைத்தனத்தை உதறித்தள்ள எடுத்த முயற்சிகளின் அளவின்படிதான் ஒவ்வொரு முன்னேற்றமும் அமைந்தது. மகா பிரிட்டன் எந்த அளவிற்கு போப்பின் அடக்கு முறையை உதறித்தள்ளியதோ, அந்த அளவிற்கு அது முன்னேறியது. அதே நேரத்தில் எந்த அளவிற்கு போப்பின் உபதேசத்தில் தேசமும் இணைந்து இராஜாக்கள், ஆசாரியர்கள், தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்கிற காரியத்தை ஏற்றுக் கொண்டு பேராசை, சுயநலம் போன்றவைகளுக்கு பணிந்ததோ, அந்த அளவிற்கு இன்னமும் தாழ்ச்சியடைந்துள்ளது.

கிறிஸ்தவ தேசம் என்று கூறிக் கொள்கிற, ஆங்கிலேய ஜெர்மானிய நாடுகளின் மதுபானங்கள் மற்றும் போதைப் பொருட்களுக்கும், அமெரிக்க தேசத்தின் மதுபானம் மற்றும் புகையிலைக்கும், தேவனை அறியாத புறஜாதியினரின் துறைமுகங்கள் வணிகத்திற்கென்றும் பொன்னாசை, அதிகார மோகம் என்பவற்றிற்காகவும் திறந்து விடப்பட்டன. தேவ அன்பு மற்றும் புற ஜாதி தேசங்களுக்கு கிடைத்த ஆசீர்வாதங்களுக்கு இந்த முயற்சியில் சம்பந்தம் கிடையாது. இது சரித்திரத்தின் ஒரு சிறிய பகுதிதான். ஆனால் கிறிஸ்தவ தேசங்களுக்கு மனசாட்சி என்று ஒன்று இருந்தால் நிச்சயமாகவே அது திடுக்கிடச் செய்யும். நைஜீர் (Niger) என்கிற சுவிசேஷ ஸ்தாபனத்தை சேர்ந்த பிஷப் குரோதர் (Bishop, Crowther) என்பவருக்கு மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நூப் (Nupe) என்கிற இடத்தின் முகமதிய ஆட்சியாளர் கீழ்க்கண்ட செய்தியை அனுப்பினார்.



“அது ஒரு நீண்ட விஷயமல்ல. அது பராசா (Barasa) (ரம் என்கிற மதுபானம்) பராசா, பராசா, பராசா! அது எங்களுடைய தேசத்தை பாழாக்கி விட்டது; அது எங்களுடைய ஜனங்களை அதிகமாக பாழாக்கி விட்டது; அது எங்களுடைய ஜனங்களை பயித்தியக்காரர்களாக்கி விட்டது. மேலன் கிப் (Malan Kip) அவர்களே, உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த செய்தியை மறந்து விடாதிருங்கள். ஏனெனில் எங்களுடைய தேசத்திற்குள் அவர்கள் மதுபானத்தை கொண்டு வராதபடி தடை பண்ணும்படி பெரிய போதகர்களை (The Committee of the Angliean Church Mission Society) மற்றும் பிரிட்டிஷ் இராணியை (ஆங்கிலேய சபைக்கு தலைமையிருப்பவர்) கெஞ்சுகிறோம்.

“கடவுளினிமித்தம் தீர்க்கதரிசியினிமித்தம் இதைச் செய்யுங்கள்! கடவுள், தீர்க்கதரிசி மற்றும் அவருடைய தூதர்களினிமித்தம் இந்த மதுபான விஷயத்தில் அவர் எங்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவரிடத்தில் கூறுங்கள் : தேவன் அவரது வேலையை ஆசீர்வதிப்பராக. இது நூப்பின் ராஜாவாகிய மா-க்கே என்பவரிடத்தி-ருந்து வரும் செய்தியாகும்.”

இதைக்குறித்து பேப்டிஸ்ட் சபையின் பத்திரிகை இப்படியாகக் கூறுகிறது: “கிறிஸ்தவ பேரரசர்களும், அரசாங்கங்களும் கவலைப்படாத விஷயத்தைக் குறித்து, இந்த சாதாரண கறுப்பு இன ஆட்சியாளர் தன்னுடைய ஜனங்கள் மேல் உள்ள அவருடைய கரிசனையை தனது கடிதத்தில் காண்பிக்கிறார். தங்களுடைய ஜனங்களின் நலனைக் குறித்து எந்த ஐரோப்பிய ஆட்சியாளரோ அல்லது அமெரிக்க தேசத்தின் ஜனாதிபதியோ இதுபோல் வேண்டுகோள் விடுத்ததில்லை. பாராளுமன்றம் திறக்கும் வேளையிலும் ஜனாதிபதி உரையாற்றும் வேளையிலும் கூட இப்படிப்பட்ட ஒரு வேண்டுகோள் விடுக்கப்படவில்லை. நம்முடைய கிறிஸ்தவ ஆட்சியாளர்களுக்கு வெட்கம்! லாபம், தங்கத்தின் மேல் தீராத ஆசை இவைகள் தான் அரசாங்க ஆட்சியாளர்களின் பொக்கிஷமாக இருக்கிறது.”

அப்படியென்றால், சத்தியத்தின் பெயரால் நாங்கள் கேட்கிறோம், இவர்களை ஏன் கிறிஸ்தவ அரசாங்கங்கள் என்று அழைக்கின்றோம்? இதற்கு அமெரிக்க தேசத்தின் அரசாங்கமும் விதிவிலக்கல்ல. அநேகர் அதை கிறிஸ்தவ அரசாங்கம் என்றுதான் அழைக்கிறார்கள். வைராக்கியமுள்ள மக்கள் சபை பிரிவுகளில் இருப்பவர்கள், அப்படியாகத்தான் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினாலும் அதற்கு அந்த கணிப்பு தேவையில்லாதது. போஸ்டனி (Bostan)-ருந்து அதிக அளவு மதுபானம், அரசாங்க அனுமதியுடன் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது. அதே நேரத்தில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தயார்பண்ணி தன்னுடைய மக்களுக்கே கொடுக்கும்படியாக, அதிக தீமை விளைவிக்கக்கூடிய, ஆனால் சரிப்படுத்தப்பட்ட என்று அழைக்கப்படுகிற மோசமான விஷக்கலவையை வழங்குமாறு அனுமதி கொடுத்துள்ளது. இவைகள் எல்லாம் வருமானத்தை பெருக்க வேண்டும் என்கிற நோக்கத்திற்காகத்தான் கிறிஸ்தவ தேச ராஜதந்திரிகள் என்று அழைக்கப்படக்கூடியவர்கள் மற்றும் கிறிஸ்தவ தேசங்கள் இவைகளை நியாயப்படுத்துவதுடன் ஆமோதிக்கவும் செய்கிறது. அரசாங்க செலவினங்களுக்காக தேவைப்படும் பணத்தின் ஒரு பங்கை ஜனங்களிடம் இருந்து சேகரிப்பதற்கு இது எளிதான வழியாக இருக்கிறது. இது கீழ்த்தரமான விபச்சாரத்திற்கு ஒத்து இருக்கிறது. தற்போது உள்ள நல்ல அரசாங்கங்களுக்குக்கூட கிறிஸ்தவன் என்கிற பெயர் பொருத்தம் அற்றதாக இருக்கிறது என்பதை, சிந்திக்கக் கூடிய ஒவ்வொரு மனிதனும் ஏற்றுக் கொள்வான். தற்போதுள்ள "உலக அரசாங்கங்கள்," கிறிஸ்துவின் இராஜ்யம் என்று தவறாக எண்ணுவதற்கு உண்மையான கிறிஸ்தவ இருதயங்களில், "இந்த உலகத்தின் அதிபதியான" சாத்தான், "உலகத்தின் ஆவியை" திணித்து, முயற்சிக்கிறான்.

Contemporary Review-ல் கேனான் ஃபெர்ரர் (Cannon Farrar) இப்படியாகக் கூறுகிறார்:

"அடிமை வியாபாரத்தில் இருந்த பழைய வேகம், இப்பொழுது அதிக பேராசைக்காரனான மதுபான விற்பனையாளரால் பின்பற்றப்படுகிறது. நம்முடைய பிதாக்கள் ஆப்பிரிக்காவின் கழுத்தி-ருந்த அடிமைத்தன நுகத்தை உடைத்தெறிந்தார்கள். ஆனால் நாம் அங்குள்ள பழங்குடியினரை தேள்கள் போன்ற அடிமைத் தனத்திற்கு உட்படுத்தியிருக்கிறோம். ஆப்பிரிக்கா தேசங்களின் ஆறுகளை வியாபாரத்திற்கென திறந்து அதில் மதுபான வெறியை ஊற்றிக் கொண்டு இருக்கிறோம். இதைக்காட்டிலும் எரிமலையின் ஆறு கூட அதிக சிகப்பாக அல்லது சபிக்கப்பட்டதாக இருக்காது. தேசங்களின் மனசாட்சி செத்துவிட்டதா?"



நாம், இல்லை என்று பதில் கூறுகிறோம். தேசம் ஒரு போதும் கிறிஸ்தவ தேசமாக இருந்ததில்லை. ஆகவே ஒரு போதும் கிறிஸ்தவ மனசாட்சியோ, கிறிஸ்தவ ஆவியோ இருந்ததில்லை. நாம் சொல்லக் கூடியதெல்லாம், அர்ப்பணம் செய்து கொண்ட தேவனுடைய உண்மையான பிள்ளைகளின் வெளிச்சம் பிரகாசித்து, அந்த தேசங்களில் பொதுமக்களின் உணர்வுகளை சரியாக வழி நடத்தி, மாறுதலை உண்டு பண்ணியுள்ளது. இவர்கள் பிரகாசிக்கிற வெளிச்சமாக இருக்கிறார்கள் என்பதாகும்.

இதே மாதிரி, ஒரு மோசமான நிர்ப்பந்த நிலை, சீனாவின் மேலும் ஜப்பான் மேலும், அவர்களுடைய எதிர்ப்பையும் மீறி, இப்படியான கிறிஸ்தவ அரசாங்கங்களால் திணிக்கப்பட்டது. 1840ம் ஆண்டு பிரிட்டன் சீனாவுடன் மதுபான யுத்தத்தை தொடங்கிற்று. சீன அரசாங்கம், தன்னுடைய மக்களை இந்த கொடூரமான தீமையி-ருந்து காக்கும்படி முயற்சித்தபோது அதை பணிய வைக்கும்படி இந்த யுத்தம் தொடங்கப்பட்டது. இந்த யுத்தம் பிசாசுக்கு ஆதரவாக முடிவுற்றது. பிரிட்டன் யுத்த கப்பல்கள் ஆயிரக்கணக்கான உயிர்களையும், வீடுகளையும் ப-யாக்கினது; தேவனை அறியாத புறஜாதி சீன சாம்ராஜ்யம், சீன தேசத்தை மயக்க நிலைக்குட்படுத்தும், மெள்ள மெள்ள மரணத்தை உண்டு பண்ணும் மதுபானம், தேசத்திற்குள் வரும்படி பலவந்தமாக வாசல் திறக்கப்பட்டது. 1872ம் ஆண்டு இதனால் வந்த வருமானம் செலவினங்கள் போக 37,000,000 அமெரிக்க டாலர் என்று கணக்கிடப்பட்டது. இந்த பணம் சீன மக்களின் தற்கால அல்லது எதிர்கால நலனுக்காக ஏற்பட்டதல்ல. நீதியை நேசிக்கும் ஜனங்களின் மனசாட்சியை திருப்திபடுத்துவதற்காக, கிறிஸ்தவ இறை ஊழியர்களுக்கு பாதுகாப்பு என்கிற ஒரு ஷரத்து ஒப்பந்தத்தில் ஒரு

ஏமாற்று வித்தையாகும். இந்த மகா பெரிய குற்றம், இரக்கம் மற்றும் அன்பின் செயல் என்று விளங்கும்படி மறைமுகமாக செய்யப்பட்டது. யுத்தம் முடிந்தவுடன் உடன்படிக்கையின்படி சில துறைமுகங்கள் ஆங்கிலேயர்களின் வியாபாரத்திற்காக இலவசமாக கொடுக்கப்பட்டன. மற்ற தேசங்களோடும் இதே மாதிரியான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இதனால் சில நன்மைகள் வந்தன. இதில் ஒன்று சீன தேசம் நாகரீகத்துக்கு வழி திறக்கப்பட்டது தான். ஆனால் நீதியை கற்றுக் கொடுக்கும்படி முன் வந்த சில கிறிஸ்தவ மனிதர்கள் மற்றும் பெண்களின் செயல் ஆங்கிலேய தேசத்தினிமித்தம் ஏற்பட்டது என்று கூற முடியாது. ஏனெனில் அவர்களுடைய நோக்கம் எல்லாம் வியாபாரம் தான். அவர்களுடைய தங்கத்தின் மேல் இருந்த மோகம் தான். சீன மக்களின் நலனுக்காகவோ அல்லது தேவனுடைய மகிமைக்காகவோ அல்ல. பிசாசின் திறமையில் அதிக பயிற்சி இல்லாதிருந்த ஜனங்கள் மேல் பரிசுத்தமற்ற, நீதியற்ற யுத்தம் திணிக்கப்பட்டது.

மற்ற எல்லா தீமைகளோடும் கிறிஸ்தவம் பிற தேசங்களுக்கு மிக மோசமான விக்கிரக ஆராதனையை அதாவது சுயத்தை ஆராதிப்பது, பணத்தையும் அதிகாரத்தையும் ஆராதிப்பது போன்றவைகளை போதித்தது. இதைச் செய்வதற்கு தங்களை கிறிஸ்தவ நாடுகள் என்று அழைத்துக் கொள்ளும் தேசங்கள் கூட ஒன்றையொன்று காயப்படுத்தவும், ஏமாற்றவும், கொல்லவும் கூட விருப்பம் உள்ளவைகளாக இருக்கின்றன. அதுமாத்திரமல்ல, எல்லா தேசத்திலும் தேவ தூஷணத்தையும் அருவருப்பையும் கற்றுக் கொடுத்திருக்கிறது. எப்படியெனில் கிறிஸ்தவ தேசம் என்று அழைத்துக் கொள்ளுகின்ற தேசத்தின் ஒவ்வொரு கப்பல் மாலுமியும் கிறிஸ்துவின் நாமத்தை தூஷிக்கிறான். இப்படிப்பட்ட கிறிஸ்தவ தேசங்கள் இவ்வாறு நடந்து கொண்டாலும், இவர்கள் மத்தியில் இருந்து சில உண்மையான தேவனுடைய ஊழியக்காரர்களும் புறப்பட்டு சென்று இருக்கிறார்கள். அதே வேளையில் சில குறைவான நோக்கமுள்ள, மனிதர்களின் ஊழியக்காரர்களும் புறப்பட்டு சென்றிருக்கிறார்கள். அவர்களில் கொஞ்ச பேரின்



நோக்கம் புறஜாதிகளிடம் இயேசுவைப் பற்றியும் உண்மையான நாகரீகத்தைப் பற்றியும் கூறுவதுதான்.

பெரும்பாலானவர்கள் உண்மையான வாஞ்சையுள்ள இறையாட்கள் அல்ல, இறையியல் ஸ்தாபனங்களில் உள்ள பொதுவான உத்தியோகஸ்தர்கள், வெளி நாட்டைப் பற்றி எந்தவித கருத்தும் இல்லாதவர்கள், அநேக தடவைகளில் பார்க்கும் போது ஆர்வம் காட்டாதவர்கள். இப்படிப்பட்டவர்களுக்கு எண்ணமெல்லாம் பெருமளவில் சேகரிக்கப்படும் மற்றும் செலவிடப்படும் பணத்தைப் பற்றியது தான். அவர்கள் நினைப்பதெல்லாம் புற ஜாதியார் அனைவரும் மனமாற்றம் அடைந்து விடுவார்கள், அவர்களுடைய முயற்சிகள் அனைத்தும் ஆண்டவருடைய வருகை இல்லாமலே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆயிரவருட ஆசீர்வாதங்களில் முடிவடையும் என்பது தான். முன்னணியில் உள்ள ஊழியர்கள் பொதுவாக ஏமாற்றத்தைத்தான் அடைந்துள்ளனர். அப்படி இல்லாவிடினும் சில வேளைகளில் அவர்களுடைய உண்மையான அனுபவத்தின்படி நல்ல தீர்க்கமான யோசனைக்குப் பின்னர் அவர்களால் நம்பிக்கை ஏற்படும் நிலைமை உருவாகிறது. Rev. J.C.R. Ewing D.D. என்பவர் இந்தியாவில் இறை ஊழியத்தில் 9 வருடங்கள் கழித்தவர். சமீபத்தில் பீட்ஸ்பர்க் என்ற இடத்தில் உள்ள Y.M.C.A கூட்டத்தின் போது, அவர் பின்வருமாறு கூறினார்: தற்கால நாகரீகம் மற்றும் இறை ஊழியத்தினால் ஏற்படும் விளைவு, புறஜாதியினரின் மதங்களை உடைப்பது மாத்திரமல்லாது, எல்லா மத நம்பிக்கையையும் உடைத்து, மக்களை நாத்திகர்களாக ஆக்குவதாக இருக்கிறது. அவருடைய திட நம்பிக்கை என்னவென்றால் நாத்திகத்தில் இருந்து கிறிஸ்தவத்திற்கு மாற்றுவது. இது நியாயமற்ற நம்பிக்கை, ஏனெனில் நாகரீகம் அடைந்த தேசங்களில் ஏற்பட்ட அனுபவங்கள் இதற்கு ஆதாரமாக உள்ளது. அவர் பிரசங்கம் பத்திரிகைகளில் வெளியானது பின்வருமாறு :

“இந்தியா, கிறிஸ்துவத்தினால் நேரடியாகவும், மறைமுகமாகவும், ஏற்பட்ட நன்மைகளுக்கு பாத்திரமாயிருக்கிறது.

அது பழைய செல்வ செழிப்பான கடவுள்கள் போன்ற பொருள்கள் மேல் மோகம் கொள்வது என்கிற நிலையை உடைத்தெறிந்திருக்கிறது. அதற்கு பதிலாக, மேற்கத்திய தேசத்தில் உள்ளவர்கள் வழிபடுவது போல ஒரே ஒரு உன்னத தேவன் உண்டு என்கிற கருத்தை உண்டு பண்ணி இருக்கிறது.

"அந்த தேசத்தில் உள்ள 263,000,000 ஜனங்களில் 10,000,000 இளைஞர்கள் ஆங்கில மொழி பேசுகிறார்கள். நமக்கு சொல்-க் கொடுக்கப்பட்ட மேற்கத்திய கருத்துக்கள் அவர்களுக்கு சொல்-க் கொடுக்கப்படுகின்றன. இந்த தேசத்தில் உயர்ந்த ஜாதியினர் அடிப்படையான கல்வியில், இலக்கியத்தில், விஞ்ஞானத்தில், மதத்தில் நன்று கற்று இருக்கிறார்கள். பழிவாங்குகிற கடவுள் உண்டு, அந்த கடவுளைத் திருப்திப்படுத்த அதிகமாக வெகுமதிகள் அளிக்கப்பட வேண்டும், அதிகமான ஜெபங்கள் ஏறெடுக்கப்பட வேண்டும், என்கிற பழைய கருத்து புதிய நாத்திகத்திற்கு இப்பொழுது வழி வகுத்துள்ளது. கிழக்கத்திய பிரதேசத்தில் உள்ள கற்று அறிந்த மனிதர்கள் இப்பொழுது அவர்களுடைய தகப்பனின் கடவுளிடத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. அவைகளை அவர்கள் கைவிட்டுவிட்டு அதற்குப் பதிலாக இங்கர்சால் (Colonel Robert G. Ingersoll of Paine & of Voltaire, of Bradlaugh) மற்றும் எல்லா நாத்திக முறைகளை கற்றுத் தருபவர்களிடம் நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நிலையற்ற நிலைமை மாறி, மேற்கத்திய நாடுகள் இந்தியா தேசத்திற்கு தனது கருத்துக்களைக் கொடுத்தது போன்று கிறிஸ்தவ கடவுளின் மதத்தையும் கொடுக்கும்.

"இந்திய தேசத்து இளைஞர்கள் நன்றாக கற்று உள்ளவர்கள், தீர்க்கமாக கண்ணோக்குகிறவர்கள், தங்களுடைய தேச காரியங்களை மாத்திரம் அல்ல மற்ற தேசத்து காரியங்களையும் அறிந்து வைத்து இருக்கிறார்கள். மேலும் விநோதமாக காணப்பட்டாலும், நம்முடைய வேதாகமத்தை நன்கு அறிந்துள்ளார்கள். அதற்கு எதிராக கூறப்படும் விஷயங்களுக்கு கிறிஸ்தவ வேதத்தை நன்கு அறிந்து வைத்திருப்பவர் மாத்திரமே வெற்றிகரமாக பதில் கூற இயலும் என்கிற அளவுக்கு, அவ்வளவாக அவர்கள் வேதாகமத்தை அறிந்து வைத்திருக்கிறார்கள். ஒரு கிறிஸ்தவ ஊழியர் மரத்தின் நிழ-ன் கீழ் உட்கார்ந்து கொண்டு, நிர்வாணமான காட்டு மிராண்டிகளுக்கு கற்றுக் கொடுக்கிறார் என்பது வெறும் மாயையே. இந்தியாவிலே கிறிஸ்தவ ஊழியர் நன்கு கற்றுத் தேர்ந்த புத்திசா-த்தன மாணவர்களை சந்திக்கிறார். அவர்களை தன் வசப்படுத்துவதற்கு, அவர் மிகவும் திறமை உள்ளவராக இருக்க வேண்டும். அதோடு கூட அவர்கள் புத்திசா-களாக இருப்பது மாத்திரமல்ல, அருமையான தோற்றம் உடையவர்கள், இணக்கம் காட்டுகிறவர்கள், அன்புடன் பழகுபவர்கள், மென்மையான சுபாவம் கொண்டவர்களாக இருப்பது மாத்திரமன்றி, எல்லா பிற தேசத்தவர்களையும் அதிகமான மரியாதையுடன் கவனிப்பவர்களாக இருக்கிறார்கள்."



அவர் உறுதியாக கூறும் உண்மைகள், நிச்சயமாகவே நியாயமானவைகள். சபை பிரிவுகளைக் குறித்த அவலட்சணமான விவாதம் அவர்களிடத்தில் உள்ள உண்மையை திரித்து கூறவும், தரக்குறைவாகவும் செய்கிறது என்பது அனுபவத்தில் கண்டு கொள்ளப்பட்டதாகும். இது அவர்களை ஒன்று நேர்மையானவர்களாக்கும் அல்லது எதிர்மறையுள்ளவர்களாக்கும். அஞ்ஞான மார்க்கத்தில் உள்ள 10,000 லட்சம் ஜனங்கள், 4000 லட்சம் கிறிஸ்தவ ஜனங்களின் நிலைமைக்கு மாற்றப்பட்டால், யூத யுகத்தில் இருந்தது போல் (மத். 23:15) கேள்வி வெளியரங்கமானதாக இருக்கும். அதாவது, ஆரம்ப காலத்தில் அஞ்ஞான மார்க்கத்தில், மூட நம்பிக்கையில் இருந்தவர்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமானோர் அழிவுக்கு பாத்திரராக இருக்க மாட்டார்களா என்பது தான். "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போன்று பூலோகத்திலும் செய்யப்படுவதாக" (லூக். 11:2) என்று நம்முடைய ஆண்டவரால் கூறப்பட்டபடியும், ஆயிர வருட ஆட்சியில் சமாதானமும், சந்தோஷமும் உண்டாகும் என்று தீர்க்கதரிசிகள் முன்பு அறிவித்தபடியும் உள்ள நிலைக்கு பேர் கிறிஸ்தவராக மாற்றப்பட்டவர்கள் வருவார்கள் என்று எந்த சுய நினைவில் உள்ள மனிதனும் கூற இயலாது.

கிறிஸ்துவின் சபையில் உள்ள இந்த திரளான ஜனங்கள், 4000

லட்சம் பேர் தங்களை அவருடைய இராஜ்யத்தினர் என்று அழைத்துக் கொள்ளுபவர்கள், ஆண்டவரால் புறக்கணிக்கப்பட்டவர்கள். மேலும் அவரால் சரியாக பாபிலோன் (குழப்பம், தாறுமாறு) என்று அழைக்கப்படுவது ஆச்சரியத்தை உண்டு பண்ண முடியாது. கிறிஸ்துவின் இராஜ்யத்தைக் குறித்த அவர்களுடைய கருத்துக்கள் அதன் விளைவாக உலகம் முழுவதும் பரவி இருக்கும் விதம், மேலும் இவர்கள் உண்மையான இராஜ்யத்திற்கு ஆயத்தம் இல்லாமல் இருப்பது, இதே காரணத்திற்காக நிஜமான ஆட்சியாளர்கள் முதலாவது வருகையின் போது புதிய இராஜாவை வரவேற்க விருப்பமில்லாதிருந்தது போன்று இவர்கள் இருப்பது ஆச்சரியமல்லவே. அந்த பேரரசர்கள், இராஜாக்கள், இராஜ குமாரர்கள், இப்பொழுது தங்களுடைய ஆதிக்கத்தையும், செல்வாக்கையும், தங்களுடைய ஆடம்பரத்திற்காக உபயோகிப்பவர்கள், தங்களுடைய ஆளுகையில் நிலைத்து இருக்கும்படி சர்வாதிகார கேளிக்கைகளில் தொடர்ச்சியாக இருக்க, தங்களின் பாதுகாப்புக்கென்று லட்சக்கணக்கான ஆயுதம் தரித்த மனிதர்களை பராமரிப்பவர்கள், கடந்த காலத்தில் நடந்தது போன்றே லட்சக்கணக்கானோர் மடிவதையும், இன்னும் லட்சக்கணக்கானோரை விதவைகளாக, அனாதைகளாக ஆக்கத்தான் பார்ப்பார்களே ஒழிய தங்களுக்கு இப்பொழுது இருக்கும் அனுகூலங்களை விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள இராஜ்யத்தை வாஞ்சிக்க, எதிர்பார்க்க அல்லது நம்ப இவர்கள் முற்படமாட்டார்கள் என்பது ஆச்சரியமான விஷயம் அல்லவே. இந்த இராஜ்யத்தின் உயர்வில் இருப்பவர்கள், பெருமை உள்ளவர்கள் தாழ்த்தப்படவும், தாழ்த்தப்பட்டவர்கள் பொதுவான சரியான, குறிக்கப்பட்ட இடத்திற்கு உயர்த்தப்படுவார்கள் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. இப்படிப்பட்டவர்கள் அதிக அளவு ஆதிக்கம் செலுத்துபவர்கள், நீதியின் இராஜ்யத்தின் நம்பிக்கை வைக்க தாமதம் செய்பவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது. ஏனெனில் அதில் அநீதியும், ஆக்கிரமிப்பும் அனுமதிக்கப்படுவதில்லை. விசேஷமாக இவர்கள், இராஜ்யமானது



வாசலருகே வந்திருந்தாலும் நம்புவதில் மெத்தனமாகத் தான் இருப்பார்கள் என்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

மாம்சீக வீட்டில் இருந்த யூத போதகர்கள், அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் அவரை நிராகரித்தது போன்று பிரதான ஆசாரியர்கள், கிறிஸ்தவத்தில் உள்ள ஆட்சியாளர்கள், தன்னுடைய சபை பிரிவில் இருந்து லாபம் அடைய எதிர்பார்ப்பவர்கள் (ஏசா. *56:11*), அறிந்து கொள்ள இயலாமல், இப்பொழுது பிசன்னமாகி இருக்கும் ஆவிக்குரிய இராஜாவை நிராகரித்து விடுகிறார்கள். ஆண்டவரும் ஒ-வ மரத்தின் அநேக சுபாவக் கிளைகளை நிராகரித்து, வெட்டி அனுகூலத்தி-ருந்து நீக்கி, உபத்திரவம் என்கிற அக்கினிக்குள் தள்ளினார். அவர் உண்மையான கிளைகளான இஸ்ரயேலர்களை மாத்திரம் பாதுகாத்தார். அதே போன்று இந்த யுகத்தின் போதும், அதே ஞானமுள்ள சோதனைகளும் "காட்டு ஒ-வமர கிளைகளுக்கும் உண்டு." (ரோம. *11:21,22*) அப்படியே அது அனுகூலத்தி-ருந்தும், செழிப்பான வேரி-ருந்தும் (ஆபிரகாமுக்குரிய வாக்குத்தத்தம்) வெட்டப்படுகிறது. மேலும் இந்த பெயரளவில் உள்ள கிளைகளின் குணாதிசயங்கள், நோக்கங்கள், செயல்பாடுகள் எல்லாம் வித்தியாசமாக இருப்பது போல், வேரில் அடையாளமாக குறிக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தில் இருந்தும், தேவனுடைய திட்டத்தி-ருந்தும் வித்தியாசமாக இருக்கிறது.

யூத யுக அறுப்பின் போதும், பெயரளவில் உள்ள ஜனங்களிடம் இருந்து உண்மையான இஸ்ரயேலர்கள் பிரித்தெடுக்கப்பட்டது போன்று, தற்போதைய அறுப்பின் போது உண்மையான கிறிஸ்தவர்களை, பேர் கிறிஸ்தவர்களிடத்தில் இருந்து பிரிப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை. பாபிலோனைப் போன்று பெருந்திரளான ஜனங்களும் நிராகரிக்கப்படுவார்கள் என்று தேவனுடைய வார்த்தையில் ஒரு வெளிப்பாடு இல்லாதிருந்தாலும் கூட, அதைத்தான் நாம் சாதாரணமாக எதிர்பார்த்திருக்கக்கூடும். (ரோம. *11:20-22* ஐ, வெளி. *3:16; 18:4* உடன் ஒப்பிட்டுப்பார்க்கவும்)

பாபிலோன் (கிறிஸ்தவ உலகம்) *1878*ல் நிராகரிக்கப்பட்டது. வெறும் பேர் கிறிஸ்தவர்களை நிராகரித்து அவர்களை "சேனை" என்று

தானியேல் அழைக்கிறார். பரிசுத்த ஸ்தலத்தினர் அல்லது ஆசாரிய வகுப்பினரிடம் இருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்காக பரிசுத்த ஸ்தலத்தில் உள்ளவர்கள் கைவிடப்படுவதும் இல்லை, பாழாக்கப்படுவதும் இல்லை. ஆண்டவருக்கு ஸ்தோத்திரம், பரிசுத்த ஸ்தலம் மகிமைப்பட இருக்கிறது. தேவனுடைய மகிமை ஆலயத்தை நிரப்ப உள்ளது. அதன் கடைசி ஜீவனுள்ள கல் மெருகேற்றப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் இடத்தில் வைக்கப்படும் போது அது நடக்கும். *(1 பேது. 2:5,6)* யுகம் முழுவதும் எப்படி இவ்விதமான ஒரு பரிசுத்த ஸ்தல வகுப்பினர் நிலைத்திருந்தார்கள், அது எப்படி அசுசிப்படுத்தப்பட்டது, அதன் விலையேறப்பெற்ற உபதேசங்கள் தூஷிக்கப்பட்டன, படிப்படியாக தவறுகளில் இருந்து எப்படி சுத்திகரிக்கப்பட்டது என்பதையும் நாம் பார்த்தோம். பேர் சபையானது ஓர் அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு, உபயோகப்படுத்தப்பட்டது என்பதையும் பார்க்கும் போது இந்த சபைதான் உண்மையான சபையாக தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. பேர் சபைகளின் முறைமைகளை நிராகரித்த பின்னர், யூத அறுப்பின் போது இருந்தது போலவே உண்மையான சபை அல்லது பரிசுத்த ஸ்தல வகுப்பினர் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டு தேவனுடைய வார்த்தையை சொல்லுபவர்களாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறார்கள். மாம்சமான இஸ்ரயே-ல் பிரதான ஆசாரியனாக இருந்த காய்பா என்பவன் ஒரு பெரிய பாடத்தை அளிக்கும்படியாகவும், தீர்க்கதரிசனத்தைக் கூறவும், அந்த ஒழுங்கு முறை நிராகரிக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பாக தேவனுடைய பிரதிநிதியாக உபயோகப்படுத்தப்பட்டான். *(யோவா. 11: 50, 51, 55; 18:14)* ஆனால், அந்த சபை - தேசத்தை, அதன் ஆட்சியாளர்களை, அதன் பிரதிநிதிகளை, எப்பொழுதாவது அது தள்ளிவிடப்பட்ட காலத்திற்கு பின்னால் அங்கீகரித்தார் அல்லது உபயோகித்தார் என்பது குறித்து நமக்கு எந்த அறிவிப்பும் வேதாகமத்தில் இல்லை. இதே பாடத்தைத்தான் பாபிலோனைப் பொறுத்த வரையில் நாம் அறிந்து கொள்ளவேண்டும். அவள் ஆண்டவரின் வாயில் இருந்து வாந்தி பண்ணி போடப்படுகிறாள். மேலும் மணவாளனின் அல்லது மணவாட்டியின் சத்தம் இனிமேல் அவளிடத்தில் என்றென்றைக்கும் கேட்கப்படுவதில்லை. *வெளி. 18:23*



பாபிலோனில் அவர்களுக்காக ஒரு வேண்டுகோள் விடுக்க முயற்சிப்பது வீண். தீர்க்கதரிசனத்தை பொதுவாக சரியானது என்று ஏற்றுக்கொள்ளும் போது, அவர்களுடைய பிரிவு அல்லது அவர்களுடைய குறிப்பிட்ட சபை கூட்டம் இதற்கு விதிவிலக்கானது என்று ஆண்டவர் அவர்களை அதி-ருந்து வருமாறு தனிப்பட்ட விதத்திலும் பொதுவாகவும் அழைக்க முடியாது. ஏனெனில் ஏற்கெனவே அவர்கள் அதில் சேர்ந்து விட்டார்கள்.

இப்படிப்பட்டவர்கள், நாம் பிரித்தெடுக்கப்படும் அறுப்பின் வேளையில் இருக்கிறோம் என்பதை கவனிக்க வேண்டும். மேலும் நம்முடைய ஆண்டவர், "அவளுடைய பாவங்களுக்கு உடன்படாதீர்கள்" என்று சொல்லுவதையும், நம்மை பாபிலோனை விட்டு வெளியே வா என்று சொல்லுவதின் காரணத்தையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பாபிலோன் ஏன் அவ்வாறாக அழைக்கப்படுகிறது என்று மறுபடியும் யோசித்துப் பாருங்கள். அவளுடைய உபதேசத்தில் உள்ள தவறுகள், சில தெய்வீக சத்தியத்தோடு கலக்கப்பட்டு, பெரிய குழப்பத்தை உண்டு பண்ணுகிறது. ஏனெனில் சத்தியங்களும் தவறுகளும் ஒன்றாக சேர்க்கப்பட்டதினால் கலப்பட கூட்டங்களை ஒன்று சேர்த்தது. அவர்கள் சத்தியத்தை ப-யிட்டு, தவறை பிடித்துக் கொள்வதினால் சத்தியம் ஒன்றுமில்லாததாக ஆகிவிடுகிறது. அநேக சமயங்களில் அர்த்தமற்ற நிலையைக் காட்டிலும் மோசமானதாகிவிடுகிறது. சத்தியத்தை ப-யிட்டு, தவறை போதிக்கும் எந்த பேர் சபையாக இருந்தாலும் நிச்சயமாக குற்றமுள்ளதுதான். சத்தியத்தை அறிகிற அறிவிலும் கிருபையிலும் வளரும்படி, சத்தியத்தை ஆராய்ந்து பார்க்கும்படி உங்களுக்கு உதவி செய்யக்கூடிய சபை எங்கே இருக்கிறது? எந்த சபை அதன் உபதேசங்கள் மற்றும் அதன் பயன்பாடுகள் மூலம் நீங்கள் பெறுகிற உங்களுடைய வளர்ச்சியை தடை பண்ணாதிருக்கும்? ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து உங்களுடைய வெளிச்சம் பிரகாசிக்கும்படி செய்கிற சபை எங்கே இருக்கிறது? எங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு சபையை தெரியாது.

இந்த சபைகளில் உள்ள ஆண்டவரின் பிள்ளைகளில் யாராவது அவர்களுடைய அடிமைத்தனத்தை உணராதிருக்க காரணம், அவர்களுக்கு உள்ள சுயாதீனத்தை அவர்கள் உபயோகிக்க

முயற்சிக்காம-ருப்பது தான். ஏனெனில், அவர்கள் சுறு சுறுப்பான ஸ்தானாதிபதிகளாக, உண்மையுள்ள காவல்காரர்களாக இருக்க வேண்டிய வேளையில் அவர்கள் தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள். *(1 தெச. 5:5,6)* அவர்கள் விழித்து எழும்பி, தங்களிடத்தில் உண்டு என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிற சுயாதீனத்தை உபயோகிக்க வேண்டும். அவர்கள் தங்களோடு ஆராதிக்கிறவர்களுக்கு தங்களுடைய கொள்கைகள் தேவனுடைய திட்டத்தின்படியே இல்லை என்பதைக் காட்டட்டும். அப்படி செய்யும் போது அவர்கள் அதை விட்டு அதற்கு எதிர்மாறான திசையில் ஓடட்டும். எப்படி இயேசு கிறிஸ்து எல்லாருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார் என்பதை அவர்கள் காண்பிக்கட்டும். இந்த உண்மை ஏற்ற காலத்தில் அதி-ருந்து வழிந்து ஓடும் ஆசீர்வாதங்கள் எப்படி “ஏற்ற காலத்தில்” ஒவ்வொரு மனிதனுக்கும் சாட்சியாக அறிவிக்கப்படும் என்பதை காண்பிக்கட்டும். எப்படி “இளைப்பாறுத-ன் காலத்தின் போது” மனந்திரும்புத-ன் ஆசீர்வாதங்கள் முழு மனுக்குலத்திற்கு பாயும் என்பதைக் காண்பிக்கட்டும். மேலும், அவர்கள் சுவிசேஷ யுக சபையின் பரம அழைப்பையும், அந்த சரீரமான சபையில் அங்கத்துவம் பெறுவது எவ்வளவு கடினமானது என்பதையும் காண்பிக்கட்டும். சுவிசேஷ யுகத்தின் முக்கியமான நோக்கம், அவருடைய நாமத்திற்கு என்று இந்த விசேஷித்த ஜனங்களை தெரிந்து கொள்வது என்பதையும், அவர்கள் ஏற்ற காலத்தில் உயர்த்தப்பட்டு கிறிஸ்துவுடன் ஆளுகை செய்வார்கள் என்பதையும் காண்பிக்கட்டும். இப்படியாக பிரசங்கிக்கும்படி தங்களுக்கு உண்டான சுயாதீனத்தை உபயோகித்து நற்செய்தியை ஆலயத்தில் இன்று பிரசங்கிப்பவர்கள் ஒன்று முழு கூட்டத்தினரையும் மனமாற்றம் செய்வதில் வெற்றி பெறுவார்கள், அல்லது ஒரு எதிர்ப்பின் புயலை எழுப்புவார்கள். நிச்சயமாகவே அவர்கள் தங்களுடைய ஆலயத்துக்கு உங்களைப் புறம்பாக்குவார்கள். அவர்கள் கூட்டத்தி-ருந்து உங்களை ஒதுக்கி உங்களுக்கு எதிராக எல்லா விதமான பொல்லாப்புகளையும் பொய்யாக கிறிஸ்துவின் நிமித்தம் கூறுவார்கள். அப்படி செய்யும் போது நிச்சயமாகவே அவர்கள் ஆண்டவருடைய சேவையை செய்வதாக உணருவார்கள். ஆனால் நீங்கள் உண்மை உள்ளவர்களாக



இருந்தால் ஏசாயா *66:5;* லூக். *6:22*ல் உள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தின்படி ஆறுதல்படுத்தப்படுவீர்கள். “கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையைக் கேளுங்கள்; என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்.” “மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களை புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளி விடும் போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டு களிகூறுங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாக இருக்கும்; அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்;” ஆனால் “எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும் போது உங்களுக்கு ஐயோ, அவர்கள் பிதாக்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.”

நீங்கள் கூடி ஆராதிக்கின்ற இடத்தில் உள்ள அனைவரும் பரிசுத்தவான்களாக இருப்பார்களெனில் எல்லோரும் கோதுமையாக இருந்து அவர்கள் மத்தியில் களைகள் கிடையாது என்றால் நீங்கள் மிகவும் விசேஷமான ஜனங்களை சந்தித்து இருக்கிறீர்கள். அவர்கள் அறுப்பின் சத்தியத்தை சந்தோஷமாக பெற்றுக் கொள்ளுவார்கள். அப்படி இல்லையெனில் நீங்கள் தற்கால சத்தியத்தை கோதுமையி-ருந்து களைகளைப் பிரித்தெடுக்க எதிர்பார்க்க வேண்டும். அதற்கு மேலும் அதிகமாக இந்த பிரித்து எடுத்தலை நிறைவேற்றும் இந்த சத்தியங்களை அளிப்பதில் நீங்கள் உங்களுடைய பங்கை செய்ய வேண்டும்.

நீங்கள் ஜெயம் கொள்ளும் பரிசுத்தவான்களில் ஒருவராக இருப்பீர்களானால் இப்பொழுது சத்தியம் என்னும் அரிவாளை செலுத்துகிற அறுவடைக்காரனாக இருக்க வேண்டும். ஆண்டவருக்கு உண்மையாக இருந்தால், சத்தியத்திற்கும் மகிமையில் அவரோடு உடன் சுதந்திரராக இருக்க தகுதி உள்ளவனாக இருக்கவும் பாத்திரராக இருந்தால் பிரதான அறுவடைக்காரரோடு தற்போதைய அறுப்பின் வேலையில் பங்கு பெறுவதில் களி கூறுவாய். நீ எப்படி இருந்தாலும்

இயற்கையாகவே உலகத்திற்குள்ளாக எளிதாக செல்லக்கூடியவனாக இருக்க முடியும்.

வழக்கமாக காணப்படுகின்றது போலவே நீ அங்கத்தினன் ஆக இருக்கும் சபையில் கோதுமைகளுக்கிடையில் களைகள் இருக்குமென்றால் எது அதிகமாக இருக்குமோ அதைப் பொறுத்துத்தான் எல்லாம் இருக்கும். கோதுமை அதிகமாக இருப்பின், சத்தியம் ஞானத்துடன், அன்புடன் அளிக்கப்படும் என்றால் அவர்களை அது நல்ல முறையில் பண்படுத்தும். களைகள் இனியும் அங்கே நீடிக்க விருப்பப்படாது. ஆனால் பத்தில் ஒன்பது பங்கு விகிதத்தில் களைகள் அதிகமாக இருந்தால், அறுப்பின் சத்தியத்தை மிகவும் ஜாக்கிரதையாக அன்போடு அளித்தாலும் அது கசப்பையும் பலமான எதிர்ப்பையும் உண்டு பண்ணும். நீ தொடர்ந்து நற்செய்தியைக் கூறுவதில் நிலைத்து நின்று, வெகு காலமாக காணப்படும் தவறுகளை வெளிப்படுத்தினால் அந்த சபையின் நன்மைக்கென நீ வெளியே சீக்கிரமாக தள்ளப்படுவாய். அல்லது உன்னுடைய சுயாதீனத்தைக் கட்டுப்படுத்தி அந்த கூட்டத்தில் உன்னுடைய வெளிச்சம் பிரகாசிக்காதபடி செய்வார்கள். அதன்பிறகு நீ செய்ய வேண்டிய காரியம் எளிதானது. யுகத்தைப் பற்றிய மகா பெரிய தேவ திட்டத்தில் அவரது ஞானம் மற்றும் நற்குணம் பற்றியும் உன்னுடைய சாட்சியை கூறும் காரண காரியங்களை பணிவாக கூறிய பின்னர் எல்லோரும் அறியும் வண்ணம் அவர்களை விட்டு விலகு.

பாபிலோன் என்று அழைக்கப்படும் பல்வேறு கிறிஸ்தவ சபை பிரிவுகளில் வித்தியாசமான அளவுக்கு அடிமைத்தனம் உண்டு. ரோம சபையில் எதிர்பார்க்கப்படும் தனி மனிதனின் மனசாட்சியும், தீர்மானிக்கும் உரிமையும் அடிமைப்படுத்தப்படுவதை கோபத்துடன் எதிர்ப்பவர்கள் கூட புரட்டஸ்டன்ட் அல்லது வேறு எந்தப் பிரிவின் கோட்பாடுகளால் தாங்களும் மற்றவர்களும் கட்டப்படுவதற்கு விருப்பம் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய சங்கி-கள் ரோம சபை மற்றும் இருண்ட காலத்தில் உள்ளவைகளைக் காட்டிலும் நீண்டதாக எளிமையானதாக உள்ளது. இப்படி இருக்கும் வரை இது நல்லது தான். நிச்சயமாகவே சீர்திருத்தம் தான், முழு சுதந்திரம் பெறுவதற்கான முதல்படி-சரியான வழியில் அப்போஸ்தலர் நாட்களில் இருந்த சபையைப் போன்ற நிலைமைக்கு வருவதாகும்.



ஆனால் ஏன் மனித சங்கி-களை கட்டித்தான் ஆக வேண்டுமா? ஏன் நமது மனசாட்சியை கட்டுப்படுத்தி எல்லைக்குட்படுத்த வேண்டும்? கிறிஸ்து நம்மை விடுதலையாக்கி இருக்கிற முழு சுயாதீனத்தில் நாம் ஏன் உறுதியாக இருக்கக்கூடாது? தவறு செய்யக்கூடிய மனிதர்கள் மனசாட்சியை கட்டவும், ஆராய்ச்சி செய்வதை தடுக்கவும் எடுக்கும் முயற்சியை ஏன் நிராகரிக்கக் கூடாது? ஆதிகாலத்தில், இருண்ட காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளை மாத்திரம் அல்ல, சமீப காலத்தில் பல சீர்திருத்தவாதிகளின் முயற்சிகளையும் ஏன் நிராகரிக்கக் கூடாது? அப்போஸ்தல திருச்சபை இருந்தது போன்று இருக்க வேண்டும் என்று ஏன் தீர்மானிக்க கூடாது? ஏற்ற காலத்தில் ஆண்டவருடைய கிருபையின் திட்டத்தை அதிகதிகமாக அறிந்து கொள்ளும்படி, அறிவிலும் கிருபையிலும், அன்பிலும் ஏன் வளரக்கூடாது?

அவர்கள் இப்படிப்பட்ட மனிதர்களால் உண்டாக்கப்பட்ட சபைகளில் சேரும் போது, அதன் விசுவாச அறிக்கையை தங்களுடையதாக ஏற்றுக் கொள்ளும் போது, ஒரு விஷயத்தைப் பற்றிய சபையின் கோட்பாடுகளை ஏறக்குறைய அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள், அதை விசுவாசிக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இப்படியாக அவர்களே அந்த அடிமைத்தனத்திற்குள்ளாக சென்று இருந்தாலும், அவர்களே தங்களுக்குள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சார்ந்துள்ள சபை பெற்றிருக்கும் வெளிச்சத்தைவிட அதிகமான வெளிச்சத்தை வேறு வழியில் பெற வேண்டும். அவர்கள் தாங்கள் இருக்கும் சபையின் உடன்படிக்கைக்கு உண்மையற்றவர்களாக இருக்கலாம் அல்லது அவர்கள் ஏற்றுக்கொண்ட விசுவாச அறிக்கையைக் காட்டிலும், அதிகமாக அறிந்துள்ளபடியால் முந்தைய விசுவாச அறிக்கையை மறுத்து இப்படிப்பட்ட சபை பிரிவை விட்டு வெளியே வர வேண்டும். இப்படி செய்வதற்கு கிருபையும் சிறிது முயற்சியும் தேவை. இப்படி செய்யும் போது சற்று அலசல் ஏற்படுவதால் சந்தோஷமான நட்புக்கு தடங்கல் ஏற்படும், அநேக வேளைகளில் நயவஞ்சகன், பச்சோந்தி, நிலைத்து நிற்காதவன் போன்ற வசை சொற்கள் கூட சொல்லப்படக்கூடும். ஒருவர் ஒரு சபையைச் சேரும் போது தனது மனதை முற்றிலுமாக அந்த சபைக்கு அர்ப்பணிக்கிறார்.

இதன்பின்னர் அவர் அவருக்கு சொந்தமானவர் அல்ல. அவருக்குப் பதிலாக எது சத்தியம் எது தவறு என்று சபை சிந்திக்கிறது. அவனும் உறுதியான சபை மேல் விசுவாசம் உள்ளவனாக இருக்கிறபடியால், சபை எடுக்கும் தீர்மானங்களை கடந்த கால, நிகழ்கால, வருங்காலத்துக்குள்ளானவைகளை, மத சம்பந்தப்பட்டவைகளை, தன்னுடைய சொந்த அபிப்பிராயத்தை விட்டு விட்டு தனிப்பட்ட முறையில் வேதத்தை ஆராயாமல் (அப்படி செய்தால், அவன் அறிவில் வளரக் கூடும்) சபை கூறுகிறதை ஏற்றுக் கொள்ள வேண்டும். சபை இப்படிச் செய்வதற்குக் காரணம் அவன் சபையை விட்டு போய் விடக்கூடாது என்பதற்காகத்தான். ஒருவன் ஒரு சபைக்கு சொந்தமானவன் என்று அறிக்கையிடும் போது, அந்த சபைக்கும் அந்த சபையின் விசுவாச அறிக்கைக்கும் அவன் மனசாட்சி கட்டுண்டு இருப்பதையும் அநேக வார்த்தைகளில் கூறப்படுகிறது.

இந்த சபைப் பிரிவு என்கிற அடிமைத்தனம், கட்டுகளாக எண்ணப்படாமல் ஆபரணங்களாக, மரியாதைக்குரிய அணிகலன்களாக, குணாதிசயத்திற்கு அடையாளமாக இருப்பதாக உயர்வாக எண்ணப்படுகிறது. வஞ்சகம் கடந்து சென்ற பின்னர் ஆண்டவருடைய பிள்ளைகளில் அநேகர் ஏதாவது ஒரு சங்கி-இல்லாமல் அதிக பாரமுள்ளதோ இல்லையோ நீளமானதோ, குறுகியதோ கொடுக்கப்பட்ட தனிப்பட்ட சுயாதீனத்தில் காணப்படாவிட்டால் வெட்கப்பட்டு போவார்கள். அவர்கள், தாங்கள் கிறிஸ்துவுக்கு மட்டும் தான் சொந்தம், எந்த சபைக்கோ அல்லது விசுவாசக் கோட்பாடுக்கோ அடிமைப்பட்டவர்கள் இல்லை என்று சொல்வதற்கு வெட்கப்படுகிறார்கள்.

ஓர் உண்மையுள்ள தேவன் மேல், சத்தியத்தின் மேல் வாஞ்சையோடு இருப்பவர், ஒரு குழந்தை பள்ளிக்கூடத்தில் ஒரு வகுப்பில் இருந்து இன்னொரு வகுப்பிற்கு உயர்வு பெற்று செல்வது போன்று, ஒரு சபையி-ருந்து இன்னொரு சபைக்கு செல்வதை சில வேளைகளில் நாம் பார்க்கிறோம். அவர் ரோம சபையில் இருப்பார் என்றால், அவர் கண்கள் திறக்கப்படும் போது அந்த சபையை விட்டு வெளியேறி மெத்தடிஸ்ட் அல்லது பிரஸ்பட்டேரியன் சபைக்குச் செல்வதைக் காண்கிறோம். இங்கே சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்கிற அவரது வாஞ்சை முற்றிலுமாக தணியாவிட்டால்,



சில வருடங்கள் கழித்து அவரை பேப்டிஸ்ட் சபையில் பார்க்கலாம். அவர் இன்னும் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும், சத்தியத்திலும் வளருவாரென்றால் கிறிஸ்து நமக்காக உண்டாக்கியுள்ள சுயாதீனத்தை விரும்புவாரென்றால், மெள்ள மெள்ள அவர் எல்லா மனுஷீக ஸ்தாபனங்களையும் விட்டு வெளியே வருவதையும், ஆண்டவரோடும், அவருடைய பரிசுத்தவான்களோடும் மட்டும் இணைந்து இருப்பதோடு, ஆதி சபையில் இருந்தது போன்று மேன்மையான, ஆனால் உறுதியான அன்பினாலும் சத்தியத்தினாலும் கட்டப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். *1கொரி. 6:15, 17; எபே. 4: 15,16*

ஒரு சபையின் கட்டுகளினால் கட்டப்படாமல் இருக்கும் போது ஒரு அமைதியின்மை போல, பாதுகாப்பு இல்லாதது போன்ற உணர்வு ஏற்படுவது சகஜம். அது பொய்யான கருத்துகளினிமித்தம் பிறந்ததாகும். முதலாவது போப்புவினால் பிரகடனப்படுத்தப்பட்டது, அதாவது உலகப்பிரகாரமான ஒரு சபையில் அங்கம் வகிப்பது அவசியமானது, அது ஆண்டவருக்கு பிரியமானது, நித்திய ஜீவனுக்கு அது தேவை என்பதாகும். இந்த உலகப்பிரகாரமான சபைகள், மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட முறைகள் அப்போஸ்தலர் காலங்களில் இருந்தது போல் சுதந்திரமாக, எளிமையாக கூடிவருதல் என்பதற்கு மாறுபாடாக உள்ளது. இவைகளை கிறிஸ்தவர்கள் இயற்கையாகவே எண்ணிப்பார்ப்பதுண்டு. இதனிமித்தம் அநேக பரலோக காப்பீட்டு கம்பெனிகள் இருக்கின்றன. மரணத்திற்கு பின் பரலோக இளைப்பாறுதலையும்,சமாதானத்தையும் பெறுவதற்காக இதில் ஒன்றுக்கு பணம், நேரம், மரியாதை போன்றவைகளை முறைப்படி கட்ட வேண்டும். இந்த தவறான கருத்தை மனதில் கொண்டு, மக்கள் இன்னொரு சபையினால் கட்டப்படுவதற்கு கிட்டத்தட்ட நடுக்கத்துடன் கூடிய வாஞ்சையுடன் செயல்படுகிறார்கள். ஒரு சபையை விட்டு வெளியே வருவது என்பது அவர்களுடைய காப்பீட்டுத் திட்டக் காலக்கெடு முடிந்து விட்டது போலவும் நல்ல ஒரு கம்பெனியில் புதுப்பிக்கப்படல் வேண்டும் என்பது போலவும் இருக்கிறது.

ஆனால் எந்த உலக சபையும் பரலோக மகிமைக்கு

பயணச்சீட்டு வழங்க முடியாது. தமது சபையின் மேல் வைராக்கியம் உள்ளவன் கூட, ரோம சபையைத் தவிர தன்னுடைய சபை பிரிவு அதில் அங்கம் வைத்திருப்பதால் பரலோக மகிமையை பெற்றுத் தரும் என்று கூறமாட்டான். பரலோகத்தில் தான் தனது குறிப்பேடு வைக்கப்பட்டிருக்கிறது, பூலோகத்தில் அல்ல என்று உண்மையான சபை தான் கூறக்கூடும் என்பதை எல்லாரும் ஏற்றுக் கொள்ளுவார்கள். கிறிஸ்துவின் சரீரமான சபையில், உண்மையான சபையில் அங்கத்தினன் ஆவதற்கு ஏதாவது ஒரு சபைப்பிரிவில் அங்கமாக இருந்தாக வேண்டும், தங்கள் மூலம் தான் கிறிஸ்துவண்டை வர முடியும் என்று ஜனங்களை அவர்கள் ஏமாற்றுகிறார்கள். அதற்கு மாறாக, சபை பிரிவு வழியாக தம்மிடம் வருபவர்களை ஆண்டவர் தடை பண்ணாதிருக்கும் வேளையில், உண்மையாகவே அவரைத் தேடும் போது அவர் ஒரு போதும் வெறுமையாக அனுப்பாதவர். இப்படிப்பட்ட தடைகள் தேவையில்லை, அவரிடம் நேரடியாக வருவதே நல்லது என்று நம்மிடம் கூறுகிறார். "என்னிடம் வாருங்கள்" என்று அவர் வருந்தி அழைக்கிறார். அவர் கூறுகிறார்: "என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். "என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாகவும் இருக்கிறது." அவருடைய சத்தத்திற்கு உடனடியாக நாம் செவி கொடுத்திருந்தால் நான்றாய் இருந்திருக்கும். அப்படிச் செய்திருப்போம் என்றால் சபை பிரிவுகளினால் ஏற்படுகின்ற கலக்கம், சந்தேகங்கள், மாயைகள், உலகப்பிரகாரமான சிந்தனைகள் போன்றவற்றை சந்திக்காமல் இருந்திருக்கலாம்.

ஆனாலும், அநேகர் பல்வேறு சபைகளில் பிறந்திருக்கிறார்கள். சிலர் சிறு குழந்தையாக இருக்கும் போது அல்லது வளரும் பிராயத்தில் இதில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி கேள்விக் கேட்காமல் இருதயத்தில் விடுதலையோடு வளர்ந்திருக்கிறார்கள். அவர்களை அறியாமலே அவர்கள் அறிக்கை செய்கிற கோட்பாட்டை, பொருளினால் தங்கள் சூழ்நிலையால் ஆதரிக்கிறவர்களாகிறார்கள். இவர்களில் சிலர் மாத்திரம் முழு சுதந்திரத்தில் உள்ள நன்மைகளை அல்லது சபை அடிமைத்தனத்தினால் வரும் குறைவுகளை உணர்ந்துள்ளார்கள்.



மேலும், அறுப்பின் காலத்தில், இப்பொழுது காணப்படுகிற முழு பிரித்தெடுக்கப்படுதலையும் உணராதிருக்கிறார்கள். இப்பொழுது ஆண்டவருடைய சத்தம் கேட்கப்படுகிறது. அவர்கள் நடுவி-ருந்து புறப்பட்டு வாருங்கள்; கர்த்தருடைய பாத்திரங்களை (சத்தியம், போதனை) சுமக்கிறவர்களே, அதின் நடுவி-ருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள். (தவறான பழக்கவழக்கங்களி-ருந்தும், பொய்யான உபதேசங்களில் இருந்தும் விடுதலை பெறுங்கள்) ஏசா. *52:11*

இப்பொழுது கோடாரியானது பேர் கிறிஸ்தவ சபையின் (பாபிலோன், கிறிஸ்தவ ராஜ்யம்) வேர் அருகே வைக்கப்பட்டுள்ளது. இதே போல் முதலாவது வருகையின் போது பெயரளவான யூத முறைமையின் வேர் அருகே கோடாரியானது வைக்கப்பட்டிருந்தது. அந்த பெரிய ஒழுங்கு முறையில் ஆகாயத்து பறவைகள் வந்து தங்க விருப்பப்படுகின்றன. அதை அவைகள் கெடுத்துப் போட்டன. (லூக். *13:18,19*) சொல்லப்போனால் அவைகள், "அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று." (வெளி. *18:2*) அது கோடாரியால் வெட்டிப்போடப்பட வேண்டும். இனிமேலும் அது உலகத்தை ஏமாற்றக் கூடாது. அதற்கு பதிலாக உண்மையான ஒ-வ மரம், அதன் வேர்கள் தேவனுடைய உண்மையான வாக்குத்தத்தங்களாக இருக்கிறது. அதன் கிளைகள் இந்த சுவிசேஷ யுகத்தின், உண்மையாக முழுமையாக அர்ப்பணம் செய்து கொண்ட விசுவாசிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய நாமங்கள் "பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன." இவர்கள்தான் உண்மையான உடன் சுதந்திரரும், ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியுமாக காணப்படுவார்கள். வெளி. *17:14*

### பரிசுத்த ஸ்தல வகுப்பினரின் பரீட்சையும், தூற்றுதலும்

பாபிலோனை விட்டு வெளியே வருவது, ஒரு படியாக, வெகு நீண்டதாக முற்றிலும் ஜெயம் கொள்ளுகிற திசையை நோக்கி உள்ளது, எனினும் அது கடைசி படியல்ல; வழியில் ஒவ்வொரு படியாக முன்னேறிச் செல்லும் போது ஓய்வு எடுத்துக் கொள்ளாதிருக்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

"ஒரு போதும் நினைக்க வேண்டாம் வெற்றி
கிடைத்துவிட்டது என்று,
இல்லையெனில் ஓய்ந்து விடவும் வேண்டாம்;
உன்னுடைய கடினமான வேலை இன்னும் முடியவில்லை
நீ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளும் வரை.

"சுற்றிலும் திரளான சாட்சிகள் உண்டு
உன்னை முற்றிலும் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.
ஏற்கெனவே கடந்து சென்ற பாதையை மறந்து விடு,
தொடர்ந்து உன்னுடைய பாதையில் முன்னேறிச் சென்று விடு."

பாபிலோனில் இருந்து வெளியே வந்த பிறகு, அது கீழ்ப்படிதல் என்னும் படிகளோடு தொடருகிறது. அது வரயிருக்கிற போராட்டங்கள், வெற்றிகளுக்கு, அப்பியாசம் தந்து குணாதிசயத்தை வலுப்படுத்தி உள்ளது. இதைத் தொடர்ந்து இன்னும் அதிகமான பரீட்சைகளும் ஜெயங்கொள்ளுவதற்குரிய சந்தர்ப்பங்களும் வரும். இதைப்பற்றி பவுல் எழுதுகிறதவாது: *(கலா. 5:1)* "ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்." முழு சுயாதீனத்தையும், பாபிலோனின் அடிமைத்தனத்தி-ருந்து முழு விடுதலையையும் பெற்ற தேவனுடைய பிள்ளைகள், சத்துருவானவன் வேறு அடிமைத்தனத்திற்குள் கொண்டு வர எடுக்கும் முயற்சிகளையும் அல்லது இடறி விழ எடுக்கும் முயற்சிகளையும் எதிர்பார்த்திருக்க வேண்டும். ஆண்டவர் இந்த கடுமையான சோதனைகளை அனுமதிக்கிறார். ஆனால் இப்பொழுது இந்த வகுப்பினர் வெளிப்படுத்தப்படவும், மகிமையான இராஜ்யத்தில் ஊழியம் செய்யும்படியாகவும் ஆயத்தம் பண்ணப்படுகிறார்கள்.

யூத அறுப்பின் போது நடைபெற்ற சோதனை, தூற்றுதல் போன்ற நிழல்களை இங்கே நாம் எதிர்பார்க்கலாம். பரிசுத்த ஸ்தல வகுப்பினர் முதலாவது வருகையின் போது ஆண்டவருடைய சீடர்களால் குறிப்பிட்டு காட்டப்பட்டது. அவர்களைக் குறித்து இப்படியாகக் கூறினார்: "நீங்கள் சுத்தமாக இருக்கிறீர்கள், ஆனாலும் எல்லாரும் அல்ல;" மேலும் பெயரளவில் உள்ள இஸ்ரயேலை புறம்பாக்கின பிறகு *(கிபி 33)* தேவனுடைய ஆலயத்திற்கு பிரதிநிதியாக இருந்தவர்களுக்கு கடுமையான பரீட்சை வந்தது. சுத்தமானவர்களையும், அசுத்தமானவர்களையும் பிரித்து எடுப்பதற்காக, பேதுரு புடைக்கப்பட்டார், கிட்டத்தட்ட தோல்வியுற்றார். *(லூக். 22:31; மத். 26:74, 75; யோவா. 21: 15-17)* ஆனால், அவர் சுத்தமாக இருந்ததினால், இருதயத்தில் உண்மையுள்ளவராக இருந்தபடியால், வெற்றிகரமாக வரும்படி செய்யப்பட்டார். யூதாசும் சோதிக்கப்பட்டான், ஆனால் அவன் அசுத்தன் என்று நிரூபித்தான். பூலோக நன்மைக்காக சத்தியத்தை விற்க ஆவலுள்ளவனாக இருந்தான்; பணத்திற்காக ஆண்டவரை மறுத-க்கவும், முத்தத்தில் கூட அன்பைக் காட்டுவது போன்று மறுத-க்கவும் ஆவலுள்ளவனாக இருந்தான்.



அதைப் போன்றே, இந்த அறுப்பின் போதும், ஒரு சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலத்தோடு சம்பந்தப்பட்டவர்களில் சிலர் சுத்தமில்லாதவர்களாக இருக்கிறார்கள். 1878ல் பாபிலோன் புறம்பே தள்ளிவிடப்பட்டதி-ருந்து, அங்கே அவளை விட்டு வெளியே வா என்கிற அழைப்பு, விடுக்கப்பட்டதி-ருந்து ஒரு பரீட்சை, புடைக்கப்படுதல் அவளை விட்டு வெளியே வந்தவர்களிடத்தில் நடந்து கொண்டு இருக்கிறது. சந்தேகத்திற்கு இடமில்லாமல் பேதுருவும், யூதாசும் இங்கே இதே மாதிரியான வகுப்பினருக்கு உதாரணமாக இருக்கிறார்கள். பாபிலோனை விட்டு வெளியே வந்தவர்கள் மத்தியில், இவர்கள் அவளுடைய அநேக கறைபட்ட உபதேசங்கள் பலவற்றி-ருந்து சுத்திகரிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த வகுப்பினர் ஆண்டவருக்கும் சத்தியத்திற்கும் உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். இன்னொரு வகுப்பினர் உண்டு, அவர்கள் அநேக தடவைகளில் உண்மையற்றவர்கள் என்று நிரூபித்தார்கள். ஆண்டவரை அறிந்துகொள்ளும்படி பின்பற்றி வராதவர்கள், ஆனால் அநேக தடவைகளில் பொல்லாங்கான, தவறான உபதேசங்களுக்குத் திரும்புகிறவர்களாக இருக்கிறார்கள். அவர்கள், தாங்கள் தப்பி வந்த நிலைமையை விட மோசமான நிலையில் இருக்கிறார்கள்.

பரிசுத்த ஸ்தல வகுப்பினரை பரீட்சிப்பது, புடைத்தெடுப்பது

போன்றவை, இந்த அறுப்பில் 1878ல் இருந்து நடைபெற்று வருகிறது. இது, நம்முடைய ஆண்டவர் நிழலான ஆலயத்தை நிழலாக சுத்திகரித்து, அவர் இராஜாவாக வந்து பெயரளவில் உள்ள யூத ஆலயத்திற்கு எதிராக நியாயத்தீர்ப்பு கூறுவதற்கு அடையாளமாக உள்ளது. அவர்கள் வீடு பாழாக்கப்படும் என்று அறிவித்தப் பின்னர் அவர் எருசலேமில் உள்ள ஆலயத்திற்கு சென்றார். இது உண்மையான ஆலயம் அல்லது பரிசுத்த ஸ்தலத்திற்கு அடையாளமாக இருக்கிறது. அங்கே அவர் ஒரு சாட்டையை உண்டு பண்ணி, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்துப் போட்டார்.

நிழலான சாட்டை, பல்வேறு சத்தியங்களைக் காட்டுவதாக இருக்கிறது. இது தற்போதைய அறுப்பின் போது, பரிசுத்த ஸ்தல வகுப்பினர் மத்தியில், அவர்களை திருத்த, கண்டிக்க, அசுத்தமானவர்களை பிரித்தெடுக்க உபயோகிக்கப்பட்டது. இப்பொழுது வெளிச்சத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ள சத்தியங்கள் தேவனுடைய பூரண சித்தத்தை தெளிவாக காட்டுகிறது. அதாவது அவருக்கு சேவை செய்வதற்கான முழு அர்ப்பணிப்பு, ஆண்டவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்கிறவர்கள் செல்ல வேண்டிய இடுக்கமான பாதை ஆகியவைகளைக் காட்டுகிறது. எந்த விதமான அசுத்தமான நோக்கத்துடன் யாராவது இந்த வகுப்புக்குள் வந்திருப்பார்களெனில், சத்தியம் என்னும் சாட்டையினால் அவர்கள் அடிக்கப்பட்டு, பரிசுத்த ஸ்தல வகுப்பினரிடம் இருந்து தங்களை பிரித்தெடுக்க முற்படும் வரை இப்படியாக செய்யப்படுகிறது.

நம்முடைய ஆண்டவரின் உவமைகள் "சேனை"அல்லது பெருந்திரளான பேர் கிறிஸ்தவ மக்களிடம் இருந்து "பரிசுத்த ஸ்தல வகுப்பினரை" பொதுவாக பிரித்தெடுப்பதைக் குறித்து காட்டுகிறது; இன்னும் பரிசுத்த ஸ்தல வகுப்பினருக்கு பிறகு வரக்கூடிய பரீட்சையையும், புடைத்தலையும் காட்டுகிறது; ஆனால் உலகத்தின் ஆவியால் மேற்கொள்ளப்பட்டு, அதனால் தேவனிடத்தி-ருந்து வரக்கூடிய கனத்தைக் காட்டிலும் மனிதர்களிடம் இருந்து வருகின்ற தற்போதைய கனத்தையும், நன்மைகளையும் அதிகமாக விரும்பினவர்களிடம் இருந்து, உண்மையாகவே அர்ப்பணம் செய்து,



இராஜ்யத்தை சுதந்தரிக்கும் ஜெயம் கொள்ளுகிறவர்கள் (வெளி. 3:21) பிரித்து எடுக்கப்படுதலையும் காட்டுகிறது.

பத்துக் கன்னிகைகளின் உவமை முற்றிலுமாக எல்லா கன்னிகைகளும் அல்லது அர்ப்பணம் செய்து கொண்ட வகுப்பினர், பாபிலோனில் இருந்து பிரித்து எடுக்கப்படுவதையும் காட்டும் அதே வேளையில், இந்த வகுப்பினர் மத்தியிலும் கூட ஒரு பரீட்சையையும் பிரித்து எடுத்தலையும் தெளிவாகக் காட்டுகிறது. அதாவது விசுவாசம், ஊக்கமான அன்பு மற்றும் உடனடியாக கீழ்ப்படியக்கூடிய ஆவியுடைய புத்தியுள்ள கன்னிகைகளை, தங்களுடைய ஆதி அன்பையும், ஆவியின் அனலையும் விட்டு விட்டு இதனால் உடனடியாக செயல்படக்கூடிய தன்மை, கீழ்ப்படிதல் ஆகியவை குறைந்து போன புத்தியில்லாத கன்னிகைகளிடம் இருந்து பிரித்து எடுப்பதைக் காட்டுகிறது. புத்தியுள்ளவர்கள் ஆண்டவருக்கென முற்றிலுமாக அர்ப்பணித்துக் கொண்டு உடன்படிக்கையின்படி ஜீவிக்கிறவர்கள். அதோடு கூட ஆண்டவரின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வருகைக்கென ஆவலுடன் எதிர்பார்த்திருந்தவர்கள். அவர்கள் அறுப்பின் செய்தியை ஏற்றுக் கொள்ள ஆவலுடன் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆண்டவரின் பிரசன்னத்தைக் குறித்து முன்னதாகவே சொல்லப்பட்ட அடையாளங்களை ஏற்றுக் கொண்டு தங்களுடைய விசுவாசத்தையும் உண்மையையும் நிரூபிக்கக் கூடிய எந்த பரீட்சைக்கும் ஆயத்தமாக இருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் மூலமாக, அவருடைய பிரசன்னத்தை அறிவிக்கும் வார்த்தைகளை கேட்பதற்காகவும், ஆண்டவர் கதவைத் தட்டும் சத்தத்தை கேட்பதற்காகவும் விழித்திருந்து கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு தற்போதைய இழப்புகள், சுமக்கும் சிலுவைகள், சத்தியத்திற்காக சுமக்கப்படுபவைகள் ஆகியவைகள் வருங்காலத்தில் வருகின்ற நித்திய சமாதானத்திற்கு, மகிழ்ச்சிக்கு, மகிமைக்கு ஆசீர்வாதத்திற்கு முன்னோடியாக வரவேற்கப்படுகிறது.

1874ம் ஆண்டு இலையுதிர்காலத்தின் போது ஆண்டவருடைய பிரசன்னத்தைக் குறித்த தீர்க்கதரிசன அறிவிப்பை கேட்ட பொழுது, அது உடனடியாக அறிந்து கொள்ளப்பட்டது. உடனடியாக "இதோ மணவாளன், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள்"என்கிற

சத்தம் உண்டாயிற்று. இந்த சத்தம் இன்னமும் செல்கிறது. இன்னமும் அர்ப்பணம் செய்து கொண்ட கன்னிகைகள் அனைவரும் கேட்டு அவர்களுடைய விசுவாசமும் நம்பிக்கையும் சோதிக்கப்படும் வரை அது தொடரும். விளக்குகளுடன் (தேவனுடைய வார்த்தை) உள்ள கன்னிகைகள், எண்ணெய் (பரிசுத்த ஆவி) ஊற்றப்பட்டு, திரி தூண்டி விடப்பட்டு எரியும் போது, தங்களுடைய பாத்திரங்களில் (தங்களுடைய இருதயங்களில்) எண்ணையோடு இருக்கும் போது அனைவரும் ஆண்டவருடைய பிரசன்னத்தை உணர்ந்து கொள்வார்கள். தங்களுடைய நடவடிக்கைகளையும் காரியங்களையும் விசுவாசத்திற்கு ஏற்ப வைத்துக் கொண்டு, பிரியமுள்ள மணவாளனை சந்திக்கச் சென்று, கல்யாண விருந்தில் அவரோடு உட்காரவும் செய்வார்கள்.

யூதர்களின் கல்யாண முறை, சபையின் அவளுடைய ஆண்டவராகிய கிறிஸ்துவோடு கூடிய நிச்சயதார்த்தம், திருமணம் என்பதற்கு நல்ல விளக்கமாக உள்ளது. நிச்சயதார்த்தம் அல்லது நியமிக்கப்படுதல் என்பது உண்மையான பயபக்தியுடன் கூடிய உடன்படிக்கையாகும். நிச்சயதார்த்தத்திற்கு பிறகு சாதாரணமாக, ஒரு வருடத்திற்கு பிறகு, மணவாளன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படும் வரை மணவாட்டியானவள் தனது தகப்பன் வீட்டில் இருக்க வேண்டும். கல்யாணம் என்பது அவளுடைய புருஷனால் அவளுக்கென்று ஆயத்தம்பண்ணப்பட்ட வீட்டில் ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். கல்யாண விருந்து என்பது பல நாட்களுக்கு நடக்கும். குறிப்பிட்ட நேரத்தில் மணவாளன் தன்னுடைய மணவாட்டியை சந்திக்கும்படி புறப்படுகிறான். மணவாட்டி தன்னுடைய கன்னிகையான தோழிகள் விளக்குகளோடும், எல்லா விதமான ஆயத்தங்களோடும் தன்னைப் பின்தொடர்ந்து வர, மணவாளனை ஏற்றுக் கொண்டு, அவனோடு அவர்களது வருங்கால வீட்டிற்கு செல்லவும், விருந்துக்கும் ஆயத்தமாக இருக்கிறாள்.

உவமையில் மணவாட்டியைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. மணவாளன் வரும்போது அவனோடு சென்று உட்பிரவேசித்து எல்லா விருந்துகளிலும் பங்கு பெறும் "புத்தியுள்ள கன்னிகைகளைக்" குறித்து சொல்லப்பட்டுள்ளது. இது சரியானதும், அவசியமானதும் கூட. ஏனெனில் கிறிஸ்துவின் மணவாட்டி என்பது



அநேக தொகையினரைக் குறிப்பதாகும். இது புத்தியுள்ள கன்னிகைகள் என்று மிக அழகாக குறிப்பிடப்பட்டுள்ளது. புத்தியில்லாத கன்னிகைகள், பின்னர் வெளிச்சத்தையும் அனுபவத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால், புத்தியுள்ள விசுவாசமுள்ள மணவாட்டி வகுப்பினரின் உயர்வான பதவியை பெற்றுக் கொள்ள தவறிவிடுகிறார்கள். இவர்கள் தான் (சங். 45:14,15) "அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் அவளை பின்பற்றி வருபவர்கள்" என்று சொல்லப்பட்ட வகுப்பினராவர். ஏற்ற வேளையில் இராஜாவினால் அவள் நன்மை பெறுவாள், ஆனால் அவ்வளவு அதிகமாக அல்ல.

புத்தியுள்ள கன்னிகைகளின் மனோபாவம், மற்றும் மணவாளனின் வருகைக்காக ஆயத்தமாகி ஆவலுடன் காத்து கொண்டிருப்பது ஆகியவை சரியான விதத்தில் ஆண்டவருக்கு நிச்சயம் பண்ணப்பட்டிருக்கிற உண்மையான அர்ப்பணம் செய்து கொண்ட சபைக்கு அடையாளமாக இருக்கிறது. மணவாட்டி தன்னுடைய வாழ்வில் மிக முக்கியமான சம்பவத்திற்கு அலட்சியமாக இருப்பது அல்லது ஆயத்தமற்ற நிலையில் இருப்பது கனத்திற்கு அவள் தகுதியற்றவள் என்பதை நிரூபிக்கும். அதே நிலைதான் சபையோடும் கூட: "அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும் தன்னை சுத்திகரித்துக் கொள்கிறான்." இப்படிப்பட்ட நிலைமையில் உள்ளவன் தன்னுடைய இருதயமும் வாழ்க்கையும் ஆண்டவருக்கு பிரியமானதாக இருக்கும்படி பார்த்துக் கொள்கிறான். அப்படிப்பட்டவன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன், நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன் என்று சொன்னவரோடு இணைந்து இருக்கும்படியாக ஆவலுடன், காத்துக் கொண்டிருப்பதோடு அவர் வாக்குத்தத்தம் பண்ணின விருந்துக்காகவும் காத்திருப்பான்.

உவமையி-ருந்து இரண்டு காரியங்கள் விளங்குகின்றன. ஒன்று இந்த விசேஷித்த சத்தியம் (மணவாளனின் பிரசன்னத்தைக் குறித்த அறிவு). இது பொதுவான உலகிற்கோ பொதுவாக பேர் சபைக்கோ அல்ல, ஆனால் கன்னிகையான அல்லது அர்ப்பணம் செய்து கொண்டவர்களுக்கு மட்டுமே ஆகும்; இரண்டாவது

மணவாளன் பிரசன்னமாகி இருக்கும் செய்தி, பிரித்து எடுக்கப்படுதலை விளைவிக்கும். அது கன்னிகையான வகுப்பினரைச் சேர்ந்த ஒவ்வொரு நபரையும் பரீட்சித்து, நிரூபிப்பதோடு உண்மையற்ற, புத்தியற்ற கன்னிகைகளிடம் இருந்து புத்தியுள்ள, உண்மையுள்ள, தகுதி உள்ள கன்னிகைகளை வெளிப்படுத்தி தெளிவாகக் காட்டும்.

"இதோ மணவாளன்" என்கிற மகிமையான செய்தியில் எவ்வளவு அதிகமான கிருபை அடங்கியிருக்கிறது! தற்போது இந்த பெரிய ரகசியம் பரிசுத்தவான்களுக்கு மாத்திரம் தெரிந்துள்ளது. உலகம் அதனை பெற்றுக்கொள்ளாது. அதற்கு அது பைத்தியக்காரத்தனமாக தோன்றுகிறது. எல்லா கன்னிகைகளும் கேட்குமட்டும் அப்படியாகத்தான் இருக்கும்; "கதவு அடைக்கப்படும்" வேளை வரை அவர்களில் புத்தியுள்ளவர்கள் முழுவதுமாக நுழையும்வரை அப்படித்தான் காணப்படும். அதன்பின்பு உபத்திரவ காலத்தின் "ஜூவா-த்து எரிகிற அக்கினி," எல்லா கண்களும் ஆண்டவருடைய பிரசன்னத்தையும் அரசாட்சி துவங்கி இருப்பதையும் காணும்படிச் செய்யும்.

எவ்வளவு கனிவுடன், கிருபையின் யேகோவாவின் செய்தி அவருடைய தாழ்மையுள்ள வேலைக்காரர்களுக்கும், வேலைக்காரிகளுக்கும் வருகிறது. *(சங். 45:10,11)* "குமாரத்தியே கேள், நீ உன் செவியை சாய்த்துச் சிந்தித்துக் கொள்; உன் ஜனத்தையும், உன் தகப்பன் (ஆதாமினுடைய) வீட்டையும் (மனுஷீக உறவுகள், நம்பிக்கைகள், ஆவல்கள், எதிர்பார்ப்புகள்) மறந்து விடு. அப்பொழுது ராஜா ( ஆண்டவராகிய இயேசு) உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்து கொள்." யார் இப்படிப்பட்ட நன்மையைப் பெறக்கூடும்?"அவர்கள் அழைக்கப்பட்டவர்களும், தெரிந்து கொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்." "ராஜகுமாரத்தி (யேகோவாவின் குமாரத்தி; இப்படிப்பட்டவள் கிறிஸ்துவின் மணவாட்டி) உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள்." அவளுடைய அழகு பரிசுத்த அலங்காரம். வெளிப்படையாக உலகத்திற்கு முன்பாக அவள் மகிமையானவள் அல்ல. அவளுடைய ஆண்டவர் கனவீனப்படுத்தப்பட்டது போல அவளும் மனிதரால்



கேவலப்படுத்தப்பட்டு, நிராகரிக்கப்படுகிறாள். ஆனால் அவள் எப்பொழுதும் அப்படி இருப்பதில்லை. அவருடைய நிந்தையில் அவள் பங்கு பெற்றது போன்று, அவருடைய மகிமையிலும் அவள் பங்கு பெறுவாள். ஒரு புது சிருஷ்டியாக ஏற்ற காலத்தில் அவருடைய திவ்ய சுபாவத்தில் அவளும் தரிப்பிக்கப்படுவாள். அவள் உடை (மகிமை அடையும் போது) பொற்சரிகையாக இருக்கிறது. பொன் திவ்ய சுபாவத்திற்கு அடையாளமாக இருக்கிறது. "அவள் சித்திரத்தையலாடை தரித்தவளாய் ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டு வரப்படுவாள்." அவளுடைய ஆண்டவரால் கொடுக்கப்படும் எளிமையான வெள்ளாடை, அவருடைய நீதியின் வஸ்திரமாகும். அதை அவள் ஜாக்கிரதையாக கிறிஸ்தவ கிருபைகளோடு அணிந்து கொள்ளுவாள். அவள் இராஜாவின் அரண்மனைக்குள் பரிபூரணமாக நுழையும்போது பூலோகத்திலும், பரலோகத்திலும் மிகுந்த சந்தோஷம் உண்டாகி *(2 பேது. 1: 5-8, 11)* இருக்கும். அநேகர் கூறுவார்கள்: "நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய க-யாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்."(வெளி. 19:7) "தீரு குமாரத்தி காணிக்கை (பூமியில் உள்ள பலவான்கள்) கொண்டு வருவாள்; ஜனங்களில் ஐசுவரியவான்களும் உன் தயவை நாடி வணங்குவார்கள்... உமது நாமத்தை எல்லாத் தலைமுறைகளிலும் பிரஸ்தாபப்படுத்துவேன், இதினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் துதிப்பார்கள்." *சங். 45: 12-17*

உண்மையாகவே புத்தியுள்ளவர்கள், அர்ப்பணம் செய்து கொண்டவர்கள், உலக ஆசைகள், பூலோக நம்பிக்கைகள், வெகுமதிகள் எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு தன் நேசருக்காக இருதயம் வாஞ்சையுள்ளதாக இருக்க, காத்துக் கொண்டிருப்பவர்கள் ஆயத்தமுள்ளவர்களாக காணப்பட்டார்கள். ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகி மணவாட்டி என்கிற மேலான உயர்வுக்கு தகுதியானவர்கள் என்று கண்டறியப்பட்டார்கள்.

" ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியே,

உன்னுடைய அழகில் நாங்களும் பங்கு அடைவோம்."

தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு மணவாளனைப்

பின்பற்றுவது, இயேசுவை அவர் பிரசன்னமாகி இருக்கும் போது எல்லாவற்றையும் விட்டு பின்பற்றுவதைக் குறிக்கும். அது பாபிலோனை விட்டு வெளியே வருவதற்கு சமமாகும். அங்கு தான் அநேக கன்னிகைகள் இருந்திருக்கிறார்கள். ஏனெனில் அறுப்பு என்கிற வெளிச்சத்தில் வெளிப்பட்ட சத்தியம், கோதுமை களையி-ருந்து பிரித்தெடுக்கப்பட்டதைக் காட்டுகிறது. கவனமாக திரியை துண்டுவது என்கிற சத்தியம் இதை அர்ப்பணிப்பின் பரிசுத்த ஆவியையும் கீழ்ப்படிதலும் உள்ள புத்தியுள்ள கன்னிகைகளுக்கு தெரிவிக்கிறது. இந்த "எண்ணெய்" உடையவர்கள் வெளிச்சமும் உடையவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் வரயிருக்கிற நன்மையினிமித்தம் உடனடியாகவும் சந்தோஷத்துடனும் "ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுவார்கள்."

புத்தியில்லாத கன்னிகைகள், இதற்கு மாறாக, எண்ணெய் பற்றாக்குறையால் மணவாளனின் பிரசன்னத்தைக் குறித்து தெளிவான வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளாதிருக்கிறார்கள்; மேலும் தற்கால வாழ்வின் கவலைகள், திட்டங்கள் போன்றவற்றால் இந்த விஷயத்தை முழுமையாக ஆராயத் தவறிவிடுகிறார்கள்; அதனிமித்தம் பாபிலோனை விட்டு வெளியே வரத்தயங்குகிறார்கள்; இவர்கள் இந்த முழு விஷயத்தைப் பற்றி வித்தியாசமாக நினைப்பதுடன் நம்பாதவர்களுமாக இருக்கிறார்கள்; மற்றவர்களால் தூண்டப்பட்டாலும் தயக்கத்துடன் புறப்படுகிறார்கள்; லோத்துவின் மனைவியைப் போன்று எப்பொழுதும் பின் நோக்கிப் பார்க்க விரும்புகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்காகத்தான் ஆண்டவர், "லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" (லூக். 17:32) என்கிற கட்டளையைக் கொடுத்தார். மேலும் "கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜ்யத்திற்கு தகுதியுள்ளவன் அல்ல" என்றார்.

விருந்துக்கு செல்லும் தருணம் கடந்து செல்லும்வரை புத்தியில்லாத கன்னிகைகள் தங்களுடைய முட்டாள்தனத்தை உணரமாட்டார்கள் என்பது உவமையி-ருந்து தெரிகிறது. அதன்பிறகு அனலற்றவர்களாக இருந்து ஆண்டவரை தூரத்தி-ருந்து பின்பற்றிக் கொண்டு அவரது மணவாட்டியாகவும் உடன் சுதந்திரராகவும்



சொந்தம் கொண்டாட நினைத்தது எவ்வளவு முட்டாள்தனமான செயல் என்பதை உணர்ந்து கொள்ளுவார்கள். இப்பொழுது "மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறவர்களும்" தங்களுடைய "அற்புதமான கிரியைகளுக்காக" பெரிதாக எண்ணப்பட்டவர்களும், ஏமாற்றம் அடைவார்கள்.

## கதவு அடைக்கப்பட்டது

மணவாளன் வந்து விட்டார் என்கிற அறிவிப்பு, அவரை சந்திப்பதற்காக முன்னாக செல்லுவது மற்றும் அவரோடு கூட க-யாணத்திற்காக நுழைவது ஆகியவை எல்லா புத்தியுள்ள கன்னிகைகளும், பாபிலோனில் இருந்து தங்களை பிரித்து எடுக்கக்கூடிய போதுமான அறுப்பின் சத்தியத்தினால் "தங்கள் நெற்றியில் முத்திரையிடப்படும்" வரை தொடரும். அது மணவாளனோடு க-யாண விருந்துக்கு செல்ல உதவும். அதன் பிறகு எல்லா கன்னிகைகளும் தற்கால சத்தியத்தினால் பரீட்சிக்கப்பட்ட பின்னர், தருணம் என்கிற கதவு மூடப்படும். அதன் பிறகு க-யாண விருந்துக்கு செல்ல ஒருவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஏனெனில், "ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும் ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்கு பூட்டுகிறவருமாயிருக்கிறவர்," தாமே என்று கூறினார். (வெளி. 3:7) அப்பொழுது புத்தியில்லாத கன்னிகைகள் உள்ளே விடும்படி கதவைத் தட்டும் போது அவர்கள் கூறுவார்கள்: "ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்டும்." அவர் மாறுத்தரமாக, "நான் உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்" என்பார். இப்பொழுது அவரைக் குறித்தும், அவருடைய வார்த்தையைக் குறித்தும் வெட்கப்படுகிறவர்கள், அவைகளைக் கருத்தில் கொள்ளாதவர்கள், அவர் மகிமையோடும் வல்லமையோடும் அவருடைய பரிசுத்தமும் உண்மையுமுள்ள தூதர்களோடு வெளிப்படும் போது அவர் அவர்களை வெட்கப்படுத்துவார். புத்தியுள்ள கன்னிகைகள் அவரோடு கூட கனப்படுத்தப்படுவார்கள், மகிமைப்படுத்தப்படுவார்கள்.

அடைக்கப்பட்ட கதவு, உலகத்தோடு ஒட்டி இருப்பவர்களுக்கு எந்த வித சம்பந்தமும் இல்லாதிருக்கிறது. அது க-யாண விருந்துக்கு

செல்லும் வழியில் உள்ள கதவு. அதாவது கன்னிகை வகுப்பினராக அர்ப்பணித்துக் கொண்டவர்களைத் தவிர வேறு எவருக்கும் ஒரு போதும் திறக்கப்பட்டதில்லை. அனலுடன் உடன்படிக்கையை கவனமாகக் காத்துக் கொள்ளுகிறவர்களை, அனலற்ற வெது வெதுப்பான கவலை நிறைந்தவர்கள் மற்றும் தங்களுடைய கடமையை நிறைவேற்றத் தவறுபவர்களிடம் இருந்து அறுப்பின் சத்தியம் புடைத்து, பிரித்து எடுத்த பின்னர் அந்த கதவு மூடப்படும். ஆண்டவருக்கு ஸ்தோத்திரம், இங்கு மூடப்படுவது இரக்கத்தின் கதவோ இல்லையென்றால் அனுக்கிரகத்தின் கதவோ அல்ல. ஆனால் அது கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரரும் மணவாட்டியாகவும் இருக்கும்படியான அந்த முக்கியமான நன்மைக்கான கதவாகும். ஆனால் புத்தியில்லாத கன்னிகளுக்கு எதிராக மூடப்படும் அந்த கதவு மறுபடியும் அவர்களுடைய தட்டுதலுக்கு திறக்கப்படாமல், “தீங்கு நாளின்” உபத்திரவத்தை சந்திக்கும்படி அது அவர்களை வெளியே நிற்கும்படி செய்யும். அப்பொழுது அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும். இருந்தாலும், அவர்கள் ஆண்டவரின் அன்பு, இரக்கம் என்கிற அவரது கரத்தின் கீழாகவும், ஆண்டவரின் அனுகூலத்திற்கும் விசேஷ பராமரிப்புக்கும் கீழாகவும் இருக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் மேல் கடந்து செல்லுகின்ற உபத்திரவங்கள் அவர்களை சுத்திகரிக்கவும், அழுக்குகளை நீக்கவும் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் மனம் திரும்புகிற கன்னிகைகள் ஆண்டவரின் உபயோகத்திற்காக தகுதியுள்ள பாத்திரமாக்கப்படுகிறார்கள். ஆனாலும், அவர்கள் அழைக்கப்பட்ட உன்னதமான கனத்திற்காக அல்ல. ஏனெனில், அவர்கள் அதற்கு தகுதியற்றவர்கள் என்று நிரூபித்து விட்டார்கள். பாபிலோனின் ஆவியில் சிறிதளவு பங்கு பெற்றாலும், தங்களுடைய சுயாதீனத்தை அவளிடம் விட்டுக்கொடுக்கும் போது எவ்வளவு தான் சிறியதாக இருந்தாலும் கூட அவர்கள் அவளுடைய பாவத்தில் பங்கு பெற்றவர்கள் என்று தேவனால் எண்ணப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் மேல் வரும் வாதைகளில் இருந்து தப்ப தகுதியற்றவர்கள் என்று எண்ணப்படுவார்கள். வாதைகள் வருவது அவசியமாக இருக்கிறது. பாபிலோன் அழிக்கப்படுவதற்காக மாத்திரமல்ல, இதுவரை முதிர்ச்சி பெறாமல் அவளுக்குள் தங்கியிருக்கும் கோதுமை மணிகள் சுத்திகரிக்கப்படவும், பிரித்தெடுக்கப்படுவதற்குமாகும். இது அவசியம், ஏனெனில் புத்தியில்லாத கன்னிகைகள் பாபிலோனின் மதுவின் மயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.



ஆண்டவரோடு க-யாணத்திற்கு செல்லுவது, திருமண ஊர்வலத்தில் யூத மணவாட்டி சந்தோஷமாக தன்னுடைய மணவாளன் வீட்டிற்கு, சங்கீதத்தோடும் எரிகின்ற தீவட்டிகள் மற்றும் எல்லாவிதமான களிப்போடும் அழைத்து செல்லப்படுவதில் அழகாக விளக்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக அவள் ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள்ளும், அவர் அளித்த விருந்துக்குள்ளும் பிரவேசித்தாள். இப்படியாகத்தான் புத்தியுள்ள கன்னிகைகள் இப்போது உட்பிரவேசிக்கிறார்கள். முதலாவதாக மணவாளனின் பிரசன்னத்தைக் குறித்து கேட்கும் வேளையில் சந்தோஷம் உண்டாகிறது. அவர்களும் மனமகிழ்ச்சியோடு எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு, அவரோடு இருக்கவும், ஆயத்தம் பண்ணப்பட்ட விருந்திற்காகவும் செல்லுகிறார்கள். தற்போதும் கூட விசுவாசத்தினால் வருகிற விருந்தை அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஏனெனில், மணவாளன் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட மணவாட்டிக்கு என்று வைக்கப்பட்டிருக்கும் மகா மேன்மையும் அருமையுமான காரியங்களை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறார். மேலும், அவர் தம்முடைய கிரியையான உலகத்தை ஆசீர்வதித்தல், உலகத்தை சீர்படுத்தி பழைய நிலைக்கு கொண்டு வருவது போன்ற காரியங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். இதில் மணவாட்டி பங்கு பெறுவது அவளுக்கு கிடைத்த சிலாக்கியமாகும். நாம் வரவேற்பு அறைக்குள் நுழைந்து, இராஜ்யத்தின் நன்மையான, வர இருக்கிற விருந்துக்கான, அடையாளங்களை காண்பதினால், நாம் ஏற்கெனவே ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள் நுழைந்து விட்டோம். ஏற்கெனவே வரயிருக்கிற நன்மையானவைகளைப் பற்றி முன்னதாக அறிந்து கொண்டோம். ஏற்கெனவே நாம் மனதளவில் அவருடைய கிருபையின் ஐசுவரியமுள்ள பொக்கிஷங்களை விருந்தாக உண்டு வருகிறோம். விசுவாசத்தினால் நாம் ஆண்டவரின் பந்தியில் அமர்ந்துள்ளோம், அவர்தாமே தம்முடைய

வாக்குத்தத்தத்தின்படி (லூக். 12:37) பரிமாறிக் கொண்டு இருக்கிறார்.

அறுப்பு காலத்தில் வெளியாக்கப்பட்ட விலையேறப்பெற்ற சத்திய விருந்து என்பது, 1335 நாட்கள் முடிந்த வேளையில் (தானி. 12:12), அறுப்பின் ஆரம்ப காலத்தில் 1875ம் ஆண்டு துவங்கியது. இது தீர்க்கதரிசியினால் ஏற்கெனவே கூறப்பட்டபடி, “ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்” என்கிற ஆசீர்வாதமாகும்.

## க-யாண வஸ்திர பரீட்சை

நம்முடைய ஆண்டவரின் இன்னொரு உவமை (மத். 22:1-14) பரிசுத்த ஸ்தல வகுப்பினர் மேற்கொண்டும் பரீட்சிக்கப்படுவதைக் காட்டுகிறது. அறுப்பின் செய்தியை கேட்டு அறிந்து கொண்டவர்கள் கூட பரீட்சிக்கப்படுவதையும் பிரித்தெடுக்கப்படுவதையும் காட்டுகிறது. ஒரு உவமையில் மணவாளனோடு திருமணத்திற்கு செல்லுகிற புத்தியுள்ள கன்னிகைகளும், இந்த உவமையில் உள்ள “விருந்தாளிகள்” அர்ப்பணம் செய்து கொண்ட வகுப்பினர் தான். அவர்கள் இதுவரை தங்களை உண்மையுள்ளவர்களாக, கீழ்ப்படிதல் உள்ளவர்களாக காட்டியுள்ளார்கள். சொல்லப்போனால், இந்த வகுப்பினர் அநேக உவமைகள் மூலம் விஸ்தரித்து காட்டப்பட்டுள்ளனர். ஒவ்வொன்றும் ஒரு விளக்கம் உள்ளதாக, தனக்கே உள்ள தன்மையோடு காட்டப்பட்டுள்ளது. அவர்கள் புத்தியுள்ள கன்னிகைகளாக, திருமணத்தி-ருந்து திரும்பி வரும் தங்களுடைய ஆண்டவருக்காக காத்திருக்கும் வேலையாட்களாக, ஒரு க-யாணத்திற்கு அழைக்கப்பட்ட விருந்தாளிகளாக, ஒரு மணவாட்டியாகவும் உதாரணப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாக, கிறிஸ்துவின் மணவாட்டியாகப் போகிறவர்களாக, கிறிஸ்து தங்களுடைய தலைவராக, அவருக்குக் கீழ் இருக்கும் வீரர்களாக, திராட்சைச் செடியான கிறிஸ்துவின் கொடிகளாக, கிறிஸ்துவே தலைக்கு மூலைக்கல்லாக இருக்கிற ஜீவனுள்ள கற்களாக, கிறிஸ்து ஆசிரியராக தாங்கள் அவருடைய மாணாக்கராக, அவர் மேய்ப்பனாகவும், அவருடைய ஆடுகளாகவும் இன்னும் இது போன்றும் இருக்கிறார்கள். இவைகளை நாம் கவனிக்கும் போது, அவைகள் தெளிவான வித்தியாசமான



விளக்கங்களாக ஒவ்வொன்றும் தனித்தனியானதாக இருப்பதையும், அது கற்றுக் கொடுக்க விரும்பின பாடத்தை கற்றுக் கொள்ள முற்படுபவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதையும் நாம் நினைவு கூற வேண்டும். இந்த உவமைகளை நாம் ஒன்றாக்க முயற்சித்தால், எப்படி ஆலயத்தில் உள்ள ஒரு கல் ஒரு திராட்சைச் செடியில் உள்ள கொடியாகும், எப்படி ஆடுகள் வீரர்களாக இருக்க முடியும், எப்படி ஒரு க-யாணத்திற்கு அழைக்கப்பட்ட விருந்தாளிகள் வேலையாட்களாக இருக்க முடியும், அல்லது மணவாட்டியாக இருக்க முடியும் என்று வியப்புற்றால், நாம் அதை புரிந்து கொள்ளத் தவறி விடுகிறோம். உண்மையில் ஆட்டுக்குட்டியானவரின் க-யாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களாகவோ, இல்லையெனில் க-யாணத்தில் இருந்து திரும்பி வரும் வரை காத்திருக்கும் வேலையாட்களாகவோ நாம் அழைக்கப்படவில்லை. ஆனால் நாம் மணவாட்டியாக இருக்கும்படியாக அழைக்கப்பட்டு இருக்கிறோம். ஆனாலும், சில விஷயங்களை பொறுத்த வரை நாம் வேலைக்காரர் போன்று, விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் போன்று இருக்க வேண்டும். உண்மையுள்ள ஊழியக்காரர்களாக ஜாக்கிரதையாக காவல் காக்கிறவர்களாக, இருப்பதோடு இன்னொரு விதத்தில் விருந்தாளிகளாகவும் இருக்க வேண்டும்.

இந்த உவமை மணவாட்டியை உதாரணமாக வைத்து விளக்கப்படுத்த முடியாததைக் காட்டுகிறது. மணவாட்டி என்பது தெரிந்து கொள்ளப்பட்ட சபை, ஒட்டு மொத்தமாக கிறிஸ்துவின் உடன் சுதந்திரராக இருப்பதற்கு அடையாளமாக உள்ளது. இது ஆயத்தமாக இருக்க வேண்டியதைக் குறிப்பதோடு தனிப்பட்ட நபர் பரீட்சிக்கப்படுவதையும், அதன் மூலம் சிலர் ஏற்றுக் கொள்ளப்படுவதையும், சிலர் நிராகரிக்கப்படுவதையும் காட்டுகிறது. இப்படி பரீட்சிக்கப்பட்டவர்கள் விருந்தாளிகளின் அறையில் ஏற்கெனவே இருக்கிறார்கள். அவர்கள் தான் களைகளின் மத்தியி-ருந்து அறுவடை செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட கோதுமையானவர்கள், புத்தியில்லாத கன்னிகைகளிடம் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட புத்தியுள்ள கன்னிகைகள். அவர்கள் அறுப்பின் சத்தியத்தைக் கேட்டு ஏற்றுக்கொண்டவர்கள். அவர்கள் தான்

ஆண்டவரோடு இணையும் போது வரயிருக்கிற மகிமையையும், ஆசீர்வாதத்தையும் எதிர்பார்த்து, விசுவாசத்தினாலே மகிழ்ச்சி அடைகிறார்கள். இதுவரை அவர்கள் எல்லோரும் நன்றாக ஓடியுள்ளார்கள். ஆனால், தன்னுடைய ஓட்டத்தின் எல்லையை அடையும் வரை, "தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கக்கடவன்."

ஏற்றுக் கொள்ளத்தக்க தன்மை, க-யாணத்திற்கு ஆயத்தமாக இருப்பது என்பது, க-யாண வஸ்திரம் என்று அடையாளமாக இந்த உவமையில் காட்டப்பட்டுள்ளது. யூதர்களின் வழக்கப்படி க-யாணத்தின் போது, அழைப்பு விடுவிப்பர் வஸ்திரம் வழங்க வேண்டும். எல்லா விருந்தினர்களுக்கும் வெள்ளை சணல் வஸ்திரம் வழங்கப்படும். இப்படிப்பட்ட ஒரு வைபவத்தின் போது எந்த விருந்தினராவது க-யாண வஸ்திரம் தரித்திராது தன்னுடைய சொந்த வஸ்திரத்தில் காணப்படுவது வெட்கமான செயலாகவும், பெருமையைக் காட்டுவதாகவும், க-யாண விருந்து கொடுப்பவனுக்கு அவமரியாதைக்குரிய செயலாகவும் எண்ணப்படும்.

க-யாண வஸ்திரம், கிறிஸ்துவின் நீதியை அடையாளமாக காண்பிக்கிறது. இது நம்மை அழைத்த யேகோவாவினால் கொடுக்கப்பட்டதாகும். (ரோம. 8:30-34) இது அவரை நம்புகிற, அவர்மேல் விசுவாசம் வைக்கிற ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது. இது இல்லாமல் எவரும் ஆட்டுக்குட்டியானவரின் க-யாணத்திற்கு தகுதியானவர் அல்ல, இது இல்லாமல் விருந்தினர் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. அழைப்பு மற்றும் க-யாண வஸ்திரம், இரண்டும் அவசியமானது. உவமை காட்டுவது என்னவெனில், அப்படி வஸ்திரம் தரித்தவர்கள் மட்டும் விசேஷமாக ஆயத்தம்பண்ணப்பட்ட முன் அறைக்குள், அதாவது தற்போதைய சத்தியத்திற்குள், மணவாட்டி இறுதியாக தன்னை ஆயத்தம் பண்ணுகிற இடத்திற்குள் அனுமதிக்கப்படுகிறாள். (வெளி. 19:7) வஸ்திரமும் அழைப்பும் பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த விருந்தினர்கள் க-யாண விருந்திற்கு முன்பு (அறுப்பின் காலம்) தங்களுடைய வஸ்திரத்தை சரி பார்க்கவும், ஒருவரையொருவர் சந்தித்து, ஆயத்தம் பண்ணப்பட்டவைகளை சரிபார்க்கவும் செய்கிறார்கள். இப்படியாக தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கும் போது, தாங்கள் எதிர்பார்க்கிறதை எல்லோரும் சேர்ந்து விசுவாசத்தில் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய மனதில், சம்பாஷணையில் இருப்பதெல்லாம், மணவாளன், எதிர்காலத்தில் உள்ள உன்னதமான வேலை, மகிமையான சுதந்திரம், தற்போதுள்ள ஆயத்த வேலைகளைப் பற்றியது தான்.



இந்த முன் அறையில் (இந்த நல்லநேரம் மற்றும் நிலைமை) இப்பொழுது வெளிப்பட வேண்டிய திவ்ய சத்தியம் பிரகாசிக்கிற வெளிச்சமாக இருப்பதுடன், வாய்ப்புகளும், ஊக்கமும் கடைசியாக அலங்கரிப்பதற்கும், க-யாண விருந்திற்கு முழுவதுமாக ஆயத்தப்படவும் கொடுக்கப்படுகிறது. இருந்தபோதிலும், இப்படியான அனுகூலமான சூழ்நிலையின் மத்தியிலும், இங்கே ஒருவன் என்று குறிப்பிடப்பட்டவன் அழைத்தவரை, இராஜாவை, க-யாண வஸ்திரம் தரித்திராது அவமானப்படுத்துவான்.

இந்த உவமை சந்தேகத்திற்கு இடமின்றி கற்றுக் கொடுப்பது என்னவெனில், இவ்வளவு நாட்களும் ஆயத்தமாகவும் தகுதியாகவும் இருக்கிறதாக காணப்படுகிற, இதினிமித்தம் அறுப்பின் வெளிச்சத்திற்குள்ளாக கொண்டு வரப்பட்ட இந்த புத்தியுள்ள கன்னிகைகளுக்கு உள்ள இறுதியான, பொது பரீட்சை என்னவெனில் அவர்கள், வேதம் சாட்சியாய் இருக்கிறபடி, க-யாண விருந்திற்கு அவர்களுடைய நற்கிரியைகளினால் அழைக்கப்படவில்லை என்பதை உணர்ந்து கொள்ளுதலும், தங்களுடைய நிர்வாணத்தையும் அதிகமான குறைபாடுகளையும், முதலாவதாக தமது ஜீவனை ஈடு ப-யாகக் கொடுத்தவரின் புண்ணியத்தினால் மூடப்பட்டிருக்கிறது என்று உணர்ந்து கொள்ளுவதிலும், அவரால் தரிப்பிக்கப்பட்ட நீதியின் வஸ்திரம் மாத்திரம் அவர்களை தகுதிபடுத்தி இராஜாவுக்கு முன்பாக வரச் செய்கிறது என்பதை உணர்ந்து கொள்ளுதலும் சோதிக்கப்படும். எல்லாரும் வஸ்திரம் அணிய வேண்டும். ஒவ்வொருவனும் தன்னுடைய நற்கிரியைகளினால், வஸ்திரத்தை சித்திர தையல் வேலைகளினால் அழகுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த இறுதிப் பரீட்சை பெரிதான, பொதுவானதாக, முடிவான பரீட்சையாக இருக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியத்துவம் உள்ளதாக குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. நம்முடைய பரலோகப்

பிதா எவர்களெல்லாம் தாங்கள் ஒன்றுமில்லை என்று உணருகிறார்களோ, மகா பெரிய மணவாளன் தான் தங்கள் மீட்பர், ஆண்டவர், போதகர் என்று உணருகிறார்களோ அவர்கள் தான் மணவாட்டி கூட்டத்தில் இருக்க வேண்டும் என்று தீர்மானமாக இருப்பதைக் காட்டுகிறது.

ஓட்டத்தை நன்றாக ஓடிய எவரும், தங்களுடைய நம்பிக்கை பலன் அளிக்கும் வேளையில் விழுந்து போவதும், விசித்திரமாக உள்ளது. இருந்தாலும் இப்படியாக நேரிட வாய்ப்பு உண்டு என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆகவே அர்ப்பணம் செய்து கொண்டவர்கள் அனைவரும் சோதனைக்குள் விழாதபடி விழித்திருந்து ஜெபிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்போஸ்தலரும் "கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும்" என்று முன்னறிவித்திருக்கிறார். (1 தீமோ. 4: 1; 2 தீமோ. 3:1; 4: 3-5) ஆனாலும் சர்வ வல்லவரின் புயத்தின் மேல் நம்பிக்கையுடன் சாய்ந்து கொள்ளுகிறவனை தாங்க முடியாத அளவிற்கு காலங்கள் கொடியதாக இல்லை. உண்மையாகவே, ப- என்கிற இடுக்கமான பாதையில் பணிவுடன் செல்லுகின்றவர்களை இதற்கு முன்பாக இவ்வளவு நன்றாக தாங்கப்பட்டதும் இல்லை, அல்லது தேவனின் முழு சர்வாயுதவர்க்கத்தால் முற்றிலுமாக தரிப்பிக்கப்பட்டதும் இல்லை. தேவனுடைய அனுக்கிரகங்கள் அபரிமிதமாக இருப்பதும், தேவனுடைய கிருபையுள்ள திட்டங்கள் (ஆயிர வருட அரசாட்சியின் போது பூமியில் உள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும்படி சபையை உபயோகிப்பது) வெகு தெளிவாக விளங்குவதும், தாழ்மைக்கும் ஈடு ப-யாக செலுத்தப்பட்ட கிரயத்தை அதிகமாக உணர்ந்து கொள்ளுதலுக்கும் நேராக சிலரை வழிநடத்தாதிருப்பது விசித்திரமாகத் தோன்றுகிறது. ஈடுப-யின் மூலம் ஆக்கினைத் தீர்ப்பில் இருந்து விடுதலை கிடைக்கிறது; திவ்ய சுபாவத்திற்கும் கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரராவதற்கும் அழைப்பு உறுதிப்படுகிறது. ஆனால், சிலருக்கு இது எதிர்மாறான விளைவை ஏற்படுத்துவது விசித்திரமாகத் தோன்றுகிறது. இப்படிப்பட்டவர்கள், தங்களுடைய தகுதியின்மையை பாராது இருப்பது போன்று ஆண்டவரின் மாசற்ற பரிபூரணத்தையும் பாராதிருக்கிறார்கள். மேலும் தங்களை "பிரயோஜன மற்ற ஊழியக்காரர்களாக" பாராமல் சத்தியத்தினிமித்தம்



அவர்கள் விட்டுக்கொடுக்கும் சிறிய காரியங்களில், ஏதோ அற்புதமானது இருப்பது போன்றும், அது நம்முடைய ஆண்டவர் செய்ததற்கு இணையானது என்றும் நினைக்கிறார்கள். மேலும், வேதம் வெளிப்படுத்துகிற யுகங்களின் பெரிய திட்டத்தை செயல்படுத்துவதற்கு அவரைப் போலவே தானும் இன்றியமையாதவன் என்று நினைக்கிறான். இப்படிப்பட்டவர்கள் "தலையை பற்றிக் கொள்ளாதவர்களும்," அவருடைய மீட்பின் பெரிய வேலையை சரியான மரியாதையுடன் பார்க்கக் கூடாதபடி குற்ற உணர்வு உள்ளவர்களாக இருக்கிறார்கள். (கொலோ. 2:19) இவர்கள் "தங்களை பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றும் எண்ணுகிறவர்கள்." இவர்கள் இதை சாதாரணமானது என்று எண்ணுகிறார்கள். (எபி. 10:29) இவர்கள் தேவனுடைய ஆவியை நிந்திக்கிறார்கள். இவர்கள் வழியையும் (ஒரே வழியையும்) வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கட்டளையிடப்பட்ட ஒரே நாமத்தையும் மறுக்கிறார்கள். இந்த நாமத்தினால் ஆதாமிய ஆக்கினையி-ருந்து நாம் இரட்சிக்கப்பட்டு, தேவனோடு முற்றுமாக ஒப்புரவாக வேண்டும்.

இவர்கள் உவமையில் ஒரு கூட்டத்தார் என்று கூறப்பட்டுள்ளார்கள். இவர்கள் விருந்துக்கு செல்ல மேற்கொண்டு தொடர்ந்து செல்லாதபடி தடை பண்ணப்பட்டிருக்கிறார்கள். அவர்களால் அதன் ஆசீர்வாதங்களையும் சந்தோஷங்களையும் கூட மேலும் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள். இவர்கள் மகா உபத்திரவ காலத்தின் கொடுமை மற்றும் உபத்திரவத்தில் பங்கெடுக்கும்படி உலகத்தின் "புறம்பான இருளிலே" இறுதியில் தள்ளப்படுவார்கள். இவர்களுக்கு, நம்முடைய, நன்மை மற்றும் அபிவிருத்திக்கென ஏற்படுத்தப்பட்ட, இப்பொழுது வெளிப்படுத்தப்படும் சத்தியங்கள் இடறலுக்கேதுவானதாக மாறுகிறது. ஏனெனில், அவர்கள் அதை சரியானபடி பயன்படுத்தவில்லை. இஸ்ரயேலும் கூட, தேவனால் அதிகமான கடாட்சம் பெற்றிருந்தவர்கள், பெருமை கொண்டு, அந்த கடாட்சங்களுக்கு தாங்களே தகுதி உள்ளவர்கள், தேவனுடைய திட்டங்களுக்கு இன்றியமையாதவர்கள் என்று எண்ணியபடியால் தேவன் அவர்களை எல்லா கிருபைகளி-ருந்தும் தள்ளிவிட்டார். இதே போன்று இதுவரை நன்றாக ஓடியவர்கள் தாழ்மையுடன் இருக்க

தவறிவிடுகிறார்கள். தங்களுடைய நீதியினிமித்தமே, தேவனுக்கு முன்பாக நிற்க தகுதி உள்ளவர்கள் என்று நினைக்க ஆரம்பிக்கிறார்கள். கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட நீதியின் வஸ்திரத்தை, க-யாண வஸ்திரத்தை அணிந்து கொள்ளாமல் க-யாண விருந்தில் பங்கு பெறுவதற்கு, ஓர் உரிமையை எடுத்துக் கொள்கிறார்கள்.

மிகவும் துக்கரமானதாக இருந்தாலும், இப்பொழுது நாம் பார்த்துக் கொண்டிருக்கிற உவமையின் தீர்க்கதரிசன அம்சம் கூட, நம் கண்களுக்கு முன்பாக நிறைவேறிக் கொண்டு இருக்கிறது; அதோடு கூட இது, நாம் “அறுப்பின்” காலத்தில் உள்ளோம் என்பதற்கு இன்னொரு உதாரணமாக உள்ளது. தற்போதுள்ள தேவனுடைய ஆவிக்குரிய கடாட்சத்தை அனுபவிக்கிற சிலர் இப்படியாக க-யாண வஸ்திரத்தை கழற்றி, ஒரு பக்கமாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் இன்னும் அவரை ஆண்டவர் என்று கூறினாலும், அவர் அவர்களுக்கு எப்படி ஆண்டவர் ஆனார் என்பதை உணராது நிந்திப்பதோடு அவருடைய செய-ல் உள்ள முக்கியத்துவத்தையும், வ-மையையும் மறுத-க்கிறார்கள். மேலும் அவருடைய இந்த செய-னால் தான் க-யாணத்திற்குரிய அழைப்பிற்கு அவர்கள் தகுதியுள்ளவர்கள் ஆனார்கள் என்பதையும் மறுத-க்கிறார்கள். (ரோம. 14: 9; 5:2) அவர்களுக்கு மீட்பர் தேவையில்லையென்று துணிகரமாக அறிக்கையிடுகிறார்கள்; மேலும் சாதுரியமான பேச்சாலும் வேதத்தை தவறான முறையில் புரிந்து கொண்டு தங்களையும் மற்றவர்களையும் அவர்கள் ஆட்டு மந்தைக்குள் ஈடு ப- வழியாக அல்லாமல், இன்னொரு வழியாக வந்ததாக சொல்- நம்ப வைத்து விடுகிறார்கள். அதாவது அவர்கள் தங்களுடைய சுய நீதியினிமித்தம் வந்ததாக நம்ப வைக்கிறார்கள். இதை அப்போஸ்தலர் “அழுக்கான கந்தை” என்கிறார். சிலர் தங்களுக்கு பரிந்து பேசுகிறவர் தேவையில்லை, ஆனாலும் தேவனால் பரலோக மகிமைக்கு இறுதியாக தெரிந்து கொள்ளப்பட்டு இருக்கிறோம் என்கிறார்கள்.

கிறிஸ்துவின் ஈடு ப-யின் மதிப்பை நிராகரிப்பதின் மூலம் இந்த க-யாண வஸ்திரத்தை கழற்றி விடுவது என்பது, தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தில் 1878 கோடையில் முதலாவதாக



தோன்றியது. அந்த நாள் முதல் அறுப்பின் வெளிச்சமாகிய விருந்தினர் அறையின் வெளிச்சத்திற்குள் வந்த அனைவரையும் பரீட்சித்துக் கொண்டு இருக்கிறது. மணவாளனின் பிரசன்னத்தின் போதே இந்த தவறு வந்துவிட்டது. சிலர் மிகவும் அவசியமானதாக இருக்கின்ற க-யாண வஸ்திரத்தை ஒதுக்கி வைத்து இருக்கிறார்கள். விருந்தினர்கள் மத்தியில் எப்படிப்பட்ட ஒரு குழப்பத்தை அது உண்டு பண்ணியிருக்கிறது! எப்படிப்பட்ட பிரிவினை! எப்படிப்பட்ட புடைத்தல்! நீதியின் வஸ்திரத்தைக் கழற்றி, ஒதுக்கி வைப்பவர்கள், அதே போன்று மற்றவர்களும் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். உண்மையாக இருக்கிறவர்கள் ஆட்சேபித்தாலும், இவர்கள் முயற்சிக்கிறார்கள். பிரிவினை வேலை தொடர்ந்து கொண்டு இருக்கிறது, விருந்தினர் அறையிலும் கூட க-யாணத்திற்கு முன்னதாக உள்ள கடைசி மணி வரை இது தொடரும் என்பதில் சந்தேகமில்லை.

இதற்கிடையில், தற்போது, அதரிசனமாக பிரசன்னமாகி இருக்கும் இராஜா, மணவாளன் தன்னுடைய விருந்தில் பங்கு பெறப் போகிறவர்களைக் குறித்து வைக்கிறார். இந்த கடைசி பரீட்சையை அவர் அனுமதிக்கிறார் என்று உவமையில் முன்னுரைக்கப் பட்டிருந்தது. க-யாண வஸ்திரத்தை கழற்றி வைத்தவரிடம் அவர் கேட்கிறார் : “சினேகிதனே, நீ க-யாண வஸ்திரம் இல்லாதவனாக இங்கே எப்படி வந்தாய்?” அவனுக்கு கிடைத்திருக்கின்ற சிலாக்கியமும், அவன் அனுமதிக்கப்பட்டிருப்பதும் அவன் க-யாண வஸ்திரம் அணிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தான் என்றும், அவன் உள்ளே வந்ததே இலவசமாய் தான் என்றும் நாசூக்காக, ஆனால் தெளிவாக அவனுக்கு சொல்லப்பட்டது. கிறிஸ்துவின் மரணம் தங்களுக்கான மீட்கும் பொருள் என்பதை யாராவது மறுக்க முடியுமா? இப்போது தெளிவாகக் காணப்படுகின்ற, தற்கால சத்தியமாகிய கர்த்தரின் பிரசன்னம் மற்றும் தேவனுடைய ஆழமான மற்ற காரியங்களுக்குள், ஆரம்பத்தில் இந்த வஸ்திரத்தை அணியாமல் வந்திருக்கிறேன் என்று யாராவது கூற முடியுமா? ஒருவரும் வஸ்திரம் இல்லாமல் நுழைந்ததில்லை. மற்றவர்கள் தேவனுடைய ஆழமான காரியங்களைப் பார்க்க இயலாது. (1 கொரி.

*2:7-14)* உவமையில் காணப்படுகிறபடியே வஸ்திரத்தை நிராகரித்தவர்களிடம் இந்தக் கேள்வியைப் கேட்ட போது, அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. அவர்கள் வஸ்திரம் தரித்திருந்த போதுதான் அனுமதிக்கப்பட்டனர் என்பதை அவர்கள் அறிக்கையிட விரும்புவதில்லை.

"அப்பொழுது இராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக்கொண்டு போய், புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்." இந்த "புறம்பான இருள்" உலகப் பிரகாரமாக ஜீவிக்கிறவர்களைப் பற்றிக் கொள்ளுகிறது. இந்த இருளாகிய மனுஷீக எண்ணங்கள், தேவனுடைய வார்த்தையால் வழி நடத்தப்படாமல், அவருடைய வெளியாக்கப்பட்ட மீட்கும் பொருள், இளைப்பாறுதல் என்பவைகளால் நேர்மையாக்கப்படாமல் இருக்கிறது. கட்டுதல் அல்லது தடை பண்ணுதல் உண்மையாகவே அர்ப்பணம் செய்து கொண்டவர்களுக்கு முன்பாக ஒரு உதாரணமாக இருக்கிறது. அதோடு மாத்திரமல்லாது, உண்மையான விசுவாசத்துடன் இருப்பவர்களை ராஜாவின் பார்வையில், வஸ்திரத்தின் அவசியத்தையும் மதிப்பையும் வெகு தெளிவாக பார்க்கும்படி உதவி செய்கிறது. கட்டும்படி உத்தரவு பெற்ற பணிவிடைக்காரர்கள் இந்த விஷயத்தைக் குறித்த சத்தியத்தை பெற்றிருக்கிறார்கள். இவர்களால் இப்படிப்பட்டவர்களின் செல்வாக்கை, விலையேறப்பெற்ற இரத்தம், நமக்காக வாங்கப்பட்ட நீதியின் வஸ்திரம் ஆகிய இவைகளின் அத்தியாவசியம் மற்றும் மதிப்பு ஆகியவைகளின் வேதாகம சாட்சியங்களின் மூலம் கட்ட முடியும். வஸ்திரத்தை கழற்றியவர்கள், வேதத்தில் சொல்லப்பட்டவைகளுக்கு எதிராக தங்களை தாங்களே நியாயப்படுத்திக் கொள்ள, வெளிச்சத்துக்கு வெளியே "புறம்பான இருளுக்குள்" போராடுகிறார்கள். உலகத்தாரைப் போலவே அவர்களுக்கும் கிறிஸ்துவின் சிலுவை தடைக்கல்லாகவும், முட்டாள் தனமாகவும் இருக்கிறது. ஆனால் உண்மையுள்ளவர்களுக்கு "அது தேவ பலனும் தேவ ஞானமுமாய் இருக்கிறது."

அந்த உவமையில், கட்டப்பட்டு, புறம்பான இருளில் தள்ளப்பட்டவர்கள் முத-ல் அறுப்பின் சத்திய வெளிச்சத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதையும் நாம் கவனிக்காமல் இருந்து



விடக் கூடாது. இதனிமித்தமாக அவர்களுடைய பொறுப்பும், தண்டனையும் இப்படிப்பட்ட சிலாக்கியம் இல்லாதவர்களின் பொறுப்பைக் காட்டிலும் தண்டனையைக் காட்டிலும் அதிகமாக இருக்கும். பேர் சபையில் உள்ள ஆயிரக்கணக்கானவர்கள் அவர்கள் மத்தியில் உள்ள முக்கிய போதகர்களின் போதனைகளை, பாவிகளின் மீட்கும் பொருளாக இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் உள்ள வல்லமையில் விசுவாசம் காட்டாத போதனைகளை, பின்பற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட ஜனங்கள் முழு அளவுக்கு பொறுப்பாளிகளாகக் கருதப்பட மாட்டார்கள். ஏனெனில், அதைக் குறித்ததான போதுமான வெளிச்சம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

ஆயிரக்கணக்கான பேர்கிறிஸ்தவர்கள், கிறிஸ்து தங்களுடைய பதிலீடாக அல்லது மீட்கும் பொருளாக வந்தார் என்பதை ஒரு போதும் நம்பினதில்லை. அவர்கள் ஒரு போதும் அவரால் கொடுக்கப்பட்ட நீதியின் வஸ்திரத்தை தரித்ததுமில்லை. இந்த உவமை ஒரு சில குறிப்பிட்ட வகுப்பினருக்குத் தான். அவர்கள் ஒரு முறை தெளிவாக ஈடு ப-யை அறிந்து உணர்ந்தவர்கள், அந்த வேளையில் அதன்மூலம் வந்த சிலாக்கியத்தால் க-யாண விருந்திற்கு முன்னால் அறுப்பின் நேரத்திற்கான, இராஜா பிரசன்னமாகி இருக்கும் நேரத்திற்கான, விசேஷமான வெளிச்சத்திற்குள் பிரவேசித்தவர்கள். ஆகவே ஒரு முறை வெளிச்சத்திற்குள் வந்தவர்கள் தேவனுடைய நல் வார்த்தையும் இனி வரும் உலகத்தின் பலன்களையும் ருசி பார்த்தவர்கள் பக்தியற்ற, அநியாயமான, அழிவுக்கேதுவான படியை எடுத்து வைக்காதபடி காத்துக் கொள்ள வேண்டும். எபி. *10: 26-31; 6: 4-8*

இந்த உவமைகளைப் பார்க்கும் போது, எல்லா புத்தியுள்ள கன்னிகைகளும் க-யாணத்திற்கு சென்று விட்டார்கள் (இறுதியாக விசேஷமாக ஆயத்தம் பண்ணுகிற விருந்தினர் அறைக்குள்) என்றும், இந்த உவமை ஆரம்பிப்பதற்கு முன்னால் குறிப்பிடப்பட்டு உள்ள பரீட்சைக்கு முன்பதாகவே கதவு அடைக்கப்பட்டு விட்டது என்றும் தவறாக எண்ணி விடக்கூடாது. சந்தர்ப்பம் என்கிற கதவு, அர்ப்பணம் செய்து கொண்ட, கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரமாகிய க-யாண வஸ்திரத்தை விசுவாசத்தினால் தரித்துக் கொண்ட அனைவருக்கும்

இன்னும் திறந்திருக்கிறது; இதோ மணவாளன்! என்கிற செய்தி இன்னும் வந்து கொண்டிருக்கிறது; புத்தியுள்ள கன்னிகைகள் இன்னும் அவரைச் சந்திக்கும்படி போய்க் கொண்டு இருப்பதோடு, அவரோடு கூட க-யாணத்திற்குள் நுழைந்துக் கொண்டும் இருக்கிறார்கள்; புத்தியில்லாத கன்னிகைகள், தங்கள் பாத்திரங்களில் எண்ணெயோடு இன்னும் திரும்பி வரவில்லை. ஆனால், இராஜா வந்த வேளையில் இருந்து (1878ல் இருந்து நம்முடைய ஆண்டவர் யூதர்களின் ராஜா என்று நிழலாக வந்த அதே வேளையில் இருந்து மத். 21:1-13), விருந்தாளிகளை பரீட்சை பண்ணுவது, அவர்களுடைய க-யாண வஸ்திரத்தை சோதித்தறிவது போன்றவை நடந்து கொண்டு இருக்கிறது. புத்தியுள்ள கன்னிகைகள் இன்னும் மணவாளனின் பிரசன்னத்தைக் குறித்து அறிந்து சந்தோஷமாக விருந்துக்கு வந்து கொண்டிருக்கும் போது, ஏற்கெனவே உள்ளே இருப்பவர்களில் சிலர் தாங்கள் அங்கே இருக்க தகுதியில்லாதவர்கள் என்பதை நிரூபித்துக் கொண்டு இருக்கும் வேளையில், அவர்களுடைய கைகளும் கால்களும், கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் ஆண்டவருடைய பிரசன்னம் பற்றிய தற்கால சத்தியத்தைக் குறித்த எண்ணம், உணர்வு மற்றும் எதிர்காலத்தில் நடக்க வேண்டிய வேலையைப் பற்றிய எண்ணம் ஆகியவை மென்மேலும் மங்கலாகத் தொடங்குகிறது. தவறான வாக்குத்தத்தங்களைப் பற்றிய தவறான எண்ணங்களால், அவர்களுடைய விருப்பத்தின்படி படிப்படியாகவோ அல்லது துரிதமாகவோ உலகப்பிரகாரமான காரியங்களாகிய "புறம்பான இருளுக்கு" நேராக ஈர்க்கப்படுகின்றனர். சரியான விதத்தில் வஸ்திரம் தரித்த பரிசுத்தவான்களுக்கு கிடைக்கிற உள்ளான வெளிச்சத்திற்கு இது எதிர்மாறாக இருக்கிறது. நிச்சயமாகவே, இதற்குள் வருகிற கன்னிகைகள் அனைவரும் இந்த விஷயத்தில் பரீட்சிக்கப்பட வேண்டும். இந்த பரீட்சையைக் குறித்து சந்தோஷமாக, பயம் இன்றி இருப்பவர்கள் அனைவரும் தங்களுடைய இருதயத்தில் இருந்து பின்வருமாறு கூறமுடியும் :

"இயேசுவின் இரத்தம், நீதி இவைகளைத் தவிர
வேறு எதிலும் என்னுடைய நம்பிக்கை கட்டப்படவில்லை.
என்னுடைய சரீரத்தை நம்ப துணியமாட்டேன்,
ஆனால் முழுமையாக இயேசுவின் நாமத்தின் மேல் சாய்கிறேன்.



கிறிஸ்து என்கிற உறுதியான கன்மலையின் மேல்
நான் நிற்கிறேன்;
மற்றவைகள் எல்லாம் அமிழ்ந்து போகின்ற மணல் தான்."

இப்படிப்பட்டவர்கள் மகிழ்ச்சியுடன் கீழ்க்கண்டவற்றைப் பாட முடியும் :

"எனது சமாதான பிரபு இப்போது பிரசன்னமாயிருக்கிறார்,
அவரது முகத்தி-ருந்து வெளிச்சமும் என்மேல் வீசுகிறது.
பிரியமானவர்களே கவனியுங்கள்! அவர் பேசுகிறார்;
'என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்!'
சிலுவை என் பாவங்களை நன்றாக மூடுகிறது;
கடந்த காலம் இரத்தத்திற்கு கீழாக உள்ளது;
நான் இயேசுவையே எல்லாவற்றிற்கும் நம்புகிறேன்;
என் தேவனுடைய சித்தமே என் சித்தம்."

## பரம அழைப்பின் முடிவு கதவு மூடப்படுவது அல்ல

எல்லா கன்னிகைளும் உள்ளே நுழைவதற்கு தருணம் பெறும் வரை, எல்லா புத்தியுள்ளவர்களும் அல்லது ஆயத்தமானவர்களும் நுழைந்த பின்னரே கதவு மூடப்படும் என்று வேதம் தெளிவாக காட்டினாலும், க-யாண விருந்திற்கு கதவு மூடப்படும் சரியான தேதியை அது கொடுக்கவில்லை.

ஒரு திறந்த கதவு, சில நிலைமைகளுக்கும் சிலாக்கியங்களுக்கும் செல்வதற்கான ஒரு வாய்ப்பைக் குறிக்கிறது. ஒரு அடைக்கப்பட்ட கதவு இப்படிப்பட்ட சிலாக்கியம் அல்லது தருணத்திற்கேதுவானவைகள் நிறுத்தப்படுவதைக் காட்டுகிறது. சுவிசேஷ யுகத்தின் போது உள்ள சிலாக்கியம், அழைப்பு அல்லது வாய்ப்பு கிறிஸ்துவுக்குள் இருக்கிற விசுவாசிகளுக்கு நிபந்தனைகளுடன் கொடுக்கப்படுகிறது. இது கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகும்படி, அவரோடு பரலோக இராஜ்யத்தில் இருக்கும்படி திவ்ய சுபாவத்திற்கான வாசலாகும். இதன் வழியாக, "இந்த கிருபையில் பிரவேசிக்கும்படி சிலாக்கியத்தைப் பெற்று, தேவ மகிமையை அடைவோம் என்கிற நம்பிக்கையில் நிலைத்திருக்கிறோம்." (ரோம. 5:2) யுகம் முழுவதும் திறந்திருக்கிற

இந்தக் கதவு ஒரு சமயத்தில் மூடப்பட வேண்டிய ஒன்றாகும். கன்னிகைகளின் உவமையில் இந்த மூடப்படுதல் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது இப்படியான எல்லா வாய்ப்புகளும் சிலாக்கியங்களும் நிறுத்தப்படுவதாகும். கன்னிகைகளைப் பற்றிய இந்த உவமை, உண்மையான ஜீவனுள்ள சபையில் உள்ளவர்கள் மத்தியில், இந்த யுக இறுதியில் நடைபெறுகின்ற காரியங்களைக் குறிக்கிறது. இந்த உவமையில் உள்ள வாசல், சில விசேஷ சிலாக்கியங்கள், இறுதியாக, சுவிசேஷ யுகத்தின் அனைத்து சிலாக்கியங்களின் இலக்கு நிறைவு பெறுவதை குறிக்கிறது. இது அறுப்பின் காலத்தில் புத்தியுள்ள கன்னிகைகளுக்கு திறந்து வைக்கப்பட்டு இருக்கும். இந்த வகுப்பினர் அனைவரும் இந்த சிலாக்கியங்களைப் பெற்ற பின்னர் கதவை மூடுவது என்பது சுவிசேஷ யுகத்தின் எல்லா அனுகூலங்களும், சிலாக்கியங்களும் முடிவடைவதைக் குறிப்பிடுகிறது. ஏனெனில், விருந்து என்பது முழுமையான சுவிசேஷ நன்மைகள், சிலாக்கியங்கள் என்பவைகளை, எல்லாவற்றிற்கும் மேலாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்ய மகிமைகளுக்கு வழிநடத்துகிற ஒரு மாபெரும் இலக்கைக் குறிப்பிடுகிறது.

வாய்ப்பு மற்றும் சிலாக்கியத்திற்காக உள்ள இந்த "வாசல்" சீக்கிரத்திலே அடைக்கப்பட உள்ளது என்பதை எண்ணிப் பாருங்கள். நம்முடைய ஆண்டவர் அதை ஒரு வழி என்று குறிப்பிட்டு, சுவிசேஷ யுகத்தின் போது அதை கண்டு பிடிப்பதும் அதற்குள் பிரவேசிப்பதும் கடினமானது என்று கூறினார். இராஜ்யத்தின் அழிவில்லாத கனத்தில் பங்கு பெற வேண்டும் என்றால், அதற்கு வழி நடத்துகிற வேறு எந்த வாசலும் கிடையாது என்பதால், நாம் உள்ளே பிரவேசிப்பதற்கு மிக அதிகமாக முயற்சி எடுக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். ஆகவே தான் நமது ஆண்டவர் கூறினார்: "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள். அநேகர் உட்பிரவேசிக்க வகை தேடினாலும் அவர்களாலே கூடாமற் போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வீட்டெஜமான் எழுந்து கதவை பூட்டின பின்பு" உட்பிரவேசிக்க இயலாது. (லூக். 13:24,25) இந்த இடுக்கமான வழி என்பது நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி (தொகுதி 1, பக். 287), ஆண்டவருடைய திட்டத்திற்கும் வேலைக்கும் அதன் மேல் உள்ள ஆர்வத்தால் சுய நலன்களை ப-யாக செலுத்துவது தான். இந்த வழி இடுக்கமானதாக ஆக்கப்பட்டிருப்பதன் காரணம், தற்போதைய காலத்தின் சூழ்நிலைதான். இது சத்தியத்திற்கும் நீதிக்கும் எதிராக வந்த உலகத்தின் ஆவியினால் இப்படியாயிற்று. ஆகவே நம்முடைய தலையானவரும் முன்னோடியாக இருக்கிறவரின் அடிச்சுவடுகளை பின்பற்றி செல்லுகிறவர்கள், வழி இடுக்கமாக அல்லது கடினமானதாக இருக்கக் காண்பார்கள். அவர்கள் உபத்திரவத்தை அனுபவிப்பார்கள். அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி இந்த பாதையில் நடப்பதற்கு அவர் காட்டிய மாதிரியை பின்பற்ற வேண்டும். இது குறிப்பிடுவது என்னவெனில், அவர் இருக்கிற வண்ணம் அல்லது அவருடைய ஆவிக்கு இசைவாக நடப்பது மட்டுமல்ல, ஆனால் அவருடைய சத்தியத்தை பிரகடனப்படுத்துவதில் சுறுசுறுப்பாக ஊக்கமுடன் எந்தவித துன்பம் வந்தாலும் சரி செயல்பட வேண்டும் என்பதாகும். இந்த குறுகலான பாதையில் நடப்பவர்கள் அனைவரும் அவர் மரண பரியந்தம் உண்மையுள்ளவராக இருந்தது போன்று உண்மையுள்ளவர்களாக இருந்து, அவருடைய பாடுகளில் பங்கு பெற வேண்டும். அப்படியென்றால், க-யாண விருந்தின் போது ஏற்ற வேளையில் அவருடைய மகிமையில் பங்கு பெறுவோம். அவருடைய பிரசன்னத்திலும் இராஜ்யத்திலும் வெளிப்பட இருக்கிற மகிமையில் பங்கடைவோம். பி-. 3:10; 1 பேது. 4: 13

அது மகிமையுடன் முற்றுப் பெறுவதால், சத்தியத்தினிமித்தம் சுயத்தை ப-யாக செலுத்துதல் என்கிற இந்த இடுக்கமான பாதை, எந்த ஒரு சிருஷ்டிக்கும் கிடைத்த பெரிய சிலாக்கியமாகும். எனவே, முதலாவதாக கிறிஸ்துவை நம்முடைய மீட்பர் என்று அறிந்து கொண்ட பின்னர், அவருக்காக அவருடன் பாடுபடுவது என்கிற சிலாக்கியம் வாசலாக இருக்கிறது. மணவாட்டியாகவும் உடன் சுதந்திரராகவும் மகிமையடைய இது ஒன்றுதான் வாய்ப்பு தரும் வாசலாகும்.

இந்த வாசல் அடைக்கப்படுவதை மூன்று வழிகளில் காட்டலாம். முதலாவதாக, வேதம் கூறுகிற சரியான தேதி. இரண்டாவதாக, சத்தியத்தினிமித்தம் மக்களின் உணர்வு குறைந்து போவது அதாவது அவருக்கென ஊழியம் செய்வதில் உள்ள

உண்மையும் வைராக்கியமும் இனியும் எதிர்ப்பை சந்திப்பதில்லை. சத்தியத்தினிமித்தம் கிறிஸ்துவுக்கென்று பாடு அனுபவிப்பது இனியும் சாத்தியமாகாது. (ரோம. 8:17) அல்லது மூன்றாவதாக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உலகத்தில் காணப்படும் போது இப்படிப்பட்ட ஊழியம் செய்வதற்கான தருணம் அதிகமாக தடை பண்ணப்படும். இதனால் அவருடைய வேலையை செய்வதற்கும், தங்களுடைய பொறுமையையும் அன்பையும் விசுவாசத்தையும் விருத்தியாக்கவும், நிரூபித்து காட்டவும் தருணம் கிடைக்காது போகும்.

இந்த அறுப்பின் காலத்திற்குள் அல்லது யுகத்தின் இறுதியில் வாசல் அடைக்கப்படும் என்று நமக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலும் வேதாகமம் நமக்கு சரியான தேதியை அறிவிக்கவில்லை. மேலும், மகா உபத்திரவ காலத்திற்குப் பிறகு சத்தியத்தின் மேலும், நீதியின் மேலும் ஜனங்கள் பழையபடி விருப்பப்பட்டாலும் அறுப்பின் காலம் முற்றுமாக முடிந்த பின்னர் இப்படியான ஒரு சூழ்நிலை இருக்கும் என்பதைப் பற்றிய சரியான அறிவிப்பு நமக்கு இல்லை. ஆனால், கடைசியில் கூறப்பட்டுள்ளபடி வாசல் அடைக்கப்படும் என்று நமக்கு தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஆயிரம் வருட யுக நாள் வருவதற்கு முன்னதாக, யாரும் கிரியை செய்ய முடியாதபடி இராக்காலம் வருகிறது. “விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது” என எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. ஏசா. 21:12. பார்க்க தொகுதி. 2, அத். 8

இடுக்கமான வாசல் நமக்கு திறக்கப்பட்டுள்ளது. நம்முடைய ஆண்டவரோடு இப்பொழுது ஒத்துழைக்க கிடைத்த வாய்ப்பாகும். அவருடைய சாந்தமுள்ள ஆவியையும் தேவனிடத்திலும் அவருடைய வார்த்தையிலும் உள்ள விசுவாசத்தை, உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தை விட்டு, வெளிப்படுத்த கிடைத்த தருணமாகும். அவருடைய காரியங்களை, அவருடைய சத்தியத்தை நாம் எடுத்துரைக்கும் போது, நாம் அதிகமாக மக்களின் நன்மதிப்பை இழந்து விடுவோம். மேலும், அவருடைய நாமத்தை கனப்படுத்தவும், நம்மோடு உள்ளவர்களை சத்தியத்தினால் ஆசீர்வதிக்கவும், நம்முடைய வெளிச்சம் பிரகாசிக்கச் செய்யவும், நாம் எடுக்கும் முயற்சிகள் நம் மேல் நிந்தையையும், தவறான எண்ணத்தையும், உபத்திரவத்தையும் ஏதாவது ஒரு வழியில் கொண்டு



வரும். நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி, இடுக்கமான வாசல் திறந்திருக்கிறது என்றால், இப்படியாக ப-யை செலுத்தும் சிலாக்கியம், மரண பரியந்தம் உண்மையுடன் (எந்த அளவு கிரயம் செலுத்தினாலும் பராவயில்லை) இருத்தல் என்ற நிலையைத் தொடர்ந்து, இப்படிப்பட்ட தருணத்தை, ஊழியத்தில் உள்ள ஐக்கியம், உபத்திரவம் போன்றவற்றிற்கான தருணத்தை நிறுத்துவது நடக்கும் என்பதாகும். இப்படியாக வாசல் அடைக்கப்படுவது என்பது, எதிர்கால மகிமை, உடன் சுதந்திரம் ஆகியவற்றை நிறுத்துவது ஆகும். அவருடைய வேலையைச் செய்யும் போது, நாம் உண்மையுள்ளவர்களாக இருப்பதைப் பொறுத்து, நாம் அவரோடு ஆளுகை செய்வது நிறைவேறும். உண்மையுள்ளவர்களாக இருப்பது என்பது இப்பொழுது அவரோடு கூட பாடுபடுவதைக் குறிக்கிறது. ரோம. 8:17; 6:8

கிறிஸ்துவோடு பாடுபடுவது என்பது நாம் பார்த்தபடி சாதாரணமான பாடுகள் அல்ல; விழுந்து போன நிலையில் உள்ள அனைவருக்கும் வருகிற பாடுகள் அல்ல. ஆனால் பிரபலமடையாத சத்தியங்களைக் கூறும் போதும், பொதுவான பிழைகளை சுட்டிக் காட்டும் போதும், கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றும் போதும் வரக்கூடிய பாடுகள் ஆகும். கிறிஸ்துவின் பாடுகளுக்கும் இதுவே காரணமாக இருந்தன. அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிறவர்களுக்கு வருகிற பாடுகளுக்கும், துன்பங்களுக்கும், இழப்புகளுக்கும் இவைகளே காரணங்களாக இருக்கும். இப்பொழுது அவருடைய பாடுகளில் அவர்களுக்கு ஐக்கியம் உண்டு, ஆகையால், இறுதியில் அவர்கள் இப்படிப்பட்டதில் உண்மையுள்ளவர்களாக இருந்தபடியால், இதற்கென உள்ள வெகுமதியில் பங்கு பெற பாத்திரராக எண்ணப்படுவார்கள். கிறிஸ்துவின் போதனைகளை விதைப்பதினாலும் அதற்கு தண்ணீர் ஊற்றுவதினாலும் ஏற்படும் நிந்தையை தாங்கிக் கொள்வதும், சுய தியாகமும் சுவிசேஷ யுக முழுவதற்கும் உரியதாகும். சுவிசேஷ யுகம் முடியும் போது, இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற அறுப்பின் வேலையில், அதே போன்று விசுவாசத்தையும் சகிப்புத் தன்மையையும் காட்டுவதை அது குறிக்கிறது. ஆண்டவரின் சேவையில் தேவைப்பட்டால் ஜீவனையே கொடுப்பதையும்,

அனுதினமும் மரிப்பதையும், இல்லையெனில் சடுதியாக இரத்த சாட்சியாக மரிப்பதையும் அது குறிக்கிறது.

மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக இருக்கும்படியாக நியமிக்கப்பட்ட கன்னிகையான சபையின் தகுதி பாவம் இல்லாமல் இருப்பது மாத்திரமல்ல. ஏனெனில், அவள் “கறைதிரை ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமாய்” தான் இருக்கிறாள். *(எபே. 5:27)* அவள் தன்னுடைய மீட்பரின் நல்ல ஈவினால், அவருடைய மீட்பின் அன்பு என்கிற ஊற்றினால் உறைந்திருக்கும் பனிக்கட்டியைக் காட்டிலும் வெண்மையாக்கப்பட்டு இருக்கிறாள். நிரந்தரமான வாழ்வுக்கு எந்நிலையிலும் தகுதியுள்ளவள் என்று எண்ணப்படுவதற்கு இது அவசியமானதாகும். ஆனால் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாக இருப்பதற்கு, அவள் சுத்திகரிப்பில் கன்னிகையாக இருப்பது மாத்திரமல்ல, அவள் பாவம் செய்பவர்களிடம் இருந்து வேறுபட்டு இருப்பதோடு, உலகத்தோடு ஒத்துப் போகாதவளாகவும் இருக்க வேண்டும். ஆனாலும் அவள் இதைக் காட்டிலும், அதிகமாக இருக்க வேண்டும். அவள் ஆண்டவரை பிரதிப-ப்பவளாக இருக்க வேண்டும். ஆகவே, கவனமாக அவருடைய அடிச்சுவட்டில் நடக்க வேண்டும். அவருடைய ஆலோசனையின்படி நடக்க வேண்டும். இதினிமித்தம், இதே சத்தியம் மற்றும் நீதியினிமித்தம் அவர் இரத்த சாட்சியாக இருந்த மாதிரி அவளும் இருக்க வேண்டும். அவள் மணவாளன் மேல் பற்றி எரிகிற அன்பை உடையவள் என்பதை காட்டுவதோடு, அவருடைய நாமத்தின் மேல், அவருடைய சத்தியத்தின் மேல் அவ்வளவு அதிகமான அன்பு வைத்து இருக்கிற படியால், அவருடைய உபதேசங்களுக்கு கீழ்ப்படிகிறதினிமித்தம் அவரைப் போலவே நிந்திக்கப்படவும், நிராகரிக்கப்படவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

இவ்வித குணாதிசயத்தை அபிவிருத்தி பண்ணவும், வெளிப்படுத்திக் காட்டவும் அவள் சோதிக்கப்பட வேண்டும், பரீட்சிக்கப்பட வேண்டும். ஆண்டவர் மேல் அவள் வைத்திருக்கிற விசுவாசம், அவளுடைய நம்பிக்கை, அவளுடைய சகிப்புத்தன்மை, நன்மையினாலும் தீமையினாலும் விருத்தி செய்யப்பட்டு



நிரூபிக்கப்பட வேண்டும். விருத்தி செய்யப்பட்டு, சோதிக்கப்பட்டு, உண்மையுள்ளவள் என்று காணப்பட்டவள் மாத்திரமே மணவாட்டியாகவும், உடன் சுதந்தரவாளியாகவும், எல்லாவற்றின் மேலும் சுதந்தரவாளியாகவும், ஏற்றுக் கொள்ளப்படுவாள். “சோதனையை சகிக்கிற மனிதன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்.” *(யாக். 1:12)* ஆகவே, அது சரியாக புரிந்து கொள்ளப்பட்டு, நம்முடைய விசுவாசத்திற்கு வரும் ஒவ்வொரு சோதனையும் நம்முடைய மணவாளன் மேல் நாம் வைத்திருக்கிற அன்பின் ஆழம், பலம் என்பவற்றை காட்டுவதற்கு கிடைத்த நல்ல தருணம் என்று எண்ணி அவைகள் சந்தோஷமாக சந்திக்கப்பட வேண்டும். இது அவருடைய அன்பிற்கு பாத்திரர்கள், உயர்த்தப்படுவதற்கு தகுதியுள்ளவர்கள் என்பதை நிரூபிக்க கிடைத்த நல்ல தருணமாகும். வரயிருக்கின்ற மகிமையில் ஆண்டவரோடு பங்கு பெறுகிறவர்கள், அழைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுவது மாத்திரமல்ல மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். *வெளி. 17:14*

சுவிசேஷ யுக வேலையில் நமது ஆண்டவரோடு இணைந்து வேலை செய்ய கிடைத்த தருணம் என்கிற கதவு, “ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம்” *(யோவா. 9:4)* வரும் போது மூடப்படும். இதற்கு முன்பாக உண்மையான ஊழியத்தின் மூலம், தேவையான குணாதிசயத்தையும் அபிவிருத்தி பண்ணி வைத்திராதவர்கள் ஆண்டவர் மேலும், அவரது சத்தியத்தின் மேலும் தங்களுடைய வைராக்கியம், அன்பு, பக்தி என்பவற்றை நிரூபிக்காதவர்கள்... *(மத். 10:37; மாற். 8:38)* இனி செயல்பட முடியாது, மிகவும் தாமதமாகி விட்டது. உவமையில் காட்டப்பட்டது போன்று அவர்கள் “புத்தியில்லாத கன்னிகைகள்.” ஏனெனில், அவர்கள் அவரோடும், அவருக்காகவும் பாடுபடுவதற்கான மாபெரும், மகிமையான தருணம் தங்களை விட்டு கடந்து போக விட்டு விட்டார்கள். ஆனால், அதற்குள் ஏற்கெனவே முன் குறிப்பிடப்பட்ட சபையின் முழு இலக்கத்தினரும் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டு, பரீட்சையின் மூலம் உண்மையுள்ளவர்கள்

என்று கண்டு அறியப்பட்டு, "தம்முடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பவர்கள்" (ரோம. 8:29) என்று அறிந்து கொள்ளப்பட்டு இருப்பார்கள். அறுப்பு கடந்து போய் இருக்கும், கோடை கால அனுகூலம் கடந்து போய், களைகள் எரிக்கப்படுவது மாத்திரமே மிஞ்சி இருக்கும். நிலத்தை (மனுக்குலத்தின் உலகம்) சுத்தப்படுத்துவதற்காக, மேலும் ஆயிர வருட யுகம் பரவலாக விதைக்கப்படுவதற்காக ஆயத்தப்படுத்த வேண்டியுள்ளது.

இராக்காலம் என்பது சத்தியத்தை பறைசாற்ற முடியாதபடி முற்றுப்புள்ளி வைக்கிறதாகும். இது பொதுவாக மக்களால் தவறாக புரிந்து கொள்ளப்படும். சத்தியத்தை போதிக்கிற ஊழியம், அப்பொழுது காணப்படுகின்ற அதிகமான அராஜகத்திற்கும், குழப்பத்திற்கும் காரணம் என்று குற்றம் சாட்டப்படும். உண்மையில் உலகத்தில் வரக்கூடிய உபத்திரவங்கள், அதற்கான காரணங்கள் திவ்ய நோக்கம், வெளிப்பாடு என்பதை சரியான வெளிச்சத்தில் காணத் தவறிவிடுவார்கள். ஆனாலும், இராக்காலம் வருவதும், வாசல் அடைக்கப்படுவதும் சடுதியாக இருக்கும் என்றும் எண்ணக்கூடாது. அதற்குப் பதிலாக, படிப்படியான தடையாக இருந்த பின்னர் அறுப்பின் வேலை முற்றிலுமாக நிறுத்தப்படும்.

உபத்திரவங்கள் புயல் போன்று வருவதற்கு முன்னர், தற்போதைய காலம் தான் தேவனுடைய ஊழியக்காரர்களின் நெற்றியில் முத்திரை இடுவதற்கு தகுந்த காலமாகும். (வெளி. 7:2,3) தற்போதுள்ள அனுகூல காலத்தில் உள்ள சிலாக்கியத்தை ஒவ்வொரு புத்தியுள்ள கன்னிகையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது அவளுடைய சொந்த அறிவு, தற்கால சத்தியத்தினால் முத்திரை இடப்படுவதற்கும், மேலும் கோதுமை வகுப்பை சேர்ந்தவர்கள் முத்திரை இடுதல் என்னும் அறுப்பின் வேலையில் பங்கு பெறுவதற்கும், அவர்களை பாதுகாப்பு என்கிற களஞ்சியத்திற்குள் சேகரிப்பதற்கும் தகுந்த காலம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இது இராக்காலம் வருவதற்கு முன்னதாகவும், கிரியை செய்வதற்கு உள்ள தருணம் என்கிற வாசல் மூடப்படுவதற்கு முன்னதாகவும் செய்யப்பட வேண்டும்.

இப்பொழுது காணப்படுகின்ற நல்ல தருணம் மிகவும்



சுருக்கமானதாகும். இருபத்தி நான்கு வருட அறுப்பின் காலம் மாத்திரம் இருக்கிறது (ஆசிரியரின் முன்னுரையை பார்க்கவும்) என்பதில் இருந்து இது தெரியவருகிறது. இது முற்றுப் பெறும் காலம் தீமையின் ஆட்சி முடிவடைவதையும், மகிமையான ஆயிர வருட நாள் உதயமாவதையும் காட்டும். இந்த காலத்திற்குள்ளாக உலகத்தின் மாபெரும் உபத்திரவத்தின் இராக்காலம் வந்தாக வேண்டும். மகிமையான நாளுக்கு முன்பதாக மாபெரும் இருள் வரவேண்டும். "விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது." "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலம் மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்."

இந்த இராக்காலம் வரும்போது, அறுக்கிறவர்கள் தங்களுடைய வேலையை நிறுத்தும் போது, அது சுவிசேஷ யுகத்தின் இறுதி வேலை முடிந்து விட்டது என்பதைக் காட்டும் என்பதைக் கவனிக்க வேண்டும். மேலும், தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் மணவாட்டி தொகையினர் எல்லாரும் "முத்திரை இடப்பட்டு," உலகத்தி-ருந்து பிரிக்கப்பட்ட நிலைக்கு, களஞ்சியத்திற்குள் இருக்கும் நிலைக்கு வந்திருப்பார்கள். (மத். 13:30) ஏனெனில், தேவன் தம்முடைய வேலை முடியும் வரை, தம்முடைய வேலையை எதுவும் தடை பண்ணாதபடி பார்த்துக்கொள்வார். பிறகு தேவனுடைய உண்மையும், விசுவாசமுமுள்ள ஊழியக்காரர்கள் அனைவரும், தங்களுடைய நெற்றியில் முத்திரை இடப்பட்டு இருப்பார்கள். மேலும், சுவிசேஷ யுகத்தின் வேலை முடிந்து இருப்பதால் இனி ஒருவரும் அதற்குரிய உயர்வான வெகுமதியைப் பெறும்படி அந்த வேலையை செய்ய இயலாது. இது ஏற்கெனவே "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்" என்று கூறப்பட்டுள்ளது. இது வாசல் திறந்து இருக்கும் போது, உள்ளே பிரவேசிக்கிற, உண்மையாய் நடக்கிறவர்களுக்கு உண்டான வெகுமதியாகும். 2 பேது. 1:4

ஆனால் நாம் இதி-ருந்து, எல்லாரும் உண்மையுள்ளவர்கள் என்று நிருபணம் ஆன உடனே, அவர்களுடைய வெகுமதியை பெறுவார்கள் என்று எடுத்துக்கொள்ள கூடாது. ஒரு வேளை சிலர், உபத்திரவத்தின் இரவு கடந்து செல்லும் வரை ஜீவிக்கவும் கூடும். ஆனாலும் நம்முடைய எதிர்பார்ப்பு இது அல்ல. "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்

கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்." இந்தத் தீங்கு நாட்களில் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்டு, சத்தியத்தை தெளிவாக பயமின்றி கூறி, தவறுக்கு எதிராக தைரியமாக நின்றவர்கள். மாபெரும் தவறுகள் துணிவுடனும், இறுமாப்புடனும் வெளி வந்து கொண்டு இருக்கும் வேளையில், பரிசுத்தவான்கள் பின்வரும் வார்த்தைகளால் உற்சாகப் படுத்தப்படுகிறார்கள். "சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நில்லுங்கள்." சர்வாயுத வர்க்கத்தை தரித்து, தற்காப்புக்காக ஆவியின் பட்டயத்தை ஆயத்தமாக்கி, எல்லா பரிசுத்தவான்களுக்காக ஜெபத்தோடும், ஜாக்கிரதையாகயோடும் பொறுமையோடும் நில்லுங்கள். "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது." வெளி. 14:12; எபே. 6:13; எபி. 10:36

தேவனுடைய இராஜ்யத்தில் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவோடு உடன் சுதந்திரராக இருக்கும்படியான உன்னத அழைப்பு முற்றுப் பெற்று இருப்பது, கன்னிகைகளின் உவமையில் உள்ள கதவு அடைக்கப்படுவது அல்ல என்பது தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இந்த சிலாக்கியத்திற்கான பொதுவான அழைப்பு 1881ல் நின்று விட்டாலும், கதவு இன்னும் திறந்து உள்ளது. இந்த அழைப்பு மரண பரியந்தம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி வருபவர்கள், அதன்மூலம் மகிமையில் அவரோடு ஆட்சி செய்ய தகுதி உள்ளவர்கள் என்று நிரூபிப்பவர்கள் மீட்பரின் நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளுக்கு உள்ளதாகும். இந்த சிலாக்கியம் ஆரம்பிக்க ஒரு திட்டமான காலம் இருந்தது. காத்திருந்த சீடர்கள், பெந்தெகொஸ்தே நாளில் கிபி 33ல் அதற்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். ஏற்கெனவே காட்டியுள்ளபடி அதற்கு ஒரு நிச்சயமான முடிவு காலம் இருந்தது. அது அக்டோபர் 1881 ஆகும். (தொகுதி. 2. அத். 7ஐ பார்க்கவும்)

மத்தேயு 25ம் அதிகாரத்தில் உள்ள உவமையில் கதவு அடைக்கப்படுவது என்பது, எல்லாருக்கும் அழைக்கப்பட்டவர்களுக்குக் கூட தருணம் முற்றுமாக முடிவு



பெறுவதைக் குறிக்கிறது. ஊழியத்தில் உண்மையாக இருப்பதினிமித்தம், வெகுமதியைப் பெற தகுதி உள்ளவன் என்று நிரூபிப்பதற்கான தருணம் கூட முடிவு பெறுவதை அது காட்டுகிறது. ஊழியம் செய்வதற்கான எல்லா வாய்ப்பும், ஒருவரும் கிரியை செய்யக் கூடாத இராக்காலத்தில் நின்று விடும் (யோவா. 9:4) ஆகவே, எல்லா விசுவாசிகளும் பிரவேசிக்கும்படியான பொதுவான அழைப்பு முடிவடையும் வேளையில், நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கான வாசல் அல்லது தருணம், அடைக்கப்படும் அவசியம் ஏதும் இல்லை. இன்னமும் கதவு திறந்திருக்கும் போது அதன் மூலம் தெரியவருவது என்னவெனில், இப்பொழுது பொதுவான அழைப்பு அனுப்பப்படாதிருந்தாலும் எந்த ஒரு விசுவாசியும் உள்ளே பிரவேசிக்க விருப்பத்தோடு உள்ளவரும், நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிய ஆயத்தம் உள்ள எவரும் இன்னமும் செல்லலாம் என்பதாகும். எனவே 1881ல் பொதுவான அழைப்பு நின்று விட்டாலும், ஊழியம் செய்யவும் ப- செலுத்தவும் உள்ள தருணத்திற்கான கதவு இன்னமும் அடைக்கப்படவில்லை.

சுவிசேஷ யுகமானது, அழைக்கிற காலமாக இருந்திருக்கிறது. முதலாவதாக, பாவிகள் மனந்திரும்பவும் மீட்பரான கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கவும் அழைக்கப்படுகிறார்கள். இரண்டாவதாக, நீதிமான்களாக்கப்பட்ட இவர்கள் கிறிஸ்துவோடு கூட அவருடைய இராஜ்யத்தில் உடன் சுதந்திரராக இருக்கும்படியான உன்னதமான சிலாக்கியத்திற்காக அழைக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் மரண பரியந்தம் சுய-ப- என்கிற அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றி நடக்கிற நிபந்தனைக்கு உட்பட வேண்டும். அதாவது இராஜ்யத்தின் வேலைக்கும் வரயிருக்கிற ஆயிர வருட யுகத்தின் கனத்திற்குமான நிபந்தனையாகும். ஆகவே, யுகத்தின் முடிவு காலம் தான் ஒரு அறுப்பின் காலமாக இருக்கும் என்று ஆண்டவர் சொல்லும் போது அது ஒரு பெரிய மாற்றத்தைக் காட்டுகிறது - விதைப்பதி-ருந்து அறுப்புக்கும், அழைக்கப்படுவதி-ருந்து அழைக்கப்பட்டவர்கள் பரீட்சைக்கும், அழைப்பினால் ஆரம்பித்த வேலையை முடித்து வைப்பது என்பதையும் காட்டுகிறது.

சுவிசேஷ யுகத்தின் இறுதியில், நடக்கின்ற வேலையின் தன்மையை விளக்கும் வண்ணமாக நம்முடைய ஆண்டவர் வாரிக்கொள்ளும் வலையைப் பற்றிய உவமையைக் கொடுத்தார். *(மத். 13:47-50)* "அன்றியும், பரலோக ராஜ்யம் கட-லே போடப்பட்டு, சகல வித மீன்களையும் சேர்த்து வாரிக் கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, (மீன் பிடிப்பவர்கள்) அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்து போடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவில் (அறுப்பு - மத். 13:30) நடக்கும்; தேவதூதர்கள் (தேவ செய்தியை அளிக்கும் ஊழியக்காரர்கள்) புறப்பட்டு நீதிமான்களின் நடுவி-ருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே (மகா உபத்திரவம்) போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்."

இந்த உவமை, பேர் கிறிஸ்தவ சபையை, வர இருக்கின்ற ஒரு பெயரளவான தேவனுடைய இராஜ்யத்திற்கு ஒப்பிட்டுக் கூறுகிறது. வலை கடலுக்குள் (உலகம்) போடப்படுகிறது. அது மீன்களை (மனிதர்களை - மத். 4:19) பல்வேறு விதமானவைகளை (உண்மையான கிறிஸ்தவர்கள், பாதி ஏமாந்தவர்கள், பாதி வஞ்சிக்கப்பட்டவர்கள், மேலும் பெருந்திரளான மாய்மாலக்காரர்கள்) சேகரித்தது. அது நிரம்பியவுடன் (தேவனுடைய நிறைவான காலத்தில்) கரையை நோக்கி இழுக்கப்படுகிறது. அது காட்டுவது என்னவெனில், பேர் சபைக்குள் கொண்டு வரப்பட்ட (சகலவித) எல்லா வகையினரும் இராஜ்யத்திற்கு தகுதியானவர்கள் அல்ல. வேறு எதற்கும் அவர்கள் தகுதி உடையவர்களாக இருக்கலாம். என்றாலும் உலகம் முடியும் போது அறுப்பின் காலத்தின் போது, தேவன் ஏற்படுத்தின ஒழுங்கின்படி இராஜ்யத்தின் ஒரு இடத்திற்கு வரும்படியாக கொடுக்கப்பட்ட ஒரு அழைப்பு நின்று விடும். இது வலையை கரைக்கு இழுப்பதின் மூலம் காட்டப்பட்டுள்ளது. அதன் பிறகு மீன் பிடிக்கிறவர்களால் ஒரு வித்தியாசமான வேலை தொடங்கப் பெறும். அதாவது பிரித்தெடுத்தல், வேறுபடுத்தல் என்பவைகளாகும். இது விரும்பப்படத் தக்கவைகளை ஒரு பக்கம் சேகரிக்கும் வேளையில், அழைக்கப்பட்ட அழைப்புக்கு அபாத்திரரை



நிராகரித்தலும் நடைபெறும். ஏனெனில், "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் சிலர்." *மத். 22:14*

இந்த உவமையில் உள்ள பிரித்தெடுக்கும் வேலை, கோதுமையும் களைகளும் என்ற உவமையில் உள்ளது போன்றே இருக்கிறது. அது விதைப்பது (அழைப்பு) நிறுத்தப்படுவதைக் காட்டுகிறது. மேலும், அந்த வேலையி-ருந்து மாறி அறுப்பின் வேலை செய்வதைக் காட்டுகிறது. ஆண்டவருடைய வேலையாட்கள் அவர் சொல்லுகிறபடி, இப்படியாக வேலையை மாற்றுவார்கள். இப்படியானவர்கள் இரண்டு உவமைகளிலும் தூதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். தேவனுடைய விசேஷமான தூதர்கள் அவருடைய உண்மையான சீடர்களாவார்கள். அவர்கள் தாழ்மையுடன் ஆண்டவருக்கு அருகாமையில் இருந்து, அவருடைய திட்டத்தை அறியவும் அவருடைய வேலையில் ஒத்துழைக்க ஊக்கம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அவருடைய காலங்களையும் வேளைகளையும் அறிகிற காரியத்தில் இருளில் விடப்படுவதில்லை. *(மத். 13:11; 1 தெச. 5:4; எரே. 8: 7-12)* ஆனாலும், இந்த அறுப்பு மற்றும் சேகரித்தல் என்பது அறுப்பின் காலத்தில் ஜீவிப்பவர்களுக்கு மாத்திரம் பொருந்தும். இதற்கு முன்பாக மரித்தவர்களுக்குப் பொருந்தாது. அவர்களில் ஒவ்வொருவரும் தன்னுடைய ஓட்டத்தை முடித்தவுடன் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பிரித்து எடுக்கப்பட்டு, இராஜ்யத்தின் மகிமையுள்ள சிறு மந்தைக்குள் ஒன்று உள்ளே அல்லது வெளியே இருக்கும்படி, தன்னுடைய நிலை என்ன என்பதை அறியும்படி வைக்கப்பட்டார்கள். *2 தீமோ. 4:8*

வலையானது கட-ல் உள்ள எல்லா மீனையும் பிடிக்கும்படியாக போடப்படவில்லை. பெரிய மீன் பிடிப்பவரான நம்முடைய ஆண்டவர், வலையில் எந்த வித வித்தியாசமான மீன்கள் வந்தாலும் ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த மீன்களை ஒரு குறிப்பிட்ட அளவு மாத்திரம் பிடிக்கும்படியாக வைத்திருந்தார். தேவையான குறிப்பிட்ட எண்ணிக்கையான, குறிப்பான வகை மீன் கிடைத்தவுடன் மீனை வகைப்படுத்தவும், பிரித்து

எடுக்கும்படியாகவும் வலையை கரைக்கு இழுக்கும்படி கூறினார். இப்படி வலை கரைக்குக் கொண்டு வரும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்ட உடன், யுகத்தின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட கட்டளையான வலையைக் கட-ல் போடு (மத். 28:19; 24:14) என்பது முடிவுக்கு வந்தது என்று புரிந்து கொள்ள வேண்டும். மேலும், ஆண்டவரோடு இணைந்து செயல்படுகிற அனைவரும் அவர் சொல்லுகிறதற்கு செவி கொடுக்க வேண்டும். இனியும் பொதுவான மீன் பிடிப்பதற்கு அவர்களுடைய நேரத்தை செலவிடக் கூடாது. ஆனால், தற்போதைய வேலையான தெரிந்தெடுத்தல், சேகரித்தல் என்பதற்கு நேரத்தைச் செலவிட வேண்டும். அப்பொழுது உள்ள சத்தியம் அழைப்பு விடுப்பதற்கானதாகும். ஆகவே "தற்கால சத்தியம்" அறுப்பின் சத்தியம், இப்பொழுது ஆண்டவர் பரீட்சிப்பதற்கும் பிரித்தெடுப்பதற்கும் உள்ளதாகும்.

ஆகவே, தேவனுடைய ஊழியக்காரர்கள் அவருடைய சத்தத்தை அவருடைய வசனத்தின் மூலம் கேட்டு, விதைப்பதை விட்டு அறுக்கவும், பிடிப்பதை விட்டு மீனைப் பிரித்தெடுக்கவும், அழைப்பதை விட்டு இப்பொழுது சொல்ல வேண்டிய அறுப்பின் செய்தியை ஏற்கெனவே அழைக்கப்பட்டவர்களுக்கு பிரசங்கம் பண்ணவும் செய்கிறார்கள். அவருடைய சத்தத்தைக் கேட்கும் போது, உண்மையுள்ளவர்களாக இருந்தால், உடனடியாக சந்தோஷத்துடனும் கீழ்ப்படிவார்கள். இப்படிப்பட்டவர்கள் யுகத்திற்கான அவருடைய திட்டத்தைக் குறித்து ஆண்டவரால் போதிக்கப்பட்டவர்கள், நாம் ஜீவிக்கிற காலங்களையும் வேளைகளையும் குறித்து இருளில் இல்லாதவர்கள். இவர்கள் இராஜ்யத்தின் நல்ல விதையை நிலத்தில் (மனுக்குலத்தின் உலகில்) விதைக்க நாடாமல், "விசுவாச வீட்டாருக்கு ஏற்ற வேளையில் போஜனம் கொடுக்க வேண்டும்." ஆண்டவருடைய பிள்ளைகளின் மத்தியில் தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்கிற நல்ல செய்தியையும், அது வெகு சீக்கிரத்திலேயே எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தையும் ஆசீர்வாதங்களையும் கொண்டு வரும் என்கிற செய்தியையும் பரப்ப வேண்டும்.

சொல்லுவதற்கு வித்தியாசமானதுதான், அது ஆண்டவர் அன்புடன் கொடுத்த மீட்கும் பொருளில் உள்ளது. அது



எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி கொடுக்கப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவினால், கிறிஸ்து மற்றும் அவருடைய மகிமையான சரீரமான சபை மற்றும் தேவனுடைய ராஜ்யத்தின் மூலம் (இந்த செய்தி எல்லா கிறிஸ்தவ இருதயங்களையும் களி கூறப்பண்ணும், புத்துயிர் ஊட்டும், அன்பினால் இணைக்கும்) அபிவிருத்தி பண்ணவும், உண்மையான வகுப்பினரை மாத்திரம் ஒருமுகப்படுத்தவும், அவர்களை பரீட்சிக்கவும், பேர் கிறிஸ்தவ கூட்டத்தில் இருந்து பிரித்து எடுக்கும்.

சீக்கிரத்தில் அறுப்பு முடிந்து விடும். அதன்பிறகு விதைத்தவனும் அறுத்தவனும் இருவரும் சேர்ந்து களி கூறுவார்கள். இப்பொழுது அறுவடை செய்கிறவர்கள் வேலையை துரிதப்படுத்த வேண்டும். அதை முடிப்பதைக் குறித்து கரிசனை உள்ளவர்களாக இருப்பதோடு, பிரதான அறுவடையாளராக இருக்கும் ஆண்டவரை நோக்கி, அறுவடைக்கு அதிகமான வேலையாட்களை அனுப்பும்படி ஜெபிக்க வேண்டும். அடுத்த போகத்திற்கு நிலத்தை உழுகிறவன் (ஏற்கெனவே கூறப்பட்ட மகா உபத்திரவம், ஆயிர வருட யுக விதைப்புக்கு என உலகத்தை ஆயத்தம் பண்ணும்) அறுவடை செய்கிறவனை தொடருவான். ஆமோஸ் 9:13

## இஸ்ரயே-ன் எழுபதாவது வாரம் - சுவிசேஷ யுக அனுக்கிரகம் முற்றுப் பெறுவதைக் காட்டுகிறதாக இருக்கிறது

இஸ்ரயே-ன் 70வது வாரம் - அனுக்கிரக காலத்தின் கடைசி ஏழு வருடங்கள் - அதன் ஆரம்பம், மத்திய காலம், முடிவு என்பது மிக சரியாக குறிக்கப்பட்டிருந்தது நினைவு இருக்கலாம். அது ஆவிக்குரிய இஸ்ரயே-ன் அனுக்கிரகத்திற்கென சுவிசேஷ யுகத்தின் இறுதியில் மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டதின் காரணத்தை நாங்கள் நம்புகிறோம். அந்த வாரத்தின் ஆரம்பம் கிபி 29, மாம்சீக இஸ்ரயேல் பரீட்சிக்கப்படுவதற்கு அறுப்பின் ஆரம்பமாக உள்ளது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். அது நம்முடைய ஆண்டவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு மேசியாவாக அங்கீகரிக்கப்பட்டதின் மூலம் குறிப்பிடப்பட்டது. அப்பொழுது அறுவடை ஆரம்பமான காலமாகும். அதற்கு இணையாக இருப்பது

கிபி 1874ல் இந்த அறுவடை துவங்கின போது நமது ஆண்டவர் பிரசன்னமாகியிருப்பதை உணர்ந்து கொள்வது ஆகும்.

அந்த உடன்படிக்கையின் வாரத்தின் மத்தியில், கிபி 33ல் இஸ்ரயேல் ஒரு ஒழுங்கு முறையாக அல்லது சபை தேசமாக நிராகரிக்கப்பட்டது. அது நம்முடைய ஆண்டவர் சிலுவையில் மரித்ததின் மூலமும், அவர் மரிப்பதற்கு முன்னால் "உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கி விடப்படும்" என்று சொன்ன வார்த்தைகளின் மூலமும் குறிப்பிடப்பட்டது. அதற்கு இணையாக கிறிஸ்தவ ராஜ்யம் அல்லது பாபிலோன் கிருபையி-ருந்து தள்ளப்படுதலும் விழுந்து போவதும் கிபி 1878ல் நடைபெற்றது.

இஸ்ரயே-ன் உடன்படிக்கையின் கடைசி வாரத்தின் பாதி (கிபி 33ல் இருந்து 36 வரை), தேசத்திற்கான அனுக்கிரக காலமாக இல்லாமல், தனிப்பட்டவர்களுக்கான அனுக்கிரக காலமாக இருந்தது. இஸ்ரயேலருக்கு (முந்திய காலத்தில் பேர் சபை வாயிலாக இல்லாமல் தனிப்பட்ட முறையில் அவர்கள் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தால்) ஆபிரகாமின் உடன்படிக்கையின்படி அவர்களுடைய அனுக்கிரக கால இறுதி வரை அதாவது 70 வாரங்களின் இறுதிவரை விசேஷமான சிலாக்கியங்களும், அனுக்கிரகமும் வழங்கப்பட்டன. இது கொர்நே-யுவுக்கும், புற ஜாதியினருக்கும் அனுக்கிரகம் வழங்கப்படுவதின் மூலம் குறிப்பிடப்படுகிறது. அதே மாதிரி 1878 ஏப்ர-ல் இருந்து மூன்றரை வருடங்கள் அக்டோபர் 1881 வரை கிறிஸ்தவ இராஜ்யம் அல்லது பாபிலோன் கிருபையி-ருந்து தள்ளப்பட்ட காலமாகும். இந்த காலம் தனிப்பட்ட விசுவாசிகளுக்கு பரம அழைப்பின் அனுக்கிரகம் முடிவுற்ற காலமாகும். இப்படியாக, பொதுவான அழைப்பு (இந்த சுவிசேஷ யுகத்தின் அனுக்கிரகம்) கிபி 1881 அக்டோபர் மாதத்தோடு நின்று விட்டது. இதற்கு நிழலாக அக்டோபர் கிபி 36ல் யூத மக்களுக்கு வழங்கப்பட்ட அனுக்கிரகம் நின்று விட்டதை காணலாம்.

யூதர்களுக்கான கிருபை, இராஜ்யம் இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்படும் என்பதில் அடங்கியுள்ளது. ஆபிரகாமின் பிள்ளைகள், நியாயப்பிரமாண உடன்படிக்கையின்படி வழங்கப்பட்ட சிலாக்கியங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளும்படியான அழைப்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்களுடைய உடன்படிக்கை வாரம் முடிந்தவுடன் இந்த அழைப்பு, அனுக்கிரகம் அல்லது சிலாக்கியம் முற்றுமாக, நிரந்தரமாக முடிவுக்கு வந்தது. சுவிசேஷ யுக கிருபை கிறிஸ்துவின் விசுவாசிகளுக்கு, இராஜ்யம் (முற்றுமாக) கொடுக்கப்படுவதில் அடங்கி உள்ளது. பரம அழைப்பு கிருபையின் உடன்படிக்கையின் மூலம் தேவனோடு ஒப்புரவாகிய அனைவருக்கும் உரியதாகும். இப்படியாக கொடுக்கப்பட்ட அனுக்கிரகங்கள் (ஆபிரகாமின் வித்தின் அங்கத்தினர்களாகி விடுவதால் - இது உலகத்தாரை ஆசீர்வதிக்கும்) கிறிஸ்து இயேசுவோடு, அவர்களுடைய மீட்பரோடு தன்னையே ப-யாக செலுத்திய உடன்படிக்கையினால் வந்ததாகும். இந்த பரீட்சை, வரயிருக்கிற கிறிஸ்துவின் வேலையிலும் மகிமையிலும் பங்கு பெற அவர்களுக்கு உள்ள தகுதியை வெளிப்படுத்துவதற்காகும். இந்த அனுக்கிரகம் அல்லது அழைப்பு தான் அக்டோபர் 1881ல் நிரந்தரமாக, முற்றிலுமாக நின்று விட்டது என்று நாம் பார்த்திருக்கிறோம். யூதர்களுக்கான அழைப்பு அல்லது அனுக்கிரகம் முடிவுற்றதும் இதற்கு இணையான காலத்தின் போதுதான்.



யூதர்களுக்கான விசேஷித்த அழைப்பு அல்லது அனுக்கிரகம் நிறுத்தப்பட்ட போது, அது இன்னொரு பொதுவான அழைப்பையும் பெற்றது என்பதையும் கவனிக்க வேண்டும். அதாவது, அதன்பிறகு, அவர்களில் எவராவது விசுவாசிகளாகி, இராஜ்யத்தின் கனத்திற்கு என்று கொடுக்கப்பட்ட உலகஅளவில் அழைப்புக்கு தகுதி உள்ளவர்களாயிருந்ததால் அவர்களும் சேர்க்கப்பட்டார்கள். அவர்களுடைய கடந்த கால கிருபை நின்ற பின்னர், அவர்கள் எதற்குமே அழைக்கப்படவில்லை என்பது போல் இருக்கிறது. இதற்கு கீழான அனுக்கிரகத்திற்கு அவர்கள் அழைக்கப்பட்டது போன்று இருக்கிறது. ஆனால், அது அப்படியாக இல்லை. ஏனெனில், அவர்களை ஒதுக்கி வைக்காத அழைப்பு பொதுவான சுவிசேஷ அழைப்பு தான். அது இப்பொழுது இன்னும் விஸ்தாரமாக்கப்பட்டு, அதிக ஆழமுள்ளதாக்கப்பட்டு ஒவ்வொரு தேசத்திலும் உள்ள கிறிஸ்துக்குள்ளான விசுவாசிகளுக்கு உரியதாயிற்று.

1881ல் அழைப்பு அல்லது அனுக்கிரகம் நிறுத்தப்பட்ட போது, அதைத் தொடர்ந்து அதன்மேல் ஒரு பொதுவான அழைப்பு சுமத்தப்பட்டது என்று கூறலாம். அது முழு உலகத்தையும், ஆயிர வருட ஆசீர்வாதங்களுக்கும் அனுக்கிரகங்களுக்கும் அழைத்தது. அதற்கான நிபந்தனை, விசுவாசமும் மனமுவந்த கீழ்ப்படிதலுமாகும். (ஆனாலும் மரண பரியந்தமுமான ப- அல்ல) ஆனாலும் இது சற்று குறைவான அழைப்பு, நின்று போன அழைப்பிற்கு சற்று குறைவு பட்டதாகும். இது இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கும்படியாக மட்டுமே, ஆனால் அபிஷேகம் பெற்ற இராஜ்ய வகுப்பினரின் பங்காளர்களாக இருக்க முடியாது. இந்த மாற்றம் - உயர்ந்த அனுக்கிரகம் நிறுத்தப்பட்டு குறைவான அனுக்கிரகம் ஆரம்பித்தது, தற்காலத்தில் அதிகமாக கவனிக்கப்பட மாட்டாது. இதற்கு காரணம் என்னவெனில், திவ்ய சுபாவத்தில் உடன் சுதந்திரராக, பங்கு உள்ளவர்களாக இருப்பது, இராஜ்யத்தின் பெரிய வெகுமதி போன்றவைகள் பொதுவாக சபையில் இன்றைக்கு காணப்படுவது கிடையாது. வெகுமதி என்று கூறும் போது, கடந்த பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவர்கள் பொதுவாக நினைப்பது என்னவெனில், அவர்களுடைய உயிர்தெழுத-ல் அவர்களுக்குப் பரிபூரணமான சரீரங்கள் கொடுக்கப்படும், வியாதியி-ருந்து, வேதனையி-ருந்து, துக்கத்தி-ருந்து விடுதலை பெறுவார்கள், தேவனுடைய அனுக்கிரகத்தை அனுபவிப்பர்கள், மேலும் நித்திய ஜீவனை அடைவார்கள் என்பதாகும். ஆனால், இவை சுவிசேஷ யுகத்தின் பரம அழைப்பின் கீழ் உள்ள, உண்மையான சிலாக்கியங்களுக்கு மிக மிக குறைவாக இருந்தாலும், பொதுவாக ஆயிர வருட யுகத்தின் போது உலகத்தாருக்கு கொடுக்கப்படும் சிலாக்கியங்கள் ஆசீர்வாதங்களை பற்றி ஓர் அளவுக்கு உண்மையான கணிப்பாகும். அநேகர் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரோடு ஒருமனப்பட்டு இருப்பார்கள்.

ஆகவே, இப்படியான, அருமையான, உயர்வான, அம்சங்களை சுவிசேஷ யுகத்தின் அழைப்பில் தெளிவாகக் காணக்கூடியவர்கள் மாத்திரமே, இந்த அழைப்பை பிரகடனப்படுத்த முடியும் அல்லது விரிவாக சொல்ல முடியும். இவர்களுக்கு மாத்திரமே, தேவனுடைய



வார்த்தையி-ருந்து காட்டப்பட்டுள்ளது என்னவெனில், இந்த அழைப்புக்கு ஒதுக்கப்பட்ட அவகாசம் அக்டோபர் 1881ல் முடிவடைந்தது என்பதாகும். மற்றவர்கள், அப்போஸ்தலர் குறிப்பிடுகிற கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பைக் குறிப்பிட்டு, ஆயிரம் வருடத்திற்குரிய, சற்று தாழ்ந்த அழைப்பைக் குறித்து சொல்லுகிறார்கள். ஆகவே, பொதுவான சுவிசேஷ அழைப்பு, உண்மையான ஒன்று முடிந்து விட்டது. அதை ஒருவராலும் நீடிக்க முடியாது. சிலருக்கு அதைச் செய்ய முடியாது, ஏனெனில் அதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை; சிலர் அது ஏற்கெனவே முடிந்து விட்டது என்று அறிந்திருக்கிறபடியால் ஒன்றும் செய்ய இயலாது.

பொதுவான "அழைப்பு" முடிந்து விட்டாலும், "கதவு" இன்னமும் மூடப்படவில்லை. அழைப்பு முடிந்த காலமும், கதவு மூடப்படுவதும் தனித்தனியானது, வித்தியாசமானது. பொதுவான "அழைப்பு" முடிந்த பிறகு, சிலர் இராஜ்யத்தில் அவரோடு உடன் சுதந்திரராக இருக்கும்படி வைத்திருக்கிற பெரிய வெகுமதிக்கான ஓட்டத்தில் பங்குபெறுவதற்காக கதவு திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. தேவன் "கிறிஸ்துவின் சரீரமான" சபையில் ஒரு குறிப்பிட்ட அளவினரை ஏற்கெனவே முன் குறித்து வைத்திருக்கிறார். ஆகவே, அதில் ஒன்று, கூடவோ அல்லது குறைவாகவோ இருக்க முடியாது. (இது லேவி. 21:17-23ல் நிழலாக கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது) ஆகவே, இந்த எண்ணிக்கைக்கு மேல் அதிகமாக அவரால் அழைக்க முடியாது. 1881ல் இந்த முழு தொகையும் வந்தாயிற்று என்று அவருடைய வசனம் சொல்லுகிறது. ஆனால், பொதுவான அழைப்பை ஏற்றுக் கொண்டு, அவரோடு உடன்படிக்கை செய்து கொண்ட சிலர், தங்களுடைய உடன்படிக்கையை காத்துக் கொள்ள இயலாது இருப்பதால், அந்த பரிசைப் பெறுவதற்கென ஓட தவறி விட்டதால், அவர்கள் ஓட்டத்தில் பிரவேசிக்கும்படி பொதுவான அழைப்பு நிறுத்தப்பட்டு விட்டாலும், கதவு திறந்திருக்கிறது. மேலும், சத்திய ஊழியத்தில் தன்னையே ப-யாக செலுத்தவும், பரீட்சையின் போது இப்படிப்பட்டவர்களின் இடத்திலும், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் என்கிற க-யாண வஸ்திரத்தை உதறித் தள்ளியவர்கள் இடத்திலும் நிற்கும்படியாக,

கதவு திறந்திருக்கிறது. இப்படியானவர்கள் தற்கால உலகத்தை நேசிக்கிறார்கள், உலகத்தின் கவலைகளினால் மேற்கொள்ளப்படுகிறார்கள், இதனால் அவர்களுடைய உடன்படிக்கையை நிறைவேற்ற இயலாது இருக்கிறார்கள்.

மறுபடியும், கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், 1881ல் அழைப்பு முற்றுப் பெற்ற போதிலும், அழைப்பை ஏற்று தேவனிடம் அர்ப்பணம் செய்து கொண்ட ஆயிரக்கணக்கான ஊழியக்காரர்களின் சிலாக்கியங்களில் அது தலையிடவில்லை; உள்ளே இருந்த எவரையும் வெளியே போடவும் இல்லை. இனி எவரும் உள்ளே வரமுடியாது என்றும் கிடையாது. அது தேவனுடைய பொதுவான அழைப்பை மட்டுமே நிறுத்தியுள்ளது.

நீ இப்பொழுதுதான் தேவன் தம்மை நேசிக்கிறவர்களுக்கென்று வைத்திருக்கின்ற மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைக் குறித்து ஒரு தெளிவான அறிவைப் பெற்று இருக்கிறாய் என்பதும், இதற்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற பந்தயப் பொருளைக் குறித்து நீ அறிந்திருக்கவில்லை என்பதும், இந்த பந்தயப் பொருளைப் பெறுவதற்கான ஓட்டத்திற்கு அழைக்கப்படவில்லை, ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று அர்த்தப்படாது. உண்மை என்னவெனில் அழைப்பை ஏற்றுக் கொள்கிற எவனும், கடைசியில் கிடைக்கப் பெறும் பந்தயப் பொருளைப் பற்றியோ, அதன் சிறப்பு பற்றியோ அல்லது ஓடுகின்ற பாதை இடுக்கமானதா, கரடு முரடானதா என்பதையோ முற்றிலுமாக ஆரம்பத்திலேயே அறிந்து கொள்ளாமல் இருக்கமாட்டான். வாக்குத்தத்தங்களை தெளிவாக நாம் புரிந்து கொள்ளுவது, நம்மை பெலப்படுத்தும்படியாக, தற்போதுள்ள தடைகளையும், சோதனைகளையும் மேற்கொள்ளும்படியாக உள்ள தேவ பலமாயிருக்கிறது. நாம் உண்மையுள்ளவர்களாக நம்மை நிரூபித்து முன்னேறிச் செல்லும் போது மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் நமக்கு படிப்படியாக விளங்குகிறது. நாம் ஓடி பந்தயப் பொருளைப் பெறும்படியாக, இதன்மூலம் தைரியத்தையும் பலத்தையும் பெற்றுக் கொள்கிறோம். 2 பேது. 1:4



பந்தயப் பொருளைப் பெறுவதற்குரியவர்கள், அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் (ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள்) உண்மையுள்ளவர்களும் ஆவார்கள். பொதுவான அழைப்பு நின்று விட்டாலும், உண்மையுள்ளவர்களை சோதிப்பது இன்னமும் நின்றுவிடவில்லை என்பது தெளிவாகிறது. உண்மையுள்ளவர்கள் முத்திரையிடப் படுகிறார்கள். தங்களுடைய சுய தியாகம் என்கிற உடன்படிக்கையை நடைமுறைப் படுத்தாதவர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். புத்தியுள்ள கன்னிகைகள் புத்தியில்லாத கன்னிகைகளிடம் இருந்து பிரிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்யும் தவறு என்னவெனில், அவர்களும் தேடி உலகம் தரும் பரிசுப்பொருட்களான கனம், செல்வம் போன்றவற்றை வெல்ல முடியும், அதே நேரத்தில் மாபெரும் பரிசுப்பொருளான மகிமை கனம், அழியாமை ஆகியவற்றிக்கான ஓட்டத்தையும் உண்மையுடன் ஓட முடியும் என்று நினைக்கிறார்கள். ஆனால் நிலைமையோ இரண்டு ஓட்டங்களையும் ஓட அனுமதிக்காது. "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாக இருக்கிறான்." "தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது." யாக். 1:8; மத். 6:24

எல்லா உண்மையுள்ள "புத்தியுள்ள கன்னிகைகளும்" நிரூபிக்கப்பட்ட பின்னர், ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்த பின்னர், அந்த வகுப்பினராவதற்கு உள்ள தருணம் என்கிற கதவு மூடப்படும்; இனிமேல் ஒருவரும் அதற்குள் பிரவேசிக்க இயலாது. எல்லா புத்தியுள்ளவர்களும் பிரவேசித்த பின்னர் முன் குறிக்கப்பட்ட தொகை முற்றுப்பெறும். அதன்பின்னர் ஆண்டவர் எழுந்து கதவை மூடுவார். (லூக். 13:24, 25,; மத். 25:10) அப்பொழுது அநேகர் வித்தியாசமாகக் காணத் தொடங்குவார்கள் என்றும் மேலும் ப- செலுத்துவதற்காக அவர்கள் அனுபவித்த சிலாக்கியங்களும், தருணங்களும் இல்லாமல் இருப்பதைக் காண்பார்கள் என்றும் நமது ஆண்டவரே கூறுகிறார். அவர்கள் பிரவேசிக்க முயற்சிக்கும் போது ஆண்டவர் கூறுவார் : நான் உன்னை என் மணவாட்டியாக அறியேன், அவள் முழுமையடைந்தாள்,

எனக்கு மணவாட்டி ஒன்றுதான் உண்டு. ஆனாலும் தேவனுக்கு ஸ்தோத்திரம், மற்ற வேத பகுதிகள் காட்டுவது என்னவெனில், புத்தியில்லாத கன்னிகைகள் இப்படியாக பரம அழைப்ப-ருந்து நிராகரிக்கப்பட்டு விட்டாலும், அவர்கள் பரீட்சிக்கப்பட்ட போது அவர்களுடைய நடக்கை அவர்கள் அபாத்திரர் என்று காட்டினாலும், அவர்களுக்கு அனுக்கிரகம் உண்டு, தேவனுடைய வீட்டில் ஒரு சிறு நபராக காணப்படுவார்கள்.

ஆகவே, வாசல் அடைபடு முன்னர், உண்மையுள்ளவர்களின் எண்ணிக்கை பூர்த்தியாகும் முன்னர், நம்மில் ஒவ்வொருவரும் தன்னுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுவோமாக. இதைச் செய்யும்படியாக, தேவன் இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் விளக்கமாக கூறும் உவமைகள் ஊடாக, நம்மில் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றவும், தமக்குப் பிரியமானதைச் செய்யவும் அனுமதிப்போமாக.

ஆனாலும், சிலர் இன்னமும் சொல்லக்கூடும், 1881ல் பொதுவான அழைப்பு நிறுத்தப்படுவதற்கு முன் நான் அழைக்கப்படவில்லை. ஏனென்றால், நான் தேவனின் ஆழமான வாக்குத்தத்தங்களைப் பற்றி முற்றிலும் அறியாதவனாக இருந்ததோடு, நான் தேவனுக்கு முற்றிலும் அந்நியனாக இருந்தேன். அவருக்கு நான் சத்துருவாகக் கூட இருந்தேன், அவருடைய ஊழியத்தைச் செய்யும்படியாக நான் செய்து கொண்ட உடன்படிக்கைக்கும் தூரமாக இருந்தேன், இப்படிப்பட்ட வாஞ்சை கூட அற்றவனாக இருந்தேன். நான் தேவனை அறிந்ததே சமீபத்தில் தான். சமீபத்தில் தான் நான் அவரில் கற்றுக் கொள்ளும்படி கிறிஸ்துவின் நுகத்தை என்மேல் ஏற்றுக் கொண்டேன். இப்பொழுது தான் கிறிஸ்துவோடு பாடுகளை அனுபவிப்பது என்றால் அவருடைய சேவையில் தன்னைத்தான் வெறுக்க வேண்டும் என்பதையும், இப்படியாக அவரோடு பாடு அனுபவிப்பவர்கள், படிப்படியாக அவரோடு ஆயிரம் வருட அரசாட்சியின் மகிமையின் வேலையில் உடன் சுதந்திரராக ஆக்கப்படுவார்கள் என்பதையும் அறிந்து கொண்டேன். இப்பொழுது இந்த மகிமைகளைப் பார்த்த பின்னர்,



இந்த விலையேறப்பெற்ற விஷயங்களைப் புரிந்து கொண்ட பின்னர், பந்தயப் பொருளுக்கான இந்த ஓட்டத்தில் நான் ஓட வேண்டும் என்று தீர்மானித்த பின்னர், ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட இலக்கத்தினர் சேர்ந்து விட்டார்கள் என்பதற்காக நான் ஓட முடியாது என்று முடிவு செய்ய வேண்டுமா? திவ்ய ஒழுங்கு முறை மாற்றப்பட வேண்டும் என்று நான் கேட்க மாட்டேன். இல்லையென்றாலும், திவ்ய ஞானத்தினால் தீர்மானிக்கப்பட்ட இலக்கத்திற்கு மேலாக ஒன்று கூட்டப்பட வேண்டும் என்றும் கேட்கமாட்டேன். ஆனால், என்னுடைய துரதிர்ஷ்டத்தை அதிகமாக உணருவேன்.

இப்படிப்பட்டவர்களுக்கு நாங்கள் பதில் சொல்லுவதாவது : தொடர்ந்து ஓடுங்கள். உங்களுடைய விஷயம் நீங்கள் சொல்லுவது போன்று அவ்வளவு இருண்டதல்ல. “வாசல்” இன்னமும் அடைபடவில்லை. அழைப்பை ஏற்றுக்கொண்ட அனைவரும், தங்களுடைய உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்கள் என்று கதவு அடைபடும் போது நிரூபித்திருக்க வேண்டும், என்றாலும் அநேகர் இல்லை, போதுமான அளவு தான் இருப்பார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், நீங்கள் கூறுகிறபடியும் வேதம் கூறுகிறபடியும் அழைப்பை ஏற்றுக் கொள்ளுபவர்கள் அநேகராயிருந்தாலும், சிலர் மாத்திரம் தெரிந்து கொள்ளப்படுவார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில் பரீட்சிக்கப்படும் போது சிலர் தான் தங்களுடைய உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்கள் என நிரூபிப்பார்கள். அழைக்கப்பட்டவர்களில் சிலர் ஒருவர் பின் ஒருவராக உண்மையற்றவர்களாக காணப்படும் போது, அவர்களுக்குள்ள தருணங்கள், அவர்கள் ஊழியத்தின் இடங்கள், அவர்களுடைய கிரீடங்கள் என்னும் வெகுமதி மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த ஊழியத்தின் இடங்களில் ஒன்று, வெகுமதியின் கிரீடங்களில் ஒன்று உனக்குக் கொடுக்கப்படலாம். உன்னுடைய நாமம் ஜீவ புஸ்தகத்தில், தற்கா-கமான ஒரு இடத்தில், கிறிஸ்துவின் மணவாட்டியென எழுதப்படலாம். ஏற்கெனவே இருந்தவர் தகுதியற்றவர் என்று காணப்பட்டு, அவரது நாமம்

கிறுக்கிப் போடப்பட்ட இடத்தில் எழுதப்படலாம். வெளி 3:5; எபி. 12:23

இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை உணரக்கூடியவர்கள், திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்ய வேண்டும் என்று வாஞ்சிப்பவர்கள், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் என்று கூறப்படலாம். (தொகுதி 1. பக். 319 ஐ பார்க்கவும்) ஏனெனில், தங்களை அர்ப்பணித்து ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்படும் தேவனுடைய ஆழமான காரியங்களை, மனிதனுடைய மனம், நீதிமானாக ஆக்கப்பட்டு இருந்தாலும் கூட கிரகித்துக்கொள்ள இயலாமல் இருக்கிறது. (1 கொரி. 2:6-16) ஒரு போதும் செயல்படுத்த முடியாத நம்பிக்கைகளை இருதயத்தில் ஆண்டவரால் கொடுக்க முடியாது. ஏனெனில், அவர் அவ்வளவு அதிக அன்புள்ளவராக இருக்கிறார். தேவனுடைய சத்திய வார்த்தையின் மூலம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவது என்பது இறுதியாக ஆவிக்குரிய நிலையில் பிறப்பதாகும். இப்படிப் பிறந்தவன் தன்னைத்தானே அபாத்திரனாக அல்லது உண்மையற்றவனாக ஆக்காதவரை இது சாத்தியமாகும். “ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள்.” (எபி. 10:35)

### பதினோராம் மணி வேளை
### மத். 20:1-16

இந்த உவமை இந்த வேளைக்கு ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுக்கும்படி கொடுக்கப்பட்டது போல் தோன்றுகிறது. வேலையாட்கள், வைராக்கியம் நிறைந்த தேவனுக்கென்று அர்ப்பணம் செய்து கொண்ட தேவ பிள்ளைகள், சுவிசேஷ யுகம் முழுவதும் உவமையின் நாளில் தங்களுடைய நேரத்தையும் சக்தியையும் சுயத்திற்காகவும் உலகத்திற்காகவும் செலவிடாமல் ஆண்டவருக்கு ஊழியம் செய்வதில் செலவிடுகிறார்கள். ஆகவே, உண்மையுள்ளவர்கள் தான் வேலையாட்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இவர்கள் எல்லாருக்கும் ஒரே வெகுமதிதான், பணம் என்று உவமையில் குறிப்பிடப்பட்டிருப்பது இராஜ்யத்தின் கனம் ஆகும்.



இந்த அழைப்பின் பொதுவான தன்மை, வேலையாட்கள் தேவைப்படுவது நான்கு அழைப்பின் மூலம் காட்டப்பட்டுள்ளது. அதிகாலை வேளை, 9 மணி, மத்தியானம் மற்றும் சாயங்காலம் 3 மணி. ஆனாலும், சம்பளம் எவ்வளவு என்பது ஆரம்பத்தில் தான் சொல்லப்பட்டது. வீட்டு எஜமான் அவர்களுக்கு ஒரு பணம் கொடுப்பேன் என்று அப்பொழுது சொல்-யிருந்தான். ஆகவே, இராஜ்யத்தின் வாக்குத்தத்தம் ஆதி சபையினால் தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட்டது. அதன்பிறகு இது தெளிவாக சொல்லப்படவில்லை, விளங்கிக் கொள்ளப்படவில்லை. கிறிஸ்துவின் சபையில் உள்ள ஜீவனுள்ள அங்கத்தினர்கள், அவருடைய திராட்சைத் தோட்டத்தில் சுவிசேஷ யுகத்தின் போது, எந்த வேளையில் வேலை செய்பவராக இருந்தாலும் எல்லாரும் வேலையாட்களுக்கு அடையாளமாக இருக்கிறார்கள். இந்த உவமை விசேஷமாக காட்டுகிறது என்னவெனில், ஒரு நாளின் ஆண்டவரின் வேலை முடியும் தறுவாயில் இருக்கும் போது, பிரவேசிக்கும் ஒரு வகுப்பினரை பற்றி “பதினோராம் மணி வேளையில்” (கடைசி மணி நேரம்) பிரவேசிப்பவர்களைப் பற்றி கூறுகிறது. அவர்கள் ஆண்டவருக்காக ஊழியம் செய்ய வாஞ்சையுள்ளவர்கள் போல் காட்டப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் வெகு தாமதமாகிவிட்டார்கள், பொதுவான அழைப்பு முடிந்து விட்டது. அவர்கள் சொல்லுகிறார்கள் : “ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை,” அழைப்பு விடுவிக்கப்பட்ட போது அதை ஏற்று வேலை செய்ய அதிக தாமதமாகிவிட்டது.

ஆண்டவர் அவருக்கு ஊழியம் செய்ய, அதில் பாடுபட உள்ள தருணம் என்கிற கதவு இன்னமும் அடைபடவில்லை என்று சுட்டிக் காட்டுகிறார். அது மூடப்படுகிற வேளை “ஒருவரும் கிரியை செய்ய முடியாத இராக்காலம் வருகிறது” என்பதினால் சுட்டிக் காட்டப்படும். ஆனால், வெகுமதியைப் பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை. ஆனாலும், பொதுவான அழைப்பின் கீழ் மற்றவர்களை வேலைக்கு அமர்த்துவதைக் குறித்து “நியாயமானபடி கூ- பெற்றுக் கொள்வீர்கள்” என்றார். (கிரேக்க பூர்வ பிரதிகளாகிய சினயாட்டிக், வாடிகன் ஆகியவைகளில் மத். 20:7ல் உள்ள “நியாயமானபடி கூ- பெற்றுக்

கொள்வீர்கள்" என்ற பகுதி நீக்கப்பட்டுள்ளது) - முதலாவது ஒத்துக் கொள்ளப்பட்ட சம்பளத்தின் ஒரு பகுதி.

ஆகவே, சுவிசேஷ யுகத்தின் போது, சபையில் உள்ள அவருடைய வேலைக்காரர்கள் மூலம் தொடர்ந்து எல்லா விசுவாசிகளும் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று அழைத்திருக்கிறார். அதற்கான முழு வெகுமதியானது இராஜ்யத்தின் மகிமை, திவ்ய சுபாவம் என்று தெளிவாகக் கூறப்பட்டது,ஆரம்ப காலத்தில் நன்கு விளங்கிக் கொள்ளப்பட்டது. ஆனாலும் யுகம் முழுவதும் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டாலும், சத்தியத்தை விட்டு மாபெரும் விழுந்து போகுதல் ஏற்பட்டதால், தெளிவாக விளங்கிக் கொள்ளப்படவில்லை. ஆனால் இப்பொழுது சுவிசேஷ நாளின் ஊழியத்தின் இறுதிக்கு, அதாவது பதினோராவது மணி வேளைக்கு வந்து இருக்கிறோம். இந்த நாளுக்கென வேலையாட்களைக் கூப்பிடும் நேரம் கடந்து சென்று விட்டது. இருந்தாலும் சிலர், "ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்கிறார்கள்." அழைப்பு முடிந்து விட்டது. வேலை இல்லை, வேலை கிடைத்தாலும் கூ- இல்லை. அழைப்பு வந்துவிட்டது, நாளின் வேலை கிட்டத்தட்ட முடிந்து விட்டது. நம்மையன்றி போதுமான வேலையாட்கள் உண்டு. ஆனால், நம்மிடம் ஆண்டவரும் கூறுவார்: "என் திராட்சைத் தோட்டத்திற்கு போங்கள்." நாம் ஒன்றும் வாக்குத்தர முடியாது. பொதுவான அழைப்பு முடிந்து விட்டது. "ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது." ஆனால் உள்ளே பிரவேசியுங்கள். உங்களுடைய அன்பையும் வைராக்கியத்தையும் காட்டுங்கள். வெகுமதி கொடுப்பதை எனது தயாளத்திற்கு விட்டு விடுங்கள்.

ஆனால், நாம் இதை மட்டும் தான் கூற முடியும்: நமக்கு உள்ள ஒரே நம்பிக்கை என்னவெனில், எந்த மனிதனாலும் சரி, ஆண்டவருக்கென எப்பொழுது வேலை செய்தாலும், அவன் கேட்பதற்கும், எதிர் பார்க்கிறதற்கும் அதிகமாக, அபரிமிதமாக பெற்றுக் கொள்ளுவான் என்பதில் சந்தேகமில்லை. அப்படியானால், சில இடங்கள், சிலர் உண்மையுடன் வேலை செய்யாததால் கா-யாக இருக்கும். இவர்களுக்கென வைக்கப்பட்டிருந்த பரிசுப் பொருளான



கிரீடங்கள் மற்றவர்களுக்கு வழங்குவதற்காக எடுத்து வைக்கப்படும். ஏனெனில், இப்படியானவர்கள் தங்களுடைய உண்மையினிமித்தம், தங்களையே ப-யாக செலுத்தியதினிமித்தம் ஊழியத்திற்கு தகுதி உள்ளவர்கள், பந்தயப் பொருளுக்கு தகுதியுள்ளவர்கள் என்று நிரூபித்து காட்டுகிறார்கள்.

அப்படியென்றால் யாராவது சமீபத்தில் தான் ஆண்டவரை அறியவும் நேசிக்கவும் தொடங்கியிருப்பார்களெனில், அவருக்கும் அவருடைய சத்தியத்திற்கும் ஊழியம் செய்ய வேண்டும் என்கிற விருப்பம் உடையவர்களாக இருப்பின் 1881ல் பொது அழைப்பு முடிந்து விட்டது என்பதற்காக அதைரியப்பட வேண்டியதில்லை. உங்களுக்கு முன்பாக, தியாகத்திற்கும் ஊழியத்திற்கும் தருணம் என்கிற கதவு திறந்து இருக்குமென்றால், உள்ளே பிரவேசியுங்கள். ஆனால் துரிதமாக பிரவேசியுங்கள். ஏனெனில் இருள் என்கிற இரவு சத்தியத்தை எதிர்ப்பது என்பவை சீக்கிரத்திலே நம்மேல் வருகிறபடியால் ஊழியம் செய்ய முடியாதபடி தடை உண்டு பண்ணும் "விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது." "ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது." (ஏசா. 21:12; யோவா. 9:4) அது உண்மையாக இருக்கும் பட்சத்தில், "கதவு மூடப்பட்டு விட்டது" என்றும், எல்லா புத்தியுள்ள கன்னிகைகளும் உள்ளே பிரவேசித்து இருக்கிறார்கள் என்றும், எல்லோரும் நிரூபிக்கப்பட்டுவிட்டார்கள் என்றும், எல்லா கா-யிடங்களும் திருப்தியாக நிரப்பப்பட்டு விட்டன என்றும் அறிந்து கொள்ளலாம். தேவனுடைய அனைத்து விசேஷித்த ஊழியக்காரர்களும், அந்த வேளையில் நெற்றியில் முத்திரையிடப்பட்டு விட்டார்கள். (தேவனுடைய திட்டத்தைப் பற்றிய அறிவு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது) நான்கு காற்றுகளும் விடப்படும். (வெளி. 7:1-3) அது உபத்திரவமாகிய ஒரு பெரும் சுழற்காற்றை உண்டு பண்ணும். அப்பொழுது மீதமுள்ள எ-யா வகுப்பினர் "மறுரூபமாக்கப்பட்டு," இராஜ்யத்தின் மகிமைக்கு உயர்த்தப்படுவார்கள்.

ஆண்டவருக்கு ஊழியம் செய்வதே முதன்மையானது, முக்கியமானது என்று உடன்படிக்கை செய்த பின்னர், உலகம் கொடுக்கின்ற நிலையற்ற சந்தோஷத்திற்காக, பரிசுப்

பொருட்களுக்காக, தங்களுடைய நேரத்தை, தங்கள் எண்ணங்களை செலவிடும்படியாக முயற்சிக்கிறவர்களுக்கு இது எவ்வளவு ஒரு பெரிய பாடமாக உள்ளது. ஆண்டவர் கூறுகிறதாவது: "நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, நான் உனக்கு ஜீவ கிரீடத்தைத் தருவேன்." "ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ (உலகத்தின் ஆவி தனக்குள் இல்லாதபடி அதை மேற்கொள்ளுகிறவன்) அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவ புஸ்தகத்தி-ருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல், என் பிதா முன்பாகவும், அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்." "ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு." வெளி. *2:10; 3:5, 11*

## புறப்பட்டு போகக்கடவோம்
**-எபிரேயர் *13:13* -**

"பயபக்தியுடன் துரிதமாக செல்லும் மனிதர்களைப் போல,
அமைதியை தரித்துக் கொண்ட உபயோகமற்ற நடைப்பிரயாணியாக,
உலகத்தின் விசாலமான வாயிலுக்கு அப்பால் செல்லுகிறோம்,
உலகத்திற்கு எங்கள் முதுகை காட்டி;
இடுக்கமான பாதை வழியாக செல்லுகிறோம்,
அது ஜீவனுக்கும், சந்தோஷத்திற்கும், தேவனுக்கும் நேராக வழி
நடத்துகிறது.

"எங்களால் தரித்து நிற்க இயலாது, இருக்கவும் மாட்டோம்;
வழி நெடுகிலும் உள்ள பொறிகளை நினைத்து அஞ்சுகிறோம்;
பாரமானவற்றையும், பாவத்தையும் அப்பால் விட்டெறிகிறோம்,
வெற்றி சிறக்க வேண்டும் என்று உறுதி கொள்ளுகிறோம்;
ஆபத்தைப் பற்றி அறிந்திருக்கிறோம், ஆனாலும் எங்கள் கண்கள்
பந்தயப் பொருளின் சிறப்பின் மேல் இருக்கிறது.

"இப்பொழுது சோம்பேறித்தனம், வீணான தூக்கம் கிடையாது,
கிறிஸ்தவ உழைப்பில் இருந்து எங்கள் அங்கங்களைக் காத்துக் கொள்ள;
தவிர்க்க முடியாத யுத்தத்தில் இருந்து பின்வாங்கப் போவதில்லை;
விட்டுக் கொடுக்கும், அல்லது ஓடிவிடும் எண்ணமே கிடையாது;
தற்போதுள்ள நன்மைகளைக் குறித்தோ, சௌகரியத்தின் மேல்
நோக்கம் கிடையாது;



எந்த மனிதனையோ, சுயத்தையோ திருப்தி படுத்த முயற்சிக்கவில்லை.

"நன்மதிப்பு போய்விட்டதே என்று துக்கமில்லை;
எங்களுடைய பெயர்கள் கேவலப்படுத்தப்படுவதைக் குறித்து
பயமும் இல்லை;
உலகத்தாரின் பயங்கரமான இகழ்ச்சியைக் குறித்து அச்சமும்
இல்லை;
திரும்ப வேண்டும் என்கிற எண்ணத்தின் மேல் விருப்பமும்
கிடையாது.
வெறுப்புக் காட்டியவர்கள் மேல் வெறுப்புணர்ச்சியும் இல்லை,
பகையும் இல்லை ஆனால் அன்பு மாத்திரம் அனலூட்டப்படுகிறது.

"பின்விட்டு வந்த சிரிப்பின் மேல் ஏக்கமும் இல்லை ;
காற்றில் வீசி எறியப்பட்ட சௌகரியங்கள் மேலும் இல்லை ;
சோதோமின் திறந்த வெளியை திரும்பிப் பார்ப்பது இல்லை ;
பாபே-ன் குரலுக்கு இன்னும் செவி சாய்ப்பதும் இல்லை ;
எகிப்தின் பாட்டிற்கோ அல்லது சிரிப்பிற்கோ கண்ணீர்
விடுவதுமில்லை ;
பாய்ந்தோடும் நைல் நதியின் மேல் தாகமும் இல்லை.

"களைப்பு அதிகமாக நெருக்கினாலும்
இன்னும் கொஞ்சம் தான், நாங்கள் இளைப்பாறுவோம்.
துடிக்கும் இந்த இதயமும், பற்றியெறியும் மூளையும்
சீக்கிரத்திலே அமைதியாகி விடும், குளிர்ந்து விடும்;
இரவு சென்று விட்டது. பகல் தீவிரித்திருக்கிறது-
மேகங்கள் அற்ற காலை வருகிறது.

"இன்னும் கொஞ்சம் தான் நாங்கள் வருகிறோம்
எங்களுடைய வெகுமதிக்காக, கிரீடத்திற்காக, வீட்டிற்காக!
இன்னொரு வருடம், கூடவோ, குறைவாகவோ,
நாங்கள் வனாந்தரத்தைக் கடந்து விட்டோம்;
உழைப்பை முடித்து விட்டோம், இளைப்பாறுதல் தொடங்கிவிட்டது,
யுத்தம் செய்தாயிற்று, வெற்றி பெற்றாயிற்று!"

- H. Bonar

★★★

## அத்தியாயம் 7

# சபையின் மீட்பும், உயர்த்தப்படுதலும்

*சபையின் மீட்பு அருகில் இருக்கிறது - மனுக்குலத்தின் விடுதலையை முன்னறிவிப்பவர் - அதன் காலம் யூகமாகச் சொல்லப்படுகிறது - உலகத்திற்கு வருகிற துன்பங்களில் இருந்து பரிசுத்தவான்கள் எப்படி தப்பித்துக் கொள்ளுவார்கள் - எப்படி, எப்பொழுது தேவன் அவளுக்கு உதவி செய்வார் - அவளது கடைசி விடுதலையின் விதமும், சூழ்நிலைகளும் - இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள் முதலாவது விடுதலை பெறுவார்கள் - சபையின் உயிரோடிருக்கும் அங்கங்கள் மறுரூபமடைதல் - அவர்கள் மரிப்பார்களா? - இது முதல் கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.*

*"உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள்." லூக். 21:28*

தீர்க்கதரிசன வெளிச்சத்தின் மூலம், அறுப்புக் காலத்தின் அற்புதமான சம்பவங்களை மகா உபத்திரவத்தின் காலம் வரை பார்த்துள்ளோம். மேலும், இந்த காரியங்கள் நடைபெறும் காலத்தின் போது சபைக்கு வாக்களிக்கப்பட்ட மீட்பும், உயர்த்தப்படுதலும் நடைபெற வேண்டியுள்ளது என்பதை நாங்கள் நினைவில் வைத்துள்ளோம். பரிசுத்தவான்களுக்கு மிகவும் ஆர்வத்தை

உண்டுப்பண்ணக்கூடியது என்னவெனில் அவர்களது மீட்பின் காலம், விதம் மற்றும் சூழ்நிலைகள் ஆகும்.

அறுப்புக் கால காரியங்கள் நடைபெறுவதைக் கண்டவுடன், நம்முடைய மகிமையான நம்பிக்கை சீக்கிரமாக நிறைவேற எதிர்பார்க்க வேண்டும் என்று நமது ஆண்டவர் போதித்தார். ஆகவே, இப்பொழுது தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் இந்த அடையாளங்களைப் பார்க்கும் போது, நம்முடைய தலைகளை உயர்த்தி வருகின்ற மகிமையின் நம்பிக்கையில் களி கூறுகிறோம். விடியற்காலை வருகிறது, இருந்தாலும் ஒரு குறுகிய இராக்காலம் இடையில் வரவேண்டும். இந்த களிகூறுதல் சுயநலத்தோடு உள்ளது அல்ல. பாவம் என்கிற அடிமைத்தனம், கொடுமை, வியாதியின் வேதனைகள் மற்றும் மரணம் என்கிற சிறைச்சாலை ஆகியவற்றி-ருந்து முழு உலகத்திற்கும் சீக்கிரமாக விடுதலை உண்டாகும் என்பதற்கு, கிறிஸ்துவின் சபை, மீட்பும் மகிமையும் அடைவது முன்னோடியாக இருக்கும். “ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது.... நம்முடைய சரீர மீட்பை (கிறிஸ்துவின் சரீரமான சபை) பெறுவதற்கு காத்துக்கொண்டு இருக்கிறது.” (ரோம. 8:22, 23) ஏனென்றால், யேகோவாவின் புதிய ஒழுங்கு முறைகள், தலை சரீரம் சேர்ந்த, முழு கிறிஸ்து என்னும் மாபெரும் ஆட்சியாளர் முற்றிலுமாக ஆட்சிக்கு வரும்வரை ஸ்தாபிக்கப்பட முடியாது.

பரிசுத்தவான்களின் மீட்பு 1914ம் வருடத்திற்கு பிறகு நடக்க வேண்டும் என்பது வெளிப்படுகிறது. (இந்த தொகுதியின் ஆசிரியர் முன்னுரையில் பக்கம் i, ii, “காலம் சமீபமாயிருக்கிறது” என்ற தொகுதியின் பக்கம் iii - iv பார்க்கவும்) எப்படியெனில் நாம் பார்க்கிற படி மாம்சீக இஸ்ரயே-ன் மீட்பு அந்த நேரத்தில் நடைபெற வேண்டும் என்று குறிக்கப்பட்டுள்ளது. கோபமுடன் இருக்கும் ஜாதிகள் அமைதியாக இருக்கும்படி கட்டளையிடப்படுவார்கள். மேலும் யேகோவாவின் அபிஷேகம் பெற்றவரின் வல்லமையை உணரும்படி செய்யப்படுவார்கள். 1914க்குப் பின், கிறிஸ்துவின் சரீரமான சபையின் கடைசியாக உள்ள அங்கத்தினர்கள், எவ்வளவு காலத்திற்கு பின்னர் மகிமைப்படுத்தப்படுவார்கள் என்பதைக் குறித்து



நமக்கு நேரடியாக சொல்லப்படவில்லை. ஆனால், நிச்சயமாக மாம்சத்தில் செய்யப்படும் வேலை முடியும் வரை இருக்காது. மேலும் அந்த வேலை முடிந்த பின்னர், அவர்கள் நீண்ட நாட்களுக்கு இருப்பார்கள் என்று கூற இயலாது. இந்த இரண்டு சிந்தனைகளையும் மனதில் வைத்து மீட்பின் காலம் எப்பொழுது வரும் என்று யூகிக்கலாம்.

சரீரமான சபையின் உயிரோடு இருக்கும் அங்கத்தினர்களில் சிலர், புயல் திரண்டு வருவதையும் காண்பதோடு, அது கொண்டு வரக்கூடிய உபத்திரவங்களில் பங்கு பெறுவார்கள் என்பதற்கு தெளிவான அறிகுறிகள் இருக்கும் வேளையில், இவர்களில் எவரும் இதற்குள்ளாக அல்லது முற்றுமாக கடந்து செல்லுவார்கள் என்பதற்கான அறிகுறியும் இல்லை. ஆண்டவரின் வார்த்தை இப்படியாக கூறுகிறது : “ஆகையால் இனி சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி.... பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு..... விழித்திருங்கள்.” (லூக். 21:36) இது மேற்கூறியவற்றைக் குறிப்பிடுவது போன்று உள்ளது. இருந்தாலும் இந்த உபத்திரவங்களின் (பேர் சபை பரீட்சிக்கப்படுவதற்காக அதன் மேல் வரும் துன்பங்கள்) ஆரம்பத்திற்குள்ளாக நாம் ஏற்கெனவே கடந்து சென்று கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். நாம் தப்பித்துக் கொண்டிருக்கும் போது அநேகர் வஞ்சகத்திலும் நாத்திகத்திலும் விழுந்து கொண்டு இருக்கிறார்கள். உபத்திரவத்தின் இடத்தி-ருந்து நாம் எடுத்துக் கொள்ளப்படுவதால் நாம் தப்புவதில்லை, நம்முடைய அரணும் கோட்டையுமாக இருக்கிற நம்முடைய ஆண்டவரின் வார்த்தையால் அதின் மத்தியில் ஆதரிக்கப்படுகிறோம், பலப்படுத்தப்படுகிறோம், காக்கப்படுகிறோம். (சங். 91:4) இதே மாதிரியாக, சபையின் சில அங்கத்தினர்கள் உபத்திரவ காலத்தின் இறுதிவரை இருக்கக் கூடும் என்பதை ஒத்துக் கொள்ளும் வேளையில், அவர்கள் எல்லா உபத்திரவத்திலும் இருந்து தப்ப முடியும் என்பதை ஒத்துக் கொண்டாலும், சபையின் எல்லா அங்கத்தினர்களும் மீட்கப்படுவார்கள் என்பதும், மகிமையான நிலைக்கு உயர்த்தப்படுவார்கள் என்பதும் தெளிவாக இருக்கிறதென்று நாங்கள் நினைக்கிறோம். உபத்திரவத்தின் கொடுமையான காலம் வருவதற்கு முன்னர் சரீரமான சபை முற்றுப்பெற்று, கதவு அடைக்கப்படும்.

கடந்த காலங்களில் புயல் திரண்டு வருவதையும், வல்லமையான சேனைகள் யுத்தத்திற்கென ஒன்று கூடுவதையும், ஆயத்தமாவதையும் பார்த்து இருக்கிறோம். ஒவ்வொரு வருடமும் முன்னறிவிக்கப்பட்ட ஆபத்தை நோக்கி முன்னேற்றம் அடைவதையும் கண்டு இருக்கிறோம். ஒப்பிட முடியாத அளவுக்கு, நாசமும் அழிவும் எல்லா ஒழுங்கையும் குலைத்து, அராஜகத்தையும் குழப்பத்தையும் உண்டு பண்ணும் என்று நாம் அறிந்திருந்தாலும் கூட, நாம் பயப்படுவதில்லை. ஏனெனில் "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்து காலத்தில் அனுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி (தற்போதுள்ள சமுதாயம்) நிலைமாறினாலும் (குழம்பி, ஒழுங்கற்று போனாலும்), மலைகள் (இராஜ்யங்கள்) நடுச் சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி (பயத்தினால் நடுங்கினாலும்) அதின் பெருக்கினால் (எழும்புகின்ற அச்சுறுத்தல் மற்றும் வல்லமை) பர்வதங்கள் (இராஜ்யங்கள்) அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்." *சங். 46: 1-3*

"ஒரு நதியுண்டு, (தேவனுடைய வார்த்தை, சத்தியம் மற்றும் கிருபையின் ஊற்று) அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும் (தேவனுடைய இராஜ்யம் -சபை, இன்னமும் குழந்தையின் கரு போன்ற நிலையில் இருந்தாலும் - அது வல்லமைக்கும், மகிமைக்கும் உயர்த்தப்படுவதற்கு முன்னாக), உன்னதமானவர் வாசம் பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் (பரிசுத்த ஸ்தலம்-உன்னதமானவர் வாசம் செய்ய பிரியப்படும் சபை) சந்தோஷிப்பிக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்." *சங். 46 : 4,5*

தற்காலத்தில் இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உதவியை முழுமையாக நமக்கு தேவைப்படும் அளவிற்கு உணர்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய பரம பிதாவின் நம்பிக்கைக்குள்ளாக கொண்டு வரப்பட்டு, அவருடைய திட்டங்களை அறிந்து, அவருடைய நன்மை மற்றும் கிருபைக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டு, அவரோடு உடன் வேலையாட்களாகவும் ஆக்கப்பட்டுள்ளோம். நம்முடைய ஓட்டம் முடியும் வரை இந்த உதவி நமக்கு கிடைக்கும். நாம் அழைக்கப்பட்டு



இருக்கிற, உன்னதமான நிலைக்கு மறுரூபமாக்கப்படும் வரை இந்த உதவி கிடைக்கும். இதை நோக்கி நாம் கவனத்துடன் சென்று கொண்டிருக்கிறோம்.

மாம்சத்தில் இருக்கும் போது, கொடுக்கப்பட்ட இந்த வேலை முடியும் வரை, கிறிஸ்துவின் சரீரமான சபையின் இறுதியில் ஜீவித்துக் கொண்டிருக்கிற அங்கங்களுக்கு இந்த "மறுரூபமாக்கப்படுதல்" நடைபெறாது என்பதை நாம் தெளிவாக அறிந்திருந்தாலும், "ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வரும்" போது (*யோவா. 9:4*) நம்முடைய நீண்ட வேலை சுருக்கப்படும் - முத-ல் படிப்படியாக அதன்பிறகு முழுமையாக, முடிவாக என்று முந்திய அதிகாரத்தில் காட்டப்பட்டுள்ளது. அந்த "இரவின்" இருள் ஆயிரவருட சூரிய உதயத்தில் தான் நீக்கப்படும். நமது வேலை முடிந்த பின்னர், இருள் நம்மை சூழ்ந்து வரும்போது, புயல் போன்ற மேகங்கள் கருமையாக ஆவதை பார்க்க எதிர்பார்ப்பதோடு, அதைக் கேட்கவும் உணரவும் முடியும். இது மனுஷீக தீவிர உணர்ச்சியில், அதாவது உபத்திரவம் என்கிற சூறாவளியில் முடிவு பெறும். அதன்பிறகு நமக்கு கொடுக்கப்பட்ட வேலையை முடித்த பிறகு, நம்முடைய "மாறுதல்" வரும்வரை பொறுமையுடன் "நிற்பது" நம்மைச் சார்ந்ததாகும். *எபே. 6:13*

இப்படியாக, கொடுக்கப்பட்டுள்ள ஒன்றும் செய்யாது இருக்கும் நிலைமையில், அவருடைய வேலையைப் பொறுத்த வரை, அவருடைய பரிசுத்தவான்கள் நிற்பதை அனுமதிப்பதில் ஆண்டவர் எவ்வளவு காலம் விருப்பம் உள்ளவராக இருப்பார் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் ஒரு வேளை விசுவாசமும், பொறுமையும் அதன் பரிபூரண வேலையை செய்து முடிக்கும் வரை இருக்கலாம். இங்கே இந்த நற்குணங்கள் முற்றிலுமாக உருவாக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, வெளியே கொண்டு வரப்படும். இந்த பொறுமையின் பரீட்சை என்பது தான் சபையின் கடைசி பரீட்சையாகும். அதற்கு பிறகு "அதிகாலையிலே தேவன் அதற்கு சகாயம் பண்ணுவார்." (*சங். 46:5*) நீதியின் சூரியனாக அவளுடைய (சபை) ஆண்டவரோடு, ஆண்டவரின் பிரகாசத்தோடு எழும்பும் உலகத்தின் மேல் வருகிற காலை வேளையல்ல. ஆனால் அவளுடைய ஆண்டவரின் சுபாவத்தில், சாய-ல் மாற்றப்படுகிற அவளுடைய அதிகாலை

வேளையில் ஆண்டவர் உதவி செய்வார். அவளுடைய அதிகாலை ஆயிர வருட அதிகாலை வேளைக்கு முன்னதாக வரவேண்டும்.

இந்த இராக்காலம் ஏற்கெனவே வந்து கொண்டிருக்கிறது என்பது, வேதத்தில் இருந்து மாத்திரமல்ல, காலங்களில் ஏற்படும் அடையாளங்கள் மூலமாகவும் நமக்கு சொல்லப்பட்டுள்ளது. அப்பொழுது சபையின் மாம்சீக நிலைமை, எப்படியாக இருக்கும் என்பது எ-யா, யோவான் ஸ்நானகன் போன்றவர்களின் வாழ்க்கையின் இறுதியில் நடந்தது போன்று இருக்கும் என்று முன்னாலேயே சொல்லப்பட்டது போன்று தோன்றுகிறது. (தொகுதி 2, அத்தியாயம் 5) ஒருவர் தலை வெட்டப்படுவதும், இன்னொருவரை சூழல் காற்றில் அக்கினிமயமான இரதம் எடுத்துச் சென்றதையும் கிறிஸ்துவின் சபையில் இறுதியில் இருப்பவர்களுக்கு கொடுமையானதாக காட்டப்படுவதாக இருக்கலாம். இருந்தாலும் சீயோன் பயப்படத் தேவையில்லை; தேவன் அவள் மத்தியில் இருக்கிறார்; அவளுக்கு உதவி செய்வார். அவளுடைய அர்ப்பணம் மரண பரியந்தம், அவளுக்கு கிடைத்த சிலாக்கியம் அவள் உண்மையுள்ளவள் என்று நிரூபித்துக் காட்டுவதாகும். "சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல. சீஷன் தன் போதகனைப் போலவும், வேலைக்காரன் தன் எஜமானனைப் போலவும் இருப்பது போதும்." *மத். 10:24,25*

"மகா பாபிலோனாகிய" கிறிஸ்தவ தேசங்கள், அரசியல், குருத்துவம் மற்றும் மூட நம்பிக்கைகளில் தனது வல்லமை குறைவு படுவதைக் காணும் போது தனது நிலைமையை காத்துக் கொள்ள எடுக்கும் முயற்சியாக ஒரு வேளை இது இருக்கலாம். சத்தியம் பரவுவது அவளுடைய நிலைக்கு எதிராக இருக்கிறது என்று எண்ணப்பட்டு தடைபண்ணப்படும். ஒரு வேளை இந்த நேரத்தில் தான் எ-யா வகுப்பினர், இறுதிவரை சத்தியத்தை எடுத்து உரைக்க வேண்டும் என்று இருப்பவர்கள் அதிகமாக மூர்க்கத்தனத்தை சந்திப்பார்கள், மகிமைக்குள் கடந்து செல்லுவார்கள், அதிக உபத்திரவ காலத்தில் கடுமையான அம்சங்களில் இருந்து தப்புவார்கள். பிரச்சனைகள் வரும் போது மனிதர்கள், கிறிஸ்தவத்தின்



உருவமைப்பு தளர்ந்து போகாதபடி பாதுகாக்க முக்கியமான அவசரமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று நினைப்பது போன்று.

கிறிஸ்துவின் சரீரமான சபையில் இறுதியாக இருக்கின்ற அங்கத்தினர்களின் மீட்பு அல்லது "மறுரூபம்" நடைபெறும் சரியான வேளை குறிப்பிடப்படாவிட்டாலும், வாசல் அடைபட்ட பின்னர் இது நடைபெறும் என்று தெளிவாகத் தெரிகிறது. *(மத். 25:10)* பாபிலோன் தற்போது தன்னுடைய விரோதி என்றும், தன்னுடைய அழிவுக்கு காரணமானது என்றும் நினைக்கின்ற சத்தியம் அதிகமாக விளக்கப்படுத்தப்பட்டு அநேகரால் அறிந்துகொள்ளப்பட்டு இருக்கும். கல்மழைக்குப் பின்னர், பொய்யான சத்தியங்கள் ஓர் அளவுக்கு நீக்கப்பட்டிருக்கும். மேலும், இப்பொழுது சத்தியத்திற்கு எதிரான வெறுப்பு மற்றும் குமுறல், மூர்க்கம் ஆகியவை பரிசுத்தவான்கள் செய்யும் பெரிய வேலையை நிறுத்த எழுப்பிவிடப்படுகிறது. தெரிந்து கொள்ளப்பட்ட அனைவரும், முத்திரை இடப்பட்ட பின்னர், தேவன் இதை அனுமதிப்பார். மாம்சத்தில் இருக்கும் வரை பரிசுத்தவான்களுக்கு எந்த விதமான உபத்திரவம் அல்லது நாசம் வந்தாலும் அவர்களுடைய புசிப்பும் குடிப்புமாக இருக்கும் அவர்களது ஊழியத்திற்கு தடை வரும் போது நம்முடைய பிதாவுக்கு தெரியாமல் அவரது அனுமதி இல்லாமல் ஒன்றும் நமக்கு நேரிடாது என்பதில் நாம் ஆறுதலடைய வேண்டும். மேலும் விசுவாசத்திற்கும் பொறுமைக்கும் வருகின்ற ஒவ்வொரு பரீட்சையிலும் அவரிலும், அவருடைய வார்த்தையிலும் நிலைத்திருப்பவர்களுக்கு அவருடைய கிருபை போதுமானதாக இருக்கும். நாம் திரைக்கு அப்பால் பார்ப்பதுடன், அவரை நேசிக்கிறவர்களுக்கென தேவன் வைத்திருக்கிற பரம அழைப்பின் பந்தயப் பொருளின் மேல் நம்முடைய விசுவாசக் கண்களைப் பதிக்கக்கடவோம். இந்த பரிசு அவரை நேசிக்கிறவர்களுக்கு, அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு, உண்மையானவர்களுக்கு, தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உரியதாகும். *வெளி. 17 : 14; ரோம. 8: 28*

இப்படியாக சபை முற்றிலுமாக மீட்கப்படும் உத்தேசமான வேளையையும் சூழ்நிலைகளையும் ஓர் அளவுக்கு கூற முடியும்.

வேதத்தில் இருந்தும் கூற முடியும். சபையானது மகிமைப்படுத்தப்படும் விதமும் அதிகமான ஆர்வத்தை தூண்டுவதாக உள்ளது. மறுபடியும் நாம், கேள்வி கேட்பதற்கு திவ்ய வார்த்தைக்கு வருகிறோம்.

முதலாவதாக பவுல் எழுதுகிறார்: “நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். (இறந்த பரிசுத்தவான்களல்ல, ஜீவிக்கிறவர்கள்) அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும். மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை.” அழிவுள்ளதி-ருந்து அழியாமைக்கு இந்த மறுரூபமாக்கப்படுதல் படிப்படியாக நடக்காது. ஆனால் “ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதில்” நடைபெறும் என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். கடைசி எக்காளம் தொனிக்கும் போது இது நடைபெறும் என்கிறார். இது ஏற்கெனவே ஊதப்பட்டுக் கொண்டிருக்கிறது. (தொகுதி 2, அத்தியாயம் 5ஐ பார்க்கவும்) 1 கொரி. 15:51, 53, 50

மேலும், அது நடைபெறும் விதம் கவனிக்கப்பட வேண்டும். சிலர் முதலாவதாக மகிமை அடைவார்கள் அல்லது மறுரூபமடைவார்கள். அதன் பிறகு மற்றவர்கள் மகிமையடைவார்கள். “கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.”(சங். 116:15) அவர்களில் அநேகர் நித்திரை அடைந்து அதிக காலமாகி விட்டாலும், ஒருவரும் மறக்கப்படவில்லை. முதற்பேறானவரின் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கத்தினர்கள் என அவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன. அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார் : கர்த்தருடைய பிரசன்னம் வரை உயிரோடு இருப்பவர்கள் நித்திரை அடைவந்தவர்களுக்கு முந்திக் கொள்ளுவதில்லை. (1 தெச. 4:15) கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்கள், ஜீவிக்கிறவர்கள் தங்களுடைய ஓட்டத்தை முடிக்கும் வரை காத்திருக்கும்படி கூறப்படவில்லை. ஆனால் ஆண்டவர் தம்முடைய மகா வல்லமையை எடுத்துக் கொண்ட உடன் செய்யும் முதல் வேலை



அவர்களை உயிர்ப்பித்தலாகும். ஆகவே, இப்படியாக கர்த்தருக்குள் நித்திரை அடைந்தவர்கள், மகிமையில் பிரவேசிப்பதில் முந்திக் கொள்ளுவார்கள்.

நித்திரை அடைந்த பரிசுத்தவான்கள் எழுப்பப்படும் சரியான காலம் தெளிவாக சொல்லப்படவில்லை. ஆனால், ஆண்டவர் ஒரு பிரபுவைப் பற்றிக் கூறின உவமையில் இருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம். அவன் இராஜ்யத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் திரும்பினான். (ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது) அவன் செய்த முதல் வேலை, அவன் இல்லாதிருந்த போது கொடுக்கப்பட்டிருந்த திராட்சைத் தோட்டத்தைக் குறித்து வேலைக்காரரிடம் (அவருடைய சபை) கேட்டறிந்து, உண்மையாக இருந்தவர்களுக்கு வெகுமதி கொடுப்பது தான். கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்கள் முதலாவது உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறபடியால் இவர்களுக்கு வெகுமதி அளிப்பது என்பது ஆண்டவர் திரும்பி வந்து தம்முடைய மாபெரும் வல்லமை எடுத்துக் கொண்ட உடனே நடைபெற்றது என்று அறிந்து கொள்ளலாம்.

ஆண்டவர் தமது அதிகாரத்தை உபயோகிக்கத் தொடங்கின தேதியை அறியும் போது எப்பொழுது நித்திரை அடைந்த அவருடைய பரிசுத்தவான்கள் ஜீவனுக்கும் மகிமைக்கும் உட்படுத்தப்பட்டார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும். இதற்கு யூத, சுவிசேஷ யுகங்களின் இடையில் இருக்கும் இணையான நிலைமையை நினைத்துப் பார்க்க வேண்டும். நிழலை திரும்பிப் பார்க்கும் போது, யூத அறுப்பு துவங்கி (கிபி 29) மூன்றரை வருடங்களுக்குப் பின்னர் கிபி 33ன் குளிர் காலத்தில் நம்முடைய ஆண்டவர் உண்மையாகவே தம்முடைய அதிகாரத்தை எடுத்து இராஜரீக அதிகாரத்தை உபயோகித்தார். (மத். 21: 5-15ஐ பார்க்க) 1878 குளிர் காலத்தின் போது, உண்மையில் இராஜாவாக அதிகாரம் போன்றவற்றை எடுத்துக் கொள்ளும் போது, இந்த அறுப்பில் ஒத்து இருக்கிற காலத்தை குறிப்பிடுவதற்குத்தான் அப்படி நடைபெற்றது என்று தெரிகிறது. 1874ல் இலையுதிர் காலத்தின் போது, அறுப்பு காலத்தின் ஆரம்பத்தில் அவருடைய இரண்டாவது வருகை சம்பவித்தது. அதி-ருந்து

மூன்றரை வருடங்களுக்கு பின்னர் 1878ம் ஆண்டு தம்முடைய மாபெரும் வல்லமையை எடுத்துக் கொண்ட காலம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதி-ருந்து அவருடைய இராஜ்யம் ஏற்படுத்தப்படும் காலம் துவங்கிற்று என்று அறிந்து கொள்ளலாம். இதன் முதல் படி அவருடைய சரீரமான சபையின் மீட்பு என்பதாகும். இதில் நித்திரை அடைந்தவர்கள் முக்கியத்துவம் பெறுவார்கள்.

"முடிவு" காலத்தில் அல்லது அறுப்பின் போது சபையின் உயிர்த்தெழுதல் நடக்கவேண்டி இருப்பதால் (வெளி. 11:18) அது கிட்டதட்ட சரியானதும், ஆண்டவருடைய திட்டம் எல்லாவற்றோடும் ஒத்துப் போவதாகவும் உள்ளது. அதாவது 1878ன் இலையுதிர் காலத்தின் போது, பரிசுத்த அப்போஸ்தலர்கள், சுவிசேஷ யுகத்தின் போது ஜெயங்கொண்டவர்கள் மற்றும் ஆண்டவருக்குள் நித்திரை அடைந்தவர்கள் அனைவரும் அவர்களுடைய கர்த்தரும் ஆண்டவருமானவரைப் போன்று ஆவிக்குரிய சரீரத்தில் உயிர்ப்பிக்கப்பட்டார்கள். ஆகவே அவர்களுடைய உயிர்த்தெழுதல் ஒரு நிறைவேறிய காரியம் என்று நாங்கள் தீர்மானிக்கிறோம். அதினால் அவர்களும் ஆண்டவரும் தற்போது பூமியில் இருக்கிறார்கள். அவர்களை நாம் பார்க்கவில்லை என்ற உண்மை விசுவாசத்திற்கு தடையாக இல்லை. ஏனெனில், தங்களுடைய ஆண்டவரைப் போன்றே அவர்கள் ஆவிக்குரியவர்களாக இருக்கிறார்கள். அவரைப் போன்றே அவர்கள் மனிதர்களுக்கு தென்படாமல் இருக்கிறார்கள் என்பதை நினைவு கூறுகிறோம். அவர்கள் பார்க்க முடியாமல் இருப்பது, அவர்கள் கல்லறை திறக்கப்பட்டு கா-யாக இருக்கக் காணப்படாதது, அவர்கள் கல்லறைகளில் இருந்து புறப்பட்டுச் சென்றதை யாரும் காணாதது போன்றவைகள், எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதை அறிந்தவர்களுக்கு ஆட்சேபணையாக இல்லை; நம்முடைய உயிர்த்தெழுந்த ஆண்டவர், கதவு மூடப்பட்டிருக்கும் போது அவர் உட்பிரவேசித்து, பின் வெளியே வந்த அறையின் சுவர்களில் ஓட்டை எதையும் உண்டு பண்ணவில்லை என்பதை அறிபவர்களுக்கு, உயிர்த்தெழுந்த மீட்பரை அற்புதவிதமாக, விசேஷமாக ஒரு சிலரைத் தவிர வேறு யாரும் காணவில்லை என்பதை நினைவு கூறுகிறவர்களுக்கு, அவருடைய உயிர்த்தெழுதலுக்கு அவர்கள் சாட்சியாக இருக்கும்படி அப்படியாக வெளிப்படுத்தல் கிடைத்தது என்பதை நினைவு கூறுகிறவர்களுக்கு, இது ஆட்சேபணையாக இல்லை. மேலும், அவர் இன்னும் மாம்சத்தில் இருக்கிறார், இல்லையெனில் அவர்கள் பார்த்தது அவருடைய மகிமையான ஆவிக்குரிய சரீரம் என்று இந்த சாட்சிகள் நினைப்பதை தடுப்பதற்காக, அவர் வித்தியாசமான மாம்சீக உருவங்களில் காட்சியளித்தார் என்பதை நினைவு கூறுகிறவர்களுக்கு இது ஆட்சேபணையாக இல்லை. அப்படிப்பட்டவர்கள் ஓர் அற்புதவிதமாக தர்சு பட்டணத்தானாகிய சவுல் மாத்திரம் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தைக் கண்டான், ஆனால், மற்றவர்களால் அதைக் காணமுடியவில்லை என்பதை நினைவுகூருவார்கள். அவன் பார்த்ததினால் பார்வையை இழந்தான். தங்களுடைய மாம்சீக கண்களால், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களை காணவில்லை என்கிற காரணத்தால் அவர்கள் உயிர்த்தெழவில்லை என்று கூற முடியாது. இந்த அறுப்பின் போதும் ஆண்டவரை காணவில்லை, அவர்கள் ஒரு போதும் தூதர்களைக் கண்டதில்லை. ஆனாலும் அவர்கள் இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் "இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அவர்கள் எல்லாரும் அனுப்பப்பட்ட பணிவிடை ஆவிகளாக" இருந்திருக்கிறார்கள். (தொகுதி 2, அத். 5ஐ பார்க்கவும்)



ஏப்ரல் 1878ல் இராஜ்யம் ஏற்படுத்தப்படுவது துவங்கியது அல்லது அதிகாரத்திற்குள் கொண்டு வரப்பட்டது என்பது, 1874ல் அக்டோபரில் ஆண்டவர் பிரசன்னமானர் என்கிற அந்த அடிப்படை நம்பிக்கையில் உள்ளது என்பதும், அந்த நேரத்தில் அறுப்பு துவங்கியது என்பதும் நம்முடைய நம்பிக்கை என்பது கவனிக்கப்பட வேண்டும். அங்கே "கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் (இராஜ்யம்)" அதாவது சபை, "பூமியில் உள்ள பர்வதங்களுக்கு (இராஜ்யங்களுக்கும்) மேலாக உயர்த்தப்படும்" (ஏசா. 2:2) வேலை துவங்கியது, மேலும் "பாபிலோன்" ஆகிய கிறிஸ்தவ நாடுகள் மற்றும் உலகத்தில் உள்ள சகல இராஜ்யங்களும் இறுதியாக கவிழ்க்கப்படுவதற்கு முன்னதாக அதன் நியாயத்தீர்ப்பு தொடங்கியது.

இராஜரீக ஆசாரியர்களில் கடைசியாக உள்ள அங்கத்தினர்களில் எஞ்சியிருப்பவர்கள் உயிரோடு இருக்கும் போது, சபையின் பெரும்பாலோர் உயர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதும் இந்த எண்ணத்திற்கு மாறானதல்ல. அப்போஸ்தலர் இதை முன்னதாகவே கிரமமாக கூறியுள்ளதை நாம் பார்த்துள்ளோம். மீதமுள்ளவர்களில் இருப்பது அவகீர்த்தியானதல்ல, மறுரூபமாக்கப்படுபவர்களில் கடைசியானவர்களாக காணப்படுவதும், கனவீனமானதல்ல. திரையின் இந்தப் பக்கத்தில் உள்ளவர்கள், சபையின் கடைசி அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கு ஒரு விசேஷமான வேலை இருக்கிறது என்பதை அநேக வேத வாக்கியங்கள் காட்டுகின்றன. இது திரையின் மறுபக்கத்தில் உள்ள மகிமையான அங்கத்தினர்களுக்கு உள்ளது போன்று ஒரு முக்கியமான, இராஜ்யத்தின் இன்றியமையாத ஒரு வேலையாகும். மகிமையான தலையானவரும் திரையின் மறுபக்கத்தில் இருக்கிற சபையின் அங்கத்தினர்கள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிற பெரிய மாற்றத்தை, அது உலகத்தில் துவங்க இருப்பதை மேற்பார்வையிடும் போது, மாம்சத்தில் உள்ள சக அங்கத்தினர்கள் “எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை” பேனா, புஸ்தகங்கள், துண்டு பிரதிகள் மூலம் அறிவிக்கும் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் யுகத்திற்கான தேவனுடைய கிருபையான திட்டத்தின் ஆசீர்வாதமான நற்செய்தியை உலகத்திற்கு அறிவிப்பதோடு, அந்த திட்டம் நிறைவேறுவதற்கு காலம் சமீபமாயிற்று என்று கூறுகிறார்கள். மேலும், வரப்போகிற மாபெரும் உபத்திரவத்தை சுட்டிக் காட்டுவதோடு உலகத்தில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது அதனால் தொடர்ந்து வருகின்ற ஆசீர்வாதங்களையும் கூறுகிறார்கள். மீதமுள்ள அங்கத்தினர்களுக்கு ஒரு பெரிய முக்கியமான வேலை கொடுக்கப்படுகிறது. அது இராஜ்யத்தின் வேலையாகும். அது இராஜ்யத்தின் சந்தோஷங்களோடும் ஆசீர்வாதங்களோடும் சேர்ந்து வருகிறது. அவர்கள் இன்னும் மாம்சத்தில் இருந்து கொண்டு தங்களை தாங்களே ப-யாக செலுத்தி அதிகமான எதிர்ப்புகளின் மத்தியில் தங்களுக்கு



கொடுக்கப்பட்ட வேலையை செய்யும் போது, அவர்கள் ஏற்கெனவே அவர்களுடைய ஆண்டவரின் சந்தோஷத்திற்குள் பிரவேசித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதாவது திவ்ய திட்டத்தை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளுவதில் உள்ள மகிழ்ச்சியும், அந்த திட்டத்தை நிறைவேற்றும்படி கிடைத்த சிலாக்கியத்தினால் வந்த மகிழ்ச்சியும் ஆகும். மேலும் அவர்கள், அவர்களுடைய ஆண்டவரும், மீட்பருமானவரோடு இணைந்து பூலோகத்தில் உள்ள எல்லா குடும்பத்தினருக்கும் நித்திய வாழ்வையும், ஆசீர்வாதங்களையும் அளிப்பதில் சந்தோஷப்படுகிறார்கள்.

இவர்களும், இவர்களுடைய செய்தியும் ஏசாயாவினால் (52:7) “பாதங்கள்” அல்லது மாம்சத்தில் உள்ள கிறிஸ்துவின் சரீரமான சபையின் கடைசி அங்கத்தினர்கள் என்று தெளிவாக குறிக்கப்பட்டு உள்ளார்கள். அவர் கூறுகிறார்: “சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் (மீட்பை) பிரசித்தப்படுத்தி உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளில் மேல் (இராஜ்யங்கள்) எவ்வளவு அழகாயிருக்கின்றன. (முதலாவது சீயோனுக்கும், அதன்பின் இறுதியில் பிரசவ வேதனைப்படுகிற எல்லா சிருஷ்டிகளுக்கும் மீட்பைக் கொண்டு வருகிற கிறிஸ்துவின் ஆட்சி துவங்கி விட்டது) உன் ஜாமக்காரருடைய சத்தம் கேட்கப்படும்; அவர்கள் சத்தமிட்டு ஏகமாய்க் கெம்பீரிப்பார்கள்; ஏனென்றால், கர்த்தர் சீயோனைத் திரும்பி வரப்பண்ணும் போது, அதை கண்ணாரக் (தெளிவாக) காண்பார்கள்.”

தற்கால சத்தியத்தை அறிவிப்பதில், இராஜ்யம் ஏற்படுத்தப்படுவதற்கான நேரம் சமீபத்திருக்கிறது என்று சீயோனுக்குக் கூறும் போது இம்மானுயே-ன் நீதியுள்ள ஆட்சி சீக்கிரத்தில் துவங்கப்பெற இருக்கிறது, அது பூமியில் உள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்காக உள்ளது என்று அறிவிக்கும் போது உள்ள சந்தோஷத்தை நீங்கள் முற்றுமாக உணர்ந்து கொள்ளுகிறீர்கள். ஆனாலும், உங்கள் பாதங்கள், காயம்பட்டதாக மனிதர்களால் ஏளனம் செய்யப்பட்டதாக உள்ளது. ஆனால்

மனிதர்களால் இகழ்ச்சி பண்ணப்பட்டவர்களாக இருந்தாலும், கிறிஸ்துவின் பாதங்களாக இருக்கிற இவர்களும், அவர்களுடைய தற்போதைய வேலையும், சரீரமான சபையின் அங்கத்தினர்களாக, மகிமையானவர்களாக திரையின் மறுபக்கத்தில் இருப்பவர்களாலும், அவர்களுடைய மகிமையான தலைவரானவராலும் அதிகமாக உயர்வாக எண்ணப்படுகிறார்கள். ஆண்டவர் இவர்களை, இப்படியாக உண்மை உள்ளவர்களை தம்முடைய பிதாவின் முன்னிலையிலும், அவருடைய பரிசுத்த தூதர்கள் முன்னிலையிலும் அறிக்கை செய்ய ஆவலுள்ளவராக இருக்கிறார்.

பாதங்களின் வேலையானது, இராஜ்யத்தின் வேலையில் குறைவானதல்ல, முடிக்கப்படும். அவர்களுடைய செய்தி பெரும்பான்மையோரால் வெறுக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு, உலகத்தின் முட்டாள்கள் என்று (கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்) இகழ்ச்சி பண்ணப்படுகிறார்கள். சுவிசேஷ யுகம் முழுவதும் அவருடைய உண்மையான வேலையாட்களுக்கும் இது போன்று தான் நடந்துள்ளது. அவர்கள் அனைவரும் மறுரூபமாக்கப்பட்டு, இராஜ்யத்தின் பிரதிநிதிகளாக திரைக்குப் பின்னால் உள்ள மகிமையான அங்கத்தினர்களாக இணைக்கப்படுவதற்கு முன்னதாக உலகத்திற்கு மிக அதிகமான விலையேறப்பெற்ற செய்திகளை இராஜ்யத்தைப் பற்றியும், அதன் தற்கால, எதிர்கால வேலையைப் பற்றிய குறிப்புகளை, உலகத்திற்கும் இன்னமும் வளர்ச்சி பெறாத தேவனுடைய பிள்ளைகளாக இருந்தும் உலகத்தின் கவலைகளால் நிறைந்து இருப்பவர்களுக்கு, அதாவது இவர்கள் தேவனுக்கு அர்ப்பணம் செய்திருந்தாலும் நம்முடைய உன்னத அழைப்பிற்கான பரிசை பெற ஓடத் தவறியவர்களுக்கும் விட்டு வைத்திருப்பார்கள்.

இப்படியாக பாதங்களாக இருப்பவர்கள், சீயோனைப் பார்த்து "உன் தேவன் இராஜரீகம் பண்ணுகிறார்;" கிறிஸ்துவின் இராஜ்யம் துவங்கி விட்டது என்று கூறுகிறவர்களாகவும், பிரசுரம் செய்து நற்செய்தியை அறிவிப்பவர்களாகவும் இருப்பார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. உண்மையான காவற்காரர்களாக இருக்கிற அனைவரும் இந்த நேரத்தில் தெளிவாகக் காண முடியும். தனியாகவும், எல்லாருமாக சேர்ந்தும் மோசேயின் பாட்டையும்,



ஆட்டுக்குட்டியானவரின் புதுப்பாட்டையும் பாட இயலும், அது இழந்ததை திரும்பப் பெற்றுக் கொள்ளுவதைப் பற்றிய பாட்டு, அது தெளிவாக கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. "வரப் போகிற நன்மைகளின் நிழலாயுள்ள" மோசேயின் பிரமாணத்தில் மாத்திரம் அல்ல, புதிய ஏற்பாட்டில் உள்ள ஆட்டுக்குட்டியானவரின் வெளிப்படுத்துத-லும் தெளிவாக உள்ளது. அது கூறுவதாவது: "தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்." "எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுது கொள்ளுவார்கள்." வெளி. *15:3,4*

இந்த "பாத" வகுப்பினர் அதிகமாக களைப்படைந்து, காயப்பட்டு இருந்தாலும் ஒவ்வொருவராக தற்போதைய நிலையில் இருந்து திரையின் மறுபக்கத்திற்கு கடந்து செல்லுவார்கள். அவர்கள் ஒரு நிமிஷத்தில், ஒரு இமைப் பொழுதில் அழிவி-ருந்து அழியாமைக்கு, பலவீனத்தில் இருந்து பலத்திற்கு, கனவீனத்தி-ருந்து மகிமைக்கு, மனுஷீகத்தி-ருந்து பரலோக நிலைமைக்கு, ஜென்ம சரீரத்தி-ருந்து ஆவிக்குரிய சரீரத்திற்கு மறுரூபமாக்கப்படுவார்கள். இந்த மறுரூபமாக்கப்படுவதோடு அவர்களுடைய வேலை முடிந்து விடாது; ஏனெனில், மகிமைக்கு தகுதியானவர்கள் என்று எண்ணப்பட்ட அனைவரும் ஏற்கெனவே திரையின் இந்தப் பக்கத்தில் இராஜ்யத்தின் வேலைக்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். மறுரூபமாக்கப்படுதலோடு களைப்பும், உழைப்பும் மட்டும் நின்று விடும். "அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்." வெளி. *14:13*

இந்த "பாத" வகுப்பினைச் சேர்ந்த அங்கத்தினர்களை, இந்த மறுரூபமாக்கப்படுதல், நித்திரை அடைந்தவர்கள் ஏற்கெனவே பிரவேசித்துள்ள அதே ஐக்கியத்திற்குள்ளும், மகிமைக்குள்ளும், வல்லமைக்குள்ளும் கொண்டு வரும். அவர்களுடைய ஆண்டவரோடு இருக்கும்படி அவர்கள் ஆகாயத்தில் பூலோக நிலைமையி-ருந்து, உலகத்தை ஆளும்படியான ஆவிக்குரிய நிலைமைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஏற்கெனவே காட்டப்பட்டுள்ளபடி (தொகுதி *1*, பக். *454*) "ஆகாயம்" என்பது இங்கே ஆவிக்குரிய ஆட்சியை அல்லது அதிகாரத்தைக் காட்டுகிறது. சாத்தான்

நீண்ட காலமாக “ஆகாயத்து அதிகாரப் பிரபு” என்கிற ஸ்தானத்தில் இருந்துள்ளான். (எபே. 2:2) அவன் தன்னுடைய உடன் வேலையாட்களை, தன்னுடன் உடன் சுதந்திரர்களாக இருப்பவர்களை, பாபிலோனில் பெரியவர்களாக இருப்பவர்களை, தன்னுடைய குருட்டாட்டமான தவறுகளின் மூலம் தாங்கள் தேவனுக்கு சேவை செய்கிறவர்களாக எண்ண வைத்திருக்கிறான். ஆனால், ஏற்ற காலத்தில் தற்போதைய “ஆகாயத்து அதிகாரப் பிரபு” கட்டப்படுவான். இனிமேலும் அவன் எவரையும் வஞ்சிக்க இயலாது. மேலும், தற்போதுள்ள ஆகாய மண்டலங்கள் (present heavens), அந்திக் கிறிஸ்துவின் ஒழுங்கு முறைகள் “மடமடவென்று அகன்று போகும்.” அப்பொழுது புது ஆகாயத்துப் பிரபுவானவர், உண்மையான ஆவிக்குரிய தலைவர், இயேசு கிறிஸ்து அதிகாரத்தை எடுத்துக்கொண்டு புதிய வானத்தை சிருஷ்டிப்பார். அவர் இந்த அதிகாரத்தில் அல்லது ஆகாயத்தில், சுவிசேஷ யுகத்தில் ஜெயங்கொண்டவர்களான தம்முடைய மணவாட்டியை சேர்த்துக் கொள்ளுவார். இப்படியாக “புதிய வானம்” தற்போதுள்ள “ஆகாயத்து” அதிகாரத்தை நீக்கிப் போடும்.

ஆனால், அனைவரும் மரிக்க வேண்டுமா? ஆண்டவரின் பிரசன்னம் வரும் வரை உயிரோடு இருப்பவர்கள், மீதமுள்ளவர்களான பாத வகுப்பினரும் மரிக்க வேண்டுமா? ஆம் “மரண பரியந்தம்” என தங்களை அர்ப்பணித்துக் கொண்ட அனைவரும் மரிக்க வேண்டும் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. எந்த வேத பகுதியும் இதை மறுக்கவில்லை. தீர்க்கதரிசியின் மூலம் தேவன் அறிவிக்கிறார்: “நீங்கள் தேவர்கள் என்றும் (பலம் வாய்ந்தவர்கள்), நீங்களெல்லாரும் உன்னதமானவரின் (தேவன்) மக்கள் என்றும் நான் சொல்-யிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப் போலச் செத்து, லோகப் பிரபுக்களில் ஒருவனைப் போல விழுந்து போவீர்கள்.” சங். 82:6,7

இங்கே “லோகப் பிரபு” என்கிற வார்த்தை முதன்மையானவர்களை அல்லது தலைமையானவர்களைக் குறிக்கிறது. ஆதாமும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவும் இரண்டு தலைமைகள் அல்லது பிரபுக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இருவரும் மரித்தார்கள். ஆனால் வித்தியாசமான காரணங்களுக்காக, ஆதாம் தன்னுடைய சொந்த பாவத்திற்கு மரித்தான். கிறிஸ்துவோ உலகத்தின் பாவங்களுக்காக விருப்பத்துடன் ப-யாக மரித்தார். கிறிஸ்துவின் சபையார் அனைவரும் அவருடைய ப-யில் வைத்த விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டு, ஆதாமின் பாவத்தி-ருந்து விடுதலையாக்கப்பட்டு, அந்த பாவத்திற்கு என கொடுக்கப்பட்டிருந்த மரண தண்டனையில் இருந்து மீட்கப்பட்டதாக எண்ணப்படுகிறார்கள். கிறிஸ்துவோடு உடன் சுதந்திரராக பங்கு பெற வேண்டும் என்கிற காரணத்திற்காக இப்படி கிறிஸ்துவோடு உடன் சுதந்திரராக இருக்கப் போகிற பரிசுத்தவான்களின் மரணம் கர்த்தருடைய பார்வையில் அருமையானது என்று எண்ணப்படுகிறது. (சங். 116:15) கிறிஸ்துவின் சரீரமான சபையில் உள்ள உடன் அங்கத்தினர்கள் மரிக்கும் போது “கிறிஸ்துவுடன் மரித்தவர்களாக”வும் “அவருடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்திற்குள்ளானவர்களாகவும்” அங்கீகரிக்கப்படுகிறார்கள். அவர்கள் பிரபுக்களில் ஒருவனைப் போல விழுகிறார்கள். முதலாவது ஆதாமைப் போல அல்ல, ஆனால் இரண்டாம் ஆதாமைப் போன்று கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்தினர்களாக கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்காக விழுகிறார்கள். கொலோ.1:24

இந்த பகுதியில் காணப்படும் “தேவர்கள்” அல்லது பலம் உள்ளவர்கள் என்கிற வார்த்தை மகா உன்னத தேவனின் எல்லா புத்திரர்களையும் குறிப்பதாக உள்ளது. அவர்கள் இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரராயும், எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளியாகவும் இருப்பார்கள். இது நம்முடைய ஆண்டவரால் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. யோவா. 10:34-36

“நீங்கள் மனுஷரைப் போல் சாவீர்கள்;” ஆனாலும் “இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரை அடைவதில்லை.” சாவது என்பது நித்திரை அடைவது அல்லது சுயநினைவு இல்லாது மரிப்பது, முற்றிலும் வித்தியாசமான ஒன்று.

அப்படியானால், ஆண்டவருடைய சாட்சி என்னவெனில், எல்லா பரிசுத்தவான்களும் மரிக்க வேண்டும். ஆனால் அவர்கள் நித்திரை அடைவதில்லை. நம்முடைய ஆண்டவர் மரித்தார், மூன்றாம் நாள் வரை நித்திரையில் இருந்தார், பின்னர் பிதா அவரை எழுப்பினார். பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் மரித்தார்கள், அதாவது நித்திரை அடைந்தார்கள். அவர்களுடைய பிரயாசங்களி-ருந்தும் களைப்பி-ருந்தும், இளைப்பாறும்படியாகவும், "இயேசுவுக்குள் நித்திரை அடையும்படியாகவும்" ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் போது இராஜ்யத்தில் ஒரு பங்கை பெறும்படியாகவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுத-ல் பங்கடையும் படியாகவும் மரித்தார்கள். இதன்படி இராஜ்யம் ஏற்படுத்தப்படும் வேளை வரும்போது, அவர்கள் மரண நித்திரையி-ருந்து எழும்பும் வேளையும் வரும். ஆண்டவர் பிரசன்னமான பிறகும், அவருடைய இராஜ்யத்திற்கான வேளை வந்த பிறகும், அவர்களுடைய காத்திருத்தலும் நித்திரையும் ஏன் தொடர வேண்டும்? அதற்கான காரணம் எதுவும் இருக்கமுடியாது. ஆகவே, நாங்கள் நம்புவது என்னவெனில் இனியும் இவர்கள் "நித்திரை" செய்வதில்லை, ஆனால், இப்பொழுது அவர்கள் எழுந்துள்ளார்கள், அவர்களுடைய ஆண்டவரோடு அவரைப் போன்று இருக்கிறார்கள். அவர்களுக்கு இனியும் மரண நித்திரையில் தொடர்ந்து இருப்பது தேவை இல்லை. பரிசுத்தவான்களில் எவரும் ஆண்டவர் பிரசன்னமாகி இருக்கும் போதும், அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போதும், மரிப்பதும் அல்லது நித்திரை அடைவதும் அல்லது மரணத்தில் எதிர்காலத்தில் நடக்க இருக்கும் ஓர் உயிர்த்தெழுதலுக்காக காத்திருப்பதும் தேவையில்லை. தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஜீவன் அளிக்கிறவர் இங்கே இருக்கிறார். 1878ல் அவருடைய மாபெரும் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, அவருடைய அதிகாரத்தை செயல்படுத்த துவங்கியதி-ருந்து, அவருடைய அங்கத்தினர்கள் எவரும் நித்திரை அடையத் தேவையில்லை. அவர்கள் மனிதர்களைப் போல மரிக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் தங்களுடைய ஆண்டவரைப் போன்று மகிமையான ஆவிக்குரியவர்களாக மறுரூபமாக்கப்படுகிறார்கள். ஆகவே "பாத" வகுப்பினருக்கு, மரிக்கிற தருணம், உடனடியாக மறுரூபமாக்கப்படுகிற தருணமாக இருக்கிறது. அவர்கள் "ஆகாயத்தில்" இராஜ்யத்தின் வல்லமையோடும் மகிமையோடும் என்றென்றைக்கும், நித்திய காலமாக அவரோடு இருக்கும்படியாக பூலோகத் தன்மையி-ருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.



நம்முடைய ஆண்டவர் தம்முடைய மனுஷீக சுபாவத்தை ப-யாகச் செலுத்தி முடித்த பின்னர், மரணத்தி-ருந்து எழுப்பப்பட்ட பின்னர், ஆவிக்குரியவராக மாற்றப்பட்ட பின்னர் கீழ்க்கண்டவாறு அறிவித்தார்: "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது." *(மத். 28:18)* தலையாக இருக்கிறவரின் உதாரணத்தை கிறிஸ்துவின் அங்கத்தினர்கள் எல்லோரும் பின்பற்றி, மரணத்தில் ப-யை செலுத்தி முடிக்கும் வரை, கிறிஸ்து முழுமையடையமாட்டார்; இழந்து போன எல்லாவற்றையும் திருப்பிக் கொடுக்கும் பெரிய வேலைக்காக முற்றிலும் அதிகாரம் உள்ளவராக இருக்கமாட்டார்.

இவைகள் எல்லாவற்றையும் பார்க்கும் போது, கீழ்க்கண்ட அறிக்கை எவ்வளவு அர்த்தமுள்ளதாக இருக்கிறது. "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்." *(வெளி. 14:13)* வேதாகமத்தில் இந்த ஒரு இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும், மரணம் எவ்விதத்திலாவது ஓர் ஆசீர்வாதம் என்று கூறப்படவில்லை. இங்கே "இது முதல்" என்பது ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு உட்பட்டது. (வரக்கூடிய தொகுதியில் வெளிப்படுத்தினாகமத்தின் ஆச்சரியமான காட்சியை நாம் ஆராய்வோம். அப்பொழுது "இது முதல்" என்ற வார்த்தை காலத்தை குறிப்பிடுவதை தெளிவாக காணலாம். இது தீர்க்கதரிசனம் கூறுகிற கிபி 1878ன் நிகழ்வுகளை ஒப்பிடும் போது காணலாம்) மேலும் கவனியுங்கள், இது ஒரு விசேஷித்த வகுப்பினருக்கு மட்டும் ஆசீர்வாதமாக இருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவுக்குள் மரணத்துக்குட்படுகிறவர்கள். ஒரு சிறிய அளவிலான ஒரு

வகுப்பினருக்கு மரணம் ஓர் ஆசீர்வாதம் என்று பலமாக விவரித்து கூறப்பட்டுள்ளது. இந்த வகுப்பினர் அவருடைய பாத அங்கங்களை உள்ளடக்கியதாகும். மேலும், ஏற்கெனவே காண்பிக்கப்பட்டுள்ளபடி கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவரும், தன்னுடைய ப-யை உண்மையான மரணத்தில் முடிக்க வேண்டும்.

இவர்கள் மாத்திரமே கிறிஸ்துவுக்குள் மரணத்துக்குட் படுகிறவர்கள் எனப்படுவர்களாவார்கள். அவர்கள் தேவனால் ஏற்கெனவே மரித்து விட்டார்கள் என்று எண்ணப்படுகிறவர்கள். அவர்களும் தங்களை அப்படியே எண்ண வேண்டும் என்று உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். "நீங்கள் உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக் கொள்ளுங்கள்." வேறு எந்த இறந்த மனிதரும் மரிக்கிறவர்கள் என்று கூற இயலாது. ஆனால் மரித்த இந்த வகுப்பினர் தங்களுடைய ப- செலுத்துதலை உண்மையான மரணத்தில் முடிக்க வேண்டும்.

இப்படியாக தேவன் சீயோனுக்கு (சபைக்கு) அவளுடைய அதிகாலை வேளை விடிவதில் - கிறிஸ்துவின் வெற்றிகரமான நித்திய நாளில் அதிகாலை வேளை விடிவதில் உதவி செய்வார். இப்படியாக அவர் ஏற்கெனவே அவளுக்கு உதவி செய்து கொண்டு இருக்கிறார். ஒவ்வொருவராக உலகம் அறியாதிருக்கும் போது பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்படுவதுடன், அவர்கள் ஜெயம் கொண்ட சபையின் கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டு இருக்கிறார்கள். கடைசி வரை இருக்கிறவர்கள், கதவு மூடப்படும் வரை பிரயாசங்களுக்கு தருணமே கிடையாது என்கிற முடிவு வரும் வரை, நித்தியமான சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களாக இருக்கிறார்கள். அதன்பிறகு அவர்கள் விசுவாசத்திலும் பொறுமையிலும் நிலைத்து இருப்பதோடு தேவன் எவ்விதத்திலாவது நிறைவேற்ற அனுமதிக்கும் முறைக்கு, தங்களுக்கு வரும் மறுரூபத்தை எதிர்பார்த்து, மீட்பை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளுவார்கள்.

இப்படியாக, அவர்கள் சென்ற பின் வருகின்ற, சூறாவளி போன்ற மாபெரும் உபத்திரவத்தி-ருந்து காக்கப்படுவார்கள். அதோடு கூட ஆயிரக்கணக்கானோர் நாத்திக கொள்கையில் விழுந்து, தவறு என்கிற கொள்ளை நோயினால் தாக்கப்படும் போது, ஒருவரும் நிற்கக் கூடாத நிலையிலும் அவர்கள் யுத்தத்தின் முற்பகுதியில் காக்கப்படுவார்கள். சங். *91:7*



உபத்திரவத்தின் காலம் நெருங்கி வரும் போது, யோவான் கூறியபடி, தற்போதைய சபை அது இருக்கிற நிலையில் எ-யா மற்றும் யோவான் வகுப்பினர் தங்களுடைய எண்ணிக்கையிலும், செல்வாக்கிலும் குறையவும், கிறிஸ்து தம்முடைய வெற்றியில் மகிமையில் பெருகவும், இதே சபை திரைக்கு அப்பால் இருப்பது பெருகவும் செய்யும். யோவா. *3:30*

## இன்னும் கொஞ்ச காலம் தான்

"இன்னும் கொஞ்ச காலம் தான் நம்முடைய யுத்தம் முடிந்து விடும்;
இன்னும் கொஞ்ச காலம் தான் நமது கண்ணீர்கள் துடைக்கப்படும்;
இன்னும் கொஞ்சம் காலம் தான் யேகோவாவின் வல்லமை
நம்முடைய இருளை பரலோகத்தின் பிரகாசமான நாளாக மாற்றும்.

"இன்னும் கொஞ்சம் காலம் தான், நம்மை அடிக்கடி
சூழ்ந்திருக்கும் பயம்
கடந்த காலத்தின் ஞாபகமான காரியமாக மாறிவிடும்;
இன்னும் கொஞ்சம் காலம் தான், நம்மைத் தேடி கண்ட அன்பு
நம்முடைய அழுகையை பரலோகத்தின் மகிழ்ச்சியின்
பாட்டாக மாற்றும்.

"இன்னும் கொஞ்ச காலம் தான், இன்னும் கிட்டி வந்து கொண்டிருக்கிறது
மகிமையான நாளின் பிரகாசமான உதயம்,
ஆசீர்வதிக்கப்பட்ட மீட்பரே, எங்களுடைய ஆவியின் தரிசனத்தை
தெளிவாக்கும்,
எங்களை வழி நடத்தும், பிரகாசமான பாதையில் வழி நடத்தும்.

"இன்னும் கொஞ்சம் காலம் தான், என்னே ஆசீர்வாதமான
எதிர்பார்ப்பு!
பொறுமையோடு ஓட வேண்டிய பெலத்திற்காக
ஆண்டவரே வேண்டுகிறோம்.
வாஞ்சையுடன் கூடிய எதிர்பார்ப்போடு
எங்கள் இருதயங்கள் துள்ளுகின்றன:
மணவாளனோடு இணையும் நாள் நெருங்கி வருகிறது."

★★★

அத்தியாயம் 8

# இஸ்ரயே-ன் மறுசீரமைப்பு

பாலஸ்தீனாவில் இஸ்ரயேல் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுதல், இந்த அறுப்பின் போது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒரு சம்பவம் - எப்படி, எந்த அளவுக்கு, எந்த வகுப்பினரோடு, பழைய நிலைக்குக் கொண்டு வரப்படுவதை நாம் எதிர்பார்க்க வேண்டும் - அதன் ஆரம்ப காலம், அந்த நாளில் இருந்து அது முன்னேறுவதற்கான ரூபகாரங்கள் - ஏன் ஆயிரம் வருட யுக ஆசீர்வாதங்கள் எல்லா மனுக்குலத்திற்கும் வர வேண்டும், யூதர்களை சென்றடைந்து முத-ல் அவர்களை உயிர்ப்பிக்குமா - யூத நம்பிக்கைகள் புத்துயிர் பெறுதல் - பிரபலமான யூத, புற ஜாதி எழுத்தாளர்களின் கணிப்புகள் - தீர்க்கதரிசனத்தோடு இவைகள் ஒத்துப்போகுதல் - கிறிஸ்துவைக் குறித்த இஸ்ரயே-ன் கடின மனது ஏற்கெனவே கடந்து போனது - இயக்கத்தின் வளர்ச்சி, வேகம் - தேவன் அவர்களுக்கு உதவி செய்வார் - இஸ்ரயே-ன் பிரச்னைகள்.

“அந்நாளிலே விழுந்து போன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப் போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வ நாட்களி-ருந்தது போல அதை ஸ்தாபிப்பேன். என் ஜனமாகிய இஸ்ரயே-ன் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சைத் தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழ இரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள்

தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்தி-ருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." ஆமோஸ் *9:12, 14,15*

இன்றைய நாளில் நமக்கு கிடைத்திருக்கிற பழங்காலத்து ஞாபக சின்னங்களில் நமக்கு அதிக ஆர்வத்தைத் தூண்டாகக் கூடியது யூத மக்களின் சரித்திரத்தைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. பழங்காலத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர்கள், களைப்படையாமல் சிறிதளவாவது சரித்திர பூர்வமான அல்லது விஞ்ஞான பூர்வமான தகவல்களை கொடுக்கக்கூடிய உயிரற்ற ஒவ்வொரு பொருளையும் கேள்வி கேட்டுள்ளார்கள்; புராதன சின்னங்கள், பீடங்கள், கல்லறைகள், தனிப்பட்ட அல்லது பொதுவான மாளிகைகளின் பண்டைய பொருட்கள், ஓவியங்கள், சிற்பங்கள், ஆதிகாலத்தின் எழுத்துக்கள் மற்றும் வழக்கில் இல்லாத மொழிகளை ஆர்வத்துடன் பார்த்துள்ளார்கள். சிலர் மிக பொறுமையுடன் அநேக விசித்திரமான பாரம்பரியங்கள், பழைய கட்டுக் கதைகள், பாடல்கள் போன்றவைகள் நூறாண்டு காலமாக இருந்து வந்தவைகளுக்கு எது உண்மையில் ஆதாரமாக இருந்தது என்பதைக் கண்டு பிடிக்க முயற்சித்திருக்கிறார்கள். இதன்மூலம் மனிதனின் ஆரம்பம், சரித்திரம், எதிர்காலம் என்ன என்பதை கண்டறிய முடியும் என்று நினைத்து ஆராய்ந்து இருக்கிறார்கள். ஆனால், மிக முக்கியமான ஞாபக சின்னமாக இருப்பதும், எளிதாக அறிந்து புரிந்து கொள்ளக்கூடியதுமான சரித்திரத்தை உடையவர்கள் யூத ஜனங்கள் தான். அவர்களுக்குள் விலையேறப்பெற்ற புராதன ஞாபக சின்னங்கள் இருக்கின்றன. அதில் வெகு தெளிவான ஆரம்பம், அபிவிருத்தி, குணாதிசயங்கள் மனுக்குலத்தின் முடிவான எதிர்காலம் என்ன என்பது பற்றி தெளிவாக பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். இது மனிதர்களின் விவகாரங்களில் படிப்படியாக முன்னேறி வந்த ஒரு அற்புதமான நோக்கம் நிறைவேறுவதைக் காட்டும் ஒரு ஜீவனுள்ள, அறிவுப்பூர்வமான சாட்சியாக இருக்கிறது. இது தேவ ஆவியின் உந்துதல் மூலம் எழுதப்பட்ட தீர்க்கதரிசனங்களுக்கு சரியானபடி இசைவாக இருக்கிறது.



அவர்கள் ஒரு ஜனமாக அவர்களுடைய சரித்திரத்தின் ஒவ்வொரு மாறுபட்ட, விசித்திரமான சூழ்நிலைகள், பொதுவான மத விசுவாசம், தேசிய குணாதிசயத்தின் ஒவ்வொரு தனித்தன்மை, தேச அமைப்பு, பழக்க வழக்கங்கள் ஆகியவைகளால் குறிக்கப்படுகிறார்கள். அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் உள்ள தேசிய அளவிலான குணாதிசயங்கள், இன்றைக்கும் முக்கியமாகத் தெரிகிறது. அவர்கள் எகிப்தின், வெங்காயம் மற்றும் வெள்ளைப் பூண்டு ஆகியவைகளின் மேல் கொண்டுள்ள விருப்பம், வணங்கா கழுத்துடன் கூடிய பிடிவாதம் இன்னமும் முக்கியத்துவம் உடையதாகத் தெரிகிறது. ஒரு ஜனமாக அவர்கள் உண்மையாகவே ஒவ்வொரு வழியிலும் அதிகமான நன்மை பெற்றிருந்தவர்களாக இருந்தார்கள். ஏனெனில், தேவனுடைய வார்த்தைகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருந்ததுடன், அவர்களுக்குள் கவிஞர்கள், சட்ட நிபுணர்கள், இராஜ தந்திரிகள் மற்றும் தத்துவ ஞானிகளை உருவாக்க உதவுவதாக இருந்தது. இது அவர்களை ஒரு தேசத்தின் அடிமைகள் என்கிற நிலையில் இருந்து, படிப்படியாக சாலமோனின் காலத்தில் அவர்களை மகிமையின் உன்னத நிலைக்கு உயர்த்தியது. ரோம. *3:1,2;* 1 இராஜா. *4: 30-34; 10: 1-29*

ஆண்டவரின் இந்த நாளில், பாலஸ்தீனாவில் இஸ்ரயேல் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட வேண்டியது எதிர்பார்க்கப்பட வேண்டிய சம்பவங்களில் ஒன்றாகும். மேலே கூறப்பட்ட தீர்க்கதரிசியின் வார்த்தையில் நாங்கள் மிக நம்பிக்கையுடன் உள்ளோம். இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், தீர்க்கதரிசனத்தை எந்த அடையாளத்தைக் கொண்டும் அர்த்தப்படுத்த முடியாது. அவர்கள் பரலோகத்தில் உள்ள ஒரு கானான் தேசத்திற்காக நியமிக்கப்படவில்லை, ஆனால் பூமியில் உள்ள ஒரு கானானுக்காக நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் தங்களுடைய தேசத்தில் நாட்டப்பட வேண்டும். அந்த தேசத்தை தேவன் அவர்களுக்கு கொடுத்ததாக கூறுகிறார். அவர் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணி பின்வருமாறு கூறினார் : "உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்தி-ருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி

கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப் போல பெருகப் பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும். (இது வெகு நீண்ட காலத்திற்கான அறிவிப்பு; அவனுடைய சந்ததி விருத்தியடைந்து பெருகும்படி வெகு காலம் கொடுக்கப்பட்டுள்ளது) நீ எழுந்து, தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன்." "நீ பரதேசியாய் தங்கி வருகிற கானான் தேசம் முழுவதையும், உனக்கும், உனக்குப் பின்வரும் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்கு தேவனாயிருப்பேன்." (ஆதி. 13:14-17; 17:8) அவர்கள் ஒரு நேரத்தில் பிரவேசிக்கும்படி சிலாக்கியமாக கிடைத்த தேசம் அது. அதில் அவர்கள் பல நூற்றாண்டுகளாக வசித்தார்கள். ஆனால் அந்த காலங்களின் போது அநேக தடவைகள் அவர்கள் அதி-ருந்து எடுக்கப்பட்டு மற்ற தேசங்களுக்கு சிறைபிடிக்கப்பட்டவர்களாக சென்றார்கள். அந்த நேரத்தில் அந்நியர் அவர்களுடைய பட்டணங்களை அழித்தார்கள், அவர்கள் திராட்சைத் தோட்டத்தின், திராட்சை ரசத்தைக் குடித்தார்கள், அவர்களுடைய தோட்டத்தின் கனிகளைப் புசித்தார்கள். இறுதியில் அவர்கள் முற்றிலுமாக பிடுங்கப்பட்டு, அவர்களுடைய பட்டணங்கள் அழிக்கப்பட்டு, பாழாக்கப்பட்டன. அதன் பின்னர் அவர்கள் உலகம் முழுவதும் தேசம் விட்டு தேசம் செல்லும் பரதேசிகளாக, அந்நியர்களாக அலைந்து திரிந்தார்கள். ஆனால் இந்த வாக்குத்தத்தத்தின்படி அவர்களுடைய தேசத்தில் மறுபடியும் நாட்டப்படும் போது தேவன் "அவர்களுக்கு கொடுத்த தேசத்தி-ருந்து அவர்கள் இனி பிடுங்கப்படுவதில்லை. அவர்கள் பாழான நகரங்களைக் (இதற்கு முன் அவர்கள் வாழ்ந்த இடங்கள்) கட்டி அதில் குடியிருப்பார்கள்." சிதறடிக்கப்பட்டவர்கள், வீடு இல்லாதவர்கள், பாழாக்கப்பட்டவர்கள், உபத்திரவப்படுத்தப் பட்டவர்கள், இன்றைக்கும் ஒரே குணாதிசயம் கொண்ட ஜனங்களாக இருக்கிறார்கள். இரத்த சம்பந்த உறவினால் இறுதியாக இணைக்கப்பட்டவர்கள், தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தங்களால் உண்டான பொதுவான நம்பிக்கைகளால், பொதுவான விசுவாசத்தினால் உந்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அந்த வாக்குத்தத்தங்களை தெளிவில்லாமல் தான் விளங்கிக் கொண்டார்கள். ஆனாலும் அவர்கள் நாடு கடத்தப்பட்டதால், பொதுவாக அனுபவித்த உபத்திரவங்களால், பிறந்த பரிதாப உணர்வினாலும் இறுதியாக இணைக்கப்பட்டு இன்றைக்கும் இஸ்ரயே-ன் நீண்ட கால நம்பிக்கைக்காக காத்திருக்கிறார்கள்.



அவர்களுடைய குருட்டாட்டத்தினாலும், பெருமையான இருதயத்தாலும், உலகத்தின் இரட்சிப்புக்காக தேவனால் அனுப்பப்பட்ட தூதரின் தாழ்மையில் இடறல் அடைந்திருந்தாலும், இன்னும் ஒரு ஜனமாக அவர்களுக்கு தேவன் பேரில் விசுவாசம் உண்டு. ஆகவே, அவரை ஏற்றுக் கொள்வதற்கு பதிலாக, அவர்கள் இரட்சகரை, மகிமையின் ஆண்டவரை சிலுவையில் அறைந்தார்கள். இருந்தாலும் அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் நமக்கு காட்டுவது என்னவெனில், அவர்களுடைய சுயநலமும், பெருமையும் தூண்டியதால் அவர்கள் செய்த இந்த துணிகரமான கொடுமை, அவர்களுக்கு என்றுமே மன்னிக்கப்படப் போவதில்லை என்கிறார்கள். அதனிமித்தம் அவர்கள் அதிகமாக தண்டிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் நியாயாதிபதியை ஆக்கினைக்குட்படுத்தி "இவனுடைய இரத்தப் பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று சொன்ன போது, இதைத் தொடர்ந்து இதற்கு பதில் பயங்கரமாக வரும் என்று அவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை, ஆனால் அது வந்தது.

மிக மோசமான விளைவுகளும், உயிர்ச் சேதங்களும் அவர்களுடைய பரிசுத்த தேவாலயமும், தேசமும் அழிக்கப்பட்டதும் அவர்களுடைய முழு தேசிய வாழ்வும் முடிந்ததும், உயிர் தப்பினவர்கள் பல தேசங்களுக்கு அகதிகளாக சிதறடிக்கப்பட்டதும், அவர்களுடைய அறுப்பின் கால வேலையை முற்றுப் பெற செய்தது. அது உள்நாட்டு கலகத்தில் துவங்கி, பின்னர் படையெடுத்து வந்த ரோம சேனைகளால் முடிந்தது. அக்கினியும், பட்டயமும், பஞ்சமும் அவர்கள் மேல் பயங்கரமான தண்டனையாக வந்தது.

அந்தக் காலத்தி-ருந்தே இஸ்ரயேல் உண்மையாகவே

சிதறடிக்கப்பட்ட, அனைத்தையும் இழந்த ஒரு தேசமாக இருந்திருக்கிறது. அகதிகளாக ஒரு தேசத்தில் இருந்து இன்னொரு தேசத்திற்கு விரட்டப்பட்டவர்கள், ஒரு பிரதேசத்தி-ருந்து இன்னொரு பிரதேசத்திற்கு விரட்டப்பட்டவர்கள், மற்ற மனிதர்கள் அனுபவித்த கிட்டத்தட்ட எல்லா உரிமைகளையும், சிலாக்கியங்களையும், மறுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். கிறிஸ்தவத்தை அதின் புனிதமான நிலைமையிலும், களங்கப்பட்ட நிலைமையிலும் நிராகரித்தார்கள். ரோம சபையினரின் இகழ்ச்சிக்கும், இடைவிடாத உபத்திரவங்களுக்கும் ஆளானர்கள். சரித்திர ஆசிரியர் இப்படியாக கூறுகிறார்:

"ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் இத்தா-யில் யூதர்களுடைய உரிமைகள், அதிகமாக மத குருவானவர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் சட்டங்கள், கட்டளைகள் மூலமாக குறைக்கப்பட்டதோடு, கனத்துக்குரிய எல்லா பதவிகளில் இருந்தும் விலக்கி வைக்கப்பட்டு இருந்தார்கள். ஒரு இடத்தி-ருந்து இன்னொரு இடத்திற்கு விரட்டப்பட்டார்கள், அநேகமான வியாபார ஸ்தலங்களில் மட்டும் வேலை செய்து ஜீவிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். வட்டிக்கு கடன் வாங்கினார்கள், அதிகமாக வரி கட்டும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பட்டணங்களில் இழிவாக நடத்தப்பட்டார்கள். மிகவும் சிறிய வீட்டில் வைக்கப்பட்டார்கள். அவர்கள் ஆடைகளில் கூட இகழப்பட்டார்கள். அடையாளங்கள் போடுவதினிமித்தம் சட்டத்தை மதிக்காத பிரபுக்களால், பணம் இல்லாத இளவரசர்களால் கொள்ளையடிக்கப்பட்டார்கள். ஆட்சியின் போது ஏற்படும் பிரச்னைகளால் எல்லா வகுப்பினருக்கும் எளிதாக கொள்ளையானர்கள். மறுபடியும், மறுபடியும் பண உதவிகள் மறுக்கப்பட்டன. பேரரசர்களால் கையாளப்பட்டு வேலையாட்களாக விற்கப்பட்டார்கள். கலகக்கார கூட்டங்களால், கலகம் பண்ணிய குடியானவர்களால் கொலையுண்டார்கள். துறவிகளால் விரட்டப்பட்டார்கள். கடைசியில் கிறிஸ்தவ மத வீரர்களால் (Crusaders) ஆயிரக்கணக்கில் எரிக்கப்பட்டார்கள். அவர்களுடைய சகோதரர்களையும் எருசலேம் தேவாலயத்தில் எரித்தார்கள். கே-யான வார்த்தைகளால் உபத்திரவப்படுத்தினார்கள். கீழ்த்தரமான உபதேசங்களால் கொடுமைப்படுத்தினார்கள். பயங்கரமான குற்றச்சாட்டுகள் பரீட்சைகள், ஆபத்தான எச்சரிப்புகள், மத மாற்றம் என்னும் சோதனைகள் எல்லாம் நடைபெற்றன..... சொந்தமாக நிலம் வைத்திருக்க முடியாது. எந்த சங்கத்திலும் சேர இயலாது. எந்த கலையிலும் ஈடுபட முடியாது. வியாபாரம் செய்ய மட்டும் அனுமதிக்கப்பட்டார்கள். முழு மனுக்குலமும் அவர்களுக்கு எதிராக இருந்த போதும் அவர்களுக்குள் இருந்த நாட்டின் பெருமையும், திமிரும் அடங்கவில்லை. இதன் விளைவாக யூதர்களுக்கும், அவர்களுடைய அயலகத்தாரான புறஜாதியினருக்கும் இடையில் இருந்த பிளவு பெரிதானது."



இப்படியாக தங்கள் தேவனை விட்டும், ஒவ்வொரு தேசத்திலும் தங்களோடு இருந்தவர்களிடம் இருந்தும் விலகினவர்களுடைய நிலைமை துக்ககரமானதாயும் பரிதபிக்கப்படத்தக்கதாயும், துன்பமானதாகவும் இருந்தது. போப்பின் மூலம் தொடர்ச்சியாக வந்த உபத்திரவங்களின் போது அவர்கள் இயேசுவின் இரத்த சாட்சிகளோடும், பரிசுத்தவான்களோடும் சேர்ந்து பொதுவான துன்பத்தை அனுபவித்தார்கள். கிறிஸ்தவர்கள் அந்திக் கிறிஸ்துவை நிராகரித்ததாலும், யூதர்கள் கிறிஸ்து மற்றும் அந்திக்கிறிஸ்து என இருவரையுமே நிராகரித்ததாலும் துன்பத்தை அனுபவித்தார்கள். அவர்கள் ஒரு தேசமாக சுவிசேஷத்தை நிராகரித்ததற்காகவும், மீட்பரை சிலுவையில் அறைந்ததற்காகவும் தேவன் இந்த துன்பங்களையும், உபத்திரவங்களையும் அனுமதித்தது, ஒரு தண்டனையாக என்றாலும், அவர்கள் தங்களுடைய வாக்குத்தத்தங்களில் தொடர்ந்து விசுவாசம் வைத்திருக்கிறபடியால், ஏற்ற வேளையில் அதற்கு அவர் வெகுமதி அளிப்பார். இதை அவர்கள் வெகு காலமாக பத்திரமாக பாதுகாத்து வந்திருக்கிறார்கள். தேவன் அவர்களுடைய பெருமையையும், இருதயக் கடினத்தையும் முன்னமே அறிந்திருந்து, அதையும் அவர்கள் மேல் வந்த பொல்லாப்புகளையும் முன்னறிவித்தார்; இருந்தாலும், அவர்களுடைய குருட்டாட்டம் அவர்களை விட்டு அகன்று

போவதையும், ஆபிரகாமுக்கு வெகு காலத்திற்கு முன்னரே வாக்குத்தத்தம் பண்ணிய பூலோக நன்மைகள் இறுதியில் கிடைப்பதையும் முன் கூட்டியே குறிப்பாகக் கூறியிருந்தார். அது மாத்திரமல்ல, இவைகள் பரிசுத்த தீர்க்கதரிசிகளாலும் ஒருவர் பின்னால் ஒருவர் மூலமாக அறிவிக்கப்பட்டன.

இஸ்ரயேலுக்கு தேவனின் அனுக்கிரகம் திரும்பி கொடுக்கப்படும் என்கிற வாக்குத்தத்தத்தின் வேளை நெருங்கி வரும்போது அதற்கென ஒரு ஆயத்தம் செய்யப்படுவதைப் பார்க்கிறோம். இந்த நூற்றாண்டிலேயே அவர்கள் மத்தியில் ஒரு புடைக்கப்படுதலும், பிரித்தெடுக்கப்படுதலும் வெளிப்படுவதைக் காண்கிறோம். அதற்கென இரண்டு வகுப்பினராக அதாவது பண்டைய மத முறைமைகளை கடைபிடிப்பவர்கள், கடைபிடிக்காதவர்கள் என அவர்கள் பிரிக்கப்படுவதையும் காண்கிறோம். முந்தியவர்கள் இன்னமும், தேவனுடைய வாக்குத்தத்தங்களை கொண்டுள்ளார்கள். அவர்கள் சீயோனுக்கு நன்மை செய்வதற்கென தேவன் குறித்து வைத்திருக்கும் நேரம் சீக்கிரம் வரும் என நினைக்கிறார்கள். பின்னதாக உள்ளவர்கள் தங்கள் சொந்த தேவன் பேரில் வைக்கிற விசுவாசத்தை இழந்து கொண்டு இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் மேல் உள்ள விசுவாசத்தை விட்டு பொது மனப்பான்மை, பகுத்தறியும் மனப்பான்மை, நாத்திகம் போன்றவைக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். பண்டைய மத முறைமைகளை கடைபிடிக்கும் யூதர்கள், அதிகமாக ஏழைகளாக துன்பப்படுகிறவர்களாக உள்ளனர். அதே வேளையில் சிலர் ஐசுவரியவான்களாகவும் நன்கு கற்றுத் தேர்ந்தவர்களாகவும் இருப்பதோடு, தங்களது பண்டைய மத முறைமைகளில் நம்பிக்கை இல்லாத யூதர்களை விட எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் விசுவாசம் இல்லாத யூதர்கள் அதிக செல்வாக்குள்ளவர்களாக, கனத்துக்குரியவர்களாக, அநேக வேளைகளில் வியாபாரிகளாக, வங்கி நடத்துபவர்களாக, பத்திரிகை ஆசிரியர்கள் போன்றவர்களாக இருக்கிறார்கள்.



பண்டைய மத முறைமைகளை கடைபிடிக்கும் யூதர்களின் விசுவாசத்தின் தொகுப்பை கீழேக் காணலாம்:

“நான் ஒரு உண்மையான பரிபூரணமான விசுவாசத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

1. தேவன் சிருஷ்டிகர், ஆளுகை செய்கிறவர், எல்லா உயிரினங்களையும் உண்டாக்கியவர், எல்லாவற்றையும் செய்தவர்.
2. சிருஷ்டிகர் ஒருவரே, அவர் மாத்திரமே நம்முடைய தேவனாக இருந்திருக்கிறார், என்றென்றைக்கும் இருப்பார்.
3. அவர் ஒரு வஸ்து அல்ல, எந்த ஜடத் தன்மையோடும் ஒப்பிடக்கூடாது, அவருக்கு ஒப்பான சரீரப் பொருள் எதுவும் கிடையாது.
4. அவருக்கு முன்பாக ஒன்றும் இருந்ததில்லை. அவர் என்றென்றைக்கும் நித்தியமாக இருப்பார்.
5. அவர் மாத்திரம் ஆராதிக்கப்பட வேண்டும், வேறு எவரும் கிடையாது.
6. தீர்க்கதரிசிகள் அனைவரின் வார்த்தையும் உண்மையானது.
7. மோசேயின் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் உண்மையானவைகள். அவருக்கு முன்பாக வாழ்ந்த மனிதர்களில் ஞானவான்களில் அவரே முதன்மையானவர், அவருக்குப் பின் எவரும் அப்படி இருக்கப் போவதில்லை. (ஆனால் இப்படியாக, மேன்மையான, மிகவும் தகுதியுள்ள நபரைப் பற்றி அதிக உயர்வாக மதிப்பிடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்று என்று எண்ணலாம்.)
8. இன்றைக்கு நம்முடைய கரங்களில் இருக்கும் பிரமாணங்கள் அனைத்தும் தேவனால் தானே எங்களுடைய எஜமானனாகிய மோசேக்கு கொடுக்கப்பட்டதாகும்.
9. அந்த பிரமாணம் ஒரு போதும் மாற்றப்படக்கூடாது. மேலும் தேவனால் வேறு எதுவும் கொடுக்கப்படவில்லை.
10. தேவன் மனிதரின் எல்லா சிந்தைகளையும் கிரியைகளையும்

அறிந்திருக்கிறார். "அவர்களுடைய இருதயங்களை எல்லாம் அவர் உருவாக்கி, அவர்கள் செய்கைகளையெல்லாம் கவனித்திருக்கிறார்."

11. தேவன் தம்முடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மை செய்வார். அவைகளை மீறுகிறவர்களுக்கு தண்டனை அளிப்பார்.

12. மேசியா வர இருக்கிறார்; அவருடைய வருகை தாமதமானாலும், "அவர் வரும் வரை நான் காத்திருப்பேன்."

13. சிருஷ்டிகளுக்கு சரியான நேரம் என்று தேவனுக்கு தோன்றுகிற வேளையில் மரித்தோர் ஜீவன் பெற்றுக் கொள்ளுவார்கள். அவருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படட்டும். அவரைப் பற்றிய எண்ணம் முடிவில்லாமல் கொண்டாடப்படட்டும், ஆமென்."

அவர்களுடைய தேவாலயம் இடிக்கப்பட்டு அவர்கள் சிதறுண்ட பின்னர், ப- செலுத்துவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் மற்றவைகளைப் பொறுத்த வரை, மோசே கூறியவைகள் இன்றும் வைதீக யூதர்கள் மத்தியில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் ஆராதிக்கும் விதம் பழைய காலத்தைப் போலவே, வேதம் வாசிப்பது, ஜெபம், துதி என்று இருக்கிறது. எக்காள பண்டிகையின் இரண்டாவது நாளன்று ஆபிரகாம் தன்னுடைய மகன் ஈசாக்கை ப-யாக செலுத்துவதைப் பற்றியும், அவன் மேலும், அவனுடைய சந்ததி மேலும் தேவனுடைய ஆசீர்வாதம் வருவதைக் குறித்து வாசிக்கப்படுகிறது. அதன்பிறகு அவர்கள் எக்காளம் ஊதி, அவர்களை எருசலேமுக்கு அழைத்து வர வேண்டும் என்று தேவனிடத்தில் ஜெபிக்கிறார்கள்.

வைதீகமில்லாத, சீர்திருத்தம் பெற்ற யூதர்கள் "தீவிரமானவர்கள்", வைதீக யூதர்களிடம் இருந்து வித்தியாசமானவர்கள். அவர்களில் அநேகர், தங்களுக்கென்று ஒரு தேவன் இல்லை என்று துணிந்து சொல்லுகிற நாத்திகர்கள், எந்த மேசியாவும் வர இருக்கிறார் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. அவர்கள் தீர்க்கதரிசனத்தை முற்றிலுமாக நிராகரிக்காவிட்டாலும் யூத தேசம் தான் மேசியாவாக இருக்கிறது என்பதை விளக்கிக் காட்டுவதுடன், அது உலகத்தை



படிப்படியாக சீர்படுத்திக் கொண்டு இருக்கிறது என்றும் மேசியாவினால் முன் கூட்டியே கூறப்பட்ட "உபத்திரவங்கள்," அவர்கள் ஒரு ஜனமாக துன்புறுத்தப்படுத-லும், உபத்திரவப்படுத-லும், நிறைவேறுகிறது என்றும் கூறுகிறார்கள். நாகரீகம் தான் அவர்கள் எதிர்பார்க்கிற உலகத்தின் இரட்சகர் என்கிறார்கள்.

மேசியா இரண்டாவது முறை மகிமையோடும், வல்லமையோடும் வரும்போது, முந்திக் கூறப்பட்டவர்கள் மாத்திரமே, சந்தேகத்திற்கு இடமின்றி மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்படுவார்கள். அப்பொழுது அவர்கள் தான் கூறுவார்கள். "இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழ்வோம்." *(ஏசா. 25:9)* மேசியாவின் தெளிவான உபதேசத்தினால், தேவனுடைய பிரமாணங்களோடு கூட அவர்கள், இன்னமும் விலைமதிப்பற்றது என்று வீணான சம்பிரதாயங்கள் மேல் வைத்துள்ள விசுவாசம், சீக்கிரத்திலே மறைந்து விடும். தேவன் இஸ்ரயேலுக்கு சமாதானத்தைக் கூறி, ஆறுதல் படுத்தி முழுவதுமாக அவர்களுடைய குருட்டாட்டத்தில் இருந்து திருப்பும் நேரம், வேகமாக வந்து கொண்டிருக்கிறது. இதனால் நாத்திகத்திற்குள் தூரமாக சென்றுவிட்டவர்களுக்கு குருட்டாட்டம் நீக்கப்பட மாட்டது என்று கூறவில்லை. தேவன் நீக்குவார்; ஒவ்வொரு ஜாதியினரின் கண்கள் யாவும் திறக்கப்படும்; கேளாத செவிகள் கேட்கும், ஆனால் தேவ அனுக்கிரகம் திரும்பி வரும் போது இந்த தேவனற்றவர்களுக்கு எந்த விசேஷ அனுக்கிரகமும் வராது. ஏனென்றால் "புறம்பான யூதனானவன் யூதனல்ல."அவனுடைய குடும்பத்தில் உள்ள உறவு முறையால், முகச்சாயல் மூலமாகத்தான், அப்படியாக எண்ணப்படுகிறான். ஆபிரகாமின் பிள்ளைகள் என தேவன் அறிந்து கொள்ளும் பிள்ளைகள், ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றிக் கொண்டவர்களும், திவ்ய வாக்குத்தத்தங்களை நம்புகிறவர்களும் தான்.

## ஆங்கிலோ - இஸ்ரயேலர்கள்

வேதத்தில் ஆங்கிலம் பேசும் மக்கள் தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இஸ்ரயேல் என்று கூறுபவர்களின் கருத்தி-ருந்து நாம் வேறுபட்டு இருக்கிறோம். சுருக்கமாக கூறப்பட்டுள்ளது என்னவெனில், ஆங்கிலம் பேசும் மக்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலான நாடுகளின் மக்கள் சாலொமோன் இறந்த பிறகு யூதா, பென்யமீன் கோத்திரத்தாரிடம் இருந்து பிரிந்த 10 கோத்திரத்தாரின் வாரிசுகள் என்கிறார்கள். அநேக வேளைகளில் இவர்கள் காணாமல் போன 10 கோத்திரத்தார் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் பாபிலோனின் சிறையிருப்புக்குப் பின்னால் (முழு 12 கோத்திரத்தாரிலும்) 10 கோத்திரத்தார் இஸ்ரயேல் என்று அழைக்கப்படும்படி, கானான் தேசத்தில் மறுபடியும் அவர்கள் தங்களை ஸ்தாபித்துக் கொள்ளாமல், பல்வேறு ஜாதிகள் மத்தியில் கோத்திரங்களாகவும், தனிப்பட்டவர்களாகவும் சிதறுண்டு போனார்கள். அவர்களுடைய கூற்று என்னவெனில், அவர்கள் சென்ற வழி மகா பிரிட்டன் நோக்கி இருந்தது; உலகத்தில் உள்ள ஆங்கிலம் பேசும் மக்களின் பெருந்தன்மையும், செல்வாக்கும் அவர்கள் இஸ்ரயேலைச் சேர்ந்தவர்களாக இருப்பதினால் தான்; அவர்கள் தான் இஸ்ரயேலுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதாகும்.

இதற்குப் பதிலாக நாம் கூறுவது என்னவெனில், அவர்கள்தான் காணாமல் போன பத்து கோத்திரத்தார் என்று கூறுவதற்கு போதிய ஆதாரம் கிடையாது. பெருந்தன்மையும் செல்வாக்கும் ஆங்கிலம் பேசுபவர்களுக்கு அவர்கள் இஸ்ரயேலராக இருப்பதினால் இயற்கையாக வந்தது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களுடைய பெருந்தன்மை, அவர்களிடம் உள்ள சுதந்தரத்தினால், அறிவாற்றலால் வந்ததாகும். இது அவர்கள் மாம்சத்தில் பிறந்த இஸ்ரயேலராக இருப்பதினால் அல்ல. ஆனால் கிறிஸ்துவின் உபதேசத்தால் வந்ததாகும். அதாவது அவர்களுக்குள் இருந்த சில ஆவிக்குரிய ஆபிரகாமின் வித்தானவர்கள் பிரகாசித்தபடியினால் வந்ததாகும்.

பத்துகோத்திரத்தாரும் இரண்டு கோத்திரத்தை விட்டுப் பிரிந்து போனது அவர்களுக்கு நன்மையானதாக அல்ல; மாறுபட்ட விதத்தில் அமைந்தது. அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நிராகரிக்க முடிவு செய்து விட்டார்கள் என்பதற்கு இது ஆதாரம். அது நாத்திகத்திற்கு, அவிசுவாசத்திற்கு அடையாளமாக இருந்தது. ஏனெனில், பிரமாணங்களை அளிக்கிறவர், இரட்சகர், விடுதலையாக்குகிறவர் மற்றும் இராஜாவாக இருப்பவர் மூலமாகத்தான் வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்பதை தேவன் அறிவித்திருந்தார்; அவர் யூதாவில் இருந்து வரவேண்டும் என்பதை தேவன் அறிவித்திருந்தார் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அதிருப்தி ஏற்பட்ட வேளையில், யூதாவைத் தவிர பென்யமின் கோத்திரத்தார் மட்டும் தேவனுடைய வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைத்திருப்பதைக் காட்டினார்கள். ஆனாலும், பாபிலோனின் சிறையிருப்பி-ருந்து திரும்பின போது கானானுக்கு திரும்புவதின் மூலம் தேவனிடத்திலும் அவருடைய வாக்குத்தத்தத்திலும் தங்களுடைய விசுவாசத்தை தொடர்ந்து வைத்திருப்பதை காட்டியவர்களுள் அநேகர் யூதா, பென்யமீன் கோத்திரத்தார் ஆவார்கள். வந்தவர்கள் அனைவரும் இந்த கோத்திரத்தை மட்டும் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்களுக்குள் மற்ற கோத்திரத்தை சேர்ந்தவர்களும் இருந்தார்கள். அவர்கள் மனம் திரும்பி ஆண்டவரைத் தேடினார்கள். அவரை நேசித்தவர்கள் இன்னும் அவருடைய வாக்குத்தத்தத்தின் மேல் சார்ந்திருந்தார்கள். இருந்தாலும் பத்து கோத்திரத்தை சேர்ந்த பெரும்பான்மையானவர்களும் இரண்டு கோத்திரத்தில் மீதி உள்ளவர்களும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு திரும்பும்படியான தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் பாபிலோனிலும் மற்ற பிரதேசங்களிலும் தங்கி இருப்பதை விரும்பினார்கள். அவர்களில் அநேகர் விக்கிரக ஆராதனையில் விழுந்து தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மேல் இருந்த தங்களுடைய நம்பிக்கையை இழந்தார்கள்.

நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், சிறை பிடிக்கப்பட்டவர்களில் அநேகர், பெரும்பாலானோர் அநேக வருடங்களுக்கு முன்னரே பாபிலோனில் இறந்து விட்டபடியால், எஸ்றாவின் தலைமையின் கீழ் வந்தவர்கள் சிலர் உண்டு. ஆனால்

நெகேமியாவின் தலைமையின் கீழ் எவருமே திரும்பவில்லை. தங்கள் தேசத்திற்கு வந்தவர்கள் அவர்களது பிள்ளைகள்; அவர்களுடைய இருதயங்களில் அவர்களுடைய பிதாக்களின் விசுவாசம் கொழுந்து விட்டு எரிந்தது; இன்னமும் அவர்கள் ஆபிரகாமின் சந்ததியினருக்கென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் மற்றும் கீர்த்தியின் மேல் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆகவே திரும்பி வந்த சிறு கூட்டத்தினர் ஐம்பதாயிரத்திற்கும் குறைவானோர், அப்பொழுது இருந்த கோத்திரத்தாரில் உள்ள எஞ்சியிருந்த இஸ்ரயேலர் ஆவார்கள். ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றிக் கொண்டிருந்ததைக் காட்டினார்கள். இப்படியான தகுதியுள்ளவர்களின் வம்சாவளியினருக்கு, முக்கியமாக இரண்டு கோத்திரத்தி-ருந்து புடைத்து எடுக்கப்பட்டவர்களுக்கு(எல்லாரும் இராஜரீக மற்றும் முக்கியமாக இருந்த கோத்திரத்தாரின் பேரில் யூதர்கள் என அழைக்கப்பட்டார்கள்) நம்முடைய ஆண்டவர் தமது முதலாவது வருகையின் போது முழு பரிசுத்த ஜாதியினரான இஸ்ரயேலுக்கு அடையாளமாக இருந்தவர்களுக்கு தம்மையும் இராஜ்யத்தையும் அளித்தார்.

நம்முடைய ஆண்டவர் அவர்களைப் பற்றி குறிப்பிடும் போது இஸ்ரயேல் என்று அழைத்தார். இஸ்ரயே-ன் ஒரு பகுதி என்றோ அல்லது சாதாரணமாக யூதா என்றோ அழைக்கவில்லை. வாக்குத்தத்தங்களையும் தங்களுக்குள் ஒருவரையொருவர் பற்றிக் கொண்டவர்களையும் “இஸ்ரயேல் வீட்டாரின் காணாமல் போன ஆடுகள்” என்று குறிப்பிடுகிறார். ஏனெனில், அவர்கள் சத்தியத்தை விட்டு தூரமாக சென்று, கள்ள மேய்ப்பர்களின் சம்பிரதாயங்களைப் பின்பற்றி சென்றார்கள். இவர்கள், அவர்களை தேவன் சொன்ன வழியில் நடத்தாமல் அவர்களுடைய சொந்த வழியிலேயே நடத்தினார்கள். அவர் கூறுகிறார். “காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேன்.” இஸ்ரயேல் வீட்டாருக்கு மாத்திரம் அவருடைய ஊழியம் உட்பட்டு இருந்தது. அவருடைய காலத்தில், யூதர்கள் மாத்திரம் இஸ்ரயேல் வீட்டார் என்பவர்களுக்கு அடையாளமாக இருந்தார்கள். இதற்கு ஆதாரமாக “முழு இஸ்ரயேல்,” “தேவனைத் தொடர்ந்து ஆராதித்துக் கொண்டு இருக்கிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தார்” என்கிற நம்முடைய ஆண்டவரால் உபயோகிக்கப்பட்ட வார்த்தைகளும், அதற்கு இசைவாக அப்போஸ்தலர்கள் குறிப்பிடும் வார்த்தைகளும் இருக்கின்றன. இதற்கு இசைவாக, தம்முடைய ஊழியம் இஸ்ரயேலுக்கு மாத்திரம் என்று கூறியவர், பாலஸ்தீனாவில் உள்ள யூதர்களைத் தவிர வேறு எவரிடமும் செல்ல வேண்டாம் என்று தமது சீஷர்களுக்கு கூறினார் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். *மத். 10:5,6; 15:24*



அந்தக் காலத்தில் பாலஸ்தீனாவில் வாழ்ந்து கொண்டிருந்தவர்களை, அப்போஸ்தலர்கள் எப்படி யூதா என்கிற வார்த்தையை உபயோகியாமல் இஸ்ரயேல் என்கிற வார்த்தையை உபயோகித்தார்கள் என்பதையும் கவனியுங்கள். *(அப். 2:22; 3:12; 5:35; 13:16; 21:28)* எஞ்சியிருந்த இஸ்ரயேலரில் ஒரு சிலரே சுவிசேஷத்தை பெற்றுக் கொண்டார்கள் என்பதைக் குறித்து ஏசாயாவின் வார்த்தைகளை எப்படி உபயோகிக்கிறார்கள் என்பதையும் கவனித்துப் பாருங்கள். *(ரோம. 9:4, 27, 29, 31-33; 10:1-4; 11:1, 7-14, 25, 26, 31)* அதே நேரத்தில் மற்றவர்களை, மீதியானவர்களை இடறுகிறவர்கள், குருடாக்கப்பட்டவர்கள் என்றும் பேசுவதைக் கவனியுங்கள். ஆகவே ஆங்கிலம் பேசக்கூடியவர்கள் காணாமல் போன பத்து கோத்திரத்தின் பகுதியினர் என்று காட்டினாலும் அவர்கள் மேல் அந்த உடன்படிக்கையின்படி எந்த கிருபையும் வந்திருக்க முடியாது என்பதைத் தெளிவாக காண்கிறோம். ஏனெனில், அவர்கள் இஸ்ரயேலர்களுக்கு கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை விட்டு விட்டு விக்கிரக ஆராதனைக்காரர்களாக, அவிசுவாசிகளாக சொல்லப்போனால் புற ஜாதியினராகிவிட்டார்கள். அது மாத்திரமல்ல, ஏற்கெனவே குறிப்பிட்டபடி (தொகுதி 2, அத்தியாயம் 7) ஆபிரகாமின் இயற்கையான சந்ததியினர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைவரும், கிறிஸ்துவை தொடர்ந்து நிராகரிக்கிற அனைவரும், கிறிஸ்துவின் மரணத்தி-ருந்து 1878ம் ஆண்டுவரை எல்லா நன்மைகளில் இருந்தும் தள்ளப்பட்டார்கள். இது நடைபெற்ற

*வேளையான 1878ல் காலக்கணக்கின்படி அவர்களுக்கு அனுக்கிரகம் கிடைக்கும்படி இருந்ததோடு அவர்களுடைய குருட்டாட்டமும் நீக்கப்பட இருந்தது. இதன்படி ஆங்கில மேன்மை, கடந்த நூற்றாண்டுகளில் காணப்பட்டது, எந்த விதத்திலும் இஸ்ரயேலுக்கு அனுக்கிரகம் திரும்பி வந்தது என்று ஆகாது. ஆண்டவரை நிராகரித்து, சிலுவையில் அறைந்ததினால், எவர்களிடம் இருந்து அனுக்கிரகம் எடுக்கப்பட்டதோ, அவர்களுக்குத்தான் நன்மை இப்பொழுது திரும்ப வேண்டும். அந்த வேளையில், அதி-ருந்து இஸ்ரயேல் "யூதர்கள்" என்று அடையாளப்படுத்தப்படுகிறது. (ரோம. 2:9,10) இந்த யூதர்கள் தான் ஆபிரகாமின் இயற்கையான சந்ததியினராக அனுக்கிரகத்தைத் திரும்பப் பெற உள்ளார்கள். இவர்கள் ஆவிக்குரிய சந்ததியினரோடு (சுவிசேஷ யுகத்தின் போது தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், இஸ்ரயே-ன் மீதியானவர்கள், யூதர்கள், மற்றவர்கள், மீதமுள்ளவர்கள், புறஜாதியினரிடம் இருந்து எடுக்கப்பட்டவர்கள்) சேர்ந்து பூமியில் உள்ள எல்லா குடும்பத்தினரையும் ஆசீர்வதிக்கும்படி தேவனுடைய பிரதிநிதிகளாக இருப்பார்கள்.*

*வருகின்ற அனுகூலம் இஸ்ரயேலுக்கு மாத்திரம் இருக்காது. சுவிசேஷ யுகத்தின் போது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட எந்த யூதனும், இந்த வேளையின் போது கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களுக்கு தகுதி உள்ளவனாக இருந்தது போன்று, இயற்கையான சந்ததியினரோடு உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தில் விசுவாசம் வைக்கும் அனைவரும் திருப்பி கொடுக்கப்பட இருக்கின்ற அனுகூலத்தில் பங்கடையலாம். ஆரம்பத்தில், மீந்தவர்களில் ஒரு சிறிய தொகையினர் மட்டுமே, விசுவாசித்து சுவிசேஷ அனுகூலங்களை ஏற்றுக் கொண்டபடியால், யூதர்களைத் தவிர, மனுக்குலத்தின் ஒரு சிறிய எண்ணிக்கையில் உள்ளவர்கள் மாத்திரமே, ஆயிர வருட காலத்தின் புது பிரமாணங்களுக்கும், நிபந்தனைகளுக்கும் ஆயத்தமாக ஆண்டவருடைய மகிமையான சபையின் கீழ், மகிமையான ஆண்டவரின் நீதியுள்ள ஆட்சிக்குக் கீழ் இருப்பார்கள். ஆகவே முதலாவதாக சிறிய எண்ணிக்கையானவர்களாக இருக்கும் யூதர்கள் மாத்திரம் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.*



*யூதர்கள் வெகு காலமாக முயற்சிப்பதில் பழக்கமுள்ளவர்கள், தங்களுக்கு திவ்ய ஆசீர்வாதத்தைக் கொண்டு வருமென பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியும் கிரியைகளின் மேல் நம்பிக்கை வைப்பவர்கள். இவர்கள் சுவிசேஷ யுகத்தின் போது உள்ள முதலாவது அம்சமான பாவ மன்னிப்பு, கிரியைகள் இல்லாமலே, இயேசுவின் பரிபூரண வேலையில், அவரே பாவத்திற்கு போதுமானபடி ப-யானார் என்பதில் விசுவாசம் வைக்கும் அனைவருக்கும் உண்டு என்பதில், தடுமாற்றம் அடைந்தார்கள். ஆனால் யூதர்கள், பிரமாணத்தின் மேல் வைத்திருக்கிற மரியாதை, ஆயிர வருட காலம் பிறக்கும் போது அவர்களுக்கு அனுகூலமாயிருக்கும். மேலும் யூதனைக் காட்டிலும், வேறு எவரும் பாவங்களுக்கு கிறிஸ்து செலுத்திய ப-யின் கிரயத்தைக் குறித்த குருட்டாட்டம் அகன்ற பிறகு, அந்த யுகத்தின் கண்டிப்பான எதிர்பார்ப்புகளுக்கும், அந்த யுகத்தின் பிரமாணங்களுக்கும் அவ்வளவு ஆயத்தமாக இருக்க இயலாது. ஏனெனில், கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்த பின்னர், கிரியைகள் தேவைப்படுகிறது, அதற்கு முன்னதாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. மேலும் யூதர்கள் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய அன்பையும், நன்மையையும் ஏற்றுக் கொள்ளும் போது, இன்றைக்கு மற்றவர்கள் செய்வது போன்று தேவனுடைய நீதியைப் பாராமல் இருக்க முடியாது. மற்றவர்கள் இதற்கு எதிர்மாறாக, சிறிது காலத்திற்கு குருட்டாட்டம் உள்ளவர்களாக இராஜ்யத்தின் விதிகளை ஏற்றுக் கொள்ள ஆயத்தம் இல்லாமல் இருப்பார்கள். அதிலே, நியாயம் நூலாகவும் நீதி தூக்கு நூலாகவும் வைக்கப்படும்.*

*இப்பொழுது யூதன், பொய்யான உபதேசங்களால் ஒன்றுமில்லாததாக ஆக்கப்பட்டிருக்கும் பிரமாணத்தின் மேல், தவறான கருத்து கொண்டிருந்து குருட்டாட்டத்தில் இருப்பது போன்று, அநேக புறஜாதியினர் ஆயிர வருட காலத்தின் போது, அதற்கான கிருபையின் நிபந்தனைகளைப் பற்றிக்கொள்ளாதபடி தடுக்கப்படுவார்கள். பாவமன்னிப்பின் கிருபையின் உபதேசம், தற்காலத்தில் பொய்யான போதகர்களால் தவறாக அளிக்கப்படுவதினால், அப்படியான நிலை ஏற்பட்டது. அவர்கள்*

தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை தங்களுடைய குதர்க்கமான காரணங்களைக் காட்டி ஒன்றுமில்லாததாக, ஆக்கிவிடுகிறார்கள். “அவர்கள் தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரையும் மறுத-ப்பார்கள்.” *(2 பேது. 2:1)* மேலும் மனிதனுக்கு மீட்கும் பொருள் செலுத்தப்பட்டது, அல்லது அதற்கு தேவை இருந்தது என்பதையும் மறுத-ப்பார்கள். அவர்கள் கூறுகிறார்கள் : தவறு இழைப்பது மனித இயல்பு, மன்னிப்பது தேவ பண்பு என்று. ஆகவே, எப்பொழுதாவது செய்கிற பாவம் மன்னிக்கப்படக் கூடியது என்றும், கடுமையான தண்டனை மற்றும் ஒரு மீட்கும் பொருள் போன்றது தேவையற்றது என்றும், மன்னிக்கப்பட வேண்டிய பாவங்கள் இல்லாதிருந்தால் அது தேவனுடைய சந்தோஷத்தையும், மன்னிக்கிற தேவையையும் நீக்கி விடும் என்றும் முடிவு கட்டி விடுகிறார்கள். தேவனுடைய நீதியைப் பார்க்க தவறி, சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் உண்டாகும் ஒப்புரவாகுதல் என்னும் அவருடைய திட்டத்தின் கருத்தைப் பார்க்க தவறுவதுடன், ஒரு மீட்கும் பொருள் செலுத்தியதின் மூலம் பாவ மன்னிப்பு உண்டாகும் என்பது, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவத்திற்கு எதிராக போராடுகிறவர்களுக்கு மட்டுமே உண்டு என்பதையும் பார்க்க தவறிவிடுகிறார்கள். தேவனுடைய நீதியையும் கண்டிப்பையும் அவர்கள் சரிவர உணராமல், குருட்டாட்டத்தில் இருக்கிறபடியால், யூதர்களைப் போன்று சிலர் தான் அந்த அளவிலான கண்டிப்பான தனது திறமைக்கு ஏற்ப ஆயத்தமாக இருப்பார்கள். இது அடுத்த யுகத்தில் எல்லாரிடமும் எதிர்பார்க்கப்படும்.

தனக்கு மீட்கும் பொருளாக, அதற்கு ஏற்ற கிரயமாக கிறிஸ்து இயேசுவின் மரணம் இருந்தது என்பதையும், மனிதனின் பாவத்திற்கு முறையான நிவிர்த்தியாக அது இருந்தது என்பதையும், யூதன் உணர்ந்து கொள்வதற்கு ஆயத்தம் பண்ணும்படியாக இருந்தது என்பதற்கு ஆதாரமாக ஒரு உதாரணம் கொடுக்கிறோம். கிறிஸ்துவுக்காக மனமாற்றம் அடைந்த ஒரு இளம் எபிரேய வா-பன், “மகா பாவ நிவாரண நாள்” வருடம் தோறும், தற்போதுள்ள வைதீக யூதர்களால் அனுசரிக்கப்படுவதைக் குறித்து எழுதியது எபிரேய-



கிறிஸ்தவன் (Hebrew Christian) என்னும் பத்திரிகையில் வந்தது. அது பின்வருமாறு :

“யோம் கிப்பர்” (Yom Kipper) அல்லது பாவ நிவாரண நாள் என்பது என்னுடைய தகப்பனாருக்கு ஒரு குறிப்பிடத்தக்க நாள். அன்று அவர் உபவாசம் பண்ணி, ஜெபம் பண்ணி தன்னை வெறுமையாக்கினது மட்டுமல்லாது, இந்த பரிசுத்த பாவ நிவிர்த்தி பண்ணும் நாளில் உண்மையில் அந்த முழு இரவையும் பயபக்தியுடன் தேவாலயத்தில் கழித்தார். என்னுடைய தகப்பன் இந்த நாளில் அழுவதை அநேக முறை கண்டு இருக்கிறேன். அவர், பாவங்களுக்காக தேவனால் ஏற்படுத்தப்பட்ட ப-களை எத்தனை முறை செலுத்த வேண்டியதுள்ளதோ அதன்படி செய்த பின்னர், அவர் பாவ அறிக்கை செய்யும் போது என் தகப்பன் அழுவதைப் பார்த்திருக்கின்றேன். இப்பொழுது எங்களுக்கு தேவாலயம் கிடையாது, பிரதான ஆசாரியர் கிடையாது, ப-பீடம் கிடையாது, ப- செலுத்துதலும் கிடையாது என்பதைக் குறித்து, அவரோடு சேர்ந்து புலம்பி கண்ணீரையும் வடித்திருக்கிறேன். அந்த பயபக்தியுள்ள நாளுக்கு முன்னதாக, அவர் மற்ற யூதர்களோடு இருக்கும் போது ஒரு சேவலை எடுத்தார். அந்த நாளின் போது, சில வகையான ஜெபங்களை திருப்பி திருப்பிச் சொல்லும் போது, அவர் அந்தக் கோழியைக் கொண்டு தன் தலையை மூன்று தரம் சுற்றி அவர் கீழ்க்கண்டவாறு கூறுவார்: “இது எனக்குப் பதிலாக உள்ளதாகும், இது என்னுடைய பரிமாற்றம், இது என்னுடைய பாவ நிவிர்த்தி, இந்தக் கோழி மரணத்திற்குள் செல்லும், நான் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்வுக்கு வருவேன்.” ப-செலுத்தப்படும் போது ப-யின் மேல் கைகளை வைப்பது போன்று, அதன்மேல் அவர் தன் கரங்களை வைத்த பின்னர் உடனடியாக அது கொல்லப்படும்படி கொடுக்கப்பட்டது. இப்பொழுது இஸ்ரயே-ல் சிந்தப்படுகிற இரத்தம் இது மாத்திரமே. ஆடு, மாடுகளின் இரத்தம், பித்தளை ப- பீடத்தில் இப்பொழுது பாய்வதில்லை.

“என்னுடைய தகப்பனார் ஒரு வெள்ளை நிறக்கோழியை வாங்க அதிக சிரமம் எடுத்துக் கொண்டார். அவர் முற்றிலுமாக சிகப்பு நிற

கோழியைத் தவிர்த்தார். நான் அவரிடத்தில் கேட்டபோது அவர் கூறினார் : சிகப்பு நிறக் கோழி ஏற்கெனவே பாவத்தால் மூடப்பட்டு இருக்கிறது. பாவமே சிகப்பாக இருக்கிறது. ஏனெனில் அது இப்படியாக எழுதப்பட்டுள்ளது: 'உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்.' *(ஏசா. 1:18)* மேலும் அவர் கூறினார். 'ரபிமார்கள் ஏற்கெனவே போதனை (Talmud) புத்தகத்தில் குறித்து வைத்துள்ளார்கள். கோழி வெள்ளை நிறமெனில் பாவம் இல்லை. ஆகவே யூதர்களின் பாவத்தை சுமக்க இயலும். ஆனால் சிகப்பு நிறம் உடையதாக இருந்தால் பாவங்களால் முற்றிலுமாக மூடப்பட்டிருக்கும். ஆகவே நம்முடைய அக்கிரமங்களை சுமக்க தகுதியற்றது.'

"வேறு எந்தப் பிராணியையும் உபயோகிக்காமல் ஒரு சேவலை உபயோகிப்பதின் காரணம் இதுதான். எபிரேய மொழியில் ஒரு மனிதன் கிவர் (Gever) என்று அழைக்கப்படுகிறான். இப்பொழுது இந்த மனிதன் பாவம் செய்திருந்தால் அவன் அதற்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டும். ஆனால் தண்டனை யூதர்களால் சுமக்கக் கூடாத அளவிற்கு பாரமுள்ளதாக இருப்பதால் ரபிமார்கள் அதற்குப் பதிலாக ஒரு சேவலைக் கட்டளையிட்டுள்ளனர். அது கல்தேய மொழியில் கிவர் (gever) என்று அழைக்கப்படுகின்றது. இப்படியாக தேவ நீதி திருப்தி பண்ணப்பட்டு விட்டது என்று எண்ணிக் கொள்ளப்படுகிறது. எப்படியெனில் கிவர் (gever) அதாவது மனிதன் பாவம் செய்த படியால் ஒரு கிவர் (gever) அதாவது சேவல் ப-யாகச் செலுத்தப்படுகிறது.

"இந்த வீணான கண்டுபிடிப்பு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கலாம். தற்காலத்தில் பாவ நிவாரணமே கிடையாது என்று அநேக யூதர்கள் வாதிடுகிற வேளையில், அந்த தேசத்தின் சபையினர் பாவத்திற்கு ப- முற்றிலும் அவசியம் என்று சிந்திக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். மேலும், இரட்சிப்புக்கு மனந்திரும்புதல் என்கிற நிவாரணம் தேவை என்ற உணர்வையும் பெற்று இருக்கிறார்கள். ரபிமார்களின் கட்டுக்கதைகளை வாசிக்காமல், யூதர்கள் வேதத்தை வாசிப்பார்கள் என்றால் அவர்கள்



ஆண்டவராகிய இயேசுவே உண்மையான மேசியா, அவருடைய சொந்த இரத்தமே பாவத்திற்கு நிவாரணமாக அமைந்தது என்பதை கண்டு கொள்வார்கள். அவர்கள் தங்களுடைய வீணான கற்பனையால், ஒரு சேவலைப் ப-யிடுவதினால் அடைந்தாயிற்று என்று எண்ணுகிறார்கள். மனிதன் பாவம் செய்தான், மனிதனாகிய இயேசு கிறிஸ்துவே தம்முடைய ஆத்துமாவையே குற்ற நிவாரண ப-யாக ஒப்புக் கொடுத்தார்." *ஏசா. 53:10*

## முதலாவது யூதருக்கு

அப்படியானால் இஸ்ரயேல் (உண்மையாக இருந்த சிலரைத் தவிர) அவர்களுடைய பிரமாணங்களால் குருட்டாட்டம் அடைவார்கள் *(ரோமர் 11:9)* என்று ஆண்டவர் முன்னறிவித்தது இயற்கையாகவே நிறைவேறிற்று என்று நாம் பார்க்கிறோம். மேலும், ஆயிர வருட காலத்திற்குரிய நன்மைகளும், நிபந்தனைகளும், மற்றவர்களைக் காட்டிலும் அவர்களை அதி சீக்கிரமாக ஆசீர்வதிக்கும் என்று அவர் முன்னறிவித்தார். முற்றிலும் அது இயல்பான வழியில் வர இருக்கிறது, அது சரியான காரணங்களின் விளைவாக வரும்.

இப்படியாக சுவிசேஷ யுக நன்மைகள் அவர்களுக்கு முதலாவதாக கொடுக்கப்பட்டது போன்று, ஆயிர வருட யுக நன்மைகளும், அவர்களுடைய உடன்படிக்கை போன்ற காரணத்தினால் முதலாவது கொடுக்கப்படும். இறுதியில் அது சிமியோன் தீர்க்கத்தரிசனமாக உரைத்தது போன்று இருக்கும். "இந்தக் குழந்தை இஸ்ரயே-ல் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது." மேலும், கிருபையில் இருந்து விழுந்து போன நாடு, மறுபடியும் எழுப்பப்படுவதற்கான காலம் சமீபித்திருக்கிறது.

ஆனாலும் எல்லாரும் செய்கின்ற பொதுவான தவறை நாமும் செய்யாமல் பாதுகாத்துக் கொள்வோமாக. அவர்கள் இந்த வாக்குத்தத்தங்களில் ஏதோ ஒன்றைப் பார்த்து அதை சொல்லர்த்தமாக, அப்படியே இருக்கிற வண்ணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதாவது: "நான் இதற்கு பின்பு திரும்பி வந்து, விழுந்து போன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து,

அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன்." "கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்." (அப். 15:17; லூக். 1:32; எசே. 37:24) இஸ்ரயேல் தங்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்பும், எருசலேம் அதன் மண் மேட்டில் கட்டப்படும் என்பது சொல்லர்த்தமாக நடைபெறும் என்பதைக் குறித்து கேட்க முடியாது. ஆனால், அதே சமயம் தாவீதின் கூடாரம் மற்றும் சிங்காசனம் என்பது நிஜமான கற்கள், பலகைகள் போன்றவற்றைக் குறிக்காது என்பதை நாம் அறிந்துள்ளோம். தாவீதின் கூடாரத்தை மறுபடியும் நிலை நிறுத்துவது என்பது தாவீதின் வம்சாவளியினர் சிலரிடத்தில் இராஜரீகத்தை, அதிகாரத்தை மறுபடியும் நிலை நிறுத்துவதைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து தான், தாவீதின் வீட்டின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியாகவும், அவனுடைய சிங்காசனத்திற்கு வாரிசாகவும் இருக்கிறார்; மேலும், அவருடைய அதிகாரம் ஸ்தாபிக்கப்பட தொடங்கும் போது, அதுதான் தாவீதின் முந்திய தற்கா-க வீடு அல்லது கூடாரத்தை, பல நூற்றாண்டு காலமாக விழுந்து போய் புழுதியில் கிடந்ததை, எழுப்புவதின் (நிரந்தரமான ஸ்தாபகமாக ) ஆரம்பமாக இருக்கும். அதன்படியே மேசியா உட்காரும் தாவீதின் சிங்காசனம் என்பது பலகை, தங்கம் அல்லது தந்தத்தால் செய்யப்பட்டது என்று பொருள்படாது. ஆனால் அது அவர் அப்பியாசப்படுத்திய கௌரவத்தை, வல்லமையை, அதிகாரத்தை குறிக்கிறது. இந்த அதிகாரம் அல்லது சிங்காசனத்தை தாவீது சில வருடங்கள் உடையவனாக இருந்தான். ஆனால் இது யேகோவாவின் அபிஷேகம் பண்ணப்பட்ட நம்முடைய ஆண்டவராகிய இயேசுவினால் அதிக மேன்மையுடன் நிரப்பப்படும்.

ஆனால் தாவீதிற்கு என்ன அதிகாரம் இருந்தது, எதை அவன் உபயோகித்தான்? தாவீது "யேகோவாவின் சிங்காசனத்தில் வீற்றிருந்தான்." (1 நாளா.29:23) இதே அதிகாரம் தான் கிறிஸ்துவை அவருடைய ஆயிரம் வருட இராஜ்யத்தில் ஆதரிக்கும். ஆகவே சரியாகப் பார்க்கும் போது தாவீதும் அவனுடைய சிங்காசனம் அல்லது திவ்ய அதிகாரம் நிஜமான இஸ்ரயேல் தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டது,



கிறிஸ்துவுக்கும் அவருடைய இராஜ்யத்திற்கும் நிழலாக மாத்திரம் இருந்தது. ஆகவே தாவீது தகுதி உள்ளவன் என்று காணப்பட்டால் அவனுக்குக் கிடைக்கிற முக்கிய கனமானது, "பிரபுக்களில்" ஒருவராக இருப்பது; இம்மானுயேல், தம்முடைய பூமிக்குரிய இராஜ்யத்தை அவருக்குக் கொடுப்பார். சங். 45 :16

தாவீதின் பெயரும், அவனுடைய இராஜ்யமும் நிழலாக உள்ளது. தாவீது என்கிற பெயருக்கு பொருள் பிரியமானவன் என்பதாகும். அந்த நாளிலும் தேவனுடைய நேச குமாரன் தான் பூமி அனைத்திற்கும் இராஜாவாக இருப்பார், நிழலாகக் காட்டப்பட்ட பழைய தாவீது அல்ல. அதோடு கூட புதிய எருசலேம் அல்லது பரலோக அல்லது ஆவிக்குரிய நகரத்திற்கும், பழைய எருசலேமின் மண் மேட்டின் மேல் கட்டப்பட இருக்கிற எருசலேமுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை தெளிவாக அறிந்து கொள்வது நல்லது. புதிய எருசலேமுக்கு அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு அஸ்திபாரங்களாக இருக்கிறார்கள். பழைய எருசலேமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட புதுப்பித்தல் என்பது கட்டடங்கள் போன்றவற்றைக் கட்டுவது மாத்திரமல்ல, விசேஷமாக இஸ்ரயே-ன் ஆட்சியை மறுபடியும் அமைப்பதாகும். ஏனெனில் தீர்க்கதரிசனத்தில் ஒரு நகரம் என்பது எப்பொழுதும் ஒரு ஆட்சிக்கு அடையாளமாக இருக்கிறது. ஆகவே எருசலேம் பழைய அஸ்திபாரத்தின் மேல் மீண்டும் கட்டப்படுவது என்கிற வாக்குத்தத்தம், இஸ்ரயேல் ஒரு தேசமாக ஒழுங்குபடுத்தப்படுவதைக் குறிக்கிறது. அது இதற்கு முன்பு இருந்தது போலவே, ஒரு ஜனத்தின் மேல் யேகோவாவின் அபிஷேகம் பெற்றவர் அதிகாரம் கொண்டிருந்தது போன்று இருக்கும். புதிய எருசலேம் என்பது மகிமையான சுவிசேஷ சபைக்கு, இராஜ்யத்தின் வல்லமைக்கு, ஆவிக்குரிய விதத்தில் அடையாளமாக இருக்கும். அது மனிதர்களின் கண்களுக்கு புலப்படாவிட்டாலும், சர்வ வல்லமை இருக்கும். அது பூமிக்கு இறங்கி வருவது (வெளி. 21:2), "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்கிற நம்முடைய ஆண்டவரின் ஜெபத்தின் விண்ணப்பம் நிறைவேறுவதைக் காட்டுகிறது. அது இறங்கி வருவது படிப்படியாக இருக்கும், திடீரென இருக்காது. அது ஏற்கெனவே வந்து கொண்டு இருக்கிறது, அதிகாரத்திற்குள் வந்து

கொண்டிருக்கிறது. இதன் விளைவாகத்தான் பழைய எருசலேம் திரும்பி ஸ்தாபிக்கப்படுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெறுவதைக் காண்கிறோம். இறுதியில் நம்முடைய ஆண்டவரின் ஜெபத்தில் கூறப்பட்டதின் பலன்கள் கிடைக்கும். அதாவது "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்பதாகும். புதிய எருசலேமும், புதிய வானமும் ஒன்றுதான். அது புதிய ஆவிக்குரிய, ஆட்சி செய்கிற அதிகாரத்தைக் குறிக்கிறது.

ஏற்கெனவே ஆராய்ந்து பார்க்கப்பட்ட தீர்க்கதரிசனமாகிய 1878ம் ஆண்டில் தான் இஸ்ரயேல் இராஜாவுக்காக காத்திருந்த "இரட்டிப்பான காலம்" நிறைவேறியது என்பதையும், அவ்வேளையில் இருந்து அவர்கள் நன்மைக்கு திரும்புவதையும், தங்கள் குருட்டாட்டத்தில் இருந்து திரும்பும் காலம் வந்து இருக்கிறது என்பதையும் காண்கிறோம். அதன்பிறகு "எருசலேமுடன் பட்சமாய் பேசி, அதின் போர் முடிந்தது என்றும் (இரட்டிப்பான காத்திருப்பு), அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தம் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும் அதற்கு கூறுங்கள்" *(ஏசா. 40 : 1,2)* என்பதற்கு ஏற்ற காலமாயிருக்கும்.

ஆகவே அந்த நாளி-ருந்து, நன்மை அந்த ஜனங்களுக்கு திரும்பி வருவதற்கான அடையாளங்களையும், தங்களுடைய சொந்த நாட்டிலே மறுபடியும் நாட்டப்பட்டு அவர்கள் மறுபடியும் ஒரு பெரிய தேசமாக கட்டப்படுவதற்கான நடவடிக்கைகளையும், அவைகள் தேவனுடைய பல்வேறு வாக்குத்தத்தங்களின்படி உள்ளது என்பதையும் நாம் எதிர்பார்க்க வேண்டும். ஏனெனில், "நான் இவ்விடத்தி-ருந்து, கல்தேயர் (பாபிலோன் -இரகசியமாகிய பாபிலோன், கிறிஸ்தவ உலகம் வசனம் 9ல் கூறப்பட்டபடி - அவர்கள் தூக்கியெறியப்பட்ட பின்னர் கிறிஸ்தவ நாடுகள் என்று அழைக்கப்படுகின்ற எல்லா தேசங்களுக்குள்ளும் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள்) தேசத்துக்குச் சிறைபட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு



நன்மையுண்டாக அவர்களை அங்கீகரிப்பேன். (அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கும், தண்டனைக்குமாக - மறைமுகமான நன்மை) அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள் மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பி வரப்பண்ணி அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களை பிடுங்கமாட்டேன். (இது நிஜமான பாபிலோனின் சிறையிருப்பி-ருந்து திரும்பி வந்ததைக் குறிக்காது. ஏனெனில் அவர்கள் திரும்பி வந்த பிறகு அவர்கள் மறுபடியும் பிடுங்கப்பட்டார்கள், நாட்டப்பட்டார்கள்) நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்கு திரும்புவார்கள் என்று இஸ்ரயே-ன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். எரே. *24:5-7*

"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் யாக்கோபுடைய கூடாரங்களின் சிறையிருப்பைத் திருப்பி, அவன் வாசஸ்தலங்களுக்கு இரக்கஞ் செய்வேன்; நகரம் (எருசலேம்) தன் மண் மேட்டின் மேல் கட்டப்பட்டு, அரண்மனை (தேவாலயம்) முன் போல நிலைப்படும். அவர்கள் பிள்ளைகள் முன் போ-ருப்பார்கள்; அவர்கள் சபை எனக்கு முன்பாகத் திடப்படும்; அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன். அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருக்க, அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவி-ருந்து தோன்றுவார்; இதோ, நான் அவர்களை வட தேசத்தி-ருந்து வரப்பண்ணி, (ரஷியா - இப்பொழுது ஜீவிக்கிற யூதர்களில் 3ல் 2 பங்கு அங்கு இருக்கிறார்கள்) அவர்களை பூமியின் எல்லைகளி-ருந்து கூட்டி வருவேன்.................. மகா கூட்டமாய் இவ்விடத்துக்குத் திரும்புவார்கள். அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழி நடத்துவேன்.... ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரயேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக் கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும் வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள். கர்த்தர் யாக்கோபை மீட்டு,

அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார். அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சை ரசம், எண்ணெய் ஆட்டுக்குட்டிகள், கன்றுக் குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடி வருவார்கள்; அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போ-ருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்து போவதில்லை." எரே. 30:18, 20,21; 31: 8-12

மாபெரும் மீட்பர், அவர்களால் ஒரு முறை நிராகரிக்கப்பட்டவர் அந்த ஜனத்தின் ஜீவிக்கிற சந்ததியினரை நிலைவரப்பண்ணி, உயர்த்துவது மாத்திரமன்றி, மரித்தோர்களையும் திரும்பி வரப்பண்ணுவார். ஏனெனில், "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளி-ருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரயேல் தேசத்துக்கு வரவும் பண்ணுவேன்.... உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளி-ருந்து வெளிப்படப் பண்ணும் போது, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்ளுவீர்கள். என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்; நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்ளுவீர்கள்; இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார்." எசே. 37: 12-14

இந்த அற்புதமான வாக்குத்தத்தங்கள் 24 மணி நேரம் கொண்ட ஒரே நாளில் நிறைவேறாது. ஆனால் ஆயிர வருட நாளின் போது நிறைவேறும். பெர்-ன் பட்டணத்தில் 1878ம் ஆண்டு நடைபெற்ற நாடுகளின் கூட்டத்தின் (Berlin Congress of Nations) மூலமாக அவர்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க ஆரம்பம் கிடைத்தது. யூதர்கள் இப்பொழுது அவர்களுடைய பிதாக்களின் தேசத்தில், நூற்றாண்டுகளாக பெற்றிருந்ததை விட அதிகமான சிலாக்கியங்களை அனுபவிக்கிறார்கள். இனி அவர்கள் கர்வம் நிறைந்த துருக்கியர்களுக்கு வெறும் "நாய்கள்" அல்ல.

பாலஸ்தீனாவை ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசமாக



இங்கிலாந்து ஏற்றுக் கொண்டது என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரியாது என்று நாம் நினைக்கிறோம். உண்மையிலேயே துருக்கியின் ஆசியப் பிரதேசங்கள் அனைத்தையும் அவ்விதமாக ஏற்றுக்கொண்டதில், இதுவும் ஒன்று. இங்கிலாந்து வெகு காலமாக துருக்கியை பாதுகாக்க வேண்டும் என்று நினைத்ததற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதலாவதாக, துருக்கியின் செல்வந்தர்கள் துருக்கி நாட்டின் கடன் பத்திரங்களை பெற்றிருந்தார்கள். இரண்டாவதாக, துருக்கி தன்னுடைய பக்கத்தில் இருக்கும் நாடுகளில் ஏதாவது ஒன்றின் பக்கம் சென்றால் அல்லது அவர்களுக்குள் அது பங்கிடப்பட்டால், இங்கிலாந்து தேசத்திற்கு ஒன்று குறைவாகக் கிடைக்கலாம், அல்லது ஒன்றுமே கிடைக்காமல் போகலாம். இதனால் மற்ற எதிரி நாடுகள் இங்கிலாந்து நாட்டை விட அதிக முக்கியத்துவம் பெற்று, ஐரோப்பாவின் காரியங்களில் அதிக அதிகாரம் பெற்றுவிடலாம். மூன்றாவதாக, முக்கியமாக இங்கிலாந்து உணர்ந்து கொள்ளுவது என்னவெனில், துருக்கி அரசாங்கம் வழியை விட்டு அகன்று விட்டால் ரஷியாவின் ஆதிக்கம் தெற்கு ஆசியாவில் அதிகரிக்கும். அதன்பின் இந்திய சாம்ராஜ்யத்தையும் அபகரிக்க எண்ணும். இதற்கு இங்கிலாந்தின் ராணிதான் சக்கரவர்த்தினி, மேலும் இதி-ருந்து வியாபாரம் போன்றவைகள் மூலம் அதிகமான வருமானமும் வருகிறது. ஆகவே இங்கிலாந்தில் உள்ள ராயல் அல்லது டோரி (Royal or Tory) கட்சி வலுவுடன் துருக்கியர்களை ஆதரிப்பதைக் காண்கிறோம். 1878ல் ரஷியா கான்ஸ்டாண்டின் நோபிலுக்குள் (Constantinople) நுழைய இருந்த போது, இங்கிலாந்து குறுக்கிட்டு கடற்படை கப்பல்களை (Gun boats) துறைமுகத்திற்குள் அனுப்பியது. இதன் விளைவாக வந்தது தான், ஜூன் 13ம் தேதி 1878ம் ஆண்டு நடந்த பெர்-ன் கூட்டம் (Berlin Conference) ஆகும். இதில் முக்கிய நபராக இருந்தவர் ஒரு எபிரேயர், அவர் இங்கிலாந்து தேசத்தின் பிரதம மந்திரி ஆவார். அவர் பெயர் பிரபு பீக்கான்ஸ் பீல்டு என்பதாகும். அப்பொழுது துருக்கி அப்படியே இருக்கும்படியாக அதன் காரியங்கள் தீர்மானிக்கப்பட்டன. இருந்தாலும் இறுதியில் அது துண்டாடப்பட்டால் பெரிய வல்லரசுகள் எந்தப் பகுதியை பிடித்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்து, அதன் பிரதேசங்களை ஒழுங்கு

பண்ண வேண்டியதிருந்தது. இந்த வேளையில் தான் துருக்கியின் அதிகாரத்தில் இருந்த எல்லா பிரதேசங்களுக்கும் அதிகமான மத சுதந்திரம் கொடுக்கப்பட்டது. இங்கிலாந்து, துருக்கியோடு செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்தின் மூலம் அதன் ஆசிய பிரதேசங்களுக்கு பாதுகாவலர் ஆனது. சரித்திர ஆசிரியர் ஜஸ்டின் மெக்கார்த்தி (Justin Mecarthy)பின்வருமாறு கூறுகிறார்:

"ஆங்கிலேய அரசாங்கம், துருக்கிக்கு ஆசியாவில் உள்ள அதன் சொத்துக்களையெல்லாம், எல்லா படையெடுப்பினின்றும் பாதுகாப்பதாக உறுதியளித்தது... அதுதானே துருக்கியை எல்லா படையெடுப்பி-ருந்தும் ஆக்கிரமிப்பி-ருந்தும் காப்பாற்ற உறுதியளித்ததுடன் இந்த திட்டத்தை செயல்படுத்த நல்ல வசதியான இடம் வேண்டும் என்பதற்காக சைப்பிரஸ் (Cyprus) ஐ எடுத்துக் கொண்டது."

இதி-ருந்து நாம் பார்ப்பது என்னவெனில் பாலஸ்தீனா, ஆசியா பிரதேசங்களில் ஒன்றானதாக ஏற்கெனவே இங்கிலாந்தின் பராமரிப்பில் உள்ளது. இதனால் யூதர்களின் நலனுக்கு எதிராக அதன் திட்டங்களை செயல்படுத்துவதில் துருக்கி அதிக ஆர்வம் காட்டவில்லை. தெய்வாதீனமாக வடக்கத்திய நாடுகளான ரஷ்யா, மற்றும் ருமேனியாவில் யூதர்கள் துன்பப்படுத்தப்பட்டதால் நிச்சயமாகவே இது இந்த நாடுகளில் இருந்து தங்களுடைய சொந்த நாட்டிற்கு குடியேற்றத்தை திறந்து விட்டது. இந்த சூழ்நிலைகளினால் பாலஸ்தீனாவிலும் விசேஷமாக எருசலேமிலும், வைதீக யூதர்களின் தொகை அதிகமானது. யூதர்கள் பல நூற்றாண்டுகளாக சிறுபான்மையினராக இருந்த போதிலும், இப்பொழுது எருசலேமில் மற்ற எல்லா தேசத்தவர்களைக் காட்டிலும் அதிக தொகையினராக இருக்கிறார்கள்.

சிறிது காலத்திற்கு முன்பாக நியுயார்க் ஹெரால்டு (New York Herald) என்ற பத்திரிக்கை இங்கிலாந்து கிரீட் (Crete) தீவை எடுத்துக் கொண்டதைப் பற்றியும், எகிப்தை பிடித்துக் கொண்டது பற்றியும் துருக்கி, அதன் பிரதேசங்களின் பொதுவான நிலை பற்றியும் பின்வருமாறு கூறியது:



"நாம் வேகமாக சென்று கொண்டிருக்கிற யுகத்தில் ஜீவிக்கிறோம். சரித்திரம் கூட அசூர வேகத்தில் உண்டாக்கப்படுகிறது; யுத்தங்கள் வருடக் கணக்காக நடப்பதுண்டு; நாகரீகம் மெதுவாக முன்னேறியது; நாடுகளின் இடையில் தகவல் தொடர்பும், அதனால் நாடுகளுக்கேயான பலா பலன்களும் தாமதமாகி வந்தன. இப்பொழுது ஒரு நாட்டில் புதிதாக கண்டு பிடிக்கப்படுவது உடனடியாக ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களுக்குத் தெரிகிறது. முழு உலகமும் ஒரே நேரத்தில் கண்டு பிடிப்பினால் பயன் பெற முடியும். குறிப்பாக அரசிய-ல் அவசரம் காணப்படுகிறது. ராஜதந்திரிகளின் திட்டங்கள் முடிவு பெறுவதற்கு பல தலை முறைகள் தேவைப்பட்டன. இப்பொழுது துணிகரமான திட்டங்கள் திட்டமிடுகிறவர்களால் செயல்படுத்தப்படுகிறது. ஒரு கண்டத்தின் வரை படம் ஒரு வாரத்திற்குள் மாறி விடுகிறது. கிழக்குப் பக்கத்தில் காந்தம் போன்று உள்ள பிரச்சனையினால் விசேஷமானபடி தெளிவாக, சரித்திரம் சிருஷ்டிக்கப்படுவதும், சீக்கிரமாக சம்பவங்கள் நடைபெறுவதும் தெரிகிறது... இந்த மாதிரியான முரண்பாடான அக்கரைகளுக்குள் யூதர்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு மற்றும் முகமதியர்களுக்கு பிரியமான தேசமாக பாலஸ்தீனா இருக்கிறது. இராஜதந்திரி இந்த விஷயம் தான் முக்கியமானது என்கிறார். தன்னுடைய நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர் கூறுகிறார். அது பசுமை நிறைந்த பிரதேசம், புராதன காலத்தில் லட்சக்கணக்கான மக்களுக்கு அது வாழ்வளிக்கிறதாக இருந்தது. வியாபாரத்திற்கு அது உகந்த இடமாக காணப்பட்டது. முந்தைய காலங்களில் அதன் கடல் துறைமுகங்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பும், செல்வமும் நிறைந்ததாக இருந்தது. இதனால் தீருவும் சீதோனும் புகழ் பெற்று விளங்கின. அது ஐரோப்பாவும், ஆசியாவும் கூடும் இடத்தில் இருக்கிறபடியால் அது இருக்கிற இடம் மிகவும் விரும்பப்படத்தக்கது. ஆகவே அப்படியாக தேசிய பற்று உள்ள இருதயத்திற்கு பாலஸ்தீனா மிகவும் பிடித்தமானதாக இருந்தது. சரித்திர ஆசிரியர் கூறுகிறார்: முதலாவது நடந்தது சர்வதேச அளவில் என்றால் அது பாலஸ்தீனாவின் மேல் நடந்த படையெடுப்புதான்;

அந்த நாளில் இருந்து இந்த நாள் வரை அது எப்பொழுதும் ஆர்வத்தை தூண்டுவதாக இருந்திருக்கிறது. ஆகவே அவரும் பாலஸ்தீனாவின் எதிர்காலத்தைக் குறித்து கரிசனை உள்ளவராக இருக்கிறார். பரிசுத்த பூமி என்று அழைக்கிற மதவாதி, அதன் மேல் வைத்திருக்கிற தனது விருப்பத்தைக் காட்டுவதற்கு வார்த்தைகள் இல்லாது இருக்கிறார். அவருக்கு ஒவ்வொரு கல்லும் ஒரு காவியம், ஒவ்வொரு மரமும் ஒரு கவிதை. அனுபவம் உள்ள வியாபாரி நினைப்பது எப்படியெனில், ஆசிய ரயில் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டவுடன், சீக்கிரத்திலே ஒரு நிலையான அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டவுடன், அது சாத்தியமாகும். அப்பொழுது பாலஸ்தீனா அமைந்திருக்கிற இடம் பூலோக ரீதியில் பார்க்கும் போது ரயில் போக்குவரத்து, ஆசியாவின் வாணிகப் பொருட்களை ஐரோப்பிய, அமெரிக்காவின் சந்தைக்கு கொண்டு செல்ல, அங்கேயிருந்து இங்கு கொண்டு வர, ரயில் வழித்தடம் மிக உதவியாக இருக்கும் என்பதாகும். சாலொமோனின் நாட்களில் மூன்று கண்டங்களின் வர்த்தகம், இதன் எல்லைக்கு வந்தடைந்தது போன்று, இந்தக் கண்டங்களின் எதிர்கால வர்த்தகமும் இதே மாதிரியாக இருக்கும். இவைகளெல்லாம் செயல்படுத்தப்படுவதற்கு அதிக காலம் ஆகும் என்றாலும் அதைப் பற்றிய ஆவல் நின்றுவிடவில்லை. ஒரு சிகாகோ (Chicago) அல்லது ஒரு சான் பிரான்சிஸ் கோ (San Francisco) வெட்டாந்தரையாக ஒரு காலத்தில் இருந்தது. இப்பொழுது ஜனங்களால் நிறைந்து இருப்பதை எண்ணி, இந்தக் காலத்தில் சம்பவங்கள் துரிதமாக நடைபெற்று விடுகின்றன என்று கூறி இன்னமும் காத்திருக்கிறார்.

“மனம் சோர்ந்து போன நிலையில் இருக்கும் துருக்கி, தனது பிடியைத் தளரவிட்டால் கிடைக்கிறதை சுருட்டிக் கொள்ளலாம் என்று பெரிய கிறிஸ்தவ வல்லரசுகள் ஆவலோடு காத்திருக்கும் வேளையில் ஒரு முக்கியமான நபர் முன் வந்து “தேசம் என்னுடையது” என்கிறார். வல்லரசுகள் பேசுவது யார் என்று பார்க்க திரும்பினால், அது ஒரு யூதன், முதன்முறையாக பாலஸ்தீனா மீது ஆக்கிரமிப்பு வந்த போது இருந்த குடும்பத் தலைவனின் பிள்ளை, அவனே அது 36 நூற்றாண்டுகளாக இருந்த பிரச்னைக்குப் பின்னர் தனக்கு திருப்பிக்



கொடுக்கும் போது அதை மிகவும் சந்தோஷத்துடன் பிரசன்னமாகி பெற்றுக் கொள்ளக்கூடும்.

“என்ன ஆச்சரியமான யதேச்சையாக ஏற்படும் ஒத்த நிகழ்ச்சி ! இல்லை, ஏதோ தற்செயலாக இது நடந்ததல்ல, என்னுடைய எதிர்காலம் இதில் அடங்கியிருக்கிறது என்கிறான் யூதன். இந்த பிரச்னையில் பாலஸ்தீனாவைப் பொறுத்த மட்டில், யூதனின் எதிர்காலம் என்னவென்பதை சற்றுப் பார்ப்போம். தேசங்கள் ஒரு யோசனையில் இருந்து பிறக்கிறது. ஜெர்மானிய ஒற்றுமை என்கிற யோசனையில் இருந்து ஜெர்மானிய வல்லரசு பிறந்தது. அது வெர்செயில்ஸ் (Versailles) என்கிற இடத்தில் இருந்து உலகத்திற்கு பிரகடனப்படுத்தப்பட்டது. ஜெர்மனியின் நலனுக்காக பிரான்ஸ் தேசத்து துப்பாக்கிகள் ஆமென் என்று கூறி ஒத்துழைப்பு அளித்தன. இத்தா-யா இரிடெண்டாவின் (Italia Irridenta) கூக்குர--ருந்து இன்றைய புது இத்தா- உருவானது; அதன் முழக்கம் மத்திய தரைக்கடல் கரையை மறுபடியும் எழுப்பும். புராதன கால கிரேக்க சம்பிரதாயத்தி-ருந்து இன்றைக்குள்ள நவநாகரீக கிரேக்க தேசம் உருவாக்கப்பட்டது. ஆகவே யூதனின் நெடுநாளைய ஆவல் இன்னமும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது என்பதை கிறிஸ்தவன் அறிந்து கொள்ளலாம். பாலஸ்தீனா யூதனுக்கே சொந்தம் என்பதை அவர்கள் முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளும் போது, அவன் மாத்திரமே அந்த நாட்டின் எதிர்காலத்தை முழுமையாக அபிவிருத்தி பண்ண தகுதியுள்ளவனாக இருக்கும் போது, அவனிடத்தில் அந்த தேசம் இருக்கும் போது, பொறாமையுள்ள வல்லரசுகளின் பயத்தை அது நீக்கும். அதே வேளையில் அது நியாயமான செயல் என்பதோடு, சரித்திரத்தின் தியாகிகளுக்கு செய்யக்கூடிய நல்ல ஒரு நிவாரணமாகும்.

“யூதர்களைப் பொறுத்த வரை அவர்கள் இழந்ததைத் திருப்பிப் பெறும்படியாக எவ்வளவாக காத்திருக்கிறார்கள் என்பதை சொல்லத் தேவையில்லை. ஆப் என்கிற மாதத்தின் 9ம் தேதியில் அவர்கள் ஆலயங்களின் அழிவிற்காகவும் அவர்களது நாட்டின் தேசிய அளவிலான அழிவுகளுக்காகவும் அவர்கள் உபவாசம்

இருக்கிறார்கள். 'பூமியின் நான்கு திசைகளிலும் இருந்து எங்களை ஒன்றாக கூட்டிச் சேரும்' என்கிற ஜெபம் ஏறெடுக்கப்படாத காலை வேளை அல்லது சாயங்கால வேளை கிடையாது. 'பழைய காலத்தைப் போன்றே எங்கள் ஜனங்களைக் கூட்டிச் சேரும்.' 'எருசலேமின் மத்தியில் நீர் தங்கியிரும்.' இந்த வார்த்தைகள் எல்லா பட்டணங்களிலும், யூதன் உலகத்தில் எந்தப் பகுதியி-ருந்தாலும் அங்கெல்லாம் சொல்லப்படுகிறது. இப்படியாக தொடர்ந்து செயல்படுவது கட்டுப்படுத்த முடியாததொன்று. இன்றைக்கும் கூட ஸ்பெயின் தேசத்து யூதர்கள் (தூரதேசமான இந்த நாட்டில் இருப்பவர்கள் கூட) 'Tierra Senta' என்று அவர்களால் அழைக்கப்படும் பாலஸ்தீனா தேசத்தின் மண்ணை, அவர்களின் மரித்தவர்களின் கண்களின் மேல் போடுகிறார்கள். இது பரிசுத்தமான மண்ணின் மேல் அவர்கள் வைத்திருக்கிற பரிதாபமான ஏக்கத்தைக் காட்டுகிறது.

" 'இரயில் வசதி எருசலேமுக்கு வரும் போது மேசியா வருகிறார்' என ஏசாயா 66:20 மறைமுகமாக கூறுகிறது. அதில் தீர்க்கதரிசி பல்வேறு பிரயாணம் செய்யும் முறைமைகளின்படி நாடு கடத்தப்பட்டவர்கள் திரும்பி வருவதை தனது தரிசனத்தில் காண்கிறார். பிரயாணத்திற்காக உபயோகப்படுத்தப்பட்ட ஒரு முறையை அவர் 'Kirkarott' என்று அழைக்கிறார். அதின் ஆங்கில மொழிபெயர்ப்பு வேகமாக செல்லும் ஒட்டகம் அல்லது நன்கு வளர்ந்த ஒட்டகம் என்று கூறுகிறது. ஆனால் அது தவறு. மொழிகளைக் குறித்து ஆராய்ச்சி செய்பவர்கள். 'Kar' என்பது சூளை என்றும் 'Karkar' செல்லுதல் அல்லது இயங்குதல் என்றும் அர்த்தப்படுத்துவதை விரும்பாமல், தீர்க்கதரிசி தனது தரிசனத்தில் கண்டதற்கு ஒரு வார்த்தையை கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு ரயில் வேகமாக ஓடுவதைக் குறிப்பிட்டு கூறுகின்றனர். 'நிக்கோலஸ் (Nicholos) ஆளுகை செய்யும் போது மீட்பு வருகிறது' என்பது ஏசாயா 63:4 வது வசனத்தின் ஒரு மறைமுகமான அர்த்தம் ஆகும். இதி-ருந்து Hebraists என்ற வார்த்தை வருகிறது. இதி-ருந்து Rashe Teloth என்கிற பதம் வருகின்றது. இதனால் 'எல்லா யூதாவும் யூதாவின் பிள்ளைகள் உபத்திரவப்படுத்தப்பட்டதின் விளைவாக மஸ்கோவேயின் (Muscovy)



சக்கரவர்த்தி நிக்கோலஸ் என்பவர் விழுந்து போவதைக் கேட்கவும் காணவும் செய்வார்கள். அந்த வீழ்ச்சிக்குப் பின்னர், நம்முடைய உண்மையான மீட்பு இருக்கும். யூதாவின் பிள்ளைகளுக்கு திஸ்பிய தீர்க்கதரிசியின் (எ-யா) நற்செய்தி சமீபத்தில் உள்ளது என்கிறார்கள்.' இவைகளெல்லாம் முக்கியமானவைகள். ஏனெனில் அவைகள் யூதர்களின் எண்ணத்தை சுட்டிக் காட்டுகிறது."

சில சமயங்களில் உலக மனிதர்கள் தாங்கள் அறியாமலேயே உண்மையின் அருகே வந்து விடுகிறார்கள் என்கிற சிந்தனை, மேலே கூறப்பட்டவைகளின் மூலமாக எங்களுக்கு பலவந்தமாக வருகிறது. அதாவது முற்பிதாவான ஆபிரகாமின் மரணத்துக்கு 36 நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் தனக்கும், தனது சந்தியினருக்கும் சொந்தமாகும் போது, தானே பிரசன்னமாகி பெற சந்தோஷப்படக்கூடும் என்பதை நினைத்துப் பார்க்கும் காரியமாகும். இது சிலருக்கு கவிதை மாதிரி தோன்றலாம். ஆனால் வேதம் இது உண்மை என்று கூறுகிறது. நாம் ஏற்கெனவே பார்த்தபடி (தொகுதி 1, அத். 14) ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தானியேல் மற்றும் எல்லா பரிசுத்த தீர்க்கதரிசிகளும் பூரணமாக்கப்படுவார்கள். மரணத்தி-ருந்து எழுப்பப்பட்டு பூரண மனிதராக்கப்படுவார்கள். அதற்கு முன்பாக சுவிசேஷ சபை பூரணமடையும். (எபி. 11:40) அவர்கள் பூமியின் பிரபுக்களாக இருப்பார்கள். (சங். 45:16) அவர்கள் கண்ணுக்குப் புலப்படாத ஆவிக்குரிய இராஜாவாக இருக்கிற கிறிஸ்துவுக்கு பூலோகத்தில் கண்ணுக்குப் புலப்படக் கூடிய பிரதிநிதிகளாக இருப்பார்கள். ஆபிரகாமுக்கும், அவன் சந்ததியினருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம், நித்திய சுதந்திரமாக கொடுக்கப்பட்டது. அவன் அதை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவனுக்கு அதில் ஒரு அடி நிலமாவது கொடுக்கப்படவில்லை. அப். 7:5

சிகாகோ பத்திரிக்கையில் (Chicago Journal) பிரசுரிக்கப்பட்ட ஒரு கடிதம் பாலஸ்தீனாவில் இழக்கப்பட்ட எல்லாம் படிப்படியாக திரும்பிப் பெறப்படுதலுக்கான ஒரு அற்புதமான சாட்சியைப் பற்றி கூறுகிறது. அதன் மேலும், அதன் மக்கள் மேலும் தேவனால்

எதிர்காலத்திற்கென வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களுக்கான ஆயத்தங்களை குறித்து பின்வருமாறு அதில் கூறப்பட்டுள்ளது :

எருசலேம், நவம்பர் 23, 1887

"நாங்கள் இங்கே வசித்த ஆறு வருடங்களில் நடந்த மகிமையான காரியங்களை சாட்சியாக சொல்லுவதில் மிகவும் சந்தோஷப் படுகிறோம். ஆறு வருடங்களுக்கு முன்பாக நாங்கள் வந்த போது 14 பெரியவர்களும் 5 பிள்ளைகளுமாக இருந்தோம். யோப்பா வில் இருந்து நாங்கள் வந்த போது, பாழான பூமியைக் கண்ட போது, அது எங்களுடைய கவனத்தை மிகவும் ஈர்த்தது. எங்கேயும் எந்த பசுமையையும் காணமுடியவில்லை. ஒ-வ மரங்களும், திராட்சை செடிகளும் கோடை கால வெப்பத்தின் சாம்பல் நிற புழுதியால் மூடப்பட்டிருந்தது. அதற்குக் கீழாக எந்த பசுமையும் இருக்கும் என்று நினைத்துப் பார்க்க முடியவில்லை. எல்லா பூமியும் அடித்தளத்தி-ருந்து காய்ந்து போய் விட்டது போன்று இருந்தது. ஆனால் அந்த நாளில் இருந்தது போன்று, மறுபடியும் ஒரு போதும் கண்டதில்லை. ஒவ்வொரு வருடமும், அதிக பசுமையாகக் காணப்படுகிறது. அதன் அநேக வெறுமையான மலைப்பகுதிகள் திராட்சைத் தோட்டங்களாலும் ஒ-வத் தோட்டங்களாலும் நிறைந்துள்ளது. முழு தோற்றத்தையுமே மாற்றியுள்ளது.

"நீங்கள் கேட்பீர்கள், இந்தப் பெரிய மாற்றத்திற்கான காரணம் என்ன? தேவன் இந்த தேசத்தின் மேல் பொல்லாப்பைக் கொண்டு வந்தது போன்று, அதன்மேல் பெரிய ஆசீர்வாதத்தையும் கொண்டு வருவார் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார். இந்த ஆசீர்வாதங்கள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன. ஏனெனில் கடந்த நூற்றாண்டுகளைக் காட்டிலும் அதிகமான மழையை அனுப்பி இருக்கிறார். இதற்கு முன்பு எப்பொழுதும் இல்லாதபடி அதிகமான மழையையும் அதிகமான பனியையும் அனுப்புகிறார். கோடை காலத்தில் மேகங்களை அனுப்பியிருக்கிறார். இருபது வருடங்களுக்கு முன்பதாக இது போன்று நடந்தது கிடையாது. இது வெப்பத்தை தணிக்கிறது. ஆகவே அது தரையை காய விடுவதில்லை. ஐந்து



வருடங்களுக்கு முன்னால் யோப்பாவில் ஜூலை, ஆகஸ்ட் (மழை பெய்யாத மாதங்கள் இவை) மாதங்களில் 3 மணி நேர மழையை அவர் அனுப்பினார். தமஸ்கு மற்றும் அதைச் சார்ந்த பகுதிகளில் 16 மணி நேர மழையை அனுப்பினார். அமெரிக்க பத்திரிக்கைகள் பாலஸ்தீனாவில் சீதோஷ்ண நிலை மாறுகிறதற்கு இது ஆதாரம் என்று எழுதின. நாங்கள் இங்கே வந்த போது, வெகு சில யூதரே இந்த பூமிக்கு திரும்பி வந்து கொண்டிருந்தனர். ஆனால் ரஷ்யா, ஜெர்மனி போன்ற தேசங்களில் நடந்த கொடுமைகள் அவர்களை விரட்டியடித்தன. சுல்தானின் கட்டளைகளை ஒரு பக்கம் வைத்து விட்டு, அவர்கள் இந்த தேசத்திற்கு திரும்பி வரத் தொடங்கினார்கள். அவர்கள் நிலம் வாங்கி, பயிரிடவும், கட்டடம் கட்டவும் தொடங்கி, பட்டணத்தின் வியாபாரத்தையும் கையகப்படுத்திக் கொண்டார்கள். ஆகவே, நாங்கள் இங்கு வந்த போது இருந்ததைக் காட்டிலும் இப்போது ஆயிரக்கணக்கானோருக்கும் அதிகமாக இருக்கிறார்கள்.

"வியாபாரத்தைப் பொறுத்த வரையில் எருசலேம் இப்பொழுது உண்மையிலேயே யூதர்களின் கரங்களில் உள்ளது. ஒரு காலத்தில் இருந்தது போன்று இனியும் யூதன், முகமதியனின் கால்களுக்குக் கீழ் இருப்பது இல்லை. மேலும் எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் 31: 38-40; 32:43,44-ல் கொடுக்கப்பட்ட விரிவுரையின்படி துரிதமாக ஒரு புதிய நகரத்தைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே ஆட்சியில் இருக்கும் துருக்கியர்கள் கூட அதைக் கவனித்து, 'அது தேவனால் வந்தது, எங்களால் என்ன செய்ய முடியும்' என்று கேட்கிறார்கள். இதற்கு நாங்கள் என்ன கூற முடியும்? நாங்கள் கூறுவதெல்லாம் தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வார்த்தையின்படி அவனோடு செய்த உடன்படிக்கையை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறார். இதற்கு நாங்கள் சாட்சிகளாக இருக்கிறோம்."

கொடுமையும், உபத்திரவமும் அவர்களை எந்த புழுதியில் வீழ்த்தியதோ, அதிலேயிருந்து அவர்களில் அநேகர் தங்களுடைய பக்கத்தில் உள்ள புற ஜாதியினரைக் காட்டிலும் செல்வத்திலும், உயர்ந்த ஸ்தானத்திலும் இருப்பதை கடந்த வருடங்களில் நாம் காண்கிறோம். இப்படியாக வசதிகள் மற்றும் மேன்மைகள் இருக்கும்

போது அநேக வேளைகளில், அது யூத இனத்தை மேம்படுத்த தயாள சிந்தையையும், ஆவலையும் உண்டு பண்ணுகிறது. ஞானமாய் சரியான விதத்தில் செய்யப்படும் இப்படியான முயற்சிகள் அதிக நன்மையை உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறது. சிந்திக்கக் கூடிய யூதர்கள் மற்றும் புறஜாதியார் மத்தியில் சிந்தனை யூதர்களைப் பற்றியதாக இருக்கிறது.

முக்கியமான யூத பத்திரிகைகள் மற்றும் பாலஸ்தீனாவை கையகப்படுத்த வேண்டும் என்று நினைத்து பாடுபட்டுக் கொண்டிருக்கிற இயக்கங்கள் கூறுவதி-ருந்தும், ஏற்கெனவே அங்கே குடியேறியுள்ளவர்களின் உதவிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் ஆயிரக்கணக்கானோரின் கண்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு நேராக ஆவலுடன் திரும்பி உள்ளன. 1878ம் ஆண்டி-ருந்து இந்த சம்பவங்கள் தொடங்கியுள்ளன. அப்பொழுதி-ருந்து நடக்கின்ற சம்பவங்கள் இந்த விஷயத்தைப் பற்றிய ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்தியுள்ளன. இதுவே காலங்களுக்குரிய முக்கிய அடையாளமாக உள்ளது. யூத உலகம் (Jewish world) *(ஆகஸ்ட் 20, 1886)* என்கிற இதழில் இருந்து, உதாரணமாக கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகிறோம்:

“பரிசுத்த பூமியின் மேல் இதுவரை இருந்து வந்த சோகமான நிழலைக் கொடுத்த மேகங்களின் இடையே ஒரு இடைவெளி இப்பொழுது இருக்கிறது. இதுவரை உட்புக முடியாத அளவிற்கு இருள் சூழ்ந்து இருந்த இந்த தேசம் இப்பொழுது கொஞ்சம் பிரகாசம் அடையத் தொடங்கி உள்ளது. சந்தோஷமான காலங்களைப் பற்றிய மினுமினுக்கின்ற ஒளி கண் முன் தோன்றுகின்றன... இரண்டு ஸ்தாபனங்கள் பாலஸ்தீனாவின் யூதர்களின் கஷ்டங்களை ஒழிக்க முக்கியமான பங்கு ஏற்க உள்ளன. அவைகளில் ஒன்று யோப்பாவில் உள்ள விவசாய பள்ளி (Agricultural School) மற்றொன்று, எருசலேமிற்கு அருகில் உள்ள லயனல் ரோத்ஸ்சைல்டு ஸ்தாபனம் (Lionel Rothschild Institution) ஆகும். மூன்றாவதாக உள்ளது மான்டிபையர் டெஸ்டிமோனியல் நிதி (Montefiore Testimonial Fund) ஆகும். இது கட்டடம் கட்டுவதற்கான குழுமங்களை ஏற்படுத்தி இதன் மூலம் அதிக செலவில்லாத வீடுகளைக் கட்டிக் கொடுப்பதோடு,



மக்களிடையே சிக்கன உணர்வை ஏற்படுத்தி பரிசுத்த நகரில் உள்ளவர்களின் சிரமங்களையும் அன்றாட கஷ்டங்களையும் நிவிர்த்தி செய்ய அதிக பிரயத்தனம் எடுத்துள்ளது.... இப்பொது நாங்கள் கவனித்து கூறுவது என்னவெனில், பாலஸ்தீனாவில் உள்ள யூதர்களின் நிலைமை இனி ஒருபோதும் நம்பிக்கையற்றதாக இருக்காது. அதே நேரத்தில் நன்றாக ஞானத்துடன் ஏற்படுத்தப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்ட இயக்கங்கள் நம்முடைய சகோதரர்களின் முன்னேற்றத்திற்காக இயங்கிக் கொண்டிருக்கும் வேளையில், ஜனங்கள் தங்களுடைய துன்பத்தினால், செயல் அற்று இருக்கிற நிலைமையில் சோர்வுறுகிறார்கள். இதனிமித்தமாக தங்களுடைய மறுவாழ்வுக்கென எடுக்கப்படும் முயற்சிகளை பயன்படுத்திக் கொள்ள அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் ஏற்படும் விளைவுகள் சந்தோஷமானவைகள் தான், எந்த யூதனும் சந்தோஷம் நிரம்பி அதை நினையாமல் இருக்கமாட்டான்.”

இன்னொரு இதழில், இதே பத்திரிக்கை “பாலஸ்தீனாவின் எதிர்காலம்” என்பதைப் பற்றி ஒரு முக்கியமான கட்டுரையை வெளியிட்டு அதன் முடிவுரை பின்வருமாறு இருந்தது:

“மோன்டிபயர், ஹிர்ஸ்ச், ரோத்ஸ்சைல்டு (Montefiore, Hirsch, Rothschild) போன்றவர்களின் பணத்தைக் கொண்டு அதிகமான குடியிருப்பின் விவசாய நிலங்களில் சமீப காலங்களில், அதிகமாக பயிர் செய்யப்படுவதால், “வனாந்தரம் புஷ்பத்தைப் போன்று செழிக்கும்” என்பதில் ஆர்வமுள்ள கரங்கள், இருதயங்கள் இந்த மாறுதல்கள் ஏற்படும் இடங்களில் காணப்பட வேண்டும். இவைகள் இந்த பரிசுத்த பூமியை அதன் நீண்ட மரண நித்திரையில் இருந்து திரும்பப் பெற்று, யூதர்களின் தேசிய பிரதேசமாக அதில் ஜீவனும், வெளிச்சமும் திரும்பி வரப்பண்ண வேண்டும்.”

யூத மெசஞ்சர் (The Jewish Messanger) என்கிற பத்திரிகை இவ்விதமாகக் கூறுகிறது:

“மனிதர்கள் தங்களுடைய சிறிய கவலைகளில் மூழ்கி இருக்கும் போது, இன்னொரு விதத்தில் நம்பிக்கைகளினாலும், பயங்களினாலும் அசைக்கப்பட்டு, தடுக்க முடியாத முடிவுக்கு நேராக மனிதனுக்கு நடைபெறும் சம்பவங்கள், அருமையாக முன்னேறிச்

சென்று கொண்டிருக்கின்றன. இது மனுக்குலத்தின் செயல்களை எல்லா விதத்திலும் அடக்கி ஆளும் தவிர்க்க முடியாத பிரமாணத்தின் நிறைவடைதலுடன் முடிகிறது. மனிதர்கள் தங்களுடைய சிறிய குரலை உயர்த்தி, இந்த முன்னேற்றத்தை தடுத்து நிறுத்துவதுடன், தேவனின் இந்த நித்திய கட்டளையை தடுக்க முடியுமா என்று பார்க்கிறார்கள். அவர்கள் இந்த பூலோகத்தின் ஆட்சி செய்கிற பிரமாணத்தையும் முடிந்தால் தடுத்து நிறுத்தட்டும். ஓட்டப் பந்தயம் குறிக்கப்பட்டுள்ளபடி ஓடி முடிப்பதற்காகவும், நமக்கு மேலே உள்ள பெட்டகசாலையில் நட்சத்திரங்கள் ஜொ-க்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ளபடி அவர்கள் மத்தியில் இஸ்ரயே-ன் ஓட்டம் நிலையான, பிரகாசமான நட்சத்திரமாக இருக்கிறது. அது அங்கும் இங்குமாக அலைந்து திரிந்தாலும் இலக்கை நோக்கி ஓடிக் கொண்டு இருக்கிறது. அதன் ஓட்டம், முன் குறித்தே காணப்பட்டது, சொல்லப்பட்டது, அது இறுதியில் பரிசுத்த பூமியை திரும்பப் பெறும் என்பது தீர்க்கதரிசனமாக கூறப்பட்டுள்ளது. இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டு வருகின்றன, காலங்கள் இதை சுட்டிக் காட்டுகின்றன. இது மிகவும் அமைதியாக, படிப்படியாக, நடைபெற்றுக் கொண்டு வருகிறது; ஆகவே இதைக் கவனித்துப் பார்ப்பவர்கள் மட்டுமே, நடந்திருக்கும் வேலையின் முக்கியத்துவத்தை அறிய முடியும்.

“பாலஸ்தீனா யூத இனத்திற்கு அரசியல் ரீதியாகவும் தேவையானதாகும். பரிசுத்த பூமியில் மீண்டும் ஒரு தேசம் ஸ்தாபிக்கப்படுவது என்பது முழு இஸ்ரயேலையும் உயர்த்திக் காட்டுவதாக உள்ளது. பூமியின் தேசங்களில் அதையும் ஒரு தேசமாக காட்டுகிறது. ஆகவே பாதுகாப்பை அளிக்கின்ற அரசியல் அதிகாரத்தையும், சிறப்பான உரிமையையும் யூதனுக்கு அளிக்கிறது. அது அவனை அவனுடைய தேசத்தின் குடிமகனாக ஆக்குவதுடன் பூமியின் மற்ற தேசங்களிடையில் உரிமையைக் கொடுக்கிறது.... தன்னுடைய புத்தகத்தில் ஆழ்ந்து இருக்கும் மனிதனுக்கு, தன்னுடைய லாப நஷ்ட கணக்குகளைப் பார்ப்பதில் மூழ்கி இருக்கும் வியாபாரிக்கு, சமுதாய கேளிக்கைகளில் ஆழமாக கால் ஊன்றி இருப்பவனுக்கு இது சாத்தியம் அற்றதாகத் தோன்றலாம். ஆனால் அரசிய-ன் எதிர்கால விளைவுகளைக் கூர்ந்து பார்க்கக் கூடிய



மனிதனுக்கு, மத்தியானத்தில் உள்ள சூரியனைப் போன்று வெகு பிரகாசமாகத் தெரிகிறது.

“அரசியல் பொது சுயாட்சி உரிமை கிடைத்தாயிற்று என்றாலும், உலகம் முழுவதும் சிதறிக்கிடக்கும் யூதர்கள் ஒரே நேரத்தில் பாலஸ்தீனாவுக்கு திரண்டு வரமாட்டார்கள். ஆசியாவில் 300,000 யூதர்களும் ஆப்பிரிக்காவில் 400,000 யூதர்களும், ஐரோப்பாவில் 5,000,000 யூதர்களும் இருக்கிறார்கள். இங்கேயிருந்துதான் பாலஸ்தீனாவில் தங்களது வாழ்க்கையை திரும்பப் பெற்றுக் கொள்ளும்படியாக யூதர்கள் புறப்பட்டு வருவார்கள். அமெரிக்காவில் பிறந்த யூதன் நிச்சயமாகவே ஒரு அமெரிக்கனாகத்தான் இருப்பான். அவன் எப்பொழுதாவது பரிசுத்த பூமிக்கு வந்தால் அது பிரயாணத்திற்காகவும் சந்தோஷத்திற்காகவும் இருக்கும். மேலும் தன்னுடைய தீரமான இனம் பிறந்த முக்கியமான இடம் பிரபலமாக இருப்பதைக் காண வருவான்.

“பூகோள ரீதியில் பார்க்கும் போது பாலஸ்தீனா சிறிய நாடாக இருப்பதால், அது உலகத்தின் நாடுகள் மீது அரசிய-ல், அறிவாற்ற-ல், நடத்தையில் அதிக செல்வாக்கு பிரயோகிக்க இயலாது என்று கூறலாம். ஆனால் நாங்கள் பதில் கூறுகிறோம். பழங்காலங்களில் கிரேக்க தேசம் ஒரு பலம் பொருந்திய நாடாக இருந்தது. மேலும் தற்காலத்தில் சிறிய தீவாக இருக்கிற இங்கிலாந்து ஒரு பலமுள்ள நாடாக இருக்கிறது. பூகோள ரீதியில் பார்க்கும் போது அவைகள் எல்லாம் என்ன? அதன் அறிவு, நிர்வாகத் திறமை, தேசிய உள்ளுணர்வு ஆகியவை தேசங்களைப் பெரிதாக்குகின்றன, தேசத்தின் விஸ்தாரத்தினால் அல்ல. இஸ்ரயேலை தேசங்களுக்குள் பிரபலமானதாக ஆக்குவது அதன் அறிவாற்றல், தேசத்தை நடத்திச் செல்லும் விதம் ஆகியவை தான்.”

யூத கிரானிக்கல் என்ற பத்திரிக்கை கூறுகிறதாவது :

“முன்னேற்றம் தடுக்க இயலாத ஒன்று. இப்படியாக ஜனங்கள் பெரும் அளவில் திரும்பி வருவதை நாம் கை கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்க இயலாது. யூதர்களாகிய நமக்கு இரண்டாயிரம் வருடங்களாக நாம் கடந்து சென்ற உபத்திரவத்தின் காலங்கள் முடிவடைவது, நம்முடைய பிதாக்களின் தேசத்தை

அடையும் போது மாத்திரமே. அந்த விஷயம் நிறைவடைவதாக காணப்படும் போது அந்த நம்பிக்கை முடிந்து போக வேண்டுமா? இல்லையென்றால், அப்படியாக திரும்பி வருவது என்பது மனித ஒத்துழைப்பு இல்லாமல் இரகசியமாகத் தான் நடைபெறும் என எதிர்பார்க்க வேண்டுமா? தேவன் தம்முடைய சித்தத்தை மனிதர்கள் சித்தத்தின் மூலமாக செயல்படுத்துகிறார். இந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேற வேண்டுமானால் அது மனித சித்தத்தின் மூலம், செய-ன் மூலம் நிறைவேற வேண்டும். பாலஸ்தீனாவில் ஒரு சில யூத குடியேற்றங்களை அமர்த்துவது என்கிற நடைமுறை திட்டத்திற்கு இது பெரிய விஷயமாக தென்படலாம். ஆனால் இந்த மாதிரியான சின்ன ஆரம்பங்களில் இருந்துதான் பெரிய விஷயங்கள் தோன்றுகின்றன. ஆகவே ஒரு சிறிய எண்ணிக்கையில் யூதர்கள் பரிசுத்த பூமிக்கு வந்திருப்பது, யூத சரித்திரமும், யூத வாஞ்சைகளும் இது வரைக்கும் காட்டியபடி, அதிகமான எண்ணிக்கையில் யூதர்கள் வருவது சாத்தியமானது, நடைமுறையில் நிறைவேறக்கூடியது என்பதை மனதிற்குள் நிச்சயமாக கொண்டு வரும்."

உலகத்தில் பிரபலமான மற்றவர்கள், யூதர்களைத் தவிர ஏனையோர், இஸ்ரயேல் அதிக முக்கியத்துவம் பெறுவதைக் காண்கிறார்கள். அது பற்றி மத்திய பிரிஸ்பிடேரியன் (Central Presbyterian) கூறுவதைக் கவனியுங்கள்:

"இருந்த இடம் தெரியாமல் போகாதபடி, யூத மக்கள் அதிக பலத்தைக் காட்டுகிறார்கள். அவர்களை அழித்து விடவோ, அல்லது விழுங்கி விடவோ முடியாது. அவர்கள் நாடு விட்டு நாடு செல்கிறார்கள். ஆனால், செல்லும் இடங்களிலெல்லாம் அவர்கள் உயர்ந்த நிலைக்கு வந்து விடுகிறார்கள். அவர்கள் ஜெர்மனி மற்றும் ஹங்கேரியில் நிலம் வாங்குகிறார்கள். ரஷியாவில் பணக்காரர்கள் ஆகிவிடுகின்றனர்; லண்டன், பாரிஸ் மற்றும் ஐரோப்பிய வியாபார மையங்களில் பெரும் வங்கியாளர்களாக இருக்கிறார்கள். கடந்த பத்து வருடங்களில் ரோத்சைல்டு என்கிற ஸ்தாபனத்தார் இங்கிலாந்து, ஆஸ்திரியா, புரூஷியா, பிரான்ஸ், ரஷ்யா, பிரேசில் போன்ற தேசங்களுக்கு கடனுதவி வழங்கினார்கள். அதன் தொகை 100,000,000 பவுண்டு ஆகும்.



இங்கிலாந்து தேசத்தின் பிரபு ஷேப்ட்ஸ்பெரி என்பவர் பின்வருமாறு கூறினார்:

"இப்பொழுது முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் இந்த அற்புதமான ஜனங்களைக் குறித்து பெரும் அளவில் பொறாமை இருக்கிறது. எங்கேயெல்லாம் யூதர்கள் இருக்கிறார்களோ, அங்கேயெல்லாம் அவர்கள் உபத்திரவப்படுத்தப்படும்படி பிரசத்தி பெற்றவர்களாகவோ அல்லது எல்லா துறைகளிலும் முன்னணியில் இருப்பவர்களாகவோ இருக்கிறார்கள். ஒரு முறை பெர்-ன் பட்டணத்தில் முக்கியஸ்தராக இருக்கும் ஒருவரிடம் பின்வரும் கேள்வி கேட்கப்பட்டது. பெர்-ன் பட்டணத்திலும், ஜெர்மனி முழுவதும் காணப்படும் யூதர்களுக்கு எதிரான உணர்வுகளுக்கான காரணத்தின் சரித்திரம் என்ன? அவர் சொன்னார் : 'நான் கூறுகிறேன். இந்த யூதர்கள், அவர்கள் வியாபாரத்தில் புகுந்தால் அதில் முதன்மையானவர்களாகி விடுகிறார்கள். பணம் கொடுக்கல் வாங்க-ல் அவர்களே நல்ல வங்கியாளர்களாகி விடுகின்றனர். சட்டத்துறையில் சென்றால் நல்ல வக்கீல்கள் ஆகி விடுகிறார்கள். இலக்கியத்திற்குள் சென்றால் எங்களை பின் தங்க வைத்து விடுகிறார்கள். அவர்கள் எந்த துறைக்குள் சென்றாலும், அவர்கள் புறஜாதியினரை ஒதுக்கி விடுகிறார்கள். இதை எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது என்றார்.'

"ரஷ்யா, போலந்து போன்ற தேசங்களில் யூதர்கள் துன்புறுத்தப்பட்டது, அவர்களுடைய மதம் அல்லது வேற்று நாட்டவர் என்பதினால் அல்ல. இதற்கும் துன்புறுத்தப்பட்டதற்கும் எந்த வித சம்பந்தமும் கிடையாது. யூதர்களின் ஸ்தானத்தில் எந்த ஜனம் இருந்தாலும் அவர்களை ரஷ்யர்கள் துன்புறுத்துவார்கள். யூதர்கள் ரஷ்யா தேசத்தில் உள்ள நிலம், கட்டடங்களை பெரிதளவில் தங்கள் வசத்தில் வைத்துள்ளார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மேலும் சாம்ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள குடியானவர்கள், வியாபாரிகள், பெரும் அளவில் அவர்களுக்குக் கடன்பட்டு இருக்கிறார்கள். ரஷ்யர்களுக்கு எப்பொழுதெல்லாம் தருணம் கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் யூதர்களைக் கொள்ளையடிக்காமல் விடுவதில்லை. யூதர்களை அழிப்பதினாலும்

அவர்கள் வசம் இருக்கும் பத்திரங்களை அழிப்பதினாலும் அவர்களிடம் உள்ள தங்களது அடமான பத்திரத்தி-ருந்து விடுதலை கிடைக்கிறது. தங்கள் சொத்துக்கள் அடமானத்தி-ருந்து விடுவிக்கப்பட உதவியாயிருப்பதினால் யூதர்களுக்கு எதிராக ரஷ்ய ஜனங்கள் எழும்பினார்கள்."

ஆங்கில பத்திரிகை ஒன்றில் இலக்கிய வட்டாரங்களில் பிரபலமான எழுத்தாளர் திரு. சார்லஸ் ரீட் என்பவர் எழுதிய கடிதத்தின் சாராம்சம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவர் கிறிஸ்துவுக்குள் மனமாற்றம் பெற்றது சில வருடங்களுக்கு முன்பாக நடந்தது:

"யூத தேசம் மந்தாரத்தில் இருப்பது போன்று காணப்பட்டாலும், கால காலமாக அவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கும், தங்களுடைய புராதன தேசத்தைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். தீர்க்கதரிசனங்கள் பகலைப் போன்று இரண்டு விதங்களில் தெளிவாக உள்ளன: யூதர்கள் பாலஸ்தீனாவைதிரும்ப எடுத்துக் கொள்ளுவதும் லெபனானில் இருந்து யூப்ரட்டீஸ் வரை ஆட்சி செய்வதும், ஏழைகளுக்கும் அதிகமாக உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கும் மனுக்குலத்திற்கும், பொதுவாக அனைத்து சிருஷ்டிகளுக்கும் அதிகமான முன்னேற்றத்தைக் கொண்டு வரும். நாளைக்கு சூரியன் உதயமாவது நிச்சயமாக இருப்பது போன்று, ஒரு மகிமையான சம்பவம் நடைபெறுவதை எதிர்பார்க்கலாம். ஒரே ஒரு வித்தியாசம் என்னவெனில், சூரியன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உதயமாகும். யூதர்கள் சிரியா தேசத்தை ஆக்கிரமித்து தங்களுடைய தேசத்தின் மகிமையை பெறுவது குறிப்பிட முடியாத ஒரு நாளில் நடைபெறும். சரியாக குறிப்பிட முடியாத காலம் என்கிற போது அது தூரத்தில்தான் இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. ஆகவே இப்படியாக ஒரு பெரிய சிலாக்கியம் நமக்கு கிடைக்கும் என்றால், அதற்கான முன் அடையாளங்களைக் குறித்து தங்களுடைய தாழ்மையான ஒத்துழைப்பை நல்குவது என்பது ஞானமுள்ள நிதானமுள்ள மனிதர்களின் கடமையாகும்.

"யூதர்கள் எங்கேயெல்லாம் அதிக எண்ணிக்கையில் காணப்படுகிறார்களோ அந்த தேசத்திலெல்லாம் அவர்கள் திடீரென்று



உபத்திரவப்படுத்தப்படுவது, ஒரு முன்னோடியான அடையாளமாக அல்லது அவர்கள் வசித்து வரும் ஐரோப்பிய நகரம் அவர்களுடைய தேசம் அல்ல என்று தேவனால் உணர்த்தப்படுவதாக இருக்கலாம். ரஷ்யாவில் இருந்தவர்கள் மட்டுமே பாலஸ்தீனாவில் குடியேற்றப் பகுதியாக ஆக்க முடியும். ஏனெனில் அங்கேயே 3 லட்சம் யூதர்கள் தங்கள் உயிருக்கும் உடமைகளுக்கும் ஆபத்து வரும் என்று நடுங்கிக் கொண்டு இருக்கிறார்கள். மற்ற யூதர்களும் அவர்களை பின் தொடர்வார்கள். சரித்திரம் என்பது பார்க்கும் கண்ணாடி போன்று நமக்கு பின்னால் இருக்கிறது. எவற்றை யூதர்கள் செய்திருக்கிறார்களோ, அதையே தான் யூதர்கள் செய்வார்கள். அவர்கள் மேதாவிகள். மேதாவிகள் இயற்கையினால் அடக்கி வைக்கப்படுகிறவர்கள் அல்ல, ஆனால் சுயசித்தத்தினால், பழக்க வழக்கத்தினால் அல்லது எதிர்பாராதவிதமாக அடக்கி வைக்கப்படுவார்கள். இவர்கள் முயற்சித்து தோல்வி அடைந்தார்கள் என்று ஏதேனும் உண்டா? அவர்கள் யுத்த வீரர்கள், எழுத்தாளர்கள், கட்டட வல்லுனர்கள், வியாபாரிகள், சட்டங்கள் வழங்கியோர், தோட்டக்காரர்கள் என எல்லாவற்றிலும் திறமையானவர்கள். இதில் சரித்திரம் திரும்பி எழுதப்படுகிறது.

"அவர்கள் யுத்தத்திலும், சமாதானத்திலும் வல்லுனர்களாக இருப்பார்கள். அவர்களுடைய சத்துருக்கள் அவர்களுக்கு முன்னால் பனியைப் போல் உருகிப் போவார்கள். ஆரம்பத்தில் அவர்களுக்கு வேறு எந்த தேசத்தில் இருந்து உதவி தேவைப்பட்டாலும் அதைக் கொடுக்கிற தேசம் ஆசீர்வதிக்கப்படும். அதை உபத்திரவப்படுத்துகிற தேசம் ஏதாவது ஒரு விதத்தில் உதாரணமாக ஆக்கப்படுவார்கள். ஆகவே சமீபத்தில் நடந்த கொடுமைகள் யூத தலைவர்களை, ரஷ்யாவில் இருக்கிற யூதர்களை பாலஸ்தீனாவில் குடியேற்றம் பண்ண வேண்டும் என்று நினைத்தால் நாம் உற்சாகத்துடன் கப்பலோ, மாலுமிகளோ, அல்லது பணமோ எதுவாக இருந்தாலும் இலவசமாக கொடுப்போம். அது எகிப்தில், பிரேஸி-ல் அல்லது பெரு நாட்டில் மூதலீடு செய்யும் பத்திரங்களைக் காட்டிலும் இந்த தேசத்தில் செய்யப்படுவது நல்ல முதலீடாக இருக்கும்."

தற்கால ஒரு யூத பழமொழி இப்படியாகக் கூறுகிறது : "ரயில்

எருசலேமை சென்றடையும் போது மேசியா வருகிறார்;" இது தீர்க்கதரிசிகள் நாகூம் (2:3-5) மற்றும் ஏசாயா (66:20) அடையாளமாக கூறியதற்கு ஒத்து இருக்கிறது. உண்மையிலே அந்த பழமொழி தவறாகப் போய்விடவில்லை. "அவர் தன்னை ஆயத்தம் பண்ணும் நாளில்"-மேசியாவின் பிரசன்ன காலத்தில் ரயில் எருசலேமை சென்றடையும். செய்தித்தாளில் உள்ள செய்தி இதைக் குறித்து கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

"க--யோ சொன்னது சரிதான்: உலகம் சுற்றுகிறது. எருசலேமி-ருந்து மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள யோப்பா வரை ஒரு ரயில் பாதை போடப்பட உள்ளது. இதற்கிடையில் உள்ள தூரம் 31 மைல்களாகும். யோப்பா என்பது யூதர்களின் தலைநகருக்கான பழங்கால துறைமுகமாகும். இந்த துறைமுகத்தில் தான் சாலமோன் கட்டிய தேவலாயத்தின் கேதுரு மரங்கள் வந்து இறங்கின. ஜோசப் நெபோன் என்கிற பெயருடைய ஒரு எருசலேம் நகரத்தைச் சேர்ந்த யூதன், ஓட்டமன் பிரதேசத்தை சேர்ந்தவன். இதற்கென சுல்தானிடம் இருந்து ஒரு அதிகாரப் பத்திரத்தை பெற்றுக் கொண்டார். இது 71 வருடங்களுக்கு செல்லுபடியாகும். கட்டுமான திட்டச்செலவு $ 250,000 ஆகும். இதன்பின் நாகரீகமானது பாலஸ்தீனாவில் பழக்கப்படுத்தப்படும். எருசலேமில் முதலாவது ரயில் என்ஜின் வரும்போது 19வது நூற்றாண்டு வந்துவிடும்."

பிட்ஸ்பர்க் டிஸ்பேட்ச் என்கிற பத்திரிக்கையில் வெளிவந்த கீழ்க்கண்ட கடிதம் பாலஸ்தீனாவில், விசேஷமாக எருசலேமில் காணப்படும் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

எருசலேம் ஜூலை 12, 1889

"எருசலேமில் உள்ள 40,000 பேரில் 30,000 பேர் யூதர்களாவார்கள். துருக்கி அரசாங்கம் காலம் காலமாக அவர்கள் பரிசுத்த பூமியில் 3 வாரங்களுக்கு மேல் தங்கியிருப்பதைத் தடை பண்ணியது. ஆனால் பிற தேச அரசாங்கங்களின் தலையீட்டால் தடைகளை தளர்த்தியுள்ளது. தற்போது யூதர்கள் நூற்றுக்கணக்கில் வருகிறார்கள். அவர்கள் வியாபாரம் அவர்களுடைய கையில் உள்ளது. அவர்களில் சிலர் வேதாகம தீர்க்கதரிசிகள் கூறியவாறு அவர்கள் தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்ற நாள் சமீபத்திருக்கிறது என்று



எண்ணுகிறார்கள். தெற்கு அரேபியாவில் உள்ள ஒரு கோத்திரத்தார், மிக ஆவலுள்ளவர்கள் பாலைவனப் பிரதேசத்தை விட்டு பாலஸ்தீனாவுக்கு திரும்பி வர வேண்டும் என ஒரு வெளிப்பாடு பெற்றுக் கொண்டதாக கூறுகிறார்கள். இந்த யூதர்கள் அரேபியாவிலுள்ள யேமனில் கடந்த 2500 வருடங்களாக ஜீவித்திருக்கிறார்கள். அவர்கள் காத் கோத்திரத்தார். அவர்கள் இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 700 வருடங்களுக்கு முன்னால் பாலஸ்தீனாவை விட்டு வெளியேறியவர்கள். அவர்களுடைய பூர்வீகத்தை நிரூபிக்கக் கூடிய அநேக முக்கியமான ஆவணங்களை அவர்களுடன் கொண்டு வருகிறார்கள். இப்பொழுது அவர்கள் எருசலேம் அருகில் விவசாயம் செய்து கொண்டு இருக்கிறார்கள். ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா தேசங்களில், யூதர்கள் உபத்திரவப்படுத்தப்படுவதால் அநேக யூதர்கள் இங்கே வந்து கொண்டு இருக்கிறார்கள். எருசலேமில் போலந்து, ஸ்பெயின் தேசத்தை சேர்ந்த யூதர்களும் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். யூதர்கள் பாலஸ்தீனாவில் தங்கியிருக்கிற காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எருசலேமில் அவர்கள் தங்கியிருப்பதில் உள்ள தடைகள் நீக்கப்பட்டு விட்டன. அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் முழு எருசலேமிலும் 32 யூத குடும்பங்கள் தான் இருந்தன. முழு பாலஸ்தீனாவிலும் எண்ணிக்கை 3000 ஆகத்தான் இருந்தது. இப்பொழுது பரிசுத்த பூமியில் 50,000 பேர் உள்ளனர். எருசலேமின் ஜனத்தொகையில் 3/4 பங்கு யூதர்களாவர்கள்.

"எவ்வளவு ஆவலான ஜனங்கள் அவர்கள்! உலகத்தின் எந்தப் பகுதியிலும் இல்லாதவாறு முந்தி இருந்த யூதர்களைப் போலவே இருக்கிறார்கள். உபத்திரவத்தினால் துரத்தப்பட்டு இங்கே வந்த யூதர்கள் கிட்டத்தட்ட எல்லோருமே உலகத்தின் பல்வேறு யூத சபைகளினால் தாங்கப்படுகிறார்கள்.

"எருசலேமில் பார்க்க வேண்டிய முக்கியமான இடம் யூதர்களின் புலம்புகிற இடமாகும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், சலொமோன் ஆலயம் இருந்த இடத்தில் உள்ள ஓமெர் பள்ளி வாச-ன் சுவர்களுக்கு வெளிப்புறத்தில் யூதர்களில் சில வகுப்பினர் கூடுகிறார்கள். அங்கே அவர்கள் தங்களுடைய தலைகளை சுவருக்கு

நேராக குனிய வைத்து, எருசலேமை இழந்ததற்காக வருத்தப்பட்டு புலம்பி, தேவன் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களுக்கு, தேசத்தை திருப்பித் தர வேண்டும் என ஜெபிக்கிறார்கள். இந்த பழக்க வழக்கம் மத்திய காலங்களில் இருந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நான் பார்த்த துக்ககரமான காட்சிகளில் இதுவும் ஒன்று. கடந்த வாரத்தில் நான் அங்கு சென்றிருந்தேன். ஒரு குறுகிய சந்தில் அநேக பரிதாபகரமான வீடுகள், தேய்ந்து போன கற்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான யூதர்கள் வெறும் கால்களினால் அதின் மேல் நடந்து சென்றதால் அவைகள் தேய்ந்து காணப்படுகின்றன. அங்கே ஐம்பது அடி அல்லது அதற்கு மேல் பளிங்கு கற்களால் கட்டப்பட்ட சுவர், அதில் நீண்ட வரிசையில் நீளமான ஆடைகளில் (கௌன்) மனிதர்களும், பெண்மணிகளும் தங்கள் தலைகளின் மேல் சால்வைகளை போட்ட வண்ணம் நின்று தலைகளைத் தாழ்த்தி ஜெபிப்பதும், அழுவதுமாக நின்று கொண்டிருந்தார்கள். ஆண்களில் அநேகருக்கு வெள்ளைத் தாடியும் நீண்ட வெள்ளை முடியும் இருந்தது. மற்றவர்கள் இளம் வயதினர். இவர்கள் உணர்ச்சியில் மூழ்கி கலங்கி இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். ஒவ்வொருவர் கையிலும் நன்கு உபயோகிக்கப்பட்டு இருந்த எபிரேய மொழி வேதாகமம் இருந்தது. அவர்களிடம் சிறிது இடைவெளி விட்டு ஒரு விதமான தொடர்ச்சியான உச்சரிப்பு இருந்தது. ஒரு நரைத்த வயதானவர் தலைவரைப் போன்று நடந்து கொண்டார். மற்றவர்கள் பின்பற்றினர். அவர்கள் உச்சரித்தது ஒரு வினோதமான மொழியில் இருந்தது. அது பின்வருமாறு மொழி பெயர்க்கப்பட்டது:

தலைவர் - இந்த பாழாய் கிடக்கிற அரண்மனைக்காக
பதில் - நாங்கள் தனிமையில் உட்கார்ந்து துக்கிக்கின்றோம்.

தலைவர் - அழிக்கப்பட்ட சுவர்களுக்காக
பதில் - நாங்கள் தனிமையில் உட்கார்ந்து துக்கிக்கின்றோம்.

தலைவர் - எங்களுடைய மகிமை எங்களை விட்டு போனதற்காக
பதில் - நாங்கள் தனிமையில் உட்கார்ந்து துக்கிக்கின்றோம்.

தலைவர் - மரித்துப்போன எங்கள் மகா மனிதர்களுக்காக
பதில் - நாங்கள் தனிமையில் உட்கார்ந்து துக்கிக்கின்றோம்.



தலைவர் - இடறுண்ட எங்கள் ஆசாரியர்களுக்காக
பதில் - நாங்கள் தனிமையில் உட்கார்ந்து துக்கிக்கின்றோம்.

தலைவர் - அவரை இகழ்ந்த எங்கள் இராஜாக்களுக்காக
பதில் - நாங்கள் தனிமையில் உட்கார்ந்து துக்கிக்கின்றோம்.

"இந்த தொடர் உச்சரிப்பின் உணர்வை, செவியில் கேட்காமல் அறிய இயலாது. ஒரு காலத்தில் சாலொமோனின் ஆலயம் இருந்த இடத்தி-ருந்து பிரிக்கின்ற சுவரின் கற்களை புலம்புகின்ற ஆண்களும் பெண்களும் முத்தமிடுகிறார்கள். இப்பொழுதும் கூட ஒரு யூதனுக்கு பூமியிலே மிகவும் பரிசுத்த ஸ்தலமாக இது இருக்கிறது. அவர்கள் வெளிப்படுத்தும் உண்மையான உணர்வுகள், வாராவாரம், வருடா வருடம் அவர்கள் இங்கே வருவதால் அவர்கள் காட்டும் விசுவாசம், மிகவும் ஆச்சரியமூட்டுவதாக இருக்கிறது. மிகவும் விநோதமான பட்டணங்களில் ஒன்றாக இது இருப்பதோடு, இந்தக் காட்சியும் விநோதமாக உள்ளது.

"பாலஸ்தீனாவின் பல்வேறு பகுதிகளில் எட்டு விவசாய குடியிருப்புகள் உண்டு. ஒன்று யோப்பா பட்டணத்திற்கு அருகாமையில் உள்ளது. பள்ளிக் கூடங்களில் ஒன்றில் 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் உண்டு. பண்ணைக்குச் சொந்தமாக 28,000 ஏக்கர் நிலம் உண்டு. அது சாரோனின் சம பூமியில் இருக்கிறது. இதில் பெ-ஸ்தியர்கள் வசித்தார்கள். அதில் பல்லாயிரக்கணக்கான திராட்சை தோட்டம் மற்றும் ஒ-வ மரங்கள் உண்டு. துருக்கியர்கள் நிலம் யூதர்களுக்கு விற்கப்படுவதை விரும்புவதில்லை. ஆனால் யூதர்களோ வியாபாரிகளாக இருப்பதைப் போன்று நல்ல விவசாயிகளாகவும் உள்ளனர். எருசலேமில் மலை அடிவாரங்கள் சமப்படுத்தப்பட்டு இருக்கும் நிலையைப் பார்க்கும் போது, அவர்களை வெற்றி கொண்டவர்கள், பரிசுத்த பூமியில் சாகுபடி செய்ததை விட இவர்கள் நன்றாக சாகுபடி செய்வது தெரிகிறது. எருசலேம் பட்டணத்திற்கு வெளியில் உள்ள அதிக பட்சமான நிலம் ஒன்று யூதர்களிடம் அல்லது அவர்களுடைய தரும ஸ்தாபனங்கள் கையில் உள்ளது. திரு. பெகார், ரோத்சைல்டு பள்ளியின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் கூறுகிறார். இப்பொழுது நாங்கள் எருசலேம் ஓட்டலை வாங்கி விட்டோம். இது அவர்களுடைய பள்ளிக்

கூடத்தோடு இணைக்கப்படும் என்கிறார். நியூ ஓர்லீனஸ் என்ற இடத்தில் உள்ள ஒரு இஸ்ரேயல் ஐசுவரியவான் விட்டுச் சென்ற பணத்தி-ருந்த சர் மோசஸ் டி மோன்டிபோர் என்பவர் பெத்லகேமுக்கும், எருசலேமுக்கும் இடையில் உள்ள சாலையில் யூதர்களுக்காக நல்ல வீடுகளைக் கட்டினார், அநேக யூத மருத்துமனைகளும் உண்டு.

“யூதர்கள் வெகு சீக்கிரத்தில் பாலஸ்தீனாவை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று உறுதியாக நம்புகிறவர்களுக்குள் 15 பேர்கள் உண்டு. அவர்கள் எருசலேமின் சுவர்கள் மீதே கட்டப்பட்ட ஒரு அருமையான வீட்டில் வசிக்கிறார்கள். அவர்கள் “அமெரிக்கர்கள்” என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் யூதர்கள் அல்ல. அவர்கள் அமெரிக்க தேசத்தின் பல பகுதிகளில் இருந்து விசேஷமாக சிகாகோவில் இருந்து வந்தவர்கள். அவர்கள் தேவன் உலகத்தை சீர்படுத்தும் வேலை எருசலேமில் தொடங்கி நடைபெறும் என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறுதலுக்காக காத்திருக்கிறார்கள். (முதலாவதாக சுவிசேஷ சபை முற்றுப் பெற வேண்டும் என்பதை அவர்கள் அறியவில்லை.)

“இருந்தாலும் எருசலேம் முன்னேறிக் கொண்டு இருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதன் வீதிகள் நன்றாக சீரமைக்கப்பட்டுள்ளன. பட்டணத்தின் சுகாதார நிலை அதிகமாக முன்னேற்றமடைந்துள்ளது. சுவருக்கு வெளிப்பக்கத்தில் உள்ள எருசலேம் உள்ளேயிருக்கிற பட்டணம் போன்று பெரியதாக உள்ளது. நிலத்தின் மதிப்பு மிகவும் அதிகமாகி விட்டதால், பரிசுத்த நகரத்தில் இப்பொழுது நிலம் வாங்குவதும் கடினமாகிவிட்டது. யோப்பா சாலையில் வெளிப்புற வாசலுக்கு அப்பால் நிலத்தின் விலை ஒரு வருட காலத்திற்குள் பல நூறு மடங்கு விகிதாசாரத்தில் உயர்ந்து விட்டது. ஒரு தர்ம ஸ்தாபனத்திற்கு சொந்தமாக ஒரு துண்டு நிலம் $500க்கு வாங்கப்பட்டது. இப்பொழுது அதன் மதிப்பு $ 8,000. மேலும், அந்த தொகைக்கு இப்பொழுது வாங்க இயலாது. இந்த இடத்தி-ருந்து கடற்கரை வரை ஒரு தந்தி கம்பி செல்கிறது. யோப்பாவில் இருந்து எருசலேம் வரை ஒரு ரயில் தண்டவாளம் போடுவதற்காக ஒரு ரயில் சாலை கம்பெனி அழைக்கப்பட்டுள்ளது.



சரித்திரத்திலேயே முதன்முறையாக எருசலேமில் காவலர்கள் இருக்கிறார்கள், சட்டம் ஒழுங்கு நியூயார்க்கில் உள்ளது போன்று இருக்கிறது.”

ஒரு அமெரிக்க யூதன், யூதர்களின் எருசலேமின் புலம்ப-ன் சுவருக்கு சென்ற பின் தனது அனுபவத்தை ஜூலை 89ன் தி ஹீப்ரு கிறிஸ்டியன் (The Hebrew Christian) என்கிற பத்திரிக்கையில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

“யூதர்களோடு அதிக மணி நேரம் செலவழித்த பின்னர், என்னுடைய வயதான நண்பர், அவர் ரஷ்யாவில் கோவ்னோ( Kovno) என்கிற இடத்தில் உள்ள ஒரு ரபி, என்னிடம் அழுகையின் சுவரண்டை சென்று அவரோடு கூட எருசலேமின் பாழ்க்கடிப்பிற்காக துக்கித்து, இஸ்ரயேல் தனது முந்திய மகிமைக்கு திருப்பப்பட வேண்டும் என ஜெபிக்கும்படி வர இயலுமா என்று கேட்டார். நான் வருகிறேன் என்று கூறியதோடு, யூதா ஆண்டவரிடம் திரும்பும் நாளை துரிதப்படுத்த ஜெபிக்கிறேன் என்றேன். வெள்ளிக்கிழமை மத்தியானமாக இருந்த படியாலும் அநேக யூதர்கள் அந்த பழங்காலத்து ஆலயத்தில் ஜெபிக்க கூடினார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து கொண்டேன். உண்மையிலேயே அது மறக்க முடியாத ஒரு காட்சிதான். இங்கே பல்வேறு தேசங்களைச் சேர்ந்த யூதர்கள் விசேஷித்த கிழக்கத்திய உடையிலும் சிலர் தங்களுடைய ஜெப ஆடையிலும் காணப்பட்டார்கள். அவர்கள் எவ்வளவு சத்தமாக வாசிக்க முடியுமோ அவ்வளவு சத்தமாக 22வது சங்கீதத்தை வாசித்துக் கொண்டு இருந்தார்கள். பெண்கள் ‘என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?’ என்று மிகவும் உருக்கத்துடன் அழுது கொண்டிருந்தனர். மேலும் அவர்கள், ‘எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்? என் தேவனே, நான் பக-லே கூப்பிடுகிறேன், உத்தரவு கொடீர்; இரவிலே கூப்பிடுகின்றேன், எனக்கு அமைத-ல்லை’ என்று கூறி அழுகிறார்கள். ஆண்களும் இவைகளைத் திரும்ப, திரும்ப கூறி அழுது ஜெபிக்கிறார்கள். அவர்களில் அநேகர் அந்தக் கற்களின் மேல் தங்கள் உதடுகளை வைத்து முத்தமிட்டார்கள். நான் அவர்களுடைய பரிதாபமான

உணர்வு பூர்வமான ஜெபத்தைக் கேட்ட போது தல்மூத்தில் ரபி சொன்னதை நினைவு கூர்ந்தேன். 'தேவாலயம் பாழாக்கப்பட்ட பின்னர், ஜெபத்தின் கதவுகள் மூடப்பட்டுள்ளன, கண்ணீரின் வாசல் மாத்திரம் திறந்து இருக்கிறது.' ரபி துக்ககரமான குர-ல் கூறினார் :

*" 'அரண்மனை பாழாய் கிடக்கிறது போன்றவைகளை;*

"எருசலேமுக்காக அழுவது என்பது மிகவும் பக்தியுள்ள யூதர்களின் வீடுகளிலேயும் கேட்க முடிகிறது. அவர்கள் நடு இராத்திரியில் எழும்பி, சாம்பலை தங்கள் தலையின் மேல் போட்டுக் கொண்டு, ஜெப ஆடை அணிந்து தரையில் முகம் குப்புற விழுந்து, துக்கம் தோய்ந்த குர-ல் திரும்பத் திரும்ப பின்வருமாறு கூறுகிறார்கள்:

*" 'அழுகையின் குரல் ராமாவின் பழைய கோபுரத்தி-ருந்து,*
*சீயோனின் பரிசுத்த பர்வதத்தி-ருந்து ஒரு கூக்குரல்;*
*ஐயோ என்னுடைய கீரிடம், ராணிக்குரிய கௌரவம்,*
*இளமையின் கனத்தை நான் இன்னும் நினைவு கூறுகிறேன்.*
*இருள்தான் எனக்கு தனிமையான இடம்*
*பூர்வ கால சிங்காசனத்தை ஒளியால் நிரப்பியது யார்?*

*" 'நான் யேகோவாவின் சௌந்தர்யமான மணவாட்டி என்று*
*பெயரிடப்பட்டேன்;*
*ஆனால் இப்பொழுது கைவிடப்பட்டு, தள்ளப்பட்டு, ஆறுதல்*
*படுத்தமுடியாதபடி இருக்கிறேன்,*
*அவருடைய கடுமையான கோபமும், பழிவாங்குத-லும் தங்கி;*
*என் மகிழ்ச்சி பறந்து விட்டது, என் இருதயம் பாழாகிவிட்டது.*
*வாருங்கள், என் குமாரத்திகளே, தடுமாற்றம் அடையும் என் பக்கத்தில்,*
*ஏனெனில் என் துக்கங்கள் குறையும்படி ஒருவரும் அருகில் வருவதில்லை.*

*ஒப்பிடப்பட முடியாதபடி முக்கிய ஸ்தானத்தி-ருந்து தள்ளப்பட்டு,*
*பெருமைக்கு ஆளானேன், தேவையற்ற மாயைக்கு ஆளானேன்*
*என்னுடைய இருதயமும் மூர்க்கத்தனமாக அடித்துக் கொண்டிருக்கிறது*
*நம்பிக்கையற்ற துன்பம் எனும் கூண்டில் அடிக்கிறது,*
*யூதா மனம் துக்கித்து கண்ணீர் விட்டு புலம்புகிறாள்,*
*சிறைபட்ட துக்கிக்கின்ற ஒரு விதவையாக.*

*" 'சோ-மாவில் பிரகாசமுள்ள ராணியாக இருந்தேன்,*



*தேவனின் சிகரத்தில் ஒரு பொன்னான மேகமாக நான் இருந்தேன்;*
*ஆனால் இப்பொது நம்பிக்கையற்றவர்களால் பாழாக்கப்பட்டு*
*எதிர்பார்ப்போடு இருக்கிறேன்;*
*வனாந்தரத்தில் செல்லும் எளிமையான யாத்திரிகனாக வேறு*
*எவரும் இருக்க முடியாது,*
*என் மார்பி-ருந்து எல்லா குழந்தைகளும் பிடுங்கப்பட்டு விட்டன,*
*முதியோர்கள் கொலையுண்டார்கள், பூமி இரத்தத்தால் நிறைந்தது.*

*" 'என்னுடைய மோசமான நிலைமையை ஒரு வரும்*
*இருதயத்திற்கு எடுத்துக் கொள்ள இயலாதா?*
*வழிந்தோடும் கண்ணீரைக் கட்டுப்படுத்த ஒருவரும் இல்லையா?*
*ஆத்துமாவை உருவக்குத்தும் வ-யை அமைதிப்படுத்த யாரும்*
*இல்லையா?*

*புறஜாதியார் துணியமாட்டார்கள் என்று ஒருவரும் சொல்லக்கூடாது*
*அவரை என் புருஷன் என்று அழைப்பதா? நஞ்சுண்ட அம்பே?*
*கொடூரமான இகழ்ச்சிகளை நான் தாங்கிக் கொள்ள வேண்டும்!*

*" 'இரக்கங்களின் பிதாவே வாரும், கிருபையோடு திரும்பி வாரும்*
*சீயோனின் வாசஸ்தலம் மறுபடியும் அழகுறுவதாக,*
*இஸ்ரயே-ன் கண், உம்முடைய வாசஸ்தலம் சீர்திருத்தப்பட்டதை*
*காண்பதாக ; அல்லேலுயா என்று சொல்லுவோம்;*
*மீட்கப்பட்ட ஜனத்தின் பாடல் சத்தம்*
*அந்த நித்திய ஆலயத்தின் எழும்பும் சுவர்களை வாழ்த்தட்டும்! '*

"இதன்பிறகு அநேக சங்கீதங்கள் வாசிக்கப்பட்டு, ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகின்றன. தரையை விட்டு எழும்பும் போது அவர்கள் கூறுகிறார்கள். 'தூசியை உதறிக்கொள், எருசலேமே எழும்பி உட்கார்; சிறைபிடிக்கப்பட்ட சீயோன் குமாரத்தியே உன் கழுத்தின் கட்டுகளில் இருந்து விடுவித்துக் கொள் என்கிறார்கள்.'

"இந்த வேளைகளில் ஒரு சிறப்பான ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. அது சந்தேகத்திற்கு இடமின்றி ஏசா. 7:14ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

*" 'கிருபையான ஆண்டவரே, உம்முடைய ஜனங்களின்*
*ஜெபத்தைக் கேளும்;*
*விசனப்படுகிற இஸ்ரயேலுக்கு அவனுடைய ஆவலை நிறைவேற்றும்.*

ஆபிரகாமின் கேடகமே, எங்கள் மீட்பரை அனுப்பும்,
அவருடைய மகிமையான நாமத்தை இம்மானுயேல்
என்று அழையுங்கள்.' "

அதிகமான உபத்திரவங்கள் தான் ஏழ்மையான யூதர்களை பாலஸ்தீனாவுக்கு விரட்டிற்று. அவர்கள் வராவிட்டால் தற்கா-க நாகரீகம் அங்கு வந்திருக்காது. மிகவும் பணம் படைத்த யூதர்கள் வந்திருக்கமாட்டார்கள். இதன்பிறகு சுய ஆசையினால் தான் வருவார்கள். மற்ற தேசங்களில் அதிகமான, பொதுவான உபத்திரவ காலம் வரும்போது, சொத்துக்கள் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் பாதுகாப்பற்றதாக இருக்கும் போது வருவார்கள். அப்பொழுது பாலஸ்தீனா பொதுவுடைமையி-ருந்தும், அராஜகத்தில் இருந்தும் வெகு தூரத்தில் இருப்பதால் பணம் படைத்த யூதர்களுக்கு அது ஒரு பாதுகாப்பான இடமாக தோன்றும். ஆனால் பல்வேறு முனைகளில் இருந்து தற்போதைய முன்னேற்றத்தை பார்க்கும் போது, வருகின்ற 15 வருடங்களில் பாலஸ்தீனாவில் அதிக முன்னேற்றம் ஏற்படுவதைக் காணக்கூடும்.

## இஸ்ரயே-ன் குருட்டாட்டம் நீங்குகிறது

மாம்சீக இஸ்ரயேலரைப் பற்றிய தீர்க்கதரிசனத்தின் இன்னொரு அம்சம் நிறைவேறுவதை நாம் இப்பொழுது காணத் தொடங்கலாம். அப்போஸ்தலர் பவுல் கூறினார்: "புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்." அதாவது புறஜாதியாரி-ருந்து தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இஸ்ரயே-ன் மீதமுள்ளவர்களோடு சேர்ந்து இராஜ்யத்தின் ஆவிக்குரிய மக்களாக இருப்பார்கள். அவர்கள், எல்லோரும் இஸ்ரயேலர் ஒரு ஜாதியினராக தள்ளப்பட்ட போது இழந்த அந்த உயர்வான நன்மைக்குள் வருவார்கள். சரியாக கூற வேண்டுமென்றால் யாக்கோபு என்று அழைக்கப்படும் மாம்சமான இஸ்ரயேலரின் குருட்டாட்டம் ஆவிக்குரிய இஸ்ரயேல் தெரிந்து கொள்ளப்படுதல் முடியும் வரை நீங்காது. ஆனால் திட்டவட்டமாக நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளபடி (ரோம. 11:26) அவர்கள் குருட்டாட்டத்தில் இருந்தும் தப்பான எண்ணத்தி-ருந்தும் விடுதலை



அல்லது மீட்பு, சீயோனி-ருந்து அதாவது மகிமையான சபை அல்லது இராஜ்யத்தி-ருந்து வரும். ஆனால் சீயோனின் இராஜ்யம், நம்முடைய இராஜா ஆட்சி செய்ய தம்முடைய மாபெரும் அதிகாரத்தை எடுத்துக் கொண்ட போது, ஓர் அளவிற்கு இது 1878ல் தொடங்கியது. பாத அங்கத்தினர் இன்னமும் அதிகமாக வளர்ச்சி பெறாமலும், மகிமை அடையாமலும் இருந்தாலும் அது தொடங்கியது, ஆகவே தேவனுடைய நன்மை யாக்கோபிற்கு சீயோன் மூலம் சரியானபடி அங்குதான் தொடங்கியது. இருந்தாலும் கிறிஸ்துவின் சரீரமான சபையின் 'பாத' அங்கத்தினர் மகிமை அடையும் வரை, மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு தேவ கிருபை முழு அளவில் சென்று அடையாது. யாக்கோபி-ருந்து புறஜாதியினருக்கு வெளிச்சம் சென்றதற்கு 1881ம் ஆண்டு கால இணையாக இருப்பதால், வெகு காலமாக குருடர்களாக இருந்த யூதர்களுக்கு மறுபடியும் விசேஷமான வெளிச்சத்தை கொடுக்கும் ஆரம்ப காலமாக இது இருக்கிறது. இஸ்ரயேலரில் மீந்தவர்களைத் தவிர மற்ற அனைவரும் குருட்டாட்டத்தில் இருந்தது போல, பேர் கிறிஸ்தவ சபை முழுவதும் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு சிலரைத் தவிர, குருட்டாட்டத்தில் தடுமாறிக் கொண்டிருக்கிறது. இங்கே அப்போஸ்தலரின் வார்த்தை எவ்வளவு சரியானதாகவும், வலுவாகவும் உள்ளது என்பதைக் காண வேண்டும். "மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளைத் தேவன் தப்ப விடாதிருக்க, உன்னையும் தப்ப விடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு." (ரோம. 11: 20,21)

ஆனால், இஸ்ரயேல் உண்மையிலேயே உண்மையான மேசியாவையும் அவருடைய இராஜ்யத்தையும் அறிந்து கொள்வது என்பது உயிர்ப்பிக்கப்பட்ட முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் மூலமாக வரும் என்பதில் சந்தேகமில்லை. இவர்கள் பூரணமாக பழைய நிலைக்கு கொண்டு வரப்படுதல் என்பது "சரீரமான சபை" மகிமையடைந்த பின்னர் கிறிஸ்து செய்கிற முதல் வேலையாக இருக்கும். ஆனால் அதற்கு முன்னால் அவர்களுடைய குருட்டாட்டம் கடந்து போகத் தொடங்கும். விசேஷமாக ரஷ்ய யூதர்கள் மத்தியில் ஒரு பெரிய அசைவு, கிறிஸ்துவுக்கு நேராக வந்திருக்கிறது.

இந்த வழி முறையில் பார்க்கும் போது காலத்தின் அடையாளங்கள் மிக ஆச்சரியமானவைகளாக உள்ளன. தெற்கு ரஷ்யாவில் ஒரு மத இயக்கம் ஏற்பட்டதின் விளைவாக, ஆயிரக்கணக்கான மக்கள் இயேசு கிறிஸ்துதான் அவர்கள் வெகு காலமாக எதிர்பார்த்திருந்த மேசியா என்று உணர்ந்து கொள்ளுவதோடு, அவரை நிராகரித்ததும் சிலுவையில் அறைந்ததும் ஒட்டு மொத்தத்தில் ஒரு தேச அளவிலான பாவம் என்று உணருகிறார்கள். எனினும் இது கிறிஸ்தவ சுவிசேஷ ஊழியர்களால் ஏற்பட்டதல்ல, அது ஒரு தனிப்பட்ட விதத்தில் ஏற்பட்ட இயக்கமாகும். யூதர்கள் இருந்த இடத்தில் மாத்திரம் இது ஏற்பட்டது, இந்த இயக்கத்திற்கு காரணமாயிருந்தவரின் பெயர் திரு. ஜோசப் ராபினோவிட்ச் என்பதாகும். இவர் இதற்கு முன்னர் ஒரு வியாபாரியாகவும், பின்னர் ஒரு வக்கீலாகவும் இருந்ததோடு ஜனங்களின் மத்தியில் மிக உயர்வாக மதிக்கப்பட்டவராக இருந்தார். திரு, ராபினோவிட்ச் ஒரு ரபி அல்ல, அது போன்று இந்த இயக்கத்தில் முன்னணியில் இருந்தவர்கள் எவரும் எந்த தனிப்பட்ட பிரிவு அல்லது கோட்பாடுகளைக் கொண்ட மதத்தலைவர்கள் அல்ல. இந்த இயக்கத்தைப் பற்றி ஹார்பர்ஸ் வீக்- மற்றும் மற்றைய குறிப்புகளில் இருந்து பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

“அதன் முன்னேற்றம் அவ்வளவு அதிகமாக இருந்துள்ளபடியால், இது ஒரு பரீட்சார்த்தமானது அல்ல, இது நிலைத்து நிற்கக்கூடியது என்று இனிமேல் தைரியமாக சொல்லலாம். அது குறிப்பிடத்தகுந்த ஒரு ஜீவாதார காரியத்தை வெளிப்படுத்தியுள்ளது. அது தேவையற்ற அவசரம், ஆபத்தான தீவிரம் ஆகியவற்றை காட்டாமல், தடங்க-ன்றி, நல்ல விதத்தில், நல்ல முன் நோக்குடன் வளர்ச்சியுற்று இருக்கிறது. அதை ரஷ்ய அதிகாரிகள் ரிலீஜியோ -சிட்டா என்று அறிவித்து, அதற்கு சட்ட பூர்வமான அந்தஸ்தையும் உரிமைகளையும் வழங்கியுள்ளனர். இது ரஷ்ய சக்கரவர்த்தியின் 116 மில்-யன் பிரஜைகளின் இருதயங்களையும், மனதையும் பிரித்துக் காட்டுகின்றதாகவும் தேசீய, சமுதாய, மத ஆர்வங்களை அது விசித்திரமானதாக, பலதரப்பட்ட விதத்தில், ஆணித்தரமாக உள்ளபடியே காட்டுவதாகவும் உள்ளது.

“இந்த புதிய ஐக்கியத்தினால் ஏற்பட்டுள்ள விசுவாசமானது



இன்னும் விசித்திரமாக உள்ளது. ஏனெனில், அச்சமயத்தில் இருந்த கிறிஸ்தவ சபைகளோடு எந்தவித அங்க இணைப்பையும் ஏற்படுத்த விரும்பாமல் அப்போஸ்தலர் காலத்தி-ருந்து, சரித்திரம் மாதிரி வளர்ந்த உபதேசங்களை அடியோடு தவிர்க்க வேண்டும் என்றும், நம்முடைய காலங்களில் உள்ள வைதீக சபைகளில் உபதேச முறைகளில் விசேஷ கவனம் செலுத்தாமல், புதிய ஏற்பாட்டில் இருந்தே தங்களுடைய போதனைகளை எடுக்க வேண்டும் என்றும் கவனமாக இருந்தார்கள். அது அப்போஸ்தலர் காலங்களில் இருந்த யூத-கிறிஸ்தவ சபைகளைப் போன்று இருப்பதாக கூறப்பட்டது.

“திரு.ராபினோவிட்ச் பல வருடங்களுக்கு முன்னதாகவே, கிழக்கத்திய யூதர்கள் மத்தியில் ஒரு சீர்திருத்தவாதி, அதை அதிகமாக விரும்புகிறவர் என்று அறிமுகமாகி இருந்தார். அவர் குணத்தில் அதிக துடு துடுப்பானவர், தன்னை பயனுள்ளதாக்கிக் கொள்ளுவதில் ஆர்வமுள்ளவர். மேலும் அரசிய-ல், சமுதாயத்தில் ஒழுக்க நெறிகளில் முன்னேறுபடியான ஆர்வம் கொண்டவர். தன்னுடைய சகோதரர்களை காட்டிலும் கல்வியிலும் முயற்சிப்பதிலும் அதிகமாக சிறந்து காணப்பட்டார். தன்னால் இயன்றவரை அவர்களுக்கு அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தந்தார். ஆனால் ரஷ்யா, ருமேனியா மற்றும் பக்கத்தில் உள்ள நாடுகளில் துர்பாக்கியசா-களான இஸ்ரயேலர்களுக்கு எதிராக கடும் உபத்திரவம் வந்த போது, அதி-ருந்து அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. மேற்கத்திய நாடுகளின் தத்துவ எண்ணங்களை அவர் அறிந்துகொண்டு அவருடைய ஜனங்களும் அதை ஏற்றுக் கொண்டால், அது அவர்களுக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்தும், அவர்களுக்கு நல்ல குறிக்கோள்களை, முடிவுகளைத் தரும் என்று எண்ணினார். ஆனால் அவர் சீக்கிரத்திலேயே கண்டு கொண்டது என்னவெனில், அந்த ஜனங்கள் பல நூற்றாண்டுகளாக உபத்திரவப்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டபடியால் தங்களுடைய பாரம்பரிய கருத்துக்களை விட்டு, அதற்கு மாறான கருத்துக்களை ஏற்றுக் கொள்வது கடினம் என்பதை உணர்ந்து கொண்டார். மேலும், அவர் மறுபடியும் அவர் லாபத்திற்கென அவர்கள் கொண்டிருந்த பேராசையை அகற்ற முயற்சித்தார்.

தன்னுடைய வழக்கமான மத சடங்குகளுக்கு அடுத்தபடியாக அவனுடைய மனதை அடக்கி ஆளுகின்ற தாழ்வான விஷயமாக இது கிழக்கத்திய யூதனிடம் காணப்பட்டது. ஆனால் அவர்களுக்கென்று வீட்டிலும், பரிசுத்த பூமியிலும் விவசாய குடியிருப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்கிற அவருடைய யோசனை எடுபடவில்லை. அவர் பாலஸ்தீனாவில் இருந்த போது அவருக்கு இருந்த மனநிலை என்னவெனில், பழைய ஏற்பாட்டோடு புதிய ஏற்பாட்டிற்கு உள்ள தொடர்பை தனியாக ஆராய்ந்த பின்பு, இஸ்ரயேல் ஒரு ராஜ்யமாக தவறு செய்து விட்டது. இயேசு கிறிஸ்துவை நிராகரித்ததால் அதற்கு கொடுக்கப்பட்ட சரித்திர பூர்வமான வேலைக்கு உண்மையுள்ளவர்களாக அவர்கள் இருக்கவில்லை என்பதாகும்.

கிறிஸ்துவைக் குறித்த இந்த குற்ற உணர்வு, பழைய நிறைவேறின தீர்க்கதரிசனங்கள் மற்றும் இஸ்ரயேல் ஒரு தேசமாக கொண்டுள்ள கருத்துக்களும், நோக்கங்களும் தான் இந்த இயக்கத்தின் முக்கிய சிந்தனையாக இருந்தது. தாழ்மையான நசரேயனால் வழங்கப்பட்ட கருத்துக்கள் மாத்திரமே, ஜனங்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கவும், அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களாக வேறுபடுத்தப்பட்டதின் நோக்கத்தை நிறைவேற்றவும் முடியும் என்று அறிந்து கொள்ளப்பட்டது. இஸ்ரயேல் இயல்பான முறையில், சரித்திர பூர்வமாக முன்னேறுவதற்கு கிடைத்த நல்ல தருணம் இது என்று எண்ணப்படுகிறது. கடந்த ஆயிரத்து எண்ணூறு வருடங்களுக்கு முன்னால் ஒரு தேசமாக மறுத்தவைகளும், எல்லா கிறிஸ்தவர்களாலும் திரு. ராபினோவிட்ச் மற்றும் அவரைப் பின்பற்றுகிறவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளுமான கொள்கைகளும் கருத்துக்களுமே இஸ்ரயேல், சரித்திர பூர்வமாக முன்னேறுவதற்கு ஒரே வழி என்று ஏற்றுக் கொள்கிறார்கள். இந்த பிளவை சரி பண்ணவும், தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை முதலாவது தெரிந்து கொண்ட தவறான பாதையி-ருந்து மாற்றவும், கிஸ்ச்சி னெவ் (Kishchi nev) சீர்த்திருத்தவாதியின் நோக்கம் ஏற்றதாக உள்ளது. 1880ம் ஆண்டு ரபிகளின் போதனை முறைகளை முற்றிலுமாக மாற்றி அமைப்பதற்கான ஒரு திட்டத்தை அவர் வெளியிட்டார். மேலும் அவர் தெற்கு ரஷ்யாவில் உள்ள யூதர்களிடையே



விவசாயத்தை பெருக்கும்படி அதிக ஆர்வத்துடன் செயல்பட்டார். 1882ம் ஆண்டு ஏற்பட்ட உபத்திரவத்தின் போது, அவருடைய ஜனங்கள் பாலஸ்தீனாவுக்கு திரும்ப வேண்டும் என்பதை ஊக்கமுடன் வ-யுறுத்தினார். அந்தக் காலத்தில் மதத்தைப் பற்றிய எண்ணத்தில் அவர் ஒரு தீர்மானம் எடுத்தார். கிறிஸ்தவ சுவிசேஷ மையங்களினால் இது ஏற்பட்டதல்ல, சாதாரணமாக சொல்லர்த்தமான வார்த்தையின்படியே அவர் மாற்றம் அடைந்தார் என்றும் கிடையாது. இந்த மாற்றம் படிப்படியாக வந்ததாகும். ஆழமாக இதைக் குறித்து சிந்தித்த பிறகே யூதர்களிடையே கிறிஸ்தவ சபைகளை உண்டு பண்ணும் முடிவை எடுத்தார். பாலஸ்தீனாவில் இருந்து அவர் திரும்பிய பின்னர் அவர் எடுத்த தீர்மானம் என்னவெனில்: 'பரிசுத்த பூமிக்குரிய திறவுகோல் நம்முடைய சகோதரனாகிய இயேசுவினிடத்தில் இருக்கிறது,' 'இயேசு நம்முடைய சகோதரர்' என்கிற வார்த்தையிலே தான் அவருடைய மதத்தைப் பற்றிய எண்ணத்தின் விதையே புதைந்திருப்பதைக் காணலாம். அவருடைய வேலை வெற்றிகரமாக இருந்தது. அநேகர் அவருடைய போதனைகளை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்."

திரு. ராபினோவிட்ச் கிறிஸ்துவுக்கு வெளியரங்கமான விசுவாசியாக இருக்க வேண்டும், வைராக்கியமுள்ளவராக இருக்க வேண்டும் என்று நினைக்க தொடங்கின போது, கிறிஸ்தவர்கள் மத்தியில் அநேக சபை பாகுபாடுகள் இருப்பதைக் கண்டு அவைகளில் ஒன்றில் சேருவதைக் குறித்து கலக்கமுற்றார், தயக்கம் காட்டினார். அவர் சொல்லுகிறார்: "கானானைச் சென்று அடைவதற்கு யோர்தனை கடந்தாக வேண்டும் என்பது போன்று ஆவிக்குரியவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் இளைப்பாறுதலுக்கும் கிறிஸ்து தான் வழியாகும்." ஆண்டவருடைய இராப்போஜனத்தைக் குறித்து அவர் சொல்லுகிறார் : இந்த பஸ்கா இராப்போஜனத்தைத் தவிர புதிய உடன்படிக்கையின் அங்கத்தினர் வேறு எதையும் ஆசாரிப்பதில்லை. அவர்கள் (நம்மைப் போன்று) மற்ற வேளைகளில் கொண்டாடுவது என்பதை அவர்கள் இன்னும் உணரவில்லை என்கிறார். அவர் மேலும் கூறுகிறார் : "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருடைய சீஷர்களிடம் அவருடைய

உயிர்த்தெழுதலை நினைவு கூறும்படி சொல்லாமல் அவரை நினைவு கூறும்படி கூறினார்." அவரோ அல்லது அவரைப் பின்பற்றுபவர்களோ ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக கைக்கொள்ளாமல், யூதர்களின் ஓய்வு நாளைக் கைக்கொள்ளுகிறார்கள். விருத்த சேதனம் இன்னும் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் இரட்சிப்புக்கு அது அவசியம் என்று கருதப்படவில்லை.

ஒரு லூத்ரன் போதகர், திரு.ராபினோ விட்ச் தங்களது ஊழிய ஸ்தாபனத்தால், யூதர்களுக்கு ஊழியம் செய்பவராக நியமிக்கப் படவேண்டும் என்று லண்டனில் ஒரு குழுவினரிடம் சொன்னதாக கூறப்படுகிறது. அந்த நேரத்தில் அவர் ஞானஸ்தானம் எடுத்திருக்கவில்லை என்ற காரணத்தினால், அந்த குழுவினர் அதை ஒத்துக் கொள்ளவில்லை. அதற்குப்பிறகு, பெர்-ன் பட்டணத்தில் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார். ஆனால் லூத்ரன், ஆங்கி-கன் சபையில் அல்ல, சாதாரணமாக கிறிஸ்துவின் சபையில் எடுத்துக் கொண்டார். இந்தக் காரியங்களைக் குறித்தும், அதன் சட்டதிட்டங்கள் உபதேசங்கள் குறித்தும் ரஷ்யா மற்றும் ருமேனியாவில் உள்ள யூதர்கள் கேட்டு எழுதிய கடிதங்கள் அவரிடம் உண்டு. அவர்கள் அதில் சேரும்படியாக, அல்லது இதைப் போன்றே இன்னொன்றை ஆரம்பிக்கும் நோக்கத்துடன் கடிதம் எழுதினார்கள்.

"திரு. ராபினோவிட்ச் மிகவும் சாதுவானவர், பணிவானவர், அன்புள்ளவர், அவர் கண்ணீரைக் கண்டவுடன் உடனடியாக செயல்படுபவர். அவர் தன்னை எந்த சபைப் பிரிவையும் சார்ந்தவர் என்று காட்டிக் கொள்ளாமல் தன்னுடைய கிறிஸ்தவத்தை புதிய ஏற்பாட்டி-ருந்து எடுத்துக் கொள்கிறார். அவர் தேவனுடைய முழு வார்த்தையையும், தொடர்ந்து ஜெபத்துடன் படிப்பதால், பரிசுத்த ஆவி கற்றுக் கொடுப்பதினால், பழைய வழக்கங்கள் உபதேசங்களை விட்டு புதிதானவைகளுக்குள் வருகிறார்."

ஜெர்மனியில் உள்ள யூத இயக்கங்களின் தலைவர் பேராசிரியர் பிரான்ஸ் டெ-ட்ஸ்ச் (Prof. Franz Delitzsch) என்பவர். இவர் -யிப்சிக் (Leipzig)கைச் சேர்ந்தவர்; மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் சாட் ஆப் ஹோப்னங் (Saat auf Hoffnung) என்ற பத்திரிக்கையின் ஆசிரியர்; இவர் புதிய யூத மத முன்னேற்றத்தைக் குறித்து எழுபத்தி ஐந்து பக்கங்கள் கொண்ட துண்டு பிரதியை வெளியிட்டார். அதன் பெரும்பான்மைப் பகுதியில், எபிரேய, ஜெர்மன் மொழியில் இதைக் குறித்து மொழியாக்கம் செய்யப்பட்டதின் மூல தஸ்தாவேஜூகள் அடங்கியிருந்தது. இவைகளில் பதிமூன்று கட்டுரைகள் இருந்தன. புதிய ஏற்பாட்டின் யூத தேச சபையின் விசுவாச அறிக்கை; நசரேயனாகிய இயேசுவாகிய மேசியாவின் மேல் வைக்கப்படும் விசுவாசத்தைக் குறித்த விரிவான விபரங்கள், அதாவது சபையார் உணருகிறபடி; நசரேயனாகிய இயேசுவை மேசியா என நம்புகிற இஸ்ரயேலருக்கு பழைய ஏற்பாட்டைப் பற்றிய ஒரு விளக்க உரை கிடைத்தது. கடைசியாக ஆண்டவரின் இராப்போஜனத்தை அனுசரிக்கும் முறைமை. கிறிஸ்துவை விசுவாசிக்கிற யூதர்களுக்கு பிரைடுமேன் என்கிற போதகரின் ஒரு அறிக்கை பின்னர் சேர்க்கப்படுகின்றது. மேலும் இந்த இயக்கத்தின் மாநாடு கிஸ்ச்சினேவ் என்கிற இடத்தில் நடந்த போது ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த சிறிய துண்டுப்பிரதி, இந்த புதிய இயக்கத்தைக் குறித்து தெரிந்து கொள்ளுவதற்கு வேண்டிய விஷயங்கள் அனைத்தையும் கொண்டுள்ளதாக இருக்கிறது.



இந்த கட்டுரைகள் புதிய விசுவாசத்தின் அடிப்படையிலானது என்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இது ரஷ்யாவில் உள்ள யூதர்களின் மிக மோசமான நிலையை எடுத்துரைப்பதுடன், யூதர்கள் தங்களுடைய நிலைமையை மேம்படுத்திக் கொள்ள எடுத்த முயற்சிகள் எல்லாம் வீணாகி விட்டன என்று கூறுவதுடன், கீழ்கண்டவற்றையும் கூறுகிறது:

"ஒரு ஆவிக்குரிய புதுப்பித்தலுக்கு, ஆழமான, உள்ளான, நெறியுள்ள புதுப்பித்தல் அவசியம். நம்முடைய பொய்யான தேவனாக இருக்கிற பண ஆசையை விட்டு விட்டு நம்முடைய இருதயங்களில் சத்தியத்தை நேசிக்கவும், 'பொல்லாப்பைக் குறித்த பயத்திற்கும்' இடம் அளிக்கவும் வேண்டும். எனினும் இதற்கு ஒரு தலைவர் தேவை. அவர் யாராக இருக்கலாம்? இஸ்ரயே-ல்

ஒருவரும் கிடையாது. 'ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய எல்லா தகுதிகளையும் உடையவர்-இஸ்ரயேலை நேசிக்கக் கூடியவர், தம்முடைய வாழ்க்கையையே ப-யாகச் செலுத்துபவர், சுத்தமுள்ளவர், மனிதனின் இயல்புகளைக் குறித்து ஆழமான அறிவு உள்ளவர், அவருடைய ஜனங்களின் பாவத்தையும் பொல்லாப்பையும் வெளிப்படுத்துத-ல் ஆர்வம் கொண்டவர்- நம்முடைய ஜனங்களின் சரித்திரத்தை எல்லா புத்தகங்களிலும் கவனமாக ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒரே ஒரு மனிதனில் தான் இவ்வாறு இருக்கக் காணப்பட்டது, அவர் தான் 'நசரேயனாகிய இயேசு.' அவருடைய நாட்களில் இஸ்ரயே-ன் ஞானவான்களால் அவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை. 'ஆனால் நாங்கள் முழு நிச்சயத்தோடும் கூற முடியும், இயேசு மாத்திரமே தம்முடைய சகோதரர்களின் நலனுக்காக பாடுபட்டவர். ஆகவே நாம் நம்முடைய சகோதரனாகிய இயேசுவின் நாமத்தைப் பரிசுத்தப் படுத்த வேண்டும்.' 'நாம் சுவிசேஷ புஸ்தகங்களை நம்முடைய வீட்டிற்குள் ஒரு ஆசீர்வாதமாக கொண்டு வரவேண்டும். அதை நம்முடைய ஞானவான்களால் நமக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதங்களோடு நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும்."

அவர்கள் விசுவாசத்தைக் குறித்து எழுதியவைகளில் மிக முக்கியமானதை நாங்கள் கீழே குறிப்பிட்டுள்ளோம் :

"அறிய முடியாத தேவனுடைய ஞானத்தினால் நம்முடைய பிதாக்களின் இருதயம் கடினப்பட்டிருந்தது. ஆண்டவர் அவர்களை அயர்ந்த நித்திரையின் மூலம் தண்டித்தார். ஆகவே அவர்கள் அவரை எதிர்த்து இந்நாள் வரை அவருக்கெதிராக பாவம் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அவிசுவாசத்தினால் மற்ற ஜாதிகளை வைராக்கியம் உள்ளவர்களாக்கினார்கள். இப்படியாக அவர்கள் சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்கள் மூலம் வந்ததைக் கேள்விபட்டு, நம்முடைய இராஜாவாகிய தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தவர்கள் மூலமாய் மனுக்குலத்திற்கு நன்மை வந்தது. (ஏசா. 52:7) இதனால் அந்த சுவிசேஷகர்கள் இஸ்ரயே-ன் ஐக்கியத்தி-ருந்து தள்ளப்பட்டார்கள். இருந்தாலும் இதன்



விளைவாக, தேவனுடைய கிறிஸ்துவுக்கு நாம் செய்த பாவத்தினால், உலகமானது கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தால் அதிகமாக பலனடைந்தது. மேலும் தேவனுக்குள் நிறைவாக இருந்த ஜாதிகள் தேவனுடைய இராஜ்யத்திற்குள் நுழைந்து விட்டன. (அவைகள் இங்கே தெளிவாக இல்லை. இது "சிறுமந்தை" ஜாதிகளி-ருந்து அழைக்கப்பட்டு இருப்பவர்களின் முழு தொகையாகும். பவுல் ரோம. 11:25ல் குறிப்பிடுகிறபடி கிறிஸ்தவம் என்று தவறாக அழைக்கப்பட்ட நிறைவு பெற்ற ஜாதியினர் அல்ல) இப்பொழுதும் கூட நாம் நிறைவு பெறும் காலம் வந்துவிட்டது. நாமும் ஆபிரகாமின் வித்தாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசத்தால் ஆசீர்வதிக்கப்பட இருக்கிறோம். நம்முடைய முற்பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுவின் தேவன் நம்மேல் பரிதாபப்பட்டு, எடுத்து போடப்பட்ட கிளைகளை மறுபடியும் நாட்டி, நம்முடைய பரிசுத்த வேராகிய இயேசுவுக்குள் கொண்டுவருவார். இப்படியாக முழு இஸ்ரயேலும் நித்திய இரட்சிப்புக்குள் வரும். நம்முடைய பரிசுத்த நகரமான எருசலேம் மறுபடியும் கட்டியெழுப்பப்படும். தாவீதின் சிங்காசனமும் நித்திய, நித்திய காலத்திற்கென ஸ்தாபிக்கப்படும்."

ஜனவரி 1885, 2ம் தேதி திரு, ராபினோவிட்ச் லண்டனில் உள்ள ஒரு கனவானுக்கு எழுதிய கடிதத்தின் சாராம்சம் பின்வறுமாறு:

"உங்களுடைய அருமையான கடிதம் கிடைக்கப் பெற்றது. மாம்சத்தில் வந்த மேசியாவான ஆண்டவரான இயேசுவின் சகோதரர்கள் மேல் உங்கள் இருதயம் கொண்டுள்ள அதிகமான அன்பை உணரும் போது, இஸ்ரயேலர்களின் விலையேறப்பெற்ற இரட்சிப்பு உங்கள் கண்களில் காணப்படுவதைக் குறித்து வாசித்த போது என் உள்ளம் களிகூர்ந்தது.

"நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் தேவனாகிய யேகோவாவின் முன் தாழ விழுகிறேன். என்னுடைய இருதயத்தின் ஆழத்தி-ருந்து, இஸ்ரவே-ன் இனிமையான பாடகரின் வார்த்தைகள் புறப்பட்டு வருகின்றன. (சங்.35) 'எனக்கு நேரிட்ட ஆபத்துக்காகச் சந்தோஷிக்கிறவர்கள் ஏகமாய் வெட்கி

நாணுவார்களாக. என் நீதி விளங்க விரும்புகிறவர்கள் கெம்பீரித்து மகிழ்ந்து, தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்போதும் சொல்லக்கடவர்கள்' ஆமென்.

"இயேசுவே மேசியா என்று நம்புகின்ற தெற்கு ரஷ்யாவில் உள்ள அந்த இஸ்ரயே-ன் பிள்ளைகளைக் குறித்து என்னுடைய கருத்துக்களையும், அறிக்கைகளையும் இத்துடன் அனுப்புகிறேன். மேசியாவாக இருக்கும் இயேசுவின் (சரீரப்பிரகாரமான சகோதரர்) மேல் உள்ள எங்கள் விசுவாசத்தின் ஆரம்பத்தைக் குறித்து அவர்களிடம் இருந்து நீங்கள் கற்றுக் கொள்ளலாம். நம்முடைய இருதயங்களின் ஆழமான வாஞ்சையும் ஏக்கமுமாக அவர் இருக்கிறார். நம்முடைய இரட்சகரான இயேசுவின் சகோதரர்களும், நம்முடைய ஆங்கிலேய நண்பர்களும், ஆண்டவர் தம்முடைய கரத்தை மற்ற ஜாதியினரின் கண்களுக்கு காட்டிய பின்னர், நம்முடைய ஆண்டவரின் இரட்சிப்பை உலகத்தினர் அனைவரும் கண்டிருக்கிறார்கள் என்பதை அந்த துண்டு பிரதியில் இருந்து கண்டு கொள்ளலாம். எல்லா அசுத்தமானவர்களும் இஸ்ரயே-ன் மத்தியில் இருந்து கடந்து செல்லும் வேளை இப்போது வந்து விட்டது. கர்த்தரின் பாத்திரங்களை சுமக்கிறவர்கள் சுத்திகரிக்கப்படுவார்கள்.

"ஆண்டவருடைய இரட்சிப்பு உலகத்திற்கு புறம்பேயும், உள்ளேயும் அவரசப்பட்டு வர முடியாது என்பது உண்மைதான். (யோசுவா 6:1) இல்லையெனில் துரிதமாகவும் நடக்க முடியாது. ஆனால் இப்பொழுது யேகோவா உலகத்தின் இராஜாவாகவும், முன்னோடியாகவும் இருக்கிறவர், இஸ்ரயேல் ஜனங்களுக்கு முன்பாக கடந்து சென்றிருக்கிறார். இஸ்ரயேலரின் தேவனாக இருப்பவர் பின்னர் இருந்து காப்பவராகவும் வருவார். இஸ்ரயே-ல் புறக்கணிக்கப்பட்டவர்களை கூட்டிச் சேர்க்கவும் வருவார். என்னுடைய நேரத்தையும் பெயரையும், வணங்கா கழுத்துள்ள, சந்தோஷமில்லாது இருக்கிற என்னுடைய ஜாதி மக்களின் நலனுக்காக அர்ப்பணிக்கிறேன். அவர்களுக்கு பித்தளை போன்ற நெற்றியுடன் தேவனுடைய பெலத்தினால் நம்முடைய பிதாக்கள் பெற்றுக்கொண்ட சுவிசேஷத்தின் வாக்குத்தத்தத்தை அதாவது தேவன்



தாவீதின் சந்ததியில் இருந்து, நசரேயனாகிய இயேசுவை இஸ்ரவே-ன் இரட்சகராக எழுப்பினார் என்பதை அறிவிக்கிறேன்.

"தேவனுடைய ஆழமான உன்னதமான, ஐசுவரியம், ஞானம் என்பவைகள் மூலமாக நம்முடைய பிதாக்கள், வாக்குத்தத்தத்திற்குரியவர்கள், இயேசுவுக்கு எதிர்த்து நின்றார்கள். இதன்மூலம் கிருபையானது எந்த வாக்குத்தத்தத்தின் மூலமாகவும் அல்ல, மேசியாவின் சுவிசேஷத்தின் கிருபை மூலமாக தேவனை அறியாத புறஜாதியினர் மேல் பொழியப்பட ஏதுவாயிற்று. இப்பொழுது புறஜாதியினரின் நிறைவு வந்தபின்னர், இஸ்ரயே-ன் புத்திரர்களாகிய நமக்கு இஸ்ரயே-ன் தேவனிடத்தில், அவர்களின் இராஜாவினிடத்தில் அவருடைய பிள்ளைகளாக இருக்கும்படி திரும்பி வருவதற்கான வேளை வந்துவிட்டது. நாம் அளவில்லாது இருக்கும் யாக்கோபின் சுதந்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் ஆபிரகாமின் பிள்ளைகளாகவும், மோசேயின் சீடர்களாகவும், நித்தியத்தில் தாவீதின் வீட்டு ஊழியர்களாகவும் இருக்கிறபடியால் நாம் அந்த சுதந்திரத்திற்கு உரியவர்களாக இருக்கிறோம். இப்படியாக நம்முடைய நிறைவு (அநேக இஸ்ரயேலர்கள் கிறிஸ்துவண்டை வருவது) நம்முடைய ஐசுவரியமும், ஜாதிகளின் ஐசுவரியமுமாக இருக்கும். இது பரிசுத்த பவுல் கூறுகின்ற யேகோவாவின் வார்த்தையின்படி இஸ்ரயே-ன் முதற்பேறானவர்களாக இருக்கும். அதே வேளையில் புறஜாதியினர் திரும்பும் போது, அவர்களுக்கு மிக முன்னதாக திரும்பி வருபவர்களாக இருப்போம்.

"என்னுடைய சகோதரர்கள் மத்தியில், பெரிய கூட்டங்களில் நான் அவர்களை மிகவும் கடிந்து கொள்கிறேன். உங்கள் மேல் உள்ள தூசியை தட்டி விட்டு, எழும்பி, என்னுடைய ஜனமே, உன்னுடைய அழகான ஆடைகளைத் தரித்துக் கொள். ஈசாயின் சந்ததியாகிய நசரேயனாகிய இயேசு மூலம் கர்த்தர் உனக்கு பெரிய காரியங்களை செய்துள்ளார். ஓ, இஸ்ரயேலே, பூமியின் ஜாதிகள் மேல் அவர் பெரிய காரியங்களை செய்யும்படியாக இதை செய்தார். அவர்கள் நம்முடைய பிதாக்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்கள்.

"ஆயிரக்கணக்கான மக்கள் எனக்கு உற்சாகமாக செவி

கொடுப்பதற்காக நான் தேவனுக்கு மிகவும் நன்றி சொல்லுகிறேன். அநேகர், இஸ்ரயே-ன் பாத்திரமான (தகுதியான) புத்திரர்கள் அந்த வேளைக்காக, தேவனின் கிருபையுள்ள காலத்திற்காக காத்து இருக்கிறார்கள். நான் உங்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன், ரஷ்யாவில் உள்ள நமது சகோதரர்களான இரட்சிப்பை தேடுகிறவர்களின் நாமத்தில் கேட்டுக் கொள்கிறேன், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நண்பர்களாக இருக்கிறவர்கள் எங்கு இருந்தாலும் அமைதியாக இருக்கக்கூடாது. ஆனால், இம்மானுயேல் நம்மோடு இருக்கும் காலம் வரை, யேகோவா அவரை நமக்கு காட்டும் வரை, நம்மோடு தங்கியிருப்பதை காட்டும் வரை அவர்கள் ஆலோசனை கூறுவதோடு தைரியமாகவும் பேச வேண்டும்.

"இந்த தாழ்மையான வார்த்தைகள் தூரத்தி-ருந்து எழுதப்பட்டவைகளாகும்."

ஜோசப் ராபினோ விட்ச்

இந்த குறிப்பிடத்தக்க எழுச்சியுடன், சைபீரியாவிலும் இதே போன்ற இயக்கம் வளர்ந்து கொண்டிருக்கிறது. இதைக் குறித்ததான ஒரு செய்தியை பிரிஸ்பிடேரியன் விட்னஸ் என்கிற பத்திரிகையில் கீழ்க்கண்டவாறு காணலாம்:

"திரு. ராபினோ விட்ச்சின் சுவிசேஷ இயக்கத்தைப் போன்றே அங்கு ஒன்று இருக்கிறதாக பனி நிறைந்த சைபீரியாவில் இருந்து செய்தி வருகிறது. அதன் தலைவர் பெயர் ஜேக்கப் சின்மேன் என்பதாகும். அவர் போலந்து நாட்டைச் சேர்ந்த ஒரு யூதனாவார். அவர் இருபது வருடங்களுக்கு முன்னதாக, தானாகவே யோசித்து தாவீதின் குமாரனான நசரேயனாகிய இயேசு தான் உண்மையான இரட்சகர் என்கிற முடிவுக்கு வந்தவர். மிக வைராக்கியம் உள்ளவர். யூத வேதத்தை முறைப்படி கற்றவர். அவரை சைபீரியாவுக்கு அனுப்பி வைத்தனர். அங்கே அவரோடு நாடு கடத்தப்பட்டிருந்தவர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 15 வருடங்கள் பாடுபட்டார். அது கிட்டத்தட்ட பயனற்றதாக இருந்தது. அவர் வியாபாரம் செய்த இடமான டோம்ஸ்க் (Tomsk) என்கிற இடத்தில் அவர் கேட்காமலேயே ஒரு தபால் அவருக்கு வந்திருந்தது.



அது ராபினோ விட்சின் துண்டு பிரதியாகும். அவர் உடனடியாகத் தொடர்பு கொண்டார். அங்கே அவர் "வனாந்திரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தம்" என்கிற துண்டுப் பிரதி மூலமாக தன்னுடைய கருத்துக்களைப் பரப்புவதில் மும்முரமாக இருந்தார். டெ-ட்ஸ் என்பவர் புதிய ஏற்பாட்டை எபிரேய மொழியில் வெளியிட்டிருந்தார். அது சைபீரிய யூதர்களால் அதிக ஆர்வத்துடன் படித்து ஆராயப்படுகிறது. அதன் 36,000 பிரதிகள், முழுமையாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது."

இப்படியாக தேவன் இஸ்ரயேலுக்கு நன்மையை திருப்பி கொடுப்பதற்கான குறிப்பிடத்தக்க அறிகுறிகளை காண்கிறோம். அவர் அவர்களை மற்ற தேசங்களி-ருந்து அதிக உபத்திரவத்தினிமித்தம் வெளியேறச் செய்தார். அவர்களை வரவேற்கும்படி பாலஸ்தீனாவை திறந்தார். அவர்கள் முன்னேற்றம் அடையும்படி, உதவி பெறும்படி அவர்களுக்கு நன்மை வரும்படி, அனுக்கிரகம் பண்ண விசேஷமான முயற்சிகள் கைக்கொள்ளப்படும்படி செய்தார். அது மாத்திரமல்ல, அவர்களுடைய குருட்டாட்டத்தி-ருந்து திரும்பும்படி இந்த முக்கியமான இயக்கங்களும் உதவியாக இருக்கும்படி செய்தார். இது எல்லாம் தேவனுடைய கிரியை என்பது எவ்வளவு தெளிவாக இருக்கிறது. மாம்சமான இஸ்ரயேலர் திரும்பி வரப்பண்ணும் வேலையிலும் அது மாத்திரமல்ல ஆவிக்குரிய இஸ்ரயேல் சேர்க்கப்பட வேண்டிய பெரிய அறுப்பின் வேலையிலும், தள்ளப்பட்ட பேர்சபையின் வேலை முற்றிலுமாக கவனிக்கப்படாமல் உள்ளது. இப்பொழுது பேர் கிறிஸ்தவ சபையின் பல்வேறு ஸ்தாபனங்களின் முன்னேற்றம் அடைந்து வரும் பெரிய வேலைகள், இந்த இரண்டிலும் அமைதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. யூத அறுவடையின் போது செய்தது போலவே, தேவன் அவருடைய நேரத்தில் அவருடைய வழியில், புதிதான எளிமையான, ஆடம்பரமில்லாத பாத்திரங்கள் மூலமாக தம்முடைய வேலை சுபீட்சம் அடையவும், முன்னேறிச் செல்லும்படியாகவும் செய்கிறார்.

இப்பொழுது நாம் கேட்கிறோம், இது எதைக் காட்டுகிறது?

இந்த அற்புதமான, ஆச்சரியமான வேலையின் பலன் எதுவாக இருக்கும்? இந்த அறுப்பு காலத்தில் குறிப்பிடத்தக்க ஆரம்பங்கள் மற்றும் துரிதமாக முன்னேற்றம் காணப்படுவதின் பலன் எதுவாக இருக்கக் கூடும்? அப்போஸ்தலனாகிய பவுல் இஸ்ரயேல் கூட்டிச் சேர்க்கப்படுவது என்பது மனுக்குலத்தின் ஒரு கூடி வருதலை அல்லது இளைப்பாறுதலைக் குறிக்கிறது என்று தெளிவாகக் கூறுகிறார். அவர்களுடைய குறைவு புறஜாதியாருக்கு ஐசுவரியமாக இருக்க, அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாக இருக்கும். (அவர்கள் தேவ கிருபையை பெற்றுக் கொள்ளும் தருணம்) மாம்சமான இஸ்ரயேல் தள்ளப்பட்டதினித்தம் புறஜாதியினர் பரம அழைப்பு என்னும் நன்மையைப் பெற்றனர். மேலும் அதை ஏற்றுக் கொள்ளுகின்ற சிலர் அதைப் பெற்றுக் கொள்ளுவதற்கு தடையாக இருப்பவைகளை மேற்கொண்டு, கிறிஸ்துவுடன் சுதந்தரராக இருக்கும்படி உயர்த்தப்படுவார்கள். அவர்கள் மாபெரும் மீட்பரின் சரீரமான சபையாக இருப்பார்கள். இது தான் மாம்சமான இஸ்ரயேல் தள்ளப்பட்டதற்கும் அதனால் உண்டான விளைவுகளுக்கும் காரணமாக இருக்கிறது. ஆனால் அவர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவதும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் மறுபடியுமாக ஸ்தாபிக்கப்படுவதும் தேவனுடைய பெரிய திட்டத்தின் இன்னொரு படியைக் குறிக்கிறது. அது கூறுவது என்னவெனில், திருப்பிக் கொடுக்கப்படுவது என்பது "முதலாவதாக யூதர்களுக்கு" உண்டாகும். ஆனால் இறுதியில் "பூமியில் உள்ள வம்சங்களுக்கெல்லாம்" தொடங்க இருக்கிறது. பூமியின் பெரிய யூபி- கொண்டு வரப்பட இருக்கிறது. அது தேவனுடைய ஒழுங்கின்படி யூதரில் தொடங்குகிறது. ஆகவே, இப்பொழுது தெளிவாகிறது என்னவெனில், சகோதரர்கள் ராபினோவிட்ச், சின்மேன் மற்றும் அவர்களுடைய உடன்வேலையாட்கள், தேவனுடைய ஆதிகாலத்து மக்களை, இளைப்பாறுதலுக்கு தகுதிபடுத்தும் தேவனின் பாத்திரங்களாக இருந்தார்கள். ஆண்டவரோடு இணைந்து அறுப்பின் வேலையில் சுவிசேஷ யுகத்தின் போது தெரிந்துகொள்ளப்பட்ட ஆவிக்குரிய வகுப்பினரை சேர்ப்பது நமக்கு கிடைத்த சிலாக்கியமாக இருக்கிறது. தலையும் சரீரமும் இணைந்த மாபெரும் மீட்பரானவர் மூலமாக



இளைப்பாறுதல் நிறைவேற்றப்படும் போது அவர் அதிகாரத்திற்கு உயர்த்தப்பட்டார், இராஜ்யம் வந்துவிட்டது, மாம்சீக இஸ்ரயேல் முதல் பலனாக இருக்கக்கூடிய இளைப்பாறுதல் என்பது ஏற்கெனவே தொடங்கிவிட்டது, இஸ்ரயேலர் முழுமையாக தங்களுடைய தேசத்திற்கும், திவ்ய நன்மைக்கும் வந்து விட்டார்கள் என்பதைக் குறிக்கும். "அவர்களைத் தள்ளி விடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கீகரித்துக் கொள்ளுதல் என்னமாயிராது; மரித்தோரி-ருந்து ஜீவன் உண்டானது போ-ருக்குமல்லவோ?" வாக்குத்தத்தின்படி இளைப்பாறுதல் ஜீவிக்கிறவர்களுக்கு மாத்திரமல்ல, மரித்தோர்களுக்கும் உண்டு; இஸ்ரயேலுக்கு மாத்திரம் அல்ல முழு மனுக்குலத்திற்கும் உண்டு. இஸ்ரயேல் ஒரு நிழலாக இருந்தது. அதுவே முதற்பலனாக இருக்கும். (இஸ்ரயேலுக்கு தேவ கிருபை திரும்புதல் ஆரம்பத்தில் குறைவாக இருந்தாலும், பிறகு அது அதிகரித்து இஸ்ரயேலை மாத்திரமல்ல முழு மனுக்குலத்தையும் புத்துணர்வு பெறச் செய்யும்) இஸ்ரயேலுக்கு விரோதமாக எழும்புகிறவைகள் அதிகமாக இருந்தாலும், அது ஒரு காலத்திற்கு மிக அதிகமான உபத்திரவத்திற்குள்ளும், துன்பத்திற்குள்ளும் கொண்டு வந்தாலும் இவைகளின் மத்தியிலெல்லாம் தேவன் அவர்களோடு இருப்பார், ஏற்ற காலத்தில் அவர் உதவி செய்து அவர்களை உயர்த்துவார்.

இது சம்பந்தமாக பத்திரிகைகளில் வெளிவருகிற செய்திகள் மிக முக்கியமானவைகள். தற்கால வெளிச்சத்தில் நடக்கிற அனைவராலும் இந்த இயக்கத்தினால் ஏற்பட்ட பலன்கள் மிக ஆவலுடன் கவனிக்கப்படும்; மேலும் இவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி காலம் வந்துவிட்டது, இந்த காலத்தை அவர் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக அறிவித்திருந்தார் என்பதை உணருகிறார்கள். "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தம் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் (தொகுதி 2, அத்தி.7) அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்." ஏசா. 40:1,2 பத்திரிக்கையில் வந்த செய்தி பின்வருமாறு :

## ஒரு யூத இராஜ்யம் தீர்மானிக்கப்பட்டது

*வாஷிங்டன்* D.C. *மார்ச் 5, 1891*

"சிகாகோ பட்டணத்தைச் சேர்ந்த வில்-யம் இ.பிளாக்ஸ்டோன் (William. E. Blackstrone) என்பவர் காரியதரிசியாக இருக்கும் பிளெயின் (Blaine) என்பவருடன் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியினிடம் ரஷ்ய யூதர்கள் சார்பில் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தார்.

"அவர் சமீபத்தில் சிகாகோ நகரில் கிறிஸ்தவர்களும் யூதர்களும் இணைந்து நடத்திய மாநாட்டின் விளைவாக இந்த விண்ணப்பம் கொடுக்கப்பட்டது என்றார். அதில் விசேஷமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்னவென்றால், அவர்கள் ரஷ்யாவை கோபப்படுத்த விரும்பாத அதே வேளையில் யூதர்களுக்கு தங்களுடைய பழைய வீடான பாலஸ்தீனாவை சமாதான முறையில் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

"அந்த நாடு நல்ல ஒரு அரசாங்கத்தின் ஊடாக விவசாயத்திலும், வணிகத்திலும் அபிவிருத்தி அடைய வாய்ப்புண்டு என்பதற்கான ஆதாரத்தைக் காட்டியதுடன், இப்பொழுது யோப்பா பட்டணத்தில் இருந்து எருசலேம் வரை கட்டப்பட்டு வரும் ரயில்பாதை, மேலும் தமஸ்கு, தத்மோர், யூப்ரிட்டீஸ் (Tadmor, Euphortes) வரை போடப்படுமானால் அது ஒரு சர்வதேச போக்குவரத்து பாதையாக அமையும் என்றார்.

"அவர் மேலும் கூறியதாவது: துருக்கி அரசாங்கத்தின் பண பற்றாக்குறைக்கு துருக்கி தேசிய கடனின் ஒரு பகுதிக்கு, யூத முதலாளிகளின் பணத்தைக் கொண்டு ஒரு உத்தரவாதம் செய்ய வற்புறுத்தப்படுகிறது. இதற்கு சமாதான முறையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு எல்லாருடைய தனிப்பட்ட சொந்த நிலமும், உடமைகளும் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்றார். முடிவாக அதில் கூறப்பட்டுள்ளதென்னவெனில் நாம் ரஷ்யாவுடன் நல்ல உறவு கொண்டுள்ள படியாலும், ஆசியப் பகுதிகளில் பிரச்னை எதுவும் இல்லாதபடியாலும், நம்முடைய அரசாங்கம் நட்பு முறையில் நடவடிக்கை எடுத்து, அலைந்து திரியும் லட்சக்கணக்கான இஸ்ரயேலருக்கு ஒரு தீர்வான நிரந்தரமான வீட்டைக் கொடுக்க வேண்டும்.



"ஜனாதிபதி இந்தக் கருத்துக்களுக்கு கவனமாக செவி சாய்த்து இந்த விஷயத்திற்கு கவனம் செலுத்தப்படும் என்றார்."

### விண்ணப்பம்

அந்த விண்ணப்பத்தின் சாராம்சம் பின்வருமாறு :

"ரஷ்ய யூதர்களுக்கு என்ன செய்யப்படும்? ரஷ்யாவின் உள்நாட்டு விஷயங்களைக் குறித்து அதற்கு கட்டளையிடுவது ஞானமற்றதும், பிரயோஜனம் அற்ற செயலுமாகும். யூதர்கள் ரஷ்யாவின் ஆளுகைக்குள் அந்நியர்கள் போன்று நூற்றாண்டுகளாக வாழ்ந்துள்ளார்கள். அதுவும் தன்னுடைய செல்வங்களுக்கு அவர்கள் பாரமாக இருப்பதுடன், தன்னுடைய குடியான மக்களின் நலன்களுக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்று கருதுவதினால் அவர்கள் அங்கே தங்கியிருக்க ரஷ்யா அனுமதிக்காது. அவர்கள் போக வேண்டும் என்று ரஷ்யா தீர்மானித்துவிட்டது. ஆகவே ஸ்பெயின் நாட்டின் யூதர்களைப் போன்றே இந்த யூதர்களும் குடிபெயர வேண்டும். ஆனால் இந்த இருபது லட்சம் ஏழை ஜனங்கள் எங்கே போவார்கள்? ஐரோப்பாவில் ஜனத்தொகை அதிகமாகிவிட்டது. அங்கே குடியானவர்களுக்கு இனியும் இடம் கிடையாது. அவர்கள் அமெரிக்காவிற்கு வருவார்களா? இது அதிக செலவினத்தைக் கொடுப்பதுடன் அநேக வருடங்களும் ஆகும்.

"பாலஸ்தீனாவை மறுபடியும் ஏன் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது? ஜாதிகளை தேவன் பல்வேறு இடங்களில் வைத்திருப்பது போன்று இது அவர்கள் வீடாகும். மாற்றப்பட முடியாத உடைமையி-ருந்து அவர்கள் பலவந்தமாய் வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் நிலங்களை பண்படுத்தி பயிரிட்ட போது அது குறிப்பிடத்தக்க வகையில் பலன் கொடுக்கிறதாயிருந்தது. அது லட்சக்கணக்கான இஸ்ரயேலர்களை தாங்கியது. அவர்கள் பள்ளத்தாக்குகளையும், மலை அடிவாரங்களையும் உழுது பயிரிட்டார்கள். அவர்கள் விவசாயிகள் மாத்திரமல்ல, பொருட்களை தயாரிக்கிறவர்களாக இருந்தார்கள்.

வியாபார ரீதியில் முக்கியத்துவம் பெற்றதாக இருந்ததுடன் நாகரீகத்திற்கும், மதத்திற்கும் முக்கிய இடமாக இருந்தது. மழை அதிகரித்துக் கொண்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டதுடன் பூர்வ காலத்தில் இருந்த செழிப்பை நிலம் மீண்டும் பெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது.

*“1878 பெர்-ன் ஒப்பந்தத்தின்படி பல்கேரியாவை பல்கேரியர்களுக்கும், செர்வியாவை செர்வியர்களுக்கும் கொடுத்த வல்லரசுகள் இப்பொழுது யூதர்களுக்கு பாலஸ்தீனாவை ஏன் திருப்பிக் கொடுக்கக் கூடாது? இந்த நாடுகளும் ருமேனியா, மான்டினீகுரோ, கிரீஸ் (Roumania, Montenegro, Greece) இவைகள் எல்லாம் துருக்கியர்களிடம் இருந்து பிடுங்கப்பட்டு, அதன் சொந்தக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டது. பாலஸ்தீனா முறைப்படி யூதர்களுக்கு சொந்தமானது இல்லையா?*

“அவர்களுக்கு அரசாங்கத்தில் சுய அதிகாரம் வழங்கப்படும் என்றால், உலகத்திலுள்ள யூதர்கள், தங்களுடைய துன்பப்படும் சகோதரர்களை அவர்களுடைய நெடுநாளைய வாசஸ்தலமாக இருந்து வந்திருக்கும் குடியிருப்பிற்கு அனுப்பி வைக்க ஒன்று திரண்டு வருவார்கள். ஏனெனில் 17 நூற்றாண்டுகளாக அவர்கள் பொறுமையுடன் இப்படியான சிலாக்கியத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு இடங்களில் அவர்கள் குடியானவர்களாகி விடவில்லை. ஏனெனில் மற்ற பல்வேறு தேசங்களில் அவர்கள் பரதேசிகளாக இருந்தார்கள். பாலஸ்தீனாவுக்கு திரும்பி தங்களுடைய சொந்த நிலத்தை பண்படுத்த வேண்டும் என்று இருந்தார்கள். துருக்கிக்கு எவ்விதத்திலாவது சுயாதீன உரிமை சேர்ந்திருந்தால் அவைகள் யூதர்கள் தேசிய கடன் சுமையில் பங்கு பெறுவதின் மூலம் சரிகட்ட முடியும்.

“எல்லா தேசங்களும், விசேஷமாக ஐரோப்பாவில் உள்ள கிறிஸ்தவ தேசங்கள் இஸ்ரயேலுக்கு கருணை காட்ட இதுவே சரியான நேரம் என்று நாங்கள் நம்புகிறோம். நாடு கடத்தப்பட்ட பத்து இலட்சம் யூதர்கள் அவர்களுடைய கொடுமையான உபத்திரவங்களினால் நம்முடைய இரக்கத்திற்காக, நீதிக்காக, மனித நேயத்திற்காக, நம்மிடம் பரிதாபமாக வேண்டிக் கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய ரோம மூதாதையர்களால் மிக கொடிதாக கொள்ளையடிக்கப்பட்டு, துரத்தப்பட்ட அவர்களை சொந்த நாட்டிற்கு நாம் திருப்பி அனுப்புவோம்.



“இதனிமித்தம் கனம் மேன்மை தங்கிய பெஞ்சமின் ஹாரிசன் (Benjamin Harrison)அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக இருப்பவருக்கும், நாட்டின் செயலாளராக இருக்கும் மதிப்புக்குரிய ஜே.ஜி. பிளெய்னு (J.G. Blaine) க்கும் மரியாதையுடன் விண்ணப்பித்து எழுதுவது என்னவெனில் அவர்கள் தங்கள் செல்வாக்கை கீழ்க்கண்ட நாட்டு அதிபர்களுக்கு தெரிவித்து உதவ வேண்டும் என்பதாகும். அலெக்ஸாண்டர் III, ரஷ்ய சக்ரவர்த்தி; விக்டோரியா, இங்கிலாந்து தேசத்தின் இராணியும் இந்தியாவின் பேரரசியுமானவர்; வில்-யம் II - ஜெர்மனியின் சக்கரவர்த்தி; ஃபிரான்சிஸ் ஜோசப், ஆஸ்ட்ரோ ஹங்கேரியின் சக்கரவர்த்தி; அப்துல் ஹமீது II - துருக்கியின் சுல்தான்; மேரி கிறிஸ்டினா, ஸ்பெயின் நாட்டின் இராணி; பிரான்ஸ் குடியரசு; பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், ஸ்வீடன், போர்ச்சுக்கல், ருமேனியா, செர்வியா, பல்கேரியா மற்றும் கிரீஸ் அரசாங்கங்கள், ஒரு கூடிய சீக்கிர தேதியில் சர்வதேச மகாநாட்டைக் கூட்டி இஸ்ரயேலர்களின் நிலைமையையும் தங்களுடைய பூர்வீக வீடு பாலஸ்தீனா என்று அவர்கள் கூறுவதையும், அவர்கள் இப்பொழுது அனுபவித்துக் கொண்டு இருக்கும் உபத்திரவ நிலையி-ருந்து அவர்கள் விடுபட நீதியும், சரியானதுமான வழிகளை கண்டறிந்து உதவ வேண்டும்.” (இந்த விண்ணப்பத்தில் சிகாகோ, போஸ்டன், நியூயார்க், பிலதெல்பியா, பால்ட்மோர் மற்றும் வாஷிங்டன் நகரங்களில் உள்ள பிரமுகர்கள், தொழில், மத பாகுபாடு பார்க்காமல் கையெழுத்திட்டார்கள்.)

## ஆங்கிலோ - இஸ்ரயேலர் பிரச்னை

இந்த புத்தகத்தின் ஆங்கில முதல் பதிப்பு வெளிவந்த நாளி-ருந்து, இதைப்பற்றிய விசேஷமாக இந்த அத்தியாயத்தைப் பற்றிய விமர்சனங்கள் ஒரு ஆங்கில பத்திரிகையான பேனர் ஆப் இஸ்ரே-ல் (The Banner of Israel) வெளிவந்தது. அதில் ஆங்கிலேய -

ஜெர்மானிய ஜனங்கள் தான் இஸ்ரயே-ன் "காணமல் போன பத்துக் கோத்திரத்தாரின்" பிரதிநிதிகள் என்கிற கருத்தை வெளியிட்டு இருந்தது. அவை நமது 1891 டிசம்பர் மாத வெளியீட்டில் வெளிவந்தன. அவைகள், பிரயோஜனமுள்ளதாக இருக்கும் என்று நம்பி அதை கீழே பிரசுரிக்கிறோம். ஏனெனில் அவைகள் இன்னும் சில கருத்துக்களையும் தெரிவிக்கின்றது:

பேனர் ஆப் இஸ்ரேல் பத்திரிக்கை ஆசிரியருக்கு :

அன்புடையீர் !

சமீபத்தில் உங்களுடைய பத்திரிக்கையில் வேதாகம பாடங்கள், தொகுதி 3 பற்றி விமர்சித்து, விசேஷமாக யூதர்கள் பாலஸ்தீனாவுக்கு திரும்புவது சம்பந்தப்பட்ட ஆங்கிலோ - இஸ்ரயேலர் பிரச்னை பற்றி எழுதியிருப்பது எனது கவனத்திற்கு வந்துள்ளது. அது ஒரு பதிலை எதிர்பார்ப்பது போன்று உள்ளதால் நான் பதில் எழுதுமாறு விழைகிறேன்.

இப்பொழுது நாம் ஆராய வேண்டியது இஸ்ரயே-ன் இரண்டு கோத்திரத்தாரிடம் இருந்து 10 கோத்திரத்தார் ரெகோபோயாம் காலத்தில் பிரிந்து போன பின்னர், அவர்கள் எப்பொழுதாவது ஒன்று சேர்ந்தார்களா, உண்மையிலேயே அப்படியாயிற்றா அல்லது அப்படியாக எண்ணப்பட்டார்களா என்கிற கேள்வி எழும்புகிறது. உங்களுடைய பதிப்பாசிரியர் கூறுகிறதாவது: அவர்கள் ஒன்று சேரவில்லை; அந்த நாளி-ருந்து இஸ்ரயேல் என்கிற பெயர் 10 கோத்திரத்தாருக்கு சொந்தமாயிற்று; இரண்டு கோத்திரத்தாரான யூதா, பென்யமீன் கோத்திரத்தாருக்கல்ல, இவர்கள் யூதர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஆங்கிலேய ஜெர்மானியர்கள் தான் அந்த பத்து கோத்திரத்தார். அவர்களுடைய சுபீட்சம் இந்த காரணத்தினால் தான் என்று கூறும் தவறு, அவருடைய கருத்துக்கு அவசியமாகிறது. பாழாக்கப்பட்ட காலமான 70 வருடங்களி-ருந்து விசேஷமாக பாபிலோனின் சிறையிருப்பில் இருந்து திரும்பிய பின்னர், இஸ்ரயேல் தேசம் ஒன்று என்று தேவனால் அங்கீகரிக்கப்பட்டது. கோரேஸ் ராஜா அனுமதி அளித்த போது தேவனுடைய வாக்குத்தத்தங்களை மதித்து பாலஸ்தீனாவுக்கு திரும்பிய எல்லா



கோத்திரத்தாரும் இதில் அடங்குவர் என்று நாங்கள் கூறுகிறோம்; ஆனால் திரும்பாதவர்கள் எல்லாரும் இஸ்ரயே-ன் காணியாட்சிக்கு உட்பட்டவர்கள் அல்ல என்றும், அவர்கள் உண்மையிலேயே இஸ்ரயேலர் அல்ல என்றும், அதன்பிறகு அவர்கள் புறஜாதியினர் என்று அறியப்பட்டனர் என்றும் நாம் கூறுகிறோம். மேலும், காணாமல் போனவர்கள் உண்மையிலேயே இஸ்ரயேலர் அல்ல. அவர்கள் புதிய உடன்படிக்கையின் கீழ் ஆயிரம் வருடத்தின் போது (சுவிசேஷயுகத்தின் போது அல்ல) ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதிருக்கும், ஆசீர்வதிக்கப்பட வேண்டியதிருக்கும் என்று நாம் கூறுகிறோம். சில குறிப்புகளின் மேல் நாம் கொண்டுள்ள நிலைகளில் சற்று தவறான அபிப்பிராயம் இருப்பது போன்று தோன்றுகிறது. பத்து கோத்திரத்தார் இரண்டு கோத்திரத்தாரிடம் இருந்து பிரிந்து சென்றார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. அதே மாதிரி பெரும்பான்மையினராக இருந்த 10 கோத்திரத்தார் ஆரம்பத்தில் இருந்த எல்லாருடைய பெயராகிய இஸ்ரயேல் பெயரையும் தக்க வைத்துக் கொண்டார்கள் என்பதையும், 2 கோத்திரத்தார் யூதா என்று அழைக்கப்பட்டார்கள் என்பதையும், பிரிந்து போவதற்கு போதுமான அளவு காரணம் இருந்தது என்பதையும், தேவனுடைய திட்டத்தின்படி அது அவர்களுக்கான சிட்சிப்பு என்பதையும், இரண்டு கோத்திரத்தாருக்கு முன்பாகவே அதாவது சுமார் எழுபது வருடங்களுக்கு முன்பே சிறையிருப்புக்குச் சென்றார்கள் என்பதையும், 10 கோத்திரத்தாரின் வம்சா வழியினருக்கும் இரண்டு கோத்திரத்தாருக்கும் தேவன் ஓர் அளவு ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார் என்பதையும், அதே மாதிரியான ஆசீர்வாதம் பூமியிலுள்ள எல்லா குடும்பத்திற்கும் வரும் என்பதையும் நாம் மறுக்கவில்லை. இது "உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீருங்காலங்களில்" நடைபெறும். அப். 3:19-21

"இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்று நம்முடைய மாபெரும் போதகர் சொன்னது சரியே என்று நாம் சொல்கிறோம். மேலும் அந்த பெரிய அப்போஸ்தலர் கூறியிருப்பதும் சரியே; "முன்பு

யூதரிலும் பின்பு புறஜாதியினரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும், கனமும், சமாதானமும் உண்டாகும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை." (ரோம. 2:10,11) இதி-ருந்து நாம் அறிந்து கொண்டிருப்பது என்னவெனில், பாபிலோனின் சிறையிருப்புக்குப் பின்னர் யூதன் என்கிற பெயர் எல்லா இஸ்ரயேலருக்கும் ஒன்றாகி விட்டது. இதில் பிரமாணங்களைக் கடைபிடித்தவர்களும், ஆபிரகாமின் வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று எதிர்பார்த்திருந்த அனைவரும் அடங்குவர். இவர்களில் சிலர் 10 கோத்திரத்தில் உள்ளவர்களும், புற ஜாதியினரில் விருத்தசேதனம் பெற்ற அனைவரும் இதில் அடங்குவார். மேலும் 10 கோத்திரத்தார் கலகம் பண்ணின போதும் எல்லா தனிப்பட்ட நபர்களும் அதில் சேரவில்லை. சிலர் யூத இராஜ்யத்திற்கு விசுவாசம் உள்ளவர்களாக இருந்தார்கள், யூதர்கள் மத்தியில் தொடர்ந்து ஜீவித்தார்கள். 1 இராஜா. 12:17

நாங்கள் கண்டு கொண்டதும், குறிப்பிடப்பட்டதுமான முக்கியமான கருத்து என்னவெனில் நம்முடைய ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் "பன்னிரண்டு கோத்திரத்தாரையும்" ஒரே பெயரில் "இஸ்ரயேல் வீட்டார்" என்று அழைத்தார்கள். இது கூட எருசலேமில் உள்ள ஜனங்களோடு நேரிடையாக பேசும் போது இப்படி அழைத்தார்கள் என்பதை எல்லாரும் ஒத்துக் கொள்ளுவார்கள். இவர்கள் முக்கியமாக யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். ஆனால் இவர்களில் பன்னிரண்டு கோத்திரத்தி-ருந்து உள்ளவர்களும் சிலர் இருந்தார்கள். ஆண்டவரும் அப்போஸ்தலர்களும், பன்னிரண்டு கோத்திரத்தாரை ஒரே ஜாதியாக அழைத்ததும் அவர்களுக்கு அதே மாதிரியாக தீர்க்கதரிசனங்கள் கூறியதும், நாமும் அப்படியே கூறுவதற்கு போதுமான காரணம் என்று எங்களுக்குத் தோன்றுகிறது.

இந்த விஷயத்தில் பல்வேறு அம்சங்களை பார்க்க வேண்டும் என்றால் அதிகமான வேத பகுதிகளை குறிப்பிட வேண்டியதிருக்கும். அதிக இடம் தேவைப்படும். ஆனால் யாராவது யங்ஸ் கன்கார்டன்ஸ் (Young's Concordance) 528ம் பக்கத்தில் புதிய ஏற்பாட்டில் இஸ்ரயேல் என்கிற வார்த்தை பல்வேறு இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டு



இருப்பதைக் காணலாம். இதி-ருந்து இஸ்ரயேல் வீட்டார் இனியும் நம்முடைய ஆண்டவராலும் அப்போஸ்தலர்களாலும் சாதாரணமாக பத்து கோத்திரத்தார் என்று குறிப்பிடப்படாமல் "இஸ்ரயேல் எல்லாரும்" என்று சொல்லப்பட்டிருப்பதே போதுமான சாட்சி என்று நினைக்கிறோம். விசேஷமாக கீழ்கண்ட வேத பகுதிகளை கவனியுங்கள். மத். 8:10; 10:6; 15:24, 31; 27:9, 42; மாற்கு 12:29; 15:32; லூக்கா. 1:54,68 இன்னும் விசேஷமாக வசனம் 80. மேலும் 2:25, 32, 34; 24:21; இன்னும் கவனமாக பார்க்க வேண்டியவைகள் யோவா. 1:31, 49; 3:10; 12:13; மேலும் அப். 2:22, 36; 3:12; 4:10, 27; 5:21, 30, 31, 35; 13:16, 24; 21:28; ரோம. 9:6, 31; 10:19; 11:25, 26; 1 கொரி. 10:18; கலா. 6:16; எபே. 2:12; பி-. 3:5; எபி. 8:8

"இரட்சிப்பு யூதர்கள் வழியாக வருகிறது" அல்லது உடன்படிக்கையை காத்துக் கொள்கிற இஸ்ரயேலர் என்பது எப்படியெனில், (1) நம்முடைய இரட்சகரும் ஆண்டவருமாக இருக்கிற இயேசு இந்த வழியில் வந்தார். (2) அதில் மீந்திருக்கிற யூதர்கள் (அப்போஸ்தலர்களும், ஆதி சபையில் இருந்த அநேகரும்) இஸ்ரயே-ன் மீந்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். (ரோம. 9:27; 11:1,5,7) அவர்கள் புறஜாதியினருக்கு ஒப்புரவாகுத-ன் ஊழியத்தை சொல்லுபவர்களானார்கள். மேலும் (3) தேவனுடைய ஏற்பாட்டின்படி எதிர்காலத்தில் திருப்பிக் கொடுக்கும் வேலையில் மாம்சமான இஸ்ரயேல் குருட்டாட்டத்தி-ருந்து மீட்கப்பட்டு ஒரு கருவியாக உபயோகப்படுத்தப்படுவார்கள். இவர்கள் மூலமாக இரட்சிப்பின் ஊற்று, மகிமையடைந்த ஆவிக்குரிய இஸ்ரயே-ல் இருந்து புறப்பட்டு பூமியின் எல்லா குடும்பங்களுக்கும் செல்லும். எழுதப்பட்டுள்ளதாவது: "சீயோனி-ருந்து (சுவிசேஷ சபை அல்லது மகிமையடைந்த ஆவிக்குரிய இஸ்ரயேல்) வேதமும், எருசலேமி-ருந்து (மீண்டும் ஸ்தாபிக்கப்பட்ட மாம்சீக இஸ்ரயேல்) கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." ஏசா. 2:3

எப்படியாயினும் 10 கோத்திரத்தார் இதில் கிடையாது, எல்லா வாக்குத்தத்தங்களும் அவர்களுக்கு இல்லாமல் போயிற்று. ஏனெனில் சீயோனோ அல்லது எருசலேமோ (நிழலானதோ அல்லது நிஜமானதோ) அவர்களுக்கு சொந்தமானது அல்ல. ஆபிரகாமோடு

செய்த உடன்படிக்கையில் ஒரு பங்கு பெறுவதற்கு அவர்கள் ஒன்று ஆவிக்குரிய இஸ்ரயேலோடு இணைந்திருக்க வேண்டும், இதில் யூத சிங்கம் தலையாக உள்ளார் அல்லது அவர்கள் எருசலேமில் உள்ள சொல்லர்த்தமான யூதாவோடு சம்பந்தம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இது இழந்தவைகளைத் திரும்பப் பெறும் காலத்தின் போது அவர்களுடைய பங்கைப் பெறுவதற்கு அவசியமாயிருக்கிறது. "கர்த்தர் யூதாவின் கூடாரங்களை முதல்முதல் இரட்சிப்பார்."சக. 12:7

உங்களுடைய பதிப்பாசிரியரின் வாக்குவாதங்கள் கீழ்க்கண்ட தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது போன்று தோன்றுகிறது, உங்கள் பத்திரிகையி-ருந்து நாங்கள் குறிப்பிடுகிறோம். அவர் கூறுகிறார்:

"இஸ்ரயேல் திரும்பி வராததற்கு காரணம், எரேமியா 29:1, 4, 10; எஸ்றா 1:1 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, கோரேசுடைய கட்டளை யூதர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டு நிறைவேறுவதைக் காணலாம். இஸ்ரயே-ன் சிறையிருப்பு யூதாவின் சிறையிருப்பைக் காட்டிலும் நீடித்தது என்பது எசே. 4:3-8 ஐப் பார்க்கும் போது வெளிப்படையாக தெரிகிறது. கோரேசுடைய கட்டளையை பத்து கோத்திரத்தாரும் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதற்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது."

மேலே கூறியவற்றை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. உங்கள் வாசகர்களை, குறிப்பிடப்பட்ட பகுதியான எரே. 29:1-10 வரை கவனமாக வாசிக்கும்படி கூறவேண்டும். இந்த வசனம் ஜனங்கள் திருப்தியுடன் அங்கே தங்கியிருக்க வேண்டும், எருசலேமுக்கு திரும்புவதை ஒரு போதும் எதிர்பார்க்கக்கூடாது என்று கூறாமல், அவர்கள் பாபிலோனில் சௌகரியமாக இருக்க வேண்டும் என்று கூறியது. ஏனெனில் இன்னும் 70 வருடங்களுக்கு விடுதலை கிடைக்காது. இது அவர்கள் இதற்கு முன்பாக ஒருபோதும் அனுபவித்திராத நீண்டகால சிறையிருப்பாக இருந்தது.

எஸ்றா 1:1 யூதா, பென்யமீன் கோத்திரத்தார் மாத்திரம் திரும்பலாம் என்கிற சலுகை அளிக்கப்படவில்லை. அதற்கு மாறாக 3வது வசனம் கூறுகிறது. "அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ" என்று இருக்கிறது; 4வது வசனம் 'எவன்' என்று திருப்பிக் கூறும் போது அந்த அழைப்பு முழு



உலகத்திற்கும் உள்ளதாகும். அவைகள் கோரேசின் ஆட்சிக்குட்பட்டதாக இருந்தவைகள். எப்படியெனில், "எவ்விடத்திலும்" என்கிற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. 5வது வசனம் கூறுகிறது, யூதா பென்யமீன் வம்சங்களின் தலைவரும் "ஆசாரியரும் லேவியருமின்றி எவர்கள் ஆவியை தேவன் ஏவினாரோ அவர்கள் எல்லாரும்" எழும்பினார்கள். அதாவது எவர்களுடைய இருதயங்கள் "இஸ்ரயே-ன் ஆறுதல் வரக்காத்திருந்த" சிமியோனின் இருதயம் போன்று காத்திருந்ததோ அவர்கள் அனைவரும் எழும்பினார்கள். இப்படி எழும்பினவர்களில் பத்து கோத்திரத்திலும் சிலர் இருந்தார்கள். ஆனாலும் அவர்கள் கொஞ்சம் பேராக இருந்தார்கள். உதாரணமாக சிமியோனோடு இஸ்ரயே-ன் ஆறுதலுக்காக காத்திருந்தவர்களில் "ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுயே-ன் குமாரத்தியுமாகிய அன்னாள் தீர்க்கத்தரிசியும்" ஒருத்தி. லூக்கா 2:36

எசேக்கியே-ல் (4:3-8) குறிப்பிடப்பட்டுள்ளபடி யூதாவின் மேல் உள்ள 40 வருடங்கள் அல்லது இஸ்ரயே-ன் மீதமுள்ளவர்கள் மேல் 390 வருடங்கள் எப்பொழுது நிறைவேறினது என்று குறிப்பாக சொல்லப்படவில்லை. உங்களுடைய பதிப்பாசிரியர் கவனிக்க தவறியது என்னவெனில், இந்த உபத்திரவம் இரண்டு பகுதியாக பிரித்து காட்டப்பட்டிருந்தாலும், அது ஒரே ஜனத்திற்கு எதிராக வருவதாக, ஒரே தலைநகரமான எருசலேம் என்று காட்டப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசி சித்திரம் போன்று அதை கொடுக்கிறார். சிலர் நினைக்கிறார்கள், பத்து கோத்திரங்களுக்கு எதிராக வந்த தேவனுடைய கோபம் அவர்கள் கலகம் செய்த நாளி-ருந்து வந்தது என்பதை கற்பிப்பதாகவும் அதாவது எருசலேம் பாழாக்கப்படுவதற்கு முன்னர் கிட்டத்தட்ட 390 வருடங்களுக்கு முன்னர் அவர்கள் விக்கிரக ஆராதனைக்குள் சென்ற போது நடந்தது என்றும், மேலும் இரண்டு கோத்திரத்தாருக்கு எதிராக வந்த கோபாக்கினை பாழ்க்கடிப்புக்கு 40 வருடங்களுக்கு முன்னர் வந்தது என்றும், மனாசே இராஜாவின் ஆட்சியின் போது இந்த இரண்டு கோத்திரத்தாரும் விக்கிரக ஆராதனை செய்கிறவர்களானார்கள் என்றும் எருசலேமும் தேசமும் பாழாக்கப்பட்டதினால்

தேவனுடைய கோபம் நின்று விட்டது அல்லது தணிந்தது என்றும் கூறுகிறார்கள். இது சரியாக இருந்தால், அவரது வாக்குத்தத்தத்தை மதித்து எழுபது வருட பாழ்க்கடிப்பு நிறைவேறும் வரை காத்திருந்தவர்களுக்கு அவர்கள் பாபிலோனில் இருக்கும் போதே தேவகிருபை திரும்பியது. அதனிமித்தம் அவரது பரிசுத்த நகரத்திலும் ஆலயத்திலும் தேவனை ஆராதிப்பதற்கு அவர்கள் திரும்பி வரலாம்.

அப்படியென்றால் நாங்கள் பதில் கூறுவது என்னவெனில், பத்து கோத்திரத்தில் விருப்பமுள்ள உண்மையுள்ள எவரும் எழுபது வருட பாழ்க்கடிப்புக்கும் பின்னர் பரிசுத்த பூமிக்கு திரும்பும் போது தடை பண்ணப்பட்டார்கள் அல்லது திரும்பவில்லை என்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. அதற்கு மாறாக ஆதாரம் காட்டுவது என்னவெனில், அவர்கள் திரும்பிச் செல்ல சுதந்திரம் இருந்தது. உண்மையில் சிலர் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார்கள் என்பதாகும்.

மேலும் வேதாகம பாடங்கள், தொகுதி 3--ருந்து குறிப்பிட்டு உங்களுடைய பதிப்பாசிரியர் தொடர்ந்து கூறுகிறார் : அவர்கள் (பத்து கோத்திரத்தார்) இஸ்ரவேலருக்குரிய உடன்படிக்கையை விட்டு விக்கிரக ஆராதனைக்காரர்கள் ஆனார்கள், அவிசுவாசிகளானர்கள், முற்றிலும் புறஜாதியினரானார்கள் என்கிறார். அவர் தொடர்ந்து கூறுகிறதாவது:

"இது முற்றிலும் சரியானதுதான். பத்து கோத்திரத்தார் பின்வாங்கிப் போனார்கள். அவர்கள் மோசேயின் பிரமாணங்களில் இருந்து தள்ளுண்டு போனார்கள். (எரே. 3:8) ஆனால் அவர்கள் மறுபடியுமாக ஒரு புதிதான மேலான உடன்படிக்கைக்குள் கொண்டு வரப்பட்டார்கள். (ஏசா. 54:4-8; ஓசி. 2:7,19; எரேமி.31:31-33) சொல்லப்போனால், இஸ்ரயேலர்கள் புறஜாதியினராக இருந்தார்கள். இன்றைக்கும் இவர்கள் புறஜாதியினர் என்று எண்ணப்படுகிறார்கள். ஆனால் அது தீர்க்கதரிசனத்தோடு ஒத்து இருக்கிறது. ஏனெனில், எப்பிராயீமின் திரளான ஜனக்கூட்டத்தார் பெயரளவில் உள்ள புறஜாதியினராக இருக்கிறார்கள். (ஆதி. 48:19) எப்பிராயீம்-இஸ்ரயேல் புத்திரரின் தொகை "அளக்கவும் எண்ணவும் கூடாமல்" இருக்கிறவர்கள் பெயரளவில் உள்ள (லோகம்மீ) புறஜாதியினர் ஆவார்கள். ஓசியா. 1:9,10



மேற்கூறப்பட்டவைகளை நாங்கள் ஒத்துக் கொள்ள இயலாது. ஆண்டவர் அவர்களை மறுபடியும் விவாகத்திற்கென நியமிக்கவில்லை, பத்து கோத்திரத்தாரை மறுபடியும் விவாகத்திற்கென ஏற்றுக் கொள்ளவில்லை. எந்த தீர்க்கதரிசனமும் இதை நிரூபிப்பதாக இல்லை. ஓசியா மோசமான ஜனங்களை குறித்து ஒரு கடினமான சித்திரத்தைக் காட்டுகிறார். ஓசியாவில் அதன் அதிகாரம் 1:4,6, 7ம் வசனங்கள் பத்து கோத்திரத்தாரை இரண்டு கோத்திரத்தாரிடம் இருந்து பிரித்து காட்டுவது போன்று கூறுகிறது. ஆனால் இனிமேல் பத்து கோத்திரத்தார்கள் மேல் இரக்கம் கிடையாது என்றும், அவர்கள் முற்றிலுமாக அகற்றிப் போடப்படுவார்கள் என்றும் யூதாவின் மேல் இரக்கம் காட்டப்படும் என்றும் கூறுகிறது. 9,10வது வசனங்கள் எல்லா இஸ்ரயேலும் தள்ளிவிடப்படுதலை (ஒரு காலத்திற்கு) காட்டுவதுடன் (சுபாவ ஒ-வ கிளைகள்) உண்மையான வேரில் அல்லது வாக்குத்தத்தத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலர் ஒட்ட வைக்கப்படுவது போன்று காட்டுகிறது. இவர்கள் புறஜாதியினர், இதற்கு முன்பாக ஆண்டவரால் அவருடைய ஜனங்கள் என்று அறிந்து கொள்ளப்படாதவர்கள். இவர்கள் இஸ்ரயே-ன் காணியாட்சிக்கு அந்நியர்களும், பரதேசிகளுமாக இருந்தவர்கள். ஆனால் இப்பொழுது கிறிஸ்துவின் மூலம் சமீபமாய் கொண்டு வரப்பட்டவர்களுமாய் பங்குள்ளவர்களுமாய் இருக்கிறார்கள். அப்போஸ்தலன் பவுல் இந்த வேதப்பகுதியைக் குறிப்பிடுகிறார். (ரோம. 9: 23-26) ஓசி. 1:11 கூறுகிறது: 'அப்பொழுது' அவர்கள் தள்ளப்பட்ட வேளையில், ஆவிக்குரிய இஸ்ரயேல் அங்கீகரிக்கப் படுகிற வேளையில் ஒரே தலைமையின் கீழ் யூதாவும் இஸ்ரயேலும் இணைக்கப்படுவார்கள்.

ஓசியா 2:1-7 வரை உள்ள இந்த வசனங்களை மிகவும் கவனமாக ஆராய்ந்து பார்க்கும் போது, ஆண்டவர் அவர்களை மறுபடியும் ஏற்றுக் கொள்வார் என்கிற வாக்குத்தத்தத்தை அது வெளிப்படுத்தவில்லை. அதி-ருந்து 13வது வசனம் வரை வாசிக்கும்

போது அதற்கு எதிர்மாறாக காட்டுகிறது. அதன்பின்னர் வசனங்கள் 14-18, இந்த கலகம் பண்ணும் ஜனங்களுக்கு "நம்பிக்கையின் வாசல்" இருக்கிறது என்கிறது. இதை ஆபிரகாமின் உண்மையான ஆவிக்குரிய சந்ததியாக இருப்பவர்கள் ஆயிர வருட ஆட்சியின் போது திறப்பார்கள். (கலா. 3:16,29) 18வது வசனம் இந்த "நம்பிக்கையின் வாசல்" திறக்கப்படும் வேளை, உபத்திரவ காலத்திற்குப் பின்னர், யுத்தங்கள் ஓய்ந்த பின்னர் இருக்கும் என தெரிவிக்கிறது.

19,20 வசனங்கள் மாம்சமான சந்ததிக்கு உரியது என்று எடுத்துக் கொண்டால் அது எல்லா இஸ்ரயேலுக்கும் (கடைசியாக குறிப்பிடப்பட்டது) உரியதாக வேண்டும். ஓசியா 1:11ஐ பாருங்கள். இப்படி இருக்கும் போது சுவிசேஷ யுகம் முற்றுப்பெறுவதற்கு முன்னதாக, யுத்தங்கள் அப்பொழுது ஓய்ந்திருக்கும் வேளையில் நிறைவு பெறுவதற்கான அழைப்பு இருக்காது. ஆனால் இந்த வசனங்கள் (19,20) ஆவிக்குரிய வகுப்பினரைக் குறிக்கிறது என்று நம்புவதற்கு தகுந்த காரணம் உண்டு. இவர்கள் மாம்சீக இஸ்ரயேல் தள்ளி விடப்பட்ட வேளையில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். இந்த கருத்தை 23வது வசனமும், ஓசியா 1:10 ம் ஆதரிக்கிறது. இந்த இரண்டும் ரோம. 9:23-26ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அப்போஸ்தலர் இதைக் குறித்து சொல்லும் இன்னொரு அறிக்கைக்கும் ஒத்து இருக்கிறது. "அப்படியானால் என்ன? இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாம-ருக்கிறார்கள்; தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ, அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றையத் தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்." ரோம. 11:7

ஏசாயா 54:1-8ன் படி அப்போஸ்தலானகிய பவுல் தெய்வீக ஞானத்தை வெளிச்சம் போட்டுக் காட்டி அதை ஆவிக்குரிய சீயோன், நம்முடைய தாயாக அல்லது உடன்படிக்கையாக இருக்கிறது என்கிறார். இதற்கு சாராள் அடையாளமாக காட்டப்பட்டிருக்கிறாள். மாம்சீக ஆபிரகாமின் சந்ததியினர் வாக்குத்தத்திற்கு சுதந்திரவாளியாக இருக்காதபடி தள்ளப்பட்டுள்ளனர். அதே வேளையில் உண்மையான சந்ததியான கிறிஸ்து மாத்திரம் (ஈசாக்கும், ரெபேக்காளும் அடையாளமாக காட்டப்பட்டுள்ளனர்) வாக்குத்தத்தத்தின் உண்மையான சந்ததி என்று பெயர் பெற்றுள்ளார். கலா. 4:22, 24, 26-31



எரேமியா 31: 29-33 இந்த கருத்தை முழுவதுமாகக் காட்டுகிறது. அது பத்து கோத்திரத்தார் இஸ்ரயேல் என்று அழைக்கப்பட்டவர்கள் இரண்டு வம்சத்தாரான யூதா என்று அழைக்கப்படுபவர்களிடம் இருந்து பிரிந்து இருந்த காலத்தில் எழுதப்பட்டது. ஆகவே தீர்க்கதரிசி இதை எழுதும் போது பத்து கோத்திரத்தாரை மாத்திரம் குறிக்கிறது என்று தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக இருவரையும் குறிப்பிடுவது அவசியமாயிற்று. ஆனால் 31வது வசனத்தில் இருவரையும் ஒன்றாகக் காட்டுகிறார். அவர்களை ஒன்றாக இணைத்த பின்பு 33, 36வது வசனங்களில் அவர்களுக்கு ஒரே பெயரைப் பயன்படுத்துகிறார். இது 38-40 வரை உள்ள வசனங்களால் உறுதிப்படுத்தப்படுகின்றது. இது இரண்டு கோத்திரத்தாருக்கும் இருக்கிற பங்கை எருசலேமிலும் அதைச் சுற்றிலும் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

ஆனால் அடுத்தபடியாக இது இதுவரை நிறைவேறாத ஒரு தீர்க்கதரிசனம் என்பதைக் கவனிப்போமாக. ஆகவே, பத்து கோத்திரத்தார் தங்களைப் பற்றி தெளிவாக தெரிந்து கொள்ளவார்களெனில் பெருமிதம் கொள்ளுவதற்கு இடம் இருக்காது. புதிய உடன்படிக்கை அவர்களோடு ஏற்படுத்தப்படும் வரை அவர்கள் காத்திருப்பது நல்லது, அந்த புதிய உடன்படிக்கையின் பிரமாணம் அவர்களுடைய இருதயங்களில் எழுதப்படும் வரை காத்திருப்பது நல்லது. அப்படியென்றால், அவர்கள் இனியும் தங்களுடைய பழைய உடன்படிக்கையைக் குறித்து பெருமிதம் கொள்ளாமல், புதிய உடன்படிக்கையைக் குறித்து பெருமிதம் கொள்ளுவார்கள்.

சுவிசேஷ யுகத்தின் போது, புதிய உடன்படிக்கையும், இருதயத்தில் எழுதப்படும் அதன் ஆசீர்வாதமும், ஆவிக்குரிய போதனையும், பத்துக் கோத்திரத்தாருக்கோ அல்லது இரண்டு கோத்திரத்தாருக்கோ அல்ல. முதலாவதாக அது மத்தியஸ்தரின் இரத்தத்தினால் (மரணம்) தலையும், சரீரமும், யூதர்களிடம் இருந்தும், புறஜாதியினரிடம் இருந்தும் முத்திரை போடப்பட வேண்டும். மாம்சீக சந்ததி (இஸ்மவேல்), ஆவிக்குரிய சந்ததி (ஈசாக்கு) எல்லாவற்றையும் சுதந்தரிக்கும் வரை காத்திருக்க வேண்டும்.

அதன்பின்பு ஈசாக்கு மூலமாக தன் பங்கைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவைகள் ஆயிர வருட சிலாக்கியங்களாகும். இவைகள் 29,30ம் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அப்பொழுது நிறைவேறும்.

அன்பானவர்களே, விசுவாசத்திற்கு கீழ்ப்படிவதின் மூலம் நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுவோமாக, மாம்சீக தொடர்புகளினால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் வரும் என்று நம்பிக்கை கொள்ளாமல் இருப்போமாக. அப்படியாக இருக்க முடியாது என்று ஆண்டவருடைய வார்த்தை தெளிவாகக் கூறுகிறது. ஆங்கிலேய - ஜெர்மானிய இனங்கள் தான் பத்து கோத்திரத்தாரின் உண்மையான வாம்சா வழியினர் என்றால், ஆண்டவர் உறவு முறையைப் பார்க்காமல் அவர்களை புறஜாதியினர் என்று எண்ணுவது அவர்களுக்கு நன்மையாக இருக்கும். ஏனெனில், மீதமுள்ளவர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட வேளையில், இயற்கையான சந்ததியி-ருந்து அவருடைய கிருபை நீக்கப்பட்டதுடன், அவர் தம்முடைய நாமத்திற்கென புறஜாதி ஜனங்களை தெரிந்து கொள்ளும்படியாகத் திரும்பினர். இதற்கு முன்பாக இவர்கள் அவருடைய ஜனங்களாக இருந்ததில்லை. மேலும் நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி, தெரிந்து கொள்ளப்பட்ட சபை, ஆயிரம் வருஷம் உதயம் ஆகிறபோது அது நிறைவு அடைகிற வரை, அவருடைய கிருபை திரும்பக் கிடைக்கும் என்று வாக்குத்தத்தம் பண்ணப்படவில்லை.

மகா பிரிட்டன், ஜெர்மனி மற்றும் அமெரிக்கா ஆகிய தேசங்களில், ரெகோபெயாமின் நாட்களில், இரண்டு வம்சாவளியினரிடத்தில் இருந்து பிரிந்த பத்து வம்சா வழியினரின், சந்ததியினர் இருக்கக் கூடும் என்கிற எங்களுடைய கருத்துக்கு எதிராக வேதாகமம் போதிக்கிறது எதுவும் இல்லை என்று நாம் நம்புகிறோம். விசேஷமாக அமெரிக்க ஐக்கிய தேசத்தில் தற்போது காணப்படும், அடிப்படையான கலப்பினத்தைக் குறித்து அறிந்துள்ள எவரும், இந்த தேசங்களில் உள்ளவர்கள் சுத்தமான இஸ்ரயே-ய இனத்தைச்



சேர்ந்தவர்கள் என்று கூறமுடியாது. மேலும் இந்த தேசங்களில், மற்ற தேசங்களை விட அதிகமாக காணப்படும் சுபீட்சம் அவர்களின் இனத்தின் வழியாக வந்திருக்கக் கூடுமா என்கிற கேள்வியையும் கூட நாங்கள் விவாதிக்கவில்லை. ஒருவேளை இது உண்மையாக இருக்கலாம். இருந்தாலும் நாங்கள் கொண்டுள்ள நிலை என்னவெனில், ஆண்டவருடைய சபையின் "பரம அழைப்பை" பொறுத்த வரையில் இடையில் இருந்த சுவர் உடைக்கப்பட்டு விட்டது. இஸ்ரயேலர் ஒரு தனிப்பட்ட நபர் அல்லது ஒரு தேசமாக கிருபையின் உடன்படிக்கையின் கீழ், இன்னொரு நபர் அல்லது தேசங்கள் மேல் எந்த சிலாக்கியமும் பெறாது. அதி-ருந்து முழு இஸ்ரயே-ல் இருந்து சுபாவக் கிளைகள் முறிக்கப்பட்டன. உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மீந்தவர்களைத் தவிர அனைவரும் முறிக்கப்பட்டனர். இவர்களுக்கு மற்றவர்கள் மேல் தாங்கள் இஸ்ரயேல் தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதினால், முக்கியத்துவம் கிடையாது. தேவன் அப்போஸ்தலர்கள் மூலமாக மாம்சத்தில் இருந்த இஸ்ரயேலருக்கு எவ்வித விசேஷமான நன்மைகளையும் ஆவிக்குரிய இஸ்ரயேல் தெரிந்து கொள்ளப்படும் காலத்தில் போதிக்கவில்லை; ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலரின் எண்ணிக்கை முற்றுப் பெற்றவுடன் அவருடைய கிருபை மாம்சீக இஸ்ரயேல் வீட்டாருக்கு திரும்பும் என்று அறிவித்திருக்கிறார்.

ஆவிக்குரிய இஸ்ரயேல் கிட்டத்தட்ட முற்றுப் பெற்றுவிட்டது என்று நாங்கள் நம்புகிறபடியால், மாம்சத்தின்படி இருக்கிற இஸ்ரயேலருக்கு ஆசீர்வாதங்கள் வரும் என்று எதிர்பார்க்கிறோம்; மேலும் அவர்கள் இருதய கடினத்தி-ருந்து திருப்பப்படுவார்கள், எப்படியெனில் ஆவிக்குரிய இஸ்ரயே-னால் ஆசீர்வதிக்கப்படுகிற, இழந்து போனவைகளைத் திரும்பிப் பெறுபவர்களில் முதலாவதாக அவர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்த்து "உங்கள் இரக்கத்தின் மூலமாக அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" (ரோம. 11:31) என்று நாங்கள் நம்புகிறோம். இப்படியாக அவர்கள் முற்றுப்பெற்ற, மகிமையடைந்த கிறிஸ்துவின் சபை மூலமாக இரக்கம் பெற்ற பின்பு அவர்கள் பூமியின் எல்லாக் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும்

தேவனுடைய கருவிகளாக உபயோகிக்கப்படுவார்கள். இப்படியாக ஆபிரகாமின் வாக்குத்தத்தங்கள் இரண்டு சந்ததியினர் மேலும், அதாவது மாம்சத்தின்படி இருப்பவர்கள், மேலும் ஆவியின்படி இருப்பவர்கள் மேலும் நிறைவேறும். "நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது." ரோம. *4:16*

உங்கள் உண்மையுள்ள,

வேதாகம பாடங்களின் ஆசிரியர்

"இஸ்ரயேல் என்கிற பதம், காணாமல் போன பத்து கோத்திரத்தாருக்குத் தான் பொருந்தும்," "பாபிலோனின் சிறையிருப்புக்குப் பின்னர் பாலஸ்தீனாவுக்கு திரும்பி வந்தவர்களுக்கு மாத்திரம் தான் யூதா என்கிற பெயர் பொருந்தும்" என்று சொல்லுகிறவர்கள் கீழ்க்கண்ட சாதாரண கருத்துக்களுக்குப் பதில் சொல்லும் வரை அதை நிறுத்திக் கொள்ள வேண்டும். நம்முடைய ஆண்டவர் கூறினார் : "காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றபடியல்ல." *(மத். 15:24; 10:6)* அவர் யூதாவின் வீட்டாரைக் குறித்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. இருந்தாலும் அவர் போதனை செய்தது முழுமையாக பாலஸ்தீனாவில் தான். ஆனால் ஆங்கிலேய - இஸ்ரே-யர்கள் சொல்கிறார்கள், அது இஸ்ரயேல் வீடே அல்ல என்றும், அது யூதாவின் வீடு என்றும் சொல்லுகிறார்கள். மறுபடியும் இதே கருத்தின்படி பார்த்தால் பரிசுத்த பேதுரு, பரிசுத்த ஆவியின் உந்துத-னால் பெரிய தப்பறையைப் போதித்தார் என்பதாகும். நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் "ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரயேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள்." *(அப். 2:36)* ஆங்கிலேய இஸ்ரயேலர்கள் சொல்லுகிறார்கள், கிறிஸ்துவை அறைந்த குற்றத்தை செய்தவர்கள் இஸ்ரயேல் வீட்டாரல்ல, யூத வீட்டாரே என்கிறார்கள்.



நம்முடைய ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலரும் தவறு செய்துவிட்டார்கள் என்றும், ஆங்கிலேய இஸ்ரவேலரின் கருத்து சரியானது என்றும் யார் முடிவெடுத்தாலும், நாங்கள் சொல்லுவோம் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். நாங்கள் எடுத்துக் கொள்ளும் நிலை என்னவெனில், எங்கள் கருத்து நம்முடைய ஆண்டவரின் போதனையோடும் பரிசுத்த பேதுருவின் வார்த்தையோடும் புதிய ஏற்பாட்டின் போதனைகளோடும் மற்றும் காரண காரியத்தோடும் இசைந்து இருக்கிறது என்பதே.

இஸ்ரயேல் *(12 கோத்திரத்தார்)* ஆண்டவருக்கு உண்மையற்றவர்களாக இருந்தால் அவர்கள் மேல் வரும் என்று மோசே சொன்ன சாபங்கள் *(உபா.28:15, 46, 49, 63-69)* நம்முடைய ஆண்டவரின் நாட்களில் (முக்கியமாக இரண்டு கோத்திரத்தார், யூதா, பென்யமீன் மேலும், ஆனால் ஆண்டவரிடம் பயபக்தியாயிருந்த மற்ற பத்து கோத்திரத்தாரின் மேலும்) உண்மையாகவே சொல்லர்த்தமாக நிறைவேறி விட்டது என்று தெரிகிறது. நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டவைகள் மற்றும் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகள் அனைத்தும் அவர்கள் மேல் நிறைவேறும் என்று நம்முடைய ஆண்டவர் கூறியிருந்தார். அந்த தீர்க்கதரிசனங்கள் அவர்கள் மேல் முற்றிலுமாக நிறைவேறிற்று என்று அப்போஸ்தலர் பவுலும் கூறுகிறார். பார்க்க. *1 தெச.2:15,16*

ஆனால் பிரிட்டன் தேசம் இஸ்ரயே-ன் எந்த ஒரு பகுதியாகவாவது இருக்குமென்றால், இங்கே சொல்லப்பட்ட 64வது, 65வது வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை என்று தோன்றுகிறது.

★★★

அத்தியாயம் 9

# உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார்!

இம்மானுயே-ன் பிரசன்னத்தையும் அவரது ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலையும் காண்பிக்கும் தீர்க்கதரிசன ரூபகாரத்தின் சுருக்கம்

*"சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார் என்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன." ஏசா. 52:7*

இந்த புத்தகத்திலும் மற்றும் முந்தைய புத்தகங்களிலும் சொல்லப்பட்ட ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு தேவனுடைய உண்மையான விசுவாசிகளாகிய அவருடைய பிரியமான சீயோனுக்கு, இந்த மகிமையான இரகசியமாகிய "உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார்!" என்று அறிவிப்பதில் நமக்கு எந்த தயக்கமும் இல்லை. அடிக்கடி கேட்கப்பட்ட சபையின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மையாகவே தேவனுடைய ராஜ்யம் வந்திருக்கிறது. தற்கால பூமியின் ராஜாக்களின் நாட்களிலேயே, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட காலம் முடிவு பெறுவதற்கு முன்பே இது ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் இப்பொழுது எழுப்பப்பட்டு, நம்முடைய தலையும் ஆண்டவருமானவரோடு மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இன்னும் மாம்சத்தி-ருக்கும் "பாத" அங்கத்தினர்கள், ஏற்கெனவே தேவனுடைய பர்வதத்திற்கு (ராஜ்யம்) ஏறிச் சென்றிருக்கிற

மகிமையடைந்த கூட்டத்தாரின் உள்ளுணர்வைப் பற்றிக் கொண்டு மகா சிறப்பான மகிமையை பிரதிப-க்கிறார்கள். இது சீனாய் மலையி-ருந்து மோசே இறங்கி வந்தபோது பெற்றிருந்த மகிமையைப் போ-ருக்கிறது. அவர்கள் இணைந்து ஆண்டவரோடு சம்பாஷிப்பதினாலும், இம்மானுயே-ன் ராஜ்யம் துவங்கிவிட்டது என்கிற நற்செய்தியை ஒவ்வொரு நாட்டிலும் (மலைகள்) அறிவிப்பதினாலும் இந்த தூதுவர்களின் முகங்கள் பரலோக சந்தோஷத்தினால் பிரகாசிக்கிறது;இந்த சந்தோஷம் அவர்கள் இருதயத்தில் நிறைந்து, அவர்களது உதட்டில் வழிந்தோடுகிறது. நம்முடைய ஆண்டவரின் ராஜ்யபாரம் ஆரம்பித்து விட்டது என்று சீயோனுக்கு உறுதி செய்து, ஆயிரவருட யுகத்தின் சந்தோஷம் மற்றும் சமாதானமாகிய நற்செய்தியை கொண்டு வருகிறவர்களின் (கிறிஸ்துவின் பாதம்) பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாயிருக்கிறது!

எவ்வளவு அருமையான சத்தியங்கள்! தேவனுடைய ராஜ்யம் நிர்மாணிக்கப்படும் ஒழுங்கு; கர்த்தராகிய இயேசுவும் எழுந்த பரிசுத்தவான்களும் மாபெரும் அறுவடை வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கனமடைந்த அவரது சரீரத்தின் பாத அங்கங்களாகிய நாம் மாம்சத்தில் இருந்தாலும் அவர்களுடன் சக-ஊழியர்களாக இருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். நற்செய்தியை மனிதரிடையே அறிவிக்கவும், மகிமையான நீதியின் ஆட்சியை ஸ்தாபிக்க ஆயத்தம் செய்யவும், ஆச்சரியமும் துன்பமும் நிறைந்த நிகழ்வுகளின் அடையாளங்களை அறிவிக்கவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம்.

இவர்களைக் குறித்து தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருப்பதாவது: "ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார்;" "என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்." "மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடுங்கூட (பரிசுத்தவான்கள் அவரது பரிசுத்த தூதர்கள்) வருவார்;" "அக்கினி நதி (கடுமையான நியாயத்தீர்ப்பு, மிகுந்த உபத்திவ காலம்) அவர்



சந்நிதியி-ருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள் (அவரது பரிசுத்தவான்கள் மட்டுமல்ல, இன்னும் ஏராளமான மற்ற பிரதிநிதிகள்); கோடாகோடி பேர் (எல்லா மனுக்குலமும்) அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாய சங்கம் உட்கார்ந்தது; புத்தகங்கள் திறக்கப்பட்டது." யூதா 15; சக. 14:5; மத். 25:31; தானி. 7:10

தற்கால நிலைமை இப்படியாக இருக்கிறது: மகா நியாயாதிபதி வந்திருக்கிறார் - தாழ்மையான சரீரத்துடன் ப-க்காக முதலாம் வருகையில் வந்தது போல் அல்ல, ஆனால் ஆவிக்குரிய சரீரத்தில், தெய்வீக மகிமையின் அதிகாரத்தைத் தரித்துக் கொண்டு யேகோவா தேவனின் பிரதிநிதியாக, தீமையையும் அநீதியையும் என்றென்றும் முழுமையாக அகற்றவும், தேவனோடு இசைவாக இருக்க விருப்பமுள்ளவர்களை புதுப்பித்து பூரணத்தையும் நித்திய ஜீவனையும் அளிக்கவும் வந்திருக்கிறார். இப்போது தேவனுடைய திட்டம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன் ஒருக்காலும் இல்லாதபடி அதை புரிந்து கொள்ளும்படி செய்யப்பட்டிருக்கிறோம். தெய்வீக வெளிப்பாட்டின் புத்தகங்கள் திறக்கப்படுதல் சீக்கிரத்தில் நிறைவேறும். உலகத்தின் நியாயத்தீர்ப்பு பேர் கிறிஸ்தவ தேசங்களின் மேல் முன்னமே ஆரம்பித்துவிட்டது. இவ்விதமாக துவங்கிய மகா பெரிய வேலை, உலகம் சந்தேகிக்காவண்ணம் நமது ஆண்டவர், அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளாலும் முன்னறிவிக்கப்பட்ட படி குத்துண்டவரை, தேவனால் அனுப்பப்பட்ட மீட்பரும் இரட்சகருமானவராக உலகம் நோக்கிப் பார்க்கும் வரை, பரிசுத்தவான்களும் கூட தங்களது விசுவாசத்தைத் துவக்கி முடிப்பவராக இயேசுவை நோக்கிப் பார்க்கும் வரை, மாபெரும் உச்சகட்டத்திற்கு முன்னேறும். சபையில் ஆரம்பமான கணக்கு பார்த்தல் அல்லது நியாயத்தீர்ப்பு சீக்கிரத்தில் எல்லா ஜீவனுள்ள நாடுகளுக்கும் பரவும். மரித்த மகா சேனைகள் குறித்த காலத்தில் முறைப்படி எழுப்பப்படுவார்கள்.

ராஜ்யத்தின் மகிமையடைந்த அங்கங்கள் திரைக்குப்

பின்னால், தற்காலத்திற்குரிய காரியங்களை உருவேற்படுத்தும் வேலைகளையும் மகிமையின் ஆளுகைக்குரிய ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கின்றனர். திரைக்கு இந்தப் பக்கம் இருப்பவர்களுக்கும் முக்கியமான வேலை இருக்கிறது. தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்த்து அவர்களது நெற்றியில் சத்திய அறிவினால் முத்திரை போடுவதும் (வெளி. 7:3) தற்கால சத்தியமாகிய அரிவாளைக் கொண்டு கோதுமையை பதரி-ருந்து பிரிப்பதும், "உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார்!" என்கிற இந்த முக்கிய செய்தியை சீயோனுக்கு அறிவிப்பதும் இவர்களது வேலை. இந்த வேலையும் கூட மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது; முத்திரை போடப்பட்ட எல்லா விசுவாசிகளும் மற்றவர்களை முத்திரை போடுவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கிறார்கள்; தெரிந்து கொள்ளப்பட்டவர்களை கூட்டிச் சேர்த்து மகிமைப்படுத்துகிற மாபெரும் வேலை சீக்கிரத்தில் நிறைவேறும்.

ஆதி சபையின் அங்கங்கள் காணும்படி சென்றவர், திரும்பி வரவேண்டும் என்பதே அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதம். யுக முழுவதிலும் சோதிக்கப்பட்டு உபத்திரவப்பட்ட விசுவாசிகளுக்கு அவரது பிரசன்னத்தின் நம்பிக்கையே ஆசீர்வாதமாக இருந்திருக்கிறது. அவரது சாய-ல் எழுந்திருப்போம் என்ற எதிர்பார்க்குதலுடன் நித்திரைக்குள் பிரவேசித்த அவர்கள் அது வரை அவரது பிரசன்னத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்; இஸ்ரயே-ன் நம்பிக்கைக்கு நீண்ட காலம் எதிர்பார்த்திருந்த பிரசன்னத்தின் அடையாளங்களை, இன்றைய பரிசுத்தவான்களே, உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்.

ஏசாயா தீர்க்கத்தரிசி முன்னறிவித்தபடி, மாம்சீக சீயோனிலே கர்த்தரோடு செய்த உடன்படிக்கையை மறந்தவர்கள் அல்லது கைக்கொள்ள தவறிய பாவிகள், அவரது முகத்தின் பிரகாசத்தை மறைக்கும் காரிருளைக் கண்டு பயப்படுகிறார்கள். மாயக்காரரை நடுக்கம் பிடிக்கிறது. உண்மையான சீயோன் விசுவாச கண்களுடன் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காண்கிறார்கள். தூரத்திலுள்ள தானியமும் திராட்சையும் நிறைந்த தேசத்தையும் பார்க்கிறார்கள்.



இந்த வல்லமையுள்ள ராஜாவும், மகா இரட்சகருமானவர் விழுந்து போன மனுக்குலத்தை வழி நடத்த வந்திருக்கிறார். இந்த தேசத்தின் நகர வாசிகள் வியாதிப்பட்டிருக்கிறேன் என்று சொல்வதில்லை. அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும். *ஏசா. 33:14, 17,24*

ஆயிர வருடத்திற்கு பின்னால் இருக்கும் அந்த மகிமையின் தேசத்தை, புதுப்பிக்கப்பட்ட பரதீசை நாம் இப்போது தெளிவாக காண்கிறோம். இப்போது நம் மத்தியி-ருக்கிற, மோசேயைக் காட்டிலும் பெரிய தீர்க்கதரிசியின் தலைமையின் கீழ் அங்கே சந்தோஷமும் பாட்டும் இருக்கும். வெற்றிகரமாக மீட்கப்பெற்ற திரளானவர்கள் பரிசுத்த பெரும்பாதையின் வழியாக பாவம், மரணம், மற்றும் எல்லா தீமையும் நீக்கப்பெற்ற அந்த நேர்மையான தேசத்திற்கு நடத்தப்படுவார்கள்.

"யேகோவாவினுடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவு கூறுதலைக் கொண்டாடுங்கள். அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." சீக்கிரத்தில் தூய்மைப்படுத்தப்பட்டு, மனம் மாற்றப்பட்ட உலகம் இப்படியாக துதித்துப் பாடும். "என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப் பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்து போட்டு, மகிழ்ச்சி என்னும் கட்டினால் என்னை இடை கட்டினீர். என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்." *சங். 30: 4,5,11,12*

"உறுதியான தீர்க்கதரிசன வசனத்தில்" நன்றாக பதித்த நமது படிகளை நாம் இப்போது ஞாபகத்துக்கு கொண்டு வருவோம். அதன் மூலம் நாம் இருதயத்திற்கு உற்சாகமும், ஜீவனுக்கு எழுச்சியையும் கொடுக்கக்கூடிய அறிவுக்கு வந்திருக்கிறோம். உலக சரித்திரத்திலேயே, இந்த காலம் மிகவும் ஆச்சரியமான காலமாக நமக்கு பின்னா-ருக்கிற எல்லா தீர்க்கதரிசன அடையாளங்களும் காண்பிக்கின்றன. அவைகள் 1873-ருந்து நாம் ஏழாவது ஆயிர

வருடத்தில் வாழ்கிறோம் என்பதைக் காண்பிக்கின்றன. அதாவது புறஜாதியாருக்கு ஆளுகைக்கு கொடுக்கப்பட்ட "புறஜாதியாரின் காலம்" 1914ல் முடிவடையும் என்பதையும், ஆளுகைக்கு உரிமைக்காரர் வருவதற்கு 1874லே குறித்த காலமாக இருக்கிறது என்பதையும் அவைகள் காண்பிக்கின்றன. இந்த புறஜாதியாரின் காலத்திலேயே அவர்களது குத்தகைக் காலம் முடிவடையும் முன்பே, பரலோகத்தின் தேவன் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்பதையும் 1878 முதல் அந்த இராஜ்யத்தின் ஸ்தாபகம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதையும் அவைகள் காண்பிக்கின்றன; கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழவேண்டிய காலம் அது என்பதையும் காண்பிக்கின்றன; ஆதலால் அந்த நாள் முதற்கொண்டு நமது தலையும் ஆண்டவருமாகிய கிறிஸ்து மட்டுமல்ல, இந்த எல்லா பரிசுத்த தூதுவர்களும் காணக்கூடாதபடி இந்த உலகில் பிரசன்னமாயிருக்கிறார்கள் என்பதையும் காண்பிக்கின்றன. மேலும், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் உயிர்த்தெழுத-ன் நாள் சரீரத்தின் தலையானவரின் உயிர்த்தெழுத-ன் நாளுக்கு இணையாக இருக்கிறது என்பதையும் கவனிக்கவும். நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதல் முதல் வருகையில் அவர் மேசியாவாக வந்த கிபி29க்கு மூன்றரை ஆண்டுகளுக்கு பிறகு நடந்தது; அவரது சரீரமாகிய சபையின் உயிர்த்தெழுதல் அவரது இரண்டாம் வருகையின் நாளாகிய அக்டோபர் 1874க்கு மூன்றரை ஆண்டுகளுக்கு பிறகு 1878ல் நடைபெற வேண்டியிருந்தது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

தீர்க்கதரிசனமானது நமது ஆண்டவரின் இரண்டாம் வருகையில் பிரசன்னமாகும் விதத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறது. அவர் பிரசன்னமாயிருந்தாலும், அவரையோ, அவரது சாய-ல் தற்போது எழுந்த பரிசுத்தவான்களையோ மாம்சீக கண்களால் பார்ப்போம் என்று எதிர்பார்க்கக் கூடாது."உறுதியான தீர்க்கதரிசன வசனத்தில்" விசுவாசம் வைத்து விசுவாசக் கண்களால் மட்டுமே பார்க்கலாம், "கிறிஸ்துவின் பாத அங்கமாக" இருப்பவர்களும் சீக்கிரத்தில் அதே மகிமையின் சாயலுக்கு மாற்றப்படுவார்கள் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். அவர்கள் அப்பொழுது ஆவியின் ஜீவியாக கிறிஸ்துவைப் போலவும், எழுந்த



அவரோடு இருக்கும் எல்லா பரிசுத்தவான்களைப் போலவும் இருந்து, குறித்த காலத்தில் அவர் இருக்கிறவண்ணமாகவே அவரைத் தரிசிப்பார்கள். (1 யோவா. 3:2) முன்னறிவிக்கப்பட்ட எ-யாவும், பாவமனுஷனும் அவரது வருகைக்கு முன் வரவேண்டும் என்பதையும் இவைகள் நிறைவேறிவிட்டன என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

தீர்க்கதரிசி தானியே-ன் கவனத்தை ஈர்த்த குறிக்கப்பட்ட தேதியை நாம் கவனித்தோம். 2300 நாட்கள் என்பது 1846 ஐக் குறிப்பிட்டது. அந்த காலம் தான் போப்பரசின் கொள்கைகளாலும் பிழைகளாலும் மாசுபடுத்தப்பட்ட தேவனுடைய பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் காலம் என்பதையும், அந்த காலத்தில் சுத்திகரிக்கப்படுதல் நிறைவேறிவிட்டது என்பதையும் நாம் கவனித்திருக்கிறோம். 1260 நாட்களின் நிறைவேறுதலை நாம் பார்த்திருக்கிறோம். அல்லது காலம், காலங்கள், அரைக்காலம் இந்த காலமாகிய போப்பரசின் துன்புறுத்தும் காலத்தின் ஆரம்பத்தையும் முடிவு காலமாகிய 1799ல் அதன் முடிவையும், நாம் பார்த்திருக்கிறோம். 1290 நாட்கள் என்பது தீர்க்கதரிசனத்தின் இரகசியத்தை அறிந்து கொள்ளும் காலத்தின் ஆரம்பம் கிபி 1829 என்பதையும், அது உச்ச நிலையை அடைந்து கிபி 1844ல் இரண்டாம் வருகையின் இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது என்பதையும் அது குறிப்பிட்டது என்பதையும் நாம் பார்த்தோம். ஆண்டவரின் முன்னறிவிப்பின்படி அவரது உண்மையான வருகைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னதாகவே புத்தியுள்ள கன்னிகைகள் மணவாளனை சந்திக்கச் சென்றார்கள். முன்னமே சொல்லப்பட்ட காத்திருத்தலும் நிறைவேறியது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். மேலும், பதினைந்து வருடங்களாக "இதோ, மணவாளன்" என்கிற நடு ராத்திரி சத்தம், சென்று விட்டது என்பதையும் பார்த்தோம். 1335 நாட்கள் குறிப்பிடுகிற 1874 தான் நமது ஆண்டவரின் இரண்டாம் வருகையின் சரியான தேதி என்பதையும் மிகவும் சந்தோஷத்துடன் பார்த்தோம். அந்த நாளி-ருந்து தேவ திட்டத்தின் ஆச்சரியமான இரகசியங்கள் தெளிவாக வெளியாக்கப்பட்டு வருவதின் மூலம் நாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை அனுபவித்து வருகிறோம்.

குறிக்கப்பட்ட காலத்தின் படியும் முறைமையின் படியும் மகா

அறுவடையின் வேலை 1874 இலையுதிர் காலத்தி-ருந்து படிப்படியாக அமைதியாக, ஆனால் வேகமாக தொடர்ந்து முன்னேறி வருகிறது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். கோதுமை மணிகள் சேர்க்கப்பட்டு, களைகள் சேர்த்து கட்டப்படுவதையும் நாம் கவனித்திருக்கிறோம். ராஜா தமது அதிகாரத்தை எடுத்துக் கொண்ட 1878 கோடை காலத்தி-ருந்து உறுதி செய்யப்பட்ட ஆசீர்வாதமும் சந்தோஷமும் நமக்கு வந்திருக்கிறது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களை உயிர்த்தெழுப்பி தமது ராஜ்ய பாரத்தை ஆரம்பித்து விட்டார். அவரது அங்கங்கள் மகிமைக்காக இனி நித்திரையில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை; மரணத்தில் தனது ஓட்டத்தை முடிக்கும் அந்த நிமிஷம் ஒவ்வொருவருக்கும் முழு பூரண தெய்வீக சுபாவத்திற்கும் சாயலுக்கும் மறுரூபமடையும் சந்தோஷமான நிமிஷமாகும். உண்மையில் "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்." அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். ஆனாலும் அவர்களது கிரியைகள் தொடரும். திரைக்கு இந்த பக்கம் இருக்கும் ஜெயம் கொண்டவர்களின் கிரியையைப் போலவே, திரைக்கு அப்பால் இருப்பவர்களின் கிரியையும் இருக்கும். திவ்விய சுபாவத்தின் மகிமையில் பிரவேசித்தவர்களுக்கு இனி அவர்களது கிரியைகள் கடினமானதாக, களைப்படையச் செய்யக் கூடிய ப-யாக இருக்காது.

இவற்றோடு கூட, இஸ்ரயேலர், இயேசு கிறிஸ்துவைக் குறித்த தவறான எண்ணம், கடினமான மனது ஆகியவற்றி-ருந்து அவர்கள் திரும்புதல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு வழி திறக்கப்படுதல், புற தேசத்தி-ருந்து அவர்கள் வெளியேற்றப்படுதல், பாலஸ்தீனாவுக்கு செழிப்பு திரும்புதல் ஆகியவையெல்லாம் தேவ கிருபை மாம்சீக இஸ்ரயேலுக்கு திரும்புதல் ஆரம்பம் என்பதையும் நாம் பார்த்தோம். இந்த வெளியரங்கமான அடையாளங்களெல்லாம், தீர்க்கதரிசன காலத்தையும் நேரத்தையும் குறிப்பிடுகிறதோடு அல்லாமல் நாம் சுவிசேஷ யுக முடிவில் ராஜ்ய வகுப்பார் தெரிந்தெடுக்கப்படும் குறித்த காலத்தில் இருக்கிறோம் என்பதற்கு நல்ல அத்தாட்சிகள் ஆகும். இஸ்ரயேலர்களது மனக்கடினமும் அவர்கள் தள்ளப்படும் நிலையும் கிறிஸ்துவின் சரீர அங்கம் தெரிந்து கொள்ளப்படும் வரை தான் என்று வேதம் உறுதி கூறுகிறது.



இவ்விதமாக முடிவு காலத்தின் கடைசி நாளில், யுகத்தின் அறுவடையின் மத்தியில் நிற்கிறோம். இன்னும் அடுத்த இருபத்தி மூன்று வருடங்களில் (ஆசிரியர் முன்னுரையைப் பார்க்கவும்) (இந்த புத்தகம் 1890ல் எழுதப்பட்டது) நிம்மதியற்ற இந்த காலத்திற்குரிய சிக்கலான கேள்விகளுக்கெல்லாம் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். உறுதியான தீர்க்கதரிசன வசனத்தில் விசுவாசம் கொண்டிருக்கிறவர்களுக்கு அவர்களது ஆர்வமும் உணர்ச்சியும் எத்தகையானது! மிக முக்கியமான குழப்பதிற்குரிய பிரச்னைகள் மகா ஆபத்தில் உச்சக் கட்டத்தை அடையும். இது குறித்து தானியேல் நம்மை எச்சரிக்கிறார். இவைகள் பொது ஜனங்களின் மனதை தூண்டி பயங்கரமான ஆபத்திற்கு துரிதமாக சென்று கொண்டிருக்கின்றன. இந்த மகா ஆபத்தாகிய "நீதியை சரிக்கட்டும் நாள்" ஜாதிகளின் மேல் "உக்கிரம்" போன்றவைகளை நாம் அடுத்த புத்தகத்தில் பார்க்கலாம். ஏனெனில் அது மிக முக்கியமானதும் அதிக இடத்தை நிரப்பக் கூடியதுமாய் இருக்கிறது. உபத்திரவத்திற்கு பின்னால் கிறிஸ்துவின் ஆளுகையின் அனுகூலமான ஒழுங்கிற்குப் பின்னால், மகிமையான இளைப்பாறுத-ன் தேசத்தையும், இரட்சிக்கப்பட்ட, புதுப்பிக்கப்பட்ட மனுக்குலம் ஆசீர்வாதமாய் சுதந்தரித்துக் கொள்வதையும் நாம் காண்பதால் நாம் களிகூறுவோமாக.

இவைகள் உண்மையில் அற்புதமான காலங்கள், எனினும் சிலரே உறுதியான தீர்க்கதரிசன வசனத்தை கவனிக்கின்றனர். பெரும்பாலானோர் தற்கால குறிப்புகளின் நிலையிலேயே எதிர்காலத்தை காண்கின்றனர். மேகங்கள் (உபத்திரவம்) கூடி வருவதை மனிதர்கள் காண்கின்றனர். தேவனுடைய வசனத்தைத் தவிர எந்த ஒரு நம்பிக்கையின் அம்சத்தையும் அறிய முடியவில்லை.

ஆம், பிரியமான ஆண்டவரும் இரட்சகருமானவரே, உம்முடைய அருமையான பிரசன்னத்தை உணர்ந்திருக்கிறோம். எங்களுடைய இந்த நாட்களில் உம்முடைய கிருபையுள்ள ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுத-ன் ரூபகாரங்களில் களி கூறுகிறோம். தெய்வீக சாட்சியத்தின் கதிர்கள் குவிந்து வருவதை, நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், இதுவரை கருகலாக இருந்த உமது வார்த்தைகள், நீண்ட காலமாக மறைக்கப்பட்டிருந்த எகிப்தின்

அற்புதச் "சாட்சி" ஆகியவைகளின் மூலம் எங்கள் இருதயம் நன்றியறித-னால் நிரம்பி வழிகிறது. அந்த மகிமையின் நாள் சீக்கிரத்தில் திறக்கப்படவிருக்கிறது. மேகங்களும் காரிருளும் உம்முடைய மகிமையை யாரும் காணா வண்ணம் மறைத்தாலும், உமது நிச்சயிக்கப்பட்டவர்களின் விசுவாசக் கண்கள் காணும். குவித்திருக்கும் இந்த பிரகாசமான ஒளியில், உமது விலையேறப்பெற்ற சத்திய கற்கள் ஒன்றன்பின் ஒன்றாக இதுவரை காணா வண்ணம் இப்போது பிரகாசிக்கிறது. உமது கம்பீரமான பிரசன்னத்தை அவை பிரதிப-க்கின்றன.

"நீதிமான்களே, யேகோவாவிற்குள் மகிழ்ந்து, அவருடைய பரிசுத்தத்தின் நினைவு கூறுதலைக் கொண்டாடுங்கள்." "சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாக கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்; உன்னதமானவராகிய யேகோவா பூமியின் மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார்."

★★★

# தேவனுடைய கல்

### மற்றும்

# தீர்க்கதரிசியின் உறுதிபடுத்தும் சாட்சியம்

## எகிப்தில் உள்ள மகா பிரமிட்

### (கூர் நுனிக் கோபுரம்)

*அத்தியாயம் 10*

## முன்னுரை

இந்த அத்தியாயம் எழுதப்படும் போது மதிப்புக்குரிய ஸ்காட்லாந்து அரசின் முன்னாள் வானசாஸ்திரியான பேராசிரியர் C.பியாஸ்ஸி ஸ்மித் F.R.SE., F.R.A.S. அவர்களின் அன்பான விமர்சனம்.

சகோதரன் வில்-யம் எம்.ரைட் என்பவர் (William M. Wirght) மகா பிரமிட் பற்றி இந்த அதிகாரம் எழுதப்படுவதைக் குறித்து அறிந்தவுடன் இது வெளிவரும் முன் வாசிக்க வேண்டும் என்று விரும்பினார். ஏனெனில் அவர் பிரமிட் குறித்து நன்கு அறிந்திருந்தார். நாங்கள் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு, அதைக் கொடுத்து, படித்து முடித்தவுடன் அதைப்பற்றிய விமர்சனம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். எனவே அவர் தன்னைவிட அதிகளவில் பிரமிட் பற்றிய அறிவும், பிரமிட் பற்றி பல ஆராய்ச்சிகள் செய்தவருமான பேராசிரியர் சி.பியாஸ்ஸி ஸ்மித் (Prof. C. Piazzi Smyth) என்பவருக்கு அதை அனுப்பி வைத்தார். ஏனெனில் அக்காலத்தில் அவரே பிரமிட் பற்றி அதிகம் அறிந்த மனிதராக எண்ணப்பட்டார். இந்த மகா பிரமிட்டைக் குறித்து அது கட்டப்பட்ட விதம், அதன் அளவு பற்றிஉலகத்தில் உள்ள எந்த மனிதனைக் காட்டிலும் அதிக அறிவு, அனுபவம் பெற்றவர் என்று எண்ணப்படுபவர். அவரிடம் இந்த மூலப் பிரதியைக் கொடுத்து கவனமாக வாசிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் சத்தியத்தினிமித்தம் அவர் அதை கவனமாக ஆராய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவருடைய விமர்சனத்தோடு அந்த நகல் பெறப்பட்டு ஆசிரியரிடம் வந்தடைந்தது. சகோ. ரைட் மற்றும் பேராசிரியர் ஸ்மித் ஆகிய இருவருக்கும் நாங்கள் நன்றி செலுத்துகிறோம். அதில் அவர்கள் மூன்று மாற்றங்கள் ஏற்படுத்தக் கேட்டிருந்தார்கள். ஆனால் அவைகள்

விசேஷமானவைகள் அல்ல என்று அறிந்து கொண்டோம். ஒரு விமர்சனம், அளவுகளைக் குறித்ததாகும். அது ஒரு அங்குலம் வித்தியாசத்தைக் காட்டுவதாக இருந்தது. அதை நாங்கள் அப்படியே ஏற்றுக் கொண்டு திருத்தியுள்ளோம்.

நம்முடைய வாசகர்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று எண்ணி அந்தக் கடிதத்தை கீழே கொடுக்கிறோம்.

**பேராசிரியர் சி. பியாஸ்ஸி ஸ்மித் அவர்களின் கடிதம்**

அன்புடையீர்,

உங்களுடைய நண்பர் எழுதியவற்றை படிப்பதற்கு நான் நினைத்ததை விட சற்று அதிக காலம் எடுத்துள்ளேன். ஆனால் இப்பொழுது மிகவும் சிரத்தையுடன் ஆராய்ந்து வார்த்தை, வார்த்தையாக படித்து முடித்து விட்டேன். என்னால் செய்ய முடிந்தது அது ஒன்றுதான். ஆனாலும் நீங்கள் மிக சிரமம் எடுத்து, சரியாகக் கட்டி பதிவுத் தபா-ல் எனக்கு அனுப்பியிருந்தீர்கள்.

நான் அதன் பக்கங்களை வாசித்த போது அதன் ஆசிரியரின் வல்லமை, விசேஷமான குணாதிசயங்கள், இயல்பான, சுயமான குணம் அருமையாகத் தெரிகிறது. என்னுடைய அடுத்த பிரமிட் பற்றிய புஸ்தகத்திற்கு இதி-ருந்து அவருடைய பெயரில் சில குறிப்புகளை எடுக்க அதிகமாக நினைத்தாலும் நான் அப்படிச் செய்யவில்லை. ஆனால் வேதாகம பாடங்களின் ஆசிரியர் இதை பிரசுரிக்கும் வரை மிக அமைதியுடன், நன்றியுள்ள மனதுடன் காத்திருப்பேன். ஆகவே பிரமிட்டின் பல்வேறு பகுதிகளில் வருஷங்களைப் பற்றி அவர் நல்லபடியாக புதிதானவைகளைக் கூறியுள்ளார் என்று மாத்திரம் கூறுவேன். விசேஷமாக முதலாவது ஏறுகின்ற பாதையைப் பற்றியும் அதன் கருங்கல்-லான அடைப்பான், கம்பீரமான நீண்ட தாழ்வாரம் பற்றியும் அவர் கூறியுள்ளார். அது ஆண்டவருடைய வாழ்க்கையை விளக்கிக் கூறுகின்றது. எப்படியெனில் இராஜாவின் அறைக்கும், கருங்கல்லுக்கும் இடையில் உள்ள ஒரு இணையான காரியம் ஆசாரிப்புக் கூடாரத்திற்கும், அதன் பொன்னிற்கும் இடையில் ஒத்து இருப்பதைக் காட்டுகிறது. பொதுவாக வேதத்திற்கும், மகா



பிரமிட்டுக்கும் இடையே ஒற்றுமை இருப்பதைக் குறித்து நன்கு எழுதப்பட்டுள்ளது.

இதற்கும் முன்பாக வேதாகம பாடங்கள் இரண்டு தொகுதிகளை (Volumes) நீங்கள் அனுப்பியதற்கு மிக நன்றி. இதற்காக நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. ஏனெனில் நான் எதிர்பார்த்தது போன்று அப்படி ஒன்று புதிய விஷயங்கள் கிடையாது என்று நினைத்து பாதி புத்தகம் மட்டும் தான் படித்தேன். ஆனால் 3வது புத்தகத்தில் பிரமிட் பற்றியவைகளை நன்றாகப் படித்த பின்னர், இது எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என்று கண்டு, மற்ற இரண்டு புத்தகங்களையும் படிக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளேன்.

உங்கள் அன்புள்ள,

சி.பியாஸ்ஸி ஸ்மித்

அத்தியாயம் 10

# தேவனுடைய கல் மற்றும் தீர்க்கதரிசியின் சாட்சியம், எகிப்தில் உள்ள மகா பிரமிட் (கூர்நுனிக் கோபுரம்)

மகா பிரமிட் (கூர்நுனிக் கோபுரத்தை) குறித்த பொதுவான விளக்கம் - கிறிஸ்தவர்களுக்கு ஏன் விசேஷமான ஆர்வம் - பிரமிட் சத்தியத்தின் பெரிய பண்டக சாலை - விஞ்ஞான, சரித்திர, தீர்க்கதரிசன உண்மைகள் - வேதாகமம் அதைப்பற்றி கூறுவது - ஏன், எப்பொழுது, யாரால் கட்டப்பட்டது - அது இருக்கும் இடத்தின் முக்கியத்துவம் - அதன் விஞ்ஞான பூர்வமான பாடங்கள் - மீட்பின் திட்டத்தைப் பற்றிய அதன் சாட்சி - யுகத்தைப் பற்றிய திட்டம் - கிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும் காட்டப்பட்டுள்ளது - உலகத்தின் கீழ்நோக்கி வரும் நிலை, மகா உபத்திரவத்தில் முடிவடைவது - உபத்திரவத்தின் தன்மை - பெரிய சீர்திருத்த இயக்கம் குறிக்கப்பட்டுள்ளது - யூத யுகத்தின் கால அளவு காட்டப்பட்டுள்ளது - சுவிசேஷ யுக சபையின் பரம அழைப்பு காட்டப்பட்டுள்ளது - அர்ப்பணம் செய்த சபையின் ஓட்டம் - பரம அழைப்பின் முடிவு குறிக்கப்பட்டுள்ளது - கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் காலம் - இழந்தவற்றைத் திரும்பிப்பெறும் ஆசீர்வாதங்கள் உலகத்திற்கு எப்படி கிடைக்கும்

என்பது குறிக்கப்பட்டுள்ளது - ஆயிரம் வருடத்தின் போது உலகத்தின் போக்கு - அதன் முடிவு - பிரமிட்டில் காட்டப்பட்டுள்ளபடி மாம்சீக, ஆவிக்குரிய நிலைமைகளின் வித்தியாசங்கள் - பிரமிட் நாத்திகம், தெய்வ நம்பிக்கையின்மை மற்றும் எல்லா பரிணாமக் கொள்கைகளையும் மறுக்கிறது - வேதத்தின் திட்டத்தையும் அதன் குறிக்கப்பட்ட காலங்களையும் வேளைகளையும் சரிபார்க்கிறது.

"அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு ப-பீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும். அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்." ஏசா. 19:19,20

**ப**ழங்காலத்தினர் உலகத்தின் ஏழு அதிசயங்களைக் குறித்து மறு கணக்கீடு செய்தனர். அதில் முதல் இடத்தில் இருப்பது கீஸா (Gizeh)வில் உள்ள மகா பிரமிட் ஆகும். அது எகிப்தில் இருக்கிறது. அது தற்கால கெய்ரோ நகரத்தில் இருந்து வெகுதூரத்தில் இல்லை. உலகத்தில் உள்ள வேறு எந்தக் கட்டடமும் அதன் அளவிற்கு ஒத்ததாக இல்லை. இந்த தேசத்தில் கருங்கல்லைக் குறித்து அதிகம் அறிந்த மனிதர்களில் ஒருவர் பிரமிட்டை தானே சென்று பார்த்து ஆராய்ந்தார். அவர் கூறுகிறார்: "பிரமிட்டில் உள்ள கற்கள் ஒரு தூணைக் காட்டிலும் நிறையில் அதிகமாக 3 அல்லது 4 மடங்கு காணப்படுகிறது. நான் ஒரு கல்லைப் பார்த்தேன். அதன் எடை கிட்டத்தட்ட 880 டன் ஆகும். 30 அடி நீளம் உள்ள கற்கள் ஒன்றோடு ஒன்று மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறது. இதன் இணைப்பில் ஒரு பேனாக் கத்தியை திணித்தாலும், ஒரு இடைவெளியை காண முடியாது. அவைகள் காரைகள் கொண்டு (Mortar) இணைக்கப்படவில்லை. மகா பிரமிட்டில் இவ்வளவு அருமையாக 30 அடி நீளமுள்ளவைகளில் மேல்பக்கம் பூரணமாக இணைந்து இருக்கும்படி செய்ய எந்த இயந்திரமும் இப்பொழுது கிடையாது." அது அமைந்திருக்கும் இடம் 13 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். அது 486 அடி உயரமும், 764 அடி அடிப்பாகமும் கொண்டதாக இருக்கிறது. மகா பிரமிட்டின் எடை கிட்டத்தட்ட ஆறு மில்-யன் டன் ஆக இருக்கலாம் என்றும், அதை



அகற்றுவதற்கு 6000 நீராவி இயந்திரங்கள் தேவைப்படும் என்றும் அவைகள் ஒவ்வொன்றும் 1000 டன் எடையை இழுக்கும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. சொல்லப்போனால் அதை உடைக்க வேண்டும் என்றால், அதற்கான தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு எகிப்தின் செல்வம் போதாது. இந்தக் குறிப்புகளில் இருந்து என்ன புரிகிறதென்றால், அதை வடிவமைத்தவர் மகா பெரியவர்; அவர் யாராயிருந்தாலும் அது அழியாத நினைவுப் பொருளாக இருக்க வேண்டும் என்று விரும்பினார் என்பதுதான்.

நாம் விரும்புகிறபடி எந்தக் கோணத்தி-ருந்து அதை நோக்கினாலும், உலகத்திலேயே மிகவும் குறிப்பிடத் தகுந்த கட்டடம் பிரமிட் தான். ஆனால் கடந்த 32 வருடங்களாக நடந்து கொண்டு இருக்கிற அதைக் குறித்த ஆராய்ச்சியில், தேவனுடைய வார்த்தையில் நன்கு கற்று அறிந்த கிறிஸ்தவனுக்கு அது அதிக ஆர்வத்தை கொடுக்க கூடியதாக இருக்கிறது. ஏனெனில், அது கற்றுக் கொடுப்பதற்குரிய விசேஷமான பொருளாகவும், தீர்க்கதரிசிகளின் கூற்றுக்கு இசைவாகவும் கடந்த, நிகழ்கால மற்றும் எதிர்கால தேவனுடைய திட்டத்தைக் குறித்து ஒரு வரைபடத்தைப் போலவும் காணப்படுகிறது.

மேலும், நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது என்னவெனில், இங்கு சொல்லப்பட்ட மகா பிரமிட்டைக் காட்டிலும் வேறு சில பிரமிட்டுகள், சில கற்களினாலும், சில செங்கற்களினாலும் கட்டப்பட்டவைகள். ஆனால் மற்றவைகள் எல்லாம் இதைப் போன்று இருக்குமாறு முயற்சிக்கப் பட்டவைகள் தான். அவைகள் எல்லாம் அளவிலும் நுணுக்கத்திலும் உட்புற ஒழுங்குகளிலும் குறைவுள்ளவைகள் தான். மேலும், இவைகள் மகா பிரமிட்டைப் போன்று அடையாள அம்சங்கள் எதுவுமின்றி இருக்கிறது. ஆனால் அவைகள் எகிப்தின் இராஜ குடும்பங்களில் மரித்தவர்களை வைக்கும் கல்லறையாக அமைக்கப்பட்டு இருப்பது தெரிகிறது.

ஆனால் மகா பிரமிட் முக்கியமான உண்மைகளின்- விஞ்ஞான, சரித்திர, தீர்க்கதரிசனங்களின் பண்டக சாலையாக

காணப்படுகிறது. வேதத்தின் முக்கியமான அம்சங்களையும், சத்தியங்களையும் சரியான அடையாளங்களாக, அழகாக காட்டுகிறதாக இருப்பதோடு அதன் சாட்சி வேதாகமத்திற்கு ஒத்ததாகவும் இருக்கிறது. ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்ட எழுத்திற்கு (வேதத்திற்கு) மேலாக கூட்டப்படுவதாகவும் அது இல்லை. அந்த வெளிப்பாடு, முற்றுமானது, பூரணமானது, இதற்குமேல் எதுவும் கூட்டப்பட அவசியமில்லை. ஆனால் அது தேவனுடைய திட்டத்திற்கு மிகவும் பலமான உறுதிப்படுத்தும் ஒரு சாட்சியமாக இருக்கிறது. ஒரு சில மாணவரே அதை கவனமாக ஆராய முடியும்; அதன் சாட்சியம் எழுதப்பட்ட வார்த்தைக்கு இசைவாக இருப்பதை கவனிக்க முடியும்; அதன் கட்டுமானம் அதே திவ்ய ஞானத்தினால் திட்டமிடப்பட்டு ஏற்படுத்தப்பட்டது என்பதையும், மேலே சொல்லப்பட்ட தலைப்பு வசனத்தில் தீர்க்கதரிசியால் கூறப்பட்ட சாட்சியின் ஸ்தம்பம் இதுதான் என்பதையும் எல்லாராலும் அறிந்து கொள்ள முடியாது.

அது தேவனுடைய வழிநடத்துத-ன்படியும், அது மனிதர்களுக்கு அவருடைய சாட்சிகளில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் கட்டப்பட்டிருந்தால், இதைக் குறித்த குறிப்பு தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில் இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், முடிவு காலம் வரை அது இரகசியமாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாக இருப்பது தெரிகிறபடியால் சாட்சியாக இருக்கின்ற அதன் அம்சங்கள் அப்படியான நிலைமைக்குட்பட்டு இருப்பதால் அதைப் பற்றிய குறிப்புகள் மறைந்து இருக்கக்கூடும் என்று நாம் எண்ணலாம். அறிந்து கொள்ளப்பட வேண்டிய குறித்த நேரத்தில் தான் அது விளங்கும்.

மேற்கூறப்பட்டபடி ஏசாயா எகிப்து தேசத்தில் ஒரு ப-பீடமும் ஒரு ஸ்தம்பமும் உண்டு என்று கூறுவதோடு, "அது எகிப்து தேசத்தில் சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும், சாட்சியுமாயிருக்கும்" என்கிறார். மாபெரும் இரட்சகர் மற்றும் விடுதலையாக்குகிறவர் திரும்பி வந்து, ஒடுக்கப்பட்டு இருக்கிறவர்களின் சங்கி-களை உடைத்து, பாவத்தில் சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கும் நாளிலே அது ஒரு



சாட்சியாக இருக்கும் என்று அதன் அமைப்பு காண்பிக்கிறது. இதைக் குறித்து நமது ஆண்டவர் தமது முதலாவது வருகையின் போது பிரசங்கித்தார். *(லூக். 4:18)* இந்த தீர்க்கதரிசனத்தின் நோக்கம் மங்கலாகத்தான் தெரிகிறது. ஆனாலும் எகிப்து தேசம் மனுக்குலத்திற்கு அடையாளமாக இருப்பதாக உணரப்படும் வரை இந்த தீர்க்கதரிசனம் மங்கலாக இருக்கிறது. வீணான தத்துவங்களினால் நிறைந்து, அவர்கள் உண்மையான வெளிச்சத்தை அறியாமல், அவர்களின் புரிந்துகொள்ளுதலை இன்னும் இருளடையச் செய்தது. இஸ்ரயேலால் அடையாளப்படுத்தப்பட்ட உலகம், மோசேயால் அடையாளப்படுத்தப்பட்டவரால் பாவத்தின் அடிமைத்தனத்தி-ருந்து விடுவிக்கப்படும். ஆரோனால் அடையாளப்படுத்தப்பட்டவரால் பாவ நிவாரண ப-செலுத்தப்பட்டிருக்கிறது. எனவே, எகிப்து பாவத்தின் சாம்ராஜ்யத்தை, மரணத்தின் எல்லையைக் *(எபி. 2:14)* குறிக்கிறது. இது நீண்ட காலமாக அடிமைத்தன சங்கி-யால் கட்டப்பட்டிருக்கிறது. அநேகர் மோசேயை விட பெரியவரின் தலைமையின் கீழ் கர்த்தருக்கு ஊழியம் செய்ய மிகவும் சந்தோஷத்துடன் புறப்படுவார்கள். *(அப். 3: 22, 23)*

வேதத்தின் பல பகுதிகளில் எகிப்தின் அடையாளமான குணாதிசயம் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஓசியா. *11:1* மற்றும் மத். *2:13-15*. இங்கே நம்முடைய ஆண்டவர் ஒரு குழந்தையாக எகிப்து தேசத்திலே கொஞ்ச காலத்திற்கு இருந்தார் என்பதோடு, இஸ்ரயேலும் எகிப்தில் கொஞ்ச காலம் இருந்தது என்பதைத் தவிர வேறு ஒரு முக்கியத்துவம் இருப்பது தெரிகிறது. தேவ குமாரன் எவர்களை மீட்கும்படியாகவும், விடுதலையாக்கும்படியாகவும் வந்தாரோ அவர்களினிமித்தம் அவர் கொஞ்ச காலத்திற்கு உலகத்தில் இருந்தார். ஆனால் அவர் இந்த உலகமாகிய எகிப்தை விட்டு, உன்னதமான திவ்ய சுபாவத்திற்கு வரும்படியாக அழைக்கப்பட்டார். அதன்படியே சரீரத்தின் அங்கமாக தேவனுடைய உண்மையான இஸ்ரயேலாக இருக்கும்படியாக அழைக்கப்பட்டவர்கள் எவர்களோ, அவர்கள் அனைவரும் எகிப்தை விட்டு வெளியே வரும்படி அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆண்டவர் சாட்சி கூறுகிறார்: "நான்

இந்த உலகத் தான் அல்லாதது போல அவர்களும் இவ்வுலகத்தார் அல்ல."

ஏசாயா வரயிருக்கிற பெரிய உபத்திரவத்தைக் குறித்து (ஏசா. 31:1,3) கூறுகிறார். "சகாயம் அடையும்படி (உலகப்பிரகாரமான கருத்துக்கள், திட்டங்கள், இந்த பெரிய உபத்திரவத்தின் நாளிலே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கேட்கும்படி செல்லுபவர்கள்) இஸ்ரயேலருடைய பரிசுத்தரை நோக்காமலும் கர்த்தரை தேடாமலும், (வெற்றியும், பாதுகாப்பும் ஜனங்களிடத்தில் இராது) எகிப்துக்குப் போய் (உலகத்திற்கு) குதிரைகள் (இன்னமும் பழைய, பொய்யான உபதேசங்களைப் பின்பற்றுகிறவர்கள்) மேல் நம்பிக்கை வைத்து, இரதங்கள் (உலகப்பிரகாரமான ஸ்தாபனங்கள்) அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடி, குதிரை வீரர் (பொய்யான உபதேசங்களில் உள்ள பெரிய தலைவர்கள்) மகா பெலசா-களாயிருப்பதினால் அவர்களை நம்பிக் கொண்டு இருக்கிறவர்களுக்கு ஐயோ!.... எகிப்தியர் தெய்வம் அல்ல, மனுஷர் தானே; அவர்களுடைய குதிரைகள் ஆவியல்ல, மாம்சம் தானே ; கர்த்தர் தமது கரத்தை நீட்டுவார்; (அவருடைய வல்லமை - சத்தியத்தின் வல்லமை, மற்ற முறைமைகளில் உள்ள வல்லமை - அவர் சீக்கிரமாகச் செய்வார்) அப்பொழுது சகாயம் செய்கிறவனும் இடறி சகாயம் பெறுகிறவனும் விழுந்து (எகிப்தின் அதிகாரத்தினால் - உலகத்தின் கருத்துக்களால்) அனைவரும் ஏகமாய் அழிந்து போவார்கள்."

மனிதர்களுடைய திட்டங்கள், ஏற்பாடுகள் எல்லாம் தவறினபின்பு மனிதர்கள், தங்களுடைய பாவ நிலையை, இயலாத் தன்மையைக் குறித்து அறிந்த பின்னர் தான் தேவனை நோக்கி உதவி செய்யும்படி கூக்குர-ட ஆரம்பிப்பார்கள். அதன்பிறகு யேகோவா தம்மை ஒரு பெரிய மீட்பராகக் காட்டுவார்; அவர் தம்முடைய ஞானம், முன் அறிவு, கிருபையை உலகத்திற்கு காட்டுவதற்கும், அவர்களை நம்ப வைப்பதற்கும், ஏற்கெனவே பிரமிட்டை தம்முடைய ஒரு கருவியாக தயாரித்திருக்கிறார். "அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் (நாம் தற்போது பார்க்கப் போகிறபடி அவருடைய முன்னறிவுக்கும், இரட்சிப்புக்கான அவருடைய உன்னதமான திட்டத்திற்கும் அடையாளமாக இருக்கும்) சாட்சியுமாயிருக்கும்; ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் (எகிப்தியர்கள், இந்த உலகம், மகா உபத்திரவம் வரும் போது) கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள்; அப்பொழுது அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார். அப்பொழுது கர்த்தர் எகிப்தியருக்கு (உலகத்தாருக்கு) அறியப்படுவார்; எகிப்தியர் கர்த்தரை அக்காலத்திலே (ஆயிர வருடத்தின் போது - உபத்திரவத்தின் முடிவு காலத்தில்) அறிந்து, அவருக்குப் ப-களோடும், காணிக்கைகளோடும் ஆராதனை செய்து கர்த்தருக்குப் பொருத்தனைகளைப் பண்ணி, அவைகளைச் செலுத்துவார்கள்; கர்த்தர் எகிப்தியரை (உலகம்- மகா உபத்திரவத்தின் நாள் சமீபித்து இருக்கிறது) வாதையினால் அடிப்பார்; அடித்துக் குணமாக்குவார்; அவர்கள் கர்த்தரிடத்தில் மனம் திரும்புவார்கள்; அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார்." ஏசா. 19:19-22



மேலும், தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைக்கு, மகா பிரமிட் கொடுக்கும் உறுதியான சாட்சியம் பரிசுத்தவான்களுக்கு பெரிய சந்தோஷத்தை கொடுப்பதாக இருக்கும் வேளையில், முக்கியமாக மனுக்குலத்திற்கு ஆயிர வருட அரசாட்சியின் போது அது சாட்சியாக இருக்கும்படி உள்ளது என தெரிகிறது. மேலும், அவர்களுடைய இருதயம் சத்தியத்திற்கென ஆயத்தப்பட்டு இருக்கும் போது, இந்த விசித்திரமான, குறிப்பிடத்தக்க சாட்சியம், மனுக்குலத்திற்கு, விசுவாசத்தையும், அன்பையும், வைராக்கியத்தையும் கொடுப்பதற்கு புதிய ஆதாரமாக இருக்கும். அது மாத்திரமல்ல (தேவனுடைய வசனத்தில் உள்ள யுகங்களில் திட்டம் போன்று) இந்த கல்-ன் "சாட்சி" இப்பொழுது வரைக்கும் அமைதியாக வைக்கப்பட்டுள்ளது. அதன் அத்தாட்சி சீக்கிரத்திலே உலகத்திற்கு (எகிப்து) கொடுக்கப்படும். ஆனால், தேவன் பரிசுத்தவான்களிடம் இருந்து ஒன்றையும் மறைப்பதில்லை. இப்பொழுது அவர்கள் இந்த சாட்சியின் அத்தாட்சியை கேட்கும் சிலாக்கியம் பெற்று இருக்கிறார்கள். உலக சிந்தை அதன் சாட்சிகளை

ஏற்றுக் கொள்ள ஆயத்தமாவதற்கு முன்பாகவே, தேவனுக்கு கீழ்ப்படிய ஆயத்தமாக இருக்கும் போது மாத்திரமே யாரும் அவருடைய சாட்சியங்களை ஏற்றுக் கொள்ள முடியும்.

ஏரேமியா *(32:20)* தேவனுடைய மகத்துவமான கிரியைகளைக் குறித்து "இந்நாள் வரைக்கும் விளங்குகிற அடையாளங்களையும், அற்புதங்களையும் தேவரீர் எகிப்து தேசத்திலே செய்தீர்" என்று அறிவிக்கிறார். தேவன் இஸ்ரயேலை எகிப்தி-ருந்து வெளியே வெற்றியுடன் கொண்டு வரும் போது "அடையாளங்களையும், அற்புதங்களையும்" காண்பித்தார். அவைகள் "இந்நாள் வரைக்கும்" (நம்முடைய நாள்) இருக்கிறது. மகா பிரமிட் இந்த அற்புதங்களின் அடையாளங்களில் முக்கியமானதொன்று என்று நாங்கள் நம்புகிறோம். இப்பொழுது இது விஞ்ஞானிகளிடம் அவர்களுடைய சொந்த மொழியிலேயே பேசுகிறது, அவர்கள் மூலமாக மனிதனிடமும் பேசுகிறது.

கர்த்தர் பூமியைக் குறித்து யோபுவிடம் *(38:3-7)* கேட்ட கேள்விகளும் அறிவிப்புகளும், மகா பிரமிட்டில் குறிப்பிடத்தக்க விளக்கத்தை அளிக்கிறது. அது தன்னுடைய அளவினாலும், அதன் மூலமாகவும் கூட பூமிக்கு அடையாளமாகவும் தேவனுடைய திட்டத்தையும் குறிப்பிடுவதாகவும் நம்பப்படுகிறது. அங்கே உபயோகிக்கப்பட்டுள்ள விளக்கம் ஒரு கட்டடத்தைக் குறித்ததாகும். அது பிரமிட் உருவகத்தில் உள்ள அமைப்பைத் தான் குறிக்கிறது என்று எண்ணுகிறோம். அது சொல்லுகிற விதம் முக்கியமாக பூமியைத் தான் குறிக்கிறதாக இருக்கும் போது, அது மகா பிரமிட்டின் விளக்கத்திற்கு ஒத்ததாக இருக்கும்படி கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, அஸ்திபாரத்தை ஆயத்தப்படுத்துதல், மகா பிரமிட்டின் அஸ்திபாரக் கல்லை குறிப்பிடுகிறது. இரண்டாவதாக, அதன் அளவுகள், மகா பிரமிட்டில் வெகு முக்கியமாக காட்டப்பட்டுள்ள ஒரு அம்சம் குறிப்பிடத்தக்க அளவுகள் நிறையக் காணப்படுகிறது. "அதற்கு அளவு குறித்தவர்கள் யார்?" மகா பிரமிட்டின் உருவத்தில் உள்ள பரிபூரணம் எல்லா விதத்திலும் அது மிகவும் சரியாக இருப்பதும், அதன் கட்டுமானம் ஒரு மிகப் பெரிய கட்டட



வல்லுனரால், கலைஞரால் வழிகாட்டப்பட்டது என்பதை நிரூபிக்கிறது. "அதின் ஆதாரங்கள் எதின் மேல் போடப்பட்டது?" மகா பிரமிட்டிற்கு நான்கு கோடிக் கற்கள் உண்டு. அது உறுதியான பாறைகளில் பதிக்கப்பட்டு உள்ளது. "அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்?" பிரமிட்டிற்கு ஐந்து கோடிக் கற்கள் (மூலைக்கற்கள்) உண்டு. ஆனால் இங்கு ஒரு கோடிக் கல்லைக் குறித்து தான், அதாவது மேலே உள்ள கல்லைக் குறித்துதான் குறிப்பிடப்பட்டுள்ளது. பாறையில் பதிக்கப்பட்டுள்ள நான்கு கோடிக் கற்களைக் குறித்து ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கும் போது எஞ்சியிருப்பது மேல் பக்கத்தில் உள்ள கோடிக்கல் தான். இந்த கட்டட அமைப்பில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது இந்தக் கோடிக்கல் தான். அதுவே ஒரு பூரணமான பிரமிட் ஆகும். அதன் முழுப்பகுதியிலும் உள்ள கோண அளவுகள் அதற்கு ஒத்து இருக்கின்றன. ஆகவே, கேள்வி அதன் முக்கியத்துவத்தைக் குறித்து தான். அதன் விசித்திரமான பொருந்துகிற தன்மை, மேலே உள்ள கோடிக் கல்லை ஆயத்தப்படுத்தி மேலாக வைப்பதில் உள்ள ஞானம், திறமை நம்முடைய கவனத்திற்கு வருகிறது.

இந்த பழங்காலத்து கட்டடம், இப்படியாக மறுபடியும் மறுபடியுமாக வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளதினால், இதைக் குறித்து கேள்வி கேட்கப்பட்டால் அதை சந்தேகிக்க முடியாது. எகிப்தில் உள்ள இந்த சாட்சி யேகோவாவை கனப்படுத்தும் முறையில் அத்தாட்சிப்படுத்துகிறது. மேலும் அது தேவனுடைய எழுதப்பட்ட வசனத்திற்கு மிகவும் ஒத்து இருக்கிறது. இப்படியாக நாம் இந்த சாட்சியை அறிமுகப்படுத்துகிறோம். ஏனெனில் இந்த பிரமிட்டின் சாட்சி, வேதாகமத்தைக் குறை கூறுவது போன்று, அந்தகாரத்தின் பிரபுவாகிய இந்த உலகத்தின் அதிபதியாலும் சத்தியத்தைக் காணாதபடி அவனால் குருடாக்கப்பட்டவர்களாலும் தர்க்கம் பண்ணப்படும்.

### ஏன், எப்பொழுது, யாரால் மகா பிரமிட் கட்டப்பட்டது?

இந்தக் கேள்வி, சமீப வருடங்களில், விஞ்ஞான மற்றும் வேதாகம ரீதியில் அதிகமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான வருடங்களாக இந்த கேள்விக்கு திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. அது ஒரு எகிப்திய ராஜாவுக்காக கட்டப்பட்ட ஒரு பெட்டகம் அல்லது கல்லறை என்ற பழைய கருத்து ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. ஏனெனில் தற்காலத்தில் உள்ள ஞானத்தைக் காட்டிலும் அதிக ஞானம் அதற்கு தேவைப்பட்டது. அப்படியிருக்க 4000 வருடங்களுக்கு முந்தைய ஞானம் இப்படிப்பட்ட ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கு போதுமானதல்ல. மேலும் அதற்குள் ஒரு நகைப் பெட்டியோ, அல்லது பதமிடப்பட்ட உடலோ அல்லது எழுத்துக்களோ கிடையாது. மேலும் தானியே-ன் தீர்க்கதரிசனத்தின்படி முடிவு காலத்திற்குள் வரும் போது அறிவு பெருகிப் போகும், ஞானவான்கள் தேவனுடைய திட்டத்தை அறிந்து கொள்ளுவார்கள். *(தானி. 12:4,9,10)* இந்தக் காலத்தில் தான் மகா பிரமிட்டின் இரகசியங்கள் புரிந்து கொள்ளப்பட்டன, எங்களுடைய கேள்விகளுக்கு சரியான பதில் கிடைத்தது.

இந்த விஷயத்தைக் குறித்து முக்கியமான காரியம், மகா பிரமிட்டில் விஞ்ஞான அம்சங்கள் உண்டு என்று கிபி 1859ல் இங்கிலாந்து நாட்டவரான திரு. ஜான் டெய்லர் (Mr. John Taylor) என்பவரால் நிரூபிக்கப்பட்டது ஆகும். ஆராய்ச்சி தொடங்கப்பட்ட அந்த காலத்தி-ருந்து நல்ல திறமை உள்ளவர்கள் இந்த அற்புதமான "சாட்சியை" இன்னும் அதிகமாக ஆராய்ந்தனர். விசேஷமாக ஸ்காட்லாந்து அரசவான சாஸ்திரியான பேராசிரியர் பியாஸ்ஸி ஸ்மித் என்பவர் (Prof. Piazzi Smyth) அந்த இடத்திற்கு சென்று அவர் அநேக மாதங்களாக அதில் காணப்பட்ட விசித்திரமானவைகளை ஆராய்ந்து, அது கட்டப்பட்ட விதம், அதன் அளவுகளைப் பற்றியும், அதன் பிறகு அவர் எடுத்த முடிவுகளையும் உலகிற்கு அறிவித்தார். Our Inheritance in the Great Pyramid என்ற அவருடைய திறமையான விஞ்ஞான ரீதியில் எழுதப்பட்ட புஸ்தகத்தில் இருந்து அதிகமான அம்சங்களை (Data) இந்த அதிகாரத்தில் உபயோகித்து உள்ளோம். அதற்கு நன்றி தெரிவிக்கிறோம். அதில் கடைசியாக பிரசுரிக்கப்பட்ட 25க்கும் அதிகமான தாள்களில் சிலவற்றில் இருந்து விளக்கவுரைக்காக பிரதிகள் எடுத்துள்ளோம்.



பேராசிரியர் ஸ்மித் அங்கிருந்து திரும்பிய சில வருடங்கள் கழித்து மகா பிரமிட் யேகோவாவின் "சாட்சி," அது திவ்ய உண்மைக்கு ஒரு முக்கிய சாட்சியாக இருப்பது போன்று, இயற்கையின் விஞ்ஞானத்திற்கும் ஒரு முக்கிய சாட்சியாக இருக்கிறது என்கிற யோசனை வந்தது. இது பேராசிரியர் ஸ்மித்துக்கும் மற்றவர்களுக்கும் புதிய சிந்தனையாக இருந்தது. இந்த யோசனை ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ராபர்ட் மென்சீஸ் ( Robert Menzies) என்பவருக்கு வந்தது. அவர் மகா பிரமிட்டை குறித்த விஞ்ஞான ரீதியான கருத்துக்களை ஆராய்ந்துக் கொண்டிருந்த போது, அதில் தீர்க்கதரிசனம் மற்றும் காலக்கணக்கு போதனைகள் அடங்கியிருப்பதைக் கண்டார்.

இரட்சிப்பைக் குறித்த தேவ திட்டத்தை அளிக்க வேண்டும் என்பதே, அது கட்டப்பட்டதின் நோக்கம் என்பது வெகுசீக்கிரத்திலேயே தெரிந்து விட்டது. அது மாத்திரமல்ல வான சாஸ்திரம், காலக்கணக்கு, தகவல்கள், பூகோளம் மற்றும் இன்னும் அநேக உண்மைகளில் திவ்ய ஞானத்தை பதிவு செய்ய வேண்டும் என்பது தான். ஆனாலும் இந்த கனவான்கள் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள இரட்சிப்பின் முழு விவரங்களையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் புரிந்து கொள்ள தவறியதால், இந்த விஷயத்தைக் குறித்து மகா பிரமிட் அளிக்கின்ற சாட்சியின் அற்புதமான மற்றும் அழகான அம்சங்களை காணத் தவறிவிட்டார்கள். இதை இப்பொழுது நாம் இது யுகா யுகத்தின் திட்டம் அதோடு சம்பந்தப்பட்ட காலங்களையும், வேளைகளையும் முழுமையானதாகவும் நிறைவாகவும் உறுதிப்படுத்துவதாகவும் காண்கிறோம். இவைகள் வேதாகமத்தில் போதிக்கப்பட்டு இந்த புத்தகத்திலும், இதற்கு முன்பு உள்ள வேதாகம பாடத் தொகுதிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், வேதாகம பண்டக சாலையில் பெரும்பாலான பகுதி முத்திரையிடப்பட்டு இருந்தது போன்று, இந்த அறிவுப் பண்டக சாலையில், அதன் சாட்சி தேவைப்படும் வரை, ஏற்றுக் கொள்ளப்படும் வரை, வேண்டும் என்றே முத்திரையிடப்பட்டிருந்தது. அப்படியென்றால் அந்த பெரிய கட்டட கலைஞருக்கு அதன் சாட்சி தேவைப்படும் ஒரு காலம் வரும் என்பதை அறிந்திருந்தார் என்று தெரிகிறதல்லவா? வேறு விதமாக

சொல்ல வேண்டும் என்றால், தேவனுடைய எழுதப்பட்ட வசனம் வெகு குறைவாக மதிக்கப்படும் காலம் வரும், அவர் இருப்பதையே கேள்வி கேட்கும் காலமும் வரும் அல்லவா! இது எப்பொழுது நடைபெறும் என்றால், விஞ்ஞானம் என்கிற பெயரில் மனித தத்துவம் பெருமையாக பேசப்பட்டு ஒவ்வொரு கூற்றும் அதன் கீழ் சோதிக்கப்படும் போது இப்படி நடக்கும். அப்படிப்பட்ட சோதனைகள் மூலமாக தேவன் தம்மையும், தம்முடைய ஞானத்தையும் நிரூபித்துக் காட்ட தீர்மானித்து விட்டாரா? அப்படித்தான் தோன்றும். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட "அந்த நாளில்" சேனைகளின் கர்த்தருக்கு இது ஒரு "சாட்சியாக" ஞானவான்களின் புத்திக் கூர்மையையே திகைக்கவைக்கும்.

பேராசிரியர் ஸ்மித் முதலாவதாக வானசாஸ்திர கணிப்புகள் மூலமாக கிமு. 2170-ல் மகா பிரமிட் கட்டப்பட்டது என்கிற முடிவுக்கு வந்தார். அவர் மேல் நோக்கியுள்ள பாதை ஒரு தூர பார்வை கண்ணடியின் கோணத்திற்கு ஒத்து இருக்கிறதையும், மேலும் "நுழைவு வாயில் பாதை" ஒரு வான சாஸ்திரியின் சுட்டிக் காட்டும் "கோல்" போன்று இருப்பதையும் கண்டு அது கடந்த காலத்தில் எந்த வேளையிலாவது எந்த நட்சத்திரத்தை சுட்டிக் காட்டி இருந்திருக்கக் கூடும் என்பதை ஆராயத் தொடங்கினார். கணிப்புகள் கிபி 2170 இலையுதிர்கால சம ராத்திரியின் போது (Autumnal Equinox) ஒரு வலுசர்ப்பம் போன்ற ஒரு நட்சத்திரம் (Draconis என்கிற Dragon Star) நடுராத்திரியின் வானத்தில் ஒரு இடத்தில் இருந்து, நேரிடையாக கீழே வாசலை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தது என்று காண்பித்தன. அந்த தேதியில் அவர் தன்னை ஒரு வான சாஸ்திரியாக எண்ணிக் கொண்டு தன்னுடைய சுட்டிக்காட்டும் கோலை அந்த வலுசர்ப்பம் போன்ற நட்சத்திரத்தை நோக்கி இருக்கும்படி வைத்து, ஏறுகின்ற பாதையை ஒரு தொலைநோக்கி கண்ணாடி என்று நினைத்து, (ஏனெனில் அவைகள் அப்படியாக இருந்தன) அவருடைய சுட்டிக் காட்டும் கோல், இப்படியாக குறிப்பிட்ட காலத்தில் எந்த குறிப்பான நட்சத்திரம், இப்படியாக அந்த தொலை நோக்கி கண்ணாடி போன்று இருப்பதற்கு முன்னால் இருந்திருக்கக்கூடும் என்று கணக்கிட்டு அது பி-யடெஸ் (Pleiades) ஆக (அறுமீன்-நட்சத்திரங்களின் கூட்டம்)



இருந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். ஆகவே இப்படி தற்செயலாக காணப்பட்ட அற்புதமான விஷயம், மகா பிரமிட் கட்டப்பட்ட காலம் இப்படியாக குறிப்பிடப்பட்டது என்பது அவரை நம்பச் செய்தது. வலுசர்ப்பம் (Dragonis) என்பது பாவத்திற்கும், சாத்தானுக்கும் அடையாளமாக இருக்கும் வேளையில், பி-யடெஸ் (Pleiades) தேவனுக்கு அடையாளமாகவும், பூமியின் மையமாகவும் இருக்கிறது. மேலும் மகா பிரமிட் இப்படியாக தெரிவிப்பது என்னவெனில், அதன் கட்டட கலைஞர், பொல்லாப்பு பெருகி இருப்பதையும், அது கீழ் நோக்கி சென்று கொண்டிருக்கிற மனுக்குலத்தின் மேல் ஆதிக்கம் செலுத்துவதையும் அறிந்திருந்தார். மேலும் அது மனுஷருடைய பார்வைக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதையும், மனுக்குலத்திற்கு உள்ள ஒரே நம்பிக்கை யேகோவா மட்டும் தான் என்பதையும் காட்டுகிறது.

மகா பிரமிட் கட்டப்பட்ட காலத்தைக் குறித்து பேராசிரியர் ஸ்மித் எடுத்த முடிவு, பின்னர் மகா பிரமிட் தன்னுடைய காலத்தை தன்னுடைய அளவுகள் (Measurement) மூலம் சுட்டிக்காட்டுவதோடு மிகவும் ஒத்து இருப்பதாக கண்டறியப்பட்டது. மகா பிரமிட்டின் வடிவமைப்பு ஞானமுள்ள ஒன்று என்று காட்டுகிறது. இந்த ஞானம் எகிப்தியரிடத்தில் இருந்திருக்க முடியாது. இது ஒரு திவ்ய ஞானத்தினால், தேவனால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு சில தேவ மனிதர்களால் உண்டானது என்பதைக் காட்டுகிறது. இந்த எண்ணம் மெல்கிசேதேக் தான் அதைக் கட்டி இருக்க வேண்டும் என்று யூகிக்க வைக்கிறது. அவன் "சாலேமின் (சமாதானத்தின் இராஜா) இராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாய் இருந்தான்." அவன் ஆபிரகாமை ஆசீர்வதிக்கக் கூடிய அளவுக்கு பெரிய ஸ்தானத்தில் இருந்தவன். ஆபிரகாம் இவனுக்கு தசம பாகம் கொடுத்தான். இதைக்குறித்து நாம் சிறிய அளவுதான் அறிந்து உள்ளோம். ஆனால் அவன் பெரிய இராஜாவாக, சமாதானத்தின் இராஜாவாக இருந்தான் என்பதையும், அவன் மகா பிரமிட் கட்டப்பட்ட காலத்திற்கும், இடத்திற்கும் வெகு அருகில் வாழ்ந்தான் என்பதையும் நாம் அறிகிறோம்.


மெல்கிசேதேக் ஒரு எகிப்தியனாக இல்லாது இருந்த போதிலும் மகா பிரமிட்டைக் கட்டுவதற்கு எகிப்திய வேலையாட்களை உபயோகித்தான் என யூகிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, எகிப்தின் பாரம்பரியங்கள் இந்த கருத்தை ஆதரிக்கின்றது. இந்த காலத்தில் எகிப்தின் மேல் ஒரு விசித்திரமான படையெடுப்பு இருந்தது. படையெடுத்த ஜனங்களுடைய பரம்பரை பழக்க வழக்கங்கள் அவர்களை Hyksos (மேய்ப்பர் இராஜாக்கள் அல்லது சமாதானத்தின் இராஜாக்கள்) என்று அறிமுகப்படுத்துகிறது. படையெடுத்து வந்த இந்த ஜனங்கள் எகிப்தின் பொதுவான அரசாங்கத்தை குலைக்க முயற்சித்ததாக தெரியவில்லை. ஆனால் சிறிது காலம் தங்கிய பின்னர், அவர்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கங்கள் அங்கீகரிக்காத ஒரு நோக்கத்திற்காக சிறிது காலம் தங்கிவிட்டு, தாங்கள் எப்படி சமாதானமாக வந்தார்களோ, அதே மாதிரி திரும்பிச் சென்றார்கள். இவர்களில் ஒருவராக மெல்கிசேதேக் இருந்ததாகவும், இவர் தான் மகா பிரமிட்டை, தேவனுடைய ப-பீடத்தை, "சாட்சியை" எகிப்தில் கட்டியதாகத் தோன்றுகிறது.

மனெதோ (Manetho) என்கிற எகிப்திய ஆசாரியன், எழுத்தாளன், பின்வருமாறு கூறியதாக யூத வரலாற்று ஆசிரியர் ஜோசபஸ் (Josephus)கூறுகிறார். "எங்களுக்கு முன்பு ஒரு இராஜா இருந்தார். அவருடைய பெயர் திமாவுஸ் (Timaus); அவனுடைய நாட்களில், எங்களுக்கு தெரியாது எதனால் என்று, ஆனால் எங்கள் தெய்வம் எங்கள் மேல் கோபம் கொண்டது. அப்பொழுது கிழக்கி-ருந்து வினோதமான வழியில் கனவீனமுள்ள மனிதர்கள் (யுத்த வீரர்கள் அல்ல) யுத்தம் இல்லாமலேயே எங்களுடைய நாட்டின் மேல் படையெடுத்து, தங்களிடம் உள்ள அதிகாரத்தினால் எளிதாக பணிய வைத்து விட முடியும் என்கிற நம்பிக்கையுடன் வந்தார்கள். எங்களுடைய ஆட்சியாளர்களை அவர்களுடைய கரத்திற்குள் கொண்டு வந்த பின்னர், தேவர்களுடைய கோவில்களை அவர்கள் உடைத்தார்கள்."


## இதன் விசித்திரமான இடம்

மகா பிரமிட் நைல் நதியைப் பார்த்தாற் போன்று, உயரமான பாறையுள்ள சம தரையில் அமைந்துள்ளது. இது எகிப்தின் கெய்ரோ






கீழ் எகிப்தின் வட்டக் கோணப்பகுதியின் எல்லையிலும் மையப் பகுதியிலும் அமைந்துள்ள மகா பிரமிட்




உலக நிலப்பரப்பின் பூலோக மையத்தில் அமைந்துள்ள கீழ் எகிப்து

(Cairo) பட்டணத்திற்கு வெகு சமீபமாக உள்ளது. இது அமைந்திருக்கும் இடத்தைக் குறித்த ஒரு முக்கியமான விஷயம் என்னவெனில், கடல் ஓரம் உள்ள ஆற்றின் முகத்துவாரம் உண்மையில் ஒரு கால்பங்கு வட்டத்தில் இருக்கிறது. மகா பிரமிட் உட்கோணத்தைக் குறிப்பதாக இருக்கிறது.

சூயஸ் கால்வாயின் முன்னேற்றத்தை பார்த்து அறிக்கை அனுப்ப 1868-ல் எகிப்துக்கு வந்த அமெரிக்காவின் கடற்கரை சர்வே இலாகாவின் தலைமை கடற்கரை விஞ்ஞானி திரு. ஹென்றி மிட்சல் (Mr. Henry MitChell) மகா பிரமிட்டிற்கும் கடற்கரைக்கும் உள்ள சம்பந்தத்தை கண்டுபிடித்தார். எகிப்தின் வடக்கு கடற்கரை பகுதியில் தொடர்ந்து இருக்கும் வளைவுகளை அவர் ஆராய்ந்த போது, ஒரு குறிப்பிட்ட மையப்பகுதியில் அதன் ஆரம்பம் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். இந்த அதிசயமான மையப்பகுதிக்காக அவர் தேடிக் கொண்டிருக்கும் போது அது பிரமிட்டினால் குறிக்கப்பட்டதாக இருக்கக் கண்டார். அவர் ஆச்சரியத்துடன் கூறினர்: “இந்த ஞாபகார்த்த சின்னம், மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட வேறு எந்த கட்டடத்தைக் காட்டிலும் அதிமுக்கியத்துவம் உள்ள இடத்தில் இருக்கிறது.”

வடக்கு நோக்கி, நுழைவு வாயில் பாதையி-ருந்து வரையப்பட்ட ஒரு கோடு, எகிப்தின் கடற்கரையின் மிக வடக்குப் பகுதியூடாக கடந்து செல்லும். மேலும் வட கிழக்குப் பகுதி மேற்குப் பகுதியை இணைத்துக் காட்டக் கூடிய கோடுகள் வரையப்படும் போது ஆற்றின் முகத்துவாரம் பகுதியை மூடும். இதனால் எகிப்தின் கீழ்ப்பகுதி இதற்குள் காற்றாடி போன்று இருப்பது தெரிய வரும். (விளக்கப்படம் காண்க) கீஸா என்கிற உயரமான செங்குத்தான பாறை மேல் அதன் மிகவும் வடக்குப் பகுதியின் முனையில் கட்டப்பட்டதாக இது இருக்கிறது. இந்தப் பகுதியை பார்த்த வண்ணம் இருப்பது அல்லது கீழ் எகிப்தின் கற்றாடி போன்ற திறந்த வெளியில் கட்டப்பட்டது, எகிப்தின் எல்லைப் பகுதியில் இருப்பதாகக் கூட கூறலாம். அதே மாதிரி அதன் மையத்தில் இருப்பதாக, தீர்க்கதரிசி ஏசாயா சொன்னமாதிரி இருப்பதாகக் கூட கூறலாம். “அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு ப-பீடமும், அதின்

எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும். அது எகிப்து தேசத்திலே ஒரு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்." இன்னொரு முக்கியமான விஷயம் என்னவெனில் மகா பிரமிட் பூகோள ரீதியாக உலகத்தின் மையத்தில் அமைந்துள்ளது. இது வடக்கு, தெற்கு அமெரிக்கப் பகுதிகளையும் கூட இந்த பூகோள ரீதியில் உள்ளடக்கியுள்ளது. இந்த மகா பிரமிட் அமைந்த இடமும், அதன் கட்டுமானமும் அநேக நூற்றாண்டுகளாக தெரியாமலே இருந்தது.

### அதன் விஞ்ஞான ரீதியான பாடங்கள்

மகா பிரமிட் நம்மோடு பேசுகிறது. பரிசுத்த வார்த்தைகள் மூலமாகவோ அல்லது வரைபடங்கள் மூலமாகவோ அல்ல, ஆனால் அது இருக்கிற இடம், அதன் கட்டுமானம், அதன் அளவுகள் மூலமாகப் பேசுகிறது. கண்டு கொள்ளப்பட்ட உண்மையான குறியீடுகள் அல்லது வரைபடங்கள், கட்டுமான அறையிலும், இராஜாவின் அறையிலும் தான் இருந்தன. ஆனால் பாதைகளிலோ அல்லது அறைகளிலோ ஒன்றும் கிடையாது. இடம் போதாததால் விஞ்ஞான ரீதியான பாடங்களை நாங்கள் விட்டு விடுகிறோம். ஏனென்றால் சாதாரணமாக வாசகர்களில் நூற்றுக்கு ஒருவர் கூட விஞ்ஞான கலைச் சொற்களைப் புரிந்து கொள்ள முடியாது. அது விளக்கமாக காட்டுவதைப் புரிந்து கொள்ள இயலாது. மேலும் விசேஷமாக நாங்கள் செய்ய வேண்டிய சுவிசேஷப் பணியில் அதற்கு எந்தப் பங்கும் கிடையாது என்பது இன்னொரு காரணமாகும். ஆகவே அது விஞ்ஞானிக்கு கற்றுக் கொடுப்பதை மாத்திரம் கூறினால் போதும் என்று நினைக்கிறோம். உதாரணமாக நான்கு பக்கங்களிலும் உள்ள அடிப்பக்கத்தின் அளவு, கோடிக் காற்களின் மட்டத்தில் உள்ளதைக் கூட்டும் போது 4 வருடங்களில் லீப் வருடம் சேர்த்து எத்தனை நாட்கள் உள்ளதோ அதே அளவான பிரமிட் முழங்கள் (Pyramid Cubits) மிகச் சரியானபடி, துல்-யமாக இருக்கக் காணப்பட்டது. அடிப்பக்கத்தில் வடகிழக்கு முனையி-ருந்து தென்மேற்கு முனைக்கு வருகின்ற மூலை வட்ட அளவும், வடமேற்கு முனையில் இருந்து தென்கிழக்கு முனைக்கு வரும் மூலை விட்ட அளவும் கூட்டப்பட்டால் முந்திய வருடங்களின் மாறி மாறி வருகிற சுழற்சி முறைப்படி (Precessional) உள்ளான பிரமிட் அங்குலங்களை கொடுக்கிறது. இந்த சுழற்சி முறையின்படி (Cycle) வான சாஸ்திரிகள் கணிப்புப்படி இது 25, 287 வருடங்களாகும். இது மகா பிரமிட் அங்குல கணக்கிற்கு ஒத்ததாக உள்ளது. பூமியி-ருந்து சூரியனுக்கு உள்ள தூரம் மகா பிரமிட்டின் உயரம், கோணத்தைக் கொண்டு கணக்கிடும் போது 91,840,270 மைல் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது வான சாஸ்திரிகளின் சமீபத்திய கணக்கின்படி கிட்டத்தட்ட சரியாக உள்ளது. சமீப காலம் வரை வானசாஸ்திரிகள் இந்த தூரம் 90 மில்-யன் மைல்களில் இருந்து 96 மில்-யன் மைல்கள் என்று கணக்கிட்டிருந்தார்கள். அவர்களுடைய மிக சமீபத்திய கணக்கின்படி 92 மில்-யன் மைல்களாகும். மகா பிரமிட் மிக சரியான விதத்தில் பூமியின் அளவு மற்றும் எடையை அடிப்படையாகக் கொண்டு எல்லா எடையையும், அளவையும் காட்டுவதற்கு அதற்கென ஒரு தனி முறையை வைத்து இருக்கிறது.



இந்த கம்பீரமான "சாட்சி" அமைந்திருக்கிற இடத்தைப் பற்றியும், விஞ்ஞான பூர்வமான அத்தாட்சி பற்றியும் ரெவரண்ட் ஜோசப் சீஸ் D.D.(Rev. Joseph Seiss DD) கூறுவதாவது:

"இன்னொரு அற்புதமான சிந்தனை இந்த அழகான கட்டுமானத்தில் புதைந்திருக்கிறது. அதன் ஐந்து முனைகளில் ஒன்று மிக முக்கியமானது. அதில் தான் அதன் எல்லா பக்கங்களும், வெளிப்புற கோடுகளும் முடிகின்றன. அது உச்சி மூலை. அது தன்னுடைய கம்பீரமான ஆள்காட்டி விரலை நடுப்பகல் சூரியனுக்கு நேராகக் காட்டுகிறது. அடிப்பக்கத்தி-ருந்து அதற்குள்ள தூரம், சூரியனுக்கு பூமியில் இருந்து உள்ள தூரத்தைக் காட்டுகிறது. நாம் பின்னோக்கி, பிரமிட் கொடுக்கிற காலத்திற்கு சென்று, நடு இராத்திரியில் அந்த விரல் எதை சுட்டிக் காட்டியது என்றால், அதைக் காட்டிலும் மிக மேலானதைக் காட்டுவதைக் காணலாம். விஞ்ஞானம், இறுதியில் சூரியன் நிலையான மையம் உடையது அல்ல என்பதையும், கிரகங்கள் அதைச் சுற்றி வருகின்றன என்றும் ஆனால் அது இருந்த இடத்திலே இருக்கிறது என்பதையும் கண்டு கொண்டது. ஆனால் இப்பொழுது சூரியனும் சுற்றுகிறது என்று உறுதி

செய்யப்பட்டுள்ளது; அதனோடு கூட தொடர்ந்து அழகான கிரகங்கள், வால் நட்சத்திரங்கள், உப கிரகங்கள் ஒன்று இன்னொன்றை சுற்றுவதோடு அது தன் பரிவாரங்களோடு இன்னொரு மிகவும் வல்லமையுள்ள மையத்தைக் கொண்டு சுற்றுகிறது. வான சாஸ்திரிகளுக்கு மையப்பகுதி என்பது என்ன, அல்லது எங்கே இருக்கிறது என்பதைக் குறித்து ஒத்த கருத்து உடையவர்களாக இல்லை. இருந்தாலும் சிலர் அது அறுமீன் (Pleiades) என்கிற நட்சத்திரக் கூட்டத்தைப் பார்த்தவாறு இருக்க வேண்டும். அதுவும் விசேஷமாக அந்த நட்சத்திர கூட்டத்தில் உள்ள, பெயர் பெற்ற நடுவில் இருக்கிற Alcyone என்கிற நட்சத்திரத்தை நோக்கித்தான் இருப்பதாக கண்டு கொண்டதாக எண்ணுகிறார்கள். இந்த கண்டுபிடிப்புக்குரிய பெருமை, புகழ் பெற்ற ஜெர்மானிய வான சாஸ்திரியான பேராசிரியர் (Prof. J.H. Maedler) மேட்லர் என்பவரைச் சேர வேண்டும். அப்படியென்றால், விஞ்ஞானம் யூகிக்கிறபடி Alcyone என்கிற நட்சத்திரம் தான் "நடு இரவு சிங்காசனமாக" இருப்பது போல் தோன்றுகிறது. இதில் தான் முழு ஈர்ப்பு சக்திகளும் உள்ளன. இதி-ருந்து தான் சர்வ வல்ல தேவன் அவருடைய அண்ட சராசரங்களையும் ஆளுகின்றார். இங்கே தான் அற்புதமான அதற்கு இணையாக உள்ள ஒரு கருத்தைக் காண்கிறோம். இலையுதிர் காலத்தின் சமராத்திரியின் போது (சூரியன். பூமத்திய ரேகையைக் கடக்கும் நாளில்) (Autumnal Equinox) நடுநிசியில் மகா பிரமிட் கட்டப்பட்ட போது இது நடைபெற்றது. ஆகவே இன்னமும் அநேக தேசங்களில் கடைபிடிக்கும் சம்பிரதாயமாக உள்ளபடி உண்மையான புது வருடம் (யூதர்களின் புது வருடம் பாவ நிவாரண நாளில் வேதாகம பாடங்கள், தொகுதி 2ல் காண்பிக்கப்பட்டது போல் ஆரம்பித்தது) ஆரம்பமாயிற்று. அப்பொழுது அறுமீன் நட்சத்திரக் கூட்டம் இந்த பிரமிட்டின் தீர்க்க ரேகை மேல் Alcyone என்கிற நட்சத்திரம் சரியாக கோட்டின் மேல் துல்-யமாக இருக்க பரப்பி விடப்பட்டது. சாதாரண மனிதனின் விஞ்ஞானம் இதுவரை இலேசாக அறிவிக்கத்தான் முடிந்தது. ஆனால் இது உயர்வான, கம்பீரமான குணாதிசயத்திற்கு



நேராக சுட்டிக் காட்டுகிறது. தேவன் யோபுவினிடம் கேட்ட கேள்வியான 'அறுமீன் நட்சத்திரத்தின் (Pleiodes) சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்ககூடுமா' என்பதற்கு சந்தேகிக்கப்படாத வல்லமையான அர்த்தத்தைக் கொடுக்கும்.' "

### மீட்பின் திட்டத்தைக் குறித்து அதனுடைய சாட்சியம்

மகா பிரமிட்டின் போதனையின் ஒவ்வொரு அம்சமும் முக்கியமானதாக, ஆர்வமூட்டுவதாக இருக்கும் போது, நமக்கு அதிகம் ஆர்வமுண்டாக்குவது என்னவெனில் அதன் அமைதியான, ஆனால் பலமாக அடையாளப்படுத்துகிற தேவனுடைய திட்டம் தான்-யுகங்களுக்கான தேவனுடைய திட்டமாகும். ஆனால் நாம் அந்த திட்டத்தை ஏற்கெனவே வேதத்தி-ருந்து அறியாவிட்டால் அது விளக்கிக் காட்டுகின்றபடி தேவனுடைய திட்டத்தை அறிந்து கொள்ள இயலாது. அது அங்கே விளக்கப்பட்டு இருக்கிறதைக் கண்ட பின்னர், மறுபடியுமாக இங்கே அழகாக கொடுக்கப்பட்டிருப்பது நமது விசுவாசத்தைப் பலப்படுத்துகின்றது. மேலும் இயற்கையின் சத்தியமும் வெளிப்பாட்டின் சத்தியமும் ஒரே ஆசிரியருடையது. அதே ஆசிரியராலே இந்த கல்-லான "சாட்சியின்" மூலம் அத்தாட்சிபடுத்தப்பட்டுள்ளது.

அதன் போதனையின் இந்த அம்சத்தில், மகா பிரமிட் வெளியில் இருந்து பார்க்கும் போது அழகான ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அது ஆயிர வருட இறுதியில் முற்றுப் பெறும் தேவனுடைய திட்டத்திற்கு அடையாளமாக காணப்படுகிறது. இதற்கு கிரீடமாக இருப்பவர் கிறிஸ்துதான், எல்லாவற்றிற்கும் தலையானவர், மற்ற எல்லா கற்களும் சரியான விதத்தில் மகிமையான கட்டடத்தில் இணைக்கப்படுவார்கள். அது முழுமையானதாக பூரணமானதாக இருக்கும். இந்த செதுக்குதல், மெருகூட்டுதல், நுணுக்கமாக இணைக்கப்படுதல் போன்ற வேலையெல்லாம் அப்பொழுது முடிந்து விடும்; அது ஒன்றாக வைக்கப்பட்டு இணைக்கப்படும், ஒருவரோடு ஒருவருமாகவும், தலையாக இருப்பவரோடும் அன்பினால் இணைக்கப்படுவார்கள். தேவனுடைய முழுமையான திட்டத்தை மகா பிரமிட்

அடையாளமாக காட்டுமென்றால், அதன் மேலே உள்ள மூலைக்கல் கிறிஸ்துவைக் குறிக்க வேண்டும். தேவன் இவரை எல்லாவற்றிற்கும் தலையாக இருக்கும்படி உயர்த்தியுள்ளார். அது கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறது மற்றும் அது சரியானபடி இணைக்கப்பட்டுள்ளது என்பது தீர்க்கதரிசிகளாலும், அப்போஸ்தலர்களாலும், நம்முடைய ஆண்டவராலும் கூட அநேக குறிப்புகளின் மூலமாக காட்டப்பட்டுள்ளது.

ஏசாயா *(28:16)* கிறிஸ்துவை “விலையேறப்பெற்ற மூலைக்கல்” என்கிறார். சகரியா *(4:7)* அது கட்டி முடிக்கப்பட்டதின் மேல் வைக்கப்பட்டதை குறிப்பிடும் போது அதிக மகிழ்ச்சியுடன் கூறுவதாவது: “தலைக்கல்லை அவன் கொண்டு வருவான்; அதற்கு கிருபை உண்டாவதாக, கிருபை உண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள்.” மகா பிரமிட்டின் தலைக்கல் வைக்கப்பட்ட போது, உண்மையிலேயே அதை கட்டினவர்கள், அதில் நாட்டம் உள்ளவர்கள் மத்தியில் முடிசூடும் அம்சத்தைக் காணும் போது மிகவும் சந்தோஷம் உண்டாயிருந்திருக்கும். யோபும் கூட *(38: 6,7)* முக்கியமான கோடிக்கல் வைக்கப்பட்ட போது களி கூர்ந்ததைக் குறிப்பிடுகிறார். மற்ற நான்கு கோடிக்கற்களை முத-ல் குறிப்பிட்டு விட்டு, பிறகு விசேஷமாக தலைக்கல்லை அல்லது முடிசூட்டும் கல்லைக் குறிப்பிடுகிறார். “அதின் ஆதாரங்கள் எதின் மேல் போடப்பட்டது? அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்? அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே” என்று குறிப்பிடுகிறார். தாவீது தீர்க்கதரிசி கூட நம்முடைய ஆண்டவரைக் குறித்து உருவகமாக, எகிப்தின் சாட்சிக் கல்லைக் குறித்து சொல்லுகிறார். அவர் தீர்க்கதரிசனமாக எதிர்காலத்தில் பேசுவது போன்று இப்படியாகச் சொல்லுகிறார்: “வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக் கல்லாயிற்று. அது கர்த்தாரலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; (ஆயிர வருட கிறிஸ்துவின் மகிமையான நாள், அவர் உலகத்தின் தலையாகவும், ஆளுகை செய்பவராகவும் இருக்கிறார்) இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.” *(சங். 118:22-24)* மாம்சீக இஸ்ரயேல் கிறிஸ்துவை அவர்களுடைய தலைக்கல்லாக ஏற்றுக் கொள்ளத் தவறிவிட்டது. ஆகவே அவர்கள் தேவனுடைய விசேஷமான வீடாக இராதபடி தள்ளப்பட்டார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலோ, அதற்குப் பதிலாக தலையாக இருக்கிற கிறிஸ்துவுக்குள் கட்டப்பட்டு வருகிறார்கள். இந்த தீர்க்கதரிசனத்தை ஆண்டவர் தமக்கென்று எடுத்துக் கொண்டார் என்றும், அவரே தள்ளப்பட்ட கல் என்றும் காட்டினார் என்பதையும் நாம் நினைவு கூறுகிறோம். இஸ்ரயேல், அவர்களுடைய வீடு கட்டுகிறவர்கள் மூலமாக, அதாவது ஆசாரியர்கள், பரிசேயர்கள் மூலமாக தள்ளிவிட்டார்கள். *மத் 21:42, 44; அப். 4:11*



இந்த மகா பிரமிட்டின் தலைக்கல், இவைகள் எல்லாவற்றையும் எவ்வளவு அழகாக விளக்குகிறது! தலைக்கல் முதலாவதாக முடிக்கப்பட்டு, வேலையாட்களுக்கும் முழுக் கட்டடத்திற்கும் ஒரு மாதிரியாக இருக்கும். அதன் கோணங்களும், விகிதாசாரங்களும் அதற்கு ஒத்து இருக்க வேண்டும். ஆனால் நாம் உடனடியாக கற்பனை செய்து பார்க்கலாம். அதாவது இந்த தலைக்கல் முழு கட்டடத்திற்கும், ஒரு மாதிரியாக அங்கீகரிக்கப்படுவதற்கு முன், அது நிராகரிக்கப்படும், வீடு கட்டுகிறவர்களால் ஒன்றுமில்லததாக ஆக்கப்படும். அவர்களில் சிலர் அதற்கு தகுதியான இடம் எதையுமே நினைத்துக் கூட பார்க்க முடியாது, அதன் ஐந்து பக்கங்கள், ஐந்து மூலைகள், பதினாறு வித்தியாசமான கோணங்கள் ஆகியவை தலைக்கல் தேவைப்படும் வரை அது கட்டடத்திற்கு தேவையில்லை என்று ஆக்குகிறது. அதன்பிறகு எந்தக் கல்லும் தகுதியானதாக இருக்காது. அந்த கட்டடத்தின் வேலை நடந்து கொண்டிருந்த காலக்கட்டங்கள் முழுவதிலும் இந்த மூலைக்கல் “இடறுதற்கேதுவான கல்லும் விழுவதற்கேதுவான கன்மலையுமாக இருக்கும்.” அதன் பிரயோஜனம் அதன் இடத்தை அறியாதவர்களுக்கு இப்படியாக இருக்கும். கிறிஸ்துவை தேவனுடைய திட்டத்தில் தலைக்கல்லாக, மூலைக்கல்லாக கனப்படுத்தப்பட்டுள்ளதை அவர்கள் காணும் வரை கிறிஸ்து தொடர்ந்து இப்படியாகக் காணப்படுவார்.

பிரமிட்டின் உருவம் பரிபூரணத்திற்கும் முழுமைக்கும் அடையாளமாக இருப்பதோடு, நம்மோடு தேவனுடைய திட்டத்தின் அடையாளமாக பேசுகின்றது. மேலும் “காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி, பரலோகத்தி-ருக்கிறவைகளும், பூலோகத்தி-ருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று” அது காட்டுகிறது. எபே. *1:10; 2:20-22*

**மகா பிரமிட்டின் உட்பகுதியின் கட்டுமானம் எப்படி மீட்பின் திட்டத்தைக் காட்டுகிறதாக இருக்கிறது**

தேவனுடைய எழுத்துக்களினால் வெளியாக்கப்பட்டவைகளுக்கு இசைவாக இந்த மகா மேன்மையான கட்டடம், வெளிப்புறமாக அத்தாட்சி பகிர்ந்த அதே வேளையில், அதன் உட்புறத்தின் கட்டுமானம் இன்னும் அற்புதமாக இருக்கிறது. அதன் வெளிப்புற அமைப்பு தேவனுடைய மீட்பின் திட்டத்தின் (தொகுதி 1ல் யுகா யுகத்தின் படத்தை பார்க்கவும்) முழுமையான விளைவுகளைக் காட்டும் போது, அதன் உட்பகுதியின் கட்டுமானம் அந்த திட்டத்தில் உள்ள முக்கியமான அம்சங்களை, அது யுகம் யுகமாக வளர்ச்சியுற்றதை, அதன் மகிமையான முழுமையான நிறைவேறுதலை குறிப்பிட்டு விளக்குகிறது. இங்கே உள்ள கற்கள் பல்வேறு நிலைகளில் உள்ளவைகள். நம்முடைய தலையாக இருக்கிற இயேசுவுக்குக் கீழ் தேவனுடைய பூரணமான சித்தத்திற்கு ஏற்புடைய பூரணத்தைக் காட்டுகிறது. இதை நாம் ஏற்கெனவே வேதாகம சாட்சியி-ருந்து பார்த்துள்ளோம். சிலர் மனுஷீக சுபாவத்தில் பூரணப்படுத்தப்படுவார்கள். சிலர் ஆவிக்குரிய சுபாவத்தில் அல்லது திவ்ய சுபாவத்தில் பூரணப்படுத்தப்படுவார்கள். இப்படியாக இராஜாவின் அறை தளம் 50வது கல் வரிசையில் இருப்பதாகவும், இராணியின் அறை தளம் 25வது கல் வரிசையிலும் இருப்பதாகவும், விவரிக்கப்படுகிறது. “முதலாவது ஏறுகின்ற பாதையின்”கீழ் நுனி அடைப்பானை தாண்டி நீடிக்கப்பட்டால், இப்பொழுது காட்டப்படுவது போன்று பிரமிட்டின் தரை மட்டத்திற்கு வரும். இப்படியாக அடி மட்டத்தி-ருந்து மேல்நோக்கி இருக்கும் போது, பிரமிட் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின்



ஒரு சின்னமாக இருக்கிறது அல்லது பாவத்தில் இருந்தும் மரணத்தில் இருந்தும் மனுக்குலத்தை எழுப்புவதற்கும் கொடுக்கப்பட்ட சின்னமாக இருக்கிறது. இப்படியாக அடி மட்டம் நிழலான இஸ்ரயேலுக்கு, தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்தும் காலமாக, உயர்த்தும் அல்லது இரட்சிப்பின் வேலையின் காலமாக இருக்கிறது.


இத்துடன் கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் உள்ள இந்த அற்புதமான கட்டடத்தின் உட்பக்க ஒழுங்குகளைப் பார்க்க வேண்டும். இந்த மகா பிரமிட்டுக்கு ஒரே ஒரு “நுழைவு வாயில் பாதை” மாத்திரமே உண்டு. இது ஒழுங்கானதாக, ஆனால் கீழே சாய்வாக இருக்கிறது; இது ஒரு சின்ன அறை அல்லது “பாதாள அறைக்கு” வழி காட்டுகிறது. இந்த அறை கல்லுக்குள் வெட்டப்பட்டுள்ளது. இந்த அறையின் கட்டுமானம் விநோதமாக இருக்கிறது. இதன் மேல் கூரையின் உட்புறம் (Ceiling) நன்றாக முடிவுற்று இருக்கிறது. பக்கங்கள் இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, கீழ்ப்பகுதி கரடுமுரடாக முற்றுப் பெறாமல் உள்ளது. சிலருக்கு இது அடிமட்டமே இல்லாத குழி (Bottom less pit) என தோன்றும். இந்த சொல் வேதாகமத்தில் அழிவைக் குறிக்கும்படி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. “நுழைவு வாயில் பாதை” மனுக்குலத்தின் அழிவுக்கு நேரான பாதையை குறிக்கிறது. “பாதாள அறை” என்பது அதன் விசித்திரமான கட்டுமானத்தின் மூலம், மகா உபத்திரவத்தையும், அழிவையும், “பாவத்தின் சம்பளத்தையும்” விளக்கிக் காட்டுவதாக உள்ளது. “இறங்கும் பாதை” இதற்குத்தான் வழி காட்டுகிறது.

“முதலாவது ஏறுகின்ற பாதை,” “நுழைவு வாயில் பாதையைப்” போன்றே அதே அளவில் உள்ளது. இதி-ருந்து அது பிரிந்து செல்லுகிறது. அது சிறியதாகவும், தாழ்வாகவும், மேல் நோக்கி ஏறுவதற்கு கடினமாகவும் உள்ளது. ஆனால் அதன் மேல் நுனிப் பகுதியில் அது திறக்கிறது, பெரிய அழகான முற்றத்திற்கு செல்ல திறக்கிறது. அது “கம்பீரமான நீண்ட தாழ்வாரம்” (Grand Gallery) என்று அழைக்கப்படுகிறது. அதன் மேல் கூரையின் உயரம் அதற்கு வழிகாட்டுகின்ற பாதையைப் போன்று ஏழு மடங்கு அதிகமாக

உள்ளது. தாழ்வான "ஏறுகின்ற பாதை" நியாயப்பிரமாண யுகத்தை, இஸ்ரயேல் ஒரு ஜாதியாக எகிப்தி-ருந்து வெளியேறுவதை குறிப்பதாக எண்ணப்படுகிறது. அங்கே அவர்கள் உலக ஜாதிகளையும் கீழ் நோக்கி செல்லும் பாதையையும் விட்டு, அவருடைய பிரமாணங்களின் கீழ், தேவனுடைய பரிசுத்த ஜாதியாக, உலகத்தின் புற ஜாதியினரைக் காட்டிலும் அதிக கடினமான பாதையில் மேல் நோக்கி, பிரமாணங்களை காக்கும்படி நடக்க எண்ணுவதைக் காட்டுகிறது. "கம்பீரமான நீண்ட தாழ்வாரம்" (Grand Gallery) சுவிசேஷ யுக அழைப்பின் காலத்திற்கு அடையாளமாக இருப்பதாக எண்ணப்படுகிறது. இது இன்னமும் மேல் நோக்கிச் செல்லுகிறதாகவும், கடினமானதாகவும் இருக்கிறது. ஆனால் அதற்கு பின்பக்கம் இருப்பது போல் தடையுடன் இல்லை. இந்த வழியின் உயரமும், அதிகமான அகலமும் கிறிஸ்தவ யுகத்தின் உயர்வான நம்பிக்கைகளுக்கும், அதிகமான சுதந்திரத்திற்கும் அடையாளமாக இருக்கிறது.

"கம்பீரமான நீண்ட தாழ்வாரம்"(Grand Gallery) அதன் கீழ் நுனியில் கிடையாக தரையோடு உள்ள பாதை தொடங்கி ஒரு சிறிய அறைக்குச் செல்லுகிறது. சாதாரணமாக அது "இராணியின் அறை" என்று அழைக்கப்படுகிறது."நீண்ட தாழ்வாரத்தின்" மேல் பகுதியின் இறுதியில் இன்னொரு தாழ்வான பாதை இருக்கிறது. அது ஒரு சின்ன அறைக்குச் செல்லுகிறது. அது ஒரு (Ante-chamber) "சிறு அறையாகும்" இது விநோதமாக கட்டப்பட்டுள்ளது. இதை சிலர் ஒரு பள்ளிக்கூடம் என்றும் போதிப்பதற்கும், சோதிப்பதற்கும் உள்ள இடம் என்றும் கூறுகிறார்கள்.

ஆனால் பிரமிட்டின் முக்கிய அறையானது அது இருக்கிற இடம், அதன் அளவைப் பொறுத்தவரையில் அப்படியாக எண்ணப்படுகிறது. அது இந்த "சிறு அறையி-ருந்து" இன்னொரு தாழ்வான பாதையின் மூலம் சற்று தள்ளி உள்ளது. இந்த அறை "இராஜாவின் அறை" என்று அழைக்கப்படுகிறது. அதற்கு மேலே அநேக அறைகள் உண்டு, அவைகள் "கட்டுமான அறைகள்" (Construction Chambers) என்று அழைக்கப்படுகின்றன. இதில் முக்கியத்துவம் எதுவும் இருக்குமென்றால் அவைகள் மனிதனுக்குரியதோ அல்லது



பிராணிகளுக்கு உள்ளதோ அல்ல, ஆவிக்குரிய ஜீவிகளுக்கு உரியதாகும். எப்படியெனில் வரைபடத்தில் பக்கவாட்டிலும், மேல் பாகமும் முடிந்து சதுரமாக இருப்பதோடு, அதற்கு தரை கிடையாது. "இராஜாவின் அறையில்" "கருங்கல் பெட்டி" ஒன்று இருக்கிறது. இது ஒன்றுதான் பிரமிட்டில் உள்ள ஒரே அறைகலன் (Furniture). "இராஜாவின் அறையில்" காற்றோட்டம் இருப்பதற்காக, இரண்டு எதிர்பக்கங்களிலும் சுவற்றில் துளை போடப்பட்டு, அது மறுபக்கம் வருகிறது. கட்டடம் கட்டியவர்கள் காற்றோட்டத்திற்காக இதை இப்படி வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படக் கூடிய வேறு அறைகளும் பாதைகளும் உண்டு என்று கூறப்படுகிறது. ஆனால் நாங்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. கண்டுபிடிக்கப்பட்டுள்ள அறைகளும், பாதைகளும் தேவனின் முழு திட்டத்திற்கு சாட்சியாக இருக்கும்படியான திவ்ய நோக்கத்திற்கு இது போதுமானதாக உள்ளது என்று எங்களுக்குத் தோன்றுகிறது.

"நீண்ட தாழ்வராத்தின்" (Grand Callery) மேற்கு பக்கத்தின் கீழே அல்லது வடக்குப் பக்கத்தில் கோடியில் கீழ்ப்பக்கமாக சரியான விதத்தில் அமையாத ஒரு பாதை இருக்கிறது. "கிணறு" (well) என்று அது அழைக்கப்படுகிறது. இது கீழே இறங்கும் "நுழைவு வாயில் பாதைக்கு" வருகிறது. அதன் வழி இயற்கையாகவே இருக்கின்ற ஒரு பாறையில் உள்ள செயற்கையான குகை (Grotto) வழியாகச் செல்லுகிறது. இந்தப் பகுதிக்கும் "நீண்ட தாழ்வாரம்" பகுதிக்கும் இடையில் உள்ள வழி ஒழுங்கற்று இருக்கிறது. "இராணியின் அறைக்கு" செல்லும் முந்திய வழி மறைக்கப்பட்டுள்ளது போலவும் அது "நீண்ட தாழ்வாரத்தில்" உள்ள தரையின் கற்பலகைகளினால் மூடப்பட்டுள்ளது போலவும் ஒரு கற்பலகை கிணற்றின் வாயை மூடியிருந்தது போலவும் தோன்றுகிறது. ஆனால் இப்பொழுது "நீண்ட தாழ்வாரத்தில்" தாழ்வான முனைப் பகுதி கிழிக்கப்பட்டுள்ளது. இதனால் "இராணியின் அறைக்கு" செல்லும் பாதை திறந்து உள்ளது. அதனால் "கிணறு" திறந்து இருக்கிறது. அந்த பகுதிக்கு சென்றிருந்தவர்கள், அதை சோதித்து பார்த்தவர்கள் "கிணற்றின் வாயி - ல்" ஒரு வெடி வெடித்தது போன்று தோன்றுகிறது என்றும் அது கீழ்ப்பகுதியி-ருந்து திறந்திருக்கிறது என்றும் கூறுகிறார்கள். ஆனால்

இப்படி ஒன்றும் நடக்கவில்லை என்பது எங்களுடைய அபிப்பிராயம். இது கட்டடம் கட்டுபவர்களால் வேண்டும் என்றே விடப்பட்டது, ஒரு வெடி வெடித்ததால் நடக்கக் கூடியதைக் காட்டுவதற்காகவே அப்படி விடப்பட்டது. இதைக்குறித்து பின்னால் பார்க்கலாம். உண்மையாகச் சொல்ல வேண்டும் என்றால் வெடித்ததால் வந்த கல்லுகள் எதுவுமே அங்கே கிடையாது. அதை அகற்றுவதும் கடினமான வேலையாகும்.

"கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" மேல் முனையில் அல்லது தெற்கு முனையில் "சிறு அறை" மற்றும் "இராஜாவின் அறையில்" உள்ள தளம் "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்திற்கு" நீண்டு, திடீரென்று ஒரு தடையை ஏற்படுத்தும்படி அதன் மேல் நுனியில் ஒரு உயரமான படி உள்ளது. இந்த படி தெற்குப் பக்கத்தில் உள்ள சுவற்றில் இருந்து 61 அங்குலத்திற்கு வெளியே வருகிறது. "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" சுவர் ஒரு விநோதத்துடன் காணப்படுகிறது. அது செங்குத்தாக இல்லை. ஆனால் வடக்குப் பக்கமாக மேலே 20 அங்குலம் (Dr. Edgar's Report) சாய்வாக உள்ளது.அதன் மிக மேலான பகுதியில் ஒரு பாதை இருக்கிறது. அது "இராஜாவின் அறைக்கு" மேல் உள்ள "கட்டுமான அறையை" இணைக்கிறது.

பிரமிட்டின் பாதைகளும் தளங்களும் சுண்ணாம்பு கற்களால் ஆனவைகள். "இராஜாவின் அறை," சிறு அறை (Ante. Chamber) அவைகளுக்கு இடையில் உள்ள பாதைகள், தளங்கள், மேல் கூரைகள் (Ceiling) ஆகியவைகள் எல்லாம் கருங்கல்-னால் கட்டப்பட்டவைகள். இவைகள் தவிர கட்டடம் முழுவதும் சுண்ணாம்பு கற்களால் கட்டப்பட்டவைகள் தான். கட்டடத்தின் ஒரே ஒரு கருங்கல் காணப்படும் இடம் எதுவென்றால், "முதலாவது ஏறுகின்ற பாதையில்" கீழ்முனையில் இறுக்கமாக வைக்கப்படிருக்கிற "அடைப்பான்" ஆகும். கட்டடம் கட்டுபவர்கள் விட்டுச் சென்றபடியே, "முதலாவது ஏறுகின்ற பாதையின்" கீழ் முனையில் சரியானபடி இறுக்கமாகவுள்ள ஒரு கோண வடிவமுள்ள கல்-னால் அடைக்கப்பட்டு இருந்தது. இந்தப் பகுதி "நுழைவு வாயில் பாதையோடு" சேருகிறது; இது இவ்வளவு நேர்த்தியாக செய்யப்பட்டிருந்தபடியால் "குறித்த காலத்தில்" அடைப்பான் கல் விழும் வரை "முதலாவது ஏறுகின்ற பாதை" தெரியாமல் இருந்தது. "முதலாவது ஏறுகின்ற பாதையின்" கீழ் முனையில் முத்திரை கல்லுக்கு நேர் பின்னால் கருங்கல்-னால் ஆன "அடைப்பான் கல்" இலேசாக ஆப்பு வடிவத்தில் இருந்தது. அது அங்கே தான் இருக்க வேண்டும் என்று இருந்தது போல் தோன்றியது. ஏனெனில் இதுவரை அதை அகற்றுவதற்கான முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

"நுழைவு வாயில் பாதை" பழங்காலத்து மக்களுக்கு, சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறபடி நன்றாக தெரிந்து இருந்தாலும், அல்மாமவுன் (Almamoun) "என்கிற அரேபிய கே-ப் அதன் சரியான இடத்தை அறியாதிருந்தார். ஆனால் அந்த காலத்தின் வழக்கங்கள்படி, பிரமிட்டின் வடக்கு பக்கத்தில் அது இருக்க காணப்பட்டது. கிபி 825-ல் அதிக செலவில் அவன் வரைபடத்தில் காட்டப்பட்டபடி, அதிக பொக்கிஷங்களைக் கண்டு பிடிக்கலாம் என்கிற எண்ணத்தில்அவன் ஒரு வாசலை உண்டு பண்ணினான். அது அதிக அளவு அறிவுக்கான பொக்கிஷங்களைக் கொண்டிருந்தாலும், அரேபியர்கள் எதிர்பார்த்தபடி ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனாலும் அவர்களுடைய உழைப்பு வீண் போகவில்லை. அவர்கள் அந்த அடைப்புக் கல்-ன் மேல் வேலை செய்த போது அது தனது இடத்தை விட்டு விலகி நுழைவு வாயில் பாதையில் விழுந்தது. இதனால் இரகசியம் தெரிய வந்தது. "முதலாவது ஏறுகின்ற பாதை" தெரிந்தது. பதுக்கி வைக்கப்பட்ட பொக்கிஷத்தைக் கண்டு பிடித்து விட்டோம் என்று அரேபியர்கள் முதலாவதாக நினைத்தார்கள். கருங்கல்-னால் ஆன "அடைப்பான்" கல்லை அகற்ற முடியாமல் போனதால், இலகுவாக இருந்த சுண்ணாம்பு கற்களை பக்கவாட்டில் உடைத்து, மிகவும் எளிமையாக ஒரு வழியை உண்டு பண்ணிக் கொண்டார்கள்.

## யுகங்களின் திட்டத்தைக் குறித்த மகா பிரமிட்டின் சாட்சியம்

மகா பிரமிட் கற்றுக் கொடுக்கின்ற, மத ரீதியிலான அல்லது மேசியாவின் அம்சம் பற்றி முதலாவதாக கூறிய ஸ்காட்லாந்து தேசத்தின் இளைஞர் திரு. ராபர்ட் மென்சீஸ் (Mr. Robert Manzies)

என்பவர் பேரசிரியர் (Prof. Smyth) ஸ்மித்துக்கு பின்வருமாறு எழுதினார்.

"கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" வடக்கு பக்கத்தில் இருந்து மேல்வாரியாக செல்லும் போது, நம்முடைய இரட்சகரின் ஜீவியம் தொடங்குகிறது. இது ஒரு வருடத்திற்கு ஒரு அங்குல கணக்கில் இருக்கிறது. முப்பத்து மூன்று அங்குல வருடங்கள், "கிணற்றின்" வாய்க்கு நம்மை கொண்டு வருகிறது."

சொல்லப்போனால் "கிணறு" தான் முழு கதைக்கும் திறவுகோலாக உள்ளது. இது நம்முடைய ஆண்டவரின் மரணத்திற்கு, அடக்கத்திற்கு மாத்திரமல்ல, அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாக இருக்கிறது. கடைசியானது ஏற்கெனவே சொல்லப்பட்ட ஓர் அம்சத்தின் மூலம் தெரிய வருகிறது. அதாவது "கிணற்றின்" வாய் பகுதியும் அதன் சுற்றுப்புறமும், அதன் கீழ்ப் பகுதியி-ருந்து ஒரு வெடி வெடித்து திறந்து விட்டது போன்று தோன்றுகிறது. இப்படியாக நம்முடைய ஆண்டவர், மரணத்தின் கட்டுகளை உடைத்து, அதன் மூலமாக நித்திய ஜீவனையும், அழியாமையையும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார், ஜீவனுக்கு ஒரு புதிய வழியைத் திறந்தார். (எபி. 10:19) மரணத்தினால் அவரைப் பிடித்து வைக்கமுடியவில்லை (அப். 2:24) என்பது "கிணற்றின்" மேல் திறப்பின் சுற்றுப்புறத்தில் கிழிக்கப்பட்ட பாறைகள் சொல்லுவதாகும். மகா பிரமிட்டின் ஏறுகின்ற பாதைகளுக்கு "கிணறு" தான் ஒரே வழியாக இருக்கிறது போல, நம்முடைய மீட்பரின் மரணமும் உயிர்தெழுதலும் மாத்திரமே, எந்த நிலையி-ருந்து விழுந்திருந்தாலும், விழுந்துபோன இனத்திற்கு ஜீவனுக்குள்ள ஒரே வழியாகும். "முதலாவது ஏறுகின்ற பாதை" இருந்தும் கூட செல்ல முடியாது என்று இருந்த மாதிரி யூத அல்லது ஒரு நியாயப்பிரமாண உடன்படிக்கை ஜீவனுக்கு ஒரு வழியாக நின்றது. ஆனால் ஜீவனுக்கு பயனற்ற அல்லது செல்ல முடியாத வழியாக இருந்தது. ஆனால் குறிக்கப்பட்ட வழியின் மூலமாக விழுந்து போன இனத்தில் யாரும் ஜீவனை அடைய முடியவில்லை. "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." (ரோம. 3:20) "கிணறு" அடையாளமாக



காட்டுகிறபடி ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்ட இனத்தின் அங்கத்தினன் எவனும் ஈடு ப- மூலமாகவே திவ்ய திட்டத்தின் கிருபையான நித்திய ஜீவனைப் பெறமுடியும்.

"கம்பீரமான நீண்ட தாழ்வாரம்" கிறிஸ்தவ யுகத்திற்கு அடையாளமாக இருக்கிறது என்கிற யோசனை வருவதற்கு முன்னரே பேராசிரியர் ஸ்மித் (Prof. Smyth) வான சாஸ்திர கணிப்பு மூலம் பிரமிட் கட்டப்பட்ட காலம் கிமு 2170 என்று தீர்மானித்தார். திரு. மென்சீஸ் நீண்ட தாழ்வாரத்தின் தரைப்பகுதி - அங்குலங்கள், வருடங்களுக்கு அடையாளமாக உள்ளன என்று கூறியபோது ஒருவர் நினைத்தார், அந்த கருத்து சரியானதாக இருந்தால், நீண்ட தாழ்வாரத்தின் கீழ் நுனியில் இருந்து கீழாக, "முதலாவது ஏறுகின்ற பாதை" வழியாக அது சந்திக்கும் நுழைவு வாயில் பாதை வரைக்கும் அளந்தால், அதன்பின் மேல் நோக்கி "நுழைவு வாயில் பாதை" வழியாக பிரமிட்டின் நுழைவு வாயில் வரை அளந்தால், பாதையில் இதற்கு இணையான குறிப்பு அல்லது அடையாளம் இருக்க வேண்டும், அப்படி இருந்தால், பிரமிட் கட்டப்பட்ட வருடத்தைக் கணக்கீடு செய்வதற்கு அங்குல - வருட கருத்தின் முறை சரியான விதமாக உள்ளதா என்பதையும் அறிந்து கொள்ளலாம். இது நியாயமானதாக இருந்தாலும் முக்கியமான சோதனையாகும். ஆகவே ஒரு கட்டட வல்லுனர் பிரமிட்டிற்கு மறுபடியும் வரும்படி அழைக்கப்பட்டார். அவரிடம் பாதைகள், அறைகள் போன்றவற்றின் சரியான அளவுகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. இது நடந்தது 1872ல் ஆகும். அந்த கனவானின் அறிக்கை மிகவும் துல்-யமாக, சரியாக இருந்தது. அவருடைய அளவுகள், மேலே சொன்ன தரை மார்க்க அளவுகள் நுழைவு வாயி-ல் உள்ள சுவர்கள் வரை 2170.5 அங்குலங்கள். இப்படியாக அது கட்டப்பட்ட காலம் இரட்டிப்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பாதைகளின் தரை மார்க்க அளவுகள் சரித்திரம் மற்றும் கால அட்டவணையில் ஓலைச் சுருளாக இருக்கிறது. இது பொதுவாக "எகிப்து தேசத்தில் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்."


பேராசிரியர் ஸ்மித் (Prof. Smyth) கொடுத்த மிகச் சரியான அளவுகளுக்காக நன்றி கூற வேண்டும். இதன்மூலம் இந்த சாட்சியின்,

இது வரைக்கும் கிடைக்கப் பெற்றிருந்த முக்கியமான அம்சங்களை நாம் பெற முடிந்தது.


மகா பிரமிட்டைக் குறித்து நாங்கள் சொன்ன சாட்சியை முதலாவதாக நாங்கள் உணர்ந்து கொள்ள தொடங்கினபோது, நாங்கள் உடனடியாக உண்மையிலேயே வேதாகமம் ஒரு கல்-ல் இருக்கிறது என்று கூறினோம். இந்த பிரபஞ்சத்தின் மாபெரும் கட்டட வல்லுனரின் இரகசிய திட்டங்களின் தொகுப்பாக, அவருடைய முன் அறிவையும், ஞானத்தையும் காட்டுவதாக இருக்கும் என்றால், அது அவருடைய எழுதப்பட்ட வார்த்தையோடு எல்லா விதத்திலும் ஒத்து இருக்க வேண்டும். பிரமிட்டின் இரகசியங்கள் உலக சரித்திரத்தின் 6000 வருடங்கள் முடியும் வரை இரகசியமாக வைக்கப்பட்டு இருந்தது என்கிற உண்மை, இப்பொழுது ஆயிர வருட யுகம் உதயமாகப் போகின்ற வேளையில், அது தன்னுடைய சாட்சியைக் கொடுக்கத் தொடங்குகிறது என்பது, எழுதப்பட்ட வார்த்தையோடு முழுவதுமாக ஒத்து இருக்கிறது. இதனுடைய அபரிமிதமான சாட்சியும், தேவனுடைய மகிமையான திட்டத்தைக் குறித்த சாட்சியும் இது போன்றே உலகத்தின் அஸ்திபார நாட்களில் இருந்து இரகசியமாக வைக்கப்பட்டு இருக்கிறது. இப்பொழுது மாத்திரமே அதன் முழுமையில், மகிமையில் பிரகாசிக்கத் தொடங்கி இருக்கிறது.

முந்தைய புத்தகங்களின் மூலமாகவும், இந்த புத்தகத்தின் முந்தைய அதிகாரங்கள் மூலமாகவும் நாம் ஒரு புதிய யுகத்தின் ஆரம்பத்தில் நிற்கிறோம் என்பதையும் அதாவது ஆயிர வருட காலம் உதயமாகிக் கொண்டு வருகிறது என்பதையும், அந்த வேளையில் பூமியின் அரசாட்சி “இந்த உலகத்தின் அதிபதியினிடமிருந்தும்” அவனுக்கு அடிமைப்பட்டு இருக்கும் அவனுடைய ஆட்களிடம் இருந்தும், மாற்றப்பட்டு வருகிறது என்பதையும் இது “உரிமைக்காரரிடமும்” (கிரயம் கொடுத்து வாங்கப்பட்டது) அவருடைய உண்மையான பரிசுத்தவான்களிடமும் மாற்றப்படுகிறது என்பதையும் நாங்கள் ஏற்கெனவே காட்டினோம். இந்த மாற்றத்தினால் வரும் பலன் பெரிய ஆசீர்வாதமாக இருக்கும் என்றாலும் மாற்றப்படும் வேளை தற்போதுள்ள பிரபுவாகிய “பலவான்” கட்டப்பட்டு அவனுடைய வீட்டார் அதிகாரத்தி-ருந்து






மகா பிரமிட்டின் கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின் வடக்கு முனையிலிருந்து அல்லது மேற்கு தாழ்வு பகுதியிலிருந்து காணும் வெட்டப்பட்ட பகுதியின் தோற்றம்




உடைக்கப்பட்ட சரிவுக்கல் மற்றும் கிணற்றின் வாயிலின் விரிவுபடுத்தப்பட்ட தோற்றம்

*நீக்கப்படும் வேளை (மத். 12:29; வெளி. 20:2) மகா உபத்திரவத்தின் வேளையாக இருக்கும். இந்த உபத்திரவத்தைப் பற்றி வேதாகமத்தின் கால நிரூபணங்கள் காட்டுகிறது என்னவெனில், கிறிஸ்துவின் இரண்டாவது வருகையி-ருந்து (அக். 1874) மகா உபத்திரவம் ஆரம்பிக்கிறது என்பதாகும். தேசங்கள் நியாயம் தீர்க்கப்படுவது, கர்த்தரின் நாளின் வெளிச்சத்தின் கீழ் தொடங்கப் பெறும். இது மகா பிரமிட்டில் இப்படியாகக் காட்டப்பட்டுள்ளது.*

*"இறங்கும் பாதை" மகா பிரமிட்டின் "நுழைவு வாயி-ல்" இருந்து குழி அல்லது "பாதாள அறை வரை" பொதுவாக உலகத்தின் (உலகத்தின் அதிபதியின் கீழ்) வழியைக் காட்டுகிறது. இந்த வழி மகா உபத்திரவ காலத்தைக் காட்டுவதாக உள்ளது. இதில் தீங்கு முற்றிலுமாக ஒரு முடிவுக்கு கொண்டு வரப்படும். இந்த காலத்தைக் கணக்கிட பிரமிட்டின் நுழைவு வாயி-ல் இருந்து உபத்திரவத்தின் பாதாள அறை வரை அளந்து தீர்மானித்துக் கொள்ளப்பட்டால் சரியான காலத்தைத் தெரிந்து கொள்வது எளிதாகிவிடும். "முதலாவது ஏறுகின்ற பாதையும்," "கம்பீரமான நீண்ட தாழ்வாரமும்" சந்திக்கின்ற இடத்தில் நமக்குத் தெரிந்த தேதி உள்ளது. அது நம்முடைய ஆண்டவரின் பிறப்பைக் காட்டுகிறது. அங்கிருந்து 33 அங்குல தூரத்தில் உள்ள "கிணறு" என்பது அவருடைய மரணத்தைக் குறிக்கிறது. பின்னர் "முதலாவது ஏறுகின்ற பாதையில்" இருந்து பின்னோக்கி வந்து "நுழைவு வாயில் பாதையை" சந்திக்கிற இடத்தை அளப்போமென்றால், இறங்கும் பாதையைப் பற்றிய காலத்தைக் குறிக்க முடியும். இந்த அளவு 1542 அங்குலமாகும். இது கிமு 1542 வது வருடத்தைக் காட்டுகிறது. அந்த இடத்தில் உள்ள வருடம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் அந்த இடத்தில் இருந்து "நுழைவு வாயில் பாதையில்" கீழ் நோக்கி வந்தால், இந்த யுகம் முடியும் போது உள்ள பெரிய அழிவுக்கும் உபத்திரவத்திற்கும் அடையாளமாக இருக்கிற "பாதாள அறைக்கு" வந்து சேருகிறது. அது 3457 அங்குலங்களாக இருந்து 3457 வருடங்கள் என்று அர்த்தப்படுத்துகிறது. இது கிமு 1542 -ருந்து ஆகும். இந்த கணிப்பு கிபி 1915ஐ உபத்திரவ காலத்தின் ஆரம்பம் என காட்டுகிறது. இது கிமு 1542 வருடங்களோடு கிபி 1915 வருடங்களை கூட்டினால் 3457*

வருகின்றது. இப்படியாக கிபி 1914ம் வருட முடிவில் யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் இதுவரை சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவ காலத்தின் ஆரம்பமாக இருக்கும் என்று மகா பிரமிட் சாட்சி கூறுகிறது. ஆகவே அறிந்து கொள்ளவேண்டியது என்னவெனில் இந்த விஷயத்தைக் குறித்து வேதாகம சாட்சி மிகவும் ஒத்து இருக்கிறது. இதைப்பற்றி இணையான யுகங்கள் (Parallel Dispensation) என்ற வேதாகம பாடங்கள் தொகுதி 2, அத்தியாயம் 7-ல் காட்டப்பட்டுள்ளது.

40 வருட அறுப்பு 1874ம் ஆண்டின் (Fall) இலையுதிர் காலத்தில் துவங்கியது என்பதைக் குறித்து எவரும் சந்தேகிக்கக் கூடாது. ஏனெனில், உபத்திரவம் இன்னமும் எச்சரிக்கப்பட வேண்டிய, தாங்கமுடியாத அளவிற்கு வந்துவிடவில்லை. மேலும் சில அம்சங்களில் அறுப்பின் காலம், அந்தக் காலத்தி-ருந்து, அறிவு மிக அதிகமாக பெருகும் காலமாக இருந்திருக்கிறது. மேலும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், இந்த விஷயத்தைக் குறித்து சிந்திக்காமலேயே பேராசிரியர் ஸ்மித் (Prof. Smyth) மகா பிரமிட் மற்றும் “குழி” அல்லது “பாதாள அறையைக்” குறித்த வரை படத்தை வரைந்தார்.

உபத்திரவ காலத்தின் நியாயத்தீர்ப்பு பேர் சபை தூக்கி எறிய ஆயத்தங்கள் செய்யப்படும் போது தொடங்கும் என்று தேவனுடைய வார்த்தை தெளிவாக கூறுவதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது முதலாளி மற்றும் தொழிலாளர்கள் இடையே சுயநலம் என்கிற சச்சரவிலும் கூட இந்த உபத்திரவம் உச்ச கட்டத்திற்கு வருமாறு இந்த இரண்டு பேருமே முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த குழி அல்லது “பாதாள அறை” அமைந்துள்ள விதமும், அது முடிக்கப்பட்டுள்ள விதமும் விசித்திரமாக முக்கியத்துவம் உள்ளதாக இருக்கிறது. மேல்பக்கமும், பக்க வாட்டின் பகுதிகளும் சரியாக இருக்கும் வேளையில், அதற்கு தரை கிடையாது. அது கரடுமுரடாக உள்ளது. கட்டி முடிக்கப்படாத கீழ்ப்பகுதி கீழே கிழக்குப் பக்கமாக சாய்ந்து கொண்டே போகிறது. அதற்கு “தரையில்லாத குழி” என்று பெயர் வந்துள்ளதற்கான காரணம் அதுதான். இந்த அறை சுயாதீனத்தையும் சுதந்திரத்தையும், அதோடு கூட உபத்திரவத்தையும், மேலும் உயர்வு தாழ்வு பற்றியும் பேசுகிறது. அங்கே வருபவர்கள் குனிந்து, குறுக்கி உட்கார்ந்த மாதிரி வரும்படி “நுழைவு பாதை” மிகவும் சிறியதாக இருப்பதால் அதனூடாக வரும் போது களைப்படைவதுண்டு. இங்கே அவன் காண்பது என்னவெனில் படிகள் கீழ் நோக்கி அதிக ஆழத்திற்குள் சென்று, மோசமான சமமில்லாத உடைந்திருக்கிற தரைப்பகுதியை அடைகிறான்; ஆனால் மிக அதிகமான உயரத்தையும் அவன் காண்கிறான். இந்த அறையின் ஒரு பகுதி, அதற்கு வருகிற பாதையை காட்டிலும், விசாலமாக இருக்கிறது. இது அவனுடைய மனதிற்கு அதிகமான இடம் போன்று காட்டுகிறது.



இவைகள் எவ்வளவு உண்மையானதாக இருக்கின்றன. தேசத்தின் நாகரீகம் அடைந்த மனிதர்களை விடுதலையின் ஆவி சென்றடைந்து விட்டது என்பதை ஏற்கெனவே நம்மால் பார்க்க இயலாமல் இருக்கிறதா? மனுக்குலம் நிலையான மற்றும் நிலையற்ற விடுதலையை பெறுவதும் உணருவதும் குறித்து யோசிக்க நாம் இங்கே நிற்கவில்லை. இரண்டுமே இந்த இடத்தில் சொல்லப்படலாம். அறையின் மேல் பக்கம் உயர்வையும் கீழ்ப்பக்கம் மனஉளைச்சலையும் காட்டுகின்றது. நாம் அறிவது என்னவெனில் கர்த்தருடைய நாளாகிய நம்முடைய நாளில் உள்ள வெளிச்சம் விடுதலையின் ஆவியைத் தூண்டுகிறது. விடுதலையின் ஆவி இன்றும் அதிகாரத்தில் உள்ளவர்களின் பெருமை, செல்வம் ஆகியவற்றோடு சேரும் போது உபத்திரவத்திற்கு காரணமாகிறது. இது இந்த காலகட்டத்தில் மிக அதிகமாக இருக்கும் என்று வேதாகமம் கூறுகிறது. அது இப்பொழுதுதான் தொடங்கி இருந்தாலும், இராஜாக்களும், பேரரசர்களும், கனவான்களும், முதலாளிகளும், எல்லா மனிதரும் அது வருவதைக் காண்கிறார்கள். “பூமியின் மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்க்கிறதினால் மனிதர்களுடைய இருதயம் சோர்ந்து போம்.” ஏனெனில் வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுகின்றன, இறுதியில் முற்றிலுமாக அகற்றப்படும். “தற்போதுள்ள பொல்லாத உலகத்தின்” பொல்லாத முறைமைகளாகிய அரசாங்கம், சமுதாயம், மதம் ஆகியவை

முற்றிலுமாக அழிந்து போகும். "பாதாள அறை" இதைத்தான் அடையாளப்படுத்துகிறது. நாம் இந்த "குழியை" மகா உபத்திரவத்திற்கு அடையாளமாக காண்பதோடு இப்பொழுது இருக்கிற ஒழுங்கு முறைகளை அவைகள் அகற்றி, அழிவுக்குட்படுத்தி (தேவனுடைய இராஜ்யத்தில் ஏற்படுத்தப்பட இருக்கிற ஒழுங்கானவைகளுக்கு அவைகள் ஒத்துவராததால்) மாறுதல் உண்டு பண்ணுவதாக காண்பதோடு கீழ் நோக்கிச் சென்று கொண்டிருப்பவர்களின் மேல், வரக்கூடிய உறுதியான முடிவைக் காட்டுவதாகவும் காண்கிறோம். இவர்கள் ஆயிர வருடத்தின் போது உள்ள முழு வெளிச்சத்தில் தங்களுடைய பாவங்களை உதறித்தள்ளி விட்டு நீதியை பின்பற்ற மறுத்து விடுவார்கள்.

இதைப்பற்றிய இன்னொரு விஷயத்தையும் கவனியுங்கள். "நுழைவு வாயில் பாதை" குழியை நெருங்கும் வரை கீழ் நோக்கி வந்து, பின்னர் தரை அளவில் சம மட்டமான பாதை செல்லுகிறது. "பாதாள அறை" அல்லது "குழி" அதன் வாயி-ல் இருந்து பின்னோக்கி அளந்து, நேராக உள்ள இடம் பாதையின் கோண வடிவத்தில் இருக்கும் இடம் வரை வரும் போது தூரம் 324 பிரமிட் அங்குலமாக இருக்கக் காண்கிறோம். இதனால் தரை மட்டத்தில் உள்ள இந்த பாதையின் ஆரம்பம் 324 வருடங்கள் 1915க்கு முன்னால் என்று நாம் காண்கிறோம். அதாவது அது 1590ம் வருடத்தைக் குறிக்கிறது. அந்த காலத்தில் (கிபி 1591) மனுக்குலத்தின் செல்வாக்கைப் பெற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் ஏதோ ஒன்று நடந்தது. அது ஏதோ ஒரு விதத்தில் கீழ் நோக்கி வரும் நிலைமையை நிறுத்தியது என்று ஒரு வேளை கூறலாம். அந்த நேரத்தில் என்ன நடந்தது? இப்படிப்பட்ட செல்வாக்கைப் பெறுவதற்கு அந்த காலத்தில் எந்த பெரிய இயக்கம் இருந்தது?

துரதிர்ஷ்டவசமாக இந்த கீழ் நோக்கி வருகின்ற பாதையைக் குறித்த சரியான அளவை நம்மால் கண்டு கொள்ள முடியவில்லை. பேராசிரியர் ஸ்மித் (Prof. Smyth) அவர்களின் வரைபடங்கள், அவைகளை அடிப்படையாகக் கொண்ட "தாள்களின் அளவுகள்" மேல் நம்பிக்கை வைப்பதற்கு அவைகள் போதுமான அளவிற்கு சரியாக இல்லை என்று நாம் உறுதியாக நம்புகிறோம். உறுதியாக



சொல்லப்படாத ஒரு அளவின்படி அது 324 பிரமிட் அங்குலங்கள் பின்நோக்கி அளக்கப்படும் போது கிட்டத்தட்ட கிபி 1590 ஐ அல்லது "ஷேக்ஸ்பியரின் நாளை" (Shakespeare's) குறிப்பிடுகிறது. இருந்தாலும் இதை நாங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. "இறங்கும் பாதை" உலகத்தின் நிலைமையைக் காட்டுகிறது; ஏறுகின்ற பாதை "அழைக்கப்பட்ட" சபையின் மார்க்கத்தைக் காட்டுகிறது. கீழ் நோக்கி வருகிற பாதையை கிடையான பாதையாக மாற்றுகிற காரியம் ஒழுக்கத்தில் அல்லது அரசிய-ல் தடையை ஏற்படுத்தி அறிவு வெளிச்சத்தை ஏற்படுத்துகிறதைக் காட்டுகிறது.

பதினாறாவது நூற்றாண்டில் ஏற்பட்ட புரட்டஸ்டண்ட் சீர்திருத்த இயக்கம் உலகத்தை ஒவ்வொரு வழியிலும் மறைமுகமாக உயர்த்துகிற வேலையை நிச்சயமாக நிறைவேற்றியது. அது அதன் சமுதாயத்தின் அறியாமை, மூட நம்பிக்கை என்கிற நிலைமையை சுத்திகரித்தது. இது உலக முன்னேற்றத்தில் ஒரு புதிய சகாப்தம் என கத்தோ-க்க மற்றும் புரட்டஸ்டண்ட் சபையாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நம்முடைய நாட்களில் எல்லாம் மேல் நோக்கித்தான் இருக்கிறது, கீழ் நோக்கி அல்ல என்று சிலர் சொல்வது போல் நாங்கள் சொல்லமாட்டோம். இதற்கு மாறாக, நம்முடைய நாட்களில் நடைபெறுகிற எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள முடியாது, நாகரீகம் அடைந்திருந்தாலும் கூட எல்லாம் தேவனுடைய சித்தத்தின்படியே உள்ளது என்றும் கூறமுடியாது. நாம் உலகத்தில் பரவலாக மனித நேயம் இருப்பதைக் காண்கிறோம். இந்த நாட்கள் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் மதத்திற்கு தூரமாக இருந்தாலும், கடந்த காலத்தின் அறியாமையின் மூட நம்பிக்கைகளுக்கு மேற்பட்டதாக இருக்கிறது.

இந்த உலகத்தின் சமுதாய முன்னேற்றம் தான், உலகத்தின் பரிணாமம் என்கிற கருத்திற்கு வழி வகுத்து, உலகம் துரிதமாக முன்னேறிக் கொண்டு வருகிறது என்று அநேகர் முடிவெடுக்க வழிவகுத்தது; மேலும், அதற்கு இரட்சகர் தேவையில்லையென்றும்,

அவருடைய மீட்பின் வேலை அவசியம் இல்லை என்றும், இழந்து போனவைகளை திருப்பித்தரும் இராஜ்யம் தேவை இல்லையென்றும் முடிவெடுக்க வழி வகுத்தது. முன்னேற்றமும் சுத்தமான சுயநலத்திற்கும் அடிப்படையாக உள்ளவைகளும் சீக்கிரத்திலேயே அதிருப்தியையும், காலா காலத்தில் அராஜகத்தையும் கொண்டு வரும் என்பதை வெகு சீக்கிரத்திலேயே இந்த உலகம் அறிந்து கொள்ளும். ஆண்டவருடைய ஜனங்கள் மாத்திரமே அவருடைய வசனத்தால் நடத்தப்பட்டு இவைகளை சரியான விதத்தில் புரிந்து கொள்கிறார்கள்.

மேலே சொல்லப்பட்ட அளவுகள், தங்களுடைய இணக்கமான சாட்சிகளைக் கொடுத்துக் கொண்டு இருக்கும் போது, இன்னொரு அளவு வேதாகமம் கூறுவதற்கு மாறாக இருக்கிறது. அது "முதலாவதாக ஏறுகின்ற பாதையாகும்." அது இஸ்ரயேல் எகிப்தி-ருந்து புறப்பட்ட காலத்தி-ருந்து நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் பிறப்பு வரை உள்ள காலத்தைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். (இந்த காலம் தொகுதி 2, அத். 7ல் நாம் தனியாக வகுத்த யூத யுகம் என்று கூறுகிற அதே காலமல்ல. பிந்தியது யாத்திரையின் முன்னர் 198 வருடங்களுக்கு முன்னர் யாக்கோபின் மரணத்தின் போது ஆரம்பித்தது. இது அவர்கள் நிராகரித்த ஆண்டவர், தமது சிலுவை மரணத்திற்கு 5 நாட்களுக்கு முன்னர், அவர்களுடைய வீட்டை பாழாப்புக்கு விட்ட நாள் வரை முடியவில்லை) வேதாகமம் காலத்தைக் குறித்து ஏற்கெனவே கொடுத்திருப்பதை அது சரியானதுதான் என்று அநேகமுறை காட்டிய பின்னர் அது சந்தேகப்படுவதற்குரியதல்ல. (தொகுதி 2, பக் 249-251) எகிப்தி-ருந்து புறப்பட்ட காலத்தி-ருந்து கிபி 1 வரை அது சரியாக 1614 வருடங்கள் என்று காட்டியது. அதே வேளையில் முதலாவது ஏறுகின்ற பாதையின் அளவு 1542 அங்குலங்கள்தான். மறுபடியும், ஆண்டவருடைய வார்த்தைகளில் இருந்தும் தீர்க்கதரிசியின் வார்த்தைகளில் இருந்தும் யூத யுகமும் மாம்சீக இஸ்ரயேலரின் கிருபையின் காலமும் இயேசுவின் பிறப்போடு நின்று விடவில்லை. ஆனால் அவருடைய மரணத்திற்குப் பின்னர் அவர்களுடைய கிருபையின் காலம் 70 வார முடிவில் அதாவது கிபி 36ல் (தொகுதி 2, அத். 7ஐ பார்க்கவும்) முடிந்தது என்று சந்தேகத்திற்கு இடமின்றி அறிந்திருந்தோம். யாத்திரையின் காலத்தி-ருந்து அவர்களுடைய கிருபையின் காலம்



முழுவதுமாக முடிந்த காலம் (1614 +36) - 1650 வருடங்களாகும். ஆனாலும் ஒரு விதத்தில் புது யுகத்தின் மேன்மையும் ஆசீர்வாதமும், ஆண்டவராகிய இயேசுவின் பிறப்பி-ருந்து (லூக்கா 2:10-14, 25-38) ஆரம்பித்தது என்றாலும் மகா பிரமிட் ஏதாவது ஒரு வழியில் இஸ்ரயே-ன் கிருபையின் காலத்தை முழுமையாக குறிப்பிட வேண்டும். கடைசியாக இது மிகவும் புத்தி சாதுர்யத்துடன் காட்டப்பட்டிருப்பதைக் கண்டோம். கருங்கல்-னால் ஆன "அடைப்பான்" இந்த காலத்தை சரியானபடி நிரூபிக்க போதுமான நீளம் உள்ளதாக இருந்தது. அந்த "அடைப்பான்"ஒருவரும் அகற்ற முடியாதபடி ஏன் அவ்வளவு உறுதியாக பதிக்கப்பட்டு இருந்தது என்று நாம் அறிந்து கொண்டோம். மாபெரும் கட்டட வல்லுனரான நம்முடைய தேவன் அங்கேயே இருக்கும்படியாக வைத்து விட்டார். ஏனெனில் வேதாகமத்திற்கு இசைவாக இருக்கிற அதன் சாட்சியைக் கேட்கும்படி அதன் திட்டத்தையும், காலக்கணக்கையும் அது கொடுக்குமாறு அப்படியே வைத்துவிட்டார்.

இந்த பாதையை அதன் "அடைப்பான்" கல்லோடு அளவிடும் போது, அதை ஒரு தூர பார்வை கண்ணாடி (Telescope) என்று எடுத்துக்கொண்டு, அதின் அடைப்பான் வெளியே எடுக்கப்பட்டு, அதன் மேல் முனை, அதன் கீழ் முனை ஏற்கெனவே குறிக்கப்பட்ட இடத்தை தொடுவதாக வைத்துக் கொள்வோம். "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" வடக்கு நுழைவு வாயி--ருந்து கீழ் நோக்கி கருங்கல் "அடைப்பானின்" கீழ் முனைக்கு வரும் போது, இடையில் உள்ள தூரம் 1470 அங்குலங்களாகும், இதோடு கூட "அடைப்பானின்" நீளம் 179 அங்குலங்களைக் கூட்டினால், மொத்தம் 1649 அங்குலங்களாகும். இது 1649 வருடங்களைக் குறிக்கிறது. இதற்கும் 1650க்கும் உள்ள ஒரு அங்குல வருஷம் வித்தியாசத்தை வேதாகமம் காட்டுவதோடு இசைவுபடுத்தி எளிதாக விளக்கலாம். எப்படியெனில், நாம் நினைவில் வைத்திருக்கிறோம், இந்த "அடைப்பான்" கல்-ன் ஒரு முனை பாதையில் அது இறுக்கமாக வைக்கப்பட்டிருக்கும் போது யாரோ ஒருவர், அதை அந்த இடத்தி-ருந்து அகற்றும்படி அதை ஓர் அளவுக்கு செதுக்கி எடுத்துள்ளார் என்பதாகும்.

இப்படியாக, இந்த கல்-ன் சாட்சி, வேதாகமத்தின்

சாட்சியங்களை உறுதிப்படுத்தி இஸ்ரயேல் எகிப்தி-ருந்து புறப்பட்டு அவர்கள் ஒரு தேசமாக பெற்ற கிருபையின் காலம் கிபி 36ல் முடிய அது 1650 வருடங்கள் என்று காட்டப்பட்டுள்ளது. (தொகுதி 2, அத்.3) ஆனால் ஒருவரும் இதை யூத, கிறிஸ்தவ யுகங்களோடு இந்த இரண்டும் இணையாக இருப்பதோடு, குழப்பிக் கொள்ளக்கூடாது. இந்த இரண்டு காலங்களும், தனித்தனியாக 1840 வருடங்கள் கொண்டதாகும். ஒன்று யாக்கோபின் மரணத்தி-ருந்து, கிபி 33வரை உள்ளதாகும். மற்றொன்று கிபி 33ல் இருந்து கிபி 1878வரை உள்ளதாகும்.

மறைப்பதற்கு மாத்திரம் இது சாமர்த்தியமான வழியல்ல, ஆனாலும் யாத்திரையி-ருந்து நம்முடைய ஆண்டவரின் பிறப்பு வரை உள்ள கால அளவை கொடுப்பதற்கும் இது சாமர்த்தியமான வழி தான். (ஏற்ற காலத்தில் வேதாகமத்தின் சாட்சிக்கு ஆதரவாக இருக்கும்படியாக) ஆனால் இதைக் கவனமாகப் படிப்பவர்கள் இப்படிப்பட்ட ஒரு வழியில்தான் அது செய்யப்பட்டிருக்க முடியும் என்று கண்டு கொள்ள முடியும். இரண்டு காரணங்களுக்காக : முதலாவது யூத யுகம், அவர்களின் கிருபையின் காலம் எகிப்தி-ருந்து வெளியே வருவதற்கு முன்னதாக, யாக்கோபின் மரணத்தி-ருந்து துவங்கியது மாத்திரமல்ல, அதோடு கூட அந்தக்காலம் கிறிஸ்தவ யுகத்திற்கு இணையாகவும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் பூலோக வாழ்வான 33 1/2 வருடங்களுக்கு இணையாகவும் இருந்தது. இரண்டாவதாக "முதலாவது ஏறுகின்ற பாதையை" யூத காலத்திற்கு வருட-அங்குலங்களில் காட்டுவதற்கு பிரமிட்டை இன்னும் அதிக விசாலமாக செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அதன் விஞ்ஞான அம்சங்களும், பாடங்களும் அழிக்கப்பட்டிருக்கும்.

இப்பொழுது "முதலாவது ஏறுகின்ற பாதையின்" முடிவில் இருக்கும் "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தைப்"பார்ப்போம். அது அடையாளமாக காட்டுகின்ற சாட்சியையும் பார்ப்போம். அது "முதலாவது ஏறுகின்ற பாதையைக்" காட்டிலும் 7 மடங்கு உயரமுள்ளதாக இருக்கிறது. அது அதிகமாக மெருகூட்டப்பட்ட ஒரு காலத்தில் அழகாயிருந்த, ஒன்றின் மேல் ஒன்று ஏழு வரிசையாக



மென்மையான கற்களை அதன் சுவர்களில் கொண்டுள்ளது. அந்தக் கற்கள் வெளிர் மஞ்சள் (Cream) வர்ணத்தில் உள்ளது. அது 28 அடி உயரமுள்ளது. எந்த இடத்திலும் அதன் அகலம் மிகவும் குறுகியும் 6 அடி அகலமாகவும் உள்ளது. தரையில் 3 அடிக்கு சுருக்கப்பட்டு கூரையில் இன்னும் அதிகமாக சுருக்கப்பட்டுள்ளது. 15வது நூற்றாண்டில் வாழ்ந்த பேராசிரியர் கிரீவ்ஸ் (Prof. Greaves) ஆக்ஸ்போர்டு பேராசிரியர், அதைக் குறித்து கீழ்கண்டவாறு எழுதினார் :

"அது மிகவும் நேர்த்தியான வேலைப்பாடு உள்ளதாக இருக்கிறது. கலைவண்ணத்திலேயோ, பொருட்களின் உயர்வான தரத்திலோ, மிகவும் விலையுயர்ந்த, மேன்மையான கட்டடங்களுக்கு எவ்விதத்திலும் குறைவானதல்ல... இந்த நீண்ட தாழ்வாரம் அல்லது நீண்ட நடை பாதை, என்று நான் எப்படி அழைத்தாலும், அது வெண்மையான மெருகூட்டப்பட்ட சுண்ணாம்பு கற்களால், பெரிதான சதுர வடிவில் ஒரே மாதிரி வெட்டப்பட்ட கற்களால் கட்டப்பட்டுள்ளது. கூரை, நடைபாதை, அதை சுற்றி பக்கவாட்டில் உள்ள சுவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட கற்களால் கட்டப்பட்டுள்ளன. கற்கள் நேர்த்தியாக ஒன்றோடு ஒன்றாக சாதாரணமாக கண்களுக்குத் தெரியாதவாறு இணைக்கப்பட்டு உள்ளது. அது முழு கட்டிடத்திற்கும் அழகு சேர்க்கின்றது. ஆகையால் பாதை வழுக்கக் கூடியதாகவும், நடப்பதற்கு கடினமாகவும் உள்ளது. மேல் நோக்கிப் போகும் போது மிகவும் உயர்ந்து கொண்டே போகிறது.... இரண்டு பக்கமும் உள்ள சுவர்களில் கற்களை அடுக்கிய விதத்தில் மிக அழகான கட்டடக் கலைத் தெளிவாகத் தெரிகிறது என்று எண்ணுகிறேன். அதில் உள்ள வரிசைகள் (Courses) உயர்வானவைகள், எண்ணிக்கையில் ஏழு ஆக உள்ளன. (இந்த கற்கள் அவ்வளவு பெரிதாக உள்ளன) ஒன்றின் மேல் ஒன்றாக 3 அங்குலத்திற்கு நீட்டிக் கொண்டு இருக்கிறது. மிகவும் மேல் பகுதியில் உள்ள வரிசை அடுத்ததிற்கு மேலாக நீட்டிக்கொண்டு இருக்கிறது, இறங்கி வரும்போதும் அவைகள் கிரமமாக தோற்றமளிக்கிறது."

படத்தை வைத்துக்கொண்டு அதைப் பற்றி கூறுவது இயலாது என்று பேராசிரியர் ஸ்மித் கூறுகிறார். அவர் மேலும் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :

"அதன் குறுகலான அகலம், உயர்ந்த மண்டபம் போன்ற உயரம் விசித்திரமான சாய்வான கோணம், நீண்ட தரை ஆகியவை பழங்கால சித்திரக்கலையைக் காட்டிலும் மேலானது. ஒரு தரையை வடக்கு முனையி-ருந்து தெற்கு பக்கமாக பார்க்கும் போது ஏறுகிறது, இருளுக்குள்ளாக ஏறுகிறது, ஏறிக்கொண்டே இருக்கிறது, முடிவேயில்லாதமாதிரி; இவ்வளவு செங்குத்தான நிலை, எந்த ஓவியனும் பார்க்கக் கூடிய நிலையில் இல்லாமல், மேல் நோக்கி வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. அந்த தரையின் ஒரு சிறு பகுதியைத் தவிர, மேல் எழுந்த வாரியாக சென்று, மேல் மட்டத்தில் வெளியே சென்று விடுகிறது. இதை சரியான முறையில் படத்தின் மூலமாக காட்டுவது என்பது முடியாதது. 'நீண்ட தாழ்வாரத்தில்' இருந்து வடக்கு பக்கமாக தெற்கு முனையில் இருந்து பார்க்கும் போது, தரை உடனடியாக தெரியாமல் போய்விடுகிறது. உங்களுடைய கண் மட்டத்தில் இருந்து பார்க்கும் போது தூரத்தில் கீழே இறங்கும் மேல் கூரையின் ஒரு பகுதி தெரிகிறது. அப்படியில்லையென்றால், கம்பீரமாக ஒன்றின் மீது ஒன்றாக போகும் இருளான சுவர்கள்தான் இருபக்கமும் செல்கின்றன. ஆனால் அது கஷ்டமான சாய்வுடன் காணப்படுகிறது. அது ஒரு பக்கம் கடின உழைப்பைக் குறித்தும், இன்னொரு பக்கம் அபாயத்தைக் குறித்தும், ஆனால் எல்லா இடங்களிலும் மலை போன்ற பலம் இருப்பதைக் குறித்தும் பேசுகிறது."

இந்த "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தில்" உண்மையான கிறிஸ்தவ சபையின் மார்க்கம் பற்றியும், சுவிசேஷ யுகத்தில் நீண்ட காலமாக இருக்கிற ஜெயம் கொள்ளுகிற சிறு மந்தையைக் குறித்தும், அதன் பாதையைப் பற்றியும், எவ்வளவு அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு காலத்தில் அழகான வெளிர் மஞ்சள் வர்ணத்தில் உள்ள சுவர்கள், கூரை, ஒன்றுக்கு மேல் ஒன்று



தொடர்ந்து இருக்கும்படியான கற்களால் உண்டானவைகள் எல்லாம் மேல் நோக்கிச் செல்பவைகளாக சிலர் எண்ணுகிற மாதிரி பெயரளவில் உள்ள சபையின் சரித்திரத்தை கொடுப்பதில்லை. இல்லையென்றால் அவைகள், நேர்த்தியாக மேல் நோக்கி இருந்திருக்காது. ஆனால் அவைகள் பரம அழைப்பைப் பெற்றவர்களுக்குச் சுவிசேஷ யுகத்தின் போது கொடுக்கப்பட்ட தேவனின் ஆதரவைக் கூறுகின்றன. அதாவது சில சுதந்திரம், சிலாக்கியங்கள், சுவிசேஷ யுகத்தின் போது நீதிமான்களாக ஆக்கப்பட்ட அனைவருக்கும், நிபந்தனையுடன் கொடுக்கப்பட்டன. இது மீட்கும் பொருளாகிய "கிணற்றினால்" அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" விசாலமான உயரம், யூத காலத்திற்கு அடையாளமாக உள்ள, பாதையின் உயரத்தைக் காட்டிலும் ஏழு மடங்கு அதிகமாக உள்ளது (ஏழு என்கிற எண் முழுமையை அல்லது நிறைவைக் குறிக்கிறது). இது ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தில் உள்ள நிறைவான ஆசீர்வாதத்தைக் குறிக்கிறது. இந்த நிறைவான ஆசீர்வாதம் உண்மையில் சுவிசேஷ யுக சபைக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ளது. "இராஜாவின் அறை" "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" முடிவில் இருக்கிறது. அது தற்போது உள்ள பரம அழைப்புக்குரிய அனைத்து விசுவாசிகளையும் வழி நடத்திச் செல்லுகின்ற ஓட்டத்தின் முடிவைக் காட்டுகிறது. இந்த "இராஜாவின் அறையைக்" குறித்து கூடிய சீக்கிரத்தில் காண்போம். இது சபையின் இறுதி முடிவைக் குறிக்கும் ஒரு சின்னமாக உள்ளது. "கிணறு" என்பது (மீட்கும் பொருளுக்கு அடையாளம்) இந்த நீண்ட தாழ்வாரத்தின் நுழைவு வாயி-ல் உள்ளது. இதில் நுழைகின்ற நாம் எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், நம்முடைய நீதிமானாக்கப்படுதல் அழகாக அடையாளமாக காட்டப்பட்டுள்ளது என்பதே ஆகும். இப்படியாக மகா பிரமிட் கூறுகிறது. "ஆகவே இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை."

முடிவே இல்லாதது போன்று தோன்றுகின்ற "கம்பீரமான

நீண்ட தாழ்வாரத்தின்" நீளம், சபையின் தனிப்பட்ட அங்கத்தினர்களுக்கு எவ்வளவு காலமாக சுவிசேஷ யுகம் தோன்றி உள்ளது என்பதைக் காட்டுகிறது. அதன் குறுகலான பாதைகள், "ஜீவனுக்குள்ள குறுகலான பாதையைக்" காட்டுகிறது. அதன் செங்குத்தான நிலை, பாதையில் செல்லும் போது உள்ள கஷ்டத்தைக் காட்டுவதுடன் தங்களுடைய நடையைக் கவனமாகக் காத்துக் கொள்ளாதவர்கள் பின்நோக்கி சரியும் ஆபத்து தொடர்ந்து வருவதைக் காட்டுகிறது. ஆனாலும் திவ்விய கிருபையாகிய இந்த சுவர்களுக்கு இடையில், தொடர்ந்து நன்மை செய்பவர்களுக்கு பாதுகாப்பையும், ஆபத்தில் இருந்து அனுகூலத்தையும் தரும். மேலும் தொடர்ந்து கிருபையில் வளருபவர்களுக்கும், கடினமான பாதையில் செல்லுவதற்கு "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறவர்களுக்கும்" இந்த பாதுகாப்பு உண்டு.

"கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" வழியாக மேல் நோக்கிப் பார்க்கும் போது அதில் ஒரு முடிவும் ஆரம்பமும் இருப்பதைக் காண்கிறோம். இப்படியாக மகா மேன்மையும், விலையேறப் பெற்ற சிலாக்கியங்களும், சுவிசேஷ யுகத்தின் போது கொடுக்கப்பட்டவைகள் சிறிது காலத்திற்கு பிறகு நின்று விடும் என்று நமக்கு சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்துவுடன் அவருடைய மணவாட்டியாக, உடன்சுதந்திரராக இருக்கும்படியான பரம அழைப்பு, சிறு மந்தைக்கென அழைக்கப்பட்டவர்கள் போதுமான அளவுக்கு வந்தவுடன் நின்றுவிடும். இந்த கல்-னால் ஆன சாட்சி இந்த விளக்கத்தில் இதை சுட்டிக் காட்டுகிறது. தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை இதை மிக தெளிவாக்குகிறது. நாம் பார்த்துள்ளபடி பரம அழைப்புக்கான பரிசுப்பொருளுக்கான ஓட்டத்தை ஓடும் சிலாக்கியம் சுவிசேஷ யுகத்திற்கு மட்டுமே உண்டு. இதற்கு முன்பு இது எவருக்குமே கொடுக்கப்படவில்லை. நம்முடைய தலையாக இருக்கிற இயேசுவுக்குத்தான் முதன் முதலாக கொடுக்கப்பட்டது. அவர் தான் ப-க்கான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதில் முதன்மையானவராக இருந்தார், அதற்கான பரிசுகளைப் பெறுவதிலும் முதன்மையானவராக இருந்தார். "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" தெற்கு முனை நிச்சயமாக திவ்ய சுபாவத்திற்கு



பங்குள்ளவர்களாகும்படியான அழைப்பு முடிவு பெறுவதையும், வடக்கு முனை அந்த மகா கிருபை கொடுக்கப்படுவதின் ஆரம்பத்தையும் காட்டுகிறது.

"கம்பீரமான நீண்ட தாழ்வாரம்" நம்முடைய தேவனின் பரம அழைப்பைக் காட்டுகிறபடியால், நாம் ஒவ்வொருவரும் இன்னும் அப்பால் பார்த்து, ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும் இந்த அழைப்பு எதற்கு நேராக வழி நடத்துகிறது என்பதை நாம் பார்ப்போமாக. நாம் கிறிஸ்துவோடு கூட பாடுகளை சகிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளோம். அவரோடு மரிக்கவும், அதன் பின்னர் அவருடைய மகிமைக்குள் பிரவேசிக்கும்படியாகவும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை நாம் ஏற்கெனவே வேதாகமத்தில் பார்த்துள்ளோம். "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" முனையில் உள்ள வாயி-ன் வழியாக இராஜாவின் அறைக்கு செல்லுவதற்கு விசித்திரமான முறையில் அணுகவேண்டியதிருக்கிறது என்பது மிகவும் விசேஷித்த விதமாக இதன் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. பரம அழைப்பை ஏற்றுக் கொண்டவர்கள் பரலோக மகிமைக்குள் நுழைவது இராஜாவின் அறை மூலமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இது நேர் வழியல்ல. அவர்கள் முதலாவதாக எல்லா சூழ்நிலைகளிலும் சோதிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். இல்லையென்றால் அவர்கள் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க முடியாது. இந்த வேதாகம போதனையும் பெரிய வெகுமதிக்காக ஓட்டத்தை ஓடிக் கொண்டிருக்கிற அனைவரின் அனுபவமும் இந்த மகா பிரமிட்டினால் பலமாக விளக்கப்பட்டு உள்ளது. அழைப்பு அர்ப்பணிப்புக்கும் ப-யின் படிப்பினைகளுக்கும் வழி நடத்துவது போன்று "கம்பீரமான நீண்ட தாழ்வாரம்" இதை அடையாளப்படுத்தும் முகமாக சில தாழ்வான பாதைகளுக்கும் வழி நடத்துகிறது. அதன்மேல் பகுதியின் முனைக்கு வந்த பின்னர், யாத்திரீகன் வாயிலுக்குள் அல்லது பாதையில் செல்லுவதற்கு "சிறு அறைக்கும்" செல்லுவதற்கு மிகவும் குனிந்து செல்ல வேண்டும். இந்த "குனிந்து செல்லுதல்" மனுஷீக சித்தம் மரிப்பது அல்லது அர்ப்பணிப்பை, தன்னையே ப-யாக செலுத்த ஆரம்பிப்பதைக்

குறிக்கிறது. இதற்காகவே அழைக்கப்பட்ட அனைவரும் திவ்ய சுபாவத்தைப் பெறுவார்கள். இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு உண்மையிலேயே மனுஷீக சித்தத்தை அர்ப்பணித்தவர்களுக்குத் தான் இந்த சுய ப- எவ்வளவு அர்த்தமுள்ளது என்பது புரியும்.


அர்ப்பணிப்பைக் குறிக்கிற இந்த தாழ்வான பாதையை கடந்து வரும்போது நாம் "சிறு அறைக்கு" (Ante - Chamber) வருகிறோம். இங்கே உள்ள தரை சுண்ணாம்பு கற்களால் ஆனதல்ல. இங்கேயிருந்து செல்லும் தரை கருங்கல்-னால் ஆனது. இது ஒரு புது நிலை அல்லது "புது சிருஷ்டிகள்" என்று அழைக்கப்படலாம். ஆனால் கருங்கல்-னால் ஆன தரையின் மேல் கால் வைக்கும் போது, புதிய நிலைக்குள் புது சிருஷ்டிகளாக பிரவேசிக்கும் போது ஒரு பெரிய கருங்கல் தடுப்பு இருப்பதைக் காணலாம். அது "கருங்கல் இலை" (Granite Leaf) என்று அழைக்கப்படுகிறது. இது "மூடித் திறக்கும்" கதவு போன்று, வழியைப் பாதி மூடுகிறது. 44 அங்குல உயரமுள்ள ஒரு சின்ன தாழ்வான பாதையை மட்டும் இப்பொழுது நாம் கடந்து வந்த பாதை போன்றதை விட்டிருக்கிறது. ஆகவே "சிறு அறையின்" சௌகரியங்களை அனுபவிக்க வேண்டும் என்றால் நாம் அதற்கு செல்லுவதற்கு முன் மறுபடியும் குனிந்து செல்ல வேண்டும். இந்த "கருங்கல் இலை" திவ்ய சித்தத்திற்கு அடையாளமாக உள்ளது. இது தன்னுடைய சித்தத்தை ஒப்புக் கொடுத்ததற்கு அடையாளமாக இருக்கும் தாழ்வான பாதையை கடந்து வந்தவரிடம் கீழ்க்கண்டவற்றை கூறுவது போன்று இருக்கிறது. "உன்னுடைய சித்தத்தையும், திட்டங்களையும், ஏற்பாடுகளையும், ப-யாக கொடுப்பது மாத்திரம் போதாது; நீ அதையெல்லாம் செய்யலாம். அதன்பின்னர் இன்னொருவருடைய சித்தத்தையும், திட்டத்தையும் நீ எடுத்துக் கொள்ள வேண்டும்; நீ உன்னுடைய சித்தத்தை ப-யாகக் கொடுப்பதோடு, நீ தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். அதை உன்னுடைய சித்தமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் தேவனுடைய ஊழியத்தில் நீ அதிகமாக ஈடுபட வேண்டும். அதன்பின்னரே, நீ ஒரு புது சிருஷ்டியாக, திவ்ய சுபாவத்திற்கு ஒரு சுதந்திரவாளியாக எண்ணப்பட முடியும்."



"கருங்கல் இலையைக்" கடந்து வந்த பின்னர் "சிறு அறையின்" கருங்கல் தரை மீது தடையின்றி நிற்கின்றோம். (விளக்கப் படத்தைப் பார்க்கவும்) இது ஒரு விசித்திரமான அறை, அதன் சுவர்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக உள்ளன. சில இடங்களில் அதன் மேல் சுவர் பலகைகளினால் மூடப்பட்டுள்ளது போன்று தோன்றுகிறது. அதின் சில சுவர்களில் காடி (நீண்ட குறுகிய பள்ளம்) வெட்டப்பட்டு உள்ளன. அதில் பாடங்கள் அதிகம் உள்ளதாக காணப்படுகிறது. அதன் விளக்கம் இன்னமும் தெரியவில்லை. ஆனாலும் அங்கு சென்றவர்கள் அது ஒரு பள்ளிக்கூடம் மாதிரி இருக்கிறது என்று சொல்கிறார்கள். இது சத்தியத்தினால் ஜெநிப்பிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்களின் அனுபவங்களில் இருந்து நாம் எதிர்பார்க்க வேண்டியவைகளோடு மிகவும் ஒத்து இருக்கிறது. இந்த "சிறு அறை" கிறிஸ்துவின் பள்ளிக் கூடம் விசுவாசத்தின் பரீட்சை, பொறுமை, மற்றும் சகிப்புத் தன்மைகள் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கிறது. தேவனுடைய சித்தத்தை செய்ய வேண்டும் என்பதற்காக தங்களை அர்ப்பணித்தவர்கள் அனைவரும் இதற்குள்ளாக கடந்து செல்ல வேண்டும்.இது இவர்கள் ஜெயம் கொள்ளுவதற்கான தருணத்தை அளிக்கிறது. கிறிஸ்துவோடு வர இருக்கின்ற அவருடைய மகிமையுள்ள ஆட்சியில் வரும்போது, ஜெயம் கொண்டவர்களாக தங்களுடைய தகுதியை நிரூபித்துக் காட்டவும் இது உதவுகிறது. இப்படிப்பட்ட பரீட்சைகள், பாடங்கள் நமக்கு இல்லாவிட்டால் நாம் இந்த தெய்வீக திட்டத்தில் புத்திரர்களும், சுதந்திரர்களுமாக இருக்க முடியாது. (எபி. 12:8) இந்த வாழ்க்கையில், நாம் அவருடைய சேவையில் நம்மை அர்ப்பணித்த பின்னர், ஆண்டவர் நமக்கு கற்றுத்தந்து, நம்மை ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுமாறு செய்கிறார். ஆகவே, இப்படியாக நாம் அவருக்கு உண்மையாக இருக்கிறோமா நம்முடைய உடன்படிக்கையின்படி காணப்படுகிறோமா என்று சோதித்து அறிவதோடு, மற்றவர்களுடைய சோதனையிலும், பரீட்சையிலும், உபத்திரவத்திலும் அவர்களுக்காக பரிதாபப்படும்படி நம்மை ஆயத்தம் பண்ணி, சீக்கிரத்திலே அவர்கள் மேல் ஆட்சியாளர்களாகவும், நியாயதிபதிகளாகவும் இருக்கும்படி செய்கிறார். 1 கொரி. 6:2,3

நம்முடைய "புதிய" "திவ்ய சுபாவத்திற்குள்ளாக" முழுமையாக, உண்மையாக பிரவேசிப்பதற்கு முன்னர் சுயசித்தத்தின் மரணம் மாத்திரமல்ல, உண்மையான மரணமும், சம்பவிக்க வேண்டும். இதுவும் கூட கல்-னால் உண்டான சாட்சியின் மூலம் காட்டப்படுகிறது. ஏனெனில் "சிறு அறையின்" தூரமான முனைப்பகுதியில் மிகவும் தாழ்வான ஒரு வாசல் இருக்கிறது. இதன் வழியாகத்தான் "இராஜாவின் அறையின்" வாசலை அடைய வேண்டும். இப்படியாக, பிரமிட்டின் மிக மேன்மையான உயர்ந்த அறையான "இராஜாவின் அறை" திவ்ய சுபாவத்தின் பூரணத்திற்கு அடையாளமாக இருக்கிறது. இது அநேகர் அழைக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் நடுவி-ருந்து சில ஜெயம் கொள்ளுகிறவர்கள், சிறு மந்தையினர் பெற்றுக் கொள்ள வேண்டியது பரிபூரண திவ்ய சுபாவமாகும். (இந்த அழைப்பு "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தினால்" அடையாளப்படுத்தப்பட்டுள்ளது) இப்படிப்பட்டவர்கள் சுய தியாகத்தையும் சோதனைகளையும், கடந்து செல்லுகிறார்கள். (சிறு அறை மற்றும் அதற்குள்ளாகவும், அதை விட்டு வெளியேயும் வரும் பாதைகளினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது). திவ்ய சுபாவத்திற்கான அழைப்பு முதலாவதாக நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கு வந்தது. அவர் பூலோகத்திற்கு வந்ததின் நோக்கம் இரண்டு காரியங்களுக்காக : 1. ஆதாமையும் அவனுக்குள் இருக்கும் பாவிகளை இரட்சிக்கவும் மீட்கும் பொருளைக் கொடுப்பதற்கு, 2. மரண பரியந்தம் கீழ்ப்படிதல் உள்ளவராக இருப்பதின் மூலம் மகிமைக்கும் தெய்வீக சுபாவத்திற்கும் தகுதியுள்ளவர் என்பதை நிருபிப்பதற்கு. ஆகவே "கம்பீரமான நீண்ட தாழ்வாரம்" நம்முடைய ஆண்டவரின் பிறப்பில் ஆரம்பிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே அது சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்தவில்லை. அது இயேசுவின் பிறப்பிற்குப் பின்னர் 33 வருடங்கள் கழித்து நியாயப்பிரமாண யுகத்திற்கு தம்முடைய சிலுவை மரணத்தின் மூலமாக முடிவு கட்டும் வரை அது தொடங்கவில்லை. ஆனால் "இராஜாவின் அறை" திவ்ய சுபாவத்திற்கு வருகிற (ப-யின் மூலமாக) பரம அழைப்பை





அடையாளப்படுத்துகிறது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு, அவர் பிறந்த அந்த நேரத்தி-ருந்து அழைக்கப்பட்டார். பெந்தெகொஸ்தே நாளில் இருந்து, நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகள் அனைவரும் இதே பரம சிலாக்கியத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும் சிலர் தான் ப-செலுத்தும்படியான அழைப்பை ஏற்றுக் கொள்கிறார்கள். மேலும் சிலர் தான் ஆண்டவரின் அடிச்சுவட்டை பின்பற்ற வேண்டும் என்கிற நிபந்தனையை ஏற்று தங்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள். திவ்ய சுபாவத்திற்கான இந்த காலம் எவ்வளவு என்பதும், எப்பொழுது நின்றுவிடும் என்பதும் “கம்பீரமான நீண்ட தாழ்வாரம்” அதனுடைய நீளம், மூலமாக ஏற்கெனவே காட்டப்பட்டுள்ளது.

“இராஜாவின் அறையை” “கம்பீரமான நீண்ட தாழ்வாரம்” மற்றும் “சிறு அறை” மூலமாகத்தான் சென்று அடைய முடியும். இது எல்லா வழியிலும் மகா பிரமிட்டிலேயே உயர்வான, கனம் நிறைந்த அறையாகும். இது திவ்ய சுபாவத்தை சரியான விதத்தில் அடையாளம் காட்டுகிறது. அதைக்குறித்து திரு. ஹென்றி எப்.கார்டன் (Mr. Henry F. Gardon) இப்படியாகக் கூறுகிறார் :

“அது மிகவும் கனம் நிறைந்த அறையாகும். அது 34 அடி நீளமும், 17 அடி அகலமும், 19 அடி உயரமும் கொண்டது; அது முழுவதுமாக மெருகூட்டப்பட்ட சிவப்பு கருங்கல்-னால் ஆனது; சுவர்கள், தரை, கூரை எல்லாம் சதுர வடிவான கற்களால் உறுதியாக மிகவும் வேலைத்திறனுடன் இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. இதை தற்காலத்தில் ஆட்சி செய்யும் பேரரசரும், இதற்கு மேலானது வேண்டும் என்று கேட்க முடியாது. இந்த அறையில் கற்களினால் ஆன கா- பெட்டி ஒன்று மாத்திரம் மூடியில்லாமல் இருக்கிறது. இது மோசேயின் காலத்தின் ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த பரிசுத்தமான உடன்படிக்கைப் பெட்டிக்கு அடையாளமாக இருக்கிறது என்பது கவனிக்கப்படத்தக்கது.

இஸ்ரயேலரின் நிழலான ஆசரிப்புக் கூடாரத்திலும் ஆலயத்திலும் உள்ள பொன், திவ்ய சுபாவத்திற்கு அடையாளமாக

இருந்தது போன்று, மகா பிரமிட்டில் கருங்கல் திவ்ய சுபாவத்தைக் காட்டும்படி உபயோகிக்கப்பட்டுள்ளது. "சிறு அறைக்குள்ளும்" "இராஜாவின் அறைக்குள்ளும்" வருகின்ற தாழ்வான பாதைகள் பரிசுத்த, மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக உள்ள திரைச்சீலைக்கு இணையாக உள்ளது. மேலும், கருங்கல் பெட்டி, இராஜாவின் அறையில் உள்ள ஒரே அறைகலன் ஆகும். இது ஆசரிப்புக் கூடாரம் மற்றும் ஆலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த ஒரே பெட்டியாகிய உடன்படிக்கை பெட்டிக்கு இணையாக உள்ளது. ஒன்றில் இருந்தது தங்கம், இன்னொன்று கருங்கல். ஆனால் இரண்டும் ஒன்றையே முக்கியத்துவப்படுத்துகிறது.

அது மாத்திரமல்ல, ஆசரிப்புக்கூடாரம் மற்றும் ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் மற்றும் அவைகளை பிரிக்கின்ற திரைகள் மூலமாக அடையாளமாகக் காண்பிக்கப்பட்ட இதே பெரிய காரியங்கள் மகா பிரமிட்டில் உள்ள "இராஜாவின் அறை," சிறு அறை மற்றும் தாழ்வான பாதைகள் மூலம் காண்பிக்கப்படுகின்றன. "சிறு அறை," ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலம் போன்று தேவனோடு உள்ள உறவுக்கு அடையாளமாகக் காட்டப்படுகிறது. அதாவது புது சிருஷ்டியாக எண்ணப்பட்டு, திவ்ய சுபாவத்திற்கும், மகிமைக்கும் உடன் சுதந்தரராக, விசுவாசி பாவமன்னிப்பைப் பெற்று மீட்கும் பொருளினிமித்தம் தேவனோடு ஒப்புரவாகிறான். அதன்பின்னர் நீதிமானாக்கப்பட்டு, தேவனுடைய ஊழியத்தில் தன்னை ஜீவ ப-யாக ஒப்புக்கொடுக்கிறான். ஆசரிப்பு கூடாரத்தில் முதலாவது திரை, நம்முடைய சித்தத்தை விட்டு விடுதல் அல்லது நம்முடைய சித்தம் மரிப்பதும், முழுமையாக தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவதும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே "சிறு அறைக்கு" உள்ள தாழ்வான வாசல் இந்த பெரிய சம்பவத்தை அடையாளப்படுத்துகிறது. இது யாரெல்லாம் இராஜரீக ஆசாரியர்களில் அங்கத்தினர்களாக இருப்பார்களோ, அவர்களுக்கெல்லாம் புதிய ஜீவனைக் கொடுக்கிறது.

நமக்கு உள்ள எல்லாவற்றையும் ப- பீடத்தில் வைப்பது என்பதற்கு அடையாளமான இந்த பரீட்சையில், விசுவாசி வெற்றி



பெற்ற பின்னர் அவன் இனிமேலும் ஒரு மனிதனாக எண்ணப்படாமல் ஒரு "புது சிருஷ்டியாக," "திவ்ய சுபாவத்தில் பங்கு உள்ளவனாக" எண்ணப்படுகிறான். அவனுக்குள்ள அனுதின அனுபவங்களில் தினசரி தியாகமாக, ப-யாக செலுத்தும் வேளைகளில், தற்போதுள்ள வாழ்க்கையில் கற்றுக் கொள்ளுகிறவைகளில் திவ்ய சித்தத்திற்கு அவன் கீழ்ப்படிதல் என்னும் பாடத்தை கற்றுக் கொள்ளும் வரை (இது "சிறு அறையின்" சுவர்கள், விசித்திரமான வகையில் கட்டப்பட்டவைகள், மேஜை, அப்பம், பொன் குத்து விளக்கு, தூப கலசம் ஆகியவை ஆசாரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் இது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.) உண்மையாகவே திவ்ய சித்தத்திற்கு பங்குள்ளவனாக ஆக்கப்பட மாட்டான். அது மாத்திரமல்ல அவன் மரணத்திற்குள்ளாகவும் கடந்து சென்று இருக்க வேண்டும். (இது ஆசரிப்புக் கூடாரத்தின் இரண்டாவது திரையினாலும், பிரமிட்டின் இராஜாவின் அறைக்குச் செல்லும் இரண்டாவது தாழ்வான பாதையினாலும், அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது) அது மாத்திரமல்ல, அவன் முதலாவது உயிர்த்தெழுத-ல் பங்கு உள்ளவனாக, கிறிஸ்துவோடு கூட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட திவ்ய சுபாவத்தின் மகிமைக்குள், முழுமையாக சென்று இருக்க வேண்டும். அவனுடைய இந்த நித்திய பங்கு "இராஜாவின் அறையினால்" அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படியாக மகா பிரமிட், மனிதன் பாவம் செய்து கீழ் நோக்கி வாழ்க்கையில் சென்றுக் கொண்டிருப்பது பற்றியும், அவன் வீழ்ச்சியுற்ற நிலையில் இருந்து முற்றிலுமாக மீட்கப்படுவதற்கு செய்யப்படும் ஆயத்தங்கள் பற்றிய திவ்ய திட்டத்தின் பல்வேறு படிகள் பற்றியும் சாட்சி கொடுப்பதுடன், இந்த வழி நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மூலமாக உண்டாகிறது என்பது பற்றியும் சாட்சி கொடுக்கிறது.

வரைபடத்தில் இருந்து காணக்கூடியது என்னவெனில், கருங்கல்-னால் ஆன தரை "சிறு அறையின்" முன்பக்கம் வரை

செல்வதில்லை. ஆனால் கருங்கல்-னால் ஆன மேல் கூரை, அறை முழுவதற்கும் செல்லுகிறது. இது நாம் ஏற்கெனவே அறிந்துள்ள திவ்ய திட்டத்தின் அம்சத்திற்கு இணக்கமாக ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுப்பது போன்று இருக்கிறது. ஏனெனில், அது அழைக்கப்பட்டவர்கள் திவ்ய சுபாவம் பெறும்படியாக முயற்சிக்கிறவர்களை சுட்டிக் காட்டுகிறது. முதலாவதாக உள்ள தாழ்வான பாதை, விசுவாசியின் மனித சித்தத்தின் அர்ப்பணிப்புக்கு அடையாளமாக இருக்கிறது. இது "சிறு அறையினால்" அர்த்தப்படுத்தப்பட்டுள்ள பரிசுத்தமான அல்லது மகிமைக்கும், அழியாமைக்கும் சுதந்திரராகக்கூடிய நிலைமைக்குள் நுழைவதைக் காட்டுகிறது. அதன் கருங்கல்-னால் மேல் கூரை அவனை மூடுகிறது. இப்படிப்பட்டவன் புதியதான ஜீவனைப் பெற்ற அதன் கிரியைகளினால் ஈடுபடும் வரை புதிய சுபாவத்திற்குள் நுழைந்து விட்டதாக எண்ணிவிட முடியாது. இந்த பரீட்சைக்கு கருங்கல்-னால் ஆன இலை அடையாளமாக இருக்கிறது. இது இதனுடைய வினோதமான நிலையில் இருந்து, கீழே விழுவது போன்று தொங்கிக் கொண்டு இருப்பது, எப்பொழுது வேண்டுமானாலும், கீழே விழுந்து எல்லா முன்னேற்றத்தையும் இப்படியாக தடுப்பது போன்று இருக்கிறது. இப்படியாக அது கூறுவது போல் இருக்கிறது "யாத்திரிகனே, நீ இவ்வளவு தூரமாய் வந்து உன்னை தேவனுக்கென்று அர்ப்பணித்துக் கொண்டாலும், நீ சத்திய ஆவியால் அவருடைய சேவைக்குள் உயிர்ப்பிக்கப்படாவிட்டால், நீ அழைக்கப்பட்டுள்ள திவ்ய சுபாவத்தில் உனக்கு உண்மையான இடம் இல்லாமற்போகும்." சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்டுள்ளவர்கள், மகா பிரமிட்டிலும், வேதாகமத்திலும் குறிக்கப்பட்டுள்ள அவர்களுடைய ஆண்டவரின் மகிமைக்குள் பிரவேசிப்பதற்கு மூன்று படிகள் உண்டு. (1) அர்ப்பணிப்பு அல்லது சத்திய ஆவியால் பிறப்பிக்கப்படுவது. இது "சிறு அறைக்குள்" செல்லும் தாழ்வான பாதையால் அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. (2) சத்தியத்தில் உள்ள நம்பிக்கை மற்றும், ஆவியின் பரிசுத்தமாக்கப்படுத-ன் மூலமாக அவருக்கு சேவை செய்யவும், ப-யாகவும் உயிர்ப்பிக்கப்படுவது - இது கருங்கல்-னால் ஆன இலைக்கு கீழாக உள்ள தாழ்வான பாதையால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. (3) முதலாவது உயிர்தெழுத-ல் ஒரு பங்கு பெறும்படியாக, நம்முடைய ஆண்டவரைப் போன்று பரிபூரணத்திற்குள் ஆவியினால் பிறக்க வேண்டும். இது "இராஜாவின் அறைக்குள்" வருகின்ற தாழ்வான வழி மூலமாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது.



## மாம்சீக சுபாவமும் ஆவிக்குரிய சுபாவமும் காட்டப்பட்டுள்ளன

பக்கம் 433 உள்ள படத்தில் காட்டப்பட்டது போன்று மகா பிரமிட்டின் செங்குத்தாக உள்ள அச்சு (axis) மூலமாக, கற்பனையில் ஒரு கோடு வரையப்பட்டால், "இராணியின் அறை" அதன் தரை அளவில் (கிடையாக) உள்ள பாதை, "கம்பீரமான நீண்ட தாழ்வாரம்," "நுழைவு வாயி-ன் பாதை," "முதலாவது ஏறுகின்ற பாதை" எல்லாம் அந்த கோட்டின் வடக்குப் பக்கத்திற்கு வந்துவிடும். "சிறு அறையும்" "இராஜாவின் அறை" மட்டும் தான் அதற்கு தெற்கு பக்கத்தில் இருக்கும். இந்த ஒழுங்கு முறையால் மகா பிரமிட்டை உருவகப் படுத்திய நம்முடைய யேகோவா தேவன் சுபாவங்களில் உள்ள வேறு தன்மைகளை தொகுதி 1, அத்.10ல் உள்ளது போன்று காட்டுகிறார்.

"இராணியின் அறை" ஆயிர வருட யுகத்திற்கு பின்பு மனுக்குலம் பூரணப்படுத்தப்படுவதை அடையாளமாக காட்டுகிறது. இந்த காலத்தின் போது, கீழ்ப்படிதலுள்ள தகுதியுள்ள அனைவரையும் அது சிருஷ்டிகரைப் போன்ற குணாதிசயத்திற்குள் கொண்டு வந்திருக்கும். இந்த பாடம் எப்படிக் கற்றுக் கொடுக்கப்படுகிறது என்றால் பிரமிட்டின் அச்சு (Axis) இராணியின் அறையின் பின்பக்கம் இருக்கிறது. இது இன்னமும் மனுஷீக சுபாவத்தில் இருந்தாலும், திவ்ய சுபாவத்தை நெருங்கி வரும். அது, ஒரு சுபாவம் இன்னொரு சுபாவத்தின் பிரதிப-ப்பாக இருக்கும். அந்த அச்சை (axis) நோக்கிச் செல்லுகின்ற எல்லா பாதைகளும் தேவனுடைய ஜனங்களின் வாஞ்சைகளும், முயற்சிகளும், மனுஷீகம் பூரணமடைய வேண்டும் என்பதற்காக என்று கற்றுக்கொடுக்கிறது. ஆனால் சுவிசேஷ யுகத்தின் அழைக்கப்பட்ட சபையினர் அனைவரும் மனுஷீக சுபாவத்தைத் தாண்டி செல்ல வேண்டும். அவர்கள் கிறிஸ்துவோடு கூட


உடன்சுதந்திரராக, திவ்ய சுபாவத்தின் பூரணத்திற்குள் உட்பிரவேசிக்க வேண்டும்.

"பாதாள அறை" அல்லது "குழி" என்பது உபத்திரவத்தையும் மரணத்தையும் குறிக்கிறது. இது செங்குத்தான அச்சு (Axis) அல்லது இராணியின் அறையும் அதன் பாதைகளும் இருக்கும் பக்கத்தில் முழுவதுமாக இல்லை. சரியாகச் சொன்னால் எவ்வகையிலும் பிரமிட்டின் ஒரு பகுதியாக இந்த பாதாள அறை இல்லை. அது பிரமிட்டிற்கு அடியில் தரைமட்ட கோட்டிற்கு வெகு கீழாக உள்ளது. ஆனால் அது இன்னொரு பாடத்தை போதிப்பதற்காக வைத்திருக்கலாம். அதன் தூரத்தில் உள்ள சுவற்றின் செங்குத்தான கோடு "சிறு அறையின்" தூரத்தில் உள்ள சுவரை ஒட்டியே செல்லும். இதனால் கற்றுக் கொள்ளப்படுகிற பாடம் வேதத்திற்கு ஒத்ததாக இருக்கும் எச்சரிப்பு என்னவெனில், பரிசுத்தமாக்கப்பட்ட அல்லது அர்ப்பணம் செய்து கொண்ட நிலைமைக்குள்ளாக நுழைந்துள்ள சிலருக்கு (சத்தியத்தினால் பிறப்பிக்கப்பட்டவர்கள் அதனால் உயிர்ப்பிக்கப்பட்டவர்கள்) மரணத்திற்குகேதுவான, இரண்டாவது மரணத்திற்கேதுவான பாவம் செய்வது சாத்தியமே என்பதாகும்.

ஆகவே அச்சுக்கும் (Axis) "பாதாள அறை" அல்லது "குழிக்கும்" உள்ள சம்பந்தம் அதற்கு மேல் உள்ள பிரமிட்டிற்கு எந்த விதத்திலும், முக்கியத்துவம் இருக்குமென்றால், அது இரண்டாவது மரணத்தை நம்பிக்கையற்ற அழிவை, இதுதான் தண்டனை என சுட்டிக்காட்டுவதாகும். ஆயிர வருட காலத்தில் கிடைக்கும் ஆசீர்வாதமான தருணத்தை அறிந்தும், வேண்டுமென்றே பாவம் செய்தவர்களுக்கும், மனுஷீக சுபாவத்தில் பூரணமடையும்படி கிடைக்கின்ற தருணத்தை மறுக்கிறவர்களுக்கும், சுவிசேஷ யுகத்தின் போது அர்ப்பணம் செய்து கொண்ட எவராவது, கிறிஸ்துவினால் இதற்கு முன்பாக கொடுக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதியின் வஸ்திரத்தை வேண்டுமென்றே மனமுவந்து நிராகரிக்கிறவர்களுக்கும் இந்த தண்டனை கிடைக்கும்.

மகா பிரமிட் கட்டடத்தின் செங்குத்தான அச்சு சம்பந்தப்பட்டிருப்பதை கவனிக்கும் போது முக்கியமாக






மேற்கு பார்த்த வெட்டுமுகத்தோற்றம் – இராஜாவின் அறை, சிறு அறை, நீண்ட தாழ்வாரத்தின் தெற்கு முனை மற்றும் இராஜாவின் அறையின் மேல் உள்ள காற்றுதுவாரத்தின் கட்டுமானம்

கருப்பு புள்ளியிட்ட பகுதி கருங்கல்லை குறிப்பிடுகிறது

ஆங்கில அளவுகோல் (அங்குலம்)

100 50 0 100 200 300 400 500 600 700

இன்னொன்று தெரிவது என்னவெனில், அந்த கட்டடம் அடிமட்டத்திற்கு மேல் இருப்பது ஆகும். “கிணற்றின்” வாய் நம்முடைய ஆண்டவரின் முதலாவது வருகையையும் மரணத்தையும் குறிக்கிறது. இவைகள் எல்லாம் பிரமிட்டின் அச்சுக்கு அந்தப் பக்கத்தில் உள்ளன. இது மனித சுபாவத்தைக் காட்டுகிறது. அது அமைந்திருப்பது இராணியின் அறைக்குச் செல்லும் பாதையின் மட்டத்தில் (Level) இருக்கிறது. இது மனுக்குலத்தின் பரிபூரணத்தைக் குறிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மகா பிரமிட் எதைக் குறிப்பிடுவது போன்று உள்ளது என்றால் “அவர் மாம்சமானார்,” மனிதனாகிய இயேசு எல்லாருக்கும் ஒரு “மீட்கும் பொருளாகத்” தம்மையே கொடுத்தார், ஆனாலும் அவர் பாவம் அறியாதவராக இருந்தார், அவர் பரிசுத்தமுள்ளவராக, தீங்கு செய்யாதவராக பாவிகளிடம் இருந்து விலகினவராக இருந்தார், ஆதாமின் வீழ்ச்சியில் எந்த பங்கும் இல்லாதவராக இருந்தார் என்பதாகும். (குழிக்குச் செல்லும் பாதையினால் அடையாளப்பட்டுள்ளது) மேலும் “குகை” (Grotto) அமைந்திருக்கும் இடமும், அது இயற்கையானது, அது உண்டாக்கப்படவில்லை என்பது கவனிக்கப்படத்தக்கது. அது நம்முடைய ஆண்டவரின் மரணத்தைக் குறிக்கிறது. அது இயற்கையானது என்பது, உடனடியாக நடந்ததல்ல. யேகோவாவின் திட்டத்தில் ஏற்கெனவே முன்னதாக ஒழுங்கு செய்யப்பட்டது. அடையாளமான பிரமிட் திட்டத்திற்கு முன்னானது. பிரமிட் அதன் அடிமட்டத்திற்கு மேல் தான் அமைந்துள்ளது என்பதும் கீழ்மட்டத்தில் இல்லை என்பதும், வேதத்தோடு ஒத்து இருக்கும் இன்னொரு பாடத்தைக் கற்றுக் கொடுப்பது போன்று உள்ளது. அதாவது நம்முடைய ஆண்டவர், பாவிகளுக்காக தம்மை மீட்கும் பொருளாக கொடுத்து மரித்தாலும், அவர் பாவத்திற்குள்ளும், இழிவுக்குள்ளும் செல்லவில்லை. ஆனாலும் அவருடைய மரணம் திவ்ய திட்டத்திற்கு உட்பட்டுதான் இருந்தது. இது பிரமிட் கட்டடத்தின் அடிமட்டத்திற்கு மேலாக இருந்ததில் இது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பொழுது மிக ஆர்வத்தை உண்டு பண்ணும் கேள்வி எழும்புகிறது. பரம அழைப்பு முடிவுறும் கால அளவை, வேதம் கூறுவதை பிரமிட்டின் சாட்சி ஆதரிக்குமா? அது "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" முடிவு, இதற்கான தேவனுடைய அழைப்பு முற்றுப்பெறும் என்று கூறும் சரியான நேரத்தைக் காட்டுமா? இல்லையென்றால், நாம் வேதத்தி-ருந்து கற்றதை இது எதிர்த்துக் கூறி திவ்ய சுபாவத்திற்கு உள்ள அழைப்பின் காலம் நீண்டது அல்லது குறுகிய காலம் என்று காட்டுமா?

இது இன்னொரு முக்கியமான பரீட்சையாக இருக்கும், இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியமானதாக இருக்கும்; தேவனுடைய வார்த்தையை குறித்த, அதன் அற்புதமான சாட்சியைக் குறித்த பரீட்சையாக இருக்காது. ஆனால் இந்த கல்-லான "சாட்சியைப்" பற்றிய பரீட்சையாகும். அது இன்னும் அதன் திவ்ய கட்டடக் கலையை, வேதத்தின் சாட்சியை உறுதிப்படுத்துவதின் மூலம் நிருபிக்குமா? அல்லது கூட குறைத்துக்கூறி முரண்பாட்டைக் காட்டுமா? முக்கியமாக வேதாகமத்தின் கணக்கீட்டை அது ஒத்துக் கொள்ளுமா? மிகவும் துல்-யமாக ஒத்துக் கொள்ளுமா? டாக்டர் செயிஸ் (Dr.Seiss) கொடுத்த "கல்-ல் ஒரு அற்புதம்" என்கிற தகுதியைப் பெறுமா?

இதற்கு குறைவாக நாம் ஒன்றும் சொல்ல இயலாது. நாங்கள் தேவனுடைய முழு திட்டத்தைப் பற்றி வேதத்தி-ருந்து அறிந்து வைத்திருக்கிறோம். அதன் சாட்சி தேவனுடைய திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒத்து இருக்கிறது. அது அற்புத விதமாக ஒத்து இருப்பதால், இந்த சாட்சியை ஊக்குவித்த அதே தேவனே தீர்க்கதரிசிகளையும், அப்போஸ்தலர்களையும் ஊக்குவித்தவர் என்பதில் சந்தேகம் இல்லை. நாம் இந்த இசைவுகளில் சிலவற்றைப் பார்க்கலாம்.

உலகத்தில் புறஜாதியினரின் அதிகாரம் முற்றிலுமாக முடிவு பெறுதலையும், அதை அகற்றிப் போடுகின்ற உபத்திரவத்தின் வேளை கிபி 1914ம் ஆண்டின் இறுதியில் இருக்கும் என்று வேதாகமம்



காட்டியதையும் மனதிற்கு கொண்டு வருவது அவசியம். அந்தக் காலத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு காலத்தில், கிறிஸ்துவின் சபையின் கடைசி அங்கத்தினர் மறுரூபமாகியிருப்பார் அல்லது மகிமை அடைந்திருப்பார். (காலம் சமீபமாயிருக்கிறது என்ற புத்தகத்தின் ஆக்கியோனின் முன்னுரை பக். IV - V ஐ பார்க்கவும். அதில் புறஜாதியார் காலமும் சபை முடிவடைவதும் படிப்படியாக நிறைவேறும் என்று எழுதியுள்ளார்.) வேதாகமம் பல்வேறு வழிகளில் அதை நிரூபித்தது என்பதையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது யூபி-சுற்றுக்கள், தானியே-ன் 1335 நாட்கள், இணையான யுகங்கள் போன்றவைகள். மேலும், அறுப்பு அல்லது இந்த யுகத்தின் முடிவு அக்டோபர் 1874ல் தொடங்க இருந்தது. அது முதற்கொண்டு மாபெரும் அறுவடையாளர் பிரசன்னமாகியிருப்பார். ஏழு வருடங்கள் கழித்து அக்டோபர் 1881ல் பரம அழைப்பு முடிந்து விட்டது. இருந்தாலும் இதற்குப் பின்னர் இதே கிருபைகளுக்கு சிலர் அனுமதிக்கப்படுவார்கள். இந்த வேளையில் அழைக்கப்பட்ட சிலர் பரீட்சிக்கப்பட்ட போது தகுதியற்றவர்கள் என்று காணப்பட்டார்கள், அந்த இடத்தை நிரப்புவதற்கு இப்படிப்பட்டவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். பிறகு, கல்-லான "சாட்சி" எப்படி இதே காலங்களை பற்றி சாட்சி கொடுக்கிறது என்பதையும் அதே பாடங்களை விளக்கிக் கூறும் விதத்தையும், பாருங்கள்.

வடக்கில் இருந்து தெற்கு சுவருக்கு வரும் "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" தரை சமீப வருடங்களில், இரண்டு முறை கவனமாக அளக்கப்பட்டுள்ளது. இதில் மூன்று தெளிவான வெவ்வேறு அளவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு அளவு (a) வடக்கு முனையில் இருந்து படி வரைக்கும் அளக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மேலெழும்பும் அல்லது மேற்பரப்பின் முன்புறத்தை ஒதுக்கி அதன்மேல் தளம் வழியாக, "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" நடக்க கூடிய இடம் வரை ஒரு அளவு, இன்னொரு அளவு (b) படியே அங்கு இல்லாதது போன்று படி வழியாக எடுக்கப்பட்ட நீளத்தை காட்டும் அளவு. இன்னொரு அளவு (c) தரையின் முழுப் பகுதியையும், படியின் முன் பக்கத்தையும், அதன் மேல் பகுதி வரை உள்ள அளவையும்

காட்டுகிறது. பேராசிரியர் ஸ்மித் (Prof. Smyth) இந்த மூன்று அளவுகளில் முதலாவது அளவு (a) *1874* பிரமிட் அங்குலங்களாகவும், (b) இரண்டாவது அளவு *1881* பிரமிட் அங்குலங்களாகவும், மூன்றாவது (c) *1910* பிரமிட் அங்குலங்களாகவும் இருக்கக் கண்டார். ஆனால் திரு. பி-ண்டர்ஸ் பெட்ரி இந்த அளவுகள் *8/10* அங்குலம் அதிகமாக இருக்கக் கண்டார். ஆகவே சரியான ஒரு மதிப்பீடு, சந்தேகத்திற்கு இடம் இன்றி கிட்டத்தட்ட சரியானதாக உள்ளது. அப்படியெனில் அவைகள் (a) *1875* (b) *1882* (c) *1911* பிரமிட் அங்குலங்களாகும்.

நாம் இப்பொழுது கேட்கிறோம், இந்த பாதைகளின் தரைக் கோடுகளின் அங்குலங்கள், பிரமிட் மாணாக்கர்கள் கூறுகிறபடி, ஒத்துக்கொள்கிறபடி ஒவ்வொன்றும் ஒரு வருடத்திற்கு அடையாளமாக இருக்குமென்றால், "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" அளவுகள் திவ்ய சுபாவத்திற்கான உன்னத அழைப்பின் முடிவு காலத்தின் எந்த தேதியை அடையாளம் காட்டுகிறது? நாம் பதில் கூறுகிறோம். நாம் இப்பொழுதுள்ள காலத்தை, இந்த அங்குல வருடங்களைக் கொண்டு கணக்கிடும் போது, நாம் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், நம்முடைய காலமான கிபி என்பது உண்மையான காலத்திற்கு *1* வருடமும் *3* மாதங்களும் பின்தங்கி இருக்கிறது. இது தொகுதி *2*ன் பக்கங்கள் *47-55*ல் காட்டப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலமான கிமு அல்லது கிபி என்பதி-ருந்து ஒரு காலத்தைக் கணக்கிடுவதில் எந்த வித்தியாசத்தையும் காட்டாத வேளையில், அது இந்த விஷயத்தில் அறிந்து கொள்ளப்பட வேண்டும். இயேசுவின் பிறப்பை ஆரம்பமாக எடுத்துக் கொள்வோமேயானால், சரியான முடிவுக்கு வர நமது தேதி கிபியில் உள்ள குறையை அனுமதிக்க வேண்டும். எளிமையாக காட்டுவதற்காக நம்முடைய தவறான கிபி ஐ திட்ட அளவாக எடுத்துக் கொள்வோம். இதற்கு ஒத்து இருக்கும்படியாக பிரமிட்டின் எண்களை *1 1/4* அங்குலங்கள் குறைத்து கொண்டு வரும் போது அவைகள் நாம் கையாளுகின்ற பொதுவான கணிப்புக்கு ஒத்து இருக்கும். இப்படி குறைக்கப்பட்ட பின்னர் அவைகள் பின் வருமாறு காட்டும் (a) *1875 - 1 1/4 = 1873 3/4* (b) *1882 - 1 1/4 = 1880 3/4;* (c) *1911 - 1 1/4 = 1909 3/4.* அது கொடுக்கின்ற



காலங்கள் பின்வருமாறு : (a) அக்டோபர் *1874* (b)அக்டோபர் *1881* (c) அக்டோபர் *1910* கிபி.

இந்த மூன்று விதமான முடிவு வேதாகமத்தில் போதிக்கப்பட்டிருக்கிறது என்று நாங்கள் கண்டிருப்பதோடு முழுவதும் ஒத்து இருக்கிறது. அதாவது அறுப்பு, யுகத்தின் முடிவு அக்டோபர் *1874*ல் வந்தது, அழைப்பு என்கிற காலம் சரியாக அக்டோபர் *1881*ல் முடிவடைந்தது. இதற்கு பின்னர் ஒரு காலம் தொடர்ந்து வரும், இந்த வேளையில் பொதுவான அழைப்பு முடிந்திருந்தாலும், இதே சிலாக்கியங்கள் சிலருக்கு, தகுதியுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும். இது, ஏற்கெனவே அழைக்கப்பட்டவர்கள் பரீட்சிக்கப்பட்ட போது, அவர்களுக்கு உள்ள கிரீடங்களுக்கு பாத்திரவான்களாக காணப்படாததினிமித்தம் அப்படிப்பட்டவர்களின் இடத்தை நிரப்புவதற்காக அப்படியாக நடைபெறும். அர்ப்பணித்துக் கொண்டவர்கள் எவ்வளவு காலம் புடைக்கப்படுவார்கள்? இந்த காலத்தில், தகுதியற்றவர்கள் என்று கண்டு கொள்ளப்பட்டவர்களின் கிரீடங்கள் சிலருக்கு கொடுக்கப்படும். அதே வேளையில் நீக்கப்பட்ட பெயர்களுக்குப் பதிலாக இவர்களின் பெயர் எழுதப்படும். *(வெளி. 3;5,11)* இது வரை நாம் பார்த்த அளவில் இதை வேதாகமம் சுட்டிக்காட்டவில்லை. ஆனால் இந்தக் காலமான *1910* பிரமிட்டினால் காட்டப்பட்டது, வேதாகமத்தில் காட்டப்பட்ட காலங்களோடு ஒத்துப் போவது போன்று தோன்றுகிறது. புறஜாதியினரின் காலங்கள், உபத்திரவத்தோடு முடியும் காலம், முழுமையாக முடிவு பெறுவது இன்னும் சில வருடங்களில் நிறைவேறும். (இந்த புத்தகம் *1890*ல் வெளியிடப்பட்டது) நாம் ஆண்டவருடைய வார்த்தையை நினைவு கூறும் போது, அது கூறுகிறது : ஜெயம் கொள்ளுகிறவர்கள் உலகத்தின் மேல் வருகின்ற மகா உபத்திரவங்களில் இருந்தும் தப்பித்துக் கொள்ள தகுதியானவர்கள் என்று கூறும் போது அது அக்டோபர் *1914*ல் வர இருக்கின்ற கொடுமையான உபத்திரவ காலத்தைக் குறிக்கிறது என்று அறிந்து கொள்ளலாம். ஆனால் முக்கியமாக சபைக்கு வருகின்ற உபத்திரவத்தின் காலம் கிட்டதட்ட கிபி *1910* என்று அறிந்து கொள்ளலாம்.

இது இந்த கல்-னால் உண்டான சாட்சிக்கும், வேதாகமத்திற்கும், இடையில் உள்ள மிக அற்புதமான உடன்பாடாக இல்லையா? காலங்கள் அக்டோபர் 1874 மற்றும் அக்டோபர் 1881 மிக சரியானவைகள், அதே வேளையில் 1910 வேதாகமத்தில் கொடுக்கப்படவிட்டாலும், சபையில் அதன் அனுபவத்திலும், பரீட்சிக்கப்படுவதிலும், ஏதோ ஒரு முக்கியமான காரியத்திற்குரிய காலம் போன்று தோன்றுகிறது. கிபி 1914 அதன் முடிவு காலம் என்று சரியாக கூறப்பட்டுள்ளது போன்று தோன்றுகின்றது. இதன்பிறகு உலகத்திற்கு மகா உபத்திரவ காலம் வர இருக்கிறது. இதில் "திரள் கூட்டத்தில்" சிலருக்கு ஒரு பங்கு இருக்கலாம். நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், இந்த கால எல்லை 1914 என்பது கிறிஸ்துவின் முழு சபையின் அழைப்பும் தெரிந்து கொள்ளுதலும் மகிமைப்படுத்துதலும், நிறைவடைகிறது. மேலும் அந்த திரள் கூட்டத்தினர் பயத்தினாலும், இருதயச் சோர்வினாலும் தேவனுக்கு ஏற்ற ப-யைச் செலுத்த தவறினவர்கள் சுத்திகரிக்கப்படுவதையும் இந்தக் காலத்தில் காணலாம். இதன்படி அவர்கள் ஏறத்தாழ உலக சிந்தனைகளிலும் வழியிலும் கறைப்படுத்தப்பட்டவர்கள். இவர்களில் சிலர் மிகுந்த உபத்திரவத்தி-ருந்து வெளியே வரலாம். (வெளி. 7:14) இவர்களில் அநேகர் இப்பொழுது எரிக்கப்படுவதற்கான களைகளாக கட்டுகளாக கட்டப்படுகிறார்கள். இவர்கள் அறுப்பின் காலத்தின் இறுதியில் உள்ள அக்கினி போன்ற உபத்திரவத்தில் பாபிலோனின் அடிமைத்தன கயிறுகள் சுட்டெரிக்கப்படும் வரை இவர்கள் தப்பித்துச் செல்ல மாட்டார்கள். அவர்கள் பாபிலோன் முற்றுமாக அழிக்கப்படுவதைக் காண்பதோடு அவளுக்கு நேரிடும் உபாதைகளில் சிலவற்றைப் பெற்றுக் கொள்வார்கள். (வெளி 18:4) 1910ல் இருந்து 1914 வரை உள்ள நான்கு வருடங்கள், பிரமிட்டில் இப்படியாகக் காட்டப்பட்டவைகள், நிச்சயமாகவே சபையின் மேல் வருகிற மகா உபத்திரவ காலமாக இருக்கும் (1 கொரி. 3:15), இது உலகத்தின் அராஜகத்திற்கு முந்தி வருகிறதாக இருக்கும். இது அதிக காலத்திற்கு நீடித்திருக்காது. "அந்நாட்கள் குறைக்கப்படாமல் இருந்தால் ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை." மத். 24:22



இது மகா பிரமிட்டின் ஆச்சரியமான அடையாளமாக மாத்திரம் இல்லை. அது திவ்ய திட்டத்திற்கு மிகவும் ஒத்ததாக இருப்பது இன்னொரு அருமையான அம்சத்தில் காட்டப்பட்டுள்ளது. இந்த யுகம் முடியும் போது நடக்கின்ற இரண்டு பெரிய சம்பவங்களின் தேதியை நாம் எதிர்பார்க்க வேண்டும். (1) நம்முடைய ஆண்டவரின் இரண்டாவது வருகை (2) அறுப்பு துவங்கும் காலம். இது "கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின்" மேல் முனையால் காட்டப்பட்டுள்ளது போன்று, அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும், அதன் கீழ் முனையில் உள்ள "கிணற்றினால்" காட்டப்பட்டுள்ளது. இதனால் நாம் ஏமாற்றம் அடையவில்லை. கிழக்குப் பக்கத்தில் உள்ள சுவற்றின் தெற்கு முனையில் அதன் மேல் படிக்கு மேல் பக்கத்தில், ஒரு திறந்த பகுதி, படத்தில் காட்டப்பட்டுள்ளபடி இராஜாவின் அறைக்கு மேல் உள்ள செப்பனிடப்படாத பகுதியை இணைத்து வைக்கிறது. பிரமிட் அதற்கேற்ற முறையிலே இப்படியாகக் கூறுவது போன்று உள்ளது: "இங்கே பரத்துக்குரியவர் ஒருவர் நுழைந்தார். அவருக்கு நடக்க தரைகள் தேவையில்லை. அவர் காற்றைப் போன்று வரவும், போகவும் முடியும்." கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின் தெற்குப் பகுதி சுவற்றின் அளவுகள் பேராசிரியர் ஸ்மித் எடுத்தவைகள், அது நமக்கு இப்படியாகக் கூறுகின்றன: அது உண்மையான செங்குத்தான கோடு மாதிரி அல்ல. மேல் பக்கத்தில் 7 அங்குலங்கள் சாய்வாக உள்ளது. (பேராசிரியர் பியாசி ஸ்மித் அவர்களின் அறிக்கை)ஆகவே பிரமிட் நமக்கு இப்படியாகக் கூறுகிறது : "உன்னத அழைப்பின் காலம் முடிவதற்கு 7 வருடங்களுக்கு முன்னர் (அக்டோர் 1881க்கு முன்னர்) பரத்தி-ருந்து மகத்தானவர் பிரவேசிப்பார்." அது மேலும் அக்டோபர் 1874ல் இருந்து படிப்படியாக தெற்குப் பகுதியின் சுவர் சாய்ந்து உள்ளது காட்டுகிறபடி, அந்த அழைப்பு, அக்டோபர் 1881ல் ஒரு முடிவுக்கு வரும் என்று குறிப்பிடுகிறது. கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், இதிலும் வேதாகம பாடங்களின் முந்தைய புத்தகங்களிலும் கூறப்பட்டுள்ளபடி வேதாகமத்தின் சாட்சிக்கு மிகவும் ஒத்து இருக்கிறது.

இந்த காலங்களையும் வேளைகளையும் பற்றி, அறிந்து கொண்ட நாம், மகா பிரமிட்டின் அளவுகளை எடுப்பதோடு

எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்த அளவுகளை எடுத்தவர்களுக்கு அவைகள் எடுக்கப்பட்ட வேளையில் தீர்க்கதரிசனங்கள் அதற்கு ஒத்து இருக்கிறது என்று நாம் கூறியது பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. இன்னமும் தெரியாது, ஆகவே, ஒரு பக்கம் 6000 வருடத்தின் சரிரத்திரமும், இன்னொரு பக்கம் பிரமிட்டின் அளவுகளான ஆயிரக்கணக்கான அங்குலங்களும் சரியாக இருப்பது தற்செயலாக ஏற்பட்ட ஒன்றா என்று நாங்கள் கேட்கிறோம். இல்லை, ஆனால் சத்தியம் எப்பொழுதுமே விநோதமானது, அது கற்பனையைக் காட்டிலும் மிக அருமையானது, "அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது." (சங். 118:23)

பொதுவான சுவிசேஷ யுகத்தின் அழைப்பின் விசேஷமான கிருபையானது நின்று விட்ட போது (அக்டோபர் 1881), உலகத்தின் மேல் வரும் ஆசீர்வாதம் ஒரு ஆரம்பம் போன்று தோன்றுகிறது. "கிணற்றின்" மேல் முனை, வருகிற ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தருகின்ற மீட்கும் பொருளைக் குறிக்கிறது. மேலும், அதன் கீழ்முனை (கீழ் நோக்கி வருகிற பாதையை இணைக்கும் இடம்) உலகத்தை சென்றடைகின்ற, இழந்து போனவைகளைத் திரும்பப் பெறும் ஆசீர்வாதம் தொடங்குவதைக் காட்டுவது போன்று உள்ளது. இங்கே மீட்கும் பொருளின் நன்மைகள் உலகத்தின் சகல குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும். அப்போது யூத, சுவிசேஷ யுக காலங்களின் தெரிந்து கொள்ளப்படுதல் முடிவடைந்து இருக்கும் என்று சொல்லுவது போன்று உள்ளது.

சுவிசேஷ யுகத்தின் அழைப்பும் கிருபையும் முற்றுப் பெறுகிற காலங்கள் 1881 என்று தெளிவாக குறிக்கப்பட்டுள்ளதையும், இந்தக் காலத்தில் தான் இழந்தவைகளை திருப்பிப் பெறும் காலத்தின் ஆரம்பம் என்பதையும் ஏற்றுக் கொள்வோமென்றால், "கிணற்றின்" கீழ்ப்பகுதியின் முடிவு எல்லை அந்த காலத்தை (1881) குறிப்பது என்று எடுத்துக் கொண்டால், அங்கிருந்து பின்நோக்கி நூழைவு வாயி-ன் பாதை வழியாக, பிரமிட்டின் சரியான வாயிலை நோக்கி அளப்போமென்றால், நாம் ஆச்சரியமான விஷயத்தைக்



காண்கிறோம். இந்த தூரம் 3826 அங்குலங்களாக இருப்பதையும் அது 3826 வருடத்திற்கு அடையாளமாக இருப்பதையும் காண்கிறோம். நம்முடைய யோசனை உண்மையாக இருக்குமென்றால் கிபி 1881க்கு 3826 வருடங்களுக்கு முன்னால் எதோ ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் நடந்திருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின்படி சரித்திர குறிப்புகளை நாம் ஆராய்ந்து பார்ப்போம் என்றால், நாம் நினைத்ததை உறுதிப்படுத்தும் ஒன்றைக் காண்கிறோம். கிபி 1881க்கு 3826 வருடங்களுக்கு முன்னால் அந்த வருடம் கிமு 1945 ஆக இருக்க வேண்டும். அப்பொழுது ஈசாக்கு, வாக்குத்தத்தத்தின் நிழலான வித்து, அவனுடைய தகப்பனாகிய ஆபிரகாமின் சொத்துக்கள் எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளியானதினிமித்தம் தன்னுடைய சகோதரர்கள் எல்லோரையும் ஆசீர்வதிக்கக் கூடிய நிலைமையில் இருந்தான். அதாவது, ஆகாரின் மகன் இஸ்மயேலையும் (மாம்சமான இஸ்ரயேலுக்கு மாதிரியானவன்) ஆபிரகாமின் இரண்டாவது மனைவியாகிய கேத்தூராளின் மகன்களையும் மகள்களையும் (பொதுவாக உலகத்திற்கு நிழல்) ஆசீர்வதிக்க முடிந்தது.

இப்படியாக, "நுழைவு வாயில்" அதன் வெளிப்புற முனையில் இருந்து கீழே, "கிணற்றை" இணைக்கும் பாதையின் அருகில் உள்ள முனை வரை நிழலான ஈசாக்கு எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியான காலமான கிமு 1945 முதல் கிபி 1881 வரை வருட அங்குல காலமாக குறிக்கிறது. இந்த காலத்தில் தான் உண்மையான ஈசாக்கும் எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியானவருமான இயேசு மூலம் உலகத்திற்கு ஆசீர்வாதம் வருகிற காலமாக இருந்தது. கலா. 3: 16, 29

ஈசாக்கு சுதந்தரவாளியான காலத்தி-ருந்து, காலத்தை நாம் கணக்கிட்டு, அதன்பின்னர் தன்னுடைய சகோதரர்களை ஆசீர்வதிக்கும் சிலாக்கியம் பெற்ற காலம் 1881 என்கிறோம். இப்படியாக தன்னுடைய தகப்பனாகிய ஆபிரகாம் மரித்த பின்னர், ஆபிரகாமின் உடன்படிக்கைக்குப்பின் 100 வருடங்கள் கழித்து (உடன்படிக்கை செய்யப்பட்ட போது ஆபிரகாமுக்கு 75 வயது, அவன் மரித்த போது அவனுக்கு வயது 175) தன்னுடைய சுதந்திரத்தை ஈசாக்கு பெற்றுக் கொண்டான். அதன்பின்னர் உடன்படிக்கையி-ருந்து

ஈசாக்கின் மகன் யாக்கோபு, மரித்த போது 232 வருடங்களாக இருந்தது. (தொகுதி 2, பக். 250, 251 ஐ பார்க்கவும்) ஈசாக்கு தன்னுடைய சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட காலத்தி-ருந்து (உடன்படிக்கை செய்யப்பட்டு 100 வருடங்கள் கழித்து) யாக்கோபின் மரணம் வரை 132 வருடங்களாக இருக்கும் (232 வருடங்கள் - 100 வருடங்கள் = 132), இதோடு கூட நம்முடைய Anno Domini (கிறிஸ்துவுக்குப் பின்) உடன் யாக்கோபின் மரணத்தி-ருந்து 1813 வருடங்கள் கூட்டும் போது 1945 கிமு கிடைக்கிறது. இந்த காலத்தில் தான் நிழலாக இருந்த ஈசாக்கு ஆபிரகாமுக்கு இருந்த எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டான். (ஆதி. 25:5) இந்த 1945 கிமு வருடங்களை கிபி 1881 வருடங்களோடு கூட்டும் போது 3826 வருடங்கள் ஆகின்றது. இது பிரமிட்டில் அங்குல காலமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிழலான ஈசாக்கு, தன்னுடைய சகோதரர்களை நிழலாக ஆசீர்வதிக்கும் காலத்தி-ருந்து நிஜமான ஈசாக்காகிய கிறிஸ்து முழு உலகத்தையும் ஆசீர்வதிக்கும் காலம் கடந்து செல்ல வேண்டும்.

இழந்தவைகளைத் திருப்பிப் பெற்றுக் கொள்வதில் என்ன வேலை அக்டோபர் 1881ல் ஆரம்பிக்கப்பட்டது என்கிற கேள்வி எழும்பலாம்! நாங்கள் பதில் கூறுகிறோம். உலகம் புரிந்து கொள்ளும்படி ஒன்றும் நடக்கவில்லை. நாம் இன்னும் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். 1881ல் இருந்து இழந்தவைகளைத் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கான ஆயத்தபடிகள் முழு உலகத்தையும் புதுப்பிக்கும். ஆசீர்வாத மழையில் சிறு துளிகள் என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும். 1881ல் நடந்ததை 1874ல் நடந்தது போன்று தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் விசுவாசக் கண்களால் மாத்திரம் புரிந்து கொள்ள முடியும். அது பரம அழைப்பு முடிவு பெறும் காலம் (பக். 253ஐ பார்க்கவும், பரம அழைப்பின் முடிவு கதவு மூடப்படுவது அல்ல). ஆகவே இழந்தவைகளை திரும்பிப் பெறுகிற காலத்தின் ஆரம்பத்தைப் பற்றிய அறிவிப்பு - யூபி- எக்காளம் ஆகும். அந்தக் காலத்தைக் குறித்து ஆசிரியர் தவிர, அவர் அறிந்தவரை வேறு எவருமே கிடையாது; மேலும் அவர் சுவிசேஷ யுகத்தின் போது



திறந்திருந்த திவ்ய சுபாவத்திற்கான பரம அழைப்பிற்கும், அது முடிவு பெறும் வேளையின் போது ஆதாமுக்குள் இழந்து போனவைகள் அனைத்தையும் திரும்பப் பெறும் மனிதனின் பரிபூரணமாகுதலுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் கண்டுள்ளார்.

(இந்த அதிகாரத்தை எழுதும் போது, இந்தக் காரியங்கள் ஒரே காலத்தில் நேரிடுவதை நாங்கள் யோசித்து இருக்காவிடினும், 1881ம் ஆண்டின் கடைசி 6 மாதங்களில் தான் “சிந்திக்கும் கிறிஸ்தவர்களுக்கான உணவு” (Food for Thinking Christians) என்கிற 166 பக்கம் கொண்ட புஸ்தகம் வெளியிடப்பட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பிரிட்டனிலும் பதினான்கு லட்சம் பிரதிகள் வினியோகிக்கப்பட்டன என்பது ஆச்சரியமான காரியம் அல்லவா!

அந்த புத்தகம் திடீரென்று எல்லா இடங்களிலும் பரவலாக விநியோகிக்கப்பட்டது விநோதமானது. அதோடு கூட சம்பந்தப்பட்ட மூன்று விஷயங்களும் அதை விநோதமான புத்தகமாக்குகிறது. (1) இந்த புத்தகம் மாதிரி வேறு எந்த புத்தகமும், இது போன்று மிக குறுகிய காலத்தில், மிக பெரிய அளவில், விநியோகம் செய்யப்பட்டதில்லை. இதே மாதிரியான முறையிலும் விநியோகிக்கப்படவில்லை.

அந்த புத்தகம் அடுத்தடுத்து வருகின்ற மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் அமெரிக்க ஐக்கிய தேசத்தின் பெரிய நகரங்களில், பிரிட்டனில் உள்ள பெரிய நகரங்களில், ஆலய வாசல்களில் இலவசமாக District Messanger Service-ன் பணிவிடை பையன்களால் விநியோகிக்கப்பட்டது. சிறிய நகரங்களில் தபால் மூலம் அனுப்பப்பட்டது. (2) இந்த செலவை சந்திக்க 42,000 டாலர் கேட்காமலேயே இலவசமாகக் கிடைத்தது. (3) நாம் அறிந்தவரை சுவிசேஷ சபையின் பரம அழைப்புக்கும், உலகத்திற்கு இழந்து போன நன்மைகளை திருப்பிக் கொடுப்பதற்கும், இடையில் உள்ள வித்தியாசத்தை சுட்டிக்காட்டும்படியாக பிரசுரிக்கப்பட்ட முதலாவது புத்தகம் இதுதான். அது அந்த பரம அழைப்பின் காலம் முடிவடைவது 1881ல் என்று சுட்டிக்காட்டியது)

கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு விஷயம் என்னவெனில் உலகம், ஆயிர வருடத்தின் போது நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்ளும்படியாக அழைக்கப்படும்.

மேலே உள்ள "இராஜாவின் அறை" திவ்ய சுபாவத்தைக் குறிப்பது போன்று, "கம்பீரமான நீண்ட தாழ்வாரம்" அதற்கான அழைப்பை அடையாளப்படுத்துகிறது. ஆகவே, அதற்கு கீழாக உள்ள, இராணியின் அறை பரிபூரண மனித சுபாவத்திற்கு அடையாளமாக இருக்கிறது; அதற்கான வழி, ஆயிர வருடத்தின்போது மனுக்குலம் பூரணமான சுபாவத்தைப் பெறுவதற்காக, உலகம் நடக்க வேண்டிய ஜீவ பாதையை விளக்குகிறது. ஆகவே இறுதியில் இந்த இரண்டு வழிகளும், அதன் இரண்டின் பலன்களும் திறக்கப்பட்டன. எல்லார் சார்பிலும் மத்தியஸ்தர் வழங்கிய மீட்கும் பொருளின் ப- மூலமாக சாத்தியமாக்கப்பட்டது. இவைகள் எல்லாம் ஒரு வெடி வெடித்ததினால் ஏற்பட்ட தோற்றத்தால் பிரமிட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது "கிணற்றின்" வாயை திறந்து இரண்டு பாதைகளுக்கு செல்ல வழி உண்டாக்கிற்று. *(திவ்ய சுபாவத்திற்கான சபையின் அழைப்பையும், ஆயிர வருடத்தின் போது மனுக்குலம் பூரணம் அடையச் செய்வதற்கான அழைப்பையும் இது அடையாளப்படுத்துகிறது.)*

இப்படியாக இந்த மகா பிரமிட், வேதாகமத்திற்கு இசைவாக கூறுகிறதாவது : "கிறிஸ்து ஜீவனையும் *(மனுக்குலத்திற்கு ஜீவன் மறுபடியும் அளிக்கப்பட்டது- "இராணியின் அறையினால்" அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.)* அழியாமையையும் *(திவ்ய சுபாவம் "இராஜாவின் அறையினால்" அடையாளப்படுத்தப்பட்டுள்ளது)* சுவிசேஷத்தினால் வெளியரங்கமாக்கினார்." 2தீமோ. *1:10*

"இராணியின் அறைக்கோ" அல்லது கம்பீரமான நீண்ட தாழ்வாரத்திற்கோ உள்ள ஒரே நுழைவு வாயில் "கிணறு தான்." "முதலாவது ஏறுகின்ற பாதை" உபயோகப்படுத்த முடியாமல் இருந்ததற்குக் காரணம் கருங்கல்-னால் ஆன "அடைப்பான்" தான். இப்படியாக கல்-னால் ஆன சாட்சி, நியாயப்பிரமாணத்தினால், விழுந்து போன மனுக்குலத்தில் உள்ள யாரேனும் ஜீவனையோ *(மனித வாழ்வு)* அல்லது அழியாமையையோ *(திவ்ய சுபாவம்)* அடைய முடியாது என்று சாட்சி கூறுகிறது. "முதலாவது ஏறுகின்ற



பாதை" ஒரு வழியாக இருந்தாலும் ஒருவராலும் அதற்குள் இதுவரை நடக்க முடியவில்லை. ஆகவே நியாயப்பிரமாணம் ஜீவனுக்கு போகிற ஒரு வழியாக இருந்தது. ஆனால் மாம்ச பெலவீனத்தினால், அது கொடுக்கிற ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கு அதில் ஒருவராலும் நடக்க இயலாமல் இருந்தது. *(ரோம. 3:20)* சிலுவை, ப-, மீட்கும் பொருள் என்பவைகள் இப்படியாக விசேஷமாக இந்தக் கல்-ன் சாட்சியினால் குறிக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தின் திட்டத்தில் வேறு எந்த அம்சமும் காட்டப்படாத அளவுக்கு இவைகள் மிக முக்கியமாக காட்டப்பட்டுள்ளன. இயேசு கூறினார்: "என்னாலேயல்லாமல், ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." பவுல் கூறினார் : "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால் கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்." *(1 கொரி. 15:3)* "கிணறு" *(கிறிஸ்துவின் ப-க்கும், உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாக உள்ளது)* மாத்திரமே ஜீவனுக்கும் அழியாமைக்கும் உள்ள ஒரே வழி என்று மகா பிரமிட் கூறுகிறது.

"இராணியின் அறைக்கு" செல்லுகிற பாதை தாழ்வாக உள்ளது. ஆகவே பிரயாணிப்பவர் அதற்கேற்றபடி தன்னுடைய தலையை தாழ்த்த வேண்டும். நேர்மையானதை செய்வதென்பது, தாழ்மையின் ஒரு செயலாகும். ஆயிர வருட காலத்தின் போது அப்படியே தான் இருக்கும். அந்த வேளையில் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் கடுமையான நியதிகளுக்கு எல்லாரும் பணிந்தாக வேண்டும். அவர் இருப்புக் கோலால் ஆளுகைச் செய்வார். *(வெளி 2:27)* அவர் நியாயத்தை நூலும் நீதியை தூக்கு நூலுமாக வைப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது; அவருடைய வல்லமைக்கும், அதிகாரத்திற்கும் முன்பாக நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும், அவருடைய ஆட்சிக்கு முன்பாக முழங்கால் யாவும் முடங்கும்; ஆகவே, அவருடைய நாட்களில் தாழ்மையுள்ளவர்களும், நீதியுள்ளவர்களும் மாத்திரமே செழித்து ஓங்குவார்கள். ஏசா. *28:17;* ரோம. *14:11;* சங். *92:12,13*

"இராணியின் அறை," இழந்தவைகளை திருப்பிப் பெறும் வேலை முடிவு பெறுவதை மற்றும் மனுக்குலம் பூரணமடைவதை

அடையாளப்படுத்துகிறது. அதில் அதற்கு ஏழு பக்கங்கள் உண்டு. தரை ஒரு பக்கம், கூரையில் இரண்டு பக்கங்கள், படத்தில் காட்டியபடி உள்ளது. அதற்கான பாதை ஏழு என்கிற பரிபூரணத்தைக் கூறுகிறது. ஏனெனில் அதன் தரைப்பகுதி அதன் நீளத்தில் 1/7பங்கு குறைக்கப்பட்டுள்ளது. ஏழு என்கிற எண் பொதுவாக பரிபூரணத்தையும் முழுமையையும் அடையாளப்படுத்துவதாக இருக்கும் போது, விசேஷமாக இந்த விஷயத்தில் அது வ-யுறுத்தப்பட்டுள்ளது. ஆயிர வருட யுகம் பூமியின் சரித்திரத்தில் ஏழாவது ஆயிர வருடமாக உள்ளது. இதில் தான் ஜனமானது மனமுவந்து, கீழ்ப்படிந்து பூரணத்தை அடைய வேண்டும்.

பேராசிரியர் ஸ்மித், "இராணியின் அறையின்" தரை விநோதமாக இருக்கிறது, அதற்குச் செல்லும் பாதையும் விநோதமாக உள்ளது, அது கடினமானதாக உள்ளதுடன் முற்றுப்பெறாமல் உள்ளது, மற்ற பாதைகளில் இருந்து வித்தியாசமானதாக உள்ளது என்று குறிப்பிடுகிறார்; மற்ற பாதைகள் மென்மையானதாகவும் மெருகூட்டப்பட்டதாகவும் இருக்கின்றன என்று அவர் கூறுகிறார். இதன் காரணம் பற்றி அவர் கூறுகிறார். அதன் தரைகள் மற்ற பாதைகள் போல வருட-அங்குலம் என்று அளக்கப்படக் கூடியவை அல்ல. பிரமிட் இதன் மூலம் தரை சமமாக இல்லாதிருப்பதினால் "கால அளவு இங்கே குறிக்கப்படவில்லை" என்று கூறுகிறது என்கிறார்.

"இராணியின் அறைக்குச்" செல்லுகிற பாதையில் அல்லது அதன் தரையில் பிரமிட் அங்குல - வருடம் என்பது கணக்கிடப்படாவிட்டாலும், இன்னொரு விஷயம் காட்டப்பட வேண்டும். பரிபூரண ஜீவனையும் பரிபூரண மனுக்குலத்தின் இயக்கச் சக்தியையும் திரும்பிப் பெறுதலுக்கான வழி என்பது காட்டப்பட வேண்டும். இராணியின் அறையில் இந்த மனுஷனின் சுபாவம் பரிபூரணம் பெறுவது காட்டப்பட்டது போன்று, அதற்கான வழி ஏழாயிரம் வருட அனுபவத்திற்கும், ஒழுங்கு நெறிக்கும் அடையாளப் படுத்திகாட்டப்பட்டுள்ளது. மனுக்குலம் இழந்து போன எல்லாவற்றையும் திரும்பிப் பெறுவதற்கு முன்னர் மேற்கூறியவற்றுக்குள் கடந்து செல்ல வேண்டும். "இராணியின்



அறைக்கு" செல்லும் பாதையில் முதல் ஏழில் ஆறு பங்கு, மிகவும் தாழ்வாக இருந்த கடந்த ஆறாயிரம் வருடங்களை அடையாளப்படுத்திக் காட்டுகிறது. அது மாத்திரமல்ல, ஒரு நீதியுள்ள வாழ்க்கை நடத்துவது எவ்வளவு கடினமானது, அதற்கு எவ்வளவு அதிக அளவு தாழ்மை தேவை என்பதையும், அப்படி நடக்க முயற்சித்த முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், மற்றவர்களும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்கள் ஆறாயிர வருட பாவம், மரணம் என்பவைகளின் ஆட்சியில் எவ்வளவு தாழ்மையுடன் நடக்க வேண்டியிருந்தது என்பதையும் விளக்குகிறது. அதற்கு மாறாக கடைசி ஏழில் ஒரு பங்கு வழி, இப்பொழுதுதான் மனிதர்கள் மேல் உதயமாகிக் கொண்டிருக்கும் ஆயிர வருடத்தைக் காட்டுகிறது. அதன் உயரம் இரண்டு மடங்கு அதிகமாக இருப்பது, வருகிற ஆயிர வருட யுகத்தில் கிருபை, சமாதானம் பூமியில் இருக்கும் போது, மனிதர்கள் பரிபூரணத்திற்கு நேராக சௌகரியமாக, அமைதியாக கடந்து செல்ல முடியும் என்பதைக் காட்டுகிறது.


கடந்த ஆறாயிரம் வருடங்களில் யாராவது இந்த வழியாக நடந்துள்ளார்களா என்று கேட்கப்படுகிறதா? நாம் சொல்லுகிறோம் ஆம்; விசுவாசத்தினால் சிலர் நடந்துள்ளார்கள். மனிதனின் சுபாவம், நீதியாக்கப்படுவதற்கு அது தான் வழி, சுவிசேஷ சபையின் அழைப்புக்கு இது முற்றிலுமாக மாறுபட்டு இருக்கிறது. சுவிசேஷ யுக சபை நீதிக்குள்ளாக வழி நடத்தப்பட்டு, புதிய திவ்ய சுபாவத்திற்குள் வந்துள்ளது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மேலும் உண்மையுள்ள தீர்க்கதரிசிகள் அந்த வழியாக - "கிணற்றின்" வழியாக - கிறிஸ்துவின் மீட்கும் பொருளின் ப-யில் விசுவாசம் வைத்து நடந்தார்கள். இவைகள் நம்முடைய ஆண்டவருடைய மரணத்திற்கு முன், நிழலான ப-களால் அடையாளப்படுத்தப்பட்டது. இது கல்-னால் ஆன சாட்சி சுட்டிக் காட்டுவதற்கு முன்னால் உள்ளதாகும். ஏனெனில் தேவனுடைய நோக்கத்திலும், வெளிப்பாட்டிலும் உலகம் உண்டாவதற்கு முன்னரே கிறிஸ்து அடிக்கப்பட்ட பாவ நிவாரண ப-யான ஆட்டுக்குட்டியாக இருந்தார்.

"இராணியின் அறைக்கு" உள்ள இந்த வழி, வேதாகமம் கூறுகிறபடி, ஆயிர வருடத்தின் போது ஜீவனுக்கும், பரிபூரண மனித

சுபாவத்திற்கும், வழி இதுதான் என்று கூறுவதற்கு ஒத்து இருக்கிறது. பரிபூரணம் அடைவதற்குத் தேவையான கால அளவு நபருக்கு நபர் வித்தியாசப்படும். இது புதிய உடன்படிக்கைக்கு, அதன் நிபந்தனைகளுக்கு தன்னுடைய இருதயத்தையும், வாழ்க்கையையும் துரிதமாக அல்லது மெதுவாக ஒரு தனி நபர் தன்னுடைய இருதயத்தை கொடுப்பதைப் பொறுத்து இருக்கிறது. அது இனியும் மேல் நோக்கி உள்ள போராட்டமாக (உள்ளும், புறமும்) அல்லது கீழ்நோக்கி இறங்கும் எதிர் சக்திகளினால், உண்டான போராட்டமாக, நியாயப்பிரமாணம் மற்றும் சுவிசேஷ யுக காலத்தில் இருந்தது போன்று இருக்காது. ஆனால் இது எல்லா விதத்திலும் பிரயாணிப்பவரை ஆதரிப்பதாக இருப்பதோடு, அவன் துரிதமாக முன்னேற, இழந்தவைகளை திரும்பிப் பெறும் வாழ்க்கைக்கு, அதன் உடன் வரும் ஆசீர்வாதங்களுக்கு நேராக வழி நடத்தும்.

“இராஜாவின் அறை” அதனுடைய காற்றோட்டத்திற்கான குழாய்கள் இருப்பதன் மூலம் ஒரு நிரந்தர வாசஸ்தலத்தை அடையாளப்படுத்துவது போன்று இருக்கிறது. “இராணியின் அறையும்,” மனிதனின் சுபாவம் பூரணம் என்கிற நிலையை அடையும் போது, அது நித்திய நிலைக்குள்ளாக இருக்கும்படி ஆக்கப்படும். ஏனெனில் அங்கேயும் இதே போன்று காற்றுக்கான குழாய்கள் வைக்கப்பட்டு உள்ளன. ஒரு விதத்தில் அது நிரந்தரமான நிலைமைக்கு அடையாளமாக இருக்கிறது என்று கூறலாம். இன்னொரு விதத்தில் அது நிரந்தரமான நிலைமையாக மாறி விடலாம். எப்படியெனில் இந்தக் கருத்தைத்தான் கல்-லான சாட்சியும், வேதமும் வ-யுறுத்துகின்றன. “இராஜாவின் அறை” அடையாளப்படுத்தும் நிலையை அடைந்தவர்கள் பற்றி வேதம் சொல்லுகிறதாவது: அவர்கள் திவ்ய சுபாவத்தில் பங்கு பெறுகிறார்கள். அதனால் அழியாத் தன்மையைப் பெறுகிறார்கள். இதன் பிறகு அவர்கள் மரிக்கமாட்டார்கள். மேலும் வேதம் கூறுகிறதாவது: இழந்தவைகளை எல்லாம் திரும்பிப் பெறுதல் என்கிற நிலையை அடைந்தவர்கள், ஆயிர வருட இறுதியில் விசுவாசத்தின் கடைசி பரீட்சை வரை நின்றவர்கள், அழியாமை என்கிற தன்மையை அவர்கள் பெறாவிட்டாலும் (இது முக்கியமாக





திவ்ய சுபாவத்தின் ஒரு பகுதியாக மாத்திரம் இருக்கிறது.) இரட்சிப்பு என்னும் திட்டத்தை வழங்கிய கட்டட நிபுணர் ஏற்கெனவே ஒழுங்கு செய்துள்ள ஏற்பாடுகளின்படி நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவார்கள். அவர்கள் தேவனோடு ஒருமனப்பட்டு நிலைத்து இருந்து, அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து இருப்பார்கள் என்றால், அவர்கள் நித்திய காலமாக வாழ்வார்கள்.

மகா பிரமிட் இதே சத்தியங்களைத் தான் கூறுகின்றது. “இராஜாவின் அறைக்கு” திறந்த காற்றோட்ட குழாய்கள் இருந்த போது “இராணியின் அறையில்” உள்ள காற்றோட்ட குழாய்கள் விநோதமாக மூடப்பட்டு இருந்தன. காற்றுக்கான குழாய்கள் பிரமிட்டின் வெளிப்புறத்தில் இருந்து முற்றுப் பெற்றதாக இருந்து, “இராணியின் அறையின்” உள்பக்க சுவரின் ஏறத்தாழ ஐந்து அங்குலம் வரை உள்ளே, வந்து இருந்தது. “இராணியின் அறையின்” இருபக்கமும் உள்ள கற்கள், சொல்லப்பட்ட ஐந்து அங்குல தடிமம் உள்ளதைத் தவிர மற்றவைகள் செதுக்கி எடுக்கப்பட்டு, பிரமிட்டின் ஒவ்வொரு அம்சமும் காட்டுவது போன்று, இதுவும் மகா பிரமிட்டின் கட்டிட வல்லுனரின் திட்டத்தைக் காட்டுவதாக உள்ளது. திரு. வேமேன் டிக்ஷன் (Mr. Waynmen Dixen) “இராணியின் அறையின்” சுவர்களை ஆராயும் போது இதைக் கண்டு பிடித்தார். அவர் சுவற்றின் இடத்தில் “போலாக” (வெற்று இடம்) இருக்கக்கண்டு, அதன் மேல்பகுதியை உடைத்து, அவர் ஒரு காற்றோட்டக் குழாயைக் கண்டார். அதன்பின்னர், இதே முறையில் எதிர்பக்க சுவரில், இதே போன்றது இருக்கக் கண்டார். இப்படியாக பிரமிட், வேதத்துக்கு இசைவாக இப்படியாகக் கூறுகிறது: தேவையான அளவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. “இராணியின் அறையினால்” அடையாளப்படுத்தப்பட்டுள்ள பரிபூரண மனிதனின் நிலைக்கு, அதன் ஒழுங்குகளுக்கும் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிகிறவர்கள் வர முடியும் என்று கூறுகிறது.

இப்பொழுது அது பேசக் கேட்ட பின்னர், கல்-னால் ஆன சாட்சி மற்றும் அதன் அத்தாட்சி குறித்து என்ன நினைப்போம்? இப்பொழுது ஆராய்ந்த சில விஷயங்களைப் பற்றி வேதாகமத்தில் எதுவும் கூறப்படாவிட்டாலும் கூட, இப்படிப்பட்ட சாட்சி

உண்மையிலேயே மனதைத் தொடுவதாக, விசித்திரமானதாக இருக்கிறது. ஆனால் வேதாகமம் இதே சூழ்நிலைகளையும் காலங்களையும் தெளிவாக, திட்டவட்டமாக அறிவித்த பின்னர், பிரமிட்டின்சாட்சி கேட்கப்பட்டது. அது அற்புதவிதமாக எல்லாவற்றிலும் ஒத்து இருப்பதாக காணப்படுவது இரண்டத்தனையாக முக்கியத்துவம் வாய்ந்ததாக, மனதைத் தொடுவதாக இருக்கிறது. இப்பொழுது உலக ஞானிகள் தேவனுடைய வார்த்தையை, பண்டைய காலத்திற்குரியது, விஞ்ஞானத்திற்கு எதிரானது என்று கூறுபவர்களுக்கு இந்தக் கல்-ன் சாட்சி வேதத்தின் சாட்சிக்கு ஒத்து இருப்பது உண்மையிலேயே ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. அது மனிதனின் வீழ்ச்சியை குறித்து பேசும் போது, சாட்சி கொடுக்கும் போது, உலக ஞானிகள் மனிதன் ஒருபோதும் பூரண மனிதனாக இருந்ததில்லை, ஒரு போதும் தேவனுடைய சாய-ல் இருந்ததில்லை, ஆகவே அவன் அதி-ருந்து விழுந்ததில்லை என்று கூறும்போது கல்-லான சாட்சி குறிப்பிடத்தக்கதாக உள்ளது. சுவிசேஷ யுகத்தின் பரம அழைப்புக்கு, திவ்ய சுபாவத்திற்கான அழைப்புக்கு, அல்லது மனிதன் நீதிமானாக்கப்படுதலுக்கு, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலம் அல்லது பாதை மூலம் (Passage way) ஒருவரும் உட்பிரவேசிக்க முடியாது என்று அது சாட்சி கொடுத்துக் கொண்டு இருக்கும் வேளையில், மோசேயின் பிரமாணம் மாத்திரமே ஜீவனுக்கு வழி என்று சிலர் பிரசங்கம் பண்ணிக்கொண்டு இருக்கும் போது இதன் சாட்சி சந்தோஷப்படுத்துகிறது. "காணப்படாதவைகளாகிய தேவனுடையவைகள் (திட்டங்கள்) உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே உலகம் உண்டானது முதற்கொண்டு, தெளிவாய் காணப்படும்." *(ரோம. 1:20)*

சிலர் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையை கே-செய்வது போன்று, இந்த கல்-ன் சாட்சியையும் கே- செய்யலாம். ஆனால், அவர்கள் கே-ப் பேச்சுக்கு நாங்கள் பதில் கூறுகிறோம். இவ்வளவு விநோதமான முறையிலும் சரியான முறையிலும் காணப்படுகிறவைகளுக்கு சரியான காரணம் காட்டு அல்லது எதிர் காலத்தைக் குறித்து சாட்சி சொல்ல துணிந்து பார், உன்னுடைய தீர்க்கதரிசனங்கள் எப்படி நிறைவேறுகின்றன என்று பார். எதிர்கால



சம்பவங்களைப் பற்றி கூற உந்தப்படுதல் தேவையில்லை என எங்களுக்கு நிருபித்துக் காட்டு. உலக ஞானத்திற்கு ஒரு உதாரணத்தைக் காட்டு. "உங்கள் வழக்கைக் கொண்டு வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பலமான நியாயங்களை வெளிப்படுத்துங்கள் என்று யாக்கோபின் ராஜா உரைக்கிறார். அவர்கள் அவைகளைக் கொண்டு வந்து, சம்பவிக்கப் போகிறவைகளை நமக்குத் தெரிவிக்கட்டும்; அவைகளில் முந்தி சம்பவிப்பவைகள் இன்னவைகளென்று சொல்-, நாம் நம்முடைய மனதை அவைகளின் மேல் வைக்கும்படிக்கும், பிந்தி சம்பவிப்பவைகளையும் நாம் அறியும்படிக்கும் நமக்கு தெரிவிக்கட்டும்; வரும் காரியங்களை நமக்கு அறிவிக்கட்டும். பின்வரும் காரியங்களை எங்களுக்குத் தெரிவியுங்கள்; அப்பொழுது நீங்கள் தேவர்கள் என்று அறிவோம்; அல்லது நன்மையாவது தீமையாவது செய்யுங்கள்; அப்பொழுது நாங்கள் திகைத்து, ஏகமாய்க் கூடி அதைப் பார்ப்போம்."*ஏசா. 41:21-23*

மகா பிரமிட் நாத்திகரான விஞ்ஞானிகளைக் கூட ஆச்சரியப்பட வைப்பது அல்லாமல், அது அவர்களுடைய நவீனமானதாகவும் வேதாகமத்திற்கு எதிரானதாகவும் இருக்கிற "பரிணாமம்" என்கிற கொள்கையையும் மறுக்கிறது. இந்த விஷயத்தில் டாக்டர் ஜோசப் சீஸ் அவர்கள் (Dr. Joseph Seiss) எழுதிய "கல்-ல் ஒரு அதிசயம்" என்கிற அற்புதமான புத்தகத்தில் இருந்து அவருடைய வார்த்தைகளைக் கீழே கொடுக்கிறோம். அவர் கூறுகிறார்:

"புராதன காலத்து மனிதன் ஒரு குரங்காகவோ அல்லது குகையில் வாழ்ந்தவனாகவோ (Troglodyte) இருந்திருந்தால், அந்த சரித்திரத்திற்கு முந்திய நாட்களில் இவ்வளவு பெரிய கட்டடத்தைக் கட்டியவர்கள் நம்முடைய முக்கியமான அறிஞர்கள், பல நூற்றாண்டுகள் கவனித்து பரீட்சை செய்த பின்னர், பரிபூரணம் இல்லாத ஒன்றை அல்லவா அவர்கள் கண்டு பிடித்து இருப்பார்கள்? இப்படிப்பட்ட மகா பிரமிட்டை மிகப்பெரிய பரிணாமத்தில், மிக அதிகமான பொருட்களில், மிக அதிகமான உயரம் உள்ளதாக அதன் கைவேலைப்பாட்டில் பூரணம் காணும்படியாக, இன்றைக்கும் அதற்கு இணையாக பூமியில் வேறு எதுவும் இல்லாத அளவிற்கு

கட்டியவர்கள் ஆயுதங்களை எப்படிச் செய்வது அல்லது கையாளுவது என்பது கூடத் தெரியாமல், இயந்திரங்களையும், தேவையானவைகளையும் கூட எப்படி செய்திருப்பார்கள்? எப்படி கையாண்டிருப்பார்கள்? சுழற்சி, குறுக்களவு, அடர்த்தி, அட்சரேகை துருவங்கள், நிலம் பங்கீடு, பூமியின் சீதோஷ்ண நிலை, அதற்கும் வான சாஸ்திரத்திற்கும் உள்ள சம்பந்தம் ஆகியவற்றை எப்படி அவர்கள் அறிந்திருந்திருப்பார்கள்? அல்லது வட்டத்தை எப்படி சதுரமாக்குவது, விகிதாசாரங்களை கணக்கிடுவது, அல்லது முக்கிய முனைகளை தீர்மானிப்பது என்பதை எப்படி அறிந்து வைத்திருப்பார்கள்? அவர்கள் எப்படி, சரித்திரத்தை, யுகங்களை, அந்தந்த குறிப்பில் உண்மையானதாக இருக்கும்படி, அவர்களுடைய காலத்திற்கு பின்னர் கடைசி வரை நிறைவேறும் வரை வகுத்திருப்பார்கள்? அவர்கள் மோசேயின் ஒழுங்குகள் துவங்கும் காலம், எவ்வளவு காலத்திற்கு அது தொடரும், எப்படி அது சம்பவிக்கும் என்பதை எப்படி அறிந்திருப்பார்கள்? கிறிஸ்தவம் எப்பொழுது அறிமுகப்படுத்தப்படும், எப்படிப்பட்ட பெரிய சத்தியங்களால், அம்சங்களால் அது குறிக்கப்படும், மேலும் கிறிஸ்துவின் சபையின் குணாதிசயங்கள் என்ன, செயல்பாடுகள், முடிவு என்ன என்பதை எப்படி அவர்கள் அறிந்திருப்பார்கள்? மகா சுழற்சி முறையை (Precessional Cycle) அதன் கால அளவை, உண்மையான ஒரு வருடத்தின் நாட்களின் எண்ணிக்கை, சூரியனுக்கும், பூமிக்கும், இடையில் உள்ள தூரம், பெரிய பிரமிட் கட்டப்பட்ட வேளையில் நட்சத்திரங்களின் சரியான இடம் ஆகியவைகளை எப்படி அவர்கள் அறிந்திருப்பார்கள்? அவர்கள் எப்படி ஒரு முறையான அளவுகள், நிறை என்பவைகளை அறிந்திருப்பார்கள்? ஆகவே அவைகள் ஒவ்வொன்றும் எப்படி பொதுவான ஒரு மனிதனின் தேவைகளைச் சந்தித்து இருக்கும்? மேலும், இயற்கையான எல்லா அம்சங்களோடும், அவைகள் ஒவ்வொன்றும் சரியாக இணைக்கப்பட்டிருக்கும் போது, அதோடு மிக அழகாக எப்படி ஒத்துப் போயிருக்கக் கூடும்? எல்லாவற்றையும் ஒரு கல் கட்டடத்தில், எழுத்து மூலமாக அல்லது வாய் மூலமாக எதுவும் சொல்லப்படாமல், எப்படி செய்திருக்க முடியும்?



இருந்தாலும், காலங்களின் சீற்றத்திற்கும், மாற்றத்திற்கும் இடையில், இன்றைக்கும் அவைகளை வாசிக்கவும், புரிந்து கொள்ளவும் முடிந்திருப்பதே அதற்கு ஆதாரமாக உள்ளது.

"மனிதர்கள் பரியாசம் செய்யலாம், ஆனால் இந்த மகா பிரமிட்டைப் பார்த்து சிரித்து விட முடியாது. இல்லையென்றால் அதன் கோணங்களை, விகிதாசாரங்களை, அளவுகளை, இயற்கையின் குறிப்புகளை மிகவும் ஒத்து இருக்கத்தக்கதாக அதை உண்டாக்கியவர் கொடுத்ததை தள்ளி வைத்து விட முடியாது. இங்கே எல்லா முக்கியத்துவமான பேச்சினாலும், உறுதியாகவும், வெல்ல முடியாததாகவும் எந்த சக்தியாலும் நகைக்க முடியாதபடியும் இருக்கிறது."

இந்த அற்புதமான சாட்சியின் குரல் நம்முடைய மனதிற்கு அந்த குறிப்பிடப்பட்ட நாளில் நம்முடைய ஆண்டவர் கூறியதை மிகவும் வ-மையாக கொண்டு வருகிறது. அவர் எருசலேமுக்குள் வெற்றிப் பவனியில் வந்த போது, அவர் தன்னை நிஜமாகவே இஸ்ரயேலுக்கு இராஜாவாக, அவருடைய சீடர்களின் திரளான கூட்டத்தின் மத்தியில், தேவன் செய்த மகத்தான காரியங்களுக்காக அவரை போற்றித் துதித்துக் கொண்டு இருக்கும் வேளையில், வெளிப்படுத்தினார். அவர்கள் கூறினார்கள்: "கர்த்தருடைய நாமத்திலே வருகிற ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சாமாதானமும், உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடு தேவனைப் புகழ்ந்தார்கள்." பரிசேயரில் சிலர் அவரை நோக்கி, போதகரே உம்முடைய சீஷரை அதட்டும் என்று கூறினபோது, "அவர்களுக்கு பிரதியுத்தரமாக, இவர்கள் பேசாம-ருந்தால், கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." *(லூக்கா 19:38-40)* இன்றைக்கும் அப்படித்தான் இருக்கிறது. மகிமையின் ராஜா ஏற்கெனவே வந்து இருக்கும் போது அவரை அறிக்கை பண்ணுகிற பெரும்பாலான ஜீவிக்கிற சாட்சிகள், சத்தமிட்டு களிகூறுவதற்குப் பதிலாக, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரிப்பதற்குப் பதிலாக, ஊமையாக இருக்கிறார்கள். சிலர்

ஆலயத்தில் இருந்து புறம்பே தள்ளி விடுவார்கள் என்கிற பயத்தினால், சிலர் அசிரத்தையாக இருப்பதால், சிலர் உலகத்தின் மதி மயக்கத்தினால் அவர் வந்திருப்பதை அறியாமல் இருக்கிறார்கள். ஆனால் இந்த மகா பிரமிட்டின் சாட்சியின் கற்கள் சத்தமாக கூப்பிட்டுக் கொண்டு இருக்கின்றன. இந்த மகா பெரிய கட்டடத்தின் ஒவ்வொரு அங்குலமும் மிக அழகாக நம்முடைய தேவனின் ஞானத்தையும், வல்லமையையும், கிருபையையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

வலுவான இந்த கல் கட்டடத்தில் உள்ளடக்கி உள்ளவைகள் இயற்கையின் கொடுமையான சீற்றங்கள் அல்லது சத்துருவின் கொடுமையான கரத்தின் மத்தியில், தேவனுடைய பெரிய திட்டத்தின் விளக்கம் அளிக்கக்கூடிய வரை படங்கள் நான்காயிரம் வருடங்களாக நிலைத்து நிற்கிறது. குறிக்கப்பட்ட வேளையில், இதைப்பற்றி வெளிப்படுத்தப்பட்ட இசைவான சாட்சியை கூற ஆயத்தமாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய உறுதியான தீர்க்கதரிசன வசனங்கள் யுகங்களாக மறைந்துள்ளன. "எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு இருக்கும் சாட்சியானது" எழுதப்பட்ட வார்த்தையைப் போன்று, பழைய முறைமைகள், அழிவுக்கான "குழியில்" தள்ளப்படுவதை, தவறு வராத முறையில் மிக துல்-யமாக சுட்டிக் காட்டுகிறது. அதே வேளையில் கிறிஸ்து இயேசுவுக்குக் கீழ், அதாவது தேவனுடைய நித்திய கட்டடத்தின் மூலைக்குத் தலைக்கல்லாக இருக்கிறவருக்குக் கீழ் மகிமையான, புதியதாக ஸ்தாபிக்கப்படும் கட்டடத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அவருக்குக் கீழ், நித்திய காலமாக இருக்கக் கூடியதான தகுதியுள்ள அவருடைய மகிமையான குணாதிசயங்களுக்கு ஒத்ததாக கட்டப்பட வேண்டும். ஆமென்! ஆமென்! உம்முடைய இராஜ்யம் வருவதாக! உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக!

★★★

# உம்முடைய இராஜ்யம் வருவதாக
## வேத வசன அட்டவணை

**ஆதியாகமம்**
2:20....150
13:14-17....308
15:16....107
17:8.... 308
25:5.... 478
48:19.... 382

**லேவியராகமம்**
21:17-23.... 271

**உபாகமம்**
28:15,46,49,63,67....389

**யோசுவா**
6:1.... 366

**1 ராஜாக்கள்**
4:30-34....307
10:1-29.... 307
12:17.... 378

**1 நாளாகமம்**
29:23.... 326

**எஸ்றா**
1:1,3-5.... 380
1:7-11.... 138
5:14.... 138
6:5.... 138

**யோபு**
38:3-7.... 414
38:6,7.... 428

**சங்கீதம்**
1:1,2.... 96
22.... 353
30:4,5,11,12....395
35:26.... 365
45:10,11.... 236
45:12-17.... 237
45:14,15.... 235
45:16.... 327,337
46:1-5.... 286
46:5.... 287
49:11,13.... 2
50:5.... 165
82:6,7.... 298
91:4.... 285
91:7.... 303
92:12,13.... 481
116:15.... 290
118:22,24.... 429
118:23.... 476

**உன்னதப்பாட்டு**
8:5.... 66

**ஏசாயா**
1:18.... 324
2:2.... 293
2:3.... 379
7:14.... 355
9:6.... 148
19:19,20.... 408
19:19-22.... 413
21:12.... 256,279
25:9.... 315
28:9.... 171
28:16.... 428
28:17.... 481
28:14-20.... 189
28:21.... 142
28:22.... 173
29:10.... 189
31:1,3.... 412
33:14,17,24.... 395
40:1,2.... 328,371
41:21-23.... 489
52:7.... 364,391
52:11.... 229
53:10.... 325
54:1-8.... 384
54:4-8.... 382
56:11.... 219
56:10-12.... 189
63:4.... 336
66:5.... 223
66:20.... 336

**எரேமியா**
3:8.... 382
8:7-13.... 190,265
24:5-7,9.... 329
29:1-10.... 380
30:18,20,21.... 330
31:8-12.... 330
31:29-33,36.... 385
31:31-33.... 382
31:38-40.... 339
32:20.... 414
32:43,44.... 339
51:7-9.... 188

**எசேக்கியேல்**
4:3-8.... 380,381
12:22-23.... 98
37:12-14.... 330
37:24.... 326

**தானியேல்**
2:44.... 151
7:8.... 79
7:8-11....65,105
7:10....393
7:11.... 70
7:19-22.... 70
7:20.... 79
7:20-26.... 105
7:21,22,25.... 79
7:24-26.... 85
7:26.... 46
8:3-9,20-25....13
8:8.... 19

8:9,10,23-25........13,105
8:10........ 65
8:10-26........106
8:11-14........ 27
8:12........ 65
8:14........ 11
8:23-25........105
8:24-26........ 65
8:26........ 65
8:27........119
9:2-19........120
9:12,16-18........121
9:21-27........120
11........ 7
11:2,3........ 11
11:3-17........15
11:4,5-19........13,19
11:14........ 25
11:17........ 31
11:17-19........ 15
11:20,21........ 16
11:22........ 17,148
11:23,24........ 18
11:25........ 21
11:26-27........ 23
11:28........ 21
11:29,30........ 24
11:31,25,35,39........ 65
11:31-35........ 30
11:32........ 27
11:34........ 185
11:34,35........ 28,124
11:35,38,48........ 28
11:36........ 31
11:37,38........ 35
11:39........36
11:40........ 38
11:40-44........ 71
11:40-45........ 41
11:41-45........ 39
12 ........ 61
12:1-3........ 69
12:4........64,416
12:5-7........ 65
12:8........ 8
12:8-13........ 88
12:9........ 416
12:10........ 200,416
12:11........ 87
12:12........88,242
12:13........88,103

### ஓசியா

1:4,6,7,9........ 383
1:10,11........ 383
2:1-7,13,14-18........ 383
2:7,19........ 382
2:19,20,23........ 384
11:1........ 411

### ஆமோஸ்

9:12,14,15........ 306
9:13........ 267

### நாகூம்

2:3-5........ 348

### ஆபகூக்

2:2,3........ 97

### செப்பனியா

3:8........ 178

### சகரியா

4:7........ 428
9:9........160
12:7........ 380
14:5........393

### மல்கியா

3:17........165,174

### மத்தேயு

2:1,2........ 91
2:13-15........ 411
4:19........ 264
6:24........ 273
8:4........ 204
8:10........ 379
9:16,17........ 193
10:5........ 206
10:6........319,379,388
10:7........ 160
10:24,25........ 288
10:26........ 3
10:37........ 259
12:29........ 443
13:11........ 265
13:30........ 261,264
13:38........142,166
13:39........ 8,141
13:42........ 174
13:43........ 62
13:47-50........ 264
15:24........ 206,388
........ 379,319
15:31........ 379
20:1-16........ 276
20:7........ 277
21:1-13........ 252
21:5-15........ 291
21:42,44........ 429
22:1-14........ 242
22:14........ 264
23:2........ 182
23:15........ 217
23:37-39........ 181
24:3........ 11
24:14........ 266
24:15........11,105
24:22........ 474
25:1-12........ 98
25:6........ 102
25:10........273,289
25:14-30........ 157
25:31........ 393
26:74,95........ 231
27:9,42........ 379



28:18........ 301
28:19........ 266

### மாற்கு

8:38........ 259
12:29........ 379
12:37........ 207
15:32........ 379

### லூக்கா

1:32........ 326
1:54,68,80........ 379
2:1........ 15
2:10-14,25-38........ 449
2:25,32,34........379
2:36........381
3:15........ 91
3:17........177
4:18........ 411
6:22........ 223
6:46........ 161
11:2........ 217
12:37........ 242
13:18,19........ 229
13:24,25........254,273
16:1-9........ 3
17:32........ 238
19:37-40........ 491
21:28........ 283
21:36........ 174,202
........285
22:31........ 231
24:21........ 379
24:47........ 207

### யோவான்

1:11........180
1:31,49........379
3:10........379
3:30........ 303
4:35,36........ 160
6:15........180,204
7:48,49........ 203
8:36........173
9:4........259,263
........279
10:34-36........ 299
11:50,51,55........ 220
12:13........ 379
12:14........160
18:14........ 220
21:15,16,17........231

### அப்போஸ்தலர்

2:5........ 90
2:22........ 319
2:24........377,483
2:36........ 379,388
3:12........ 319
3:19........146
3:19-21........ 209,377
3:21........ 3
3:22,23........ 411
3:26........ 206
4:10,27........ 377
4:11........429
5:21,30,31........379
5:35........319,379
7:5........ 337
13:16........ 319,379
13:24........379
13:46........ 206
15:17........ 326
17:31........146
21:28........ 319,379

### ரோமர்

1:20........ 488
2:9,10........ 320
2:10,11........378
3:1,2........ 307
3:20........ 438
4:16........ 388
5:2........248,253
6:8........ 257
8:17........ 256,257
8:22,23........ 284
8:28........289
8:29........260
8:30-34........244
9:4........319
9:6........62,379
9:23,26........383,384
9:25,26........ 62
9:27,31........ 379
9:27,29,31-33........ 319
9:29,33........ 319
10:1-4........ 319
10:19........ 379
11:1,7-14........ 319
11:1,5,7........ 378
11:7........ 384
11:9........ 325
11:20-22........ 219,357
11:25........ 319,365
11:26........ 319
11:31........319,387
14:9........ 248
14:11........ 481

### 1 கொரிந்தியர்

2:6-16........ 276
2:7-14........ 249
3:15........ 474
6:2,3........ 457
6:15,17........ 227
10:18........ 379
15:3........ 481
15:13-18........134
15:50,52,53........ 290

### 2 கொரிந்தியர்

6:16........ 109

### கலாத்தியர்

3:14........205
3:16,29........205,384
3:27-29........ 205
4:22,24,26-31........ 384
5:1........173,230
6:16........62,379

**எபேசியர்**

1:10........................ 430
2:2........................... 298
2:12......................... 379
2:20-22.................... 430
4:15-16.................... 227
5:27......................... 258
6:13.................. 262,287

**பி-ப்பியர்**

3:5........................... 379
3:10......................... 255

**கொலோசெயர்**

1:24......................... 299
2:19......................... 247

**1 தெசலோனிக்கேயர்**

2:15,16.....................389
4:15..........................290
5:4.................... 164,265
5:5,6........................ 222

**2 தெசலோனிக்கேயர்**

2:3............................105
2:8............................ 31

**1தீமோத்தேயு**

4:1........................... 246

**2 தீமோத்தேயு**

1:10......................... 480
3:1........................... 246
4:3,5........................ 246
4:8........................... 265

**எபிரேயர்**

2:14......................... 411
5:14......................... 171
6:1........................... 171
6:4-8........................ 251
7:25......................... 116
8:8........................... 379
10:14...................... 116
10:19...................... 438
10:26-31................ 251
10:29..................... 247
10:33..................... 156
10:36..................... 262
11:40................104,337
12:8....................... 457
12:23..................... 275
13:13..................... 280

**யாக்கோபு**

1:8......................... 273
1:12....................... 259
5:1-9...................... 2

**1 பேதுரு**

1:11....................... 121
1:12....................... 144
2:5,6...................... 220
4:13....................... 255

**2 பேதுரு**

1:4................... 261,272
1:5-8,11................. 237
1:19....................... 157
2:1......................... 322

**1 யோவான்**

3:2......................... 397

**யூதா**

15.......................... 393

**வெளிப்படுத்துதல்**

2:10....................... 280
2:27....................... 481
3:5.............275,280,473
3:7.......................... 239
3:11..................280,473
3:16....................... 219
3:21....................... 233
5:10....................... 151
7:1-3...................... 279
7:2-3...................... 260
7:3......................... 394
7:14....................... 474
10:2,8,9,10............ 96
11:3....................... 143
11:18..................... 292
12:6,14.................. 66
12:15,16................ 66
13:3....................... 45
13:5....................... 66
14:8..................117,188
14:12..................... 262
14:13................297,301
15:3,4.................... 297
17:2....................... 117
17:4....................... 188
17:6....................... 117
17:14............... 229,259
.................................289
18:2............183,188,229
18:3..................117,198
18:4............187,195,219
.................................474
18:5,19.................. 188
18:23..................... 220
19:7..................237,244
20:1-4.................... 56
20:2....................... 443
20:6....................... 151
20:7,9.................... 56
21:2....................... 327

# உம்முடைய ராஜ்யம் வருவதாக

# THY KINGDOM COME